உ

# புலவர் உலகம்

## கம்பன் கலை நிலை

பத்தாவது தொகுதி.

ஆசிரியர்
கவிராஜ பண்டிதர்
செகவீர பாண்டியனார்

மதுரை, மதராஸ் சி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றன.

1951.

*All Rights Reserved*

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## **Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# முகவுரை.

இது கம்பன் கலை நிலையுள் பத்தாவது பாகம். உத்தம வீரன் ஆன இராமனை விபீடணன் வந்து கண்டான்; அடைக்கலம் புகுந்தான்; அவனை ஆதரித்து அருளி எதிரியின் நிலைகளை அறிந்து வருணனை வழிவேண்டிக் கடலில் அணைகோலிச் சேனைகளோடு இராமன் இலங்கையை அடைந்தான். அந் நகரின் அயலே சுவேல மலையில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தான். பலயோசனைகள் நடந்தன. மறு நாள் இலங்கை வேந்தனிடம் அங்கதனைத் தூது விடுத்தான். அவ் வீர மகன் சென்று இராவணன் எதிரே போய்த் தீரமாய் நின்று யாவும் கூறி முடிவில் தேவியை விடுகின்றாயா? அல்லது போரில் வந்து உன் ஆவியை விடுகின்றாயா? என்று வீரவுரையாடினான். அச் சூரன் வெகுண்டான்; அயலே நின்ற அரக்கர் அங்கதனைக் கொல்ல மூண்டார்; தன்னைக் கொல்ல வந்தவரைக் கொன்று தொலைத்து விரைந்து வந்து இவ் வென்றி வீரனிடம் தான் சென்றுவந்த நிலைகளையெல்லாம் தெரிய விளக்கி மூர்க்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசை அறான் என முடிவாக வுரைத்தான். அதன்பின் படைகளை அணி வகுத்து இலங்கை நகரை வளைத்துத் தன் துணைவர்களோடு கோதண்டவீரன் வடதிசைவாசலில் அடலமர் மூண்டு எதிரியை எதிர் நோக்கி அதிசய கம்பீரமாய் நின்றான். போர் மூண்டது. இருதிறச் சேனைகளும் எதிர்ந்து பொருதன. தன் படைகள் தளர்ந்து படுவதைக் கண்டு இராவணன் தேர்மேல் ஏறிப் போர் மேல் வந்தான். இராமன் எதிர்ந்து பொருதான். உக்கிரவீரமான போராடல்கள் ஓங்கி எழுந்தன; இவ் வீர வில்லியின் எதிரே அவன் படைகள் யாவும்இழந்து படுதோல்வியடைந்து நின்றான்; அவனை ஆற்றித் தேற்றி இன்று போய்ப் போர்க்கு நாளை வா! என்று இவ் வென்றி வீரன் விடுத்தான். அவன் வெட்கி மீண்டு இலங்கை புகுந்து அரண்மனையுள் தனியே மறுகி யிருந்தான். அவனுடைய பாட்டனாகிய மாலியவான் வந்து பரிந்து உசாவினான். இவ்வாறான சரித நிகழ்ச்சிகள் அரிய பல கலையுணர்ச்சிகளோடு இதில் சுரந்து வந்திருக்கின்றன.

செகவீரபாண்டியன்.

## சிறப்புப்பாயிரம்.

நிகரா ரு மில்லாச் செகவீர பாண்டிய!
புவிராச ருப் புகழ் கவிராச பண்டித!
அலைசூழ் உலகைக் கலைசூழ் உலகா
மாற்றத் துணிந்த ஊற்றத் துரவோய்!
கிழமை தழீஇப் பழமை வழாஅது
முப்பொருள் தொகுத்த மெய்ப்பெரும் புலவன்
குறளைப் பெருக்கி அறிவுட் புகுத்தி
ஈசன் தருகும ரேசன் களிக்க
வெண்பா யாத்த நண்பா! பண்பால்
சீலம் தழைத்தபாஞ் சாலங் குறிச்சியாம்
அறம் குடிகொண்ட மறம்கிளர் நாட்டில்
துரைமக்க ளென்ன உரைமிக் குயர்ந்தோர்,
தருகை நீண்ட அருமை மாண்பினர்,
அந்தண ரோம்பும் செந்திரு மனத்தர்,
தீச்செயல் கடியும் வீச்சரி வாளினர்,
திருந்தலர் போரெனில் விருந்தென விரைவோர்,
முதுகிட் டறியா மதுகை வாழ்க்கையர்,
வீட்டரும் சொந்த நாட்டபி மானிகள்,
ஈனம் போக்கி மானம் காக்க
வீரப் போர்புரி சூரப் புலிகளாம்
மன்குல மாகும் நின்குல முன்னோர்க்
கெய்திய மாக்கதை செய்த தவத்தோய்!
நன்னூல் பேணிப் பன்னூல் ஆய்ந்து,
கலையில் திளைத்துக், குலையில் பழுத்து
விற்பனம் கனிந்து, சொற்றிறம் தெளிந்து,
நாத்தழும் பேறப் பூத்தசெந் தமிழால்
புலவ ருலகம் தலைசிறந் தோங்கப்
பத்துப் பாகங்கள் பண்புடன் அளித்தனை
எஞ்சிய பாகமும் இனிதுநீ அளிக்கச்
செஞ்சொல் வஞ்சியை அஞ்சலி செய்வாம்.

ஆர். கணபதி ஐயர்.

தம்பி கூறிய விழுமிய நீதி மொழிகளைக் கேளாமல் பழித்துக் களித்து நிற்கின்ற இராவணனைக் கவி இப்படித் தெளித்துக் காட்டியிருக்கிறார். தொடர்ந்து கூறி வந்து முடிவில் ஆளை அளந்து காட்டியிருப்பது வியந்து காண நின்றது. இறுதியில் அறுதியிட்ட இடங்கள்தோறும் உரியவர்களை உரைத்து வருவது அரிய உணர்வுக் காட்சியாய் ஒளி சிறந்துள்ளது.

நோய்வாய்ப்பட்ட நோயாளியை நோக்கி நல்ல மருத்துவர் உள்ள நிலைமையைச் சொல்லி விடுவதுபோல் நம்முடைய கவிப்பிரான் காவிய பாத்திரங்களைச் சீவிய சூத்திரமாக் காட்டி வருகிறார். சுட்டிக் காட்டுவதில் சுவைகள் சுரந்துள்ளன.

பொல்லாத தீமை உள்ளம் புகுந்து இராவணனைக் கொல்லாமல் கொன்று வருகிறது; நல்ல நீதி மருந்துகள் எவ்வளவு ஊட்டினும் உள்ளே செல்லவில்லை; பரிந்து செலுத்தியன எல்லாம் விரைந்து வெளியே தள்ளப்படுகின்றன. இனி ஆள் பிழையாது; செத்தே போம் என்னும் படி சாவுநிலை அதி வேகமாய் மேவி நிற்கிறது.

அடியோடு அழிந்து போக நேர்ந்துள்ளமை தெளிந்த முடிவாய் ஓர்ந்து கொள்ளவந்தது; வரவே அழிவினை எய்துவான் என்று கழிவிரக்கத் தோடு கை விட்டார்.

அறிவு நீங்கினன் என்றது அழிவு ஓங்கியுள்ளமைக்கு அளவுகோலாய் வந்தது. ஒருவனுடைய அறிவு பழிவழியில் பாய்ந்தால் அவன் அழிதுயருள் வீழ்ந்தான் என்பது விழிதெரிய நேர்ந்தான்.

விநாச காலே விபரீத புத்தி.
கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.

என்னும் பழமொழிகள் ஈண்டு எண்ண உரியன.

இலங்காதிபதி விரைவில் அழியநேர்ந்துள்ளமையால் அவன் அறிவு முன்னதாக ஒழிய நேர்ந்தது. ஒருவனது மதிகேடு அவனுக்கு அதிகேடு வரும் என்பதற்கு அறிகுறியாய்த் தோன்றுகின்றது. அவகேடான அந்நிலையில் இராவணன் இறுமாந்து களித்துள்ளமை இங்கே உணர்ந்து கொள்ள வந்தது.

அழிவு நிலையில் களி மீறியிருத்தலால் அறிவு போதனை ஏறாது போயது. உரிமையோடு போதித்தவனையும் சிறுமையாக ஏசி இகழ்ந்தான். நெஞ்சத் திமிர்கள் நெடிது நீண்டு நின்றன.

## சூரபன்மனும் இராவணனும்

இராவணனுக்கு விபீடணன் இங்கே புத்தி போதித்தது போல் முன்னம் சூரபன்மனுக்கு அவன் தம்பியாகிய சிங்கமுகன் அறிவு நலங்கள் கூறினன். தேவர்களைச் சிறைப்படுத்தித் தீமைகளை விளைத்து வருதலால் அவனை அழித்து ஒழித்தற்கு முருகக்கடவுள் செந்திலம் பதியில் வந்து இருந்து கொண்டு வீரவாகு தேவரைத் தூதுவிடுத்தார். அவர் சென்று உறுதி கூறியும் கேளாமையால் நகரினை அழித்து மீண்டு வந்தார். தூதுவரால் அழிந்து போன நகரை மீளவும் புதுக்கி யமைத்து அந்த அசுர வேந்தன் இந்த அரக்கர் வேந்தன் போல் மந்திராலோசனைகள் புரிந்தான். மந்திரிகள் முதலாயினோர் பேசி முடிந்தபின் முடிவில் சிங்கமுகன் எழுந்து நீதிகள் பல கூறிப் போர்மேல் மூண்டு வந்துள்ள குமார தெய்வத்தின் மேலான மகிமைகளை விளக்கிப் பேசினன். அதிசய ஆற்றல்களை உணர்த்தி அவன் கூறிய துதி மொழிகள் பல. சில அயலே வருகின்றன.

## சிங்கமுகன் சொன்னது

"அன்ன வாகிய அண்டங்கள் அனந்த கோடியையும்
தன்னது ஆணையால் ஓரிமைப் பொழுதினில் தரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோர் ஆதியம் பிரான்காண்
உன்னொ டேபொரும் ஆடலால் செந்தில் வந்துற்றான். (1)

வச்சி ரத்தனி யாக்கைபெற் றனமென மதித்தாய்
இச்சி ரத்தையை விடுமதி இருவினைக் கீடா
வச்செ டுத்திடும் உயிர்கள் மாய்ந்திடுமென அறிஞர்
நிச்ச யித்தனர் முடிவுறு திருத்திகொல் நீயே. (2)

கெடுதல் இல்லதோர் வளனொடு நீயும்நின் கிளையும்
படுதல் இன்றியே வாழ்திஎன் றுஇன்னன பகர்ந்தேன்
இடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரை இன்னே
விடுதல் செய்குதி என்றனன் அறிஞரின் மிக்கான்." (3)

(சூரன் அமைச்சியற் படலம்)

இன்னவாறு உறுதி நலங்களை உரிமையுடன் சிங்கமுகன் கூறவே சூரபன்மன் யாதும் தேருமல் தீது மீதூர்ந்து மாறுபாடு மண்டித் தம்பியை இகழ்ந்து தருக்கோடு பேசினுன்.

சூரன் தூற்றியது

"காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
யாற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டுஅறு தேவிளை யாடும்
நேற்றைப் பாலனை யோபரம் பொருளென நினைந்தாய்!
உரைப்பது என்னினி ஒருவயிற்று என்னுடன் உதித்துப்
பெருக்க முற்றனை நம்குலப் பகைஞரைப் பெரிதும்
நெருக்க லின்றியே அவர்கள்பால் பட்டனை நீயே
இருக்க மற்றொரு தெவ்வரும் வேண்டுமோ எனக்கே?"

தனக்கு அறிவு கூறிய தம்பியை நோக்கிச் சூரன் இப்படிப் பழித்திருக்கிருன். "ஊன்வில் இறுத்து ஓட்டை மரத்துள் அம்பு ஓட்டி" என முன்னம் * இராமனை இராவணன் எள்ளிக் கூறிய நிலையைக் காற்றில் தள்ளுண்டு என முருகனைச் சூரன் தூற்றியுள்ளதில் காண்கின்றேம். கந்த புராணத்தின் சரிதக் காட்சிகளும், பாத்திரங்கள் பேசி வருகிற ஆட்சிகளும் அறிவு நலங்களும் கம்பராமாயணத்தில் இடங்கள்தோறும் தொடர்ந்து வருகின்றன. வரவு நிலைகள் உறவுரிமைகளை ஊன்றி உணரச் செய்கின்றன. கவிஞர் மொழிகள் கலையின் ஒளிகளாயுள்ளன.

தனக்கு உறுதி நலங்கள் உரைத்த தம்பியைச் சூரபன்மன் இகழ்ந்து பழித்ததுபோல் வீடணனை இராவணன் சினந்து வெறுத்தான். அவனுடைய மமதையும் மனச் செருக்கும் எதையும் மதியாதபடி வரம்பு மீறி வாது கூறி நின்றன.

விபீடணன் விலகியது

பரிவு கூர்ந்து உரிமையோடு அறிவுரைகள் பல கூறியும் யாதும் திருந்தாமல் மோதி முனிந்தமையால் அண்ணனுடைய நிலைமையை எண்ணி எண்ணி இத் தம்பி உள்ளம் வருந்தி உளைந்து நொந்தான். "இங்கே நில்லாதே; நின்ருல் அழிந்துபடுவாய்!" என்று இராவணன் சினந்து சீறவே வீடணன் விரைந்து

* இந் நூல் பக்கம் 3447, வரி 13 பார்க்க.

வெளியேறத் துணிந்தான். துணிந்தவன் பின்னும் மறுகி மயங்கினன். தமையனை விழைந்து பரிவோடு நோக்கினன். "அரசர் பெரும! நேர்ந்துள்ள அழிவுநிலைகளைநினைந்துஎன்நெஞ்சம் நெடிது கவலுகின்றது; மக்களும் ஒக்கலும் உறவினங்களும் குல முழுவதும் அடியோடு நாசமடைய மூண்டுள்ளன; பிறப்பின் பாசத்தால் பலவும் பேசினேன்; யாதும் பயன் இல்லை; இனி ஈசன் தான் காக்கவேண்டும்; அடியேன் இதுவரையும் செய்த பிழைகளைப் பொறுத்தருளுங்கள்; கட்டளை யிட்டபடி விரைந்து போகின்றேன்; விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்; வணக்கம்" என இங்ஙனம் கூறி இரு கைகளையும் கூப்பித் தொழுது வெளியே வந்தான். விழி நீர் ததும்பியது; கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன் அரண்மனைக்கு வந்தான். மனைவி மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டுக் கணநேரமும் தங்காமல் வெளியே புறப்பட்டு ஊரயல் இருந்த குளிர்ந்த மலைச்சாரலில் வந்து நின்றான்.

## கடல் கடந்து வந்தது

அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் இந் நால்வரும் வீடணனுடைய நண்பர்கள். நல்ல அறிவாளிகள். மதி மந்திரிகளாய் உரிமை பூண்டிருந்தவர்; இந் நீதிமான் வெளியேறியவுடனே கூடவே சேர்ந்து வந்தனர். அந்தத் துணைவர்களோடு நிலைமைகளைக் குறித்து ஆலோசித்தான்: இராமன் வானர சேனைகளோடு வந்து கடலின் வட கரையில் தங்கி யிருத்தலால் அங்கே சென்று அந்த மூர்த்தியைக் காண வேண்டும் என்று வேணவாவுடன் வீடணன் விரைந்து எழுந்தான். ஐந்து பேரும் விமானம் ஊர்ந்து ஆகாயமார்க்கமாய் வந்து சேர்ந்தார். வானர சேனையைக் கண்டார். வியந்து நின்றார். அப்பொழுது மாலைநேரம் ஆதலால் அங்கு ஓர் சோலையில் தங்கினர். அந்த இரவில் சேனைகளிடையே எங்கும் விளக்குகள் எரிந்தன. பரந்து விரிந்த பாற்கடலில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து நின்றன போல் தீபங்கள் யாண்டும் ஒளிகளை வீசி அலர்ந்து விளங்கின. படைகள் அடைந்துள்ள அந்தக் காட்சியைக் கண்டு அதிசயம் மீதூர்ந்து நின்றனர். அல்லிடை அருகே நெருங்கலாகாது; விடிந்த பின்புதான் காண வேண்டும் என்று கருதி அயலே இனிய பொழிலில் அமர்ந்து உறுதிகளை நாடி உளைந்திருந்தனர்.

கருதி யுளைந்தது

உடன் வந்துள்ள உரிமையாளர்களிடம் தனது கவலைகளை எடுத்துக்கூறி இம் மதிமான் மறுகி மயங்கினன். "அரிய புண்ணிய மூர்த்தியை ஆவலோடு காண வந்திருக்கிறோம். கொடிய பகைவனோடு கூடப் பிறந்தவன்; பொல்லாத அரக்கர் குலத்தவன் என்று என்னை எள்ளி இகழ்ந்து தள்ளவும் கூடும்; என் கதி எவ்வாறு முடியுமோ? யாதும் தெரியவில்லை" என இவ்வாறு உள்ளம் கவன்று அல்லலுழந்து மொழிந்தான்.

"இராமபிரான் கருணை நிறைந்த வீர வள்ளல் ஆதலால் எவ்வழியும் ஈர நீர்மையுடன் கண்ணோடிக் காத்தருளுவார்; நல்ல அறிகுறிகள் பல நம் எதிரே தோன்றியுள்ளன; உள்ளம் புனிதமுடைய உங்களுக்கு யாண்டும் மேன்மை யுண்டாம்" என இன்னவாறு இனிய நீர்மையோடு அவர் சொல்லித் தேற்றினர்.

உறுதி பூண்டது

அந்த அன்பர்கள் கூறிய உரைகளைக் கேட்டதும் இவன் பெருமகிழ்ச்சி யடைந்தான். மருவியுள்ள மானச மருமங்களை உரிமையுடன் அவர்களிடம் உவந்து சொல்லினன்

நல்லது சொல்லினீர் நாமும் வேறினி
அல்லது செய்துமேல் அரக்கர் ஆதுமால்
எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளிணை
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும். (1)

முன்புறக் கண்டிலேன்; கேள்வி முன்பிலேன்;
அன்புறக் காரணம் அறிய கிற்றிலேன்;
என்புறக் குளிரும் நெஞ்சுருகுமேல் அவன்
புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால். (2)

ஆதியம் பரமனுக்கு அன்பு நல்லறம்
நீதியின் வழாமையும் உயிர்க்கு நேயமும்
வேதியர் அருளுநான் விரும்பிப் பெற்றனென்
போதுறு கிழவனைத் தவமுன் பூண்டநாள். (3)

ஆயது பயப்பதோர் அமைதி யாயது
தூயது நினைந்தது தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி நம்மனத்து
ஏயது முடித்துமென்று இனிது மேயினன். (4)

தன்னுடைய மந்திரிகளோடு உசாவியறிந்து வீடணன் இவ்வாறு உரையாடியிருக்கிறான். வார்த்தைகள் பரிவும் பண்பும் படிந்து வந்திருக்கின்றன. "இராமபிரானை அடைந்து நாம் பிறவித்துன்பங்களை நீக்கிக்கொள்வோம்; அந்த மூர்த்தியை இதற்கு முன் நான் நேரே கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. அப்படியிருந்தும் என்னை அறியாமலே என் உள்ளம் அவ் வீர வள்ளலிடம் உருகி ஓடுகிறது; என்பும் கரைய யாவும் குளிர்ந்து ஆவி இன்பமீதூர்கின்றது. பிறவியை நீக்கியருளும் பரம்பொருளே இந்த உருவில் வந்துள்ளதாக என் சிந்தனை துணிகிறது. உடன் பிறந்த அண்ணனால் எள்ளி இகழ்ந்து தள்ளப்பட்டேன். எனது முன்னைய புண்ணிய பரிபாகம் இப்பொழுது என்பால் பலனுக்கு வந்துள்ளது என்று தெரிகிறது. அனுபவ வுணர்வுகள் இனிமை சுரந்து புனிதநிலையில் பொங்கி எழுகின்றன. நல்ல அடையாளங்கள் பல என் கண் எதிரே காணப்படுகின்றன. புண்ணிய வீரன் என்னைக் கண்ணியமாக் காத்தருளுவான் என்றே நான் எண்ணி மகிழ்கின்றேன். எனது மனவுணர்ச்சிகள் மகிழ்ச்சி மீதூர்ந்து நிற்கின்றன. என்ன விளையுமோ? யாதும் தெரிந்திலேன்." என இன்னவாறு வீடணன் பன்னிமொழிந்து உன்னி உளைந்து உருகியிருந்தான்.

இவனுடைய உரைகளில் உணர்வொளிகள் மிகுந்து உறுதி நலங்கள் சுரந்து தருமநீதிகள் நிறைந்து அரியபல மருமங்கள் மருவி மிளிர்கின்றன.

எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளிணை
புல்லுதும்: புல்லி இப் பிறவி போக்குதும்.

என நண்பர்களிடம் இங்ஙனம் சொல்லியிருத்தலால் இராமனை இவன் உள்ளி யுருகியுள்ள நிலை உணரலாகும். அளவிடலரிய இனிய நீர்மைகளுக்குத் தனி நிலையமாயிருத்தலால் அந்தப் புனித சீலனைக் குணக் கடல் என இந்த வண்ணம் இவன் எண்ணி ஏத்தியுள்ளான்.

ஒவ்வொரு குணமும் வரம்பு காண முடியாதபடி பெருகி நீண்டுள்ளமையால் எல்லையில் பெருங் குணம் என உள்ளம் உருகினான். அருள் அமைதி நிறை பொறை வண்மை தண்மை உண்மை திண்மை முதலிய குணநலங்கள் எல்லாம் இராமனை

மருவி மணம் பெற்றுள்ளமையால் குணகரன், குணசாகரன் என வேதமுனிவரும் அவனை வியந்துபுகழ்ந்து உவந்து நின்றனர்.

அகிலமங்கள குணகண சொரூபியான இந்தத் தருமசீலனை மருவி இருமையும் பெருமை பெறலாம் என்று உரிமையோடு அவன் உறுதி செய்திருந்தான். உவகை பெருகி இருந்தது.

## உதயம் ஆயது

மறுநாள் பொழுது விடிந்தது. வைகறையில் எழுந்து செய் கடன்கள் முடித்து வழக்கம்போல் அலைவாய்க்கரையில் இராமன் உலாவிவந்தான். நெய்த நிலக் காட்சிகள் எங்கணும் இனிய உவகைகளாய் எதிர் நிலவி நின்றன. புன்னைப் பொதும்பர்களில் அன்னம் குருகுமுதலிய பறவையினங்கள் உல்லாசமாய்க் கூடி ஆடித்திரிவதைக் கண்டு பிரிவுத்துயரால் மறுகி அரிதில் தேற வந்தான். வானர சேனைகள் காலை யுண்டி கொண்டன. இலக்குவன் சுக்கிரீவன் அனுமான் முதலிய துணைவர்கள் அயலே நிற்க இராமன் இடையே அமர்ந்திருந்தான். அப்பொழுது சூரியன் உதயமாகி மூன்று நாழிகை ஆகியிருந்தது. அந்நேரம் தன்னோடு தொடர்ந்து வந்த நண்பர் நால்வருடன் வீடணன் இராமனைக் காண விழைந்து கடுகி வந்தான். சேனையின் முன் அணியில் நின்ற காவல் வீரர்கள் யாரோ மாற்றார் புகுந்தனர் என்று சீறி விரைந்து இவரை வளைந்து கொண்டனர்.

## அபயம் இட்டது

படைவீரர்கள் இடையே தடையாய் இடையூறு செய்யவே வீடணன் "எந்தையே! இராகவா! சரணம்" என்று கூவினன். இந்த அபயக்குரல் இராமன் காதில் சிறிது கேட்டது. கேட்கவே அருகே நின்ற தம்பியைக் கருதி நோக்கினன். அதற்குள் முன்னே சுற்றி வளைந்த வானரங்கள் கலகம் செய்ய மூண்டன. "கொடிய இராவணனே இந்த வாறு மாறு வேடமாய் ஈண்டு வந்திருக்கிறான்; இவனை மீண்டும் போகவிடலாகாது: பிடியுங்கள்; அடியுங்கள்; குத்துங்கள்; கொல்லுங்கள்" என இன்னவாறு மூண்டு முனைந்து ஆயுதங்களை வீசி ஆரவாரம் செய்யவே அனுமான் இரண்டு வீரர்களை விரைந்து செலுத்திக் கலகத்தை அடக்கும் படி பணித்து விடுத்தான். மயிந்தன் துமிந்தன் என்

னும் படைத்தலைவர் இருவரும் முடுகிவந்து அனைவரையும் விலக்கி வீடணனை அணுகி "நீர்யார்? இங்கு ஏன் வந்தீர்? ஏதேனும் காரியம் உண்டா?" என்று கருதி வினவினர்.

அனலன் சொன்னது

அமர்புரிய மூண்ட அனைவரையும் அயலே நிறுத்தி அமைதியாய் முன் வந்து நிலைமையை நேரே விசாரித்த அத் தலைவனை வியந்து மகிழ்ந்து தனது முதல் அமைச்சனை வீடணன் விநயமாய் நோக்கினன். அனலன் என்னும் அம்மதிமான் யாவும் தெளிவாகச் சொன்னன்: "இதோ வந்துள்ள இவர் பிரமாவினுடைய வழி முறையில் வந்தவர். தரும குணசீலர். கருணை சத்தியம் நீதி முதலிய உத்தம நீர்மைகள் எல்லாம் ஒருங்கே யுடையவர். இலங்காதிபதியின் இளைய தம்பி. அண்ணன் செய்து வருகிற அநீதிகளை யாதும் சகியாமல் யாண்டும் அறிவு நலங்கள் கூறி வந்தார். வேண்டிய வழியெல்லாம் விதிமுறைகளைப் போதித்தார். "கொடிய சுடுதீயை மடியில் வைத்தது போல் அரிய பதிவிரதையை அநியாயமாய்ச் சிறையில் வைத்துள்ளாயே! இதனல் குடிகேடு நேரும்; குலம் அடியோடு அழிந்துபோம்; உடனே விடுதலை செய்தருள்" என்று உரிமையோடு பல உணர்வுநலங்களைப் போதித்தார். அவன் யாதும் கேளாமல் மோதிமுனைந்து "என் எதிரே நில்லாதே; வெளியே போய்விடு; போகாமல் நின்ருயேல் கொன்று தொலைப்பேன்" என்று கன்றிக் கறுத்துக் கடுத்துப் பழித்தான். தீவினையாளரோடு சேர்ந்திருப்பது தீதாம் என்று தெளிந்து வெறுத்து விரைந்து இவர் வெளியேறினர். புண்ணிய மூர்த்தியான இராமன் திருவடியை அடைந்து ஏவிய ஊழியங்களைச் செய்து உய்தி பெறலாம் என்று உறுதி பூண்டு உள்ளம் உருகி ஈண்டு வந்துள்ளார்; ஆண்டவனைக் காண ஆவல் நீண்டுள்ளார்; இந்த உண்மை நிலையைப் பெருமானிடம் போய் உரைத்தருளுக" என அம் மதிமான் இதமா இனிது கூறினன்.

அனலன் கூறிய இவ்வுரைகளைக் கேட்டு மயிந்தன் வியந்தான். நிலைமைகளை நினைந்தான்; தலைமையான காவலாளரை அங்கே பாதுகாத்து நிற்கும்படி பணித்து விட்டு விரைந்து மீண்டு இராமனிடம் வந்தான்; வணங்கி நின்று வரவுகளை

உரைத்தான். அவன் வந்து கூறிய முறைகளையும் உரைகளையும் அயலே காண வருகின்றோம்.

தருமமும் ஞானமும் தவமும வேலியாய
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள்நெறி எய்திச்சென்று அடி வணங்கினான். (1)

விளைவினை அறிந்திலம் வீடணப் பெயர்
நளிர்மலர்க் கையினான் நால்வ ரோடுடன்
களவியல் வஞ்சனை இலங்கைக் காவலற்கு
இளவல் நம்சேனையின் நடுவண் எய்தினான். (2)

முரண்புகு தீவினை முடித்த முன்னவன்
கரண்புகு சூழலே சூழக் காண்பதோர்
அரண்பிறி தில்லென அருளின் வேலையைச்
சரண் புகுந்தனனென முன்னம் சாற்றினான். (3)

ஆயவன் தருமமும் ஆதி மூர்த்திபால்
மேயதோர் சிந்தையும் மெய்யும் வேதியர்
நாயகன் தரநெடுந் தவத்து நண்ணினன்
தூயவன் என்பதோர் பொருளும் சொல்லினான். (4)

கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்
எற்புடைக் குன்றமாம் இலங்கை ஏழை நின்
பொற்புடை முடித்தலை புரளும் என்றொரு
நற்பொருள் உணர்த்தினன் என்று நாட்டினான். (5)

ஏந்தெழில் இராவணன் இனைய சொன்ன நீ
சாந்தொழிற் குரியையென் சார்பு நிற்றியேல்
ஆந்தினைப் பொழுதினில் அகறி யாவெனப்
போந்தனன் என்றனன் புகுந்த தீதென்றான். (6)

அப்பொழுது இராமனும் அருகின் நண்பரை
இப்பொருள் கேட்டநீர் இயம்புவீர் இவன்
கைப்புகற் பாலனோ? கழியற் பாலனோ?
ஒப்புற நோக்கிநும் உணர்வினால் என்றான். (7)

மயிந்தன் என்னும் சேனைத்தலைவன் இராமனிடம் வந்து விபீடணனுடைய வரலாறுகளை இவ்வாறு விளக்கியிருக்கிறான். "வந்துள்ளவன் இலங்கை வேந்தன் தம்பி; வீடணன் என்னும் பேரினன்; நல்ல நீதிமான்; தமையனது தீமைகளைக் கண்டித்து

நன்மைகளைப் போதித்துள்ளான்: "கற்பரசியை விட்டு விடு; விடாதிருந்தால் இலங்கை நாசமாய் அழிந்து போம்; அரக்கர் குலம் பாழாம்; உன்முடித்தலை படித்தலத்தில் உருளும்; நீயும் துடித்து மடிவாய்; அடுத்துள்ளகேடுகளை அறிந்து விரைந்து திருந்துக" என இடித்து அறிவுறுத்தி எவ்வளவோ நீதிகளை எடுத்துக் கூறியிருக்கிறான். அவன் யாதும் திருந்தாமல் அகம் செருக்கி இகழ்ந்தமையால் இவன் உள்ளம் கொதித்து ஊரை விட்டு வெளியேறி அரக்கர் குலத்தை அடியோடு வெறுத்து ஒதுக்கித் தருமமூர்த்தியான தங்களை அடைக்கலமாகக் கருதி ஈண்டு அடைந்திருக்கிறான். அவனுடைய நண்பர் நால்வர் உடன் வந்துள்ளனர்" என இன்னவாறு வானரத்தலைவன் கூறவே இம்மான வீரன் அருகிருந்த துணைவரை உரிமையோடு நோக்கி உசாவ நேர்ந்தான்.

இங்கே நிகழ்ந்துள்ள காட்சிகளைக் கண்ணூன்றிக் காணுகின்றோம். சீவிய மருமங்கள் ஓவிய உருவங்களாய் உலாவி வருகின்றன. யாவும் கண்ளதிரே நேரே காண்பது போல் நிகழ்ச்சிகள் நிலவி நிற்கின்றன. அரிய பல நீர்மைகள் அறிய வந்துள்ளன. மொழிகளின் ஒளிகள் விழிகளிப்ப வெளி எங்கும் சுடர்களை வீசுகின்றன.

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணன்.

மயிந்தன் வரும்பொழுது இராமன் இருந்த நீர்மையைக் கவி இங்ஙனம் வரைந்து காட்டியிருக்கிறார். உரைப்படம் உணர்வு மணம் கமழ்ந்து உவகை சுரந்து ஒளிவிரிந்து மிளிர்கிறது.

புறத்தே சூழ்ந்திருக்கின்ற பெரிய கோட்டை மதிள்; அகத்தே அமைந்துள்ள அழகிய கோயில்; அதன் வாயில்; அக் கோயிலுள் எழுந்தருளி யிருக்கும் மூலமூர்த்தி முதலிய திவ்விய மான தெய்வக் காட்சிகளை இங்கே செவ்வையாய்க் காண்கின்றோம். உருவகஅணி உணர்வு நிலையமாய் ஒளி புரிகின்றது.

அரிய தவசி, பெரிய ஞானி, உயர்ந்த புண்ணியவான், சிறந்த பெருந்தகை; மிகுந்த பொறுமையுடையவன்; பெருங்கருணையாளன் என இவ்வாறு இராமனை நேரே கூறாமல் உருவக

மொழியில் அழகுற அலங்கரித்துச் சொல்லியிருப்பது விழுமிய நிலையில் எழில் ஒளி வீசி இன்பம் பயந்துள்ளது.

கருணையங்கோயிலுள் புகுதற்கு இரண்டு வாயில்கள் அமைந்துள்ளன. அவை பெருமையும் பொறுமையும் என்பன.

எவ்வளவு சிறியவர்களாயிருந்தாலும் தன்னை நாடிவந்தால் அவர்களுடைய சிறுமைகளை நினைந்து இகழ்ந்து தள்ளாமல் உவந்து பேணி உதவிபுரியும் பெருந்தன்மை யுடையவன் இராமன் என்பது இங்கே உணர்ந்து கொள்ள வந்தது. இந்தப் பெருமையைஉரிமையாகப் பயன்படுத்திக் கொண்டுபலர் பயன்பெற்றுள் ளனர். இனிய உபகாரம் தனி மகிமை யுடையது.

நெடியதுயரங்களைச் செய்த கொடிய பகைவராயினும் எதிரே வணங்கி வந்தால் அவருடைய பிழைகளை யெல்லாம் பொறுத்து அருள் புரியும் பெரிய பொறுமையாளன் ஆதலால் இராமனை அணுகுதற்குப் பொறுமையும் வாயிலாய் மருவியிருந்தது.

பொல்லாத பகைவனோடு உடன் பிறந்த தம்பி உள்ளே புகவந்துள்ளான். அவனை விழைந்து ஏற்றுக் கொள்ளுவானோ? அல்லது இகழ்ந்து வெளியே தள்ளி விடுவானோ? என்ற ஐயமும் ஆலோசனைகளும் இங்கே துள்ளி எழும்: அந்தச் சந்தேகங்கள் நீங்கிச் சிந்தை தெளிந்து கொள்ளும்படி பெருமை பொறுமைகள் ஈண்டு வாயிலாய் வந்தன. பொறுமை நிறைந்த பெருந்தகை ஆதலால் வந்தவனை உரிமையோடு அணைத்துக் கொள்ளுவான் என்னும் ஆதரவும் அருள் நிலையும் அறிவுற நின்றன.

குண நீர்மைகள் அரிய சீர்மைகளோடு இனிமை சுரந்திருக்கின்றன. [தருமமும் தவமும் ஞானமும் இராமனை என்றும் நன்ருகச் சூழ்ந்து காத்து நிற்கின்றன என்னும் அருமைக் காட்சியை இங்கே கூர்ந்து நோக்கி ஓர்ந்து உவந்து கொள்ளுகிறோம். உயர்ந்த புண்ணிய மூர்த்தி என்பது உணர வந்தது.]

[கண்ணன் என்றது மண்ணகத்தும் விண்ணகத்தும் மருவியுள்ள யாவருக்கும் கண்போல் இனியவன் என இராமனது தனி நிலைமை தெரிய வந்தது.

"கண்ணவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்குத்

தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே." (திருவாய்மொழி)

என நம்மாழ்வார் எண்ணியுருகியுள்ளதும் ஈண்டு எண்ண வுரியது. எவ்வுயிர்க்கும் இன்ப நிலையம் என்பது தெரிய நின்றது.

செந்தாமரை மலர் போன்ற அழகிய கண்களையுடையவனும், எல்லார்க்கும் கண்போல் உள்ளவனுமான இராமனைக் கண்டு வானரத்தலைவன் வீடணன் நிலைமையைக்கூறவே அக் கோமகன் அயலேயிருந்த துணைவர்களை நோக்கி நினைவுகளை விசாரித்தான். விசாரணை விநய சீலமாய் விரிந்து நின்றது.

ஆய்ந்து சூழ்ந்தது.

தன்பால் அன்பால் அடைக்கலம் புகவந்துள்ளவனை இக் கொடைக் குரிசில் உடனே தன்மூப்பாகத் துணிந்து சேர்த்துக் கொள்ளவில்லை. மந்திரிகள் போல் மருவியுள்ள அந்தரங்க நண்பர்களிடம் ஆராய நேர்தான். நேர்ந்த நம்பி தனது அருமைத் தம்பியை முதலில் கேட்டிருக்க வேண்டும்; அங்ஙனம் கேட்க வில்லை. சுக்கிரீவனையே முன்னதாகப் பக்குவமாய் நோக்கினான். பண்போடு வினவினான்.

கைப்புகற் பாலனோ? கழியற் பாலனோ?

கேள்வி கேட்டிருக்கும் மாதிரியைப் பாருங்கள்.

மயிந்தன் கூறியன யாவும் உடனிருந்து கேட்டவன் ஆதலால் வேறு ஒன்றும் கூறாமல் வானர வேந்தனிடம் இம் மான வீரன் இவ்வாறு உசாவினான். நம்முடன் உறவாய்க் கூடி வாழ விழைந்து உரிமையுடன் நம்மை நாடி வீடணன் வந்திருக்கிறான்; இவனை நாம் சேர்த்துக் கொள்ளுவோமா? அல்லது தள்ளி விடுவோமா? என்று கருத்தாவின் தலைமையில் கேட்காமல் கருமத்தின்நிலைமையில்கருத்தோடுவினவியிருப்பதுவிநயம்மிகவுடையது.

வந்தவனுடைய தகுதி என்ன? நாம் அணைத்துக்கொள்ளத் தக்கவனா? அகற்றிவிட வுரியவனா? அவனுடைய நிலைமை நீர்மைகளையும், நம்முடைய தலைமை சீர்மைகளையும் கூர்மையாக ஓர்ந்து நாம் செய்யவுரியதை ஐயமறத் தெளிந்து சொல்லுக என்னும் குறிப்புகள் எல்லாம் வினவிய உரையில் விரவியுள்ளன.

அடைக்கலமாய் அவாவி வந்தவனை விரைந்து அணைத்துக் கொள்ளவேண்டும் என்னும் ஆவல் இராமன் உள்ளத்தில் இருந்தமையால் கைப்புகற்பாலனோ? என அனுகூலமான வினா முன்னுற வந்தது. மனத்தில்விரும்பியுள்ளதை வாக்குவிரைந்து வெளிப்படுத்தி விடுகிறது. வினவிய நிலையிலேயே விழைவு வெளியாயது.

தன் கருத்தை முதலில் தெளிவாக வெளியிடாமல் துணைவர்களுடைய மன நிலைகளை அறிய இம் மதிமான் அதி விநயமாய் வினவியருளினன். கேட்ட கேள்வி கேண்மை தழுவி நின்றது.

சுக்கிரீவன் உரைத்தது.

"வேதம் முதலிய கலைகள் யாவும் ஓதியுணர்ந்த மகா மேதையான நீங்கள் என்னிடம் ஆலோசனை கேட்டது அதிசயமாயுள்ளது. நீதி நிலைகளை நெறிமுறையே அறிந்த மதிநலம் இலனாயினும் அதிபதி அருளினமையால் என் மனதில் தோன்றியதை நான் நேரே சொல்லுகின்றேன். சரியோ, பிழையோ சிறியேன் அறியேன்; பெரியோய் கேட்டருளுக" என இன்னவாறு பணிவாய் முன்னுரை மொழிந்து சுக்கிரீவன் கூறினன்.

வெம்முனை விளைதலின் அன்று; வேறொரு
சும்மையான் உயிர்கொளத் துணிதலால் அன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ?
செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர்? (1)

தகையுறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை உலகின் வேந்தனைப்
பகையுற வருதலும் துறந்த பண்பிது
நகையுறல் அன்றியும் நயக்கற் பாலதோ? (2)

மிகைப்புலம் தருமமே வேட்ட போதவர்
தகைப்புலம் துறந்துபோய்ச் சார்தல் அன்றியே
நகைப்புலம் பொதுவுற நடந்து நாயகன்
பகைப்புலம் சார்தலோ பழியின் நீங்குமோ? (3)

வாக்குறு வணகழல் தம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவன்
ஆர்க்குற வாகுவன் அருளின் ஆழியாய்! (4)

கூற்றுவன் தன்னெடிவ் வுலகம் கூடிவந்து
ஏற்றன என்னினும் வெல்ல ஏற்றுளேம்
மாற்றவன் தம்பிநம் மருங்கு வந்திவண்
தோற்றுமோ? அன்னவன் துணைவன் ஆகுமோ? (5)

அரக்கரை ஆசறக் கொன்று நல்லறம்
புரக்கவந் தனமெனும் பெருமை பூண்டநாம்
இரக்கமில்லவரையே துணைக் கொண்டு ஏறலால்
சுருக்கமுண் டவர்வலிக் கென்று தோன்றுமால். [6]

விண்டுழி ஒருநிலை நிற்பர்; மெய்ம்முகம்
கண்டுழி ஒருநிலை நிற்பர்; கைப்பொருள்
கொண்டுழி ஒருநிலை நிற்பர்; கூழுடன்
உண்டுழி ஒருநிலை நிற்பர்; உற்றவர். [7]

வஞ்சனை இயற்றிட வந்த வாறலால்
தஞ்செனை நம்வயின் சார்ந்துளான் அலன்;
நஞ்செனக் கொடியனை நயந்து கோடியோ
அஞ்சன வண்ணா! என்று அறியக் கூறினான். [8]

[விபீடணன் அடைக்கலப்படலம்]

[தன் நெஞ்சில் நினைந்த குறிப்புகளைச் சுக்கிரீவன் இப்படி உரைத்திருக்கிறான். பலவகையான நெறிமுறைகளும் உலக நீதிகளும் இந்த உரைகளில் வெளி வந்துள்ளன ஒரு அமைச்சனைப் போல் ஆலோசனைகளை ஆர்வத்தோடு பேசியிருக்கிறான்.]

"கருணைநிதியே! இப்பொழுது இங்கே சேரவேண்டும் என்று மூண்டு வந்திருக்கின்றவனைக் குறித்து நான் சந்தேகப் படுகிறேன். தன் தமையனோடு மாறுபாடு பண்டியோ, வேறு பாடு கொண்டோ வீடணன் பிரிய நேர்ந்தது என்பது பெரிய பிழை. உடன் பிறந்த அண்ணனை வெறுத்து விலகி வந்துள்ளதாகச் சொல்லுவது விபரீதமாயுள்ளது. அரக்கருடைய வார்த்தைகளை நம்பலாகாது. கொடிய வஞ்சகரான அவருள் நெஞ்சம் நேர்மையானவரைக் காண்பது மிகவும் அரிது; பொல்லாத செயல்களையே எல்லா வழிகளிலும் துணிந்து செய்யும் இயல்பினர். பெற்றவரையும் உற்றவரையும் குற்றமுடையார் என்று கண்டு முற்றும் துறந்து வந்தேன் என்று இவன் மொழிவது இழிவு மிகவுடையது. உறவினர்மேல் வெறுப்பானால் துறவியாய் எங்கேனும் காட்டுக்குப் போயிருக்கலாமே; இங்கே நம்

மாட்டு வரவேண்டியதில்லையே; இவனுடைய வரவு நிலை கபட நாடகமாய்க் கரவுபடிந்துளது. அண்ணனால் மதிப்பும் மரியாதைகளும் பெற்று இதுவரையும் சுகமாய் உண்டு வாழ்ந்து வந்தவன் அவனுக்குப் பகை மூண்டு அபாயம் நேர்ந்தது என்று தெரிந்தவுடனே உபாயமாய் இவன் ஒதுங்க நேர்ந்துள்ளான். நன்றி கெட்ட வஞ்சகன் என்று தெரிகின்றது. உரிமையாய் ஆதரித்து வந்த தமையனுக்கே உதவி செய்யாதவன் பிறர்க்கு என்ன உபகாரம் செய்வான்? தீய இயல்பினராதலால் மாய இராட்சதரைத் தூயர் என்று யாதும் நம்பலாகாது. பொறிகளை அடக்கிப் பெரிய தவசிபோல் இருந்த மாரீசன் முடிவில் கொடிய கேடே செய்தான். அவன் இழைத்த தீமையின் விளைவை நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள். உலகிலுள்ள வீரர்களை யெல்லாம் ஒருங்கே திரட்டிக்கொண்டு எமனே வெகுண்டு வந்தாலும் நேரே எதிர்ந்து பொருது அவனை வேரோடு வெல்ல வல்ல வீரபராக்கிரமங்களை நாம் அடைந்திருக்கிறோம். நமக்குப் பிறருடைய துணை எதற்கு? பொல்லாத அரக்கர் எல்லாரையும் அடியோடு அழித்து ஒழித்து நல்ல தரும நீதிகளைப் பாதுகாப்பதாக விரதம் பூண்டுள்ள நீங்கள் அந்த அரக்கர் இனத்தில் ஒருவனைச் சேர்த்தால் அது எவ்வளவு இழுக்காம்? பெற்றவெற்றி எல்லாம் அவனால் உற்றன எனப் பேதை உலகம் பேச நேருமே! யாவும் யோசனை செய்து சிந்திக்கவேண்டுகிறேன். பகைவகையினரை எவ்வகையிலும் இனியர் என்று கருதலாகாது. என்றும் ஒரு நிலையாய் உரிமை பூண்டு ஒழுகி வருகிற உண்மையாளர் இவ்வுலகில் மிகவும் அரியர். நேரே கண்டபோது ஒன்று பேசுவர்; காணாதபோது மாறு வேறு கூறுவர். நெஞ்சு நேர்மையில்லாத மாந்தரே யாண்டும் நிறைந்திருக்கின்றனர். நண்பனாக ஒருவனை நயந்து கொள்வதில் பல பண்பாடுகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பிறப்பு இருப்பு செயல் இயல் முதலிய நிலைகளை ஆராய்ந்து பாராமல் யாரையும் நட்பாகச் சேர்க்கலாகாது. நாடி ஆராயாமல் நண்பு கொண்டால் கோடி துன்பங்கள் உண்டாம். கொடிய பகைவன்மேல் படையெழுச்சி செய்து அயலிடம் பெயர்ந்து போர்மேல் மூண்டுள்ள நாம் இடையே யாரையும் துணை கோடலாகாது. எவ்வழியும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். எதிரியிடமிருந்து வந்திருத்தலால் ஏதோ

கேடு செய்யவே சூழ்ந்து நயவஞ்சகமாய் ஈண்டு இவன் அபயம் புக நேர்ந்துள்ளான். இவனை உள்ளே விடுவது தீதாம்; உடனே எள்ளி இகழ்ந்து தள்ளி விட வேண்டும்'' என இங்ஙனம் வானர வேந்தன் கூறி நின்றான்.

அவனுடைய மனநிலைகளும் உணர்வுறுதிகளும் இங்கே தெளிவாய் வெளியாகி யுள்ளன. பல வகையான அனுபவங்களைச் சுட்டிக் காட்டி உரிமையோடு உரையாடி யிருக்கிறான்.

*செம்மைஇல் அரக்கரில் யாவர் சீரியோர்?*

இராட்சசர்களைக் குறித்துச் சுக்கிரீவன் கருதியிருப்பதை இது உறுதியாகக் காட்டியுள்ளது. செம்மை = நேர்மை, நீதி, ஒழுங்கு. மனக்கோட்டமின்றி நேர்மையா யிருக்கும் சீர்மை உயர்ந்த மேன்மையுடையது ஆதலால் அந்த நீர்மையை இங்ஙனம் தலைமையா எடுத்துக் கூறினன். வஞ்ச நெஞ்சினர்; யாண்டும் கரவும் கபடமும் கொடுமையும் உடையவர்; இரக்கம் அற்ற அந்த அரக்கர் மரபில் உள்ளம் தூய்மையான ஒரு நல்லவனைக் காணமுடியுமா? என்று கருதி வினவியிருக்கிறான்.

பொல்லாத அரக்கர் குலத்தில் பிறந்தவன் ஆதலால் வீடணன் நல்லவனா யிருக்க முடியாது; தீயவனாகவே யிருப்பன் என்று இப்படி முடிவு செய்திருக்கிறான்.

*தம்முனைத் துறந்தது தரும நீதியோ?*

தமையனை விட்டு விரோதமாய் நீங்கி வந்திருப்பது கொடிய அநீதியாம் என இங்ஙனம் குறித்திருக்கிறான். தம்முன் = அண்ணன். தனக்கு முன்னே பிறந்தவன் எனப் பிறப்புரிமையை உணர்த்தி நின்றது.

அண்ணனுக்குத் துரோகம் செய்வது பெரிய பாவம்; அந்த அநியாயத்தை வீடணன் துணிந்து செய்திருக்கிறான். இந்தத் துரோகியை நாம் சேர்க்கலாகாது; பார்க்கவும் கூடாது எனச் சுக்கிரீவன் இங்கே குறித்திருக்கிறான்.

அவனுடைய உரைக் குறிப்புகள் வியப்புகளை விளைத்து நிற்கின்றன. மானச தத்துவங்கள் உய்த்துணர வந்துள்ளன.

தன்னுடைய அண்ணனைக் கொன்று அரசைக் கவர்ந்து கொண்டவன் இவ்வண்ணம் சகோதர தருமத்தை விழைந்து புகழ்ந்து பேசியிருக்கிறான். பொதுவான உண்மைகள் சமையம் நேரும்போது எவர் வாயிலுமிருந்து உயர்வாக வெளி வருகின்றன. அன்புரிமைகள் யாவருக்கும் இன்பம் தருகின்றன.

வாலியும் இராவணனும் அண்ணன்மார் வரிசையில் நிற்கின்றனர். சுக்கிரீவனும் விபீடணனும் தம்பியர் நிறையில் நிற்கின்றனர். உடன் பிறந்த தமையன்மாருக்குத் துரோகம் செய்தவர் என இத்தம்பியர் இருவரும் பழிக்கப் பட்டுள்ளனர்.

"செங்கதிரோன் மைந்தனே தென்னிலங்கை வீடணனே
இங்கார் இவனுக் கிணையாவார்?—வெங்காள
கூட விடமே கொடிய அமணனுக்குக்
கூட விடமாம் கொடிது."

குமணவள்ளலுடைய தம்பி அமணன். புண்ணிய சீலனை அந்த அண்ணன் தலையை அநியாயமாய்க் கொய்து வரச் செய்த பாவி ஆதலால் அமணன் இவ்வாறு பழிக்கப்பட்டான்.

பழிவழியில் பரிசு பெற்று இங்ஙனம் முதல் வரிசையில் வந்துள்ள சுக்கிரீவனும் விபீடணனும் இங்கே பார்வைக்கு வந்திருக்கின்றனர். தமையனை இறந்து போகும்படி செய்தவன் தம்முனைத்துறந்து வந்தவனைக் குறித்து இகழ்ந்து பேசியுள்ளான். விளைந்து வந்துள்ள மொழிகளை வியந்து காணுகின்றோம்.

அல்லல் பல இழைத்து மனைவியையும் கவர்ந்து கொண்டு தம்பியைக் கொல்ல முனைந்தான் வாலி. நெறி முறை தவறிக் கொடிய துயரங்கள் செய்தமையால் அன்னவனைப் பின்னவன் கடிய நேர்ந்தான். அவ்வாறு யாதொரு இடரும் செய்யாத இராவணனை இடையே கைவிட்டு வீடணன் வந்துள்ளது கொடுமையாம் எனக் கவியரசன் கடுமையாகக் கண்டித்திருக்கிறான்.

தரும நீதியோ? என்று இராமனை வினயமாய் வினவியிருக்கிறான். தருமமும் அன்று; நீதியும் ஆகாது என்பது குறிப்பு.

பாவமும் அநீதியும் செய்துள்ளவனை நீதி நிலையமாய் நிலவியுள்ள புண்ணிய மூர்த்தியான நீங்கள் யாதும் பேணலாகாது; கண்ணால் காணவும் கூடாது என்பது கருத்து.

காரண காரியங்களைக் குறித்துக் காட்டிப் பலவகையிலும் வாதித்திருப்பது அவனுடைய மனவுறுதியை விளக்கி நிற்கிறது.

போர்க்கு உறவு அன்றியே போந்தபோது இவன்
ஆர்க்கு உறவு ஆகுவன் அருளின் ஆழியாய்!

இராவணன் பகைவரோடு போராட நேர்ந்திருக்கிறான்; அரிய பெரிய போர் மூண்டுள்ளது. இந்தச் சமையத்தில் தமையனுக்கு உதவியாய் நின்று உபகாரம் செய்யாமல் பேடிபோல் கைவிட்டு வீடணன் ஓடி வந்திருக்கிறான். உள்ள நாளளவும் நன்றாக உண்டு வாழ்ந்தவன் அல்லல் நேர்ந்தபோது அயலே ஒதுங்கினான். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த கொடிய துரோகியாய் நெடிதோங்கி நிற்கின்றான்.

உற்ற உறவினருக்கே உதவி புரியாமல் சதிபுரிந்து வந்துள்ள இவன் மற்றவருக்கு என்ன உதவி செய்வான்? இவனை எப்படி நம்புவது? நன்றியில்லாத கொடிய வஞ்சகனை இவனை என்றும் யாதும் நம்பலாகாது எனத் தன் நம்பிக்கையை இங்ஙனம் நன்கு வலியுறுத்தி உறுதி கூறினான்.

அருளின் ஆழியாய்! என இராமனை இங்கே இப்படி விளித்திருக்கிறான். கிருபாசமுத்திரம் என அப்பெருமான் பேர் பெற்றுள்ளதை இப்பொருள் மொழி உணர்த்தி நின்றது.

கருணைக் கடல் ஆதலால் வந்தவனுக்கு இரங்கி இடங் கொடுத்து விடலாகாதே என இந்த விதம் தொடங்கியுரைத்தான். அரக்கர்பால் இரக்கம் அவலமாம் என்று குறித்தான்.

பகையினத்தைச் சேர்ந்தவனை உள்ளே புகவிட்டால் தொகையாய் உங்கள் அடியினை அடைந்துள்ள படைகளுக்கு இடையூறு நேர்ந்து விடும்; எல்லை மீறி அருள் புரிவதால் அல்லல் ஏறும் ஆதலால் அவ்வாறு செய்யாமல் தெவ்வோடு திண்மையாய் எவ்வழியும் செயிர்த்து நின்று திருவருள் புரிக எனப் பொருள் மொழி கூறிப் போற்றி வேண்டினான்.

கூற்றுவன் தன்னொடு இவ்வுலகம் கூடிவந்து
ஏற்றன என்னினும் வெல்ல ஏற்றுளேம்.

தம்முடைய ஆற்றலைக் குறித்து இப்படிப் போற்றிப் புகழ்ந்துள்ளான். உலகம் எல்லாம் திரண்டு யமனையும் துணைசேர்த்

துக் கொண்டு போராட மூண்டு வந்தாலும் நேரே அமராடி வென்று கொள்ள நாம் ஆயத்தமாய் நிற்கின்றோம். நமக்கு எவருடைய உதவியும் வேண்டியதில்லை. பகைவகையினனை இவனைத் துணைக் கொள்வது நகைவகையாய் முடியும்; ஆதலால் எவ்வகையினும் அணுகவிடலாகாது என்று துணிவுரை கூறினன்.

அரக்கரைக் கருவறுத்து அறத்தைக் காக்கவந்துள்ள தரும மூர்த்தி என உலகம் புகழ ஒளி பெற்றுள்ள தாங்கள் அந்த இனத்தில் எவனுக்கும் அளிபுரிதல் தகாது என்று தெளிவு கூறினன்.

இங்கே தஞ்சம் என நேர்ந்துள்ள வீடணன் வஞ்சனை செய்யவே சூழ்ச்சியாக வந்துள்ளான்; இவனை நம்பிச் சேர்ப்பது நஞ்சினை உட்கொள்ளுவது போலாம்; என் நெஞ்சம் தெரிந்ததைச் சொன்னேன்; அஞ்சன வண்ண! மேல் உன் பிரியம் என்று சுக்கிரீவன் இங்ஙனம் சொல்லி முடித்தான். முடிக்கவே இராமன் பக்கமிருந்த சாம்பவானைப் பார்த்தான். உன் கருத்து என்ன? என்று குறிப்போடு கேட்டான்.

### சாம்பவான் சாற்றியது.

இவன் முதிர்ந்த வயதினன்; சிறந்த மதிமான்; உலக அனுபவங்கள் பலவும் தெரிந்தவன். சுக்கிரீவன் உரைத்து வந்த உரைகளையெல்லாம் கூர்மையாகக் கேட்டிருந்த இவன் தன்னை நோக்கி இராமன் வினவிய போது விநயமாக இனிது மொழிந்தான்.

அறிஞரே ஆயினும் அரிய தெவ்வரைச்
செறிஞரே யாவரேல் கெடுதல் திண்ணமால்
நெறிதனை நோக்கினும் நிருதர் நிற்பதோர்
குறிநனி உளதென உலகம் கொள்ளுமோ? [1]

வெற்றியும் தருகுவர் வினையம் வேண்டுவர்
முற்றுவர் உறுகுறை முடிப்பர் முன்பினால்
உற்றுறு நெடும்பகை யுடையர் அல்லதூஉம்
சிற்றினத் தவரொடுஞ் செறிதல் சீரிதோ? [2]

வேதமும் வேள்வியும் மயக்கி வேதியர்க்கு
ஏதமும் இமையவர்க்கு இடரும் ஈட்டிய
பாதகர் நம்வயின் படர்வராமெனில்
தீதில ராய்நமக்கு அன்பு செய்வரோ? [3]

கைப்புகுந் துறுசரண் அருளிக் காத்துமேல்
பொய்க்கொடு வஞ்சனை புணர்த்த போதினும்
மெய்க் கொள விளியினும் விடுதும் என்னினும்
திக்குறும் நெடும்பழி அறமும் சீறுமால்.

மேனனி விளைவது விளம்ப வேண்டுமோ
கானகத்து இறைவியோடு உறையும் காலையில்
மான்என வந்தவன் வரவை மானுமிவ்
ஏனையன் வரவும்என் றினைய கூறினன்.

சாம்பவான் இவ்வாறு கூறியிருக்கிறான். இந்தக் கிழவனுடைய உரைகளில் உலக அனுபவங்கள் பல மருவி வந்துள்ளன. "எவ்வளவு பெரிய அறிவுடையராயினும் பகைவரை நம்பிச் சேர்த்தால் அவர் அழிவுற நேர்வர். நிருதர் பொல்லாத இயல்பினர்; அவர் நல்லவராயிரார். சிலர் நல்லவர்போல் நடித்து முதலில் இனியராய் ஒழுகி வந்தாலும் முடிவில் அல்லலே செய்வர். தீய எண்ணமும் மாய வஞ்சமுமுடைய தீவினையாளரோடு எவ்வழியும் சேரலாகாது. வேதவிதி மறந்து தருமநெறி துறந்து யாண்டும் பாவ காரியங்களையே செய்து வருகிற பாதகர் நம்பால் அன்புடையராய் நன்மை செய்வரா? பழகிய பழக்கத்தின் படியே எவரும் பயின்று வருகின்றனர். எட்டிக்கனி வெளியே அழகாய்த் தோன்றினும் அழிவே செய்யும். நெஞ்சம் தீயவர் நஞ்சு போல் அஞ்சத் தக்கவர். கெட்டவரை நல்லவராக் கருதி உறவு கொள்ளலாகாது. பழகிக் கொண்டபின் இழிவு தெரிந்து அவரை இகழ்ந்து கைவிடின் உலகம் பழிக்கும். பழியான காரியங்களைத் தெளியாமல் செய்து இளிவுறுவது அழிதுயரமாம். எதையும் நுண்ணிதாக எண்ணியறிந்து இனியது செய்வதே தனிமகிமையாம். தீயவர் தொடர்பு தீயினும் தீயது. சானகி தேவியோடு கானகத்தில் நீங்கள் வாசம் செய்யும் பொழுது மாயமானாய் வந்து மோசம் செய்து போன அந்த நீசன் வரவு போலவே இவன் வரவும் இருக்கும் என்று நான்நினைக்கிறேன்" என இவ்வாறு அம்முதியவன் மொழிந்தான்.

## தீயவர் சேர்க்கை தீயது.

அரக்கர் மாய வஞ்சங்களுடையவர்; தீய செயலினர்; தீயரான அவரோடு சேரலாகாது; சேர்ந்தால் தீமையுண்டாம் என்னும் வாய்மையை ஈண்டு வலியுறுத்தி வெளிப் படுத்தினன்.

சிற்றினத் தவரொடும் செறிதல் சீரிதோ?

சிறியாரோடு உறவு கொள்ளலாகாது; கொள்ளின் பெரிய துயரமாம் என்பதை இங்ஙனம் தெரிய வுரைத்திருக்கிறான். சிறுமையான எண்ணங்களையும் தீமையான செயல்களையுமுடையவர் சிற்றினம் என நின்றார்.

பெரிய நீர்மைகளை இழந்து தீயகாரியங்களை விழைந்து செய்கிற பாவகாரிகள் சிறியராயிழிந்து படுகின்றார். அந்தச் சிற்றினம் குற்றம் மிகவுடையது ஆதலால் அந்தக் கூட்டத்தைப் பெரியோர் அணுகார். அஞ்சி அகல்வார்.

சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமை தான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். (குறள் 451)

பெரியோர் இயல்பையும் சிறியோர் நிலையையும் தேவர் இங்ஙனம் தெரிய விளக்கியிருக்கிறார். இன்னல் நிலையமாய் இழி செயல்களே புரிகிற சின்னமக்களைச் சேர்ந்தால் பழியும் பாவமும் சேரும்; சேரவே இருமையும் துயரமாம்; ஆதலால் அந்த இனத்தை அறிவுடைய பெரியோர் கொடிய நரகமாகக் கருதி அஞ்சி ஒதுங்குவர். இழிவான குற்றங்களிலேயே பழகி வந்துள்ளமையால் சிறியோர் சுற்றமாகச் சிற்றினத்தைத் தழுவிக் கொள்ளுகின்றனர்.

தம் இயல்பின்படியே இனங்கள் அமைகின்றன.

தூய தருமமூர்த்தி ஆகிய இராமன் தீய அரக்கர் இனத்தைச் சேரலாகாது என்று தெளித்திருக்கிறான். செறிதல் = நெருங்குதல், அணுகுதல். சிற்றினச்சேர்க்கையால் சிறுமையே நேரும் ஆதலால் அந்த உறவு கொடிய குற்றம் என்று குறித்தான். நல்லவர் நல்லவரை நாடுகின்றனர்; தீயவர் தீயரைக் கூடுகின்றனர்.

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம். (மூதுரை)

உள்ளப் பான்மைக்குத் தக்கவாறே உறவுரிமைகள் நேருகின்றன என இது உணர்த்தியுள்ளது. அன்னம் உயர்ந்த தன்மைக்கும் காக்கை இழிந்த புன்மைக்கும் உவமையாய் வந்தது.

நல்ல பண்புடையவர் நல்லவரையே நண்பரா நாடிக் கொள்ளுகின்றனர்; புல்லிய நிலையினர் புல்லரையே இனமாப் புல்லிக் கொள்கின்றனர்.

"The good, by affinity, seek the good; the vile, by affinity, the vile." (Emerson)

"நல்லவர் நல்லவரை உறவா நாடிச் சேர்கின்றனர். தீயவர் தீயவரை நேயமாக் கூடிக் கொள்ளுகின்றனர்" என்னும் இது இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது.

இனம் இனத்தோடே என்பது பழமொழி.

தம் இயல்புக்குத் தக்கவாறே இணைந்து பிணைந்து மக்கள் இயங்கி வருகின்றனர். தான் சேர்ந்து பழகி வருகிற இன நிலையைக் கொண்டே ஒருவனுடைய மனநிலையை அறிந்து கொள்ளலாம்.

"முயறலே வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்பது இனத்தான் அறிக." (பழமொழி)

எவரையும் தெளிவாக அறிந்து கொள்ளுதற்கு இனமே கருவியாக உள்ளது என இது உரைத்துள்ளது. இனம் பலவகை நிலைகளில் பரவியிருப்பினும் இருவகையுள் அடங்கும். நல்ல இனம், தீய இனம் என்னும் இந்த இரண்டனுள் முன்னது நலம் பலதரும்; பின்னது அல்லல்களையே விளைத்து அவலப்படுத்திவிடும் ஆதலால் அதனை எவ்வழியும் யாதும் அணுகலாகாது.

வந்துள்ளவன் அரக்கன்; தீய இனத்தைச் சேர்ந்தவன்; அவனைத் துணையாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது எனத் தன் உள்ளத்தில் துணிந்ததை உறுதியாகச் சாம்பவான் சொல்லியிருத்தலால் அவனது மன நிலையையும் இன இயல்பையும் மதி நலத்தையும் நுணுகி உணர்ந்து கொள்ளுகிறோம்.

சேனைத் தலைவர்களாய்ச் சேர்ந்திருப்பவர் அருந்திறல் ஆண்மைகளோடு சிறந்த அறிவு நலங்களும் யூக விவேகங்கள் நிறைந்த உயர்ந்த ஆலோசனைகளும் உடையவர் என்பது இடையிடையே தெரிய வருகின்றது.

ஒருவனை நண்பனாக நம்பிக் கொண்ட பின்பு அவன் எவ்வளவு இழி துயரங்களைச் செய்யினும் அவனைக் கைவிடலாகாது.

சேர்க்கும்போதே நன்ருக ஆராய்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும்; அங்ஙனம் கொள்ளாமல் உறவாய் உள்ளே புகுந்த பின் எவனையும் இழிவாக எள்ளித் தள்ளலாகாது. அங்ஙனம் தள்ளிவிடின் உலகம் பழிக்கும்.

திக்குஉறும் நெடும்பழி; அறமும் சீறும்.

நட்பாக உவந்துகொண்டவனைப் பின்பு இகழ்ந்து கைவிடின் அது பழியும் பாவமுமாம் என இவ்வாறு விழி தெளிய விளக்கினன்.

உரிமையாய்ச் சேர்த்தவனல் நமக்கு உயிரழிவு நேர்ந்தாலும் அவனை வெறுத்து விடுவது கூடாது ஆதலால் கூடு முன்பே யாவும் நாடிக் கொள்ள வேண்டும். கூடிய பின்பு குற்றம் காணலாகாது; குறையும் கூறலாகாது.

நட்பின் தருமம் இவ்வாறு திட்பமுற்றிருத்தலால் புதிதாய் வந்தவனைச் சேர்ப்பதில் எவ்வளவு நுட்பங்கள் ஆராயவுரியன என்பது பூராயமாய் அறிந்து கொள்ளலாம்.

மாய வஞ்சரான தீய அரக்கரைத் தூய நெஞ்சரான நமது கூட்டத்தில் சேர்க்கவே கூடாது. நல்ல நீதிமான் போல் வெளியே சொல்லப்படினும் பொல்லாத இனத்தைச் சேர்ந்தவன் ஆதலால் வீடணனை இங்கே சேர்த்துக் கொள்ளுவதை என் உள்ளம் ஒப்பவில்லை. எப்படியும் வெய்யவர்மேல் ஐயமே விளைகின்றது. மானசவுணர்வு அனுபவ விளைவாயுள்ளது.

மான் என வந்தவன் வரவை மானும்.

முன்னம் மாய மானய் வந்து தீமை புரிந்த மாரீசன் போலவே இவனுடைய வரவையும் நான் கருதுகிறேன். என் கருத்து விருத்தமா யிருந்தாலும் விருத்தனை எனது குறிப்பைக் கூர்ந்து நோக்கித் திருத்தமானதைச் செய்து கொள்ளுங்கள் என இங்ஙனம் அம் முதியவன் மொழிந்து நின்ருன்.

நீலன் பேசியது

சாம்பவான் பேசி முடிந்ததும் அயலே நின்ற நீலனை இராமன் சால்புடன் நோக்கினன். புன்னகை பூத்த முகத்தனய் மன்னர்பிரான் தன்னைப் பார்த்தபோது சிறந்த சேனைத் தலை

வனை அவன் உவந்து தலைவணங்கி உரையாட நேர்ந்தான். "கலை அறிவின் தெய்வமே! அடியேன் நிலைதெரிய வினவிய நீர்மையை நினைந்து மகிழ்கின்றேன். நான் ஆலோசனை கூற நேர்ந்தது எனக்கே நகைவிளைவிக்குமாயினும் தேவர் இட்ட கட்டளையைத் தட்ட அஞ்சி நெஞ்சில் பட்டதை நேரே சொல்லுகின்றேன். அடைக்கலம் என்று வந்தால் யாரையும் ஆதரிக்க வேண்டும். அருள் புரிந்து ஆதரிக்க உரியவர் அநாதைகளே; அல்லல் அடைந்தவர்; அமரில் உடைந்தவர்; தமரில் இடைந்தவர்; தாயாதிகளால் துன்புறுத்தப்பட்டவர்; தாய் தந்தை அற்றவர்; நோயுற்றவர்; நொந்து தவித்தவர்; சிந்தை தளர்ந்தவர்; பேதையர்; நாதியற்றவர்; வறுமையால் வாடியவர் என்னும் இன்ன வகையில் உள்ளவரே கண்ணோடிக் காக்கத் தக்கவர். இப்பொழுது இலங்கையிலிருந்து இங்கே வந்துள்ளவன் மேலே குறித்த எந்த வகையிலும் யாதும் சேராதவன். அரசர் குடியில் பிறந்தவன்; நமக்குக் கொடிய எதிரியாயுள்ள மன்னனுடைய தம்பி. யாரும் தலைவணங்கி அஞ்சிப் போற்றத் தக்க ஆற்றல் மிகப் பெற்றவன். அரிய பல செல்வாக்குகளுடையவன். அத்தகைய அதிசய நிலையிலுள்ள அவன் ஈண்டு அபயம் புக விழைந்து துதி செய்து வந்து நிற்பது சிந்தனைக்கும் எட்டாத விந்தையாய் விரிந்து நிற்கிறது. சாதிக்குரிய தீமைகள் யாதும் இல்லாதவன்; நல்ல நீதி நிலையினன் என ஓதினும் ஏதும் தெளிவாக நம்ப முடியவில்லை.

காலமே நோக்கினும் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும் முனிந்து போந்தவன்
சீலமே நோக்கி யாம் தெளிந்து தேறுதற்கு
ஏலுமே? என்றெடுத்து இனைய கூறினன்.

இவ்வளவு காலம் வரையும் தமையனோடு உறவாய் உவந்து வாழ்ந்து வந்தவன் இப்பொழுது கெட்டவன் என்று தெரிந்து அவனை வெறுத்து விட்டு வெளியேறியிருப்பதாகச் சொல்வது வியப்பையும் நகைப்பையும் விளைத்துள்ளது.

எவ்வாறு ஆராய்ந்து பார்த்தாலும் இவனுடைய வரவு தவறுடையதாகவே தோன்றுகின்றது; உள்ளே சேர்த்துக்

கொள்வது பிழை என்றே கருதுகின்றேன்; பெருமான் கருதிய படி ஆகுக" என இவ்வாறு அவன் கூறி முடித்தான்.

அதன்பின் நளன், குமுதன், பனசன், வினதன், முதலிய தலைவர்கள் அனைவரிடமும் இராமன் வினவியறிந்தான். யாவரும் அரக்கனைச் சேர்ப்பது கூடாது என்றே கூடி உரைத்தார். உற்ற உரைகள் யாவும் ஒரு முறையா வந்தன.

மற்றுள மந்திரக் கிழவர் வாய்மையால்
குற்றமில் கேள்வியர் அன்பு கூர்ந்தவர்
பற்றுதல் பழுதுஎனப் பழுதுறு ஒரு
பெற்றியின் உணர்வினர் முடியப் பேசினர்.

பேசியுள்ள தலைவர்களுடைய நிலைமைகளையும் பேச்சுகளின் உரிமைகளையும் இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம். மந்திரக் கிழவர் என்றது போர்முறைகளில் தேர்ந்த தந்திரிகள் மாத்திரம் அல்லர்; மந்திராலோசனைகளிலும் வல்லவர் என்பது தெரிய வந்தது. யூகங்களின் யூகங்கள் ஏகமாய் விளங்கின.

இராமபிரான்பால் பேரன்புடையவர்; எவ்வகையிலும் அவனுக்கு உபகாரமாய் ஊழியங்கள் புரிய யாண்டும் உறுதி பூண்டு ஊக்கியுள்ளவர் ஆதலால் அன்புகூர்ந்தவர் என அவருடைய பண்பும் பாடும் காண உரைத்தார்.

பற்றுதல் பழுது என்றது பற்றோடு பற்ற நேர்ந்துள்ள வெற்றி வீரனுக்கு உற்ற துணைவர் குற்றம் கூறிய படியாய் வந்தது. பழுதுநேராதபடி பார்த்தருளுக என வார்த்தைகள் வந்தன.

மாற்றான் இனத்தைச் சேர்ந்தவன் ஆதலால் வீடணனை எவ்வாற்றானும் நம் இனத்தில் சேர்க்கக் கூடாது என்று வானரத் தலைவர் எல்லாரும் ஒரு முகமாய்ப் பேசி முடித்தார். அவருடைய வாய்மொழிகளை யெல்லாம் கேட்டு வந்த இராமன் மறுமொழி யாதும்பேசாமல் இறுதியில் அனுமானை நோக்கினன்.

அந்த மதிமானை இந்த மதியூகி அதிசய விநோதமாய் நோக்கி இனிது வினவியது அருமையும் அழகும் பெருகி மிளிர்கின்றது.

## இராமன் வினவியது

உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினர்
செறிபெருங் கேள்வியாய்! கருத்தென் செப்புஎன

நெறிதரு மாருதி என்னும் நேரிலா
அறிவனை நோக்கினன் அறிவின் மேலுளான்.

அனுமானை இராமன் உசாவியிருக்கும் தகைமையைக் கவி இங்ஙனம் காட்டியிருக்கிறார். உரிமையாளர் யாவரும் தங்கள் எண்ணங்களை உரைத்து நின்றனர்; உன் கருத்து என்ன? அதனைச் சொல்லுக என ஆஞ்சனேயனை நோக்கி வாஞ்சையோடு கேட்டுள்ளதை நாம் வியந்து பார்க்கிறோம். கேள்வியின் நயங்களைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து சிந்திக்கின்றோம்.

உலக சோதியான சூரியனிடமிருந்து அரிய பல ஞான போதங்களை நன்கு கேட்டிருக்கின்றான் ஆதலால் சேறி பெருங் கேள்வியாய்! என அந்த அறிவின் பெருமையைக் கருதி விளித்தான். சகலகலா வல்லவன் என்பது விளியால் விளங்கி நின்றது. கலையின் கடலாய் நிலவி நிற்கின்ற இராமன் வாயால் இவ்வாறு அழைத்திருத்தலால் அவனது அதிசய மதிநலம் துதிசெய்ய வந்தது. அரிய கலைஞானியை உரிய தலைவன் பிரியமாய் உசாவினான்.

நேரிலா அறிவன் என அனுமானை இங்கே கவி குறித்திருப்பது பெருமகிமையுடையது. யாரும் தனக்கு நிகரில்லாத பேரறிவாளன் என்றதனால் அவனது மேதாவிலாசம் மேதைகளால் வியந்து போற்ற வுரியதாய் ஏற்றம் பெற்றுள்ளமை எதிர் தெரிய நேர்ந்தது. பேரறிவு பேரால் அறிய வந்தது.

இத்தகைய நேரிலா அறிவனோடு நேரே பேசினவன் யார்? அவனுக்கு இனி வேறு ஒரு பேர் கூறுவது எப்படி? ஒப்பு இல்லா அறிவன் என்று அனுமானை உரைத்த பின் இராமனை அவனோடு இணைத்து உரைக்க வேண்டிய பொறுப்பு கவிக்கு நேர்ந்திருத்தலைக் கருதி ஓர்ந்து கொள்ளுகிறோம். இந்த நிலையில் வந்துள்ள வாசகம் அந்தமில்லாத அதிசயத்தை அருளுகின்றது.

அறிவனை நோக்கினன் அறிவின் மேலுளான்.

அனுமனையும் இராமனையும் நம் அறிவுக் கண்ணால் நோக்கி நோக்கி மகிழும்படி இந்த வாக்கியம் வந்துள்ளது. நேரிலா அறிவன் என்று அனுமானைக் கூறியபின் இராமனை வேறே எவ்வகையில் கூறினாலும் சீராகாது. கூறிய அந்த அறிவிலேயே கூர்மையாகப் பேரமைத்து நீர்மை ததும்ப உரைத்தருளிய வித்

தகம் உய்த்துணர்வை விளைத்து உயர் பேரின்பமாய் ஓங்கி மிளிர்கின்றது. உரையாடுவதில் உணர்வு வகைகள் விளையாடுகின்றன.

அறிவின் மேல் உளான் என இராமனுக்கு இங்கே பேர் அமைந்துள்ளது. கலை அறிவும் தத்துவஞானமும் கருதியுணரும் அரிய பொருள் என்பது தெரிய வந்தது. பெரிய ஞான யோகிகள் தங்கள் மெய்யறிவால் அறிந்து மகிழும் ஆனந்தவுருவன் என அறிய நேர்ந்தான்.

இவ்வாறு ஆதிமூல நிலையைக் கருதியும் நேரே அவதார நீர்மையை நோக்கியும் இருவகை நிலையிலும் இது பொருள் கொள்ள நின்றது. அறிவிலெழும் அமுதம் உருவில் எழுந்துளது.

அனுமான் எப்படிப் பட்டவன்? நேர் இலா அறிவன்.

இராமன் எத்தகையவன்? அந்த அறிவின் மேல் உள்ளவன்.

அனுமானுடைய பேரறிவில் பெருகி எழுகின்ற பேரானந்தன் என இராமனை ஈண்டு நேரே அறிந்து கொள்ளுகிறோம். அவனுடைய எண்ணம் அறிவு யாவும் இராமன் வண்ணமாகவே மருவியுள்ளன. கருவி கரணங்கள் எல்லாம் இராமன் மயமாகவே உருகியுள்ளமையால் அனுமானது அன்புரிமையும் உயிர்வாழ்வும் அறியலாகும். அனுமராமரது நிலைமை நீர்மைகள் தலைமையாய் நுணுகி யுணரவந்தன.

அறிவனை வினவினான் என்னுமல் நோக்கினான் என்றது இராமன் பார்த்துள்ள அந்தக் கம்பீர பார்வையைக் கருதியுணர. "உன் அபிப் பிராயத்தைச் சொல்!" என்று வாய்திறந்து கூறாமலே கண்ணால் நோக்கியிருக்கிறான். இராச கம்பீரம் இராமனது கண் நோக்கில் பேரழகுடன் பெருகி மிளிர்வதைக் காவியத்தில் யாண்டும் கண்டு மகிழ்ந்து வருகிறோம். அவனது மவுனமான நயனமொழி இமயமலை போல் மகிமை பெற்றுள்ளது.

அந்தச் செந்தாமரைக் கண்களின் சீரிய கூரிய பார்வையை நேரே பல முறையும் பார்த்து மகிழ்ந்தவன் ஆதலால் வார்த்தை யாதும் இல்லாமலே யாவும் தெரிந்து மாருதி பேச நேர்ந்தான். பேசிய சாகசம் பெரு மகிமை யுடையது.

அனுமானது விநயமொழி

இணங்கினர் அறிவிலார் எனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான் நுவல்வ தாயினன்: (1)

எத்தனையுளர் தெரிந்து எண்ண எய்ந்தவர்
அத்தனைவரும் ஒருபொருளை அன்றெனா
உத்தமர் அதுதெரிந்து உணர ஓதினர்
வித்தக இனிச்சில விளம்ப வேண்டுமோ? (2)

தூயவர் துணிதிறன் நன்று தூயதே;
ஆயினும் ஒருபொருள் உரைப்பென் ஆழியாய்!
நீயன்என்று இவனையான் அயிர்த்தல் செய்கிலேன்
மேயின சில பொருள் விளம்ப வேண்டுமால்.

இராமன் கண்குளிர்ந்து நோக்கிய பொழுது அனுமான் எண்குளிர்ந்து எழுந்து வணங்கி வாய் பொத்தி விநயமாய்ப் பேசி நிற்கும் காட்சியை இங்கே கண்டு மகிழ்கின்றோம். அவை யடக்கமாய் முன்னுறக்கூறியுள்ள மொழிகள் அரிய பல உணர்வு நலங்கள் நிறைந்து இனிய சுவைகள் சுரந்துதிகழ்கின்றன.

"தன்னைச் சேர்ந்தவர்கள் முழுமடையர்களா யிருந்தாலும் அவரையும் பெருமைப் படுத்தும் பொருட்டு உரிமையோடு காரிய விசாரணைகளை யுசாவி அளவளாவிக் கொள்வது பெருந் தன்மை நிறைந்த உங்களுக்கு இயல்பான கடமையாயுள்ள மையை எண்ணி என் உள்ளம் வியந்து துள்ளுகின்றது. எங் களுடைய சிறுமையும் மடமையும் எங்கே? உங்களுடைய பெருமையும் மதிமாண்பும் எங்கே?" என்று சங்கோசமாய் மறுகி உருகியிருக்கிறான்.

வசிட்டர் விசுவாமித்திரர் கௌதமர் முதலிய அரிய பெரிய ஞானிகளும் அதிசயித்து வியந்து கொள்ளத் தக்க மகா மேதை யான இராமன் காட்டுக் குரங்குகளிடம் யோசனை கேட்டுத் தெரியவும், மந்திராலோசனைகள் செய்யவும் சிந்தை இசைந் திருப்பது விந்தையாயுள்ளது என அனுமான் வியந்து நின்றது அவனது அறிவு நிலையையும் அன்புரிமையையும் தெரியச் செய்தது. உருவ அமைதியும் உரைகளும் உயர் பெருந்தகையன.

இணங்கினர் அறிவிலார் என்றது முன்னம் பேசிய அனைவரையும் சுட்டி இகழ்ந்தது போல் ஒட்டி எழுந்தது. இணங்குதல் = உறவாய்க் கூடியிருத்தல். உரிமையாய் இணங்கியுள்ளவர் உரைத்த உரைகள் எல்லாம் தன் கருத்துக்கு விருத்தமாய்ப் பிணங்கி யிருத்தலால் அவை பிழைகளாம் எனக் குறிப்பாக் களைய நேர்ந்தான்.

குற்றம் களைவதிலும் குறைகள் யாதும் தோன்றாமல் உரைகள் சுவை சுரந்து வருகின்றன. சொல்லின் செல்வன் என வில்லின் செல்வனால் நல்லாசி பெற்றவன் ஆதலால் வாக்குத்தெய்வம் எவ்வழியும் பொருள் சுரந்து அவனுக்கு அருள்புரிந்து வருகின்றது. அவனது மொழிகள் உணர்வொளிகளாய் மிளிர்கின்றன.

இராமன் எதிரே உரையாடும் பொழுது அனுமான் நின்ற நிலையை ஓவிய வடிவமாக் கவி நமக்கு வரைந்து காட்டியிருக்கிறார். காரிய வுலகில் சீரிய நிலைகள் சிறந்து திகழ்கின்றன.

வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான் நுவல்வ தாயினான்.

இந்தக் காட்சியைக் கண் ஊன்றிக் காணுங்கள்.

உடல் வளைந்து தலை குனிந்து கையால் வாயைப் புதைத்து அந்த மெய்யன் பேச நேர்ந்துள்ள உருவக் காட்சியை இந்த வாசகத்தில் கூர்ந்து நோக்கி உவந்து நிற்கிறோம். பணிவும் இன்சொல்லும் அவனுக்கு அணிகலன்களாய் அமைந்துள்ளன.

நிறைந்த அறிவுக்கு அடக்கமும் அமைதியும் அடையாளங்கள் ஆதலால் அவை ஈண்டு உடைமைகளாய் ஒளிவீசி நின்றன.

பெருங் கேள்வியாளன் என்று முன்னம் குறித்தமைக்கு இங்கே சின்னங்கள் சேர்ந்துள்ளன. நுணங்கிய கேள்வியுடையவரே வணங்கிய வாயினராய் வாய்ந்திருப்பர் ஆதலால் அந்த இருப்பும் சிறப்பும் ஒருங்கே தெரிய வந்தன.

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (குறள், 419)

இந்த அருமைத் திருக்குறளை உரிமையோடு மருவி இக்கவி இங்கே வந்துள்ளமை காணலாகும். நுண்ணிய நூற் கேள்வி

யுடையவரிடமே கண்ணியமான வணக்கம் கனிந்திருக்கும் என எதிர்மறையாய் உணர்த்தியுள்ள இப் பொது மறைக்கு விதி முறையான ஓர் மெய்ச் சான்ருய் அனுமான் ஈண்டு விளங்கி நிற்றலை உளங் கூர்ந்து நோக்கி உவந்து கொள்ளுகிருேம்.

"சிறிய கேள்வியர் கழியவும் செருக்குவர்" எனக் கல்வி வீரரான நக்கீரர் உரைத்திருத்தலால் செருக்கின் சிறுமை அறியலாகும். கல்வி கேள்விகள் பெருகியபொழுது அங்கே நல்ல நீர்மைகள் நிறைந்து நிற்கின்றன.

பணிவின்றிச் செருக்கி நிற்பவர் சிறியராய்ச் சீரழிகின்ருர்.

பணிவுடையராய் அடங்கியிருப்பவர் பெரியராய் மேன்மை பெறுகின்ருர். அடக்கம் மனிதரை அமரராக்கி யருளுகிறது.

மேன்மையான குண நீர்மைகள் யாவும் அனுமானுடைய பான்மைகளாய் அமைந்திருக்கின்றன. அந்தச் சீலங்களைக் கைக்கொண்டு ஒழுகி மாந்தர் மாண்புற வேண்டும் என்று நம் கவிஞர்பிரான் அவாவியிருத்தலால் குண நலங்களை இடங்கள் தோறும் சுவையாக உணர்த்தி வருகிருர்.

## அனுமான் பேசியது

நுணங்கிய கேள்வியனை அனுமான் வணங்கிய சென்னியனாய் வாய் மொழியலானன். தரும சங்கடங்கள் பல எதிரே நேர்ந்திருந்தமையால் இந்தக் கரும வீரன் அதிசய சாதுரியமாய்ப் பேச நேர்ந்தான்.

தன் குல வேந்தனை சுக்கிரீவனும், வேறு பல தலைவரும் கூறிய உறுதி மொழிகளை யெல்லாம் மறுத்து மாறு கூறவேண்டிய நிலையில் அனுமான் நிற்றலால் இவனது விநய வசனங்கள் விசித்திர கதியில் விளைந்து எழுந்தன.

முன்னவர் சொன்னவைகளை வெளிப்படையாக மறுத்து உரைப்பின் அது அவர்களுடைய மரியாதைகளைக் குறைத்தபடியாம். ஆகவே அவ்வாறு நேராமல் யாவரும் உவந்து கொள்ளுமாறு உணர்வு நலம் கனிய இனிது உரையாடினன்.

"தரும மூர்த்தி! இது வரை பேசிய பெரியோர்கள் எல்லாரும் சுருதி யுத்திகளோடு தாங்கள் கருதிய உண்மையைத் தெளி

வாக உரைத்தனர். யாவும் சரியாகவே உள்ளமையால் வேறு யாரும் பேச வேண்டியதே யில்லை. ஆயினும் அடியேன் ஈண்டு உரிமையோடு ஒன்று சொல்ல வேண்டியவனாய் நிற்கின்றேன். நான் கண்ணார நேரில் கண்ட அனுபவத்தை மாத்திரம் இங்கே கூற நேர்ந்திருத்தலால் முன்னம் கூறிய அவர்களுடைய மொழி களுக்கு யாதொரு பின்னமும் நேராது என்று எண்ணுகின் றேன். சுருதி, யுத்தி, அனுபவம் என்னும் இம் மூன்றும் உரை களுக்கு உடையும் உடலும் உயிரும்போல் மருவி யிருக்கின்றன. மேலோர்கள் பேசியன எல்லாம் நூலறிவோடு தோய்ந்து உலக வழக்கங்களை நன்கு காட்டியுள்ளன. நேரில் அறிந்த அனுபவத் தோடு சில உறுதி நலங்களை உரையாடுகின்றேன்; பொறுதி செய்து கேட்டருள வேண்டுகிறேன்'' என இவ்வாறு அவை யடக்கமாய் முகவுரை கூறி மேலே சீலமாய்ப் பேச நேர்ந்தான்.

தூயவர் துணிதிறன் நன்று; தூயதே.

என்று அனுமான் சொன்னவுடனே முன்னம் பேசிய சுக் கிரீவன் முதலாயினோர் பெருமகிழ்ச்சி யடைந்தனர். நம்மோடு இணங்கி நம்பக்கம் சேர்ந்தே பேசுகிறான் என யாவரும் ஆசை யுடன் அவாவிக் கேட்டார். வீடணனைத் தீயவன் என்று எல் லாரும் திட்டிக் கூறினமையால் அவரைத் தூயவர் என்று சுட் டிக் கூறினான். இப் புகழ்ச்சி மொழி இகழ்ச்சிக் குறிப்பில் வந்தது. இந்தக் குறிப்பை அவர் எவரும் அறிந்து கொள்ள வில்லை. புகழ்ச்சியாகவே உவந்து கொண்டனர். துணிதிறன் நன்று என்று முடிந்தவுடனே உவகைக் களிப்பில் ஓங்கி நின்ற வர் அடுத்து வந்ததைக் கேட்டதும் அயர்ந்து ஏங்கி நின்றார்.

ஆயினும் ஒருபொருள் உரைப்பென் ஆழியாய்!

என அனுமான் இங்ஙனம் கூறவே தம் கூற்றுக்குக் கூற்று நேருமோ? என்று அவர் நெஞ்சம் அஞ்ச நேர்ந்தார். ஆயினும் என்ற இந்த ஒரு சொல் முன்னம் பேசிய அவருடைய வாய்மொழிகளுக் கெல்லாம் நேரே முடிவு கட்டி வேறு ஓர் விடிவு காட்டுவது போல் விளைந்து நின்றது. மேலே தொடர்ந்து பேசினான்.

தீயன் என்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்.

விபீடணனைக் குறித்துத் தன் கருத்தை இவ்வாறு முதலில் வலியுறுத்தினன். "மாயமானாய் வந்த மாரீசன் போலவே இவன் வந்திருக்கிறான். தீயவன் ஆன இவனைச் சேர்க்கலாகாது" என முன்னம் மன்னன் முதலாயினோர் உரைத்தனர் ஆதலால் அதனை இன்னவாறு முதலில் உறுதியாக மறுத்தான். அயிர்த்தல்=சந்தேகித்தல். ஐயம் யாதும் செய்ய முடிய வில்லை என்று மெய்யை விரித்தான்.

இவன் தூயவன், நல்லவன் என்று தன் வாய்மொழியால் வலியுறுத்தாமல் தீயன் அல்லன் என்றது மற்றவர் கூறியதை மறுத்தற்கு வந்தது. உயர்ந்த வாதமுறையில் வாதாடுகின்றான் ஆதலால் சாதுரிய சாகங்கள் உரைகளில் சுரந்து வருகின்றன.

கல்வியறிவாலும் காட்சியாலும் தான் கண்டு தெளிந்துள்ள நிலைகளைத் தலைவர்கள் அனைவரும் வியந்து சிந்திக்கும்படி இராமனை நோக்கி அனுமான் இனிது பேசினன். அந்த மதிமானுடைய வாய்மொழிகள் அதிசய முடையன; மானச மருமங்களை வெளி செய்து மதிநலம் கனிந்து மிளிர்கின்றன.

வண்டுளர் அலங்கலாய்! வஞ்சர் வாண்முகம்
கண்டபோ தொர் பொழுதினில் தெரியும் கைதவம்
உண்டெனின் அஃதவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ?
விண்டவர் பலபகல் மருவி வீழ்வரோ? (1)

உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும் ஆதலால்
கள்ளத்தின் விளைவெலாம் கருத்திலா இருட்
பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ? (2)

வாலியின் பெற அரசு இளையவன் பெறக்
கோலிய வரிசிலை வலியும் கொற்றமும்
சீலமும் உணர்ந்துநிற் சேர்ந்து தெள்ளிதின்
மேலரசு எய்துவான் விரும்பி மேயினன். (3)

செறிகழல் அரக்கர்தம் அரசு சீரியோர்
நெறியலது ஆகலின் நிலைக்க லாமையும்
எறிகடல் உலகெலாம் இளவற்கு ஈந்ததோர்
பிறிவரும் கருணையும் மெய்யும் பேணினன். (4)

காலமன் றிவன்வரு காலம் என்பரேல்
வாலிதன் உறுபகை வலிதொலைத்தலால்
ஏலுமிங் கிவற்கினி இறுதி என்றனை
மூலமென் றுணர்வரப் பிரிவுற்றினன். (5)

தீத்தொழில் அரக்கர்தம் மாயச் செய்வினை
வாய்த்துளர் அன்னவை யுணரு மாண்பினால்
காய்த்தவர் அவர்களே கையுற்றார் நமக்கு
ஏத்தரும் உறுதியும் எளிதின் எய்துமால். (6)

கொல்லுமின் இவனைஎன்று அரக்கன் கூறிய
எல்லையில் தூதரை எறிதல் என்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னைஎன் றிடைவிலக் கினான். (7)

மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன் றாமென
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினான். (8)

எல்லியில் நான்இவன் இரண மாளிகை
செல்லிய போதினும் திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்கள் நனி நயந்துள
அல்லதும் உண்டுநான் அறிந்தது ஆழியாய்! (9)

நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன் தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் இல்எனப் பொலிந்த தாமரோ! (10)

அன்னவன் தனிமகள் அலரின் மேலயன்
சொன்னதோர் சாபமுண்டு உன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல் நணுகும் கூற்றென
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினாள். (11)

தன்னுடைய எண்ணங்களையும் வீடணனைக் குறித்துத் தான் கண்டு தெளிந்துள்ள அனுபவங்களையும் அனுமான் இன்னவாறு இராமன் எதிரே கூறியிருக்கிறான். அரிய பல அறிவு நலங்களை உரைகள் வெளியாக்கி யுள்ளன. "எம்பெருமானே! இங்கே தங்களை நாடி வந்துள்ள வீடணன் வஞ்சகன் அல்லன்; நெஞ்சில் தீமை இருந்தால் அது முகத்தில் தெரிந்து விடும்; உள்ளக்

கள்ளத்தை ஒளித்து வைக்க முடியாது. வாலியை வென்று சுக்கிரீவனுக்கு அரசுரிமையைத் தந்து யாண்டும் தருமநீதிகளைப் பேணிவருகின்ற தேவரீரது கரும வீரத்தைக் கருதி யுணர்ந்தே ஈண்டு இவன் வந்திருக்கிறான். தீய அரக்கரது செயலும் இயலும் அழிவு நிலைக்கே வழி கோலி நிற்றலைத் தெளிவாக அறிந்து வெறுத்து எவ்வழியும் தீயவர் உறவு தீயது என இத்தூயவன் துணிந்து விலகியுள்ளான். நம்பினவரைப் பாது காத்து யாண்டும் தம்பியர்க்குத் தண்ணளி புரிந் தருளுகிற எம்பெருமானுடைய நீர்மை சீர்மைகளைக் கூர்மையாகக் குறித்துணர்ந்து ஓர்மையோடு அடைக்கலம் புக உறுதிபூண்டு வந்திருக்கிறான். தீய அரக்கரது மரபில் பிறந்தவன் ஆதலால் ஏதேனும் கரவாய்த் தீமைபுரிவானோ? என்று இவனை ஐயுறுவது பாவம். கள்ளம் கபடுகள் யாதும் தெரியாதவன்; உள்ளம் தூயவன். நான் இலங்கைக்குத் தூது சென்றிருந்த பொழுது என்னைக் கொன்று தொலைக்கும் படி இராவணன் கொதித்துச் சொன்னான்; அப்பொழுது இவன் தடுத்து நிறுத்தினான்; தூதரைக் கொல்லுதல் கொடிய பாவம் என்று நீதிமொழிகள் பல கூறிக் கொலைவாயிலிருந்து என்னை விலக்கி விடுத்தான். தேவியைத் தேடி ஊர் முழுதும் ஆராய்ந்து வரும் பொழுது இரவு நடுயாமத்தில் இவனுடைய அரண்மனையுள் புகுந்தேன். நல்ல மங்கலக்குறிகள் தோன்றின. மனையகம் எங்கும் புனிதமாயிருந்தது. புண்ணிய முனிவர்களுடைய வாசம் போல் நண்ணியுள்ளதைக் கண்டு நோக்கி எண்ணி மகிழ்ந்தேன். இவனுடைய அருமைத் திருமகள் திரிசடை என்னும் பேரினள். அசோகவனத்தில் அம்மைக்குத் துணையாய் அமைந்திருக்கிறாள். அஞ்சி அலமரும் போதெல்லாம் நெஞ்சம் தேற்றித் தஞ்சமாயிருந்து தாயன்பு செய்து நேயம் பெருகி நெடிது பேணி வருகிறாள்.'' என இங்ஙனம் தகவுடன் கூறி மேலும் மாருதி விரித்துப் பேசினான்.

தஞ்சம் என்று வந்திருக்கின்றவனை வஞ்சன் என்று கருதலாகாது. நெஞ்சம் தூயவன்; நெறிமுறையுடையவன்; நல்ல நீதிமான் என்று பலவகை அனுபவங்களையும் நயமாக எடுத்துக் காட்டி அனுமான் இனிது பேசி வருகிறான்.

உள்ளத்தில் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும்.

வந்து நிற்பவன் வஞ்சகன்; கள்ளத்தனமாய் இங்கே கபடுகள் செய்யவே போந்துள்ளான்; இவனை உள்ளே கொள்ளலாகாது; எனச் சுக்கிரீவன் முதலாயினோர் முன்னம் சொல்லியுள்ளமையால் அதனைச் சுட்டி மறுத்து இங்ஙனம் சொல்ல நேர்ந்தான்.

மனம் வாக்கு காயம் என்னும் மூன்றின் வழியே மனித வாழ்க்கை இயங்கி வருகிறது. வாயின் மொழியும், காயத்தின் செயலும் மனத்தின் வழிப்பட்டன. காயச் செயலைக் கண்ணால் காண்கின்றோம்; வாய்மொழியைக் காதால் கேட்கிறோம். மன நினைவு அருவமாய் மறைந்திருத்தலால் அதனை நேரே காண முடியாது; உரை செயல்களால் உணர்ந்து வருகிறோம். மனத்தில் உள்ளதை அறிதற்குச் சொல்லும் செயலும் கருவிகளாயுள்ளன. அகமே புறமாய் உரமாய் வருகிறது.

ஒருவனுடைய வாய்மொழியைக் கொண்டு அவன் உள்ளத்தின் நிலைமையை உணர்ந்து கொள்ளலாம்.

“மனத்தில் உள்ளது வாயில் வரும்” என்பது பழமொழி. இந்த வாய் மொழியினும் முன்னதாக அகத்தின் இயல்பை முகத்தால் காணலாம் ஆதலால் உரையின் முந்துற முகங்களே விளம்பும் என்றார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். [குறள், 706]

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும், (குறள், 707)

இவை இங்கே நன்கு சிந்திக்கத் தக்கன.

தேவர் வாய்மொழிகள் நம் காவியத்துள் சீவிய ஒளிகளாய் மேவி மிளிர்கின்றன. உள்ளத்தில் உள்ளதைத் தெள்ளத் தெளிய முகம் வெளியே சொல்லி விடுதலால் அது ஓர் அதிசய அறிவுடையது என்று துதிசெய்ய வந்தது.

“முன்னம் முகம்போல முன் உரைப்பது இல்.
முகன் உரைக்கும் உண்ணின்ற வேட்கை.”
[நான்மணி, 47, 70]

விளம்பி நாகனார் இங்ஙனம் விளம்பி யுள்ளார்.

கள்ளம் கபடுகளை உள்ளத்தில் எவரும் மறைத்து வைக்க முடியாது; முகங்களால் அவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் என்பது இங்கே தெரிய வந்தது.

அகம்பொதிந்த தீமை முகம்பதிந்து தோன்றும்
யுகம்பொதிந்த உண்மை யுணர்.

பஞ்சுபொதிந்த தீப்போல நெஞ்சு பொதிந்த தீமை நேரே வெளிப்பட்டுத் தனக்கே கேடுவிளைக்கும் ஆதலால் அதுகெடு நிலையமாய் நின்றது.

அகம்காட்டும் தம்கபடம் அவரவருள்
ஒளித்தாலும் அடுத்த பேர்க்கு
முகம் காட்டும்; அல்லவெனின் மொழிகாட்டும்;
பிறர்நகைக்கும் மூரல்காட்டும்;
சுகம்காட்டு வதுபோன்று துக்கமிகப்
பின்காட்டும் தொழிலா மாபோல்
இகம்காட்டும் நமதியல்மேல் எண்ணிலா
நெடுந்துயருக்கு ஏது வாமால்.

[மெய்ஞ்ஞான விளக்கம்]

அகத்தில் மறைந்துள்ள கபடங்களை முகம் காட்டி விடும்; அவற்றால் துயரமே விளையும் என இது உணர்த்தியுள்ளது.

முகக் குறிப்பினால் மனிதனுடைய அக நிலைகளை அறிந்து கொள்ளலாம் என்று அனுமான் இங்கே உணர்த்தியருளினன். அரிய ஒரு சோதனை நேர்ந்துள்ளமையால் அதற்கு உரிய சாதன மான கருவிகளைக் கருதி யுணரக் காட்டினன்.

"நம்மோடு கூடிக் கொள்ள இங்கே நாடி வந்துள்ளவீட ணன் மிகவும் நல்லவன்; தீமை யாதும் இல்லாதவன். இவனைச் சேர்த்துக் கொள்வதில் நமக்குப் பல அனுகூலங்கள் உள்ளன. வலி இடம் காலம் முதலியவைகளைக் கருதியுணர்ந்து உறுதிநலங் களை விரைந்து ஓர்ந்து கொள்ளவேண்டும். பொல்லாத அரக்க ரோடு நாம் போராட நேர்ந்திருக்கிறோம். அவருடைய கள்ளம் கரவுகளை உள்ளறிந்து சொல்லுதற்கு அந்த இனத்தைச் சேர்ந்த தலைவன் ஒருவன் வலிய வந்து சேர்ந்தால் அது நமக்குப் பெரிய ஊதியமாம். உரிய நிலைகளை ஓர்ந்து இவனை உடனே தழுவிக் கொள்வது நல்லது" என்று நயன் தெரிய உரைத்தான்.

பிறப்பில் அரக்கன் ஆயினும் நல்ல நீர்மைகளும், அரிய பல சிறப்பியல்புகளும் இவனிடம் அமைந்திருக்கின்றன. ஒழுக்கசீலன்: இவனுடைய மனைவாழ்க்கையில் இழுக்குகள் யாதும் இல்லை. பரிசுத்தமான நிலைகளிலேயே எவ்வழியும் பழகி இனிது ஒழுகி வருகிறான்.

நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன்.

விபீடணனுடைய மாளிகையில் தான் கண்டகாட்சிகளை இங்ஙனம் காட்டியிருக்கிறான். நறவு = கள். ஊன் = புலால். மது மாமிசங்களை அருந்ாதவன்; சுத்தமான சைவ உணவினன் என விபீடணனை இவ்வாறு உணர்த்தியுள்ளான்.

மதுபானமும் புலால் உண்டலும் மிகவும் இழிவாம் என்பது இங்கே தெளிய வந்தது. உண்ணுகின்ற உணவுக்குத் தக்கபடியே குணங்களும் செயல்களும் கூடிவருகின்றன. உணவின் படியே மனிதன் என்பது பழமொழி. கள் அருந்தான்; புலால் உண்ணான் என அவனது புனிதவாழ்க்கையை இவ்வண்ணம் இனிது காட்டினான். கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளத் தக்கவன் என்னும் குறிப்போடு உரைத்து வருகிறான். அவனுடைய குணம் செயல் உணவு உடை பழக்கம் வழக்கம் முதலிய யாவும் தூயன; நீதி நெறியுடையன என நிறை செய்துகூறினான்.

அன்னவன் மகள் இறைவிக்கும் இனிது கூறினாள்.

சிறையிலிருக்கும் சீதைக்கு உறுதி கூறி உள்ளம் தேற்றி வீடணன் மகள் உதவி புரிந்து வருவதை இங்ஙனம் உணர்த்தினான். கொலைவாயிலிருந்து நீக்கித் தனனை அவன் காத்தருளினான்; அவனுடைய மகள் சிறைவாயிலிருந்து வருந்துகிற தேவியைப் பாதுகாத்து வருகிறாள் எனக் காற்றின் சேய் கருதி உரைத்துள்ளது உறுதி நிலைகளை ஊன்றி உணர்ந்து கொள்ள வந்தது.

தனது ஏவலாளனையும், தேவியையும் ஆதரித்தருளிய அன்புக்குடும்பம் என இராமனுக்கு இன்பமும் இரக்கமும் தோன்றும்படி இவ்வாறு எடுத்துக் கூறினான். பகைவகையினன் என்று எவ்வகையிலும் எண்ணலாகாது; யாண்டும் உங்கள் பால் உரிமைபூண்டு ஒழுகும் உள்ளன்பனே என்பதாம்.

என்னுடை இறைவி என்றது சீதைபால் அனுமான் கொண்டுள்ள மதிப்பையும் பத்தியையும் உணர்த்தி நின்றது.

இராமனை இறைவனாகப் போற்றி எவ்வழியும் வழிபட்டு வருகின்றவன் ஆதலால் சீதையை இறைவி என்றான். உரையாடும் உரைகளிலேயே பழகிவரும் வாசனை ஒளிவீசி வருகின்றது.

இவ்வாறு பேசி வந்தவன் இறுதியில் உறுதிமொழிகளை அறுதியிட்டு வலியுறுத்தினான். உரைகள் மதிநலங்கள் தோய்ந்து அதிசய கம்பீரங்களாய் உயர்ந்து எழுந்தன. அயலே வருகின்றன. உற்று நோக்குக.

பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய
　　வஞ்சனையும் பிறவும் உன்கை
விற்றொடையின் விடுகணையால் வெந்தொழியும்
　　எனக்கருதி மேற்சொல் லோடும்
உற்றுடைய பெருவரமும் உகந்துடைய
　　தண்ணளியும் உணர்வும் நோக்கின்
மற்றுடையர் தாமுளரோ வாளரக்கன்
　　அன்றியே தவத்தின் வாய்த்தார் (1)

தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகனே
　　முதலாய தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை
　　முற்றுவிப்பான் மூண்டு நின்றாய்
ஆவத்தில் வந்தபயம் என்றானை
　　அயிர்த்தகல விடுதி ஆயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடல்அயிர்த்தது
　　ஒவ்வாதோ கொற்ற வேந்தே! (2)

பகைப்புலத்தோர் துணையல்லர் என்றிவனைப்
　　பற்றாமேல் அறிஞர் பார்க்கின்
நகைப்புலத்த தாமன்றே நற்றாயம்
　　உளதாய பற்றால் மிக்க
தகைப் புலத்தோர் தந்தையர்கள் தம்பியர்கள்
　　தமையரிவர் தாமே யன்றோ
மிகைப்புலத்து விளைகின்றது ஒருபொருளைக்
　　காதலிக்கின் விளிஞ ராவார். (3)

ஆதலால் இவன்வரவு நல்வரவே
    எனவுணர்ந்தேன் அடியனேனுன்
வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்
    குறிப்பறியேன் என்று விட்டான்
காதலுன் முகமுைலும் கணிப்பரிய
    கலையனைத்தும் கதிரோன் முன்சென்று
ஓதினன் ஓதநீர் கடந்துபகை
    கடிந்துலகை உய்யக் கொண்டான். (4)

வாதசேயின் வாத முறைகளையும் நீதி போதனைகளையும் இங்கே ஓதியுணர்ந்து உவகை யுறுகின்றோம். பதி நலங்கள் சுரந்து உரைகள் அதிசய சாதுரியங்களாய் வந்துள்ளன. "தரும மூர்த்தி! தேவரீரிடம் அபயம் புக வந்துள்ளவன் அதி மதியூகி; இனிய குண சீலன்; பெரிய கருணையாளன்; அரிய தவ ஒழுக்க முடையவன். இராவணன் பெற்றுள்ள வர பலங்கள் எல்லாம் இராம பாணத்தின் எதிரே அடியோடு நாசமடைந்து போம் எனத் தெளிவாக முடிவு செய்துள்ளவன். இறுதிவரையும் அண்ணனுக்கு வேண்டிய உறுதி நலங்களை உரிமையுடன் ஓதினன்; யாதும் பலன் காணுமையால் தீயவன் தொடர்பு தீயது என்று வெறுத்து விலகித் தனக்கு உய்தி நாடி ஈண்டு ஆர்வத் துடன் வந்துள்ளான். அடைக்கலம் என்று வந்தவனை ஆதரித் தருளுவது உயர்ந்த தருமம். தேவர் முதல் யாவராலும் செய்ய முடியாத அரிய பெரிய காரியத்தைச் செய்ய மூண்டு தீரமாகத் துணிந்து நிற்கிற வீர மூர்த்தியாகிய நீங்கள் ஆபத்து என்று அஞ்சி வந்து அபயம் புகுந்தவனை நெஞ்சில் ஐயுறவு கொண்டு அயலே விலக்கி விடின் அது சிரிப்புக்கு இடமாம். பகைவர் என்று எவரையும் இகழ்ந்து விடலாகாது; உறவாய் ஒட்டியுள் ளவரே பகைவரினும் கொடியராய் இடையூறுகள் செய்ய நேர் கின்றனர். பகையினத்தைச் சேர்ந்தவர் உறவினரினும் உரிமை யாளராய் உதவிகள் புரிபவரும் உளர். பிறப்பு இருப்புகளைக் கொண்டு யாரையும் பிழையா எண்ணலாகாது. நேரில் கண்ட அநுபவங்களால் இவன் சீரிய செம்மையாளன் எனத் தெரிய வந்தது. இவனுடைய வரவும் உறவும் நமக்கு எவ்வகையிலும் பெரிய நன்மையாம் என்றே கருதுகின்றேன். ஆண்டவன் திருவுள்ளம் எப்படியோ அப்படியே ஆகட்டும்" என்று அதி விநயமாய் இப்படி அநுமான் பேசி முடித்தான்.

வார்த்தைகளில் வார்த்துக் காட்டியுள்ள எண்ணங்கள் சீவிய ஓவியங்களாய்க் கண் எதிரே தோன்றி மிளிர்கின்றன. அபயம்கருதி வந்துள்ள அரக்கர்கோமகனுக்கு இரக்கம் புரிந்து இக்கவிநாயகன் உரையாடி வருவது நீதிமுறைகளின் துறை தோய்ந்து வருகிறது. நியாய வாதங்கள் பெருகியுள்ளன.

## நீதி மன்றம்

உயர்ந்த நீதிமன்றத்தின் காட்சிகளையும் மாட்சிகளையும் ஆட்சிகளையும் இங்கே நேரே காண்கின்றோம். அரச நீதிகள் வரிசையோடு விசாரணைகளாய் வளர்ந்து வந்திருக்கின்றன.

இராமபிரான் சிறந்த நீதிபதியாய் அமர்ந்திருக்கிறான்.

வீடணன் குற்றவாளி நிலையில் வாதியாய் வந்துநிற்கிறான்.

சுக்கிரீவன், சாம்பவன், நீலன், குமுதன் முதலாயினோர் வாதியைக் குறித்து வாதித்திருக்கின்றனர். நீதி முறைகளிலும் உலக அனுபவங்களிலும் நன்கு தேறிய நியாய வாதிகளைப்போல் நியாய நிலைகளை நீதிபதிக்கு அவர் சாதுரிய சாகசங்களோடு எடுத்துக் கூறியுள்ளனர். அவருடைய வாதங்கள் எல்லாம் வாதிக்கு விரோதமாகவே முடிந்திருக்கின்றன. ஒரே சாதனையாய் அவரது உரைகள் உறுதி செய்தபின் இறுதியில் அனுமான் பேச எழுந்தான் அரசுக்குத் தனியுரிமையான பெரிய நியாய வாதி நிலையில் நின்று இம்மதிமான் அதிசயசாதுரியமாய்ப் பேசியிருக்கிறான். ஒவ்வொரு மொழியும் செவ்விய நீர்மை தோய்ந்து சீர்மையுடன் வெளிவந்துள்ளது.

"இலங்காதிபதியான இராவணனுடைய தீமையை வெறுத்தே வீடணன் இங்கே வந்திருக்கிறான்; இயன்ற வரையும் போதித்துப் பார்த்தான்; திருந்தாமல் அவன் செருக்குமீறி நின்றமையால் இவன் பிரிந்து வந்தான். பாவத் தீமை ஏறியுள்ளமையால் அரக்கர் குலம் பாழாய் அழிந்துபோம் என்று தெளிந்தே வெளி ஏறியிருத்தலால் இவனது புண்ணிய நீர்மை புலன் தெரிய நின்றது. பிறந்த பிறப்பால் அரக்கனே எனினும் சிறந்த அருந்தவர்களும் உயர்ந்த ஞான சீலர்களும் இவனை வியந்து புகழ்ந்துள்ளனர். செயல் இயல்களை யாதும் ஓர்ந்து உணராமல் பகை இனத்தவன் என்ற அந்த ஒன்றையே நினைந்து இகழ்ந்து விடுவது

வருந்த வுரியதாம். எவ்வகையிலும் இனியவன் என்று நான் செவ்வையாகத் தெரிந்திருக்கிறேன்; இவனை உறுதியாக நம்பி உரிமையோடு சேர்த்துக் கொள்ளுவதே நன்மையாம்" என உண்மை நிலைகளை உரைத்தான். இவ்வாறு உரைத்து வந்தவன் இறுதியில் குறித்த குறிப்புகள் பெரிதும் வியக்கத் தக்கன.

தேவதேவர் மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றாய்

என்றது இராமன் செய்ய நேர்ந்து நிற்கும் கரும நிலையைக் கருதியுணர வந்தது. தேவர் முதல் யாவரையும் அடக்கி மூன்று உலகங்களையும் ஏகபோகமாய் ஆண்டுவருகிற இராவணனைக் குலத்தோடு வென்று தொலைக்க வில்லும் கையுமாய் வீறு கொண்டு நிற்கின்ற அந்தக் கரும வீரத்தின் கம்பீரக் காட்சியை இங்ஙனம் கருதியுணர்ந்து உறுதி தெரியக் காட்டினான்.

அயன் அரி அரன் என்னும் இம் மூவராலும் முடிக்க முடியாத காரியத்தை முடிக்க வந்துள்ளாய்! என்றது இராமனது அதிசய நிலையை உணர வந்தது. சிருட்டி திதி சங்காரம் ஆகிய முத்தொழில்களைச் செய்ய வல்லவரும் செய்ய முடியாததைச் செய்ய வந்துள்ள ஐயனே! என இம்மெய்யறிவாளன் உள்ளம் உருகி யுரையாடி யுள்ளான். வானவரையும் மானவரையும் உய்விக்க வந்துள்ள தனது அரிய நிலைமையை மறந்து சிறிய வானரர்களிடம் அளவளாவிப் பெரிய ஆலோசனைகளைச் செய்து கொண்டிருப்பது அதிசய விநோதமாயுள்ளது எனத் துதி செய்திருக்கிறான். அன்பு மொழிகள் பண்பு படிந்து வந்தன.

தீயவர்களை ஒழித்து நல்லவர்களை ஆதரித்து உலகத்தைப் பாதுகாக்க வந்துள்ள பரம நீர்மையை இவ்வாறு குறித்தவன் உரிய நிலைகளை ஓர்ந்து கொள்ள வுரைத்தான்.

ஆவத்தில் வந்து அபயம் என்றானை

அடைக்கலமாக வந்துள்ள விபீடணனது நிலைமையை இங்ஙனம் விளக்கி யருளினான். "இங்கே நில்லாதே; நின்றால் கொல்லப் படுவாய்!" என்று இராவணன் கொதித்துத் தள்ளியதால் உள்ளம் கலங்கி வேறு புகலிடமில்லாமல் நேரே இங்கே உறுதி நாடி வீடணன் உரிமையோடு வந்திருக்கிறான்.

அல்லல் அடைந்து அஞ்சி அலமந்து வந்துள்ளவனது அச்சத்தை நீக்கி ஆதரித்தருளுவதே மேலோர் கடமையாம்.

அபயம் என்னும் சொல் உயர் பொருளுடையது.

பயந்து வந்தவனது பயத்தை நீக்கி அவனை ஆதரித்து அணைத்தருளுவது அபயம் என வந்தது. அவ்வாறு அபயம் தந்து ஆதரிப்பவன் அபயன் என நின்றான். எல்லாருக்கும் என்றும் அபயம் அருளி ஆதரிப்பவன் இறைவனே ஆதலால் கடவுளுக்கு அபயன் என்று ஒரு பெயர் அமைந்தது. ஆகவே அபயத்தின் நிலைமையும் அதனைச் செய்பவரது தலைமையும் அறியலாகும்.

எவரையும் வெல்லவல்லவனாய் யாண்டும் பயமின்றி யுள்ளவனே அபயன் என்னும் உயர் நிலையை அடைய நேர்கின்றான். பயமில்லாத தீரனே பயந்து வந்தவரை ஆதரிக்கவுரிய வீரன் ஆகின்றான். ஆபத்து சகாயன் என்னும் அரிய பெயரைப் பெற்று யாண்டும் யாரும் நேரில்லா வீர மூர்த்தியாய் விளங்கு கின்ற நீ ஆபத்தில் வந்து அபயம் என்றானை உடனே ஆதரித்தருளாமல் இப்படிக் குரங்குகளோடு கூடி ஆலோசனைகளைச் செய்து கொண்டிருப்பது தகுதியோ? இதனைமிகுதியும் சிந்திக்க வேண்டுகிறேன் என இராமனது அந்த மந்திரலோசனையை அனுமான் இந்தவாறு தன்னுள்ளேயே நிந்தித்துள்ளான்.

தான் எண்ணி மறுகி இரங்கியுள்ள உண்மையை இறுதியடியில் அதிவிநயமாய்க் குறித்தருளினான்.

> கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது
> ஒவ்வாதோ கொற்ற வேந்தே!

அந்த வெற்றிவீரனை நோக்கி இந்தக் கல்வி வீரன் இவ்வாறு வினவியிருக்கிறான். ஓர் உவமையை எடுத்துக் காட்டிக் கேட்டிருக்கும் கேள்வியைக் கூர்ந்து சிந்திப்பவர் ஓர்ந்து உணர்ந்து உவகை மீதூர்ந்து தகைமையைத் தேர்ந்து நிற்கின்றார்.

கூவம் = கிணறு. அயிர்த்தல் = சந்தேகித்தல்.

ஒரு பாலைவனத்தில் நல்ல நீர் உள்ள சிறு கிணறு ஒன்று அருமையாய் அமைந்திருந்தது. எல்லாருக்கும் இனிய நீரை உதவி இதமாய் இருந்துவந்த அந்தக்கூவத்தைக் கொடிய பாலைவனம் நெடியதுயர் செய்து நீ இனிமேல் இங்கே இருக்கலா

காது; எங்கேனும் ஓடிப்போய்விடு என்று உருத்து விரட்டியது. விரட்டப்பட்ட கூவம் வெருண்டு எழுந்து வேறு நிலத்தில் வாழ முடியாமையால் தன் இனமாகிய கடலை நாடி வந்து அடைக்கலம் புக நேர்ந்தது. அப்பொழுது அந்தக் கடல் உடனே அதனை உரிமையோடு சேர்த்துக் கொள்ளாமல் அயலே நிறுத்திவைத்து உறவினர்களிடம் ஆலோசனைகள் செய்யத் தொடங்கியது. "இந்தக் கிணற்றை நாம் உள்ளே சேர்த்தால் நமக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ? நம்மை வாரிக் குடித்து விடுமோ? அல்லது வேறு அல்லல் ஏதேனும் இழைத்து அழிதுயர் செய்யுமோ? பழிகளை விளைத்து இழிவுகள் புரிந்திடுமோ?" என்று இன்னவாறு கடல் ஆராய்ந்தது போல் உள்ளது கருணைக் கடலான நீ வீடணனைக் குறித்து ஈண்டு ஆலோசனைகள் நடத்துவது என அதினளினமா அனுமான் கிண்டல் செய்துள்ளதை இங்கே கண்டு மகிழ்கின்றேம். குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வுரியன.

ஒப்புரையில் நுட்பங்கள் உறைந்துள்ளன.

அன்பு அருள் அமைதி சீலம் வாய்மை முதலிய புண்ணிய நீர்மைகள் நிறைந்துள்ளமையால் நல்ல தண்ணீர்க் கிணறு என வீடணனைக் கண்ணியமாக எண்ணியருளினன்.

கொடிய இராவணனது இராச்சியம் நெடிய பாலைவனமாய்த் தோன்றினமையால் அங்கே இருக்க முடியாமல் தனக்கு இனமான இனிய நீர்மையாளனைத் தேடி உரிமையோடு ஓடி வந்தான். உற்ற சுற்றம் உறுதி நாடி உரியவனை அடைந்தது.

இவ்வாறு ஆதரவை நாடி அபயம் என்று வந்துள்ளவனை உடனே அணைத்து அருள வேண்டும். அவ்வாறு செய்யாமல் அயலே அகலவைத்து ஐயுறவோடு ஆலோசனைகள் புரிவது தவறு என்பதைத் தகுதியாக வுணர்த்தியிருக்கிறான்.

இராமனைக் கடல் என்று குறித்தது உருவம் செயல் குணம் முதலிய பலவகை நிலைகளையும் கருதி. கடல் வண்ணம் போல் அவன் உடல் வண்ணம் உள்ளமையால் "கடலோ? மழையோ? முழுநீலக்கல்லோ? காயாநறும்பூவோ?" என இன்னவாறு வாயார வாழ்த்தி அத்தூயவனை யாவரும் ஆவலோடு துதிக்க நேர்ந்தனர். அளவிடலரியவனது உளவு தெரிய வந்தது.

கருணைக்கடல், அறிவுக்கடல், தருமக்கடல், நீதிக்கடல், வீரக்கடல், கல்விக்கடல், குணக்கடல் என அக்கோமகன் குலா வியுள்ளமையைக் கூர்ந்து ஓர்ந்து குதூகலித்து நிற்கிறோம்.

தன் இனமான சிறுபுனலைப் பெரிய நீர் நிலையமாகிய கடல் உரிமையோடு தழுவியருளுவது போல் உற்றவனை உறவாக மருவியருளுக என உருகியருளினன்.

எவ்வகையிலும் எல்லை காணமுடியாதபடி உயர்ந்துள்ள பெருந்தகையாளனை நீ அபயமாய் அடைந்துள்ளவனால் அபாயம் நேருமோ? என்று ஆலோசிப்பது அதிசயவிநோதம் எனப் பரிகசித்திருக்கிறான். பரிகாசம் அறிவின் விகாசமாயுள்ளது.

அபயம் என்றவனை அமிர்த்து அகல விடுதியாயின் அகிலம் எங்கணும் சிரிப்பாம் என்பது குறிப்பாய் வந்தது.

ஆபத்து சகாயன், அபயதானன், அரணகன், சரணியன், சரணாகதரட்சகன் எனப் பேர் பெற்றுள்ள நீ அப்பேர்கள் பேர்ந்து போகாதபடி உடனே ஓர்ந்து உதவிபுரிக என உறுதி புரிந்துள்ளான். நீர்மையை நினைவூட்டி நீதியை நிலை நாட்டினன்.

வீடணனைக் குறித்து இந்த வழக்கை இவ்வாறு விசாரணைக்கு எடுத்ததே தப்பு என உயர்ந்த நீதிபதிக்குச் சிறந்த நியாயவாதி சட்ட நீதிகளைச் சுட்டிக் காட்டிக் குட்டிக் கூறியது போல் அனுமான் இங்கே தட்டிப் பேசியிருக்கிறான்.

கொற்ற வேந்தே! என்று முடிவில் விளித்தது இராமனது வெற்றி நிலைகளை வியந்து வந்தது. அபசயம் என்பதை யாதும் அறியாமல் யாண்டும் வெற்றித் திருவுடையனாய் அவதரித்திருக்கும் வீரமூர்த்தி என்பதை இப்பேரால் விளக்கி நின்றான்.

எவ்வழியும் யாராலும் தோல்விகாணாதவன், எவரையும் எங்கும் வெல்ல வல்லவன் என அவ்வில் வீரனை இச் சொல் வீரன் இங்கே துதித்திருக்கிறான். ஜெயராமன் என அன்று அவன் உயர்வாகி நின்றமையால் இன்றும் ராமஜெயம் என உலகம் மங்கல வழக்காக அவனது நாமத்தைச் சேமம் செய்து யாண்டும் ஆவலோடு கொண்டாடி வருகிறது.

பிறவியிலேயே வெற்றித் திருவோடு பிறந்துள்ள கொற்றக் குரிசிலான உனக்கு யாராலும் யாதொரு குறையும் நேராது;

குறை நேர்ந்து முறையிட்டு அபயம் புகவந்துள்ளவனை உவகையுடன் ஆதரித்தருளுக எனச் சாதுரியமாய் வேண்டியிருக்கிறான்.

இராமனது மகிமையையும் அபயதானத்தின் உயர்வையும் குறித்து இவ்வாறு பேசிவந்தவன் உறவு நிலைகளைக் குறித்து விரித்து உரைத்தான். அபயம் புக வந்துள்ள வீடணன் பகை இனத்தைச் சேர்ந்தவன்; ஆதலால் அவனை நம்பிச் சேர்ப்பது தகாது என்று முன்பு கூறினருடைய முடிபுகளை அடியோடு வெட்டி மொழிந்தான்.

பகை வகையினன் என்று ஐயுற்று இவனை அயலே கைவிடின் அது பெரிய நகைவகை ஆம் என நயமாக இகழ்ந்திருக்கிறான். இகழ்வு நிலை தெரியாவகை தகவுரை வழங்கினான்.

தம்பியர்கள் தமையர் இவர்தாமே விளிஞராவார்.

உறவினர் இனியவர்; பகைவர் இன்னாதவர் என மேல் நோக்காக எவரையும் கருதலாகாது; செயல் இயல்களைக் கொண்டே தெளிய வேண்டும் என இங்ஙனம் தெளித்திருக்கிறான்.

உடன் பிறந்த அண்ணன் தம்பிகளுக்குள்ளேயே மாறுபாடு மண்டி உயிர்க்கேடு செய்வாரும் உளர். அயல் இனத்தவராயினும் செயல் இனியரேல் அவரே உரிமையான உயிர்த்துணைவராவர். அனுபவ வுண்மைகள் அறிய வந்தன.

உடன் பிறந்திருந்தும் தமையனான வாலி தம்பிக்குத் துன்பம் செய்தான். இந்தத் தம்பி அந்த அண்ணனைக் கொன்று தொலைத்தான். இதனை நேரே கண்ணாரக் கண்டிருக்கிறோம். ஆகவே சுற்றத்தார் தான் துணைவராவார்; பகைப்புலத்தார் பற்றுக மாட்டார் என்று எண்ணுவது தவறு என இவ்வண்ணம் எடுத்துக் காட்டினான்.

எவ்வகையினும்வீடணனைத் துணைவனாகச் சேர்த்துக்கொள்வதே நல்லது என இவ்வாறு உறுதியாக அம்மதிமான் உரையாடி உண்மை நிலைகளை முறையே ஓர்ந்து கொள்ளச் செய்தான்.

கலை அனைத்தும் கதிரோன்முன் சென்று ஓதினான்.

நிலைமைகளைத் தெளிவாக எடுத்து விளக்கி இது வரையும் இராமன் எதிரே நின்று நீதி முறைகளை நெறியே வாதித்து உரையாடினவனைக் கவி இங்ஙனம் காட்டியிருக்கிறார்.

அரிய கலைகளை யெல்லாம் சூரியனிடமிருந்து கற்றுத் தெளிந்த பெரிய கலைஞானி என அனுமானை இதனால் அறிந்து கொள்ளுகிறோம். சகலகலா வல்லவனை பெரிய பண்டிதன்; உயர்ந்த நியாயவாதி; சிறந்த பேச்சாளி; பேருபகாரி என்பதை இங்கே வாதாடியுள்ளமையால் தெரிந்து மகிழ்ந்து கொள்ளுகிறோம்.

ஓதநீர் கடந்து பகைகடிந்து உலகை உய்யக் கொண்டான்.

அனுமான் ஆதவனிடம் ஓதியுணர்ந்து கலையறிவில் உயர்ந்துள்ள நிலையை முன்னம் உரைத்தார். இதில் அவனது உபகார நீர்மையை உணர்த்தியிருக்கிறார். ஓதநீர் = கடல்.

கடல் கடந்து போய் இலங்கைபுகுந்து சீதையைக் கண்டு அரக்கரை வென்று மீண்டு வந்து இராமனிடம் உண்மையைக் கூறிக் கொடியவர் குழுவை அடியோடு தொலைக்க வழி நாடி வந்துள்ளான்; ஆகவே அனுமானது விழுமிய நிலைமையை விழி திறந்து காண இங்ஙனம் விளக்கியருளினர்.

உலகம் எல்லாம் நலமுற உதவிபுரிந்து வருகிறவன் ஆதலால் வீடணனைச் சேர்த்துக் கொள்வது பெரிய நன்மையாம் என ஈண்டும் வேண்டி நின்றான். அவனுடைய உரை செயல் யோசனைகள் அனைத்தும் தருமநீதி தழுவிக் கருமநீர்மை கெழுமி இனிமையாகவே யிருக்கும் என்பது எதிர் தெரிய வந்தது.

இராமனது உறுதிமொழி.

அனுமான் கூறிய அறிவுரைகளை இனிது கேட்டுவந்த இராமன் பெருமகிழ்ச்சி யடைந்தான். முடிவில் தன் கருத்தை முடிவாக உரைக்க நேர்ந்தான். பெருமான் பேசத் தொடங்கிய உடனே சுக்கிரீவன் முதலிய எல்லாரும் பேராவலோடு செவி சாய்த்திருந்தார். செவ்விய மொழிகள் திவ்வியமா யெழுந்தன.

மாருதிவினைய வார்த்தை செவிமடுத்து அமிழ்தின் மாந்திப்
பேரறிவாள நன்றுநன்றெனப் பிறரை நோக்கிச்
சீரிது மேலிம் மாற்றம் தெளிவுறத் தேர்மின் என்று
ஆரியன் உரைப்ப தானன் அனைவரும் அதனைக்கேட்டார். (1)

கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசின் மேற்றே அறிவினுக்கு அவதி யில்லை
பெருத்துயர் தவத்தினானும் பிழைப்பிலன் என்னும் பெற்றி
இருத்திய தாகுமன்றே நம்வயின் சேர்ந்த செய்கை. [2]

மற்றினி உரைப்பதென்னே மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி அன்ன தன்றெனின் பிறிதொன்றானும்
வெற்றியே பெறுக; தோற்க; வீக; வீயாது வாழ்க;
பற்றுதல் அன்றி யுண்டோ புகல் எம்மைப் பகர்கின்றானே. (3)

இன்று வந்தான் என்றுண்டோ? எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்று உண்டோ? புகலது கூறுகின்றான்
தொன்றுவந்து அன்பு பேணும் துணைவனும் அவனே பின்னைப்
பின்றுமென் றாலும் நம்பாற் புகழன்றிப் பிறிதுண் டாமோ? (4)

பிறந்தநாள் தொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ என்னைச் சரண்என்று வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்றுவந்து துன்னினன் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்றோ என்றும் இருந்தநாள் ஆவ தென்றான்.(5)

இடைந்தவர்க்கு அபயம்யாம்என்று இரந்தவர்க்கு எறிநீர்வேலை
கடைந்தவர்க் காகி ஆலம் உண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க்குஉதவான் ஆயின்உள்ளதொன்று ஈயான் ஆயின்
அடைந்தவர்க்கு அருளான் ஆயின் அறம்என்னாம் ஆண்மை [என்னாம்?

பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந்து அடைந்த பேதை
வேடனுக்கு உதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற்று உயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றோ?

போதகம் ஒன்று கன்றி இடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் அபயம்என்று அழைத்த அந்நாள்
வேதமும் முடிவு காணா மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி லாதார். (8)

நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாள னானும்
தஞ்செனா முன்னம் தானே தாதைபால் கொடுத்துச் சாதல்
அஞ்சினேன் அபயம் என்ற அந்தணற்கு ஆகி அந் நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்று மேன்மையின் மேன்மை யுண்டோ?

சரண்எனக்கு யார்கொல் என்று சானகி அழுது சாம்ப
அரண்உனக்கு ஆவென் வஞ்சி அஞ்சலென் றருளின் எய்தி
முரணுடைக் கொடியோன் கொல்லமொய்யமர்முடித்துத்தெய்வ
மரணம்என் தாதை பெற்றது என்வயின் வழக்கன்றோமோ? (10)

உய்யநிற் கபயம் என்றான் உயிரைத்தன் உயிரின் ஓம்பாக்
கையனும் ஒருவன் செய்த உதவியில் கருத்தி லோனும்
மையற நெறியி னேக்கி மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென்றானும் மீள்கிலா நரகில் வீழ்வார். (11)

சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வேன் என்று பேணிய விரதப் பெற்றி
வேதியர் அபயம் என்றார்க்கு அன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ்வுரை கடக்க லாமோ? (12)

காரியம் ஆக அன்றே ஆகுக கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின் இதனின்மேல் சிறந்த துண்டோ
பூரிய ரேயும் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்று
ஆருயிர் கொடுத்துக் காத்தற்கு எண்ணிலா அரசர்க்கு என்னும்.

ஆதலான் அபயம் என்ற போதத்தே அபய தானம்
ஈதலே கடப்பாடு என்ப நியம்பினீர் என்பால் வைத்த
காதலான் இனிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த!
கோதிலா தவனை நீயே என்வயின் கொணர்தி என்றான். (14)

(வீபீடணன் அடைக்கலப்படலம்)

இராமபிரான் பேசியுள்ள அருமை வாசகங்கள் இவ்வாறு பெருகிவந்துள்ளன. இந்தப் பாசுரங்கள் முழுவதையும் கண்ணூன்றிப் படியுங்கள். எண் ஊன்றி அறியுங்கள். உள்ளம் ஊன்றி உணரும் அளவு உயிர் உணர்ச்சிகள் தெளிவாகின்றன. படிந்து பயின்றவர் முடிந்த முடிபுகளை விரைந்து உணர்ந்து கொள்ளுகின்றனர். அங்ஙனம் பயிலாதவர் அயலாய் மயலுறுகின்றனர். கருதிக்காணும் காட்சி அரியபல மாட்சிகளை அருளி வருகின்றன. கூரிய கருத்து சீரிய விருத்தியாய்ச் செழித்து விளைகிறது. உணர்வு விளைய உயர் நலங்கள் விளைகின்றன.

உயர்ந்த பெருந்தகையிடமிருந்து விளைந்துவந்துள்ள சிறந்த தரும நீதிகளையும் செவ்விய பண்பாடுகளையும் ஈண்டு உவந்து காணுகின்றோம். உணருந்தோறும் உவகை மீதூர்கின்றோம். அரிய அறிவமுதங்கள் இனிய கவிகளாகிய குடங்களில் பெருகியுள்ளன; பருகிவருவார் ஆனந்தபரவசராய்ப் பெருகியுயர்கிறார்.

அரிய ஆலோசனைகளோடு அறிவாளிகள் பலர் பேசினர்; கருமக் காட்சிகள் உரிமையோடு விளக்கப்பட்டன. காரிய விசாரணைகள் சீரிய வாதங்களாய்ச் செறிந்து நிகழ்ந்தன. அதிசய மதிமானான அனுமான் பேசி முடித்தபின் இறுதியில் தன் உள்ளக் கருத்தை அறுதியிட்டு இராமன் பேசியிருக்கிறான். அந்த வாக்கிய அமுதங்களை நோக்கி நுகர்கிறோம். நுதி யிழை மதியில் விளைந்துள்ள விளைவுகள் அதிசய மகிழ்வா விரிந்துள்ளன.

தன்னைப் புடைசூழ்ந்து பரந்திருந்த சிறந்த வானரத் தலைவர்களை நோக்கி இம்மான வீரன் உரையாடியிருக்கும் கம்பீர நிலைகளை மானசவிழிகளால் காணும்பொழுது உணர்ச்சி வெள்ளமான பேரின்பக் காட்சிகள் நேரே பெருகித் தோன்றுகின்றன. அகத்தே கருதிக் கண்ட அந்த அறிவுக்காட்சிகளைப் புறத்தே முழுதும் தெளிவாகச் சொல்ல முடியாமையால் இயன்ற அளவு அறிஞர் இயம்ப நேர்கின்றனர். தான் சொந்தமாய்க் கண்டு சுகிப்பதே வான் கண்ட சுகமாய் மருவியுள்ளது.

## இராமன் பேசியது.

அனுமான் கூறிய மதுரமான அறிவுமொழிகளை இனிது செவிமாந்திய இராமன் பெரிதும் மகிழ்ந்தான். உறுதியுரிமைகளை யுவந்தான். அதன்பின் சபையினரை நோக்கி நேரே பேச நேர்ந்தான். "மெய்யன்பர்களே! இங்கே அடைக்கலம் புகவந்துள்ள வீடணனைக் குறித்து உங்கள் கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவித்தீர்கள்; யாவும் தெரிய வந்தன. வந்துள்ளவனது நிலைமை நீர்மைகளை நினைந்து நோக்கின் எவ்வழியும் நல்லவன் என்றே தெரிகின்றது. அறிவு சீலம் தவம் முதலிய உயர் நலங்களை யுடையவன் என்பது நம்மை உரிமையாக நாடிவந்திருக்கும் இந்த ஒன்றினாலேயே நன்கு புலனாகின்றது. தம் இயல்புக்குத்தக்கபடியே எவரும் எங்கும் உறவு கொள்ள நேர்கின்றனர். காலம் இடம் வலி முதலிய நிலைமைகளை யெல்லாம் கருதியுணர்ந்தே உறுதியை நாடி இவன் ஈண்டு அடைந்திருக்கிறான். அண்ணன் மீது வெறுப்பிருந்தால் வேறே எங்கேனும் துறவியாய்ப் போய் விடலாமே; இங்கே நம்பக்கல் வருவானேன்? என்று நீங்கள் ஐயுறவு கொள்ளுகிறீர்கள். அவ்வாறு ஐயமுறலாகாது. இவன் நெஞ்சில் யாதொரு வஞ்சகமும் இல்லை. தமையனுக்கு

வேண்டிய நீதிகளைப் போதித்திருக்கிறான்; அத்தீயவன் யாதும் கேட்காமல் மோதி மூனிந்துள்ளமையால் இத்தூயவன் பிரிய நேர்ந்தான். அரசர் குடியில் பிறந்தவன் ஆதலால் துறந்து போக மனமில்லாமல் இங்கே விழைந்து வந்திருக்கிறான். அரச பதவியில் ஆசையுடையவன் என்றே தெரிகிறது. மதிமானான அனுமான் வடித்துச் சொன்னபடியே யாவும் அமைந்திருக்கின்றன. உலக நிலையில் பொதுவான முறைகள் எவ்வாறு இருப்பினும் எனது தனியான இயல்பின் படியே நான் நடந்து கொள்ள வேண்டியவனா யிருக்கின்றேன். அடைக்கலம் என்று என்னிடம் எவன் வந்தாலும் அவனை உரிமையோடு உவந்து பேணுவதே எனது கடமையாம். அதனால் என்ன கேடு நேர்ந்தாலும் இனிமையாகவே கருதி மகிழ்வேன். உயிர் அழியவரினும் உவகையுறுவேன். எவ்வழியும் யாதும் கவலை அடையேன். அபயம் என்று வந்தவனை அயல் அகலவிடேன். என் தந்தையைத் தாயைக்கொன்று வந்தான் ஆனாலும் புகல் அடைந்தவனைப் பேணிக் கொள்வனே அன்றிப் பிழை என்று புறத்தே தள்ளேன். மேவிக் கொண்ட அவனால் என் ஆவி அழிய நேர்ந்தால் அதுவே எனக்கு என்றும் அழியாத விழுமிய புகழாம். எனது குலமரபு தலைமுறை தலைமுறையாக அபயதானம் அருளி உயர்புகழ் பெற்றுள்ளது. என்னுடைய மூதாதையருள் ஒருவர் சிபிச் சக்கரவர்த்தி என்னும் பேரினர். தன்னைச் சரணமாக வந்தடைந்த ஒரு புறவுக்காகத் தனது ஆருயிரைக் கொடுத்துக் காத்த பேரருளாளர். அவரது புகழ் இன்றும் உலகெங்கும் ஒளி வீசியுள்ளது. சிறிய ஒரு பறவைக்கும் அரிய உயிரை வழங்கிப் பரிபாலித்தருளிய அத்தகைய உயர்ந்த குலமரபில் பிறந்த நான் நிலைதளர்ந்து வந்த ஒரு தலைமகனை ஆதரித்தருளாமல் அகல விடுவேன் ஆனால் அது எவ்வளவு பழி! எத்துணை இழிவு! அடைக்கலம் தந்து அவனால் நான் இறந்து பட நேர்ந்தால் அது எனக்கு உயர்ந்த பேரின்ப முத்தியாம். அல்லல் அடைந்து அபயமாய் வந்தவனை ஆறுதல் கூறி ஆதரிக்கவில்லையானால் அந்தப் பிறப்பு பேடித்தனமானது; பிழைபாடுடையது. ஆண்மை வீரம் என்பன எல்லாம் மேன்மையான செயல்களையுடையன. கடல் கடைந்த பொழுது அதிலிருந்து மண்டி எழுந்த நஞ்சைக் கண்டு அஞ்சி ஓடிய அமரர்களுக்கு ஆதரவாய் நின்று அதனை உண்டு யாவரையும் காத்தரு

ளிய கண்ணுதலை விண்ணும் மண்ணும் வியந்து புகழ்ந்து இன்றும் உவந்து கொண்டாடி வருகின்றன. அபயதானம் அருளிய அப்பெருமானது மகிமை எவ்வளவு பெருமையுடையது! உபகார நிலையே சீவகோடிகளை உயர்த்தியருளுகிறது. தன் பேடையைப் பிடித்த வேடனுக்குத் தன் உயிரையும் கொடுத்து உதவிய பறவையைப் பரமபதமும் உறவுரிமையுடன் விழைந்து பேணி உவந்து கொண்டுள்ளது. இனிய உதவியில் ஈடுபட்டது அரிய புனித வீடுபெற்றது. தன்காலை முதலை கவ்விய பொழுது ஆதிமூலமே என்று யானை ஓலமிட்டது; அபயமிட்ட மதகயத்தை உடனே வந்து காத்தருளிய அந்தப் பரமனது நீர்மையை நினைந்து மகிழ்ந்து புகழ்ந்து போற்றாதவர் யார்? நஞ்சை உண்டு யாவரையும் காத்தருளிய சிவபெருமானே தஞ்சம் என்று அஞ்சியடைந்த மார்க்கண்டனை ஆதரித்து எமனையும் விலக்கி இனிது பாதுகாத்த அச்செஞ்சடைக் கடவுள் செயலை எண்ணுந்தோறும் என் நெஞ்சம் நீராய் உருகுகிறது. அரிய உபகாரங்கள் எல்லாம் பெரிய தெய்வீக நீர்மைகளாய்ப் பெருகியுள்ளன. தனது மருகி என்ற உரிமையோடு சானகியைக் காக்கும் பொருட்டே சடாயு உயிரைக் கொடுத்தார். வயது முதிர்ந்த அத்தந்தை செய்த உதவி நிலையை உள்ளும் பொழுதெல்லாம் உள்ளம் கரைந்து அயர்கிறது. அகதிகளுக்கு ஆதரவாய் உதவி புரிகின்றவர் உயர்ந்த மேன்மக்களாய் உயர் கதியை அடைகின்றனர்; அவ்வாறு புரியாதவர் இழிந்த கீழ் மக்களாய் இழி கதியில் விழுகின்றனர். அபயம் என்றவனுக்கு உதவி செய்யாதவர், செய்நன்றி மறந்தவர், மெய் நெறியை இகழ்ந்தவர், பொய் பேசுகின்றவர் ஆகிய இவர் புன்மையாளராய்ப் புலைநரகுறுகின்றனர். சீதையை மீட்டும் பொருட்டு மாத்திரம் நான் இந்தப் பாதையில் வரவில்லை; தேவர்களுக்குத் தீமை செய்த அந்தப் பேதையைக் கொன்று தொலைக்கவே வென்றி வில்லோடு வெளியேறியிருக்கிறேன். தண்டக வனத்தில் தங்கியுள்ள பொழுது முனிவர்கள் வந்து அபயம் புகுந்தனர்; அவர்க்கு அன்று அபயதானம் புரிந்துள்ளேன். அந்தக் கடமையை நிறைவேற்றவே கண் ஊன்றி நிற்கிறேன். எளியவர்க்கு இரங்கி இதம் புரிவதே குலம்புரி கொள்கையாக் குறிக் கொண்டுள்ளேன். தன்னலம் பாராமல் பிறர் நலம் பேணுவதே பெருந்தகைமையாம்; அரிய

வண்மை பெரிய நன்மை ஆகின்றது. அதனை இழந்து விடுவது இழிந்த பரிதாபமாம். இவன் என்ன நிலையில் வந்திருந்தாலும் அபயம் என்று சொன்னவுடனே அபயதானம் அளிப்பதே என்து கடமையாம். நான் செய்ய வுரிய கடமையைக் குறித்து உற்ற துணைவர்களாகிய உங்களிடம் உரிமையோடு உசாவினேன்; நீங்களும் உறுதி நலங்களைப் பிரியமாய் உரைத்தீர்கள்; அரிய உண்மைகள் அறிய வந்தன; இனிமேல் தாமதித்து இருப்பது தவறு; சுக்கிரீவா! நீயே போய் அபயம் புகன்ற அந்த உரிமையாளனை விரைவில் இங்கே அழைத்து வா!" என்று இவ்வாறு இராமன் உரைத்தருளினன்.

இந்த உரைகளிலிருந்து அரிய பல உண்மைகளை நாம் உணர்ந்து கொள்ளுகிறோம். காவிய நிகழ்ச்சிகள் ஓவியக் காட்சிகளாய் ஒளி புரிந்து மிளிர்கின்றன. அனுமான் பேசிய மொழிகளைக் கேட்டு இராமன் பரவசமடைந்திருக்கிறான்.

மாருதி வினைய வார்த்தை செவி மடுத்து அமிழ்தின் மாந்தி.

அந்தக் கேள்வியின் மேன்மையும், கேட்டவன் பான்மையும், பேசினவனது பெருமையும் இதனால் ஒருங்கே தெரிந்து கொள்ளுகிறோம். மாருதி என அனுமானை இங்கே குறித்தது அவனது பிறப்பின் சிறப்பையும் தெய்வப் பெற்றியையும் கருதியுணர. மாருதம் = காற்று. அந்த வாயுபகவானுடைய மகன் மாருதி என வந்தான். தசரதன் மகன் தாசரதி என வந்து மாசரிதங்களை நடத்துகிறான். அவ்வாறே மாருதியும் வந்து பாரகாரியங்களை அவன் பக்கமிருந்து பணிவுடன் செய்கிறான். மனித உருவிலும் வானர வடிவிலும் மருவி யிருந்தாலும் அரியபல தெய்வீக நீர்மைகள் இருவரிடமும் பெருகியுள்ளன. ஒருவரை ஒருவர் உரிமையோடு உசாவி உலகம் நலமுற உதவி வருகின்றனர்

காற்று எங்கும் விரைந்து செல்ல வல்லது. நுண்ணிய எவ்வழியும் புகுந்து உலாவி வருவது. அந்த ஆற்றல்கள் காற்றின் சேயிடமும் ஏற்றமுற்றுள்ளன. இவனுடைய அறிவு யாண்டும் பரந்து செல்வது; யாரும் அணுகியறிய முடியாத நுணுகிய பொருள்களை எளிதே தெரிந்து தெளிவாக வெளியே வீசியருளுகின்றது. எவ்வழியும் ஒளி புரிந்து இனிதே உதவி வருகிறது.

வினைய வார்த்தை என்றது கருமச் சூழ்ச்சிகள் யாவும் மருமங்களாய் மருவியுள்ளவை என அம்மொழிகளின் விழுமிய நிலைகளை விளக்கி நின்றது. அரிய பெரிய அறிவு நலங்களை அதி விநயமாய் இனிது பேசிய மதிமான் ஆதலால் அவனுடைய வாசகங்கள் ஆசையோடு காண வந்தன.

செவி மடுத்து அமிழ்தின் மாந்தி

அனுமான் பேசிய வினைய வார்த்தைகளை இராமன் செவி சாய்த்துக் கேட்டு மகிழ்ந்திருக்கும் மகிழ்ச்சி நிலையை இது விளக்கியுள்ளது. அரிய கலை ஞானங்களை யெல்லாம் பெரிய மாதவர்களிடமிருந்து கேட்டுச் சுவைத்துக் கேள்வி யின்பங்கள் துய்த்து வந்த அழகிய செவிகள் அனுமானுடைய மொழிகளை அமிழ்தின் மாந்தியுள்ளமையால் அவற்றின் சுவை நீர்மைகளை ஓரளவு யூகித்துணர்ந்து பேராவலோடு நாம் உவகை மீதூர்ந்து நிற்கிறோம். அறிவின் சுவைகள் அதிசய போகங்களாயுள்ளன.

மாந்துதல் = வாரிக் குடித்தல். சொல்லின் சுவைகளில் ஈடு பட்டு அள்ளிப் பருகி யிருக்கிறான். அமுதம் உண்டவர் ஆற்றலும் இன்பமும் பெறுதல் போல் அம் மாற்றங்களால் உறுதி நலங்கள் பல பெற்று ஏற்றம் எய்தியுள்ளமை எதிர் தெரிய வந்தது. அரியமேதையை வியந்து பெரியமேதை பெருமை செய்தது.

பேரறிவாள! நன்று! நன்று! என்று அனுமானை இப் பெருமான் இவ்வாறு ஆர்வம் மீதூர்ந்து கொண்டாடி யிருக்கிறான். சொல்லின் செல்வன் என்று முன்னம் சொல்லி மகிழ்ந்தான்; இங்கே பேரறிவாள! என்று நேரே பேரிட்டு அழைத்தான். பகை உறவு என்று பாராமல் யார்மாட்டும் நடுவு நிலைமையாய் நின்று குண நீர்மைகளைக் கூர்ந்து நோக்கித் தரும நீதிகளின் சீர்மைகளை நேர்மையாகக் கூறுகின்றான் ஆதலால் அனுமானுடைய அறிவும் பண்பும் அதிசய முடையனவாய்த் துதி செய்ய வந்தன.

மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி.

வீடணனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அனுமான் கூறிய உறுதி மொழிகளை இராமன் இவ்வாறு உவந்து கொண்டாடியுள்ளான். வடித்து என்றதனால் அந்த உரைக

ளின் சாரங்களை உணர்ந்து கொள்ளுகிறோம். அவன் படித்து வந்தது இங்கே வடித்து வந்துள்ளது. வடித்தல்=கோதுகளை நீக்கிச் சாரமான சத்துகளைத் தெளித்துக் கொள்ளுதல். அந்த மதிமான் உரைகளை இந்த மேதை இங்ஙனம் மதித்துக் கொண்டதனால் முன்னம் குறித்துச் சொன்னவருடைய மறுப்புகளையெல்லாம் யாதும் மதிக்க வில்லை என்று தெரிகின்றது.

தன் உள்ளம் கருதி யுள்ளதையே அவனுடைய உரைகள் வெளியிட்டுள்ளமையால் இந்த வீர வள்ளல் பேருவகையனாய் ஆரவம் மீதூர்ந்தான். தனது உறுதி நிலையை அனைவரும் அறிய இறுதியில் விளக்கினான்.

வெற்றியே பெறுக; தோற்க; வீக; வீயாது வாழ்க;
பற்றுதல் அன்றி உண்டோ புகல்எம்மைப் பகர்கின்றானை.

இராமனது உறுதியான குறிக்கோள் இங்ஙனம் வெளிப்பட்டுளது. உயர்ந்த பெருந்தன்மைகள் இதில் ஒளி புரிந்துள்ளன.

அடைந்தவரை ஆதரிப்பதில் இக்குலமகன் தலைமை பூண்டிருக்கும் அமைதி அதிசய நிலையாய்த் துதி செய்ய வந்தது.

அபயம் என்று வந்தவனை அணைத்துக் கொள்ளுவதால் என்ன அல்லல்கள் நேர்ந்தாலும் அவற்றை நல்லனவாகவே நயந்து கொள்வேன் என்றதனால் உற்றவர்க்கு உதவுவதில் இக்கொற்றக் குரிசில் கொண்டிருக்கும் உறுதி நிலையும் உபகார நீர்மையும் உணரலாகும்.

பெறுக; தோற்க; வீக; வாழ்க.

என்னும் வியங்கோள்கள் வியந்து சிந்திக்க வுரியன. வீதல்=சாதல். அடைக்கலம் அருள்வதால் சாக நேர்ந்தாலும் அதுவே எனக்குப் பெரிய யோகமாம் என்று உவந்து துணிந்திருக்கிறான். உயர்ந்த உயிரின்பம் இங்கே உணர வந்தது.

தனக்கு இனிய சுகத்தை நாடாமல் பிறர்க்கு இதமாய் உதவி புரிவதே பேராண்மையாளரது மேலான நீர்மை ஆதலால் அந்த மேன்மையில் இந்தவீரன் ஆர்வமீதூர்ந்து முந்திநிற்கிறான்.

“தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்” என்னும் பெருமையை மருவியிருப்பது அரிய மகிமையாய் நிலவி யுள்ளது.

பிறர்க்கு இதம் புரியாமல் வெற்றி பெற்று வாழ்ந்தாலும் அது வீணான செத்த வாழ்வே; அடைந்தவனை ஆதரிப்பதால் தோல்வியடைந்து செத்தாலும் அதுவே வீரமான வெற்றிவாழ்வு என இவ்வீரமகன் விழைந்துள்ளமை வாய்மொழியுள் நுழைந்து வந்துள்ளது. உண்மையானகுறிக்கோள் உலகம்தெரிய நின்றது.

அடைக்கலம் என்று வந்தவன் கொடிய கொலை பாதகனே ஆனாலும் அவனையும் விலக்க முடியாது என்பான் "எந்தையை யாயைக் கோன்று வந்தான் என்று உண்டோ?" என்றான்.

"யதிவா ராவணஸ் ஸ்வயம்"

"இராவணனே ஆனாலும் சரணம் என வரின் அவனுக்கும் அரணம் ஆவேன்" என இராமன் குறித்துள்ள படியை வால்மீகி முனிவர் உரைத்துள்ளதும் ஈண்டு உணர வுரியது.

தன்னை அடைந்தவர் எவராயினும் அவரை ஆதரித்தருளும் கருணைவள்ளல் என இராமனை யாவரும் துதித்து வருகின்றனர்.

துலைபுக்க பெரியோன்.

என்றது சிபி மன்னனை. எவர்க்கும் இரங்கியருளுவதே எனது குல மரபின் இயல்பாம் என்பான் தன்முன்னோனுடைய நீர்மை சீர்மைகளை இன்னவாறு எடுத்துக் காட்டினான்.

நீர்வேலி கொண்ட நிலவேந்தர் தம்முள்ளே
சீர்வேலி கொண்ட சிபிமன்போல்—போர்வேல்
வலங்கொண்டு வண்மை மருவி எவரே
நலங்கண்டு நின்றார் நயந்து. (1)

வண்மைக் குணத்தில் வனப்பில் மதிநலத்தில்
உண்மைத் திறத்தில் உயிரொழுக்கில்—திண்மை
மருவும் பெருவீர மாண்பில் சிபிமன்
ஒருவனே நின்றான் உயர்ந்து. (2)

தாயினும்பேர் அன்பன்; தருவினுமே ஈகையான்;
மாயினும்வாய் மாறாத வாய்மையான்—காயினுமே
கண்ணோடி நிற்கும் கருணையான் காமரளி
பண்ணோடும் தாரான்தன் பண்பு. (3)

இங்ஙனம் இனிய நீர்மைகளோடு சிபி இசை பெற்றிருந்தான். தன்னிடம் வந்து சேர்ந்த ஒரு புறவைக்காக்கும் பொருட்டுத் தனது உடலிலிருந்து தசையை அறுத்து எடுத்துத் தராசில் வைத்து நிறுத்து நிறைசெய்து முடிவில் தானும் அதில் ஏறி நின்றான். ஆதலால் துலைபுக்க பெரியோன் என இங்கே அந்நிலை தெரிய உரைத்தான். இம் மன்னன் சரிதம் முன்னமும் * வந்துள்ளது.

ஒரு பறவைக்கும் அருள் புரிந்து இன்னவாறு தன் முன்னோர் ஆதரித்து வந்திருத்தலால் தானும் அந்த வழியில் ஒழுக வேண்டும் என இந்த அழகன் உரைத்திருப்பது உள்ளத்தை உருக்கி நிற்கிறது.

உடைந்தவர்க்கு உதவான் ஆயின்
உள்ளது ஒன்று ஈயான் ஆயின்
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்
அறம் என்னும்? ஆண்மை என்னும்?

அறம் ஆண்மைகளுக்கு இராமன் இங்ஙனம் பொருள் கூறியுள்ளான். வருந்தி வந்தவர்க்கு உதவுதலும், வறியவர்க்கு ஈதலும், தஞ்சம் என்று அடைந்தவர்க்கு அஞ்சல் என்று அருளுதலும் உயர்ந்த தருமங்களாம். இவ்வாறு உபகாரங்களைச் செய்தவர் சிறந்த புண்ணியவான்களாய்த் திவ்விய கதிகளை அடைகின்றனர். செய்யாதவர் இழிந்தவர்களாய்க் கழிந்து போகின்றனர். உறுதி நிலைகள் உணர வந்தன.

அடைக்கலம் என்று அடைந்தவர்க்கு அருள் புரிந்து அவரை ஆதரிப்பது பெரிய தருமம்; அரிய வீரம் என்றது அதனை உரிமையோடு செய்ய இவ்வீரன் உறுதி பூண்டுள்ளமையை உணர்த்தி நின்றது. உரைகள் உள்ளத்தைக் காட்டியுள்ளன.

புண்ணிய வீரன் எண்ணியுள்ளதைக் கண்ணியமான வாய்மொழியால் காட்டியருளினன். எளியவர்க்கு இரங்கி உதவி புரிவதே தருமவீரம் என்றதனால் இவனது கரும நீர்மை தெரிய வந்தது.

வேடனுக்கு உதவி செய்து புள் வீடுபெற்று உயர்ந்தது.

* இந் நூல் பக்கம் 263, வரி 6 பார்க்க.

ஒரு பறவையின் இதிகாசத்தை இவ்வாறு அதிசய ஆர்வத்தோடு கூறியிருக்கிருன். பைம்புள் = பசிய சிறிய பறவை.

புரு புரிந்தது.

இமயமலை அயலே வேடன் ஒருவன் காட்டில் வேட்டையாடி வந்தான். வலைகளை விரித்துப் பறவைகளைப் பிடித்தான். நல்ல பெண் புரு ஒன்று கையில் சிக்கியது; பையில் வைத்துக் கொண்டு அதன் சோடியான ஆண் புருவையும் பிடிக்க வேண்டும் என்று ஆவலோடு நாடி அலைந்தான். பொழுது அடைந்து விட்டது. மழையும் பெய்தது. ஒரு ஆலமரத்தின் அடியில் வந்து தங்கினுன். மாலையிருள் கனியவே பசியாலும் குளிராலும் வாடியிருந்தான். தன் பேடையைக் காணுமல் பேதுற்று மறுகி எங்கும் ஓடித் தேடிய ஆண் புரு அந்த மரத்தின் மேலே பறந்து வந்து அயர்ந்திருந்தது. கீழே பார்த்தது. வேடன் பசியால் பதைத்திருப்பதைக் கண்டது. பெரிதும் இரங்கியது. குளிருக்காகத் தன் முன்னல் சிறிய சுள்ளிகளை அடுக்கி அவன் நெருப்பு மூட்டியிருந்தான்; அந்தத் தீயுள் பாய்ந்து மாய்ந்து போனல் தன் உடலை அவன் உண்டு பசி தீர்ந்து உவந்து போவான்என்று துணிந்தது; உடனே அதில் விரைந்து வீழ்ந்தது; இறந்து போயது. அதிலிருந்து ஒரு சோதி எழுந்து வானில் மறைந்தது. தன் பால் வந்து அடைந்தவனுக்கு உதவி புரிய உயிரை விடுத்தமையால் அந்தப் பறவையின் கருணையை வியந்து பரமன் அதற்குப் பேரின்ப முத்தியை அருளினன். அதன் பேடையும் பிறவி நீங்கி உயர் கதி அடைந்தது. கபோத கீதை என்னும் இந்த அதிசய சரிதத்தைத் துணைவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர் மதி தெளிந்து தன் வழிக்கு வரும்படி இராமபிரான் இங்கே அருள் புரிந்திருப்பது உவகை நிலையமாய் ஒளி புரிந்துள்ளது.

"சிறிய பறவையே இவ்வாறு பரோபகாரம் செய்துள்ளதே! அரிய மனிதனைப் பிறந்தும் அது செய்யாது ஒழிவது எவ்வளவு இழிவு!" என இவ் வீர மூர்த்தி பேசியிருப்பது விழுமிய நீர்மையை விளக்கி நிற்கின்றது. உரிமையாய்த் தழுவி யுள்ளவர்கள் உள்ளம் தெளிந்து உபகாரிகளாய் ஒழுகி வர இவ் வள்ளல் அறிவு கூறி ஆதரவோடு நீதி நெறிகளை அருளி வருகிருன்.

எளிய உயிர்களுக்கு இரங்கி அருளுவதே விழுமிய தெய்வ நீர்மையாம். மடுவில் முதலையால் பிடியுண்டு மறுகிய யானையை ஒரு நொடியில் வந்து திருமால் காத்தருளினன். தன்னைக் கருதிய சீவர்களுக்குஎவ்வழியும்அப்பெருமான் திவ்விய கதிகளை அளித்து வருகிருன் எனத் தெளித்து மேலும் தொழித்து மொழிந்தான்.

அஞ்சினேன் அபயம் என்ற அந்தணற்கு ஆகிஅந்நாள்
வெஞ்சினக்கூற்றை மாற்றும் மேன்மையின்மேன்மைஉண்டோ?

தன்னை அடைக்கலம் என்று உறுதியாகக் கருதியடைந்த மார்க்கண்டரை ஈசன் காத்து இன்னருள் புரிந்தருளியதை இன்னவாறு இனிது காட்டியருளினன்.

மார்க்கண்டர்.

இவர் மிருகண்டு என்னும் முனிவருடைய புதல்வர். தாய் பெயர் மருத்துவதி. அழகு அறிவு முதலிய விழுமிய நலங்களெல் லாம் ஒருங்கே அமைந்திருந்த இந்தக் குமரன் பருவம் அடைந்து கலைகள் பல பயின்று வளர்ந்து வந்தான். வருங்கால் ஒரு நாள் மாலையில் தாயும் தந்தையும் இச் சேயை நோக்கிக் கவலை மீக் கொண்டு உருகி அழுதார். அவ்வாறு அழுத காரணத்தை இவன் மறுகி வினவினன். "பதினறு வயதில் ஆயுள் முடிந்து இறந்து படுவதாக விதி அமைந்துள்ளமையால் அதனை நினைந்து நினைந்து நெஞ்சம் கலங்கி அழுகின்றோம்" என்று உழுவலன்பு டைய அவர் கண்ணீர் மல்கி உரைத்தார். இப் புண்ணியப் புதல்வன் உணர்ந்தான், புத்திர வாஞ்சையால் உருகி மறுகுகிற தந்தை தாய் இருவரையும் தேற்றி இருத்திவிட்டு மணிகர்ணிகை என்னும் இடத்தை அடைந்து நதியில் மணலைக் குவித்துச் சிவ லிங்கமாகப் பாவித்து ஈசனை நினைந்து உபாசனையோடு தவம் புரிந்தான். பதினறு வயது பூர்த்தியாயது. குறித்தகாலம் வரவே கூற்றுவன் கொதித்து வந்தான். பாசத்தைக் கழுத்தில் மாட்டி ஈர்த்தான். காலன் கடுத்து இழுக்கவே இப் பாலன் அடைக்கல மாகப் பிடித்திருந்த சிவலிங்கத்தை ஆரத்தழுவி "ஈசா! அபயம்" என்று எண்ணி உருகினன். உடனே இலிங்கத்திலிருந்து சிவன் உக்கிர வீரமாய்த் தோன்றிக் காலனை எட்டி உதைத்தான். பட்டிக்கடாவோடு அவன் பதைத்து அயலே வீழ்ந்தான். "இவ னுக்கு வயது என்றும் பதினறு; நீ ஒன்றும் தெரியாமல் ஊன

மாய் வந்து ஊறு செய்தாய்; ஒதுங்கிப் போ!" என்று எமனை நோக்கி உருத்து உரைத்தான். கூற்றுவன் மாற்றம் யாதும் கூறுமல் இறைவனை வணங்கி வாழ்த்திப் போயினன்.

தன்னைச் சரணம் அடைந்தவனைக் காக்கும் பொருட்டு விதி நியமங்களையும் மாற்றிக் கூற்றுவனையும் உதைத்து வீழ்த்தி ஆற்ருத அதிசயத்தைச் சிவபெருமான் ஆற்றியுள்ளமையால் அந்தப் பெரு நீர்மையை இந்த அருள்வீரன் வியந்து கொண்டாடினன்.

நஞ்சினை மிடற்று வைத்த என்றது அஞ்சி அபயம் புகுந்த அமரரைக் காக்கும் பொருட்டு ஆலம் உண்டு நீலகண்டன் என ஞாலம் தெளிய நிலவியுள்ள அந் நிலைமையை நினைந்து கொள்ள.

அதிசய ஆதரவுகள் அரிய சோதனைகளில் விளைந்துள்ளமையால் அவை யாண்டும் பெரிய அருளாடல்களாய்த் துதி செய்ய வந்தன.

"மறிகடல் உலகில் மன்னுயிர் கவரும்
கூற்றுவன் தனக்கோர் கூற்றுவன் ஆகியும்,
கடல்படு நஞ்சம் கண்டத்து அடக்கியும்,
பருவரை சிலையாப் பாந்தள் நாணுத்
திரிபுரம் எரிய ஒருகணை துரந்தும்,
நிதிபயில் குபேரற்கு நீணகர் ஈந்தும்,
மறைபயில் மார்க்கண் டேயனுக்கு அருளியும்
தஞ்சமென்று ஒழுகும் தன்னடி யார்தம்
நெஞ்சம் பிரியா நிமலனை நீடுயர்
செந்தழற் பவளச் சேணுயர் வரையனை
கள்ளம் கைவிட்டு உள்ளமது உருகிக்
கலந்து கசிந்துதன் கழலிணை யவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனைத்
தேவ தேவனைத் திகழ்சிவ லோகனைப்
பாவ நாசனைப் படரொளி உருவனை
வேயார் தோளி மெல்லியல் கூறனைத்
தாயாய் மன்னுயிர் தாங்கும் தந்தையை."

(கோபப்பிரசாதம்)

என ஈசனை இவ்வாறு நக்கீரர் துதித்திருக்கிருர்.

மார்க்கண்டனுக்காக எமனை உதைத்து இறைவன் இன்ன ருள் புரிந்துள்ள தண்ணளி நீர்மையை யாவரும் உன்னி யுருகி உவந்து போற்றி யுள்ளனர்.

உற்றவொரு பாலன் உயிர்காக்கக் காலனையும்
ஒற்றை உதையால் உருட்டினாய்—பெற்ற
மகவையருள் தாயாகி மன்னுயிர்க் கெல்லாம்
தகவையருள் கின்றாய் தனி.

பகவன் அருள் இவ்வாறு உவகை சுரந்துள்ளது.

மார்க்கண்டனுக்கு இறைவன் அருள் புரிந்துள்ளதைக் காவியத்துள் பல இடங்களிலும் கவி வரைந்து * காட்டியுள்ளார்.

கதா நாயகனுடைய அருள் நீர்மைகளையும் வீர கம்பீரங்க ளையும் அதிசய விநோதமாய்த் துதிசெய்து வருகிறார். காவிய பாத்திரங்களைச் சீவிய ஓவியங்களா ஆட்டித் திவ்விய காட்சிகளை விளைத்து வருதலால் எவ்வழியும் தெய்வீக நீர்மைகள் தோன்றி மிளிர்கின்றன.

என் தாதை பெற்ற தெய்வ மரணம் என்வயின் அன்றாமோ?

சீதையைக் காப்பாற்றுவதற்காக இராவணனோடு போ ராடி மாண்டு போன சடாயுவைக் குறித்து இந்த ஆண்டகை இவ்வாறு ஆர்வம் மீதூர்ந்து கூறியிருக்கிறான்.

சரண் எனக்கு யார்கொல்? என்று சானகி அழுது சாம்ப

இராவணன் கையில் அகப்பட்ட பொழுது சீதை மறுகித் துடித்துப் பதறிக் கதறி அழுதுள்ள பரிதாப நிலைகளை இங்ஙனம் இது அறிய வந்தது. தீயவனிடம் சிக்கித் தனது தேவி ஆவி பதைத்து அலமந்திருத்தலை இக் குலமகன் கருதி யுருகி மறுகி யுள்ளதை இவ் வுரையில் காண்கின்றோம்.

நாதி யாதும் இல்லாதவளாய் இவ்வாறு கூவி ஓலமிட்டுக் குலை துடித்து அக் குலமகள் அழுது அலமந்த பொழுது ஆகா யத்திலிருந்து ஓர் ஒலி வெடித்து வந்தது.

அரண் உனக்கு ஆவேன் வஞ்சி அஞ்சல்!

என்று பறவை வேந்தன் விரைந்து பறந்து வந்து இலங்கை

* இந் நூல் பக்கம் 2525, வரி 13 பார்க்க.

வேந்தனைத் தடுத்து நிறுத்திக் கடுத்து அமராடி முடிவில் இறந்து போனான் ஆதலால் அதனை இங்கே பரிந்து கூறினான்.

என் மனைவியைக் காக்கும் பொருட்டு எந்தை உயிரைக் கொடுத்தான் எனத் துயரந்தோய்ந்து உள்ளம் கரைந்து உரிமை சுரந்து உரைத்திருக்கிறான்.

சடாயு இறந்துள்ள அந்த இறப்பைத் தெய்வ மரணம் என்று இம் மெய்யன் குறித்துள்ளது கூர்ந்து சிந்திக்கவுரியது.

பிறர்க்கு உதவி புரிய உயிர் நீத்தவர் பிறவி தீர்ந்து பேரின்ப நிலையை எய்துகின்றார். அந்த உண்மை நிலை நுண்மையாக ஈண்டு உணர வந்தது. உபகாரமாய் உய்தி புரிவதே தெய்வ நீர்மையாய் மெய்யொளி பெறுகின்றது.

என் தாதை எனச் சடாயுவை இக் கோமகன் உரிமை கூர்ந்து உரைத்துள்ளது உயர்ந்த பெருந்தகைமையாய் ஒளி வீசி நிற்கின்றது. யாண்டும் இயல்பாகவே மேன்மையான மொழிகள் பான்மை சுரந்து வருகின்றன. அன்புரிமையும் பண்பாடுகளும் இராம சரிதத்தில் எவ்வழியும் இன்பநிலையங்களாயுள்ளன.

உரிமையாய் அடைந்தவரை ஆதரிப்பதே எவ்வழியும் பெருமையாம்; சிறிய பிராணிகளுக்கும் இரங்கி உதவி புரிவது எனது குல மரபின் இயல்பு ஆதலால் நான் அதனைச் செய்யாதிருப்பது வெய்ய பிழையாம். பிரபு என்னும் பெயர் வெகு மகிமையுடையது. உயிர்களைப் புரந்து வருபவனே பிரபு என வருகிறான். அரிய ஈகையால் அமைகின்ற இந்தப் பெரிய மகிமையை அடையாதவன் உலகமெல்லாம் அடைந்து உயர்ந்த அரசனாய்ச் சிறந்திருந்தாலும் அவன் இழிந்தவனே யாவன்.

எளிய சீவர்களுக்கும் அளி புரிந்து உதவிய விழுமிய குடியில் பிறந்த நான் கெழுதகைமையோடு நாடி வந்தவனைப் பேணாது விடுவது பெரிய பழியாம் ஆதலால் யாண்டும் யாரையும் ஆதரிப்பதே என் கடமையாக் கருதிப் பூண்டுள்ளேன்.

அபயம் என்றபொழுதே அபயதானம் ஈதலே கடப்பாடு.

தனது உறுதியான கருத்தை இராமன் இவ்வாறு அறுதியாக இறுதியில் உரைத்தான். என்பால் வைத்த அன்பால் நீங்கள் எல்லாரும் நல்ல நீதி முறைகளை எடுத்துக் கூறினீர்கள். மாருதி

யின் அறிவுரைகளையும் தெளிவாக அறிந்து கொண்டீர்கள். எனது நிலையையும் உணர்ந்திருக்கிறீர்கள். அடைக்கலம் என்று வந்தவனை உவந்து அணைத்துக் கொள்வது நமக்கு உரிமையான கடமை என்பதை நீங்கள் அனைவிரும் தெளிந்து மகிழ்ந்துள்ளீர்கள் ஆதலால் "சுக்கிரீவா! விரைந்து சென்று அவனை ஈண்டு அழைத்துவா!" என்று இராமன் உரைத்தருளினன்.

இக் கோமகனுடைய இராச தந்திரமும் அதிசய சாதுரியமும் இங்கே விளங்கி நிற்கின்றன. அபயம் என்று வந்தவனை அணைத்தருளத் தனக்குப் பிரியம் இருந்தாலும் சுக்கிரீவன் முதலில் தடுத்து உரைத்தான் ஆதலால் அவனையே விடுத்து வீடணனை அழைத்து வரும்படி பணித்தான்.

மாறுபட்ட மனமுடையவர்களை அதி விநயமாத் தேற்றி வானரத் தலைவனை இம் மான வீரன் ஏவவே அம் மன்னன் மகிழ்ச்சி மீதூர்ந்து எழுந்தான். எல்லாரும் உள்ளம் உவந்திருந்தார்.

### சுக்கிரீவன் வீடணனை நோக்கி வந்தது.

இராமபிரானுடைய பெருந்தகைமைகளையும் உபகார நீர்மைகளையும் நினைந்து நினைந்து சுக்கிரீவன் நெஞ்சம் உருகினன். "தஞ்சம் என்று அடைந்தவரை எம் பெருமான் ஆதரித்தருளுந் திறம் அதிசயமுடையது" எனத் தன் உள்ளத்துள்ளே துதி செய்து கொண்டு அவன் உவந்து வந்தான். அவனது வரவைக் கண்டதும் வீடணனைச் சுற்றி வளைந்து மிக்க எச்சரிக்கையோடு பாதுகாத்து நின்ற வானரங்கள் எல்லாம் பய பத்தி மிகுந்து பணிவு புரிந்து அயலே ஒதுங்கி நின்றன. காவலாளிகளுள் தலைவனாயிருந்த துமிந்தன் நிலைமையை விபீடணனுக்கு நேரே சொன்னான்: "எங்கள் ஆண்டவன் அருள் உமக்குக் கிடைத்து விட்டது; தன்பால் அழைத்து வரும்படி அன்போடு பணித்து விடுத்துள்ளமையால் அரசர் இங்கே வருகிறார்" என அவன் உவகை மீதூர்ந்து உரை செய்து நின்றான்.

அந்த உரையைக் கேட்டதும் வீடணன் பேரானந்தமுடையனாய் எழுந்து பார்த்தான். தன்னை நோக்கி வானர வேந்தன் வருவதைக் கண்டதும் அந்த அரக்கர் கோமகன் உள்ளம் பரவசமாய் உருகினன். நேரே மெள்ள எதிர்கொண்டு வந்தான்.

வருகின்ற கவியின் வேந்தை மயிந்தனுக்கு இளைஞன் வள்ளல்
தருகென்றான் அதனால் நின்னை எதிர்கொளற்கு அருக்கன் தந்த
இருகுன்றம் அனைய தோளான் எய்தினன் என்ன லோடும்
திரிகின்ற உள்ளத்தானும் அகமலர்ந் தவன்முன் சென்றான்.

மயிந்தன் கூறிய வார்த்தையைக் கேட்டதும் வீடணன் பெருமகிழ்ச்சி அடைந்து சுக்கிரீவனை எதிர் நோக்கி நடந்து வந்துள்ள காட்சியை இங்கே கண்டு உவந்து நிற்கின்றோம்.

"அடைக்கலம் கருதி வந்திருக்கிறோம்; நம்மை நம்பிச் சேர்ப்பாரோ? சேர்க்க மாட்டாரோ? சேர்க்காமல் விலக்கி விடின் நாம் என்ன செய்வது?" என இன்னவாறு பல பல எண்ணி வீடணன் உள்ளம் உளைந்து பெரிதும் மறுகியிருந்தான் ஆதலால் **திரிகின்ற உள்ளத்தான்** என அவனது கவலை நிலைகளைக் காட்டியருளினார்.

"இராமபிரான் இரக்கமுள்ளவனாயினும் நான் அரக்கர் இனத்தைச் சார்ந்தவன்; எதிரியின் தம்பி; ஆகையால் இந் நம்பி என்னை நம்பியருளுமா?" என்று உள்ளம் கவன்று அலைபாய்ந் திருந்த அவன் வானர வேந்தன் வருவதை யறிந்ததும் உய்தி கிடைத்தது என்று உவகை மீதூர்ந்து விரைந்து எழுந்து எதிர் நடந்து வந்துள்ளான். **அகம் மலர்ந்து அவன் முன் சென்றான்** என்றதனால் அவன் உவந்து வந்த வரவு நன்கு தெரிய வந்தது.

### இருவரும் தழுவி நின்றது.

அகம் மகிழ்ந்து முகம் மலர்ந்து வந்த அவனைச் சுக்கிரீவன் அணுகவே அவனது உருவ நிலை உவகை தந்தது. உள்ளம் உருகியது; இரு கையாலும் அள்ளி யணைத்தான். அவனும் உள்ளம் களித்து உரிமையோடு தழுவினான். இருவரும் உழுவலன்புடன் ஒருவரை ஒருவர் பிரியம் மீதூர்ந்து தழுவியது விழுமிய காட்சியாய் விளங்கி நின்றது.

தொல்லருங் காலமெல்லாம் பழகினும் தூய ரல்லார்
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே;
ஒல்லைவந்து உணர்வும் ஒன்ற இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவின் தோளார்.

தழுவினர் நின்ற காலைத் தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதல் குலத்திற்கு ஏற்ற முறைமையால் உவகைசூழ

வழுவலில் அபயம் உன்பால் வழங்கினன் அவன் பொற் பாதம் தொழுதியால்விரைவின்என்னுக்கதிரவன்சிறுவன் சொன்னான்.

சுக்கிரீவனும் வீடணனும் உரிமையோடு தழுவி நின்ற இனிய அன்புக் காட்சியை உவந்து நோக்கி வியந்து நிற்கிறோம். உள்ளப் பான்மைகளும் உணர்ச்சி நிலைகளும் ஈண்டு ஒளி வீசி வெளி வந்துள்ளன.

நட்பின் நீர்மைகளை உய்த்துணரும்படி கவி நுட்பமாக விளக்கி யிருக்கிறார். எவ்வளவு காலம் நெருங்கிப் பழகினாலும் உள்ளம் தீயவர் உறவாய் ஒன்றி நில்லார். மனம் தூய்மை யுடைய நல்லவர்கள் கண்டபொழுதே உழுவலன்புடன் உள்ளம் கலந்து என்றும் நிலையான நண்பராய் நிலவி நிற்கின்றார்.

## நண்பர் நிலை.

ஒருவர்பால் ஒருவர் உண்மையான அன்புடையராய் உரிமையுடன் மருவி நிற்பவர் நண்பர் என வந்தார். நண்பின் தன்மை நட்பு என நேர்ந்தது. இந்த ஒட்டு பலவகைத் தொடர்புகளால் உண்டாகின்றது. சாதி மதம் தொழில் ஊர் நாடு சீர் சேர்க்கை முதலிய இசைவுகளால் அமைதலால் நட்பு கேண்மை என வந்தது. சிறந்த நண்பு உயர்ந்த பண்பாடுகளை யுடையது. இனிய அந்த உறவுரிமை அமையின் மனித வாழ்வு இன்பம் மிக வுடையதாய் இசை மிகப் பெறும்.

அன்பு வாய்மை நேர்மை ஆதரவு ஆகிய நீர்மைகள் உயர்ந்த நண்புக்குத் தகுந்த உரிமைகளாய் அமைந்துள்ளன.

இழிந்த இயல்பினர் எவ்வளவு காலம் கூடிப் பழகினாலும் மனம் கலந்து நண்பராய் மருவி யிரார் ஆதலால் தோல்லரும் காலம் எல்லாம் பழகினும் தூயர் அல்லார் புல்லலர் என்றார்.

புல்லுதல் = உள்ளன்போடு பொருந்தி நிற்றல்.

உள்ளம் தூயார் எதிர்ந்த ஞான்றே பொருந்துவர்.

நல்ல பண்புடைய பெருந்தகையாளர் நேரே கண்டபொழுதே உள்ளம் கலந்த அன்பராய் உரிமையோடு மருவி மகிழ்வர் என இது உணர்த்தியுள்ளது. நட்பின் அருமை பெருமைகளையும் ஆன்ம நிலைகளையும் இதனால் அறிந்து கொள்ளுகிறோம்.

நண்பராய் ஈண்டு மருவியுள்ள இருவரது மாட்சிகளை விளக்க இரண்டு அடிகள் முன்னே மூண்டு வந்தன.

ஆண்டுகள் பலவாக ஒன்ருக் கூடி அளவளாவியிருந்தாலும் உள்ளம் தீயவர் உறவாய் நேரார்; ஒரு நாள் காணினும் நெஞ்சம் தூயவர் நேயம் மீதூர்ந்து நேரே கலந்து நிலையான நண்பராய் நிலவி நிற்பர் என்றது இங்கே நேர்ந்துள்ள நண்பின் நிலைமையை நினைந்து தெளிய.

நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே. (33)

ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே. (நறுந்தொகை)

இந்த இரண்டு பாவும் நம் கவியின் முதல் இரண்டு அடிகளைக் கருதி வந்தன போல் காணப் படுகின்றன. கேண்மையின் நிலைமையும் நீர்மையும் தலைமை தோன்ற வந்தன.

"செல்வழிக் கண் ஒருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையின் தோன்றப் புரிந்தியாப்பர்."
(நாலடியார், 154)

வழியில் கண்ட இடத்தில் ஒரு நாள் பழகினும் விழுமியோர் கெழுமிய நண்பராய்க் கேண்மை புரிந்து பான்மை சுரந்து நிற்பர் என இது குறித்துள்ளது.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்ருேர்
சான்ருேர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலரா குபவே. (புறம், 218)

பொன் மணி முத்து பவளம் முதலிய அரிய பொருள்கள் மலை கடல் நிலம் என அயலான வேறு வேறு இடங்களில் பிறந்திருந்தாலும் அணிகலமாகும் பொழுது ஒரே இனமாய்த் தோன்றி எழில் வீசி நிற்றல் போல் மேலோர்கள் இடம் குலம் முதலியவற்ருல் வேறு பட்டிருந்தாலும் நேரே மருவிய போது

என்றும் பிரியாத நண்பராய் ஒன்றி உயர்ந்து ஒளி மிகுந்து விளங்குவர் எனக் கண்ணகனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாடியுள்ளார்.

ஒல்லை வந்து உணர்வும் ஒன்ற இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர்.

சுக்கிரீவனும் வீடணனும் நண்பராய்த் தழுவி நின்ற நிலையை நாம் இங்கே விழி களித்து நோக்கி வியந்து நிற்கிறோம்.

இரவும் பகலும் போலத் தழுவி நின்றனர் என்றது இருவரது நிறமும் பண்பும் நிலை தெரிய வந்தது. பகலவன் சேய் பகல் என நேர்ந்தான்.

வீடணன் கரு நிறம்; சுக்கிரீவன் வெண்மை ஆதலால் இவரது சேர்க்கைக்கு எல்லியும் பகலும் எதிர் தெரிய வந்தன. எல்லி = இரவு. சொல்லினுள்ள சுவைகளைச் சூழ்ந்து நோக்குக.

பகலும் இரவும் ஒரு நாளுக்கு அமைந்துள்ளது போல் இந்த இருவரும் இராமனுக்கு உரிமையாளராய் இனிதமைந்துள்ளனர் என்க. இரு பொழுதையும் நாள் ஒரு பொழுதும் பிரியாமல் உரிமை கொண்டுள்ளது போல் அந்தப் பெருமான் இந்த இருவரையும் பிரியமாய் என்றும் பேணி வருவன் என்பது காண வந்தது. நண்பின் காட்சி நயம் கனிந்துள்ளது.

உணர்வும் ஒன்ற என்றது அவரது புணர்வு நிலை புலன் தெரிய நின்றது. முதலில் உள்ளம் ஒவ்வாது நின்ற சுக்கிரீவன் பின்பு இராமன் உரைகளைக் கேட்டபின் அது ஒன்றி வந்தான்; வீடணனைக் கண்ட போது உணர்வும் ஒன்றினன். உடல் ஒன்று முன்னே இருவருடைய உணர்வும் ஒன்றியுள்ளமை உம்மையால் உணர வந்தது. உணர்ச்சி ஒத்தது நட்புக்கு உயிர்ப்பாய் உயர்ச்சி தந்தது.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (குறள், 785)

ஒருவரோடு ஒருவர் கூடி வாழுதல், பழகி வருதல் முதலிய தொடர்புகள் யாதும் வேண்டியதில்லை. உணர்ச்சி பட்டும் ஒத்திருந்தால் போதும். திட்பமான நட்பு அங்கே உண்டாகி விடும் எனத் தேவர் இங்ஙனம் நுட்பமாக உணர்த்தியுள்ளார்.

"என்றனர் இரங்க மேலோன் எதிர்தழீஇத் தழுவி ஆறி
குன்றனீர் சிறியற் காகக் குழைந்தழல் தமியேன் செல்வல்
பொன்றலில் நட்பினுக்குப் புணர்வொடு பழகல் வேண்டா;
நின்றநல் லுணர்ச்சி தானே நிறைக்குமென்று உணர்ந்தநல்லீர்.
(சீகாளத்திப் புராணம்)

தமது பிரிவுக்காக இரங்கி வருந்திய சங்கப் புலவர்களை நோக்கி நக்கீரர் கூறிய படியிது. நாயனார் வாய்மொழிகளைக் கவிகள் இவ்வாறு கவர்ந்து கொண்டு உவந்து போற்றி வந்துள்ளனர். உள்ளப் பண்பும் உணர்ச்சியும் ஒத்தவர் உரிமை நண்பராய் மருவி மகிழ்வர் என்பது வீடண சுக்கிரீவர்களால் இங்கே விளங்கி நின்றது.

"Similitude of disposition made them perfect friends."
[Goldsimith]

"ஒத்த பண்பு அவரை உயர்ந்த நண்பராக்கியது" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈண்டு ஊன்றி யுணர வுரியது.

ஆல்காண்டர் (Alcander) என்பவன் கிரீஸ் தேசத்தவன்; செப்டிமியஸ் (Septimius) என்பவன் ரோமாபுரியினன். இருவரும் முன் தொடர்பு இல்லாதவர். இடையே சந்தித்தனர்; அளவளாவினர்; உழுவலன்புடையராய் அரிய நண்பராயினர். அந்த நட்பின் நிலைமையைக் குறித்து கோல்ட்ஸ்மித் என்னும் ஆங்கிலப் புலவர் இவ்வாறு உரைத்திருக்கிறார். புணர்ச்சி பழகுதல்கள் இல்லாதிருப்பினும் உணர்ச்சி ஒத்திருந்தால் அது நட்பாம் கிழமை தரும் என்ற தேவர் வாக்கை இது ஒத்து வந்திருப்பது வியப்பாயுள்ளது. கால தேசங்களால் பிரிந்திருப்பினும் மனிதரது நித்திய நீர்மைகள் எவ்வழியும் ஒரு முகமாய் ஒத்திருக்கும் என்பதை இதனால் உய்த்துணர்ந்து கொள்ளுகிறோம்.

உணர்வு ஒன்றி இவ்வாறு கிழமை மீதூர்ந்து தழுவி நின்ற சுக்கிரீவன் விபீடணனை இனிது நோக்கி "ஆண்டவன் உங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பியருளினான்; விரைந்து போவோம்; வாருங்கள்" என்று அன்புரிமையோடு உரைத்தான். அந்த உரையைக் கேட்டதும் இலங்கைத் தம்பி உள்ளம் உருகினான்; கண்ணீர் பெருகியது; ஆனந்த பரவசனாய் அயர்ந்து நின்றான். பின்பு பல பல நினைந்து பரிந்து மொழிந்தான். உள்ளங்

கரைந்து உணர்வு சுரந்து உரையாடி நின்ற அவனது நிலைமை நீர்மைகளை இங்கே தலைமையோடு காண வருகின்றோம்.

### வீடணன் உருகி உரைத்தது.

சிங்கஏறு அனையான் சொன்ன வாசகம் செவி புகாமுன்
கங்குலின் நிறத்தினன் தன் கண்மழைத் தாரை கான்ற;
அங்கமும் மனமும் தன்னைக் குளிர்ந்ததவ் அகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னப் பொடித்தன உரோமப் புள்ளி. (1)

பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை வருகஎன்று அருள்செய் தானே
தஞ்செனக் கருதி னனே தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனச் சிறந்தேன் அன்றோ நாயகன் அருளின் நாயேன். (2)

மருளுறு மனத்தி னன்என் வாய்மொழி மறுத்தான் வானத்து
உருளுறு தேரினானும் இலங்கைமீது ஓடும் அன்றே
தெருளுறு சிந்தை வந்த தேற்றம் ஈதாகின் செய்யும்
அருளிது வாயிற் கெட்டேன் பிழைப்பரோ அரக்கரானோர். (3)

தீர்வரும் இன்னல் தம்மைச் செய்யினும் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்ப துண்டோ?
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமிழ்துபண்டு அளித்த தன்றே. (4)

துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை
உறவுவந் தருளி மீளா அடைக்கலம் உதவி னனே
மறவினை நீக்கல் இல்லா மாயமும் மாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னும் நரகினில் பிழைப்பதானேன்.

உறவாய் விழைந்து வந்தவனிடமிருந்து விளைந்து வந்துள்ள விளைவுகளை இங்கே விழைந்து காணுகின்றோம். தன்னை இராமன் உவந்து ஆதரித்துக் கொண்டான்; தன்பால் அழைத்து வரச் சொன்னான் என்று கேட்டவுடனே வீடணன் பெரு மகிழ்ச்சி யடைந்தான். உள்ளத்தில் பெருகி எழுந்த உணர்ச்சிகள் உரைகளில் உருகி வெளி வந்துள்ளன. அன்பும் பண்பும் அறிவும் பரிவும் பொங்கி எழுந்து பொலிந்து நிற்கின்றன. கவிகளைக் கருதிக் காணுங்கள்; சுவைகளைத் துருவியுணருங்கள்.

கண் மழைத் தாரை கான்ற.

என்றதனால் வீடணனுடைய கண்களிலிருந்து பெருகி வந்

துள்ள நீர் நிலைகளை நேரே பார்க்கின்றோம். நெஞ்சம் கரைகின்றோம். அழுகை எவருக்கும் எளிதில் வராது; வெளியே தோன்றுகின்ற விழி நீர் உள்ளத்தில் ஊன்றியுள்ள உழுவலன்புகளையும் உணர்ச்சி யுருக்கங்களையும் வெளியே தெளிவாக விளக்கியருளுகின்றது. ஒரு துளி கண்ணீர் அரிய பல எண்ணங்களை அளந்து காட்டுதலால் அதன் காட்சியும் மாட்சியும் கருதியுணர வரியன. நேர்ந்துள்ள நிலைமைகள் நெஞ்சத்தை உருக்கியிருத்தலால் கண்ணீர்ப் பெருக்கு விரைந்து வெளியே பாய்ந்துள்ளது.

"உழுவலன்புடைய அழகிய தேவியைப் பிரித்த கொடிய படுபாவியோடு கூடப் பிறந்தவன் என்று தெரிந்தும் என்னைத் தன்பால் வருக என்று அன்பால் அருளிய அந்த அருந்திறலாளனது பெருந்தகைமை ஆ! எவ்வளவு பகிமையுடையது! செஞ்சடைக் கடவுளான சிவபெருமான் கண்டத்தைச் சார்ந்து கவின் கொண்ட நஞ்சைப் போல அஞ்சன வண்ணனைச் சேர்ந்து நான் அளவிடலரிய பெருமைகளை அடைந்தேன். என் வாய் மொழியைக் கேளாமல் களித்து நின்ற அண்ணன் அழிந்தான்; அரக்கர் குலம் ஒழிந்தது; அமரர் குலம் உயர்ந்து வாழ்ந்தது; இது வரையும் அருகே வருதற்கு அஞ்சி அயலே ஒதுங்கிச் சென்ற சூரியன் இனி இலங்கைமேல் நேரே தேரைச் செலுத்தி ஊரை உவந்து நோக்கி இகழ்ந்து செல்லுவான்; உலகமும் மகிழ்ந்து கொள்ளும்.

தேவர் முதல் யாவருக்கும் நோய் புரிந்து வந்த தீயவன் தம்பி என்று வெறுத்து விலக்காமல் விரும்பிக் கொண்ட நம்பியின் அருள் நீர்மை அளவிடலரியது. தன்னை நிலை குலைத்துக் கலக்கி உழக்கியவர்களுக்கும் கடல் இனிய அமிழ்தத்தைக் கொடுத்தது போல் எனக்கு எம்பெருமான் இன்று அருள் புரிந்துள்ளார். புண்ணிய மூர்த்தியை அடைந்தமையால் என் பாவம் அடியோடு ஒழிந்தது; கொடிய அரக்கர் குலத்தில் பிறந்த நெடிய பழி நீங்கினேன்; பிறவியும் தீர்ந்தது; பேரின்ப முத்தியும் பெற்றேன்" என இவ்வாறு ஆராமை மீதூர்ந்து விபீடணன் இங்கே உரையாடி உருகியுள்ளமையால் அவனுடைய உள்ளப் பரிவுகளையும் அறிவமைதிகளையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

இராமபிரானுடைய இனிய குண நீர்மைகளையும் அரிய

பெருந்தகைமைகளையும் கேள்வியால் அறிந்தவுடனே அண்ணன் செய்துள்ள கொடிய பழிச் செயல்களை எண்ணி எண்ணி வீடணன் கண்ணீர் சொரிந்திருக்கிறான்.

பஞ்சுஎனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை வருக என்று அருளினானோ?

அவனுடைய நெஞ்சம் பட்டுள்ள பாடுகளை இந்த உரைப்படம் திரைப் படங்களினும் தெளிவாக வெளியே காட்டியுள்ளது.

சீதையின் அற்புத சவுந்தரியத்தை இங்கே எண்ணியிரங்கியிருக்கிறான். தனது அருமை மகள் திரிசடை மூலம் கேள்வியுற்றதோடு சிறையிலிருந்த சீதையை ஒரு முறை நேரிலேயும் வீடணன் பார்த்து வந்தான். அதிசய அழகுடைய அப் பதிவிரதை தன் பதியைப் பிரிந்து பரிதாப நிலையில் மறுகியிருத்தலைக் கண்டு மனம் மிக வுருகி மறுகி வந்து அண்ணனிடம் தண்ணளி புரிந்து விடும்படி எண்ணரிய நீதிகளை எடுத்துச் சொல்லி வணங்கி மன்றாடினான். அவன் யாதும் இசையவில்லை. நம் குலம் வசையோடு அழிந்தது என்று இவன் வருந்தி அகன்றான். அனுமான் தூது வருதற்கு மூன்று மாதங்களுக்கு முன் இவ் வாதம் நிகழ்ந்தது. பாதங்களைப் பார்த்திருக்கிறான். செந்நிறம் செறிந்து, மென்மை நிறைந்து, மேன்மை மீதூர்ந்துள்ளமையான் அவற்றின் தன்மைகளை வியந்து மொழிந்தான். மருதோன்றிச் சாயம் தோயாமலும் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டாமலும் இயற்கையாகவே பாதங்கள் சிவந்துள்ளன. பஞ்சு மிக மிருதுவானது; வெண் பஞ்சு, செம் பஞ்சு என இருவகை நிறங்களையுடையது. இலவம் பஞ்சு, அனிச்சம் பூ, அன்னத் தூவி முதலியன மெல்லிய நிலையின. மிகவும் மென்மையான இவற்றின் மீது நடந்தாலும் அந்தப் பாதங்கள் வருந்தும். இதோ செவ்விய பஞ்சு பரப்பியுள்ளது என்று தோழிகள் சொன்னாலும் சீதை அடிகள் அஞ்சி அலமரும் என்பார் பஞ்சு எனச் சிவக்கும் மென்கால் தேவி என்றான். சுகபோகங்களையே அனுபவித்துள்ள இத்தகைய சுகுமாரியான சுந்தரியை அந்தச் சுந்தரனிடமிருந்து பிரித்து அநியாயமாய்க் கவர்ந்து கொண்டு வந்துள்ளான் ஆதலால் தேவியைப் பிரித்த பாவி என்று இராவணனைக் கடுத்து வைதான். இராமனது இனிய ஆவியைப் பறித்து வந்தது போல் தேவியை

எடுத்து வந்திருத்தலால் அந்தப் படுபாதகன் அடியோடு அழிந்து போவான் என வயிறெரிந்து வைதிருக்கிறான். நீசமான அந்தப் பாவி கிடந்த குடலிலே பத்து மாதம் இருந்து வந்த உடலையுடையேன் என்று உள்ளம் நொந்து பேசுகின்றான் ஆதலால் வஞ்சனுக்கு இளைய என்னை எனத் தன்னை இன்னவாறு சுட்டி இகழ்ந்தான். கரவாய்ச் சென்று கள்ளத்தனமாக அந்த மெல்லிய வஞ்சியை வஞ்சித்துக் கவர்ந்து வந்தமை கருதி வஞ்சன் என்றான்.

இவ்வாறு இழிந்த வஞ்சனை கொடிய பாவியோடு பிறந்த பாதகன் என்று எள்ளி இகழ்ந்து என்னை அயலே தள்ளி விடாமல் அள்ளியணைத்த அருள் வள்ளல் என இராமனை உள்ளி உருகியிருத்தலால் வருக என்று அருள் செய்தானே? என்று அதிசயம் மீதூர்ந்து வினவினான்.

தன்னை வெறுத்து விரட்டி விடுதற்குக் காரணங்கள் பல இருந்தும் அவ்வாறு செய்யாமல் அருகே அழைத்து வரும்படி அருள் செய்துள்ளமையால் அந்த அதிசய நீர்மையைத் துதி செய்து நின்றான்.

தாழ்சடைக் கடவுள் உண்ட நஞ்சு எனச் சிறந்தேன்.

தஞ்சம் என்று அடைந்த தன்னை இராமன் ஆதரித்துக் கொண்டது சிவ பெருமான் நஞ்சத்தை உட்கொண்டது போலாம் என நெஞ்சம் கரைந்து இங்ஙனம் நினைந்து பேசியுள்ளான்.

நஞ்சம் கொடியது; பொல்லாதது; ஆயினும் சிவபெருமானுடைய கண்டத்தைச் சேர்ந்து கொண்டமையால் எல்லாராலும் பூசித்துத் தொழப் பெற்றது. நஞ்சு போல் தீய அரக்கர் குலத்தில் பிறந்தவன் ஆயினும் இராமனை அடைந்தமையால் யாவரும் புகழ்ந்து போற்றும் பெருமையைப் பெற்றேன் எனத் தன் பேற்றை வியந்து மகிழ்ந்தான்.

நஞ்சு கடவுள் கண்டத்தைச் சார்ந்து உயர்ந்தது.

நான் இராமன் அடியைச் சேர்ந்து உயர்ந்தேன்.

எனத் தான் உய்தி பெற்றதை நினைந்து வீடணன் உவந்திருக்கிறான். உள்ளத்தின் உவகை உரையில் துள்ளியுள்ளது.

நாயகன் அருளின் நாயேன்.

தன்னை அடைக்கலமாக ஆதரித்து ஆட்கொண்ட ஆண்டவனது மேன்மையையும் தனது கீழ்மையையும் இங்ஙனம் கிளர்ந்து கூறினன். நஞ்சு, நாய் என்றது பிறப்பையும் இருப்பையும் குறித்து வந்தது. நன்றியறிவுடன் நின்று என்றும் ஊழியம் புரிந்து வருவேன் என்பது உரைக் குறிப்பால் உணர நேர்ந்தது.

"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்." (நாலடியார்)

நட்புரிமைக்கு நாய் இவ்வாறு மேன்மையாகப் பாராட்டப் பட்டுள்ளது. அந்த நாயகனுக்கு இந்த நாய் என்ன கைம்மாறு செய்யப் போகிறது? ஆயினும் உயிருள்ளவரையும் உண்மையாக உழைத்துவரும் என நுண்மையாக இழைத்திருக்கிறான்.

வானத்து உருளுறு தேரினும் இலங்கைமீது ஓடும்.

அரக்கர் குலம் பாழாய் இராவணனும் அழிந்து படுவான் என்பதை இங்ஙனம் மொழிந்தருளினன். தேரினன் என்றது சூரியனை. இராவணனுடைய அதிகார ஆற்றலுக்கு அஞ்சி இலங்காபுரிமேல் நேரே வராமல் அயல் ஒதுங்கியே ஆதவன் அகன்று போய் வந்தான்.

"இருள்நன் காசற எழுகதி ரவனிற்க என்றும்
அருணன் கண்களும் கண்டிலா இலங்கை."
(இலங்கைக் கேள்வி, 58)

சூரிய சாரதியான அருணனும் இலங்கையை நேரே கண்டதில்லை என இது காட்டியுள்ளது. இங்ஙனம் அதிசய நிலையில் விளங்கியுள்ள இலங்கை மேல் இனிச் சூரியன் தேர் நேரே போக நேரும் என்று அதன் போக்கை நினைந்து கூறினன்.

இராமபிரானல் இராவணன் அழிந்து படுவது திண்ணம்; அவன் அழியவே அச்சம் நீங்கி உச்ச நிலையில் சூரியன் தேரைக் கடாவி இலங்காபுரி மேல் கலங்காமல் போவான் என்பான் தேரினும் இலங்கை மீது ஓடும் என்றான்.

இராவணன் இறந்து பட்ட மறு நாள் சூரியன் நேரே வந்தான். யாவரும் அதிசய மீதூர்ந்து கண்டார்.

"தேர் ஏறி வருகின்றான் தேவர்காணத்
தென் இலங்கை மாநகரின் தெருவினூடே."

என்று அன்று சூரியன் வந்த காட்சியை இங்ஙனம் கூறியிருக்கின்றனர். காரிய விளைவுகள் வீரிய நிலையில் விளங்கியுள்ளன.

"இலங்கையில் ஆதவன் போகக் கண்டான்"

என இராமபிரானை மணவாளதாசர் இவ்வாறு வாழ்த்தியிருக்கிறார். அதிசய வெற்றி துதி செய்ய வந்தது.

தனக்கு அபயதானம் அருளிய வீர நாயகன் பகைவனை அடியோடு வென்று வெற்றி நாதனாய் விளங்குவான் என வீடணன் இப்படி உள்ளக் கிளர்ச்சியோடு உவந்து பேசியுள்ளான். சிறுமையா இகழ்ந்து ஒதுக்க வேண்டியவனை உரிமையாக உவந்து கொண்டானே! என்று உள்ளம் கரைந்துள்ளமையால் உரைகள் பரிவு மீதூர்ந்து வந்துள்ளன.

தீர்வரும் இன்னல் தம்மைச் செய்யினும் செய்ய சிந்தைப்
பேரருளாளர் தத்தம் செய்கையில் பிழைப்பதுண்டோ?

தீர்க்க முடியாத கொடிய துன்பங்களைச் செய்தாலும் பெரியோர்கள் இரங்கி இதமே செய்வார் என இராமனது இனிய நீர்மையை வியந்து இவ்வாறு புகழ்ந்திருக்கிறான். தனக்கு அல்லலும் பழியும் இழைத்துள்ள பொல்லாத பகைவனுடைய தம்பி என்று எள்ளி விலக்காமல் இதம் புரிந்து அணைத்த பெருந்தகைமையை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுகின்றான்.

இன்னா செய்தார்க்கும் இனியன செய்தலே சான்றோர் இயல்பு ஆதலால் அந்தச் சால்புக்கு ஆன்ற நிலையமாய் இராமன் ஈங்கு அமைந்து நிற்கின்றான். அந் நிலைமையை எண்ணி நெடிது வியந்தான். தன்னை அல்லற்படுத்திக் கலக்கியவர்க்கு நல்ல அமிர்தத்தை நல்கிய கடல் போல் இந்தக் கருணைக் கடல் தனக்கு நலம் புரிந்துள்ளது என்பான் ஆர்கலி அமரர் உய்ய அமிழ்து பண்டு அளித்த தன்றே என்றான். ஆர்கலி = கடல். ஆர்வம் மீதூர்ந்து அவசமடைந்து உவகை கூர்ந்து உள்ளம் கரைந்து பேசுகிறான்.

பிறவியும் பெயர்த்தேன்; பின்னும் நரகினில் பிழைப்பதானேன்.

இராமனை அடைக்கலமா அடைந்தமையால் தனக்குக் கிடைத்துள்ள பேறுகளை இவ்வாறு குறித்து உரைத்தான். தீய

அரக்கர் குலத்தில் பிறந்த பாவியாகிய நான் நரகத்திற்குப்போக வுரியவன்; புண்ணிய மூர்த்தியாகிய இராமனை அடைந்தமையால் அதிலிருந்து தப்பிப் பேரின்ப நிலையைப் பெற்றேன் எனப் பெரு மகிழ்ச்சி யுற்றான்.

இன்னவாறு பலவும் உன்னியுணர்ந்து பரவசமாய் உரை யாடி நின்ற வீடணனைச் சுக்கிரீவன் உவந்து நோக்கி "நம் பெருமான் அங்கு எதிர்பார்த்திருப்பர்; நாம் விரைந்து போ வோம்" என்று விழைந்து மொழிந்தான். அவன் உள்ளம் களித்து எழுந்தான்; இருவரும் உவகை மீதூர்ந்து நடந்து வந்தார். அவ் வாறு அவர் வரும்பொழுது இராமன் இருந்த கோலத்தைக் கவி வரைந்து காட்டியுள்ளார்; அந்தக் காட்சியை அயலே காண வருகின்றோம்.

மார்க்கடம் சூழ்ந்த வைப்பின் அங்கதன் மருங்கு காப்ப
நாற்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் நாமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வானைக் கண்டான். (1)

அள்ளிமீ துலகை வீசும் அரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதெண் திரையிற் றாகிப் பிறிதொரு திறனும் சாரா
வெள்ளிய கடலில் மேனாள் விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தான் என்னப் பொலிதரும் பண்பி னானை. (2)

கோணுதற் கமைந்த கோலப் புருவம் போல் திரையும் கூடப்
பூணுதற்கு இனிய முத்தின் பொலிமணல் பரந்த வைப்பில்
காணுதற்கு இனிய நீள வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின் மணிஎன வயங்கு வானை. (3)

படர்மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன ஆரம்தீர் மார்பி னானைக்
கடர்கடை மத்தில் பாம்பு கழற்றிய தென்னக் காசின்
சுடர்ஒளி வலயம் தீர்ந்த சுந்தரத் தோளி னானை. (4)

கற்றைவெண் நிலவு நீக்கிக் கருணையால் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற் றாய முழுமதி முகத்தி னானைப்
பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெறத் தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னி யானை. (5)

வீரனை நோக்கி அங்கம் மென்மயிர்சிலிர்ப்பக் கண்ணீர்
வார நெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் னாகில்

கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி அறநிறம் கரிதோ என்றான். (6)

மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனார் கமலத் தண்ணல் தாதையார் சரணம் தாழ
என்முனார் எனக்குச் செய்த உதவி என்று ஏம்பல் உற்றான். (7)

பெருந்தவம் இயற்றி னோர்க்கும் பேர்வரும் பிறவி நோய்க்கு
மருந்தென நின்றான் தானே வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன் நின்ற தென்னும் இயம்புவ தில்லை தீர்ந்த
அருந்தவம் உடையர் அம்மா அரக்கர் என்று அகத்துட்
[கொண்டான். (8)

கரங்கள்மீச் சுமந்து செல்லும் கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன் கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும் இருநிலத்து இறைஞ்சுகின்றான்
வரங்களின் வாரி அன்ன தாளிணை வந்து வீழ்ந்தான். (9)

அழிந்தது பிறவி என்னும் அகத்தியல் முகத்தில் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னால் புல்லினன் என்று தோன்ற
எழுந்தினி திருத்தி என்னா மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.
(விபீடணன் அடைக்கலப் படலம், 132-141)

இந்தப் பத்துப் பாசுரங்களையும் சத்தமிட்டுப் படித்து உய்த்துணருங்கள். இராமன் அமர்ந்திருந்த உருவக் காட்சியும் அரிய பல உணர்ச்சிகளும் இங்கே பெருகி யிருக்கின்றன. தம் கதா நாயகனை அமையம் வாய்த்த பொழுதெல்லாம் நம் கவி நாயகன் வனைந்து புகழ்ந்து வாயார வாழ்த்தி வருகிறார்.

அலைவாய்க் கரை அருகே இராச கம்பீரமாய் இராமபிரான் அமர்ந்திருக்கிறான். அதிசய அழகோடு துதிகொண்டுள்ள அந்த அற்புத நிலையைக் காவிய ஓவியங்கள் சீவிய ஒளிகளாத் தெளித்துக் காட்டுகின்றன. மானச நோக்கால் மருவி நோக்கினும் உள்ளம் உருகி உணர்ச்சி பெருகி விரிகின்றது.

அயலிடம் எங்கணும் வானர சேனைகள் பரந்து விரிந்திருக்கின்றன. தலைமைச் சேனாதிபதியாகிய அங்கதன் யாண்டும் ஏவல் புரிய நீண்ட ஆவலோடு நிலையாய் நிலவியுள்ளான். வில்லை ஊன்றிய கையனாய் அருகே இலக்குவன் பரிவு மீதூர்ந்து மருவி

நிற்கிறுன். இந்தக் குழுவின் இடையே இராமன் அமைதியாய் அமர்ந்திருக்கிறுன். கரிய கடல் பல செந்தாமரை மலர்களைப் பூத்து அதிசய நிலையில் அமர்ந்திருந்தது போல் பசிய கோலத் திருமேனியனை இக் கோமகன் அங்கே குலாவி விளங்கினன். அரக்கர்கள் புரிகின்ற அல்லல்களை நீக்கித் தம்மை ஆதரித்தருளு மாறு முன்னம் தேவர்கள் தொழுது வேண்டியபொழுது பாற் கடலிலிருந்து பள்ளி நீங்கி எழுந்தது போல் வெள்ளிய மணல் பரப்பில் அன்று அவ்வள்ளல் வயங்கியிருந்த காட்சி எவருடைய உள்ளங்களையும் உருக்கி நின்றது. சீதையின் கண்மணி போல் அக் கார்வண்ணன் கனிந்து தோன்றினன். அந்தச் சுந்தரனு டைய மார்பும் தோளும் இந்திரவில் நீங்கிய மேகம் போலவும் மந்தர மலை போலவும் மருவி எழுந்து பருவ சோதிகளை வீசி நின்றன. பூரண சந்திரன் போல் பொலிவு மிகுந்து முகம் ஒளி சுரந்து விளங்கியது. இந்த நிலையில் அமர்ந்திருந்த இராமனை வீடணன் வந்து கண்டான். காணவே உள்ளம் உருகியது; கண்ணீர் வெள்ளம் பெருகியது; தன் பிறவி தீர்ந்து பேரின்பம் பெற்றவன் போல் நேரே விரைந்து நெருங்கி ஆரா அன்போடு அடியில் விழுந்து தொழுதான். அங்ஙனம் தொழுத அவனை உழு வலன்போடு உவந்து நோக்கி அருகே அமர்ந்திருக்கும்படி பணித்தான். பரவச நிலையில் அவன் உருகியிருந்தான். அன்பு நலன்கள் கனிந்த இந்த அதிசயக் காட்சிகள் எல்லாருக்கும் அங்கே இன்பம் புரிந்து நின்றன.

சரித நிகழ்ச்சிகளைக் கவி எழுதிக் காட்டியிருப்பது விழு மிய நிலைகளை விளக்கியுள்ளது. கருதி புணருந்தோறும் உள்ளம் உருகி உவகை பெருகி வருகிறது.

பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்தது எனப் பொலிவானைக் கண்டான்.

விபீடணன் கண்டபோது இராமன் இருந்த காட்சியைக் கவி இப்படி நமக்குக் காட்டியிருக்கிறுர். வெண்மையான சேனைத்திரள் எங்கும் புடை சூழ்ந்திருந்தது ஆதலால் அது பாற் கடல் என நேர்ந்தது.

ஒரு பொன்மலை வில்லைக் கையில் ஏந்திக் கரிய கடல் அருகே மருவி நின்றது போல் இலக்குவன் அண்ணன் அயலே நின்றுன்

ஆதலால் விற்கை வடவரை பாங்கு நிற்ப என அந் நிலையை இங்ஙனம் அழகு ஒழுக எழுதிக் காட்டினர். வடவரை = வடதிசையில் உள்ள மேருமலை. பாங்கு = பக்கம். உழுவலன்போடு இளையவன் மூத்தவன் அருகே காத்து நின்ற காட்சியைக் கண்டு கண்டு கருதிக் களிக்கின்றோம். மேருமலை என்றது நேர் எவரும் இல்லாத போர்வீரன் என்னும் புலன் தெரிய வந்தது.

தமையன் பாங்கு நின்றவனை இமயமலை என ஈங்கு எத்தியருளினர். எந்நிலையிலும் கலங்காத இணையற்ற துணை பிணையுற்றுள்ள பெற்றியை உய்த்துணரும்படி வெற்றி நிலையில் விளக்கியுள்ளது வீர கம்பீரமாய் விளங்கியுள்ளது.

பால் கடல் புடை சுற்ற, மேருமலை பக்கம் நிற்கக் கார்க் கடல் இருந்தது. கண், கை, கால் முதலிய அவயவங்கள் சிவந்த தாமரை மலர்கள் போல் பொலிந்து விளங்கக் கரிய கோலத் திருமேனியனாய் இராமன் இருந்தான் ஆதலால் கார்க் கடல் கமலம் பூத்தது என இங்ஙனம் வார்த்துக் காட்டினர்.

அவயவ அமைதியும் சமுதாய சோபையும் அதிசய சவுந்தரியங்களாய்த் துதி செய்ய வந்தன. உருவ அழகு உவமை கடந்துள்ளமையால் உருவகம் உரிமையாய் எழுந்தது. கடல் கமலம் என்றதனால் அந்த உடல் எழிலும் குண நிலைகளும் அளவிடலரியன என்பது அறிய நேர்ந்தது.

கமலம் நீரில் மலர்ந்து சீரில் உயர்ந்து விளங்குவதால் நீர்மை நிறைந்த உறுப்புக்களுக்கு நேர்மையாயது.

"கரைபொருது ஒழுகும் காவிரி ஆறே
ஆற்றிடைக் கிடப்பதுஓர் ஐந்தலை அரவே
அரவம் சுமப்பது ஓர் அஞ்சன மலையே
அம்மலை பூத்தது ஓர் அரவிந்த வனமே
அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே;

கடல் விளிம்பு உடுத்த கண்ணகன் ஞாலம்
உடன்முழுது அளந்தது ஒரு தாமரையே;
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகீரதி கான்றது ஓர் பங்கேருகமே;
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்

கோவை ஈன்றது ஓர் கோகனகமே;
திருமகட்கு இனிய திருமனை ஆகிப்
பருமணி இமைப்பது ஓர் பதும மலரே;
சடைத்தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப
முடைத்தலை தவிர்த்தது ஓர் முளரிமா மலரே;
ஆங்குமண் டோதரி அணிந்த மங்கல நாண்
வாங்கவில் வாங்கிய வனசமும் ஒன்றே;
விரிந்தபுகழ் இலங்கை வேந்தற்குத் தென்திசை
புரிந்தருள் மலர்ந்தது ஓர் புண்டரீகமே;
மண்டிணி ஞாலமும் வானமும் உட்பட
அண்டம் உண்டு உமிழ்ந்தது ஓர் அம்போருகமே;
கடைசிவந்து அகன்று கருமணி விளங்கி
இடைசில வரிபரந்து இனியவாய் நெடியவாய்
இன்பம் தழீஇய இருபெருங் கமலம்
துன்பம் தழீஇய தொண்டனேனையும்
உவப்புடன் ஒருகால் நோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசு பண்ணினவே."

(திருவரங்கக்கலம்பகம், 73)

இது அரங்கநாதனைத் துதித்தது. கார்க் கடல் கமலம் பூத்தது என நமது கவி நாயகன் அருளியதைக் கருத்தில் வாங்கிக் கொண்டு அஞ்சன மலை பூத்தது அரவிந்த வனமே என மணவாள தாசர் இங்ஙனம் அன்பு மணம் வீசப் பாடியிருக்கிறார்.

அரவிந்தம், தாமரை, பங்கேருகம், கோகனகம், பதுமம், முளரி, வனசம், புண்டரீகம், அம்போருகம், கமலம் எனத் தாமரைக்கு உரிய பரியாய நாமங்களைப் பத்து வகையாகத் தனித்தனியே குறித்து திருமாலின் அவயவங்களை வருணித்து அவற்றின் அதிசயச் செயல்களை விளக்கித் துதி செய்திருக்கிறார். பத்தி வசமாய்த் துதித்துள்ள இதில் அரிய பல சரிதக் காட்சிகளைக் காட்டி யுள்ளார்.

மண்டோதரி மங்கலநாண் வாங்க வில் வாங்கிய வனசம் என இராமபிரானது இடது கையைக் குறித்திருக்கும் அழகைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக. அவளுடைய தாலி அறுபட இவன்

வில்லைக் கோலி எடுத்தது தருமத்தின் வேலி தொகுத்தபடி ஆயது. அரக்கரைக் களைந்து அமரரைப் புரந்தருளச் சிலையெடுத்து வெளி வந்த தலை எடுப்பை இது அதிவிநயமாய் விளக்கிநின்றது.

அலைவாய்க் கரை அருகே விரிந்து பரந்துள்ள வெண்மையான மணல் மேட்டில் கரிய கோலத் திருமேனியனாகிய இக் குலமகன் அமர்ந்திருந்த காட்சி அதிசய மாட்சியாய் விளங்கியிருந்தது.

காணுதற்கு இனிய நீள வெண்மையில் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின் மணி என வயங்குவான்.

இந்தக் கண் காட்சியைக் கருதிக் காணுகிறோம். கவியின் எண் காட்சியை எண்ணி மகிழ்கின்றோம். அகன்று பரந்த வெள்ளைக் கோளத்தின் நடுவே கருவிழி ஒளி செய்துள்ளது போல் வெண் மணலினிடையே கார்வண்ணன் எழில் ஒளி வீசி இனிது அமர்ந்துள்ளான்.

இந்தப் புண்ணிய உருவத்தை அந்தப் புனிதவதி கண்ணினும் உயிரினும் இனிதாகக் கருதி யுருகி மறுகி யிருக்கும் பரிவும் பண்பும் அறிய வந்தன. சீதை கண்ணின் மணி என்றது இருவருடைய நிலைமை நீர்மைகளை எண்ணி யுணர. ஒளி இழந்த விழி போல் இந்த அழகனைப் பிரிந்து அக் குலமகள் நிலை குலைந்துள்ளமை நேரே தெரிய வந்தது. அந்தத் தேவியைக் காண இவன் ஆவி அலமந்திருக்கும் இருப்பையும் குறிப்பாகக் கூர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

கை கால் தோள் மார்பு உருவம் முதலிய நிலைகளை எல்லாம் சொல்லி வந்தவர் முடிவில் தலையைக் குறித்துச் சொல்ல நேர்ந்தார்.

பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெறத் தான்பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னியான்.

சக்கரவர்த்தித் திருமகன் இரத்தின கிரீடம் இன்றிச் சடைமுடியனாயிருப்பதை இப்படிக் காட்டியிருக்கிறார். அரசுரிமையைத் தந்து தன் தந்தை தனக்குச் சூட்ட இருந்த மணிமுடியைத் தம்பி பரதனுக்கு உரிமையுடன் கொடுத்து விட்டுச் சிறிய தாய் பணித்தபடி துறவியாய்ச் சடைமுடியோடு வெளியேறி வந்துள்ள அந்த அதிசய நிலை அரிய பரிவோடு துதிசெய்ய வந்தது.

முடித்தலை சடைத் தலையா யிருந்தாலும் அந்த முகமண்ட லம் பேரெழிலோடு ஒரொளி வீசியுள்ளது என உருகி யுள்ள மையால் போலிகின்ற சென்னியான் என்றார். உருவ அழகில் உள்ளம் பறிபோய் உரையாடி வருகிறார்.

கருணையால் அமிழ்தம் காலும் முழுமதிமுகத்தினன்.

சந்திரனிடமிருந்து சீதள சோதி வீசுகிறது; இராமச்சந்திர னுடைய முகத்திலிருந்து சாந்தமும் கருணையும் எங் தெழிலோடு இனிது மிளிர்கின்றன.

அரிய நீர்மைகளும் இனிய சவுந்தரியங்களும் புனிதமர் மருவி மிளிர இந்தவாறு இனிது அமர்ந்திருந்த இராமனை விபீட ணன் வந்து கண்டான். ஆனந்த பரவசனாய் உள்ளம் உருகி னன். கண்களிலிருந்து வெள்ளம் பெருகி எழுந்தது.

தொழுது விழுந்தது.

உள்ளம் உருகி உயிர் பரவசமாய்க் கண்ணீர் மார்பில் வடிந்து ஓடக் கைகளைத் தலைமேல் கூப்பி வந்த அவன் இராமன் அடியில் விழுந்து பணிந்தான். அவனது அன்பு நிலையை நோக்கி ஆர்வம் மீதூர்ந்து இக் கோமகன் பேருவகை கூர்ந்து அமைதி யோடு கையை நீட்டி அருகே அமர்ந்திருக்கும்படி பணித்தான். விழுந்து பணிந்த அவன் எழுந்து மிகுந்த வணக்கத்தோடு அய லே அமர்ந்தான். கண்கள் நீர்மல்கக் கனிந்திருந்த அவனை இக் கமலக் கண்ணன் உவந்து நோக்கி உறுதி மொழிகளை உரிமை யோடு உரைத்தான்.

வழிந்த கண்ணீரின் மண்ணின் மார்புற வணங்கி.

இராமபிரானுடைய திருவடியில் வீழ்ந்து தொழுதபொழுது வீடணன் உருவம் இருந்த நிலையை இவ்வாறு எழுதிக் காட்டி யுள்ளார். கண்ணீர் மண்ணை நனைத்துள்ளமையால் அவனது அரிய பெரிய அன்பினிலை அறிய வந்தது. பிறவி தீர்ந்து பேரின் பம் பெற்றவனாய் அன்புரிமையோடு அவன் உருகியுள்ளமை யால் ஆனந்தக்கண்ணீர் அவ்வாறு சொரிய நேர்ந்தது. அகத்தே உள்ளம் உருகியுள்ள நிலையைப் புறத்தே பெருகியுள்ள கண்ணீர் வெள்ளம் எல்லாரும் அறிய நேரே வெளிப்படுத்தி நின்றது.

## இராமன் உறுதிமொழி புகன்றது

காதல் மீதூர்ந்து அங்ஙனம் பணிந்தவனை இராமன் கருணை கூர்ந்து நோக்கி எதிரே இருக்கும்படி பணித்து இனிய மொழிகள் கூறினன். அவனுடைய பரிவு அறிவு முதலிய நிலைகளையெல்லாம் கருதியுணர்ந்த இவ் வீர வள்ளல் ஆர்வம் மீதூர்ந்து கூறியது ஆதிசய நிலையமாய்த் துதி செய்ய வந்தது.

ஆழியான் அவனை நோக்கி அருள்சுரந்து உவகை தூண்ட
ஏழினோடு ஏழாய் நின்ற உலகும் என்பெயரும் என்னுள்
வாழுநாள் அன்று காறும் வாள்எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்என்றான்,

வீடணனை நோக்கி இராமன் இவ்வாறு வாக்குத்தத்தம் செய்திருக்கிறான். இது எவ்வளவு விசித்திரமான கொடை! இந்த வீரக் கொடையை விழைந்து நோக்கி நாம் வியந்து நிற்கின்றோம். "வீடண! அதிசய செல்வங்கள் நிறைந்துள்ள இலங்கையின் அரசபதவியை உனக்கே உரிமையாக இன்று நான் தந்துள்ளேன்; உலகம் உள்ள அளவும், என் பெயர் நிலைத்திருக்கும் வரையும் இந்த ஆதிபத்தியத்தை நீ நிலையாய் ஆண்டு அனுபவித்து வருக" என ஆசி புரிந்து அருள்மொழி யாடினன்.

அரிய பெரிய அரச செல்வத்துடன் என்றும் சிரஞ்சீவியாய் இருந்து வாழுக என்று பரிந்து கூறியுள்ள பான்மையும் மேன்மையும் இங்கே ஒருங்கே வெளிப்பட்டுள்ளன.

அருள் சுரந்து உவகை தூண்ட.

என்றது இந்தத் தானத்தை வழங்கும் பொழுது இம்மானவீரன் உள்ளம் இருந்த நிலையை உலகம் அறிய உணர்த்தி நின்றது.

பெருங் கருணையும் பெரு மகிழ்ச்சியும் அகத்தே பொங்கி எழப் புறத்தே இவ்வுரைகள் பொலிந்து வந்திருக்கின்றன.]

வந்தவனுடைய அன்பும் அமைதியும் நீர்மையும் சீர்மையும் இந்தப் பேரருளாளனுடைய உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. பாசம் கனிந்த அந்தக் கவர்ச்சியால் இந்த வாசகங்கள் வந்திருத்தலைச் சிந்தனை செய்து கொள்ளுகிறோம்.

உடன்பிறந்த அண்ணன் இகழ்ந்துதள்ள எள்ளல்மீதூர்ந்து அல்லல் அடைந்து தன்பால் அடைந்துள்ளான் என்று இவ் வள்

ளல் உள்ளம் உருகி உள்ளான். அவ்வுண்மை அருள் சுரந்து என்றதனால் அறிய வந்தது.

தன் தம்பியரைக் கண்ணினும் உயிரினும் இனியராக் கருதி ஒழுகி வருகிற விழுமிய புண்ணிய மூர்த்தி ஆதலால் அயலே ஓர் அண்ணன் தன்னுடைய தம்பியை இன்னல் செய்து இழித்துத் தள்ளியது பெரிய இரக்கத்தை விளைத்தது. தனது இயல்பின் படியே அயலை விழைந்து காண்பது மனித சுபாவமாய் மருவியுள் ளமையால் அம்மருமம் கருமநீர்மையாய் இங்கே கனிந்தெழுந்தது.

தம்பிமாரை வெறுத்து அல்லல் செய்கிற தமையன்மார்களை வேரறுத்து ஒழித்து அந்த அனுசர்களை ஆரருளுடன் புரந்து வரு வதை இவ் வீர வள்ளலிடம் யாண்டும் விழைந்து கண்டு வருகி றோம். இனிய ஆதரவுகள் அரிய நீர்மைகளாயுள்ளன.

உற்ற துணைவனுக்கு ஊறு செய்த வாலியை ஒழித்துக் கிட் கிந்தா ராச்சியத்தை முன்னம் சுக்கிரீவனுக்கு அருளினான்; இங்கே இராவணனை அழித்து ஒழிக்கு முன்னமே இலங்கா ராச்சியத்தை விபீடணனுக்கு வீரதானமாய் வழங்கி யுள்ளான்.

உள்ளதை உவந்து தருபவர் வள்ளல்கள் என இசையோடு வளர்ந்து வந்துள்ளனர். தன்பால் இல்லாததையும் எதிர்நோக்கி அளித்துள்ளமையால் வீர வள்ளல் என விண்ணும் மண்ணும் வியந்து புகழ இத் தீரன் ஈண்டு விளங்கி நிற்கின்றான்.

## வீரக் கொடை

எதிரி பெரிய போர்வீரன். அரிய பல படைவலிகளையுடை யவன். அப்படியிருந்தும் இராவணனை ஒருபொருளாக எண் ணுமல் அவனது அரசுரிமையை முன்னதாகவே தம்பிக்கு இந் நம்பி தானம் செய்திருக்கிறான். வெற்றியில் எவ்வளவு நிச்சயம் இருந்தால் இக் கொற்றக் குரிசில் இவ்வாறு கூறியிருக்க முடி யும்? இந்த வீரப்பாடு வியப்பு மிக வுடையது.

பகைவனை வென்று கொள்ளு முன்னரே அவனுடைய நாடு உன்னுடையதே எனத் தன்பால் வந்தவனுக்கு இவன் அன்பால் அளித்திருக்கிறான். இதில் வீரமும் கொடையும் களி நடம் புரிந்துள்ளதை நாம் களித்துக் காண்கின்றோம்.

"கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்."
(தொல் காப்பியம்)

என ஆசிரியர் தொல்காப்பியனார் கொற்றச் சிறப்பிற்குக் குறித்துள்ள இலக்கணத்திற்கு இவ் வெற்றிக் குரிசில் ஓர் வீர இலக்கியமாய் ஈண்டு விளங்கி நிற்கின்றான்.

கொள்ளார் = பகைவர். தேம் = இடம்.

பகைவர் நாட்டினைத் தான் வென்றுகொள்ளுவதற்கு முன்னதாகவே தனக்கு வேண்டியவர்க்கு அதனைக் கொடுத்தருளும் ஆண்டகைமை எனப் பண்டு நூலில் விதித்த வீரத் திறலுக்குச் சாலும் கரியாய் நின்று ஞாலம் அறிய இக் கோமகன் இங்கே சேமம் செய்துள்ளமை சிந்தனை செய்ய வுரியது.

"ஒன்னார் ஆர்எயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்!" (புறம்)

ஒரு சோழ மன்னனைக் குறித்து ஊன்பொதி பசுங்குடையார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாடியிருக்கிறார். பகைவரது அரண் அவரிடத்திருக்கவும் உம்முடையது எனப் பாவலர்க்குக் கொடுக்கும் வண்மையோய்! என்னும் அத்தன்மை இவண் செம்மையாகத் தெரிய வந்தது.

"மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்னோக் கினரே
நீயே மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண்டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்நோக் கினையே." (புறம்)

"கடலை நோக்கி வரும் நதிகள் போலப் புலவர்கள் உன்னை நோக்கி வருகின்றனர். அவர்க்குக் கொடுத்தற்கு மாற்றார் நாடுகளை நீ நோக்குகின்றாய்!" என ஒரு பாண்டிய மன்னனை நோக்கி இடைக்காடனார் இவ்வாறு பாடியிருக்கிறார்.

தன்னை நோக்கி வந்த வீடணனுக்கு எதிரியினுடைய இலங்கையை நோக்கி இராமன் வாக்களித்திருப்பதை இது நோக்கி வந்துள்ளது. உண்மை நோக்குகள் உலகறிய நின்றன.

சங்க கால இலக்கியங்களையும் நிகழ்ச்சிகளையும் நேரே இராம காவியமும் சரிதமும் தழுவி மிளிர்வதை விழி களிப்ப நோக்கி வியந்து நிற்கிறோம்.

உலகும் என்பெயரும் வாழுநாள் காறும்
இலங்கைச் செல்வம் நின்னதே.

தான் தந்த அரசு திருவுக்கு இவ்வாறு எல்லை தெரியருளினான்.

சிரஞ்சீவியாயிருந்து எப்பொழுதும் செல்வத் திருவுடன் உவந்து வாழுக என்று உரிமை சுரந்து உரைத்தருளினான். தன் பெயர் உள்ள அளவும் என்றதனால் என்றும் நித்திய நிலையில் வீடணன் நிலைத்து நிற்றலை உய்த்துணர வந்தது. இராம நாமம் போல் இலங்கைத்திருவோடு புனிதனாய் விளங்கி அவன் இனிது வாழ்ந்து வர ஏத்தி யருளினான்.

"மின்னிலங்குபூண் விபீடண நம்பிக்கு
என்னிலங்கு நாமத்தளவும் அரசுஎன்ற
மின்னலங்காரன்"

என இந்த வீரக் கொடையை வியந்து பெரியார் பலரும் உவந்து புகழ்ந்துள்ளனர். அடைக்கலம் என்று தன்னைச் சரண் அடைய வந்தவனுக்கு இக் கொடைக் குரிசில் அரசு திருவை அருளியது அதிசய விநோதமாயுள்ளது.

தீயோரை இறந்துபட நூறி நல்லோரைப் புரந்தருள வந்த புண்ணியமூர்த்தி ஆதலால் எண்ணிய திருவை நண்ணியவனுக்கு நேரே கண்ணியமாக் கனிந்து நல்கினான். இராமனுடைய அருளை நாடி வந்தவன் முன்னதாகப் பெரிய பொருளைக் கூடினான்.

இலங்கைச் செல்வம் நின்னதே என்று இராமன் சொன்ன இந்த அருள் மொழியைக் கேட்டதும் அருகே சூழ்ந்திருந்த வானர வீரர்கள் எல்லாரும் ஆனந்தம் மீதூர்ந்து ஆரவாரம் செய்தனர். அரிய செயல் பெரிய மகிழ்வாய் விரிந்தது.

அடைக்கலமாக நாடிவந்த வீடணன் இராமனது பேரருளை நினைந்து பெரு மகிழ்ச்சி அடைந்தான். அந்த ஆனந்த பரவசத்தில் கண்கள் நீர் வாரக் கனிந்து கை குவித்து நின்றான்.

அப்பொழுது இராமன் இலக்குவனை நோக்கி "உன் கையால் இக்கோமகனுக்கு மணிமகுடம் சூட்டுக" என்று இனிது

மொழிந்தான். தான் அளித்த அரசுரிமையை உறுதி செய்யும்படி தன் தம்பி கையால் அந் நம்பிக்கு இந் நம்பி முடி சூட்டச் சொன்னது அன்பு நலங்கனிந்த இன்ப நிலையமாய் நின்றது.

துஞ்சல்இல் நயனத்து ஐய! சூட்டுதி மகுடம்.

இளைய பெருமாளை நோக்கி இராமபிரான் இவ்வாறு கூறியுள்ளான். வனவாச காலத்தில் தன்னைப் பாதுகாத்து வருகிற தம்பியின் நீர்மையை நினைந்து இத் தமையன் உள்ளம் உருகியுள்ளமையை இவ் வுரையால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

விழித்த கண் இமையாமல் இரவு முழுவதும் வில் ஏந்திய கையனாய் அண்ணனைக் காத்து வந்துள்ள இந்த அருமைத் தம்பியின் அன்புரிமையும் பண்பாடும் அதிசய நிலையின.

துஞ்சுதல் = உறங்குதல். நயனம் = கண்.

எவ்வழியும் யாதும் உறங்காமல் செவ்விய சேவை புரிந்து வருகிற அத் திவ்விய நிலைமையை இவ் வழி வெளியாக்கினான். ஐய! என்றது அன்பு கனிந்த அருமை வாசகமாய் வந்தது.

[தன் கையால் நேரே சூட்டாமல் தம்பியைக் கொண்டு வீடணனுக்கு முடி சூட்டச் சொன்னது இந் நம்பியின் விரத நீர்மையை விளக்கி நின்றது. துறவியாய் வனவாசம் செய்து வருதலால் துணைவனை ஏவினான். விரத சீலங்களை எவ் வழியும் உறுதியாகப் பேணி வருகிறான்.] மணிமுடி துறந்து பரதேசியாய் வந்துள்ள சக்கரவர்த்தித் திருமகன் தன்னை அடைந்தவனை ஒரு சக்கரவர்த்தி ஆக்கியிருப்பது மிக்க வியப்பை விளைத்திருக்கிறது.

தான் அருளிய அரச தானத்துக்குத் தம்பியையும் உரிமைப் படுத்திப் பெருமை செய்துள்ளான். அரிய சதுரப்பாடும் பெரிய இராச கம்பீரங்களும் உரை செயல்கள் தோறும் ஒளி செய்து வருகின்றன.

பாதுகை வேண்டியது.

தம்பியை நோக்கி முடி சூட்டுக என்று இந் நம்பி சொல்லவே வீடணன் உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கி "ஆண்டவனே! எனக்கு அரசமுடி வேண்டாம்; தேவரீருடைய திருவடிகளையே முடியாகச் சூட்டியருளுங்கள்" என்றுபடிவீழ்ந்துவேண்டினான்.

களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி என்றான்.

வீடணன் இவ்வாறு வேண்டி நின்றான். கொடிய இராவணனோடு உடன் பிறந்தான் என்ற அந்தப் பழியும் இழிவும் நீங்கி விழுமியனாக முதலில் வழிகோலியருளும்படி விழிநீர் சிந்தி இங்ஙனம் மொழியாடியுள்ளான். தீய தொடர்பை நினைந்து உள்ளம் துடித்திருக்கிறான். தூயவனைச் சேர்ந்தமையால் தனது தீமை நீங்கியது என உவகை ஓங்கியுள்ளது. அவ்வுண்மையை நுண்மையாக உரைகள் தோறும் உணர்ந்து வருகிறோம்.

பரதனுக்குச் சூட்டியபடி தனக்கும் இராமனது பாதுகையைச் சூட்டியருளுக என்பான் இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி என்றான். தன்னை ஆட்கொண்டு அருளும் வகையை இவ்வண்ணம் தொகையாகச் சுட்டி உரைத்தான். மோலி = கிரீடம். கவித்தல் = சூட்டுதல். இளையவன் என உரிமையோடு பரதனைக் குறித்தது பரிவுதோய்ந்து வந்துள்ளது.

இராமனுடைய அடிகள் தோய்ந்துள்ள அந்தச் செருப்பே தன்தலைக்கு மணிமுடி என்று மனம் உருகி வேண்டியிருத்தலால் வீடணனுடைய பத்தி நிலையும் தத்துவத் தலைமையும் உய்த்துணர வந்தன. பேரன்போடு கண்ணீர் சோரக் கை குவித்து நின்ற அவனது உண்மை நிலையை உணர்ந்து இராமன் உள்ளம் உருகினான். உடனே உரைத்த மொழிகள் உவகை ஒளிகளாய் ஒலித்து எழுந்தன.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை.

இராம வாசகமாய் வந்துள்ள இந்தப் பாசுரம் உலக மக்களுடைய உள்ளங்களை என்றும் உருக்கி வருகிறது. ஓதியுணருந்தோறும் யாவரும் பேரன்புடையராய்ப் பேரின்பம் அடைகின்றனர். அன்புநலம் கனிந்து பண்புபல படிந்து இன்ப நிலையமாய் இனிது விளைந்துள்ளமையால் இராமனுடைய குண நீர்மைகள் மனிதவுலகத்தைப் புனிதமாக்கி வருகின்றன. வந்த

வனது உண்மையான அன்பு நிலை தெரியவே உவகை மீதூர்ந்து உரிமை புரிந்தருளினான்.

மணிமுடிபுனைந்து வீடணன் உயர்ந்த அரசனாயிருக்க விரும்பவில்லை; இராமனது திருவடிகளை முடிசூடி அடியவனாகவே வாழ விரும்பினான். பரதனாகவே தன்னை உரிமை செய்து கொள்ளும்படி உளம் உருகி வேண்டினான்.

அவனுடைய உழுவலன்பையும் கெழுதகைமையையும் கண்டு இராமன் கிழமை கொண்டாடினான். "வீடணா! உன் தந்தை தசரதனுக்கு முன்பு நான்கு புதல்வர்கள் பிறந்திருந்தோம்; பின்பு குகன் என்னும் ஒரு குலமகன் தோன்றினான்; ஐந்துபேர் ஆயினோம்; அதன்பின் சுக்கிரீவனோடு ஆறுபேர் ஆயினோம்; இறுதியில் உன்னோடு சேர்ந்து எழுபேர் ஆயினோம்; ஆகவே இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன், குகன், சுக்கிரீவன், விபீடணன் என்னும் எழுபுதல்வர்களைப் பெற்று உன்தந்தை பெரிய புத்திர பாக்கிய சாலியாய் உயர்ந்து விளங்கினான் "என இங்ஙனம் உவந்து மொழிந்துள்ளான்.

நெடுங்காலமாய்ப் பிள்ளைப்பேறு இல்லாமல் மலடனாய் மறுகியிருந்த மன்னர் பிரானுக்கு இன்னவாறு மக்கட்பேறு பெருகிவந்துள்ளமையால் அந்நிலைமையைத் தலைமைப் புதல்வன் உவகைமீதூர்ந்து உரைத்தான். தந்தை மகிழ்ச்சியையே எந்த வேளையும் எண்ணி ஒழுகும் புண்ணிய மைந்தன் ஆதலால் அந்த நிலைமையை நினைந்து வினைந்து புகழ்ந்து மகிழ்ந்தான்.

புதல்வரால் பொலிந்தான் எந்தை என்னாமல் உந்தை என்றது சிந்தனை செய்ய வுரியது. உரிமை அன்பு இதில் ஒளி வீசி யுள்ளது. விபீடணனை உடன் பிறந்த தம்பியாகத் தழுவிக் கொண்டதற்கு விழுமிய சாட்சியாக உந்தை என்றான்.

இராவணன் தம்பி என்ற பழி நீங்கியது.

இராமன் தம்பியாய் விபீடணன் விழுமிய புகழ் எய்தினான்.

தீய அரக்கர் குலத்தில் தோன்றிய அத் தோற்றம் ஒழிந்து தூய சூரிய குலத் தோன்றலாய்ச் சீரிய மேன்மை பெற்றது காரிய நீர்மைக்கு வீரியமாய் உரிமை மிகவுற்றது.

எம்முறை அன்பின் வந்த அகன்அமர் காதல் ஐய!

என இந்தவாறு ஆதரவோடு விடணனை இராமன் விளித்திருக்கிறான். கண்ணீரும் கம்பலையுமாய்த் தன்னை நாடி உள்ளம் உருகி அவன் வந்துள்ளமையால் இவ் வள்ளல் இங்ஙனம் வாய் மலர்ந்தருளினன்.

தரும நீதிகளில் நிலைத்து ஒழுகி வந்தவன் பாவத் தீமைகளுக்குப் பயந்து பாவிகளை வெறுத்து வந்திருக்கிறான். அவ்வாறு வெளியேறினவன் வேறு எங்கும் போகாமல் இங்கே அடைக்கலமாய் அடைந்தது அவனுடைய மனப் பண்பையும் நெறி முறைகளையும் நேரே விளக்கி நிற்கின்றது.

மருவிய மூவருள் இவன் நிலை மறுக்கம் மிக வுடையது.

குகன் எதையும் எதிர்பாராமல் புனிதமான இனிய அன்பால் நெஞ்சம் நெக்குருகி இராமனை நேரே வந்து கண்டு ஆராமை மீதூர்ந்து அவசமாய் நின்றான். அவனுடைய அன்பும் அமைதியும் நேர்மையும் நீர்மையும் தனி மகிமையுடையன. முதலில் வந்த அவன் பின் வந்த இருவரினும் முதன்மை எய்தியுள்ளமையால் மூத்த தம்பியாய் முன்னே வந்தான்.

சுக்கிரீவன் சேர்ந்தது விசித்திர கதியில் நேர்ந்தது.

அனுமானுடைய அதிசய மேதையால் இராமனை அடையும் பாக்கியத்தைப் பக்குவமாக அவன் பெற்றுக்கொண்டான். பலவகையிலும் பலனை எதிர்பார்த்தே அவன் நண்பன் ஆயினன். ஆனாலும் அவனுடைய நட்பு நாளடைவில் திட்பம் மிகப் பெற்றுத் திவ்விய நிலைமையை அடைந்தது.

விபீடணன் வந்துள்ளது முன்னே குறித்த இருவரினும் வேறுபட்டது. அன்போடு அடைக்கலம் புக வந்திருக்கிறான். இராமனைத் தரும மூர்த்தி ஆகவே கருதி உருகி மறுகி அடைந்துள்ளான். அவனது மன மறுக்கம் இனவுரிமையால் நேர்ந்தது.

பகை இனத்தைச் சேர்ந்த தன்னை இராமபிரான் சேர்த்துக்கொள்ளுவாரா; என்ற ஐயமும் கவலையும் அவன் உள்ளத்தை வாட்டி வந்தன. துணிந்து வந்தான்; அபயம் என்றான்; ஆண்டவன் அருள் புரிந்தான். நீண்ட மந்திராலோசனைகள் நடந்து முடிந்த பின் சுக்கிரீவனை விடுத்து அழைத்து வரும்படி பணித்த

பொழுது ஆனந்த அதிசயத்தால் அழுது தொழுது உழுவலன் போடு உருகி வந்து அடியில் விழுந்து அவசமாய்க் கிடந்தான்.

அவனது நிலைமை நீர்மைகளை நோக்கி இராமன் நெஞ்சம் உருகினன். சிறந்த அரசர் குலத்தில் பிறந்தவன் அண்ணனால் அல்லலடைந்து அவலமாய்க் கவலை தோய்ந் துள்ளமையைக் கண்டதும் கருணைக் கடலான இராமன் உருகி உபசரித்து உவகை யுரையாடி உறுதி நலங்களை உவந்தருளினன்.

இலங்கையின் அரச செல்வமும் ஆட்சியும் உலகம் உள்ள அளவும் உனக்கே உரிமை ஆயின; மணிமுடி தரித்து மன்னர் பிரானாய் வாழுக என இன்னருள் சுரந்து இனிது பகர்ந்தான்.

அந்த அரசபதவியினும் உனது திருவடியே எனது முடிக்கு அணியாம்; அதனை அடிமைக்குச் சூட்டியருளுக ஆண்டவனே! என்று நீண்ட கையால் நெடிது தொழுது அவன் வேண்டி நிற் கவே இந்த ஆண்டகை அவனது அன்பு நிலை தெரிந்து அருள் சுரந்து ஆர்வம் மீதூர்ந்து உரிமையோடு தழுவினன்.

வெப்பி வந்த அவனைத் தன் தம்பி என்று இந் நம்பி உரிமை கனிந்து உழுவலன்புடன் தழுவி மொழிந்ததைக் கேட்டதும் அனைவரும் அதிசயமடைந்து ஆனந்த மீதூர்ந்து நின்றனர்.

பாதுகை சூடியது.

உடன் பிறந்த தம்பிகளுள் ஒருவன் ஆகத் தன்னை உவந்து கொண்டதை நினைந்துமகிழ்ந்து விபீடணன் நெஞ்சம்உருகினன். உடனே இராமனுடைய பாதுகைகளை விழைந்து எடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொண்டு உழுவலன்போடு தொழுது நின்றான். அந்த நிலையை நோக்கி யாவரும் வியந்து மகிழ்ந்தார்.

திருவடி முடியில் சூடிச் செங்கதிர் உச்சி சேர்ந்த
அருவரை என்ன நின்ற அரக்கர்தம் அரசை நோக்கி
இருவரும் உவகை கூர்ந்தார்; யாவரும் இன்பம் உற்றார்;
பொருவரும் அமரர் வாழ்த்திப் பூமழை பொழிவதானார். (1)

ஆர்த்தன பரவை ஏழும் ஆர்த்தன மேகம் ஆர்த்த
வார்த்தொழில் புணரும் தெய்வ மங்கல முரசும் சங்கும்
தூர்த்தன கனக மாரி சொரிந்தன நறுமென் சுண்ணம்
போர்த்தது வானத் தன்றங் கெழுந்தது துழனிப் பொம்மல்

மொழிந்தசொல் அமிர்தம் அன்னாள் திறத்தினின் முறைமைநீங்கி
இழிந்தஎன் மரபும் இன்றே உயர்ந்ததென் றிடரில் தீர்ந்தான்
செழுந்தனி மலரோன் பின்னை இராவணன் தீமைச் செல்வம்
அழிந்ததுஎன்று அறனும் தன்வாய் ஆவலம் கொட்டிற்றன்றே.

இன்னதோர் செவ்வித்தாக இராமனும் இலங்கை வேந்தன்
தன்னெடும் செல்வம் தானே பெற்றமை பலரும் கேட்பப்
பன்னெடும் தானை சூழப் பகலவன் சேயும் நீயும்
மன்னெடும் குமர பாடி வீட்டினை வலஞ்செய் கென்றான். (4)

அந்தமில் குணத்தி னானை அடியிணை முடியி னோடும்
சந்தன விமானம் ஏற்றி வானரத் தலைவர் தாங்க
இந்திரற்கு உரிய செல்வம் எய்தினான் இவன்என்று ஏத்தி
மந்தரத் தடந்தோள் வீரர் வலஞ்செய்தார் தானை வைப்பை (5)

தேடுவார் தேட நின்ற சேவடி தானும் தேடி
நாடுவான் அன்று கண்ட நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கிமேல் அமரர் ஆவார்
கூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர் சொல்லீர்! (6)

இற்றைநாள் அளவும் யாரும் இருடிகள் இமையோர் ஞானம்
முற்றினார் அன்பு பூண்டார் வேள்விகள் முடித்து நின்றார்
மற்று மாதவரும் எல்லாம் வாள்எயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்றார் என்று வியந்தனர் பெரியோர் எல்லாம்.(7)

இராமனது பாதுகையைத் தலையில் சூட்டிக்கொண்டு உழுவலன்போடு விழி நீர் மல்க விபீடணன் நின்றபொழுது நிகழ்ந்த நிலைகளை இங்ஙனம் வியந்து காண்கின்றோம். நிகழ்ச்சிகள் அதிசய வியப்புகளாய் விரிந்து விளைந்திருக்கின்றன.

[இராவணன் தம்பி இராமன் தம்பியாய் மாறியதற்கு அடையாளமாகப் பரதனைப் போல் அவனது பாதுகையைத் தலையில் தாங்கி நிலையில் நெஞ்சுருகி நின்றான்.] அவ்வமையம் மங்கலக் குறிகள் எங்கும் பொங்கித் தோன்றின. பிரமாவும் உள்ளக் கவலை நீங்கி உவகை மீதூர்ந்தான். தரும தேவதையும் பெரு மகிழ்ச்சி அடைந்தது. அமரர் ஆதி முனிவர் யாவரும் ஆனந்த முடையராய் அதிசய மிகுந்து துதி செய்து நின்றனர். தீமைகள் ஒழிந்தன; நன்மைகள் விளைந்தன என்று சீவகோடிகள் யாவும் ஆவல் மீதூர்ந்து ஆர்த்துக் களித்தன.

தன் வழிமுறையில் வந்த இராவணன் செல்வச் செருக்கால் உலகில் பல அழிதுயர்களைச் செய்தான். முடிவில் மகா பதிவிரதையான சீதையைக் கவர்ந்து வந்து கொடிய தீவினையாளனுயினுன். அதனுல் இழிவுகள் நேர்ந்தன; அந்த ஈன இழிவுகளை எண்ணி மானமோடு மறுகியிருந்த பிரமன் இன்று விபீடணனுடைய நிலைமையைக் கண்டதும் பெருமகிழ்ச்சி அடைந்தான்; தன் மரபுக்கு நேர்ந்த இழிவை நீக்கிய விழுமிய குலமகன் என அவனை விழிகளித்து நோக்கி உளம்மிக உவந்தான்.

இழிந்த என்மரபும் இன்றே உயர்ந்தது என்று
செழுந்தனி மலரோன் இடரில் தீர்ந்தான்.

இங்ஙனம் பிரமன் சிந்தை மகிழ்ந்துள்ளான். ஒரு குலத்தில் இழிவு நேர்ந்தால் அந்தக் குலத்தலைவனுக்குப் பெரிதும் வருத்தமாம். தீயகுலம்; கொடியகுலம்; இரக்கம் அற்றகுலம் என இன்னவாறு அரக்கர் குலம் இராவணனுல் பழிக்கப்பட்டு வந்தது; இதுவரை அவ்வாறு பழிபடிந்து வந்த அம்மரபு இன்று அதிசய மாறுதலடைந்த விபீடணனுல் இனிமேல் புதிய புகழ் மிகுந்து யாண்டும் துதிசெய்யப்படும் என்று விதி மதி மகிழ்ந்திருத்தலைக் கவி இங்கே நமக்குக் காட்டி யிருக்கிருர்.

வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்.

என்று இராவணன் யாண்டும் குலப் பெருமை பாராட்டி வந்தான்; [அவனது கொடுமையால் நாளடைவில் அம் மரபு கொடியதாய்ப் பழியடைந்து வந்தது; இறுதியில் சீதைக்கு இழைத்த துயரால் பெரும்பழி மிகுந்து அது பெரிதும் இழிந்தது ஆதலால் "அமிழ்தம் அன்னுள் திறத்தினின் முறைமை நீங்கி இழிந்த என் மரபு" என்று இழிவின் மூலத்தை இங்ஙனம் கழிவிரக்கத்தோடு கருதி மொழிந்தான்.]

இவ்வாறு பழியோடு இழிவடைந்த அந்த மரபு விபீடணனுல் ஒளி மிகுந்து உயர்வடைந்தது என்பான் இன்றே உயர்ந்தது என்று உவகை கூர்ந்தான். தரும மூர்த்தியான இராமனைச் சேர்ந்தமையால் வீடணன் தருமவான் ஆயினுன்; ஆகவே அவன் பிறந்த மரபும் மகிமையாய் உயர்ந்தது என உவந்து நின்றுன்.

இராவணன் தீமைச் செல்வம் அழிந்தது என்று
அறனும் தன்வாய் ஆவலம் கொட்டிற்று.

இராமனிடம் வீடணன் வந்து சேர்ந்தது இராவணன் அழிந்து ஒழிதற்கு ஆதரவாய் அமைந்துள்ளமையால் தரும தேவதை இவ்வாறு பெருமகிழ்ச்சி அடைந்தது.

இராவணன் புரிந்து வந்துள்ள தீமைகளை நினைந்து அறக் கடவுள் மறுக்கமுற்றிருத்தலை உரைக் குறிப்புகள் உணர்த்தி நின்றன. தீமைகள் நீங்கிவிடும்; இனி நன்மைகள் ஓங்கி வரும் என்று தருமம் களி கூர்ந்துள்ளமையால் மேல் விளையும் கருமங்கள் கருதியுணர வந்தன.

## பவனி வந்தது

இங்ஙனம் யாவரும் உவகை கூர மேவிய வீடணனை இராமன் மேன்மை மிகச் செய்தான். தான் அருளிய அரசபதவியை உறுதி செய்யும்படி உரிமைகள் புரிந்தான். வீடணனை அழகிய ஒரு விமானத்தில் ஏற்றிச் சேனைகள் தங்கி யிருக்கும் பாசறையைச் சுற்றிப் பவனிசெய்து வரும்படி துணைவர்களிடம் உரைத்தான். அனைவரும் அவ்வாறே மனம் மிக மகிழ்ந்து மரியாதை வரிசைகள் செய்தனர். மங்கல ஒலிகள் எங்கணும் முழங்கின. "இலங்கை வேந்தன் வாழ்க; இந்திர திருவன் வாழ்க; வீடண சக்கரவர்த்தி வாழ்க" என இன்னவாறு ஆர்வம் மீதூர்ந்து ஆரவாரங்களைச் செய்து வானர வீரர்கள் வாழ்த்தித் தாங்கிவரப் பாடி வீட்டினை வலம் செய்து வந்தனர்.

மகுடமுடி சூடி ஒரு மன்னர் பிரானை மகிமைப்படுத்துவது போல் மாட்சிமை செய்து கொண்டு வந்தார். பவனி முடிந்து வந்ததும் இராமன் அடியில் முடிபட விழுந்து தொழுது எழுந்து கைகுவித்து உழுவலன்புடன் விபீடணன் உருகிநின்றான். அவனை உவந்து நோக்கித் தன் அருகே யிருக்கும்படி இராமன் உரிமை கூர்ந்து பணித்தான். அவன் பணிவுடன் அமர்ந்திருந்தான்.

திருமாலின் திருவடி தோய்ந்து வந்துள்ளமையால் கங்கை புண்ணிய நதி ஆயது. அதில் நீராடுகின்றவர் பாவங்கள் நீராய் ஒழியும். அந்த ஆதிமூல நாதனே உலகில் நீதி பரிபாலனம் செய்ய இராமனாய் இங்கு வந்துள்ளான். இந்த வீரமூர்த்தியின்

திருவடியை நேரே தோய்ந்து விபீடணன் பெருமகிமை பெற்றுள்ளான் ஆதலால் அவனது புண்ணியப் பேறு எண்ணி அளவிடலரிது என விண்ணவரும் மண்ணவரும் வியந்து புகழ்ந்து உவந்து நின்றனர்.

இலங்கை வேந்தன் பெற்றது ஆர் பெற்றார்?

விபீடணனுடைய பேற்றை வியந்து இங்ஙனம் போற்றியுள்ளனர். இலங்கைச் செல்வம் நின்னதே என்று இராமன் சொன்னபடியே அவன் மன்னர்பிரான் ஆயினன் என உலகம் முழுவதும் உவந்து கொண்டாடியுள்ளது. சத்திய வாக்கியன் ஆதலால் இந்த உத்தம வீரன் உரைத்தபடியே அவன் உறுதியாய்ப் பெற்றவனாயினன்.

ஊரை விட்டு அநாதியாய் ஓடி வந்தவன் உலகத்தை ஆளும் பேரரசன் ஆயது பெருவியப்பாயுள்ளது. "இலங்கையில் இராதே; அயலே ஓடிப்போய்விடு" என்று உடன் பிறந்த அண்ணன் சினந்து வெருட்டி வெளியே துரத்தினன். பரதேசியாய் வெளியேறிய அவன் இராமனிடம் வந்து அபயம் புகுந்தான். அவனை உரிமைத் தம்பியாகத் தழுவி அணைத்து ஆதரித்து இருத்தி இலங்காராச்சியம் முழுவதையும் தனியுரிமையாகத் தந்தருளினன். நேர்ந்துள்ள நிகழ்ச்சிகள் அதிசய விசித்திரங்களாய் விளைந்திருக்கின்றன.

பெரியோர்களை அன்போடு வந்து தரிசித்தவர் அரியபெரிய செல்வங்களை அடைந்து இருமையும் பெருமை பெறுவர் என்பதை இச்சரிதம் உரிமையாக உணர்த்தியுள்ளது. இலங்கை ஆட்சியைத் தம்பிக்கு வழங்கிய இம் மாட்சியை ஓர் அதிசய வீரக் காட்சியாக வீரவுலகம் வியந்து கொண்டாடி வருகிறது.

கல்லும் கருங்கட் பெண்ணாக நடந்த கமலக் கழற்காலோன்
மல்லார் தடந்தோள் வீடணனை மதிநூற் றுறைபோமாருதிதன்
சொல்லால் தேறி இலங்கை நகர்க்குஇறைநீஎன்னச்சுடர்பரப்பி
எல்லோன் போல இருள்துருவும் எரிமா மவுலி சூட்டினன்
(கூர்மபுராணம்)

இராமன் வீடணனுக்கு அளித்த இலங்கைச் செல்வத்தைக் குறித்து இன்னவாறு நூலோரும் மேலோரும் புகழ்ந்து கூறியுள்ளனர். அரிய பெரிய திருவை எளிதே அருளியுள்ளான்.

இது துணிவான பெரிய வீரக் கொடை ஆதலால் யாவரும் வியந்து போற்றுகின்றனர். எவரும் அஞ்சி அயரத் தக்க அரிய செயலை உல்லாச விநோதமாய் இராமன் உவந்து செய்திருக்கிருன். வீரச் செயல்கள் வியத்தகு நிலையின.

"Always do what you are afraid to do."

"செய்ய அஞ்சுகின்றதை எப்பொழுதும் நீ நெஞ்சம் துணிந்து செய்" என்று கிரீஸ் தேசத்து ஒரு வீர தளபதி தன் மகனுக்கு இவ்வாறு கூறியிருக்கிருன். அரிய செயல் மனிதனைப் பெரிய வீரனுக்கி வருகிறது.

பகைவனை வெல்லுமுன்னரே அவனது அரச செல்வத்தைத் தன்னை அடைந்த அன்பனுக்கு அருள் புரிந்து கொடுத்த அரிய கொடை வீரம் இராமனிடம் இங்கே பெரிய மகிமையை விளைத்துள்ளது. காரிய விளைவு வீரிய ஒளியை வெளி வீசி நின்றது.

இவ் வீர வள்ளல் உரிமைத் தம்பியாத் தழுவிக் கொண்ட வீடணனை ஆகரித்து அமைச்சர்களோடு தனியே இருக்கச் செய்தான். புதிதாய் வந்து சேர்ந்துள்ளவனது குண நீர்மைகளை நினைந்து அனைவரும் மனம் மகிழ்ந்திருந்தனர்.

## அந்தி வந்தனை

அன்று பொழுது அடைந்தது. அடையவே இராமன் சந்தி வந்தனைகளை முடித்துத் தனியே தங்கியிருந்தான். சேனைகள் உணவுகள் கொண்டு வினை விளைவுகளை அளவளாவியிருந்தன. அன்று சுக்கில பட்சம் ஆதலால் சந்திரன் உதயமாயினன். நிலவு எங்கும் விரிந்து பரந்தது. அந்த நிலைமைகளைக் கவி கலை நலங்கனிய வருணித்திருக்கிருர். சரித நிகழ்ச்சியில் காவிய வருணனைகள் அறிவின் சுவைகளாய் உவகைகளை விளைத்து வருகின்றன. சில அயலே காணவருகிறேம்.

## சந்திர உதயம்

ஒன்றும் உட்கறுப்பினேடு ஒளியின் வாள்உரீஇத்
தன்றனி முகத்தினுல் என்னைத் தாழ்த்தற
வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன்
என்றது போலவந்து எழுந்தது இந்துவே. (1)

நிலவின் நிலை

கண்ணிணை அப்புறம் கரந்து போகினும்
பெண்ணிறம் உண்டெனின் பிடிப்பல் ஈண்டென
உண்ணிறை நெடுங்கடல் உலகம் எங்கணும்
வெண்ணிற நிலவெனும் வலையை வீசினான். (2)

தென்றல் வீசியது

மன்றல்வாய் மல்லிகை எயிறு வண்டினம்
கன்றிய நிறத்தது நறவின் கண்ணது
குன்றின்வாய் முழையினின்று உலாய கொட்பது
தென்றல் என்று ஒருபுலி உயிர்த்துச் சென்றதால். (3)

மன்மதன் மதுகை.

கரத்தொடும் பாழிமாக் கடல் கடைந்துளான்
உரத்தொடும் கரனொடும் உருவ ஓங்கிய
மரத்தொடும் தொளைத்தவன் மார்பில் மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தது நிலவின் தாரைவாள். (4)

இராமன் நிலை.

உடலினை நோக்கும்இன் னுயிரை நோக்குமால்
இடரினை நோக்கும்மற் றியாதும் நோக்கலன்;
கடலினை நோக்குமக் கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்தன் சிலையை நோக்குமால். (5)

பணிபழுத் தமைந்தபூண் நலத்திற் பண்பினால்
பிணிபழுத் தமைந்ததோர் பித்தின் உள்ளத்தான்
அணிபழுத் தமைந்தமுத் தரும்பு செம்மணி
மணிபழுத் தமைந்தவாய் மறக்க வல்லனோ? (6)

மந்திரித் துணைவர்கள் அயலகன்றபின் இரவில் தனியே இருந்த இராமநாதனது மன நிலைமைகளை இங்கே மறுகிக் காண்கின்றோம். தேவியைப் பிரிந்த துயரம் ஆவியை வருத்த அலமந்திருக்கிறான். பகலில் நண்பர்களோடு அளவளாவி யிருந்தமையால் பிரிவின் துயரம் உள்ளத்தைத் தாக்கவில்லை. தனியான போது இனிய மனைவியின் நினைவுகள் உயிரை வாட்ட நேர்ந்தன. பேரழகியோடு மருவி அரிய சுகபோகியாய் வாழ்ந்து வந்தவன்

ஆதலால் அந்த இன்ப ரசங்கள் பிரிவு நிலையில் துன்ப விளைவுக ளாய்த் தொடர்ந்து தோன்றின. பிரிந்த காதலர்க்குச் சந்திர உதயம் மிகுந்த விரகதாபத்தை விளைத்து வருதலின் அதனைக் கவி கற்பனைக் காட்சியோடு அற்புதமாக் காட்டியருளினர்.

முகத்தின் விழுமிய அழகால் தன்னைத் தாழ்த்தி வென்ற சீதையின் கணவனை வேதனை செய்யவேண்டும் என்று சந்திரன் வெகுண் டெழுந்தான். உள்ளத்தில் கறுத்து ஒளிவாள் வீசி உருத்து வந்தான். சந்திரனிடத்தே தோன்றுகின்ற கரிய களங் கம் இராமனை வெல்ல வேண்டும் என்று அன்று உள்ளம் கொதித்தமையால் நேர்ந்தது எனக் கவி உரைத்திருப்பது உவ கைக் காட்சியாய் விரிந்து நிற்கிறது.

சானகியின் திருமுக எழிலுக்கு எதிர் நில்லாமல் இழி வடைந்து போன சந்திரன் அவளுடைய நாயகன் மீது பழி தீர்க்க நேர்ந்தான். தன்னை அவமானப்படுத்திய வலியவரை அகல விட்டு அவரோடு உறவாயுள்ளவரை உருத்து வருத்த வரு கிற ஊன மானிட இயல்பு ஈண்டு உலகம் அறிய வந்தது.

என்னைமுகத்தினுல்வென்றவள் துணைவனை இன்றுவெல்குவேன்

சந்திரன் உறுதியோடு கருதிவந்த வரவை இது காட்டியுள் ளது. வஞ்சம் தீர்க்க நெஞ்சம் துணிந்து நேரே தோன்றினன்.

அந்த இராச் சந்திரன் இந்த இராமச்சந்திரன் மேல் பழி வாங்க வெளி வந்துள்ளமையை நாம் விழியூன்றி வியந்து பார்க் கிறோம். கால நிலைகளின் மூல விளைவுகள் முன் வந்துள்ளன.

இனிய நிலவொளியை வீசிச் சந்திரன் ஆகாயத்தில் விளங் குவதைக் கண்டதும் இச் சுந்தரன் உள்ளத்தில் காதலியின் நினைவு கதித்து எழுந்தது. நோதல்மிக அடைந்து நொந்து தவித் தான். ஆதரவின்பங்கள் அருந்துயரங்களாயின.

இந்த இயற்கை நிகழ்ச்சியைச் சீவ சுபாவங்களோடு பிணைத்துச் செயற்கையாக மாற்றிக் கலையின் சுவையோடு கற் பனைக் காட்சியை விளைத்திருக்கிறார். உயர்ந்த எழில் நிறைந்த பெண்கள் முகத்திற்குச் சந்திரன் சிறந்த உவமையாய் அமைந் திருக்கிறுன். மதிமுகம், முகமதி என உவமான உருவகங்களுக்கு இலக்கண நூலார் யாண்டும் உவந்து குறித்து வருகிறார். அவ்

வாறு துதிசெய்ய நின்ற மதியும் வெட்கி நாணும்படி சீதையின் முகம் திவ்விய எழிலோடு தேசுமிகுந்துள்ளது. அவ்வுண்மை இங்கே தெளிவாக வெளியாய் நின்றது. இத்தகைய அதிசய அழகியைப் பிரிந்துள்ளமையால் இராமன் வருந்த நேர்ந்தான். இரவு நேரங்களில் தனியே இருக்கும்பொழுது அவளது நிலைமை நீர்மைகளை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி நெடிது மறுகியிருக்கிறான். பிரிவாற்றாமையால் பரிதபித்து வருகிற அந்த அன்புரிமைகளை இடங்கள்தோறும் கவி குறித்துக் காட்டி வருகிறார். அந்தக் காட்சிகளைக் கூர்ந்து பார்த்து நாம் ஓர்ந்து வருகிறோம்.

எதற்கும் அஞ்சாத அதிசய வீரனுடைய நெஞ்சம் நிலை குலைந்து உருகி வருதலால் பிரிந்துள்ள தேவியின் அருமை பெருமைகளை அறிந்து மறுகுகிறோம். அவலத் துயரில் இக் குலமகன் அலமந்துழல்வது உழுவலன்பின் விளைவாயினும் கடுங் காதல் என்றே வெளியுலகம் கருத நேர்ந்தது. கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் பிரிந்தவர் பின்பு ஒருங்கு கூடிப் பேரின்பங்களை நுகர்ந்து வந்தார்; மீண்டும் பிரிந்து பெருந்துயர்க்கடலில் வீழ்ந்து வருந்துகின்றார். இவ் வருத்தம் உலகம் உய்ய நேர்ந்துள்ளமையால் உயர்ந்த குறிக்கோளுடையதாய் வியந்து போற்றப்படுகிறது. கருமவீரனது வாழ்வு கருமநீர்மை தழுவியுளது.

தமது காவிய நாயகனுடைய கவலை நிலைகளை நமது கவி நாயகன் காட்டி வருவதில் காதலின் சுவைகளும் சிருங்கார ரசங்களும் ஒருங்கே ஒளி வீசி வருகின்றன. விரகதாபங்களின் விளைவுகளை விசித்திர நிலையில் விளக்கியருள்கின்றார்.

தென்றல் என்று ஒருபுலி உயிர்த்துச் சென்றது.

இனிய தென்றலைக் கொடிய புலியாக இப்படி உருவகித்துச் செப்படி வித்தை காட்டியிருக்கிறார். காதலிகள் கூடியுள்ள பொழுது நல்ல சுகத்தை விளைத்து வந்த மந்த மாருதம் பிரிவுற்ற சமையம் பெருந்துயரமாய் வளர்ந்துவரும் ஆதலால் அது பொல்லாத புலி என வந்தது. மல்லிகை அரும்புகள் பல்லுகள்; கரிய வண்டுகள் கரும் புள்ளிகள்; மலர்ந்த வாசனையுடைய வாயோடு மலை முழையிலிருந்து உயிர்த்து வருகிறது என்னும் உருவக நிலையால் அதன் நிலைமை நீர்மைகளை நேரே அறியலாகும்.

இரவு நேரம்; சந்திர உதயம்; நிலவு எங்கும் நிலவியுளது; தென்றல் இனிது வீசுகிறது; சந்திரிகையில் தனியே இருந்த இராமச்சந்திரன் தனது அருமை மனைவியை நினைந்து பரிவு மீதூர்ந்து மறுகி யிருந்தான். மதன விதனமாய் இம்மான வீரன் உருகி யிருந்த அந்த நிலைமையைக் கவி உலகமறிய உரைத்தருளினர். உரைகள்தோறும் கலையின் சுவைகள் கனிந்து வருகின்றன.

பெரிய அசகாய சூரனும் காம வேதனையால் வாடியிருத்தலால் காமனது அடலாண்மை அதிசயம் மிக வுடையது என்று வியந்துகுறித்தார். கரும்புவில்லன் எவரையும் துரும்புசெய்கிறான்.

தேவர் அசுரர் என்னும் இருவகைச் சமூகங்களும் ஒருங்கு திரண்டு கடைய முடியாத கடலைத் தான் ஒருவனே தனி நின்று வாலி கடைந்தருளினன்: [அத்தகைய அதிசய வீரனை இராமன் ஒரு பாணத்தால் ஊடுருவ எய்து உயிரை வாங்கினன். அதனல் அற்புத வீரன் என இக் கோமகன் யாண்டும் புகழ் மிகப் பெற்றான். இவ்வாறு அகிலவுலகங்களிலும் எவரும் எதிரில்லாத குல வீரனை இராமனை மலர் வாளியால் நிலை குலைய எய்து மன்மதன் தலைமை மிகப் பெற்றான் என நிலைமையை நினைந்து இரங்க நேரே விளக்கி யிருக்கிறார்.]

மரத்தொடும் தொளைத்தவன் மார்பில் மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தது நிலவின் தாரைவாள்.

இராமன் மார்பில் பாய்ந்துள்ள பாணத்தையும் வாளையும் இது காட்டி யுள்ளது. வாலியின் உரத்தையும், கரன் சிரத்தையும், ஏழு மரத்தையும் தொளைத்து அறுத்து ஒழித்தவன் மார்பை மன்மதன் சரத்தால் தொளைத்திருக்கிறான். வீராதி வீரர்களையும் வெல்ல வல்ல அவனது வீர நிலையைக் கவி இவ்வாறு வித்தக விநயமா வியந்து சொல்லி யுள்ளார்.

தேவியின் பிரிவாற்றமையால் இங்ஙனம் ஆவி அலமந்திருந்த இராமன் சிறிது தேறிப் பலவும் சிந்தனை செய்தான். எய்தியுள்ள இடர்களையும் மேலே செய்ய வேண்டிய செயல்களையும் கருதி ஆலோசித்து உறுதிகளை நாடினன்.

கடலினை நோக்கும்; அக்கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்; தன் சிலையை நோக்குமால்.

உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகளைப் புறத்தில் தோன்றிய இந் நோக்கங்கள் வெளிப்படுத்தி யுள்ளன. தன் உடலை நோக்கி யும், உயிரை நோக்கியும், இடரை நோக்கியும் வேறு எதையும் நோக்காமல் சிறிது போது சோகமாய் அசையாது இருந்த இராமன் பின்பு கடலை நோக்கியும், இலங்கையை நோக்கியும், வில்லை நோக்கியும் ஊக்கி நின்ற காட்சிகளை இங்கே கண்டு நிற்கின்றோம். அக வுணர்ச்சிகளும் புற நிகழ்ச்சிகளும் அதிசய விளைவுகளாய் விரிந்து ஒளி செய்து நிற்கின்றன.

விரிந்து பரந்துள்ள இந்தச் சமுத்திரத்தை விரைந்து கடந்து போய் இலங்கையை வளைந்து அரக்கரை அழித்து இராவணனைக் கொன்று வெற்றி வீருடன் தேவியை மீட்ட வேண்டும் என்று இக் கோமகன் குறிக் கொண்டு ஊக்கி நின்றமையால் கடல் முதலியவற்றை நோக்க நேர்ந்தான். இராவணனை இங்கே கள்வன் என்றது எள்ளி இகழ்ந்துள்ள இழி குறிப்பில் வந்தது.

தன் இன்னுயிர்த் தேவியைத் திருடிக் கொண்டுபோய் வைத்துள்ள அந்தத் திருடனைக் குலத்தோடு அழித்து ஒழிக்க இக் குலவீரன் குறி செய்திருந்த நோக்கத்தை நோக்கால் நோக்கக் கவி இங்ஙனம் ஊக்கி உரைத்துள்ளார்.

தன் சிலையினை நோக்கும் என்றதில் வீர கம்பீரமும் இராச கம்பீரமும் வீறுகொண்டுள்ளதை வியந்து நோக்கி நாம் உவந்து நிற்கிறோம். இத் தோன்றலின் உடலில் தோன்றிய மெய்ப்பாடு கள் உள்ளத்தைத் தோன்றச்செய்து உறுதி நலங்களை உணர்த்தி யுள்ளன. புற நிலை அக நிலையை ஆய்ந்து கொள்ளச் செய்கிறது.

“ஏ கோதண்டமே! நீ என் கையில் இருக்கவும் நான் என் மனைவியைப் பிரிந்து வருந்துகிறேனே! விரைந்து மீட்டி வராமல் வீணே தாமதித்திருக்கிறாயே! உனக்கு மானமும் வீரமும் இல் லையா?” என்று தன் வில்லை நோக்கி வினவியது போல் இவ் வீர வள்ளல் பார்த்த பார்வை ஈண்டு வீறுகொண்டு மீறியுள்ளது. உள்ளக் கவலையிலும் உத்தம வீரம் உறுமி ஓங்கி உயர்ந்து மிளிர் கிறது. கரும நிலைகள் மருமங்களாய் மருவி யுள்ளன.

காதல் அயர்வாய் நோதலை விளைத்து நொந்து தவிக்கச்செய் கிறது; வீரம் உயர்வாய் உறுதியை வளர்த்து மேன்மைகளை விளைத்தருளுகிறது. அரிய பான்மைகள் அறிய வந்தன.

இனிய சுகியாய் வாழ்ந்து வந்தவன் அதனை நினைந்து இன்னலுழந்தாலும் உடனே வீரம் தீரமாய் ஆறுதல் புரிகின்றது.

மணி பழுத்து அமைந்த வாய் மறக்க வல்லனோ?

பவள மணிபோல் சிவந்த அதரங்களுடைய சீதையின் அழகிய வாயை இராமன் நினைந்து நெஞ்சம் உருகுவதைக் கவி நெஞ்சம் இரங்கி இங்ஙனம் வரைந்து கூறியிருக்கிறார். அரிய சுக போகங்களை ஆழ்ந்து அனுபவித்து வந்தவன் அதனை எளிதில் மறந்திருக்க முடியுமா? என்று இப்படி அதி விநோதமா வினவி அனுதாபம் காட்டி உண்மையை வலியுறுத்தியுள்ளார். [மணி வாய் என்றது அதிசய அழகோடு அமைந்துள்ள அதன் குண நீர்மைகளை வியந்து வந்தது. வாயை நினைந்து நோயுழந்துள்ளான்.]

[சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும் என்றபடி அரிய சோடிகளாய் அமைந்து இனிய போகங்களை நுகர்ந்து வந்தவர் பிரிவு நேரவே இருவரும் பெரிய துயரங்களை அடையநேர்ந்தனர். உழுவலன்பு கனிந்த அந்தப் பரிதாப நிலைகளை உரிய இடங்களில் கவி உரிமையோடு காட்டி வருகிறார். நாமும் பரிவோடு கண்டு அன்பின் திறங்களை அறிந்து வருகிறோம்.]

இவ்வாறு அன்புரிமையில் துன்பம் உழந்திருந்த இராமன் பின்பு தேறினன். சுக்கிரீவனும் வந்து ஆறுதல் கூறினன். அதன்பின் ஆகவேண்டிய ஆலோசனைகளைச் செய்தார். எதிரியினுடைய தானம் ஆகிய இலங்காபுரியின் நிலைமைகளை எல்லாம் விபீடணனிடம் வினவியறியவேண்டும் என்று சுக்கிரீவன் தூண்டினன். அவனை அழைத்து வரும்படி இராமன் பணித்தான். விரைந்துபோய் அழைத்து வந்தான். வந்த அவன் உழுவலன்போடு தொழுது நின்றான். இருக்கும்படி குறித்து இலங்கையின் பலவகை நிலைகளையும் தெளிவாகச் சொல்லும்படி கேட்டான். அவன் யாவும் சொல்ல நேர்ந்தான்.

இதிலிருந்து இலங்கைக் கேள்விப் படலம் தொடங்குகிறது.

ஆதியில் இலங்கை நகரம் தோன்றிய சரிதம் முதலியவற்றைத் தொகையாகச் சொல்லிப் பின்பு வகையாக விரித்து விளக்கினன். அந்நிலைகளை எல்லாம் இக் குலமகன் கூர்ந்து கேட்டான்.

இலங்கை வலி தெரிந்தது.

அரண் நிலை, மதிலின் மாட்சி, காவல் வீரர்களின் காப்புத் திறம், யானை குதிரை தேர் காலாள் ஆகிய நால்வகைச் சேனைகளின் பெருக்கம், சேனாதிபதிகளின் தீரம், துணைவர் புதல்வர்களுடைய உக்கிர வீர பராக்கிரமங்கள், இராவணனது அதிசய ஆற்றல்கள், தெய்வீக பலங்கள், திக்குவிசயம் செய்து தானவர் வானவர் மானவர் முதலிய யாவரையும் தலை அடக்கி நிலையாக ஆளும் திறம், எவ்வழியும் யாதும் தொலையாத மூலபலங்களின் வீரப் பிரதாபங்கள் முதலிய எல்லா விவரங்களையும் இனிது விளக்கி அவன் உரிமையோடு உரைத்தான்.

சேனாதிபதிகளுள் மிகவும் தலை சிறந்தவர்களின் நிலைகளை நெஞ்சறிய விளக்கினான். அவருள் சிலரைத் தனியே வரைந்து குறித்தான். அதிசயமுடைய அவரது நிலைகள் அறிய வந்தன.

அகம்பன்

உகம்பல் காலமும் தவம்செய்து பெருவரம் உடையான்
சுகம்பல் போரலால் வேறிலன் பொருபடைத் தொகையான்
நகம்பல் என்றிவை இல்லதோர் நரசிங்கம் அனையான்
அகம்பன் என்றுளன் அலைகடல் பருகவும் அமைந்தான். (1)

நிகும்பன்

பொருப்பை மீதிடும் புரவியும் பூட்கையும் தேரும்
உருப்ப விற்படை ஒன்பது கோடியும் உடையான்
செருப்பெய் வானிடைச் சினக்கிடாய் கடாய்வந்து செறுத்த
நெருப்பை வென்றவன் நிகும்பன்என் றுளன்ஒரு நெடியோன்.

கும்பன்

தும்பி ஈட்டமும் இரதமும் புரவியும் தொடர்ந்த
அம்பொன் மாப்படை ஐயிரு கோடிகொண் டமைந்தான்
செம்பொன் நாட்டுள சித்தரைச் சிறையிடை வைத்தான்
கும்பன் என்றுளன் ஊழிவெங் கதிரினும் கொடியான். (3)

யாககேது

குன்றில் வாழ்பவர் கோடிநா லைந்தினுக்கு இறைவன்
இன்றுளார் பிணை நாளை இலாரென எயிற்றால்
தின்றுளான் நெடும் பன்முறை தேவரைச் செருவில்
வன்று ளானுளன் வேள்வியின் பகைஞன்ஓர் வெய்யோன்.(4)

சூரிய சத்துரு

மண்ணு ளாரையும் வானிலுள் ளாரையும் வகுத்தால்
உண்ணு நாள் ஒருநாளின் என்றுளிர்படைத் தானை
எண்ணின் நாலிரு கோடியன் எரியஞ்ச விழிக்கும்
கண்ணினன் உளன் சூரியன் பகைஎன்றோர் கழலான். (5)

பெரும் பாக்கன்

தேவரும் தக்க முனிவரும் திசைமுகன் முதலா
மூவரும் பக்கம் நோக்கியே மொழிதர முனிவான்
தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன்
மாபெரும் பக்கன் என்றுளன் குன்றினும் வலியான். (6)

வச்சிர தந்தன்

உச்சிரத்தெரி கதிரென உருத்தெரி முகத்தன்
நச்சி ரப்படை நாலிரு கோடிக்கு நாதன்
முச்சி ரத்தயில் தலைவற்கும் வெலற்கரும் மொய்ம்பன்
வச்சி ரத்தெயிற் றவனுளன் கூற்றுவன் மாற்றான். (7)

விரூபாட்சன்

இலங்கை நாட்டன்ன எறிகடல் தீவிடை யுறையும்
அலங்கல் வேற்படை ஐயிரு கோடிக்கும் அரசன்
வலங்கொள்வாட்டொழில்விஞ்சையர்பெரும்புகழ்மறைத்தான்
விலங்கு நாட்டவன் என்றுளன் வெயிலுக விழிப்பான். (8)

இராவணனது சேனைத் தலைவர்களுள் சில பேர்களுடைய நிலைமைகளை இதில் நேரே பார்க்கிறோம். அகம்பன் என்னும் தளபதி அதிசய ஆற்றல்கள் அமைந்தவன். போராடுவதில் பேராசையுடையவன். உக்கிர வீரத்தில் நரசிங்கத்தை ஒத்தவன். கடல்களைக் கலக்கவும் மலைகளை எடுக்கவும் வல்லவன். அசுர வேந்தனை இரணியனைக் கொன்று தொலைத்த நரசிங்கம் என்றே இவனைச் சொல்லவேண்டும்; ஆனால் அந்த மானுட மடங்கலுக்கும் இவனுக்கும் சிலவகையில் வேறுபாடுகள் உண்டு. அதற்கு வக்கிர தந்தங்களும் உக்கிர நகங்களும் இருந்தன; இவனுக்கு அவையில்லை; இவ்வளவே வேற்றுமை. மற்ற அடலாண்மைகளிலும் ஆற்றல்களிலும் அதுபோலவே ஏற்றம்பெற்றிருந்தான் என அவனது வீரத் தோற்றங்களை விளக்கி யுரைத்தான். பல்லும் நகமும் இல்லாத ஓர் நரசிங்கம் என்று சொல்லியுள்ளதில்

சுவை துள்ளியுள்ளது. சேனைத் தலைவர்களை உரைத்து வருவதில் செந்தமிழ்க் கலை செழித்து வருகிறது.

நிகும்பன் என்பவன் ஒன்பது கோடி சேனைகளுக்குத் தலைமைத் தளபதி. அக்கினிபகவானும் அவன் பேரைக் கேட்டால் அஞ்சி நடுங்குவான்; உலகத் தீயை உருத்து வென்றவன்; ஊழித் தீயினும் உயர்வலி படைத்தவன்.

கும்பன் என்பவன் சிறந்த போர் வீரன். பத்துக் கோடி படைகளுக்குத் தலைவன். எத்திசைகளையும் எளிதே வெல்ல வல்லவன். சித்தர் வித்தியாதரர் முதலிய தேவ சாதிகளைச் சித்திர வதைகள் செய்து அவர்களுடைய அரசர்களைச் சிறையில் அடைத்து வைத்துத் துறைகள் தோறும் தோலா வெற்றியனாய் மேலோங்கி யுள்ளவன். வெந்திறல் மிகுந்தவன்.

யாககேது என்பவன் மலையில் வாழுகின்ற வீர சாதிகளுக்குத் தலைவன். இருபதுகோடி போர் வீரர்களை யுடையவன். எமனிலும் கொடியவன். இன்று இருந்தவரை நாளை இல்லை என்று கொன்று தொலைத்துக் கொற்றம் கொண்டாடியுள்ளவன். தேவர்களைப் பலமுறையும் நிலை குலைத்துக் கொலை புரிந்தவன். யாண்டும் அஞ்சாத நெஞ்சுரம் பெற்றவன்.

சூரியசத்துரு என்பவன் அதிசய ஆற்றல்கள் அமைந்தவன். விண்ணவரையும் மண்ணவரையும் ஒரு நாளில் ஒருங்கே உருவழித்துப் பொருதொழிக்க வல்லவன். தீயும் தீய விழிக்கும் திறலினன். மாய வல்லபங்கள் பலவும் உடையவன். உலக சோதியான சூரியனும் அவனுடைய வீரிய விறல்களை வியந்து விலகியிருக்கிறான். ஆதவனையும் ஏதிலன் என இகழ்ந்து இறுமாந்துள்ளவன் ஆதலால் சூரிய சத்துரு என்று யாரும் வியந்து பேசப் பேரும் பெருமையும் பெற்று அவன் பெருமிதம் அடைந்துள்ளான். அவனது அடுந்திறல் ஆண்மைகள் அளவிடலரியன.

பெரும்பாக்கன் என்பவன் அருந்திறலுடையவன். தேவர் முனிவர் முதல் யாவரும் அஞ்சத் தக்க அதிசய வலியினன். சிவன் அயன் அரி என்னும் மூன்று மூர்த்திகளும் அவனுடைய அடலாண்மைகளை வியந்துள்ளனர். பதினாறு கோடி படை வீரர்களுக்குத் தனிப்பெருந் தலைவனாய் அவன்நிலைத்திருக்கிறான்.

வச்சிரதந்தன் என்பவன் பெரிய போர் வீரன். அரிய பல ஆற்றல்கள் அமைந்தவன். கால காலனை சூல பாணியையும் எளிதாக எண்ணிக் களி மீறியுள்ளவன். விழி சினந்து நோக்கின் விண்ணும் மண்ணும் வெருண்டு கலங்கும்படியான வெந்திறலுடையவன். எட்டுக் கோடி சேனைகளுக்குத் தலைவன். கூற்றுவனுக்கு ஓர் கூற்றுவன் என ஏற்றம் மிகப் பெற்றவன். உருவத்தாலும் உறுதி ஆற்றலாலும் உம்பருலகமும் உள்ளஞ்சி ஒடுங்க இம்பரில் ஏற்றம் மிகுந்துள்ளான்.

விரூபாட்சன் என்பவன் மணிபல்லவம் என்னும் கடலிடைத் தீவுக்குத் தனி அரசனாயுள்ளவன். படைக்கலப் பயிற்சியில் உயர்ச்சி மிகவுற்றவன். சென்ற போர்முனைகளில் எல்லாம் வென்றியே கண்டு விறுகொண்டு வந்தவன். யாண்டும் போர் வெறியனாய் நேர் எவரும் இலர் என நெஞ்சம் களித்து நெடிது தருக்கி நிற்பவன். சிறந்த பயிற்சிகளையுடைய எட்டுக் கோடி படை வீரர்களுக்குத் தனியுரிமையான தலைமை வாய்ந்தவன். விஞ்சையர் குலமும் அஞ்சி அலமர அடலாண்மை மிஞ்சி உடலாண்மை ஓங்கி வீரக் கடல் என அவன் விளங்கி நிற்கின்றான்.

இன்னவாறே துன்முகன், தாமிரன், எமகாலன், நாமவேலன், நாசதரன், பிசிகரன், ரணதூரன், நீர்மத்தன், நெருப்பத்தன், நேமிதத்தன் போர்மத்தன், பிரகத்தன் முதலிய சேனாதிபதிகள் பலர் இலங்கைவேந்தனுடைய ஏவல்களை எவ்வழியும் ஆவலோடு செய்ய அல்லும் பகலும் வெல்லும் திறலோடு வீறு மண்டியுள்ளனர். போர் வெறி யாவரிடமும் ஓர் நெறியாயுள்ளது.

போராடலை யன்றி வேறு எதையும் விரும்பாத வீர சூரர்களாய் யாவரும் மேவியிருக்கின்றனர். தேவர் உலகம் யாவும் அஞ்சி ஏவல் புரிய இலங்கை ஆட்சி யாண்டும் நீண்டு எவ்வழியும் அசையாத நிலையில் இசையோடு துலங்கியுள்ளது.

படைகளின் வலிகளையும் படைத் தலைவர்களுடைய நிலைகளையும் இப்படிச் சுருக்கமாகத் தொகுத்து உரைத்துப் பின்பு இராச குடும்பத்தைப் பற்றி விபீடணன் பேச நேர்ந்தான்.

## கும்பகருணன்

தம்பி முற்பகல் சந்திரர் நால்வரில் தயங்கும்
கும்ப மாக்கரிக் கோடிரு கைகளால் கழற்றிச்

செம்பொன் மால்வரை மதம்பட்ட தாமெனத் திரிந்தான்
கும்ப கன்னன்என் றுளன்பண்டு தேவரைக் குமைத்தான்.

இந்திரசித்து

கோளிரண்டையும் கொடுஞ்சிறை வைத்தவக் குமரன்
மூளும் வெஞ்சினத் திந்திர சித்தென மொழிவர்
ஆளும் இந்திரற்கு அன்னவன் பிணித்ததற் பின்னைத்
தாளு மார்பினும் தோளினும் உளஇளம் தழும்பு. (2)

அதிகாயன்

தன்னையும்தெறும் தருமம்என்று இறைமனம் தாழான்
முன்னவன் தரப் பெற்றதோர் முழுவலிச் சிலையன்
அன்னவன் தனக்கு இளையவன் அப்பெயர் ஒழிந்தான்
பின்னோர் இந்திரன் இலாமையால் பேர் அதிகாயன். (3)

தேவராந்தகன்

தேவராந்தகன் நராந்தகன் திரிசிரா என்றும்
மூவராந்தகை முதல்வராம் தலைவரும் முனையில்
போவராந்தகை அழிவராம் எனத்தனிப் பொருவார்
ஆவராந்தகை இராவணற்கு அரும்பெறற் புதல்வர். (4)

இராவணன் இறைமை

இனைய தன்மையர் வலியிஃது இராவணன் என்னும்
அனையவன் திறம் யானறி அளவெலாம் அறைவேன்
தனையன் நான்முகன் தகைமகன் சிறுவற்குத் தவத்தால்
முனைவர் கோன்வர முக்கணான் வரத்தொடும் உயர்ந்தான்.

எள்ளில் ஐம்பெரும் பூதமும் யாவையும் உடைய
புள்ளி மானுரி ஆடையன் உமையொடும் புணர்ந்த
வெள்ளி யம்பெரும் தடங்கிரி வேரொடும் வாங்கி
அள்ளி விண்தொட எடுத்தனன் உலகெலாம் அனுங்க (6)

குலங்க ளோடும்தம் குலமணி முடியொடும் குறைய
அலங்கல் வாள்கொடு காலகேயரைக் கொன்ற தற்பின்
இலங்கை வேந்தன்என் றுரைத்தலும் இடியுண்ட அரவின்
கலங்குமால் இனும் தானவர் தேவியர் கருப்பம். (7)

குரண்டம் ஆடுநீர் அளகையின் ஒளித்துறை குபேரன்
திரண்ட மாடும் தன்திருவொடு நிதியமும் இழந்து

புரண்டு மான்திரள் புலிகண்ட தாமெனப் போனான்
இரண்டு மானமும் இலங்கைமா நகரமும் இழந்து. (8)

புண்ணும் செய்தது முதுகெனப் புறங்கொடுத் தோடி
உண்ணும் செய்கையில் தசமுகக் கூற்றம்தன் உயிர்மேல்
நண்ணும செய்கைய தெனக்கொடு நாடொறும் தன்னுள்
எண்ணும் செய்கையன் அந்தகன் தன்பதம் இழந்தான்.(9)

என்றுலப்புறச் சொல்லுகேன் இராவணன் என்னும்
குன்றுலப்பினும் உலப்பிலாத் தோளினான் கொற்றம்
இன்றுலப்பினும் நாளையே உலப்பினும் சிலநாள்
நின்றுலப்பினும் நிலைக்கன்றிப் பிறர்க்கென்றும் தீரான்,(10)

(இலங்கைக் கேள்விப்படலம்)

இராவணனுடைய தலைமை நிலைமைகளைக் குறித்து விபீடணன் இவ்வாறு உரைத்திருக்கிறான். உரைகளில் பொதிந்துள்ள குறிப்புகள் அரிய வியப்புகளையும் பெரிய விம்மிதங்களையும் விளைத்து நிற்கின்றன. அரண் வலி, படைச் செருக்கு, சேனைத் தலைவர்களின் அதிசய வீரத் திறல்கள் முதலியன ஆச்சரியங்களை விளைத்து அச்சங்களை ஊட்டி உச்ச நிலைகளில் ஓங்கி நிற்றலை முன்னே கண்டோம். பின்னர் அம்மன்னர் பிரானுடைய தம்பி புதல்வர்களுடைய அதிசய ஆற்றல்களை அறிய நேர்ந்துள்ளோம்.

எதிரி நிலை உரைத்தது

தான் வந்து அடைக்கலம் புகுந்துள்ள இராமனிடம் இலங்காதிபதியின் அருந்திறலாண்மைகள் பெரும் போர் வீரங்கள் ஆட்சிகள் மாட்சிகள் முதலிய நிலைகளை யெல்லாம் விபீடணன் யாதும் ஒளியாமல் தெளிவாக உரைத்திருப்பது விழியூன்றியுணர வுரியது. உரையுள் அவனுடைய உள்ளத்தை ஓர்ந்து காண்கிறோம்.

இராவணன் என்னும் அனையவன் என்று தொடங்கியுள்ளது வினயம் மிக வுடையது. உடன் பிறந்த அண்ணன் என்பதை அறவே மறந்து பிறவி வாசனை தீர்ந்துள்ளான் என்பதை இவ்வுரையால் உணர்ந்து கொள்ளுகின்றோம். அந்நிய நோக்கம் மன்னிய நோக்கமாய் மருவி வந்தது.

இராமனோடு உடன் பிறந்த தம்பியாகவே உழுவலன்பு மண்டி உரிமை கொண்டாடி யுள்ளான். இருந்தாலும் எதிரியி

னுடைய பெருமைகளை உண்மையோடு நேர்மையாகவே கூறியிருக்கிருன்.

"அருள் அரசே! இலங்கேசனுடைய பெருமித நிலைகள் அளவிடலரியன. ஆயினும் நான் அறிந்த அளவு கூறுகின்றேன்: பிரமதேவனையும் சிவபெருமானையும் நோக்கி அரிய தவங்களைச் செய்து பெரிய வரபலங்களை அடைந்துள்ளான். தேவர் யாவரும் ஏவல் செய்ய மூவுலகங்களையும் ஏகபோகமாக ஆளுகிருன். பஞ்ச பூதங்களும் அவனுக்கு அஞ்சி ஒடுங்கி அடங்கி நடக்கின்றன. பார்வதியோடு பரமேசுரன் எழுந்தருளியிருந்த வெள்ளி மலையை வேரோடு அள்ளி எடுத்த அதிசய வலியினன். எத்திசைகளிலும் சென்று தனது வெற்றிக் கொடியை நாட்டித் திக்குவிசயம் செய்து வந்துள்ளவன். திக்கு யானைகளும் தந்தங்கள் முறிந்துபட வெற்றி வீறுேடு விளங்கி நின்றவன். காலகேயர் என்னும் அசுர வீரர்களை அடியோடு வென்றவன். இராவணன் என்ற பெயரைக் கேட்டால் இடி முழக்கம் கேட்ட அரவினங்கள் போல் தானவர் தேவியர்கள் கருப்பம் கலங்கியுள்ளனர். எவரும் துதி செய்ய அதிசய திருவுடன் வாழ்ந்து வந்த குபேரன் இவனால் வாழ்விழந்து தாழ்ந்து போயினன். அற்புதமான சிறந்த விமானத்தையும், தனது மானத்தையும் இழந்து அன்று அவன் மறுகி ஓடியது என்றும் எவர்க்கும் பரிதாபக் காட்சியாய் நின்றது. ஆதியில் தனக்காகச் சோதிமயமான பேரழகோடு அமைக்கப்பட்ட இலங்காபுரியை இடையே வந்து இவன் கவர்ந்து கொள்ளவே அவன் விரைந்து வெளியேறினன்; இப்பொழுது அளகாபுரியில் ஒதுங்கி வாழ்ந்து வருகிருன். அற்புத நிலையில் அமைந்திருந்த புட்பக விமானத்தையும், நாணத்தையும் இழந்து நகரத்தைப் பறிகொடுத்து ஓடிப்போனன் ஆதலால் இரண்டு மானமும் இலங்கை மாநகரமும் இழந்தான் என அவனது இழவு நிலையை உலகம் அளவுசெய்து கூறி அன்று அழுது நின்றது. இவ்வாறு யாரும் அழப் பேரிழவு செய்துள்ளவன் வலி நிலைகளை யார் அளவிட்டு உரைக்க வல்லார்? எவரையும் நிலைகுலைத்து உயிரைக் கவர்ந்து போகும் எமனும் இராவணன் என்று பேரைச் சொன்னல் நெஞ்சம் குலைந்து நெடிது கலங்குகிருன். அவனது இராசதானியாகிய இலங்கைமீது சூரியனும் நேரே செல்ல அஞ்சி அயல் ஒதுங்கிச் செயல் ஒடுங்கி நாளும்

வணங்கிப் போகின்ருன். வருணனும் வாயுவும் வாய் புதைத்து ஊழியம் புரிகின்றனர். ஆழ்ந்த கடல்கள் அரிய அரண்களாக நேர்ந்திருக்கின்றன. இடவலி படைவலி துணைவலி முதலியன இணையில்லாத நிலைகளில் இசைந்துள்ளன. அவன் பின் பிறந்த தம்பி கும்பகருணன் பெரிய போர் வீரன். உடல் வலியில் எவரும் நிகரில்லாதவன். இந்திரனுடைய பட்டத்து யானை ஆகிய ஐராவதத்தின் தந்தங்களைத் தன் கைகளால் பிடித்து ஒடித்து அயலே எடுத்து எறிந்தவன். தேவர் குலமும் அசுரர் குலமும் அவனை நினைந்தபோதெல்லாம் நெஞ்சம் கலங்கி நெடுந்திகில் கொள்ளுகின்றன. தலைமைப் புதல்வன் இந்திரசித்து சிறந்த போர் வீரன்; உயர்ந்த வில்லாளி. வீரவுலகங்கள் யாவும் அவன் போரையும் சீரையும் வியந்து கொண்டாடி வருகின்றன. தேவ ராசனை இந்திரனைக் கட்டிக் கொண்டு வந்து இலங்கையில் சிறை வைத்தவன். அதனல் இந்திரசித்து என்று எந்த உலகமும் புகழ்ந்து போற்ற வெற்றிப் பெயருடன் விளங்கி நிற்கிருன். சூரியன், சந்திரன் என்னும் இரண்டு வான ஒளிகளையும் ஒரு முறை மானமழித்து ஊனம் அடையச் செய்துள்ளான். அவன் தம்பி அதிகாயன் என்னும் பேரினன். போரில் யாரும் நேரில்லாதவன். பெரிய அதிசய வீரன். எந்தவகையினும் இந்திரசித்தை ஒத்தவன். வேறு ஒரு இந்திரன் இல்லாமையால் அவனுக்குப் பேர் அதிகாயன் என நேர்ந்தது. விதி காயினும் வெல்ல வல்ல அவனைச் செல்ல மகனைப் பெற்று இலங்கை வேந்தன் சிந்தை களித்துள்ளான். தேவராந்தகன், நராந்தகன், திரிசிரன் முதலாக வேறு பல புதல்வர்களும் உளர். யாவரும் வீரத்திறலினர். வில் வாள் முதலிய படைக்கலன்கள் யாவும் பயின்று போர் என வீங்கும் பொலன் தோள் வீரர்களாய்ப் பொங்கி யுள்ளனர். எங்கும் தன் ஆணை சென்றுவர வெற்றிவீரோடு இலங்காதிபதி விளங்கி நிற்கிருன். அந்த நிலை உனது வீரச் சிலையால் அன்றி வேறு எந்த வகையாலும் யாதும் குலையாது" என இந்தவாறு வீடணன் கூறி முடித்தான்.

அவனுடைய உரைகள் அரிய பல மருமங்களைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. எதிரியினுடைய அதிசய வளங்களை இராமன் உளங்கொண்டு உணர்ந்து உறுதியாகவினைசெய்யும்படி விளையம் தோய்ந்து வந்திருக்கின்றன. படைவலி முதலிய நிலை

களை யெல்லாம் நெஞ்சம் அஞ்சி யாரும் நெடிது அயருமாறு நேரே எடுத்துச் சொல்லியிருக்கிறான்.

முக்கண்ணான் வரத்தொடும் உயர்ந்தான்.

என்றது இராவணன் பெற்றுள்ள வர பலங்களை உய்த்துணர வந்தது. சிவ பெருமான் அருள் வலியால் அரிய பல மகிமைகளை அடைந்து உலகம் எல்லாம் தொழுது வணங்க உயர்ந்து விளங்குகின்றான் என அவனுடைய உயர்ச்சிக்கு மூல காரணத்தை இங்ஙனம் உணர்த்தி நின்றான்.

பகையினத்தின் வகைகளை எல்லாம் இவ்வாறு தொகையாகச் சுட்டி உரைத்தவன் பின்பு தன் இனத்தில் அமைந்துள்ள வலி நிலைகளையும் இராமன் மனத்தில் பதியும்படி சொல்ல நேர்ந்தான். உள்ளம் தெளிந்து மகிழ உரைகள் விளைந்து வந்தன.

தூது போயிருந்த போது இலங்கையில் அனுமான் செய்த அற்புத வீரச் செயல்களை ஆர்வத்தோடு கூறினான்: "ஆண்டவா! இதோ நிற்கிற இந்த ஆண்டகையின் அடலாண்மைகளை நான் எவ்வாறு சொல்லுவேன்?" என்று அனுமானைச் சுட்டிக் காட்டிச் சொல்லத் தொடங்கவே எல்லாரும் வியப்பு மீதூர்ந்து விழைந்து கேட்டார்.

### அனுமான் ஆற்றியது

ஈடு பட்டவர் எண்ணிலர் தோரணத்து எழுவால்
பாடு பட்டவர் படுகடல் மணலினும் பலரால்;
சூடு பட்டது கொடிநகர் அடுபுலி துரந்த
ஆடு பட்டது பட்டனர் அனுமனால் அரக்கர். (1)

காய்த்த அக்கணத்து அரக்கர்தம் உடலுகு கறைத்தோல்
நீத்த எக்கரின் நிறைந்துள கருங்கடல் நெருப்பின்
வாய்த்த அக்களை வரிசிலை மலையொடும் வாங்கித்
தேய்த்த அக்குழம்பு உலர்ந்தில இலங்கையின் தெருவில்

சேனைக் காவலர் ஓரைவர் உளர்பண்டு தேவர்
வானைக் காவலும் மானமும் மாற்றிய மறவர்
தானைக் கார்க்கருங் கடலொடும் தமரொடுந் தாமும்
யானைக் கால்பட்ட செல்லென ஒல்லையின் அவிந்தார். (3)

எங்கு லத்தவர் எண்பதி னாயிரர் இறைவர்
கிங்க ரப்பெயர்க் கிரியன்ன தோற்றத்தர் கிளர்ந்தார்

வெங்க ரத்தினும் காலினும் வாலினும் விலங்கிச்
சங்க ரற்கழி முப்புரத் தவர்எனச் சமைந்தார். (4)

வெம்புமாக்கடற் சேனைகொண் டெதிர்பொர வெகுண்டான்
அம்பும் ஆயிரத் தாயிரம் இவன்புயம் அழுத்தி
உம்பர் வானகத் தொருதனி நமனைச் சென்றுற்றான்
சம்பு மாலியும் வில்லினால் சுருக்குண்டு தலைவ. (5)

சொன்ன மாமதில் இலங்கையின் பரப்பினில் துகைத்துச்
சின்ன மானவர் கணக்கிலர் யாவரே தெரிப்பார்?
இன்ன மாருளர் வீரர்மற் றிவன்சுட எரிந்த
அன்ன மாநகர் அவிந்ததக் குருதியால் அகன்று. (6)

விலங்கல் வெந்தவா வேறினி விளம்புவது எவனோ?
அலங்கல் மாலையும் சாந்தமும் அன்றுதான் அணிந்த
கலங்க ளோடுமச் சாத்திய துகிலோடும் கதிர்வாள்
இலங்கை வேந்தனும் ஏழுநாள் விசும்பிடை யிருந்தான்.(7)

நொதுமல் திண்டிறல் அரக்கனது இலங்கையை நுவன்றேன்
அதுமற் றவ்வழி அரணமும் பெருமையும் அறைந்தேன்;
இதுமற் றெய்திய திராவணன் என்பவன் ஏவப்
பதுமத் தண்ணலே பண்டுபோல் அந்நகர் படைத்தான்.

காந்தும் ஆனையிற் கான்முதல் வீரரும் கவியின்
வேந்தும் என்றிவர் விளிந்தவா கேட்டன்று விலங்கல்
தீந்தவா கண்டும் அரக்கரைச் செருவிடை முருக்கிப்
போந்த வாகண்டும் நாணிங்குப் புகுந்தது புகழோய்! (6)

அனுமானைக் குறித்து இராமபிரானிடம் விபீடணன் இவ்வாறு உரைத்திருக்கிறான். இலங்கையில் புகுந்து அந்த வீரன் விளைத்துள்ள தீரச் செயல்களை அதிசய சிந்தையனாய்த் துதி செய்துள்ளான். அவ்வுண்மையை உரைகளில் ஊன்றி நோக்கி உவந்து நிற்கிறோம். அனுமானுடைய கருமவீரங்களின் அரிய பெரிய புகழ்மாலையாக இப்பகுதி ஈண்டு வெளி வந்துள்ளது.

"வீர மூர்த்தி! உங்கள் ஊழியனாய் இலங்கை வந்த இந்த வீரகேசரி அங்கே ஆற்றிய அற்புத வேலைகளை நினைந்துநினைந்து எப்பொழுதும் என் உள்ளம் வியந்து கொண்டேயிருக்கிறது. எமனும் எட்டிப் பார்க்க அஞ்சி நடுங்குகிற அதிசய இலங்கையைக் குட்டிச்சுவராக்கிவிட்டு வெற்றி வீரனாடு ஈண்டு இவன் மீண்டு வந்திருக்கிறான். இந்த ஆண்டகையைப் பிடிக்கவேண்

டும் என்று கொதித்து முனைந்து போரில் மூண்டவர் அனைவரும் மாண்டே போயினர். யாண்டும் யாருக்கும் அஞ்சாத அரக்க வீரர்கள் அன்று இவன் எதிரே இறந்து பட்டநிலை அதிசய மாயாசாலமாய் நின்றது. புலியைக்கண்ட ஆடுகள் போல யாவரும் நிலைகுலைந்து அலமந்து செத்தனர். அட்சயகுமாரன் என்பவன் அதிசயமான போர்வீரன். இலங்கை வேந்தனுடைய இளைய புதல்வன். திரண்ட சேனைகளோடு தேர்மேலேறிப் போர்மேல் மூண்டு வந்தான். அந்தப் படைகளை எல்லாம் அடியோடு அழித்து ஒழித்து முடிவில் அந்த அரசகுமாரனைத் தேருடன் வாரி எறிந்து சீறிப்பாய்ந்து படித்தலத்தில் வீழ்த்தி அழுத்தித் தசையும் குருதியும் அயல் எங்கும் சிதறத் தேய்த்து முடித்தான். கிங்கரன் சம்புமாலி முதலிய பல சேனாதிபதிகள் பல்லாயிரக்கணக்கில் சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்து போராடி எல்லாரும் அல்லோ கல்லமாய் அழிந்து பட்டார். அதன் பின் இலங்கையில் தீயை மூட்டி எரித்தான். அன்று பட்ட தீயில் அழிந்து பட்ட பொருள்கள் அளவிடலரியன. பொன் கோட்டையாய்ப் பொலிந்து விளங்கிய இலங்கை கரிக்கோட்டையாய் இழிந்தழிந்தது. அரசனும் தன் குடும்பத்தோடு ஏழுநாள் ஆகாயத்திலேயே அவலத்துயருடன் கவலை கூர்ந்திருந்தான். பின்பு அவனது வேண்டுகோளுக்கு இணங்கிப் பிரமதேவன் மயனை ஏவி மீண்டும் புதிதாக இலங்கையைப் படைத்தருளினன். அதிசய எழிலோடு நகரம் புதிதாய் ஒளி வீசி யிருந்தாலும் பழைய தீயில் வெந்த பிண நாற்றம் இன்னமும் சில இடங்களில் வீசிக்கொண்டே யிருக்கிறது. வானவர் எவரையும் எளிதாக எள்ளி இகழ்ந்து வந்த அரக்கர் குலம் வானரம் என்ற பெயரைக் கேட்டதும் நெஞ்சம் கலங்கி அஞ்சி அலமந்து நெடுந்திகில் கொண்டுள்ளது. இவனுடைய அடுந்திறலாண்மைகள் அளவிடலரியன. அதிசயமுடையன. அண்ணலே! உண்மையாக நான் உறுதியைச் சொல்லுகிறேன். இந்தக் கரும வீரனுடைய அருமை பெருமைகளை நேரில் கண்டபின்புதான் நெஞ்சம் துணிந்து ஈண்டு வந்து தேவரீரை நான் தஞ்சமடைய நேர்ந்தான். அஞ்சன வண்ணா! இவனுடைய துணைமை சிவனுடைய துணைமையாம்" என விபீடணன் இவ்வாறு வியந்து விழைந்து விளம்பி நின்றான்.

வார்த்தைகளில் அவனுடைய மனப்பண்பும் நன்றி யறிவும் வியப்பும் விம்மிதமும் விரிந்து தோன்றுகின்றன. அனுமானு டைய உக்கிர வீர நிலைகள் உள்ளத்தைக் கவர்ந்துள்ளமையால் உரைகள் பரவசமாய் வெளி வந்துள்ளன.

சூடுபட்டது கொடிநகர்; அடுபுலி துரந்த
ஆடுபட்டதே பட்டனர் அனுமனால் அரக்கர்.

தீ வாய்ப்பட்டு ஊர் அழிந்ததையும் அனுமான் கைப்பட்டு அரக்கர் அழிந்துள்ளதையும் இங்ஙனம் விளக்கி யருளினான்.

தன் சாதி என்ற அபிமானம் அறவே தோலைந்து போய் வீடணன் புதியநிலையில் மருவியுள்ளமையை உரைகளால் நுணுகி உணர்ந்து கொள்ளுகிறோம். பண்டைக்குலம் ஒருவிப் பார்வேந் தன் இராமனடித் தொண்டக் குலனாய்த் துலங்கினான் என்றபடி விபீடணன் விளங்கி நிற்கிறான். அந் நிலைமையைக் காவியம் எங்கணும் உவந்து கண்டு வியந்து வருகின்றோம்.

அனுமான் அடுபுலி; அரக்கர் ஆடுகள்.

என்றது அன்று போரில் இவ் வீரன் எதிரே அரக்கர்கள் அழிந்துபட்டுள்ள நிலைகளைத் தெளிவா அறிந்து கொள்ளவந்தது.

ஒரு புலியைக் கண்டால் ஆயிரக் கண்க்கான ஆடுகள் அல மந்து ஒழியும்; அவ்வாறே அனுமானால் அரக்கர்கள் அல்ல லடைந்து அழிந்துள்ளனர். எல்லாருக்கும் புலிகள்போல் யாண் டும் அல்லல்களை விளைத்து வந்தவர் ஈண்டு அனுமான் எதிரே ஆடு களாய் அழிந்து பட்டது கால முடிவைக் காட்டி நின்றது.

அரக்கர் ஆகிய ஆடுகளை எளிதே அழிக்கவல்ல வீரப்புலி யாய் அனுமான் விளங்கி நிற்கிறான் என்றது இலங்கைமேல் படை எழுச்சி செய்து வந்துள்ள இராமனுக்கு அமைந்திருக் கும் துணைவலியை உணர்ந்து தெளிந்து உவந்து கொள்ள வந்தது.

சிங்க ஏறு இரண்டு வெங்கண் ஆளி வேங்கைகளோடு

வீறு கொண்டு வந்தன என இராம லட்சுமணரது வரவை முன்னம் உருவகமா வுரைத்த குறிப்புகள் ஈண்டு வெளிப்படை யாய் வந்தன. உரை ஒலிகள் துறைகள் தோறும் தொடர்ந்து நெறிமுறைகளை வெளிப்படுத்தி நேரே ஒளி வீசி வருகின்றன.

"வன் துணைக் கோளரி இரண்டும் மாறிலாக்
குன்றிடை உழுவையங் குழக்கொண்டு ஈண்டியே."

எனத் திரிசடை கனவில் கண்டதைச் சீதையிடம் இவ்வாறு முன்னம் * உரைத்திருக்கிருள். மகள் மொழிந்த அந்த உழுவை மொழி விபீடணன் வாயுரையால் ஈண்டு வெளி வந்துள்ளது. உழுவை = புலி. ஓரிடத்தில் கூறியதை வேறிடங்களிலும் வலியுறுத்தி வருவது கவியின் நினைவாற்றலை விளக்கிக் கலையின் கனிவோடு வித்தக விநோதமாய் விரிந்து மிளிர்கிறது.

கோசலைச் சிங்கத்திற்கு அஞ்சனைப் புலி அருமைத் துணையாய் அமைந்துள்ள உரிமையை உவந்து நோக்கிக் கரும வீரங்களைக் கருதிக் கொள்ளுகிருேம். பகை இனம் பாழ்பட்டழியும் என்பதைத் தொகையாகச் சுட்டியருளினன்.

சங்கரற்கு அழி முப்புரத்தவர் எனச் சமைந்தார்.

சிவபெருமான் சிரித்து எளிதே திரிபுரங்களை எரித்து ஒழித்தது போல் அனுமான் அரக்கரை அழித்திருத்தலால் இங்ஙனம் உவமை கூறி உணர்த்தினன்.

உக்கிர வீரமான உருத்திர மூர்த்தியே இந்த உருவில் வந்து உனக்கு உறு துணையாய் அமைந்துள்ளது என இராமன் உள்ளம் குளிர இலங்கைத் தம்பி உரைத்திருப்பது ஊன்றியுணர வுரியது. வினையாண்மைகள் வியந்து பேச வந்தன.

திரிபுராந்தகன் என அவன் உயர்ந்துள்ளான்.

இலங்கா புராந்தகன் என இவன் இயைந்திருக்கிருன்.

சருவ சங்கார மூர்த்தியான உருத்திரனே இந்த வடிவில் வந்திருக்கிருன்; இனி அரக்கர் குலம் பிழையாது; அழிந்தே போம் எனத் தெளிவுறுத்தினன்.

அரக்கரை முருக்கிப் போந்தவா கண்டு நான் இங்குப்புகுந்தது.

விபீடணன் இராமனிடம் வந்து சேர்ந்ததற்கு மூலமான காரணத்தை இங்ஙனம் தெளிவாக வெளியிட்டுள்ளான்.

"கரன் முதலிய பெரிய வீரர்களைக் கொன்று, வாலியை வென்று விசய கோதண்ட வீரனாய்த் திசை புகழ நின்ற உனது

* இந் நூல் பக்கம் 2931, வரி 11 பார்க்க.

இசையைக் கேட்டு வியந்திருந்தேனே அன்றி ஈண்டு வர நான் இசைந்து கொள்ள வில்லை. இந்த அதிவீரனுடைய அதிசய நிலையை நேரே கண்ட பின்புதான் உன்பால் அன்பு மீதூர்ந்து இங்கு வர நேர்ந்தேன்'' என்று தனது வரவின் உண்மையைக் கரவின்றி உரைத்திருக்கிறான். நேர்ந்துள்ளதை நேர்மையாக உரைத்திருப்பது அவனுடைய நீர்மை சீர்மைகளைக் கூர்மையா ஓர்ந்து கொள்ள வந்தது. உற்ற நிலை உலகம் தெரிய நேர்ந்தது.

இத்தகைய அற்புத வீரனை ஏவலாளாகப் பெற்றிருக்கிற இராமன் எத்தகைய மகிமையுடையவனா யிருப்பான்? என்னும் வியப்பும் நயப்பும் ஆசையும் ஆர்வமும் வீடணனை ஈர்த்து வந்துள்ளன என்று தெரிகின்றது.

இராவணன் எதிரே பேசிய பொழுது அனுமானுடைய கலை ஞானங்களையும் சொல் வன்மைகளையும் அறிந்து மகிழ்ந்தான்; அரக்கர்களோடு போராடி வென்று இலங்கையை எரியூட்டி அழித்து விட்டு வீர வெற்றியோடு மீண்டு வந்துள்ளதைக் கண்டதும் மிகுந்த வியப்புகள் விளைந்தன. அதிசய விளைவு விபீடணன் நெஞ்சில் நிலை பெற்றுள்ளமையால் அந்த ஆண்டகையினிடம் பேரன்பும் பெரு மதிப்பும் பூண்டிருக்கிறான்.

உள்ளத்தில் உயர்ந்த மதிப்பு நிறைந்திருத்தலால் அதிசய பரவசனாய் அவனை வியந்து புகழ்ந்துள்ளான். உரைகள் உண்மை நவிற்சிகளாய் வந்தன. உள்ளம் கனிந்து வந்த அவை அவனுடைய உயர்ச்சிகளை உறுதியாக உணர்த்தி நின்றன.

தான் அனுமானைக் கருதிக் கண்ட காட்சியே இராமனைக் கண்டு களித்து உய்யும்படி ஊட்டியருளியது என்று விபீடணன் ஈண்டு உரைத்திருப்பது ஊன்றியுணர வுரியது. அனுமானை எண்ணி வருபவர் இராமனுடைய திருவருளை எளிதே அடைந்து கொள்ளுவார் என்னும் உண்மை இங்கே வெளியாயுள்ளது.

எதிரியினுடைய நிலைகளை இராமன் வினவினான். பகையிடத்தின் திறல்களை யெல்லாம் வகையாய் உரைத்து வந்தவன் முடிவில் அனுமானது அற்புத ஆற்றல்களை அதிசய ஆர்வத்தோடு கூறி முடித்தான். அவ் வுரைகள் பலரையும் பரவசமாக்கின.

## இராமன் மகிழ்ந்து புகழ்ந்தது.

இலங்கையில் அனுமான் ஆற்றிய அருந்திறல்களை விபீடணன் வாயிலா அறிந்த போது இராமன் பெரு மகிழ்ச்சியடைந்தான். அந்தக் கரும வீரனை இந்தத் தரும வீரன் உவந்து நோக்கினன். உள்ளம் களித்து உடல் பூரித்து இவ் வள்ளல் ஆடிய உரைகளைக் கவி வரைந்து காட்டியிருக்கிறார். உணர்ச்சி ததும்பி வந்துள்ள அவ் வுரைகள் அதிசய ஆர்வங்களை யூட்டியுள்ளன.

*கேள்கொள் மேலையான் கிளத்திய பொருளெலாம் கேட்டான்*
*வாள்கொள் நோக்கியைப் பாக்கியம் பழுத்தன்ன மயிலை*
*நாள்கள் சாலவும் நீங்கலின் நலங்கெட மெலிந்த*
*தோள்கள் வீங்கித் தன் தூதனைப் பார்த்திவை சொன்னான்.* (1)

*கூட்டினார்படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்*
*ஊட்டினாய் எரி ஊர்முற்றும் இனி அங் கொன்றுண்டோ?*
*கேட்ட வாற்றினால் கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்*
*மீட்டிலாதது என் வில் தொழில் காட்டக் கொல் வீர!* (2)

*நின்செய் தோள்வலி நிரம்பிய இலங்கையை நேர்ந்தோம்*
*பின்செய் தோம்சில அவையினிப் பீடின்று பெறுமோ?*
*பொன்செய் தோளினாய்! போர்ப்பெரும் படையொடும் புக்கோம்*
*என்செய் தோமென்று பெரும்புகழ் எய்துவான் இருந்தோம்.* (3)

*என்ன தாக்கிய வலியொடுஅவ் இராவணன் வலியும்*
*உன்ன தாக்கினை பாக்கியம் உருக்கொண்டது ஒப்பாய்!*
*முன்ன தாக்கிய மூவுலகு ஆக்கிய முதலோன்*
*தன்ன தாக்கிய பதம் நினக்கு ஆக்கினென் பெற்றாய்.* (4)

*என்று கூறலும் எழுந்திரு நிலனுற இறைஞ்சி*
*ஒன்றும் பேசலன் நாணினன் வணங்கிய உரவோன்*
*நின்ற வானரத் தலைவரும் அரசுமந் நெடியோன்*
*வென்றி கேட்டலும் வீடுபெற்றார் என வியந்தார்.* (5)

(இலங்கைக் கேள்விப் படலம் 70-74)

அதிசய ஆர்வத்தோடு அனுமானைப் பார்த்து இராமன் பேசியுள்ள வாசகங்களை ஆசை மீதூர்ந்து நோக்கி இங்கே நாம் ஆனந்தம் அடைகின்றோம். நிலைமை நீர்மைகளை உரைகள் நேரே காட்டியருள்கின்றன. அரிய பண்பாடுகள் பெரிய மேன்மைகளாய்ப் பெருகிப் பேரின்பங்களை விளைத்து நிற்கின்றன.

தனது ஏவலை மேற்கொண்டு இலங்கை புகுந்து மீண்டு வந்த அனுமான் அங்கே அரக்கர்களோடு போராடி வென்ற வெற்றி நிலைகளை இராமனிடம் யாதும் சொல்லவில்லை. சீதா தேவியைக் கண்ட காட்சியை மாத்திரம் மாட்சியுடன் கூறி மற்ற வினையாண்மைகளை யெல்லாம் விநயமாய் மறைத்திருந்தான். அந்த மதிமானுடைய அடக்கமும் அமைதியும் அதிசய நீர்மைகளாய் மருவியுள்ளன. தன் புகழ்ச்சிகளை வெளியே சொல்ல நாணி ஒளி செய்திருந்த அவனது வீர வெற்றிகளை விபீடணன் இராமனிடம் இன்று நேரே கூறியருளினன். அவ்வுரைகள் இப் பெருமானுடைய உள்ளத்தை உருக்கி உயர்ந்த இன்பங்களை விளைத்தன. மனைவியைப் பிரிந்து இளைத்திருந்த தேகம் அனுமனது மகிமைகளைக் கேட்டதும் திளைத்துப் பூரித்தது. அவனை அன்புரிமையோடு இன்புற நோக்கினன்: "அனுமா! நீ கடல் கடந்து போய் இலங்கையில் செய்துள்ள அடலாண்மைகளை இதுவரையும் நான் அறியாமல் இருந்தமைக்கு வருந்துகிறேன். பகைவனுடைய சேனைத் திரள்களைப் பாதிக்குமேல் கொன்று தொலைத்து, ஊரைத் தீயிட்டு எரித்து, உருத்திரமூர்த்தி போல் வீர விளையாடல்களை அங்கே நீ வெற்றியோடு செய்திருக்கிறாய்! அவ்வாறு செய்தவன் சீதையை மீட்டி வராமல் விட்டு வந்தது என் வில்லின் வேலையை நான் காட்ட வேண்டும் என்று கருதியோ? அல்லது எனது வலி நிலையை உலகம் காண வேண்டும் என்று எண்ணியோ? உனது கருமச் சூழ்ச்சிகள் அதிசய மருமங்களுடையன. உன் காலாலும் வாலாலும் கலக்கி வென்ற இலங்கைமேல் இனி நான் படை எடுத்துப் போய்ச் செய்ய வேண்டிய வேலை என்ன? எழுபது வெள்ளம் வானரங்களும் நானும் தம்பியும் சேர்ந்து பல நாள் வருந்திச் செய்ய வேண்டிய வேலையை நீ தனியே நின்று ஒரு நாள் இரவிலேயே எளிதே செய்து வந்திருக்கிறாய்! உனது அருந்திறலாண்மைகளை யார் அளந்து சொல்ல வல்லார்? நினைந்து நினைந்து என் நெஞ்சம் வியந்து மகிழ்கின்றது. என் வீரத்தையும் இராவணன் வீரத்தையும் உன் வீரத்துக்குள் ஒடுக்கி உயர் வீரனாய் நிற்கின்ற உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? அடுத்து வருகிற பிரம பதம் உனக்கு உரிமையாக வேண்டும் என்று இறைவனை எண்ணி நான் வேண்டுகின்றேன். இன்று அனுமனாயுள்ள நீ என்றும்

அயனாய் அமர்ந்து அகிலவுலகங்களையும் படைத்தருளும் அற்புத நிலைமையை நான் கற்பனை செய்து களித்திருக்கிறேன்'' என இப்படி இராமன் உழுவலன்போடு உவந்து மொழிந்தான்.

அன்பு சுரந்து வந்த இந்த இன்ப மொழிகளைக் கேட்டதும் உள்ளம் நாணி எழுந்து தலை வணங்கி இருகைகளையும் குவித்து உடல் குழைந்து கண்ணீர் மல்கி அனுமான் உருகி நின்றான்.

பருகு காதலோடு இராமன் உரையாடியதும், மாருதி நிறை நாணோடு நெஞ்சுருகி நின்றதும் அன்புகனிந்த இன்பக்காட்சி களாய் ஈண்டு எழில் சுரந்துள்ளன.

பாக்கியம் பழுத்தன்ன மயில்.

சீதையைக் கவி இங்கே இப்படிக் குறித்திருக்கிறார்.

இராமன் பண்ணியுள்ள புண்ணியங்களெல்லாம் ஒருங்கே திரண்டு பழுத்துச் சிவந்த உருவம் எடுத்துச் சானகி என்னும் பேரோடு ஈண்டு வந்துள்ளது என இங்ஙனம் இசைத்திருக்கிறார்.

தான் பண்ணிய புண்ணியத்தின் அளவே ஒருமனிதனுக்கு இன்ப நலங்கள் உளவாகின்றன. சக்கரவர்த்தித் திருமகனான இராமனுக்கு எல்லாவகையிலும் அரிய பெரிய இன்ப நிலையமா யிருந்து வருதலால் சீதை அவன் பாக்கியம் பழுத்தமயில் என வந்தாள். அத்தகைய இன்ப மனைவியைப் பிரிந்ததனால் துன்பம் பெருகித் தோள் மெலிந்திருந்தான். இன்று அனுமனுடைய புகழைக்கேட்கவே அம்மெலிவு நீங்கி மேனி பூரிப் படைந்தது.

மெலிந்த தோள்கள் வீங்கித் தன் தூதனைப் பார்த்து.

இராமன் அனுமனைப் பார்த்துள்ள பார்வையை இது வார்த்துக் காட்டியுள்ளது. உள்ளம் களித்துள்ள அந்த உவகை நிலையை அளந்து காட்டியிருக்கும் காட்சியை விழைந்து நோக்கி வியந்து நிற்கிறோம். மெலிவும் பொலிவும் மெய் தெரிய வந்தன.

தனது ஏவலை ஆவலோடு செய்து வருகிற அவனது அதிசய நிலையை அறியவே ஆனந்தம் பொங்கி எழுந்தது. அந்த எழுச்சி யால் உள்ளமும் உயிரும் கிளர்ச்சி அடைந்தன; அதனால் உடல் வளர்ச்சி அடைந்தது; வாய்மொழி உணர்ச்சியோடு எழுந்தது.

சீதையை மீட்டிலாதது என்வில் தொழில் காட்டக் கொல்?

அனுமானை நோக்கி இராமன் இப்படிக் கேட்டிருக்கிருன். இந்தக் கேள்வியில் உரிய கேண்மையும் பெரிய ஆண்மையும் உலாவியுள்ளன. உவகையுரையில் சுவைகள் சுரந்து மிளிர்கின்றன.

சீதையைத் தனியே சிறை மீட்டிக் கொண்டுவரத் தக்க ஆற்றல் அனுமானிடம் அமைந்திருக்கிறது; இருந்தும் அவ்வாறு செய்ய வில்லை. உரிய நாயகனே நேரே வந்து பகைவனை வென்று முறையோடு மனைவியை மீட்டவேண்டும் என்னும் மரியாதையை மனதில் வைத்து உரிமையோடு மீண்டு வந்துள்ளான் என அவனது அமைதியையும் ஆண்டகைமையையும் அறிவின் உயர்வையும் வியந்து புகழ்ந்திருக்கிருன்.

வீர! என்று விளித்தது அவனுடைய வீரபராக்கிரமங்களைக் கருதி வந்தது. அயலிடத்தில் தன்னந் தனியே நின்று பல்லாயிரம் அரக்கர்களை ஒல்லையில் வென்று எல்லை கடந்து வந்துள்ளான் ஆதலால் வீர! என ஆர்வமோடு கூறியருளினன்.

அதிசய வில்வீரன் என எல்லாவுலகங்களும் துதி செய்து வருகின்ற வீரமூர்த்தியான இராமன் வாயால் வீர என்னும் பேரை அனுமான் ஈண்டுப் பெற்றிருப்பது வெற்றிப் பரிசாய் விளங்கி நிற்கிறது. வீரப் பெருமாள் வீரப் பேறருளினன்.

என் வலியும் இராவணன் வலியும் உன்னது ஆக்கினை.

அனுமானை நோக்கி இராமன் இன்னவாறு உரைத்திருப்பது உன்னியுணர வுரியது. தான் இலங்கை சென்று செய்ய வேண்டிய வீர வெற்றிகளை முன்னதாகவே மாருதி பெரிதும் முடித்து வந்திருத்தலால் அவனது அருந்திறலாண்மைகள் வியந்து பேச வந்தன. வியப்பில் வியனிலைகள் விளைந்தன.

இராமன் வலியும், இராவணன் வலியும், அனுமன் வலியுள் அடங்கியுள்ளன என்றது அதிசய வியப்பாயுள்ளது. இராவணனை வென்று இராமன் வெற்றி வீரனாய் விளங்குவது எல்லாம் அனுமானது அனுகூலத்தால் அமைந்துள்ளது என இக்கோமகன் உவந்து புகழ்ந்துள்ளான்.

பாக்கியம் உருக் கொண்டது ஒப்பாய்!

இராமனது நல்வினையே ஓர் உருவமாத் திரண்டு அனுமான் என்னும் பேரோடு வந்துள்ளது என்பதை இந்த வாக்கியம் நன்கு விளக்கி யுள்ளது. உவகை மொழி உள்ளம் உருகி எழுந்தது.

பாக்கியம் என்னும் வாக்கியங்கள் இரண்டு ஈண்டு வந்திருக்கின்றன. சீதை மனைவியாக அமைந்ததும், அனுமான் துணைவனாக வாய்ந்ததும் தனது புண்ணியப் பேறே என்று இவ் வீர மூர்த்தி எண்ணியிருப்பதை வாய்மொழி இனிது காட்டியது. உழுவலன்பும் விழுமிய பண்பும் தெரியவே உள்ளம் உருகி உவகை பெருகி உரைகள் வெளியே துள்ளி வந்தன.

இவ்வாறு பரிவோடு பேசி வந்தவன் இறுதியில் அரிய வர பலங்களை அருள நேர்ந்தான். அவன் செய்துள்ள உதவிக்கு வையகமும் வானகமும் ஈடாகா என எண்ணியுணர்ந்து மூவருள் ஒருவன் ஆய் மேவியிருக்க வேண்டும் என்று ஆவலோடு முடிவு செய்து இக் கோமகன் உவகை மீதூர்ந்து மொழிந்தான்.

உலகு ஆக்கிய முதலோன் பதம் நினக்கு ஆக்கினேன்.

சிருட்டி கருத்தாவாகிய பிரமாவாய் அமர்ந்து யாவும் படைத்து வருக எனப் பிரம பதவியை அனுமனுக்கு இராமன் இங்ஙனம் அருளியிருக்கிறான். தான் மனித உருவில் மருவியிருந்தாலும் திருமாலின் அவதாரம் ஆதலால் அந்த மூல வாசனையால் இந்தவாறு ஆவேசமாய் அருள் புரிந்தான்.

அடைக்கலம்புகுந்த விபீடணனை இலங்காதிபதி ஆக்கினான்.

அடியவனான அனுமனை பிரமாவாக நிறுவினான்.

கையில் ஒன்றும் இல்லாதவன் ஆயினும் எல்லாம் உடையவன் என்பது சொல்லால் விளங்கியது. சமையம் நேரும் பொழுது உண்மை நிலைகள் உலகமறிய வெளி வருகின்றன.

தனது அவதார காரியத்திற்கு அனுகூலராய் நேர்ந்தவர் கருமம் முடியு முன்னரே அரிய பதவிகளை அடைய நேர்ந்தனர்.

விபீடணனை உரிமையாகச் சேர்த்துக் கொள்ளும்படி இராமனிடம் உறுதி கூறி அனுமான் உதவி புரிந்தான். அவன் சேர்ந்தான்; அரசன் ஆனான்; உடனே உள்ளம் உருகி இவனை உவந்து புகழ்ந்தான். பிரம பதமும் இவன் பெற்று மகிழ்ந்தான். பிறர்க்கு இதமாய் உதவி செய்கின்றவன் பெரு மகிமைகளை அடைவான் என்னும் உண்மை ஈண்டு உணர வந்தது. விரும்பாதிருப்பினும் வினையின் பயன்கள் வினையாளரை விரும்பி வந்து அடைந்து கொள்ளுகின்றன. நிலைமைகள் சிந்திக்கத் தக்கன.

தன்னை வியந்து மகிழ்ந்து இராமன் புகழ்ந்து பேசிய பொழுது அநுமான் நாணித் தலை வணங்கி நின்றுள்ளான். அவனுடைய பணிவும் அடக்கமும் உயர்ந்த பண்பாடுகளோடு தோய்ந்து எவ்வழியும் சிறந்து வளர்ந்திருக்கின்றன.

தான் அரிய காரியங்களைச் செய்து வந்திருப்பதாகத் தன்னை உரிமையோடு இராமன் புகழ்ந்து கூறிய போது அநுமான் நாணி நின்றமையால் அவனது பெருமேன்மை காண வந்தது.

“பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறின் பொறையும்—அறவினையைக்
காராண்மை போல ஒழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு.” (திரிகடுகம்)

தன்னைப் பிறர் புகழ்ந்து பேசுங்கால் நாணுதலும், இகழ்ந்து கூறுங்கால் பொறுத்தலும், நல்ல உபகாரங்களை யாருக்கும் உள்ளம் உவந்து செய்தலும் உயர்ந்த ஆண்மையாளரது சிறந்த இயல்பாம் என நல்லாதனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் கூறியிருக்கிறார். அரிய நீர்மையாளர் பெரிய மனிதராகின்றனர். உள்ளம் உயர எல்லா மகிமைகளும் எதிரே வருகின்றன.

மேலான மேன்மைகளுக்கு உரிய அரிய பான்மைகள் எல்லாம் அநுமானிடம் இயல்பாகவே இனிதமைந்துள்ளமையை இடங்கள்தோறும் கண்டு உள்ளம் உவந்து உயர்ந்து வருகிறோம்.

ஒன்றும் பேசலன் நாணினான்.

இராமன் உவந்து புகழ்ந்த போது அநுமான் அமைந்து நின்ற நிலையைக் கவி இங்ஙனம் வரைந்து காட்டியிருக்கிறார். யாதும் பேசாமல் நாணி நின்ற அந்த மேதையின் அதிசய நீர்மையை யாரும் பேசி விளக்க முடியாது என்னும் முடிவை இது முடிவாக வுணர்த்தியுள்ளது.

தன்னைத் தானே புகழ்ந்து சொல்வது புன்மை.

பிறர் புகழ்ந்து சொல்லும்படி தூண்டி நிற்பது சிறுமை.

உரிய புகழை உவந்து கொள்வது உலக இயல்பு.

புகழை விரும்பாமல் கடமையையே கருதி நிற்பது அரிய பெரிய நீர்மையாம். அதிசய மகிமை துதி செய்யப் பெறுகிறது.

எவ்வழியும் உயர்ந்த உத்தம நிலையில் அனுமான் ஒளி செய்து உலாவுகின்முன். பிரம பதமும் இவனை உரிமையாக அடைய ஆவலோடு அவாவி நேரே எதிர்நோக்கி நிற்கின்றது.

அனுமானுடைய அதிசய வீரங்களையும் அற்புத மகிமை களையும் கேட்ட போது வானரர்கள் யாவரும் பேரானந்தம டைந்து பெரிதும் ஆர்வமாய் உரிமை கூர்ந்து நின்றனர்.

வென்றி கேட்டலும் வீடு பெற்முர் என வியந்தார்.

பேரின்ப நிலையைப் பெற்றவர் போல் வானர வீரர்கள் இவ்வாறு உள்ளம் களித்திருத்தலால் அனுமான்பால் அவர் கொண்டுள்ள அன்பும் மதிப்பும் அறிய வந்தன. தங்கள் குலம் அதிசய மேன்மையடைய அவதரித்து வந்துள்ள அற்புத வீரன் என யாவரும் ஆனந்தம் அடைந்திருக்கின்றனர்.

காரிய நிலைகளும் வீரிய விளைவுகளும் விசித்திர கதியில் விளைந்திருக்கின்றன. மாருதியின் மாட்சிகள் இங்கே காட்சிக்கு வந்துள்ளமையால் இந்தப் பகுதி அனும கீதை ஆய் இனிதமைந் துள்ளது. இவனது அரிய நீர்மைகளையும் இனிய சீர்மைகளையும் நினைந்து வியந்து யாவரும் உவந்திருந்தனர்.

அன்றைய இரவு இனிது கழிந்தது; சூரியன் உதயம் ஆக வே காரிய விசாரணைகள் கருத நேர்ந்தன. சேனைகள் எழுந்து தென்னிலங்கை மேல் எவ்வாறு செல்வது? என இரவே ஆலோ சனைகள் நடந்தன ஆதலால் ஆதவன் உதிக்கு முன்னரே யாவும் ஆயத்தமாயின. அருந்திறல் ஆண்டகை அருந்தவம் அமர்ந்தது.

வருண மந்திரம் மருவி யிருந்தது.

படைகள் கடல் கடந்து செல்ல வேண்டியிருந்தமையால் அதற்கு உரிய வழியை வேண்டிக் கடல் அரசனை வருணனை நினைந்து இராமன் மந்திர முறையோடு மருவி யிருந்தான். புனித மான இனிய இடத்தில் தருப்பைப் புல்லைப் பரப்பி நியம நிலையில் அமர்ந்து இக் குலமகன் கடலை நோக்கித் தவம் கிடந்தான். சூரிய உதயத்தில் இக் காரியம் நிகழ்ந்தது. அந்தக் காலக் குறிப் பைக் கருதியுணர்ந்து கொள்ளும்படி கவி காட்டி யிருப்பது சுவையை யூட்டி உவகைக் காட்சியாய் ஒளி புரிந்துள்ளது.

சென்று வேலையைச் சேர்தலும் விசும்பிடைச் சிவந்த
குன்றின் மேல்நின்று குதித்தன பகலவன் குதிரை.

தன் வேலையைச் செய்ய இராமன் வேலையை அடைந்த பொழுது சூரியனுடைய தேர்க் குதிரைகள் உதயகிரியிலிருந்து மேலே துள்ளி எழுந்தன என்னும் இது ஈண்டு உள்ளி யுணர வுரியது. நிகழ்ச்சி நடந்த நேரத்தை நம் நெஞ்சில் பதிவு செய்யச் செஞ்சொல் ஒளியால் கவி வெளி செய்து வருவது வித்தக விநோதமாய் விளைந்து வருகிறது. காலமும் இடமும் கருமமும் ஞாலம் அறிய வந்தன. வேலை = கடல். பகலவன் = சூரியன்.

சூரிய உதயத்தில் தன் காரியத்தை இவ் வீரியன் விழைந்து செய்தான். விதி நியமங்கள் விளை தழுவி வந்தன.

தருப்பாசனத்தில் அமர்ந்து வருணமந்திரத்தைச் செபித்துக் கொண்டு கரிய கடலை நோக்கி இக் கருணைக் கடல் இருந்தது. அது அரிய ஒரு தவக் காட்சியாய்ப் பெரிய பரிவூர்ந்து நின்றது.

தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருள் நயந்து நன் னூல்நெறி அடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் கிடந்தது கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி. (1)

பூழி சென்றுதன் திருவுருப் பொருந்தவும் பொறைநீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்
ஊழி சென்றன ஒப்பென ஒருபகல் அவையோர்
ஏழு சென்றன வந்திலன் எறிகடற்கு இறைவன். (2)
(வருணனை வழிவேண்டு படலம் 5-6)

விதி முறையே வருணனை நினைந்து இராமன் வரம் கிடந்துள்ள நிலைமையை இங்கே விழைந்து காணுகிறோம். வியந்து இரங்குகிறோம். தனது அருமை மனைவியை மீட்டி வரும் பொருட்டு இலங்கைமேல் படைகளை நடத்தக் கடலிடையே வழியை நாடி உடல் வருந்த உயர்தவம் புரிந்துள்ளான்.

கருணையங்கடல் கிடந்தது கருங்கடல் நோக்கி.

இந்தக் காட்சியைக் கருதிக் காணுங்கள். பொருளின் நீர்மையை உரிமையோடு உணர்பவர் எவரும் உருகி அயர்வர். கவி வரைந்து காட்டுகிற சொல் ஓவியம் சுவைகள் சுரந்து உவகை இன்பங்களை யூட்டி உணர்வு நலங்களை நீட்டி வருகிறது.

கருணையங்கடல் என இராமனை இங்கே குறித்தது அவனது நிலைமை நீர்மைகளை நினைந்து உணர. அகில உலகங்களையும்வெல்ல வல்ல அதிசய வீரன் விதி நியமங்களுக்கு அடங்கிக் கடலை நோக்கி உடல் வருந்தத் தவம் கிடக்கும் நிலை உயர்ந்த அருள் நீர்மையாய் உணர வந்தது. இரண்டு கடல்கள் ஈண்டு நம் கண் எதிரே காட்சிக்கு வந்துள்ளன.

ஆழம் அகலம் விரிவுகளால் கடல் உயர்ந்துள்ளது.

கருணை முதலிய நிலைகளில் இராமன் உயர்ந்துள்ளான்.

அது நீரால் நிறைந்து நீண்டு பரந்துள்ளது.

இவன் நீர்மையால் நிறைந்து நெடிது நிலவியுள்ளான்.

தன்பால் வந்து பாய்கிற நதிகளை அது ஆதரித்துள்ளது.

தன்பால் வந்து சேருகிற நல்லவர்களை இவன் ஆதரித்துள்ளான். உவமான நிலையில் உயர் நீர்மைகள் ஒளிர்கின்றன.

"ஸர்வதா அபிகத: ஸத்பி: ஸமுத்ர இவ ஸிந்துபி:"

"நதிகள் சமுத்திரத்தை அடைதல் போல் நல்லவர்கள் எப்பொழுதும் இராமனை அடைந்து மகிழ்ந்துள்ளனர்" என வான்மீகி முனிவர் கூறியுள்ளது இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது.

நாடி வருகிற யாவருக்கும் ஆதரவாய் அருள் புரிந்து வருதலால் அருட்கடல், குணக்கடல், கொடைக்கடல், வீரக்கடல், கம்பீரக் கடல், கலைக் கடல் என இராமன் நிலைத்த புகழோடு நிலவி யாண்டும் தலைமை நிலையில் தழைத்து நிற்கின்றான்.

இவனுடைய நீர்மை யாவரையும் பரவசமாக்கியுள்ளது. சைவம் முதலிய சமயச் சார்புடையவர்களும் இராமனிடம் பேரன்புடையராய் ஆர்வம் மீதூர்ந்துள்ளனர். சிவ பெருமானையே நினைந்து நினைந்து உருகி அழுது உள்ளம் கரைந்து கண்ணீர் வெள்ளம் ததும்பப் பாடியருளிய இராமலிங்க சுவாமிகள் இராமபிரானைக் கருதித் துதித்துள்ளார். அந்த இனிய துதி மொழிகள் அவரது கரை கடந்த அன்பின் நிலைமையைக் காட்டியுள்ளது. சில பாசுரங்கள் அயலே வருகின்றன.

"வான்வண்ணக் கருமுகிலே! மழையே! நீல
மணிவண்ணக் கொழுஞ் சுடரே! மருந்தே! வானத்

தேன்வண்ணச் செழுஞ் சுவையே! ராம நாமத்
தெய்வமே! நின்புகழைத் தெளிந்தே ஓதா
ஊன்வண்ணப் புலைவாயார் இடத்தே சென்றுங்
குழைக்கின்றேன் செய்வகை ஒன்றுணரேன் அந்தோ
கான்வண்ணக் குடும்பத்திற் கிலக்கா என்னைக்
காட்டினையே என்னேநின் கருணை ஈதோ? (1)

தெவ்வினையார் அரக்கர்குலம் செற்ற வெற்றிச்
சிங்கமே! எங்கள் குல தெய்வ மேயோ!
வெவ்வினை தீர்த் தருள்கின்ற ராம நாம
வியன்சுடரே! இவ்வுலக விடயக் காட்டில்
இவ்வினையேன் அகப்பட்டேன் புலனும் கள்வர்க்கு
இலக்கானேன் துணைஒன்றும் இல்லேன் அந்தோ
செய்வினை ஒன் றறியேனிங் கென்னை எந்தாய்!
திருவுளத்தில் சேர்த்திலையேல் செய்வ தென்னே? (2)

பொன்னுடையார் வாயிலிற்போய் வீணே காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய்! நின் அடியை மறந்தேன் அந்தோ!
என்செய்கேன் என்செய்கேன் ஏழையேனான்
பின்னுடையேன் பிழையுடையேன் அல்லால் உன்றன்
பேரருளு முடையேனோ பிறந்தேன் வாளா
உன்னுடைய திருவுளத்தென் நினைதியோ? என்
ஒரு முதல்வா! சீராமா! உணர்கி லேனே. (3)

கூறுவதோர் குணமில்லாக் கொடிதாம் செல்வக்
குருட்டறிவோ ரிடைப்படுமென் குறைகள் எல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனும் கருங்கடலில் அழுந்து கின்றேன்
ஏறுவதோர் வகையறியேன் எந்தாய் எந்தாய்!
ஏற்றுகின்றோர் நின்னையன்றி இல்லேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ உன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறிய னேனே. (4)

இராமலிங்க அடிகள். (சீராமப் பதிகம்)

சிவம் பழுத்த இராமலிங்க அடிகள் இராமனை நினைந்து இவ்வாறு துதித்திருக்கிறார். அகில மங்கள குண கண சொரூபி ஆதலால் இந்தத் தரும மூர்த்தியை யாவரும் பேரன்போடு புகழ்ந்து போற்றி உவந்து கொண்டாடி வருகின்றனர்.

எவரும் அன்பு கனிய இன்பம் கனிந்திருக்கும் இனிய நீர்மையாளன் என்பதைக் கருணையங்கடல் என்னும் அருமைத் திருநாமம் உரிமையா யுணர்த்தியுள்ளது. இந்தக் கருணைக்கடல் அந்த உப்புக் கடலை நோக்கி அன்று தவம் கிடந்தது.

பூழி சென்றுதன் திரு உருப் பொருந்தவும் பொறைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்.

தனது அருமைத் திருமேனியில் புழுதிகள் படியவும், சூரிய கிரணங்கள் தோய்ந்து வெயில் முகத்தை வருடவும் கடலை நோக்கி இவன் படுத்திருந்த அந்த அரிய தவக் காட்சி பெரிய மகிமையாய் விளங்கியது. பூழி உருப் பொருந்த, கதிர் முகம் வருட என்றதில் தவத்தின் நிலைமையும் உளத்தின் பரிவுகளும் பரவியுள்ளன. உண்மைகளைத் தருவி யுணர்க.

வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி.

என்றதனால் அந்த மந்திரத்தைச் செபித்து உருவேற்றி யோக நோக்குடன் உள்ளம் ஊன்றி ஒரு முகமாய் இக் குல மகன் மருவி யிருந்தமை அறிய வந்தது. கருதிய குறியை உறுதியாக அடைய அலைவாய்க் கரையில் தலைமையான நிலைமையில் இவன் அருந்தவம் கிடந்தது அதிசய விளைவாயிருந்தது.

"தத: ஸாகர வேலாயாம் தர்ப்பாந் ஆஸ்தீர்ய ராகவ:
அஞ்சலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே."

"பின்பு கடலின் கரையில் தருப்பைகளைப் பரப்பி அதில் அமர்ந்து கைகளைக் கூப்பிக் கொண்டு கிழக்கு முகமா நோக்கிக் கடல் எதிரே இராமன் படுத்திருந்தான்" என வால்மீகி முனிவர் கூறியுள்ளதும் ஈண்டு அறிய வுரியது.

இவ்வாறு இரவும் பகலும் விரத சீலமாய் வருணனை எண்ணி இக் கருணையங்கடல் கடுந்தவம் புரிந்தது. ஏழு நாள் வரையும் அவன் வரவில்லை. கடலரசன் வராது போகவே இவ் வடலரசன் உள்ளம் கனன்றான்; உருத்தெழுந்தான். மந்திர

முறையோடு விதி நியமமாய் விரதம் புரிந்தும் அந்த அதி தேவதை வர வில்லையே என்று சிந்தை கொதித்துச் சீறி எழுந்து கூறிய தீர மொழிகள் வீர கம்பீரங்களாய் விளைந்து விரிந்தன.

ஊற்றம் மீக்கொண்ட வேலையான் உண்டிலை என்னும்
மாற்றம் ஈக்கவும பெற்றிலம் யாமெனும் மனத்தால்
ஏற்றம் மீக்கொண்ட புனலிடை எரிமுளைத் தென்னச்
சீற்றம் மீக்கொண்டு சிவந்தன தாமரைச் செங்கண். (1)

மாண்ட இல்லிழந் தயரும் நான் வழிதனை வணங்கி
வேண்ட இல்லைஎன் றுளித்த தாம் எனமனம் வெதும்பி
நீண்ட வில்லுடை நெடுங்கனல் உயிரப்பொடு நெடுநாண்
பூண்ட வில்லெனக் குனிந்தன கொழுங்கடைப் புருவம் (2)

ஒன்றும் வேண்டலர் ஆயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையில் தீரார்;
இன்று வேண்டியது எறிகடல் நெறியிது மறுத்தான்
நன்று நன்றென நகையொடும் புகையுக நக்கான். (3)

பாரம் நீங்கிய சிலையினன் இராவணன் பறிப்பத்
தாரம் நீங்கிய தன்மையன் ஆதலின் தகைசால்
வீரம் நீங்கிய மனிதன்என் றிகழ்ச்சிமேல் விளைய
ஈரம் நீங்கியது எறிகட லாமென இசைத்தான். (4)

புரந்து கோடலும் புகழொடு கோடலும் பொருது
துரந்து கோடலும் என்றிவை தொன்மையில் தோடர்ந்த;
இரந்து கோடலுள் இயற்கையும் தருமமும் எஞ்சக்
கரந்து கோடலே நன்றினி நின்றதென் கழறி. (5)

கானிடைப் புகுந்து இருங்கனி காயொடு நுகர்ந்த
ஊனுடைப் பொறை உடம்பினன் என்று கொண்டுணர்ந்த
மீனுடைக் கடற் பெருமையும் வில்லொடு நின்ற
மானுடச் சிறு தன்மையும் காண்பரால் வானோர். (6)

ஏதம் அஞ்சிநான் இரந்ததே எளிதென இகழ்ந்த
ஓதம் அஞ்சினேடு இரண்டும்வெந்து ஒரு பொடியாகப்
பூதம் அஞ்சும்வந்து அஞ்சலித்து உயிர்கொண்டு பொருமப்
பாதம் அஞ்சலர் செஞ்சவே படர்வர்என் படைஞர். (7)

மறுமை கண்ட மெய்ஞ்ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யார்என விரும்பார்;

குறுமை கண்டவர் கொழுங்கனல் என்னினும் கூசார்
சிறுமை கண்டவர் பெருமைகண் டல்லது தேரார். (8)

திருதி என்பதொன் றுமிதர ஊழியிற் சினவும்
பருதி மண்டிலம் எனப்பொலி முகத்தினன் பலகால்
தருதி வில்லெனும் அளவையில் தம்பியும் வெம்பிக்
குருதி வெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான்.

வாங்கி வெஞ்சிலை வாளியின் மற்றொரு வேலை
வீங்கு தோள்வலம் வீக்கினன் கோதையை விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கு முக்கணான் தேவியைத் தீர்த்துளது ஊடல். (10)

(வருணனை வழிவேண்டு படலம் 7-16)

இந்தப் பாசுரங்களை ஊன்றிப் படிப்பவர் எவரும் உள்ளத் துடிப்புகளையும் உணர்ச்சி வேகங்களையும் நன்கு ஓர்ந்து கொள்ளுவர். மானச தத்துவங்கள் அதிசய நிலைகளில் ஈண்டு வெளியாயுள்ளன. உரிய சமையங்களில் அரிய வீரனிடமிருந்து பெரிய உண்மைகள் பெருகி வந்திருக்கின்றன.

வருணனை நினைந்து விதிமுறையே மவுனமாய்த் தவம் புரிந்திருந்த இக் கோமகன் அவன் வந்தருளாமையை எண்ணி இகழ்ந்து சிந்தை கொதித்துச் சீறி மொழிந்தான். அம்மொழிகள் வீர ஒளிகளாய் வெளியே எழில் வீசி எழுந்தன.

புனலிடை எரி முளைத்து என்ன.

இராம பிரானுடைய மனத்தில் சினம் எழுந்தமைக்கு இது உவமையாய் வந்தது. எப்பொழுதும் தண்ணளி நிறைந்து இனிய நீர்மை தோய்ந்துள்ள புண்ணிய உள்ளத்தில் பொல்லாக் கோபம் பொங்கி எழுந்ததைக் கவி இங்ஙனம் காட்டியிருக்கிறார். குளிர்ந்த நீரில் கொடிய நெருப்புத் தோன்றியது போல் இனிய உளத்தில் இன்னாக் கோபம் விளைந்தது அதிசய புதுமையாய் நின்றது. இயற்கை நலம் மாறிச் செயற்கை நிலை மீறியது.

சாந்த சீலனான இராமன் சினந்து சீறும்படி வருணன் மடமை கொடுமையாய் நேர்ந்தது. நீர்மை நிறைந்த பேரோன் நீரின் அதிதேவதை மேல் சீறினான்; அது நீர்மேல் நெருப்பு என வந்தது. போர் மேல் மூண்டவனுடைய புலன் தெரிய நின்றது.

நீர்மேல் நெருப்பு நேரே தோன்றுது; ஒரு வேளை தோன்றின் அது ஊழித் தீபோல் உக்கிர வேகமாய் உலகத்தை அழிக்க வல்லதாம் என்னும் குறிப்பு இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது. கோதண்ட வீரனுடைய கோபம் மூதண்டங்களையும் பேதித்து ஒழிக்கும் பேராற்றலுடையது என்பதை ஓராற்றுன் உணர்ந்து உண்மை நிலைகளை யெல்லாம் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

வருணனை எண்ணி வழிபட்ட கருணையங்கடல் அவன் வராமையை நினைந்து நெஞ்சம் கொதித்தது. அந்தக் கொதிப்பு கடலிலிருந்து எழுந்த வடவைத் தீபோல் கிளர்ந்தது ஆதலால் புனலிடை எரி என அனலின் இனம் தெரிய வந்தது. கருணைக்கடல் கோபக் கடலாக மாறியுள்ள காட்சியை மறுகிக் காண்கின்றோம். யாண்டும் அருள் புரிபவன் ஈண்டு அழிவு செய்ய மூண்டு நின்றான். விளைந்துள்ள விளைவுகள் விழைந்து சிந்திக்க வுரியன.

முனியாதானை முனிவித்தீர் எனச் சுக்கிரீவன் தாமதித்த போது இராமன் கொண்ட கோபத்தை அனுமானிடம் இலக்குவன் இப்படிக் குறித்திருப்பது இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. உரைக் குறிப்புகள் ஊன்றி உணரத் தக்கன.

வானர வேந்தன் தாமதம் இம் மான வீரனுக்கு அன்று கோபத்தை விளைத்தது; வருண தேவனது தாமதம் இன்று சீற்றத்தை விளைத்துள்ளது. நெறிகேடுகளைக் கண்டபொழுது இந் நீதிமானிடம் பெருங்கோபம் மண்டி எழுகின்றது. விதிமுறை வழுவின் யாராயிருந்தாலும் அவரைச் சீறியழிக்கவே இவ் வீரன் விரைந்து எழுதலால் அந்த எழுச்சி தரும பரிபாலனத்தின் தகைமையாய் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

தாமரைச் செங்கண் சிவந்தன.

என்றது நெஞ்சில் கொண்ட கோபத்தின் நிலை தெரிய நின்றது. எவரையும் குளிர நோக்கும் அழகிய கண்கள் கொதிப் பேறியுள்ளன. அவ் வுண்மையைச் சிவந்த தன்மை செம்மையாக் காட்டியது. உரிய நீர்மையை ஊன்றிக் காணுக.

உள்ளம் கனன்று இங்ஙனம் உருத்தெழுந்த வீரன் நிலைமைகளை நினைந்து நெடிது மொழிந்தான்: "எனது அருமை மனைவியை இழந்து மறுகி வருந்தியுள்ள நான் உரிய வழியை நாடி

இன்று இவனிடம் இரந்து வேண்டியது பெரிய இழிவா நேர்ந்தது. எவ்வளவு மேன்மையாளரா யிருந்தாலும் ஒருவனிடம் போய் ஏதேனும் ஒன்றை விரும்புவாராயின் அவர் தப்பாமல் சிறுமையடைவர் என்னும் உண்மையை இன்று என் அனுபவத்தில் நேரே நன்கு அறிந்து கொண்டேன். ஆ! உலகம் எவ்வளவு கொடுமை யுடையது. எத்தனை மடமைகள் நிறைந்துள்ளது. செல்வம் பதவி முதலிய உயர் நிலையிலுள்ளவர்கள் அயலவர்களை மிகவும் இழிவாக எண்ணி இறுமாந்திருப்பது இயல்பான மடமையாய் என்றும் நிலைத்து வருகிறது. இன்று இந்த வருணனிடம் நான் என்ன பொருளைக் கேட்டேன்? இலங்கைக்குப் போக வழி எது? என்று தெரிய விரும்பினேன். இதுகூட ஒரு பெரிய பொருட் கொடையாகக் கருதிச் செருக்கி அவன் கரந்து நின்றுள்ளான்! இரந்து திரியும் ஓர் இரப்பாளனாக என்னை இகழ்ந்து அவன் தருக்கியிருத்தலை மறைந்து நிற்கும்நிலை வெளிப்படுத்தியுள்ளது. "தன் தாரத்தை இராவணனிடம் பறிகொடுத்து விட்டு அறிவு கெட்டுப்போய்ச் சாக மாட்டாமல் பரிதாப நிலையில் திரிகின்றான்; வீரமும் மானமும் யாதும் இல்லாதவன்" என இந்தக் கடலரசன் என்னைக் கருதிக் களித்து நிற்றலால் இங்ஙனம் இளித்து ஒளித்து நின்றான். பழித்து இழித்துப் படுசெருக்கோடு ஒளித்து நிற்கின்ற இவனை இன்று அடியோடு அழித்து ஒழிக்கவில்லையானால் நான் எடுத்தது வில்லே இல்லை. அடித்து உதைத்துப் பல்லை உடைத்தபோதுதான் கயவர்கள் பயன்படுவார்கள். நல்லவர்களிடம் மரியாதையாகப் பணிந்து கேட்க வேண்டிய முறைமையை இப்புல்லனிடம் இன்று நான் தெரியாமல் செய்ய நேர்ந்தமையால் வீணே சிறுமை அடைய நேர்ந்தேன். காட்டிலே புகுந்து கனி காய்களைத் தின்று பரதேசியாய் அலைந்து திரிகிற என்னுடைய சிறுமையையும் கடலரசன் என்று களித்துள்ள இவனது பெருமையையும் வெளியே அளந்து கொட்டி அமரர் முதல் யாவரும் நேரே காணும்படி இன்று நெறியே செய்கின்றேன். அளவிடலரிய பொருள்கள் நிறைந்துள்ள கடல்களுக் கெல்லாம் தலைவன் என்று அடல் மீறி நிற்கின்ற இவன் அவலமுடையனாய் அழிந்துபட நேர்ந்தான். எழு கடல்களும் ஐந்து பூதங்களும் என் காலடியில் வந்து விழுந்து கதறியழும்படி செய்து என் குல வீர நிலையை உலகறியக் காட்

டேனுயின் நான் சிலை ஏந்தி வெளி வந்த பயன் என்னும்? எனது மரபு நிலைமையை ஒரு சிறிதும் இவன் உணரவில்லை. உலகநிலை மிகவும் புன்மை யுடையது. இம்மை மறுமை முதலிய உண்மை நிலைகளை நன்குதெளிந்து பேரின்ப நிலையை நேரே அடைந்துள்ள தத்துவ ஞானிகளே ஆனாலும் இவ்வுலகில் வந்தால் மக்கள் அவரது தலைமை நீர்மையை உணர்ந்து கொள்ளாமல் தாழ்வே செய்வர். அகத்தின் மகிமைகளை ஆய்ந்து பாராமல் புற நிலைகளையே நோக்கி உலக மாந்தர் புலையாடிப் போகின்றனர். ஊரையெல்லாம் ஒருங்கே எரித்து அழிக்க வல்ல ஆற்றல் உடையதாயினும் தீ உருவில் சிறியதாயின் அதனைக்கண்டு எவரும் அஞ்சார். புன்மையாய் இகழ்ந்து நிற்பவர் உண்மை நிலையை உணர்ந்தபோது தான் உள்ளம் கலங்கிப் புகழ்ந்து பணிகின்றனர். உடுக்க நல்ல உடையுமின்றிச் சடை முடியனுயுள்ள சிறு மனிதன் என்று என்னை எளிதாக எண்ணி இறுமாந்துள்ள இந்தக் கடலரசனுக்கு எனது அடலாண்மையைச் சிறிது காட்ட வேண்டும்; தம்பி! வில்லை ஒல்லையில் கொடு'' என்று இந் நம்பி இங்ஙனம் இலக்குவனை நோக்கிக் கேட்கவே அந்த இளவல் உளம்மிக மறுகினன். மறுபடியும் அடுத்து வற்புறுத்தவே அவன் கடுத்துக் கொடுத்தான். கோதண்டத்தை வளைத்துப் பகழி தொடுக்க மூண்டான்; அண்டங்கள் யாவும் எதிர் ஒலி செய்து அதிர்ந்து நடுங்கின. நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி உள்ளம் வியந்து உணர்ச்சி மீதூர்ந்து நிற்கிறோம்.

ஏழுநாள் வரையும் விதி நியமங்களோடு வருணனை நினைந்து தவம்புரிந்திருந்தவன் பலனை எதிர்காணமையால் பரிந்து சினந்து நிலைமைகளை நினைந்து நெஞ்சம் கலுழ்ந்தான். பல பல எண்ணங்கள் படர்ந்து தொடர்ந்தன. உள்ளம்கன்றி உரைகள் எழுந்தன.

ஒன்றும் வேண்டலர் ஆயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவரேல் அவர் சிறுமையில் தீரார்.

இராமன் உள்ளம் நொந்து கூறியுள்ள இந்த அருமை வாசகம் அரிய பல உண்மைகளை மனித சமூகத்திற்கு இனிது உணர்த்தி யுள்ளது. உணர்ச்சி ததும்பி வெளி வந்திருத்தலால் உரைகளுள் உயர் பொருள்கள் நிறைந்து சுரந்திருக்கின்றன.

எந்தப் பொருளையும் யாரிடமும் விரும்பி வேண்டாத சிறந்த மானியும் ஒருவனிடம் வலிந்து போனால் "இவன் ஏதோ கேட்க வந்துள்ளான்" என்று தனது ஈனப் புத்தியால் இளிவாகவே அவன் எண்ண நேர்கின்றான்; இப்படிப்பட்ட அற்பர்களான புல்லர்களே இவ்வுலகில் செல்வர்கள் எனச் செழித்திருக்கின்றனர். உள்ளத்தில் சிறுமைகள் நிறைந்துள்ள அந்தச் செல்வச் சிறுவர்களிடம் சென்றவர் தம் பெருமையை யிழந்து பிழைபடுகின்றனர். அவமானமான அந்தப் பிழை பாட்டை இன்று எனது அநுபவத்தில் கண்டேன் என அநுதாபமாய் இம்மான வீரன் மறுகியுள்ளமையை உருகி நோக்கி உள்ளம் கவல்கின்றோம். ஏற்றுள்ள இழிவு உயிரை வாட்டியுள்ளது.

பிறரை எதிர் பார்த்தால் எவனும் அவமானமே அடைவான் என்பதற்குத் தன்னை உவமானமாக நேரே உரைத்தருளினான்.

அரசகுலத் தோன்றலாயினும் வரிசை குலைந்து வனவாசம் வந்துள்ளமையால் தன்னை ஒரு எளியனாகவே வருணன் எண்ணி இகழ்ந்துள்ளான் என்று இவ் வீரன் இன்னலுழந்துள்ளான்.

கையில் பொருள் இல்லாத மானிகள் செல்வரை மதியாமல் ஒதுங்கி யிருக்கவேண்டும்; அங்ஙனமின்றி ஏதேனும் விரும்பி அவர்பால் சென்றால் தம் பெருமையை அடியோடிழந்து சிறுமை அடையவே நேர்வர். அவர் என்ற சுட்டு அவரது உயர் நிலையை உய்த்துணர வந்தது. எவ்வளவு பெரியவரா யிருந்தாலும் ஒருவரிடம் போய் ஒன்றை வேண்டினால் அவ்வளவு மதிப்பும் அழிந்து போமே! என்று இக் குலமகன் அன்று அலறி யிருக்கின்றான்.

"ஒன்றும் வேண்டல ராயினும் செல்வர்பால்
உறுமிடி யவர்சார்ந்தால்
இன்று வந்தமை யாதினைக் கருதிமற்
றிவரென உளத்தெண்ணிக்
கன்று மாறுபல் குறிப்புரை நவிற்றுவர்
காதலின் அவர்பால்போய்
மன்ற வந்தது சிறுமையே இவர்க்கன்றி
மற்றிலை அறி பாவாய்!" (குசேலோபாக்கியானம்)

குசேலர் தமது மனைவியிடம் இவ்வாறு கூறியுள்ளார். இந்தக் காவியக் கவியைக் கவர்ந்து அந்த நூலாசிரியர் இந்தப் பாடலைச் செய்திருக்கிறார். உலக அனுபவத்தை உண்மையாக உணர்த்தி யிருத்தலால் மனித சமுதாயத்திற்கு இது ஒரு இனிய போதனையாய் அமைந்துள்ளது.

விறகு பற்றிய தழல் போல் பொருள் சேரச் சேர மனிதனிடம் ஆசை முறுகி எழுகிறது. அந்த மருளில் மயங்கியிருத்தலால் தன்பால் வருகின்ற எவரையும் அவன் மாறுபட எண்ணுகின்றான். அதனால் அவனிடம் செல்பவர் அவமானமடைய நேர்கின்றார். புல்லிய செல்வரது நிலை இவ்வாறு புன்மை மண்டியிருத்தலால் நல்ல மானிகள் அவரை அணுகாமல் அயலே ஒதுங்கி விடுகின்றனர்.

“பொருளிலே உலகம் இருப்பது ஆதலினால்
புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்
மருவினால் பொருளின் இச்சையால் இங்ஙன்
மருவுகின் றானெனக் கருதி
வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும்
மேவிலேன் எந்தைநீ அறிவாய்!
ஒருவுமப் பொருளை நினைத்தபோ தெல்லாம்
உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்!”

(அருட்பா)

உலக நிலையை அஞ்சி இராமலிங்கசுவாமிகள் ஒதுங்கி ஒழுகி வந்துள்ள உண்மையை இங்ஙனம் உணர்த்தி யிருக்கிறார். இந்தப் பெரியவரது புனித வாழ்வை நுணுகி யுணர்ந்து நாம் உள்ளம் உருகுகிறோம். வையை மையலை இகழ்ந்து வெறுத்து மெய்யறிவாளர் உய்தியை நாடி உயர்ந்து சென்றுள்ளார். மேலோர் சென்ற செந்நெறிகள் ஞாலம் உய்ய நலம்பல தந்து வருகின்றன. உரிய அனுபவங்கள் அரிய உறுதிகளை அருளுகின்றன.

பிறரிடம் ஏதேனும் ஓர் உதவியை நாடிச்சென்றால் பெரும்பாலும் பிழையே நேரும். பொருளுடையவர் பெருந்தன்மையாளராய்த் தரம் தெரிந்து எதையும் செய்ய மாட்டார். அவரிடம் போவது தவறுடையதாம் என்னும் உறுதியுணர்வை இராமன் வாக்கால் இங்கே நன்கு உணர்ந்து கொள்ளுகின்றோம்.

இன்று வேண்டியது எறிகடல் நெறி.

வருணனிடம் தான் அன்று விரும்பி வேண்டிய நிலையை இங்ஙனம் வெளியறிய விளக்கினன். கடலில் நிறைந்துள்ள மணிகள் முத்துக்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களை நான் யாதும் கேட்கவில்லை. இலங்கைக்குப் போக வழி எது? என்பதையே அறிய வேண்டினேன். சிறிய இந்த உதவியைக் கூட வாய் திறந்து சொல்லமாட்டாமல் கரவாய் மறைந்து நின்று கடலரசன் இளிவு செய்துள்ளான். கடமையை உணர்ந்து நடவாத அவனது மடமை மிகவும் கொடியது என இவ்வீரமூர்த்தியின் உள்ளம் வெகுண்டு துள்ளியது.

நன்று நன்று என நகையொடும் புகையுக நக்கான்.

வருணனது நிலைமையை நினைந்து தலையை அசைத்துத் தன்னுள்ளேயே இராமன் சிரித்துள்ள சிரிப்பை இங்கே குறிப்பாகக் கூர்ந்து பார்க்கிறோம். நிகழ்ச்சிகளை ஓர்ந்து திகைக்கின்றோம். நிலைமைகள் நெடிய திகிலை விளைத்து நிற்கின்றன.

நன்று நன்று என்றது இகழ்ச்சிக் குறிப்பில் வெளி வந்த எதிர்மறை மொழி. கடலரசனுடைய செருக்கும் களிப்பும் திமிரும் தீமையில் மீறியுள்ளன என்பதை இக் குறிப்புரை புலப்படுத்தியது. யாதும் செய்ய இயலாத எளியனாகத் தன்னை அவன் எண்ணியுள்ளான் என்று இவ்வீரன் இவ்வண்ணம் பரிகசித்துச் சிரித்தான். பரிகாச நகை விரிவான பொருளை விரவி எழுந்தது.

நிலைமை தெரியாமல் நெஞ்சம் செருக்கியிருக்கிறான் என்று நினைந்து சினந்து நகைத்தான். உள்ளத்தில் சினத் தீ மண்டி எழுந்தமையால் வெளியே நகையோடு புகையும் பொங்கிவந்தது.

நகையும் புகையும் தொகையாகத் தோன்றியுள்ளமையால் நகைத்தவனுடைய நிலைமை தலைமைகளை நேரே உணர்ந்து கொள்ளுகிறோம். மனக் கொதிப்போடு சிரிப்பு மருவி எழுந்துள்ளது.

உயர்ந்த மானவீரன் ஆதலால் நேர்ந்துள்ள அவமானத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் கொதித்தான். தன்னை இளிவாக வருணன் எண்ணியுள்ளான் என்ற எண்ணம் இக் கோமகன் உள்ளத்தில் பதியவே கொதிப்புகள் கதித்தெழுந்தன. நிலைமைகளை யெல்லாம் யூகமாய் நினைந்து வேகமாச் சினந்தான்.

இராவணன் பறிப்பத் தாரம் நீங்கிய தன்மையன்.

தன்னை இன்ன இன்னவாறு கடலரசன் எண்ணியிருப்பான்; அந்த எண்ணத்தினலேதான் இகழ்ந்து கரந்துள்ளான் என்று இவ் வீரன் இவ்வண்ணம் பரிந்து விரைந்தான். "தன் மனைவியை இராவணன் கவர்ந்து கொண்டு போயிருக்கிருன்; அவனை யாதும்செய்யாமல் அயலே அகலவிட்டு அவமே இவன் அலைந்து திரிகின்ருன்" எனத் தன்னைக்குறித்துச் சின்னத்தனமா எண்ணியிருத்தலினலேதான் இவ்வளவு அவமதிப்பாக வருணன் ஒதுங்கி நிற்கிருன் என உள்ளம் வருந்தி யிருக்கிருன்.

இயல்பான சீவ சுபாவங்கள் இங்கே வெளியாயுள்ளன. தனக்கு நேர்ந்துள்ள கேடுகளை அயலார் அறியாதிருப்பினும் அறிந்து இகழுவர் என்று தன் உள்ளம் குன்றி உளைந்து உழல்வது மனித இயல்பாய் மருவியுள்ளது. அல்லல்களால் அவலமடைந்துள்ளவர் பல வகைகளிலும் கவலைகள் அடைய நேர்கின்ருர். எல்லாரும் எளிதாகவே எண்ணித்தான் இகழ்ந்து நிற்பார் என நினைந்து தளர்ந்து அவர் நெஞ்சம் கவலும் நிலைமையைத் தமது தலைவனுடைய வாக்குமூலமாக் கவி ஈண்டுக் காட்டியிருக்கும் காட்சி கருதிக் காண வுரியது.

வீரம் நீங்கிய மனிதன்.

தன் வேண்டுகோளுக்கு விரைந்து வந்து வருணன் முகம் காட்டாமல் மறைந்து நிற்பதற்குக் காரணம் யாதாயிருக்கலாம்? என்று கருதி வரும்போது இறுதியில் இராமன் இவ்வாறு எண்ணினன். உறுதிமொழி உள்ளத்தை உணர்த்தி யுள்ளது.

வருணன் தேவர் இனத்தைச் சேர்ந்தவன்.

இராமன் மனிதர் மரபினன்.

உயர்ந்த சாதியில் பிறந்துள்ளோம் என்ற அந்தக் குலச் செருக்கால் தன்னை மதியாதிருப்பானே? என்று மறுகி யுளைந்தான். சாதித் திமிரோடு வேறு கருவமும் மருவியிருக்கும் என உறுதி செய்தான். தாரத்தை இழந்து தனித்திருத்தலால் வீரம் இல்லாதவன் என்று நினைந்து தான் அவன் ஈரம் நீங்கி இங்ஙனம் இழிவு செய்ய நேர்ந்தான் என அழிவு செய்யும் குறிப்பில் இவ் விழுமிய கோமகன் வெளியே ஆர்த்து உருத்தான்.

உத்தம வீரன் உள்ளம் கடுத்து உருத்துத் துடிக்கிறான்.

வீரம் மனிதனை மகிமைப் படுத்துகின்றது. அதனை யுடையவன் எவனோ அவனே மேலான மனிதனாய் யாண்டும் மேன்மை எய்தி நிற்கிறான். அந்தப் பான்மையில் தலை சிறந்து நிற்கின்ற குல வீரன் கடலரசனது நிலைமை மிகவும் மடமையானது என அடலாண்மையோடு இகழ்ந்து பேசுகிறான். தன்னுடைய நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் தவறாக ஒளிந்துள்ளான் என நேர்ந்துள்ள நிலைமைகளை எல்லாம் நினைந்து வருந்தினான்.

இனிய அரசை இழந்து கொடிய வனம் புகுந்து உரிய மனைவியைப் பிரிந்து பெரிய பரிதாப நிலையில் மறுகி யிருத்தலால் அந்த மறுக்கங்கள் எல்லாம் வருணனது அவமதிப்பான இகழ்ச்சிக்கு ஏதுவாயின என்று இக்குலவீரன் எண்ணி நொந்தான்.

மறுமைகண்ட மெய்ஞ்ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமைகண்டபின் யாவரும் யார்என விரும்பார்.

அரச செல்வத்தை இழந்து இது பொழுதுள்ள நிலைமையை நினைந்து வருந்தி இராமன் வாய்மொழியாக இந்த வாசகம் வந்திருக்கிறது. உதயமாய் வருகிற வார்த்தைகள் இதய ஒலிகளாய் எதிரொலி செய்கின்றன. நித்திய அநித்திய நிலைகளை யெல்லாம் நேரே தெளிந்து பேரின்ப நிலையை அடைந்துள்ள பெரிய தத்துவ ஞானியே ஆயினும் அவர் கையில் பொருளில்லையானால் இவ்வுலகில் எவரும் அவரை மதியார் என இம் மதிமான் இங்ஙனம் மறுகி மொழிந்துள்ளான்.

உலக நிலையின் புன்மைகளை உள்ளம் நொந்து பேசி வருவதில் அரிய பல உண்மைகள் தெளிவா வெளி வந்திருக்கின்றன.

முழு மடையன் ஆயினும் பொருளிருந்தால் அவனை எவரும் மதித்து மரியாதை செய்கின்றனர். விழுமிய பேதை எனினும் பொருள் இல்லையேல் அவனை மதியாமல் போகின்றனர். அகத்தினுள்ள பண்பாடுகளை அறிந்து போற்றாமல் புறத்தில் புல்லியுள்ள போலி நிலைகளைப் புகழ்ந்து போற்றி வருவது கேலிக் கூத்தாய்க் கிளர்ந்து வருகிறது. மருண்ட புன்மையில் மனித இனம் இருண்டு கிடக்கிறது. உண்மை யுணர்வு குன்றிப் புன்மையில் புலையாடி யுழலுகிறது. தரும நெறிகளை அருமை தெரிந்து பேணாமையால் யாண்டும் அவல இழிவுகள் பெருகி யிருக்கின்றன.

மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர் என்றது அவரது மாட்சி தெரிய வந்தது. இந்த உலக செல்வங்களையெல்லாம் ஒரு சிறிதும் மதியாத பெரிய ஞான சீலர்களைச் சிறிய புலை வாழ்வில் உழலுகின்ற மனிதர் மதியாது ஒழியின் அதனால் அவர்க்கு யாதொரு குறையுமில்லை. உயர்ந்தாரை உவந்து பேணாத இழிந்த பேதைகள் என்னும் இழிபழி இவர்க்கே விளைகின்றது. இழிந்த புன்மை நெஞ்சர் உயர்ந்த நன்மையாளரை உணர்ந்து கொள்ளாமையால் ஊன நிலையிலேயே உழன்று ஈனமடைகின்றனர்.

“பழகப் பழகப் பாலும் புளிக்கும்” என்னும் பழமொழி மனிதனது உரிய நிலையைத் தெளிவாக வெளியாக்கி யுள்ளது. பால் அனைய மேலோரும் நாலு நாள் நேரே நெருங்கிப் பழக நேரின் மனித வுலகம் அவரை எளிதாக எண்ணி யாதும் மதியாது அயலே அகன்று போகின்றது. கண் எதிரே கண்டதை இகழ்ந்து அகன்று போவதும் காணாததை உவந்து புகழ்ந்து பேசுவதும் உலக இயல்பாய் விரிந்துள்ளது.

பூவிரி உருவக் கண்ணிப் பொலங்குழை யிலங்கு சோதித்
தேவரே எனினும் தோன்றச் சில்பகல் செல்ப வாயின்
ஏவரே போல நோக்கி இகழ்ந்துரைத்து எழுவதன்றே
மாவிரி தானை மன்ன! மனிதரது இயற்கை என்றான். (1)

முன்னம்ஓர் கருமம் வேண்டி மொழிபவேல் மனிதர் தம்மால்
என்னவ ரேனும் ஆக இகழ்ந்திடப் படுப போலாம்;
அன்னதே உலக வார்த்தை யாவதின்று அறியும்வண்ணம்
மின்னவின்று இலங்கும்வேலோய்! நின்னுழைவிளங்கிற்றன்றே.

வரைமலி வயங்கு தோளாய்! வியாதியால் மயங்கி னார்க்குச்
சுரைமலி அமிர்தத் தீம்பால் சுவை தெரிந் துண்ண லாமோ?
விரைமலி விளங்கு பைந்தார் விஞ்சையர் செல்வம் தானும்
நுரைமலி பொள்ளல் யாக்கை மனித்தர்க்கு நுகரலாமோ? (3)

உள்ளிய மரங்கொள் சோலை மண்மிசை உறையு மாந்தர்
ஒள்ளியர் ஏனும் தக்கது உணர்பவர் இல்லை போலாம்?
வெள்ளியம் சிலம்பின் எங்கோன் விடுத்ததே ஏதுவாக
எள்ளி ஒருரையும் ஈயாது இருந்தனை இறைவ! என்றான். (4)

(சூளாமணி)

கேசரன் என்னும் விஞ்சையன் இவ்வுலகத்து அரசனை நோக்கி இவ்வாறு கூறியிருக்கிறான். விஞ்சையர் வேந்தன்

விரும்பி எழுதிவிடுத்த ஓலையைக் கொண்டுவந்து அந்தத்தூதுவன் பயாபதி என்னும் அரசனிடம் கொடுத்தான். தன்னோடுசம்பந்தம் செய்துகொள்ள வேண்டி விழைந்து எழுதியுள்ள அவ்வுரைகளைக் கண்டதும் உள்ளம் வியந்து மன்னன் சிறிது போது மவுனமாயிருந்தான். விம்மித வியப்பினால் அவன் அங்ஙனம் பதில்பேசாமல் இருப்பதை நோக்கி வந்ததூதன் மாறுக எண்ணினான். தனது அரசனுடைய வேண்டுகோளை மதியாமல் இகழ்ந்துள்ளான் என்று நினைந்து அவன் இவ்வாறு சினந்து பேசினான். இந்த நிகழ்ச்சியும் பேச்சும் நமது காவிய நீர்மையோடு ஒத்திருத்தலை உய்த்துணர்ந்து இங்கே உவந்து நிற்கிறோம். கவிகளுள் பொதிந்துள்ள கருத்துக்கள் கருத்தூன்றி உணர வுரியன.

உலக மக்களுடைய இயல்புகளையும் நிலைமைகளையும் பல வகைகளிலும் நம் கவிஞர்பிரான் அதி விநயமாய்க் காட்டி வருகிறார். காவிய நாயகன் வாயிலாகச் சீவிய வுண்மைகளை விளக்கி வருவது திவ்விய வுணர்ச்சிகளாய்ப் பொங்கி வருகிறது.

குறுமை கண்டபின் கொழுங்கனல் என்னினும் கூசார்.

நெருப்பு எதையும் சுட்டு எரிக்க வல்லது; அது உருவில் சிறியதா யிருந்தால் எவரும் அதற்கு அஞ்சுவதில்லை; யாரும் எளிதாக அணுகி அதனை அழிவு செய்யவும் துணிகின்றனர்.

உலகத்தை எல்லாம் ஒருங்கே வெல்லவல்ல ஆற்றல் இராமனிடம் அமைந்திருக்கிறது. இருந்தும் மனித உருவில் மருவியுள்ளமையால் அவனை யாரும் கூசாமல் அணுக நேர்கின்றனர். அந்த எளிமையை எண்ணியே வருணன் இளிவு செய்ய நேர்ந்தான் என்று இக் கோமகன் உள்ளம் கனன்று பேசுகின்றான் ஆதலால் இந்த உவமையை இங்கே உரிமையாக் கூறினான்.

சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறார்.

உருவின் சிறுமையைக் கண்டு இகழ்ந்து நிற்பவர் உள்ளத்தின் பெருமையைக் கண்டபோதுதான் உணர்ந்து தெளிவர்; எளிதாக எண்ணி இறுமாந்துள்ள இந்த வருணனுக்கு எனது வலிமையைக் காட்ட வேண்டும் என்று இவ் வீரமகன் விரைந்து மூண்டான். வெற்றித் துடிப்பு வீறுகொண்டு நின்றது.

தவம் புரிந்தபொழுது வில்லைத் தம்பி கையில் கொடுத்திருந் தான் ஆதலால் அதனைக் கொண்டு வரும்படி இளவலை நோக்கி இவ் அழகன் கேட்டான். கடலரசனுக்கு யாது நேருமோ? என்று சிறிது அவன் மறுகினன்.

தருதிவில் என்று அடுத்தடுத்து*இவன் கடுத்துக் கேட்கவே அவன் கொடுத்து நின்றான். கோதண்டத்தை இருகையாலும் ஏந்தி மிகவும் மரியாதையோடு இளையவன் மறுகிக் கொடுத்த காட்சி பெரிதும் பரிதாபமா யிருந்தது.

தம்பியும் வெம்பிக் கொடுத்தான்.

அண்ணனிடம் வில்லைக் கொடுக்கும் பொழுது இலக்குவ னுடைய உள்ளம் இருந்தநிலைமையை இவ்வுரையால் உணர்ந்து கொள்ளுகிறோம். குருதிவெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன் என அவனை இங்கே இங்ஙனம் காட்டி யிருக்கிறார். தமையனுடைய உள்ளம் கொதிக்கும்படி கடலரசன் மடமையாச் செய்து விட் டானே! என்ற கோபமும் தாபமும் அவன் உள்ளத்தில் ஓங்கி நின்றன. அந்த மனக் கொதிப்பைக் கண்கள் காட்டி நின்றன.

இந்நம்பியின் மன அமைதியையே அத்தம்பி யாண்டும் இனி துபேணி வருபவன் ஆதலால் ஈண்டுச் சினந்து சீறவே அவன் மனமும் வருந்தி வெகுண்டது. வில்லைக்கொடுக்கச் சிறிதுதாம தித்தபொழுது இராமன் சுளித்து நோக்கினன். அந்நோக்கம் அவன் உள்ளத்தை ஒள்ளெரி என வருத்தியது. ஒல்லையில் கொடுத்து விட்டு அடுத்து ஒதுங்கி அலமந்து நின்றான்.

தம்பியிடமிருந்து வாங்கிய கோதண்டத்தை வளைத்து இந் நம்பி நாண் ஒலி எழுப்பினன். அந்த ஓசை அண்டங்கள் யாவும் அதிர எழுந்தது.

தாங்கி நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் தேவியைத் தீர்த்துளது ஊடல்.

அம்பு தொடுக்குமுன் நாண்வலி நோக்க முதலில் ஆற்றிய செயலால் நேர்ந்துள்ள நிகழ்ச்சியைக் கவி இங்ஙனம் சுவையாக் காட்டியிருக்கிறார். தமரம் = ஓசை.

கைலாசகிரியில் பரமேசுரனோடு பார்வதிதேவி சிறிது ஊடி யிருந்தாள். அந்த ஊடலால் கணவனுடன் பேசாமல் ஒதுங்கி

இருந்த சமையம் இந்த ஓசை எழுந்தது; அண்டங்கள் நடுங்க அதிர்ந்தெழுந்த இக் கோதண்டத்தின் ஒலியைக் கேட்டதும் அத் தேவி திடுக்கிட்டுத் திகிலடைந்தாள். நெஞ்சம் அஞ்சிய அவள் தனது ஊடலேயும் மறந்து விரைந்து ஓடிப்போய் நாயகனை நன்கு தழுவிக் கொண்டாள். அப் பெருமானும் புன்னகை புரிந்து கோதண்டத்துக்கு நன்றி மொழிந்து மாதை மருவி மகிழ்ந்து கொண்டான்.

முக்கணன் தேவியை ஊடல் தீர்த்துளது என்ற இதில் எவ்வளவு அற்புதக் காட்சிகள் கூடியுள்ளன! கூர்ந்து நோக்கி நேர்ந்துள்ள நிலைமைகளை ஓர்ந்து கொள்ளுக. தன் தேவியை இழந்து கடலுக்கு வழி வேண்டி வருணனோடு வாதாடி நிற்பவன் எவ்வளவு பெரியவன் என்பதை இவ்வளவு நயமாக் கவி ஈண்டு விளக்கி யிருப்பது வித்தகக் காட்சியாய் விளங்கி நிற்கிறது. இராமனது கோபமும் நல்லவர்களுக்கு இன்ப நலங்களை விளைத் தருளும் என்பது ஊடல் தீர்ந்து கூடல் நேர்ந்ததால் காண வந்தது. தரும வீரனது மரும நிலை தெரிய நேர்ந்தது.

இக் கோமகனுடைய உக்கிர வீர பராக்கிரமங்கள் யாண்டும் திவ்விய மகிமைகளோடு செவ்விதாத் துலங்கி வருகின்றன.

விதிமுறையே விரதம் பேணி இறுதி வரையும் பொறுத்துப் பார்த்து முடிவில் தான் கோபம் மூண்டுள்ளது. நீதி நெறியே வேண்டிய தனது வேண்டுகோளை அவன் மதிக்கவில்லை என்று தெரியவே நெஞ்சம் கொதிக்க நேர்ந்தது. உத்தமச் சத்திரியனை தான் முதலில் இரந்து வேண்டியது தவறு என்று பின்பு வருந்தி நொந்தான். பொறுமையின் அருமையை உணராதவரிடம் அதனை உரிமையாக்கியது சிறுமையாயது என்று சீறி எழுந்தான்.

"க்ஷமயா ஹி ஸமாயுக்தம் மாமயம் மகராலய:
அஸமர்த்தம் விஜாநாதி திக்க்ஷமாம் ஈத்ருசே ஜநே."

"இந்தக் கடலரசன் பொறுமையுடைய என்னை எளியன் எனச் சிறுமையாக எண்ணினன்; இத்தகைய அற்பரிடத்தில் பொறுமை காட்டுவது தவறு" என்று இராமன் வெகுண்டு மூண்டான் என வால்மீகி முனிவரும் இங்ஙனம் கூறியுள்ளார்.

பொறுமை ஆடவர்க்கு அணியே; ஆயினும் எதிரி எல்லை மீறி இளிவு செய்ய நேர்ந்தால் ஒல்லையில் அவன் தலையைக் கிள்ளி எறிவதே ஒள்ளிய உயர் பூண் என இவ் வீர வள்ளல் உள்ளம் கனன்று உருத்துச் சீறிக் கடுத்து மூண்டான்.

கடல் வெந்தது.

வில்லை வளைத்து நாண் ஒலி எழுப்பி அக்கினி யாத்திரத்தை எடுத்துத் தொடுத்துக் கடலை நோக்கி இராமன் கடுத்து விடுத்தான். எங்கும் தீ பொங்கி எழுந்தது. நீர்க்கடல் நெருப்புக்கடல் ஆயது. யுக முடிவில் உலகம் முழுவதையும் ஊழித் தீ பற்றி எரிவது போல் கடல் முழுவதும் நெருப்புக் காடாய் நீண்டு பரந்தது. யாண்டும் தீச் சுவாலைகள் பயங்கர ஒலிகளோடு படர்ந்து நிமிர்ந்தன. நீரில் வாழ்ந்த சீவ செந்துக்கள் யாவும் உடல்கள் வெந்து உருமாய்ந்தழிந்தன. கொடிய சுடு தீ யாண்டும் நீண்டு பரந்து நெடிது ஓங்கினமையால் எவ்வழியும் வெவ்விய அழிவுகள் விரிந்து நின்றன. சல சரங்கள் எல்லாம் படு நாச மாயின. வில்லிலிருந்து விடுபட்ட பாணங்கள் கடலில் பாயவே ஆழி முழுவதும் ஊழித் தீயாய் மாறி உக்கிர வேகமாய் எரிந்தது. தேவர் முதல் யாவரும் திகிலடைந்து அலமரலடைந்தனர். அருகே நின்ற வானர சேனைகள் எல்லாம் அஞ்சி மருண்டு அயல் வெருண்டு ஓடின. "ஐயோ! இந்த மூர்த்தியை ஒரு மனிதன் என்று எண்ணி இதுவரையும் மதிமயங்கி இருந்தோமே!" என்று அங்கதன் சாம்புவன் முதலிய தலைவர்கள் எல்லாரும் நெஞ்சம் கலங்கி நெடுந்திகிலுடையராய் அயல் ஒதுங்கி நின்றனர். மண்ணும் விண்ணும் மறுகி அயர வாரி தீயாய் மாறி எரிந்தது. கடலில் குடி கொண்டிருந்த வடவைத் தீயும் உடல் நடுங்கி விரைந்து அயலே ஓடியது. அஞ்சன வண்ணனது அடு சரங்கள் ஊழித் தீயையும் உருத்தொழிக்கவே பஞ்ச பூதங்களும் அஞ்சி நடுங்கின. நீர் என்னும் பேரோடு நிலவியிருந்த அந்த இனம் பார் எங்கும் படுதுயருழந்தது.

அண்டமூலத்துக்கு அப்பால் ஆழியும் கொதித்தது; ஏழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்பிஎன்? தேவன் சென்னி
பண்டைநாள் இருந்த கங்கைநங்கையும்பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் கொள கொள கொதித்த தன்றே. (1)

இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகெலாம் ஈன்று மீளக்
கரக்கும் நாயகனைத் தானும் உணர்ந்திலன் சீற்றம் கண்டும்
வரக்கரு தாது தாழ்த்த வருணனின் மாறு கொண்டார்
அரக்கரே அல்லர் என்னு அறிஞரும் அலக்கண் உற்ருர். (2)

உற்ருெரு தனியே தானே தன்கணே உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கால் நடுவினிப் பிழைப்பது எங்ஙன்?
குற்றம்ஒன் றிலாதார் மேலும் கோள்வரக் குறுகும் என்னு
மற்றைய பூதம் எல்லாம் வருணனை வைத மாதோ! (3)

இராமன் கடல் மேல் சீறி அம்பு தொடுத்த பொழுது உலகம் பட்டுள்ள பாடுகளை இதில் உணர்ந்து கொள்ளுகிருேம். அதிசய ஆற்றல்களும் அரிய மகிமைகளும் இங்கே துதி செய்ய வந்தன. இராம பாணம் அகில வுலகங்களையும் அழிக்க வல்லது என்பதைக் கவி விநயமாக விளக்கியிருக்கிருர். அக்கினியை அதி தேவதையாக உடைய அம்பை எடுத்து மந்திர முறையோடு கோதண்டத்தில் பூட்டி விடுத்தான்; அந்த நெருப்புக் கணை கடலைச் சுட்டு எரித்ததோடு அமையாமல் நீர் நிலையங்களையெல்லாம் நிலை குலைத்து நெடுங் கொதிப்பை விளைத்தது. இந்த அண்டத்துக்கு அப்பால் உள்ள பெரும் புறக் கடலும் கொதித்தது; பிரம தேவன் கையிலிருந்த கமண்டல நீரும் கொதித்தது; சிவ பெருமான் தலையிலுள்ள கங்கையும் கொதித்தது; நீர் என்னும் பேரோடு சீர் அமைந்திருந்த யாவும் நெருப்பாய்க் கொதித்து நின்றன.

தேவன் சென்னி கங்கையும் பதைத்தாள்;
பார்ப்பான்குண்டிகைஇருந்தநீரும்கொளகொளகொதித்தது.

இந்தக் காட்சியை மானச நோக்கால் கூர்ந்து காண்பவர் எவரும் நேர்ந்துள்ள நிலைமைகளை நேரே ஓர்ந்து உணர்ந்து கொள்ளுவர். கடல் நீர் நிலையம் ஆதலால் அதனை இராம பாணம் விரைந்து எரிக்கவே அந்த இனத்துக்கெல்லாம் நெடுந்திகிலும் கொடுந்துயரமுமாயது. கடுந்தீ எங்கும் எரிந்தது.

கங்கை நங்கையும் பதைத்தாள் என்றதில் உள்ள உம்மை அவளது அதிசய மகிமையை அறிய வந்தது. சிவ பெருமானுடைய திருவருளைப் பெற்றுள்ள அந்தத் தெய்வ கங்கையும் இராமனது சினத்தால் தனது இனத்துக்கு நேர்ந்த அழிவு நிலையை

நினைந்து நெஞ்சம் துடித்தாள். என்றும் குளிர்ந்த இயல்பினையுடைய அவள் அன்று வெதும்பி நின்றது இவ் வென்றி வீரனுடைய நிலைமையை நன்கு விளக்கியது. இவன் உள்ளம் நீரை நோக்கி வெதும்பியதால் உலகிலுள்ள வெள்ளங்கள் எல்லாம் வெதும்ப நேர்ந்தன. தெய்வ நீர்களும் செய்வகை தெரியாமல் வெய்யதாய் வெதும்பி வெந்துயருழந்தன.

பார்ப்பான் = பிரமதேவன். அவனுடைய கமண்டல நீரும் கடும் சூடாய்க் கொதித்தது. கோள கோள என்றதனால் கொதிப்பின் அளவு நிலையை அறிந்து கொள்ளலாம். எல்லை மீறிய கொதிப்பால் நீர் அல்லல் அடைந்துள்ளது.

கங்கை நீரையும் கமண்டல நீரையும் குறித்தது நீர்களாயுள்ளன யாவும் நெடுங் கொதிப்பேறிய அந் நிலைமை தெரிய. இராமனது அடுதிறலாண்மையையும் அதிசய நிலைமையையும் அவனது சுடு சரம் உலகம் அறிய அன்று உணர்த்தி நின்றது.

"ஒற்றைச் சரம்சுட்ட உட்கடல்போல் புறத்து ஓலமிட
மற்றைக் கடல் வெந்தது எவ்வண்ணமோ மதமா அழைக்க
அற்றைக் குதவும் அரங்கர்வெங் கோபத்தை அஞ்சி அரன்
கற்றைச் சடையின் இடையே வெதும்பினள் கங்கையுமே."
(திருவரங்கத்து மாலை, 42)

நம் காவியக் கவியை அடியொற்றி இங்ஙனம் இது வந்துள்ளது.

தருமமூர்த்தியான இராமனுக்குக் கோபம் மூளும்படி செய்தமையால் எங்கும் கொதிப்புகள் மூண்டன. முனியாதானை முனியுமாறு துனி செய்தானே! என்று கடலரசனை உலகம் எல்லாம் இகழ நேர்ந்தன. அரக்கரினும் இரக்கம் கெட்ட கொடியவன் என வையத்தாரும் வானத்தாரும் அவனை வைது பழித்து வெய்துயிர்த்து நொந்தனர்.

உலகம் எல்லாம் பெற்றவன் முனியப் புக்கால்
நடுவினிப் பிழைப்பது எங்ஙன்?

இங்ஙனம் யாவரும் அவலமுடையராய்க் கவலை அடைந்து கடலரசனைக் கடுத்து வெறுத்து அடுத்து என்ன விளையுமோ? என்று இன்னலுழந்து ஏங்கி நின்றனர்.

மற்றைய பூதம் எல்லாம் வருணனை வைதது.

நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் இந்த ஐந்தின் கலவையால் உலகம் அமைந்துள்ளது. பஞ்ச பூதங்கள் என ஒரு தொகையாய் மருவியுள்ள இவற்றுள் நீரின் அதி தேவதையான வருணன் நெறிகேடான பிழை செய்யவே இராம கோபம் மூண்டது. அதனால் யாண்டும் அல்லல்கள் நீண்டன. நீளவே இந்தக் கொடிய துயரங்களுக்கெல்லாம் மூலகாரணமான அவனை வளி வான் முதலிய நான்கு பூதங்களும் வைது பழித்தன. மற்றைய பூதம் எல்லாம் வைத என்றது எய்தியுள்ள துயரங்களின் எல்லை தெரிய வந்தது. இராமபிரான்பால் அவை பேரன்புடையன என்பது நீரரசனை வைதமையால் நேரே விளங்கியது. தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவன் இந்த மூர்த்திக்குச் சினத்தை விளைத்தமையால் பூதங்கள் நான்கும் புலம்பி நொந்தன.

இவ்வாறு யாவரும் யாவும் அலமரலடையவே கடலரசன் கடுந்துயருழந்தான். நெடுந் தொலையில் நின்று நெஞ்சம் கலங்கினன்.

### வருணன் வருந்தி வந்தது.

இராமன் விதி முறையே தவம் புரிந்திருந்த போது நீரின் தேவன் வேறு காரியமாய் மாறியிருந்தான் ஆதலால் உரிய சமையத்தில் வந்து சேரமுடியவில்லை. கடல் எரி பற்றி எரியவே உடல் நடுங்கி விரைந்து ஓடி வந்தான். அவனுடைய பதைப்பும் துடிப்பும் பரிதாப நிலைகளில் படிந்து வந்தன.

எழுசுடர்ப் படலையோடும் இரும்புகை எழும்பி எங்கும்
வழிதெரி வறிவிலாத நோக்கினன் வருணன் என்பான்
அழுதழி கண்ணன் அன்பால் உருகிய நெஞ்சன் அஞ்சித்
தொழுதெழு கையன் நொய்தில் தோன்றினன் வழுத்தும்
[சொல்லான். (1)

நவையறும் உலகிற்கு எல்லாம் நாயக! நீயே சீறின்
கவையநின் சரணம் அல்லால் பிறிதொன்று கண்டதுண்டோ?
இவையுனக் கரியவோதான் எனக்கென வலி வேறுண்டோ?
அவையம் நின் அபயம் என்று அடுத்தடுத்து அரற்றுகின்றான்.

ஆழிநீ அனலும்நீயே அல்லவை எல்லாம நீயே
ஊழிநீ உலகும்நீயே அவற்றுறை உயிரும் நீயே
வாழியாய் அடியேன் நின்னைமறப்பனோ வயங்கு செந்தீச்
சூழுற வுலைந்து போனேன் காத்தருள் சுருதி மூர்த்தி! (3)

காட்டுவாய் உலகம்காட்டிக் காத்தவை கடையில் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே உனக்கும் ஒண்ணுததுண்டோ?
தீட்டுவாள் பகழி ஒன்ருல் உலகங்கள் எல்லாம் தீய
வீட்டுவாய் நினையின் நாயேற்கு இத்தனை வேணுமோதான். (4)

சண்டவான் கிரண வாளால் தயங்கிருட்காடு சாய்க்கும்
மண்டலத் துறையும் சோதிவள்ளலே! மறையின் வாழ்வே!
பண்டை நான்முகனே ஆதிச் சராசரத்துள்ள பள்ளப்
புண்டரீகத்து வைகும் புராதனு போற்றி போற்றி. (5)

கள்ளமாய் உலகம் கொள்ளும் கருணையாய் மறையிற்கூறும்
எள்ளலாகாத மூலத்து யாதுக்கும் முதலா யுள்ள
வள்ளலே காத்தி என்ற மாகரி வருத்தம் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனு போற்றி போற்றி. (6)

அன்னைநீ அத்தன்நீயே அல்லவை எல்லாம் நீயே
பின்னும்நீ முன்னும்நீயே பேறுநீ இகழ்வும் நீயே
என்னைநீ இகழ்ந்த தென்றது எங்ஙனே ஈசன் ஆய
உன்னைநீ உணராய் நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை. (7)

பாயிருள் சீய்க்கும் தெய்வப் பருதியைப் பழிக்கும் மாலை
மாயிருங் கரத்தால் மண்மேல் அடியுறை யாக வைத்துத்
தீயனசிறியோர்செய்தால்பொறுப்பதேபெரியோர்செய்கை
ஆயிரநாமத்துஐயா! சரணம் என்று அடியில் வீழ்ந்தான்.

வருணன் அலறி ஓடிவந்து இராமன் அடியில் வீழ்ந்து கதறிப் புலம்பிப் பதறிப் போற்றியிருக்கும் நிலைமையை இங்கு நேரே பார்க்கிறோம். நிகழ்ச்சிகள் வியப்புகளாவிரிந்து தெய்வீக நீர்மைகளை வெளிப்படுத்தியிருக்கின்றன. சரித விளைவுகள் அரிய பல மருமங்களை விளக்கி உரிய வீரனை உணர்த்தி வருகின்றன. வந்து சரண்புகுந்துள்ளவன் வாய் மொழிந்துள்ள உண்மைகள் சிந்திக்க வுரியன. துதிமொழிகள் அதிசய ஒளிகளாயுள்ளன.

## துதித்து நின்றது

மறுகி ஓடி வந்து அடி விழுந்து தொழுத வருணன் அன்பால் உருகி உரையாடினுன்: "அகிலலோக நாயக! அறியாமையால் தாமதித்து நின்றேன்; பொறுத்தருள்; நீ உள்ளம் கொதித்தால் உலகம் என்னும்? நிலம் நீர் முதலிய பஞ்ச பூதங்களும் நீயாய் உள்ளாய்! சராசரங்களுக்கெல்லாம் உயிர்நிலையமாயுள்ள நீயே சீற நேர்ந்தால் வேறே யார் அவற்றை ஆதரித்தருளுவார்?

தந்தையாய்த் தாயாய் நின்று சீவகோடிகளை எந்தவேளையும் காத்து வருகிறாய். உனது திருவருளினால் நீரின் தேவதையாய் நிலவி நின்று எனது கடமையை யான் வழுவாமல் செய்து வருகிறேன். இன்று ஓர் மடமையால் தாமதிக்க நேர்ந்தேன். ஆறு கடல்களுக்கும் அப்பாலுள்ள ஏழாவது கடலில் மீனரசுகளுக்குள் பெரும்போர் மூண்டது. திமிங்கிலகிலம் என்னும் பெரிய சலசரங்களிடையே மூண்ட கொடிய சண்டையைத் தீர்க்கும் பொருட்டு அங்கே போயிருந்தேன். அதனால் ஆண்டவன் வேண்டுகோளை அறியாமல் அயர்ந்து நின்றேன். கடல் வெந்த போது என் உடல் வேக நேர்ந்தது; நேரவே உண்மையை உணர்ந்து உள்ளம் நொந்து விரைந்து ஓடி வந்தேன். வள்ளலே! இவ்வளவு அல்லல்கள் நேரும்படி அயர்ந்து நின்ற எனது பிழையை நினைந்து வருந்துகின்றேன். பெருங்கருணை செய்து மன்னித்தருள்!" என இன்னவாறு வருணன் மறுகி வேண்டவே இராமன் சினம் தணிந்து இரங்கி நின்று அவனை இனிது நோக்கி இதம் புரிந்தான். ஏறிய சீற்றம் மாறி இனிய கருணை மீறியது.

கடலரசனுடைய துதி மொழிகள் பரம தத்துவ நிலைகளை உய்த்துணரச் செய்தன. ஞான நோக்கால் ஆதி மூல நிலையை அறிந்து கொண்டமையால் உழுவலன்புடையனாய் உவந்து துதித்தான். துதி மொழிகள் அதிசய ஒளிகளாய் வந்தன.

காட்டுவாய் உலகம் காட்டிக் காத்து அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே உனக்கும்ஒன் றுளதுஉண் டோ?

"படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூவகைத் தொழில்களையும் மூன்று மூர்த்திகளாய் அமர்ந்து செய்கிறாய்; அந்த மூவருக்கும் மூல முதல்வனாய் நின்று காலமும் கணக்கும் கடந்து அநாதி நித்தியனாய் நிலவியுள்ளாய்; உனது மகிமை அளவிடலரியது; அதிசயமுடையது" என இங்ஙனம் உளம் மிக மகிழ்ந்து விதிமுறையே விழைந்து வியந்து துதித்துள்ளான்.

மனித உருவில் மருவியுள்ள இராமன் எதிரே நின்று வருணதேவன் தொழுது போற்றியுள்ள மொழிகள் வெளியுலகம் விழித்து நோக்கித் தொன்மை நிலைமையைக் கண்டு களிக்கும்படி உண்மையோடு காட்டி நிற்கின்றன.

நேரே தோன்றி நிற்கிற உருவத் தோற்றத்தை மறந்து ஆதி மூல நிலையை உருகி நோக்கி உரையாடுகின்றான் ஆதலால் உரைகள் பரம நீர்மைகள் தோய்ந்து ஞான மணம் கமழ்ந்து பத்திப் பரவசமாய் வெளியே ஒளி வீசி வந்துள்ளன.

உலகு உயிர்களுக்கெல்லாம் என்றும் நிலையான ஆதாரமாய் நிலைத்து நிற்கிற தலைமைத் தெய்வமே இந்த நிலைமையில் வில் ஏந்தி வந்துள்ளது என்று உள்ளம் தெளிந்து உணர்வொளி விரிந்து உருகிப் போற்றியுள்ளான்.

அன்னை நீ! அத்தன் நீயே! அல்லவை எல்லாம் நீயே!

சீவ கோடிகளுக்கெல்லாம் தாயாய் அகில சராசரங்களும் தானேயாய் மருவியிருக்கும் மருமத்தை இது உணர்த்தியுள்ளது.

"அத்தனாகி அன்னை ஆகி ஆளும்எம் பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே! (1)

ஆணினோடு பெண்ணுமாகி அல்லவோடு நல்லவாய்
ஊணொடு ஓசை யூறுமாகி ஒன்றலாத மாயையாய்
பூணிபேணும் ஆயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்
காணிபேணும் மாணியாய்க் கரந்து சென்ற கள்வனே." (2)

(திருச்சந்த விருத்தம்)

பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ
மற்றையார் ஆவாரும் நீபேசில்---எற்றேயோ
மாயமா மாயவளை மாயமுலை வாய்வைத்த
நீயம்மா! காட்டு நெறி. (இயற்பா)

திருமழிசையாழ்வாரும், நம்மாழ்வாரும் திருமாலை நோக்கித் துதித்துள்ள இந்தப் பாசுரங்கள் இங்கே சிந்திக்கத்தக்கன. யாவும் மாலின் மயமாய் மருவியுள்ளன; அந்த மூல முதல்வனே இந்தக் கோலத்தில் வந்திருத்தலால் வருண தேவன் இவ்வாறு பருணிதனைப் பரிந்து வருணித்து வாழ்த்தினான்.

உன்னை நீ உணராய்! நாயேன் எங்ஙனம் உணர்வேன்?

இறுதியில் இங்ஙனம் கூறியிருக்கிறான். விநய மொழிகள் வித்தக வாசகங்களாய் வந்திருக்கின்றன. தனது வேண்டு

கோளை உணர்ந்து விரைந்து வரவில்லையே! என்று சினந்து சீறிய இராமனை நோக்கி வருணன் இவ் வண்ணம் வினவியது தனக்கு உய்வண்ணம் உதவ வேண்டி. "உன் நிலைமை உனக்கே தெரியாதே; நான் எப்படித் தெரிவேன் அப்பா!" என்று இப்படி வாதாடியிருக்கிறான். "உன்னை இன்னான் என்று உண்மையாக நீ உணர்ந்திருந்தால் கடலுக்கு வழி காட்டும்படி என்னை நோக்கி வேண்டி யிருக்கமாட்டாய்; உணர்ந்து கொள்ளாமையினாலே தான் மந்திரசெபம் செய்து மறுக நேர்ந்தாய்!" என அரிய மரும நிலையை உரிமையோடு உணர்த்தினான். "அவதார நிலையிலும் உன்னை நீ உணராதது போல் பரத்துவ நிலையிலும் உணர மாட்டாய் ஆதலால் என்றும் உணர்விழந்துள்ள என்னை இன்று உருத்து மூண்டது பொருத்தம் ஆகுமா? பொறுத்தருள்!" எனச் சீறிய சீற்றம் மாறியருள இங்ஙனம் கூறி நின்றான்.

யாண்டும் எவ்வகையிலும் யாருக்கும் அளவிடலரிய பெருமையுடையவன் என்பான் உன்னை நீ உணராய்! என்று நன்னயமா நவின்றான். தனக்கும் தன் தன்மை அறிவரியான் எனத் திருமாலின் பரத்துவத்தைக் குறித்து நம்மாழ்வார் இவ்வாறு உரைத்திருப்பதும் ஈண்டு ஊன்றி உணர வுரியது.

இப்படி அதிசய நிலையில் உள்ள பரம்பொருளே கரசரணாதி அவயவங்களை மருவி மனித வுருவில் இனிதமர்ந்து உல்லாசமான வீர விளையாடல் புரிய வில் எடுத்து இவ் வுலகில் வந்திருக்கிறது என நேரே சொல்லெடுத்துத் துதித்து அரிய மணி மாலை ஒன்றை அடியுறையாக வைத்து வருணன் உழுவலன்போடு தொழுது நின்றான். கருணையங்கடலான இவன் அவனை உரிமையோடு உவந்து நோக்கி "என் வில்லில் தொடுத்த பகழிக்கு எப்படியும் ஓர் இலக்கு வேண்டுமே! அதனை விரைந்து சொல்லி விடு" என்று பரிந்து கேட்டான்.

அந்தக் குறிக்குக் குறியீடு செய்ய உடனே அவன் கூர்ந்து ஓர்ந்தான். "பாவ காரியங்களையே ஆதி முதல் பயின்று வருகிற தீவினையாளரான அசுரக் கூட்டம் காந்தாரம் என்னும் தீவில் உள்ளது; அதன் மேல் ஏவியருள்" என்று அத் திசையை நோக்கிக் கையைக் காட்டினான். வெய்யவருள்ள அத் திக்கைக் குறி வைத்து இவ் வீரன் கணையை விட்டான். வில்லிலிருந்து விடு

பட்ட அது ஒல்லையில் ஓடி அத் தீவை ஒருங்கே அழித்து ஒழித்து மீண்டு விரைந்து வந்து இந்த ஆண்டகையின் அம்புத் தூணியை அடைந்து கொண்டது. அந்த அற்புதச் செயலை நோக்கி அமரர் யாவரும் அதிசயித்து ஆர்வம் மீதூர்ந்து துதி செய்து நின்றனர்.

"மன்னவ! மருகாந்தாரம் என்பதோர் தீவின் வாழ்வார்
அன்னவர் சதகோடிக்கு மேலுளார் அவுணராயோர்
தின்னவே உலகமெல்லாம் தீந்தன; எனக்கும் தீயார்;
மின்னுமிழ் கணையை வெய்யோர் மேற்செல் விடுதி! என்றான்.

நேடி நூல் தெரிந்துளோர்க்கும் உணர்விற்கும் நிமிர நின்றான்
கோடி நூறாய தீய அவுணரைக் குலங்களோடும்
ஓடி நூறென்று விட்டான் ஓரிமை ஒடுங்கா முன்னம்
பாடி நூறாக நூறி மீண்டதப் பகழித் தெய்வம். (2)

ஆய்வினை யுடைய ராகி அறம்பிழை யாதார்க் கெல்லாம்
ஏய்வன நலனே யன்றி இறுதிவந் தடைவதுண்டோ?
மாய்வினை இயற்றி முற்றும் வருணன்மேல் வந்த சீற்றம்
தீவினை யுடையார் மாட்டே தீங்கினைச் செய்த தன்றே. (3)

பாபமே இயற்றி னோரைப் பன்னெடுங் காதம் ஓடித்
தூபமே பெருகும் வண்ணம் எரியெழச் சுட்ட தன்றே
தீபமே அனைய ஞானத் திருமறை முனிவன் செப்பும்
சாபமே ஒத்தது அம்பு தருமமே வலிய தம்மா!" (4)

(வருணனை வழி வேண்டு படலம் 78-81)

இங்கே நிகழ்ந்துள்ள விசித்திர நிகழ்ச்சியை வியந்து பார்க்கிறோம். வினை விளைவுகள் அறிவாராய்ச்சிகளைக் கடந்து அதிசய நிலைகளில் ஓங்கி நிற்கின்றன. வருணன் மீது சீறித் தொடுத்த அம்பு வேறு ஒரு வழியில் விரைந்து பாய்ந்து அழிவு செய்து ஒளிவடிவாய் மீண்டு வந்துள்ளது.

பகழித் தெய்வம்.

என இராமபாணத்தை இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கத் தக்கது. ஒரு போர்க் கருவிபோல் ஆயுத உருவில் அமைந்திருப்பினும் தெய்வீக ஆற்றலுடையது ஆதலால் பகழித் தெய்வம் என அதன் பான்மை மேன்மைகளைக் கூர்மையா ஓர்ந்து நீர்மை நிலைமைகளைத் தேர்ந்து கொள்ள வுணர்த்தினார்.

தரும நெறிகளைக் காக்கவும் அதர்ம நிலைகளைப் போக்கவும் இராமன் அவதரித்து வந்துள்ளான் ஆதலால் அவ் வுண்மையை வருணதேவன் ஈண்டு நுண்மையாக வுணர்த்தியருளினான்.

தனக்கு நேரே பிழைபாடுகள் புரிந்த வருணனை வதைக்கும்படி அம்பை எடுத்து இவன் தொடுத்தான்; அவனை விடுத்து அயலே கடுத்து வேறொரு இனத்தை அடியோடு அழித்திருப்பது கொடிய பழிபோல் தோன்றுகின்றது. வெளித் தோற்றத்தில் விபரீதமாய்த் தோன்றினும் உள்ளே புதைந்துள்ள மருமங்களை ஊன்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

எவ்வழியும் தீயோரை அழித்து ஒழிக்கவும், நல்லோரை அளித்து அருளவும் இராமன் வில் எடுத்து வந்திருக்கிறான்; வந்த அந்த வேலையை வாய்த்த இடமெல்லாம் சிந்தை துணிந்து விரைந்து விரைந்து செய்து வருகிறான்.

அவுணர் தீவினை உலகம் எல்லாம் தீந்தன.

மருகாந்தாரம் என்னும் தீவில் உறைந்திருந்த அசுரர்களுடைய கொடிய நிலைகளையும் கொலை பாதகங்களையும் இன்னவாறு வருணன் குறித்து உரைத்துள்ளான். புலிகள் வாயில் அகப்பட்ட புல்வாயினங்கள் போல் உலக மக்கள் அவரால் நலிவடைந்து நாசமாகியுள்ளமையால் அந்த அவுணரது நீச நிலைமை நேரே தெரிய வந்தது. வரவே பாவிகளான அவரைத் இந்தத் தரும வீரன் கருவறுக்க நேர்ந்தான். கையில் பிடித்திருந்த கணையைக் கருதி விடுத்தான். அது பாய்ந்து அழித்து அடியோடு படுநாசம் செய்து கடிது வந்தது.

பல் நெடுங் காதம் ஓடி.

என்றதனால் அந்தத் தீவு இருந்த தூரம் தெரிய நின்றது.

கண் காணாத தேசத்தில் எவ்வளவு தொலையில் இருந்தாலும் அதி விரைவில் சென்று இராமபாணம் கொன்று வென்று மீளும் என்பதை இங்கே கூர்ந்து உணர்ந்து வியந்து கொள்ளுகிறோம்.

ஓர் இமை ஒடுங்கா முன்னம் நூறி மீண்டது.

அசுரத் தீவை அடியோடு அழித்து அப்பு மீண்டு வந்துள்ள கால எல்லையை இது காட்டி நின்றது. கண் மூடித் திறக்குமுன்

காரியம் முடிந்திருக்கிறது. ஒரு இமைப்பொழுதுள் அந்த நாச வேலையைப் பகழி முடித்து வந்திருத்தலால் அதனை எய்தவனுடைய அதிசய மகிமை துதி செய்ய வந்தது. இராமன் கருதிய படியே கைக்கணை உறுதியாகச் செய்து வருதலால் தெய்வீக மான உக்கிர வீர சத்தியாய் அது ஒளி பெற்றுள்ளது.

முனிவன் செப்பும் சாபமே ஒத்தது.

இராம பாணத்தின் அதிசய ஆற்றலை உய்த்துணரும்படி இந்த ஒப்புமையை உரைத்துள்ளார். அரிய தவ ஞானங்களையுடைய பெரிய முனிவர்கள் உள்ளம் கொதித்துச் சபித்துச் சொல்லும் சாபம் போல் எதையும் ஒல்லையில் அழித்து விடும் எனப் பகழியின் எல்லையில்லாத வலிமையை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

இடம் பெயராமல் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டே முனிவர் கனன்று சபித்தால் சபிக்கப்பட்டவர் உடனே நாசமடைகின்றனர். நிலை பெயராமல் நின்ற இடத்தில் நின்று கொண்டே இராமன் பகழியை ஏவினான்; அது நெடிய தொலையிலிருந்த தீவை அடியோடு அழித்துக் கடிது வந்தது ஆதலால் முனிவர் சாபத்தை இங்ஙனம் இனிது இணைத்துக் காட்டினார்.

குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (குறள், 29)

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. (குறள், 898)

இந்த அருமைத் திருக்குறள்கள் ஈண்டு ஊன்றி உணர வுரியன.

பெரியோர்களுடைய உள்ளம் கொதிக்கும்படி செய்தால் அந்த இனம் அடியோடு அழிந்து போம்; அவர் இருந்த இடமும் தடந் தெரியாமல் நாசமாய்ப் போய் விடும் என்பது இங்கே நன்கு தெரிய வந்தது.

பெரியோர் மிகவும் பொறுமையுடையவர்; வீணே கோபம் கொள்ளார்; எவ்வழியும் சாந்தமாய்ப் பொறுத்தே யிருப்பர்; நெறி கேடுகள் செய்ய நேர்ந்தால் அவர் உள்ளம் கனன்று சபிக்கின்றார்; அந்தச் சாபம் ஈசன் கோபம் போல் நாசங்களைச் செய்து விடுகிறது. முனிவரது முனிவு இனிது தெரிய வந்தது.

சோல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் என இராம பாணத்தைத் தாடகை வதத்தில் குறித்தார். முதலில் குறித்த அந்தக் குறிப்பை இடங்கள் தோறும் தொடர்ந்து விளக்கி அதன் அதிசய மகிமையைக் கவி துதி செய்து வருகிறார்.

தருமமே வலியது.

புண்ணிய வீரனை இராமன் ஏவிய ஒரு கணை அவுணர் குழுவை ஒருங்கே அழித்து வந்துள்ளமையால் அதனை இங்ஙனம் தெளிந்து விளக்கினர். கொடிய பாவகாரிகள் கரிய இருட் கூட்டம் போல் நெடிது திரண்டிருந்தாலும் ஒரு சின்ன விளக்கொளியால் கடிது நீங்கிப்போம்; அது போல் இராமபாணத்தால் அசுரகுலம் ஒழிந்து போயது; அப் போக்கை உய்த்து நோக்கி உண்மையைத் தெளிந்து கொள்ளும்படி இவ் வுரை உணர்த்தி நின்றது.

தனக்கு நேரே யாதொரு இடறும் செய்யாத காந்தார தீவினரை இராமன் அழித்தது நியாயமா? இது கொடிய அநியாயம் அல்லவா? என்று சிலர் இங்கே வாதாட நேரலாம்.

"அனுமான் பேச்சைக் கேட்டு முன்னம் வாலியைக் கொன்றான். வருணன் பேச்சை நம்பி இன்று அவுணரைக் கொன்றிருக்கின்றான். கோளுரைக்குச் செவி சாய்ப்பவன்; கேள்விப் பேச்சைக் கேட்டுக் கேடு செய்யும் கெடு நிலையாளன்" என்று இக் கோமகனைப் பலர் படுபழி கூறும்படி அடு தொழில்கள் இடையிடையே நடந்து வருகின்றன.

வினை முடிபுகள் யாண்டும் நினைந்து சிந்திக்கத்தக்கன.

உலகில் தீமைகள் நீங்கி நன்மைகள் ஓங்கி வர வேண்டும் என்றே இராமன் ஈண்டு வந்திருக்கிறான். பயிரினங்களுக்குக் களைகளைப் போல் உயிரினங்களுக்குத் தீயவர் துயரினங்களாயுள்ளமையால் அவரைக் களைந்து ஒழிப்பதையே தனது கடமையாக இவன் கருதியிருக்கிறான். நல்லேருழவர் பயிர்களைப் பேணி வருதல் போல் இந்த வில்லேருழவன் உயிர்களைப் பேணி வருதலால் பொல்லாதவர்களைக் காண நேர்ந்த போது ஒல்லையில் உருத்து ஒழித்து நீக்குகிறான். துன்ப ஒழிவு இன்ப விளைவாயுளது.

மாய்வினை இயற்றி முற்றும் வருணன் மேல் வந்த சீற்றம்
தீவினை யுடையார் மாட்டே தீங்கினைச் செய்தது.

வருணனைக் கொல்ல வேண்டும் என்று கொதித்து மூண்ட கோபம் வேருய் மாறி அவுணரைக் கொன்று தீர்த்தது; அதற்குக் காரணத்தை இங்ஙனம் குறித்துக் காட்டியிருக்கிருர். வருணன் நல்லவன்; மதியின் மறதியால் விதிமுறை வழுவி நின்ருன்; பின்பு விரைந்து வந்தான்; உண்மையை உரைத்தான்; தன்மையைத் தெரிந்து கொண்ட வீரன் தன் வில்லில் பூட்டிய கணைக்கு இரை காட்டுக என்ருன். அவன் காட்டினன்; இவன் கருமத்தை முடித்தான். கரும தருமம் மருமமாய் முடிந்துள்ளது.

அவுணர் தீயவர் என்று வருணன் சொன்ன போதிலும் அது உண்மை என்று இராமன் உள்ளம் தெளிந்த பின்புதான் கையை விட்டுக் கணையை விடுத்தான். பாவிகள் மேல் ஏவும் பொழுதுதான் வாளி ஆவலோடு ஆர்த்துத் துடிக்கும்; அத் துடிப்பை ஓர்ந்து இவ் வீரன் கடுத்து விடுத்து முடித்து வருதலால் கருமங்கள் தருமங்களாய்த் தழைத்து வரலாயின.

தீவினையுடையார் மாட்டே சீற்றம் தீங்கினைச் செய்தது என்றது ஈங்குக் கூர்ந்து நோக்கத் தக்கது. தீயவரை இராமன் அழித்தான் என்னமல் சீற்றம் அழித்தது என்ருர். இராமகோபம் வீணே வராது; தீமை கண்ட போதுதான் சீறி வரும்; வந்த அது தன் வேலையை முடித்தருளும்; அந்த முடிவுகளை இராமன் சாட்சியாய் நின்று கண்டருளுவான் என்பது இங்கே காண வந்தது. அதிசயமான பரம நீர்மை துதி செய்ய நின்றது.

நல்லவர்களுக்கு அல்லல் நேர்ந்தாலும் அது ஒல்லையில் நீங்கும்; தீயவர் எவ்வழியும் அழிந்தே தீருவர் என்பது இங்கே நிகழ்ந்துள்ள சரித நிகழ்ச்சியால் உணர்ந்து கொள்ளுகிறேம்.

கோதண்டத்தில் அம்பைப் பூட்டிய பின் அதனைச் சும்மா எடுக்கக் கூடாது; ஏதேனும் குறியை நோக்கி நேரே விட்டு விட வேண்டும் என்பது ஈண்டு விளங்கி நின்றது. மந்திர சத்திகளையுடைய அதன் அந்தரங்கங்கள் அளவிடலரியன.

எவரையும் வெல்ல வல்ல அதிசய ஆற்றலுடைய இராமன் முதலில் வருணனை நினைந்து பணிவாய்த் தவம் புரிந்ததும், பின்பு

கின்றது சிறவே அவன் விரைந்து வந்து பணிந்து சரணகதி அடைந்துள்ளதும் விசித்திரக் காட்சிகளாய் விளைந்து நிற்கின்றன. தெய்வீக மருமங்கள் சிறந்து திகழ்கின்றன.

"தவராக அக்கணை ஒன்றால் கடல்தெய்வம் தான்என்றிருந்
தவராகம் தீர்த்துத் தொழக்கண்டநீ தர்ப்பை மேல்கிடந்து
தவராகப் பாவித்து என்னே தொழுதாய்? தண் அரங்கத்துமா
தவ ராகவா கண்ணனே எண்ணெணு அவதாரத்தனே."

(திருவரங்கத்தந்தாதி, 76)

"இராகவா! ஒரு கணையால் கடல் தெய்வத்தை உடல் நடுங்கச் செய்த நீ முதலில் ஏன் அவனை நினைந்து தொழுது தவம் கிடந்தாய்? உனது மாயா விநோதம் என்னே?" என மணவாள தாசர் இன்னவாறு நன்னயமாக வினவியிருக்கிறார்.

மனித வுருவில் மறைந்துள்ள பரமன் என்பதை இராமனுடைய செயல் இயல்களால் இடையிடையே உணர்ந்து வருகிறோம். அரிய பல உண்மைகள் வெளியே தெளிவாகி வருகின்றன.

### வழி வினவியது.

வருணன் வந்து உரிமையுடன் வணங்கி நிற்கவே அவனை உவந்து நோக்கி இலங்கைக்குச் செல்லுதற்குரிய வழியை இராமன் இனிது வினவினன். படைகள் எல்லாம் எளிது நடந்து செல்லும்படி கடலிடையே நெடிய அணை ஒன்று அமைக்குமாறு அவன் உபாயம் கூறினன். அவ்வாறே இவ் வீரன் செய்ய இசைந்தான். பாசறை சென்று யோசனைகள் புரிந்தான். வீடணன் சுக்கிரீவன் முதலிய துணைவர்களுடன் ஆலோசித்து மறுநாளே அணை அமைக்க நேர்ந்தான். யாவரும் ஆயத்தமாயினர்.

### சேது பந்தனம்.

தெய்வத் தச்சனுடைய அமிசமாய்ச் சிறந்திருந்த நளன் என்பவனை அழைத்துக் கடலில் அணைகட்டும்படி இராமன் ஆணையிட்டான். அந்தக் கட்டளையைக் கேட்டதும் அவன் உள்ளம் உவந்து வள்ளல் அருளால் விரைந்து செய்வதாக விழைந்து மொழிந்தான். வேண்டிய உபகரணங்களை யெல்லாம் வானரங்கள் கொண்டு வந்து தரும்படி அவன் வேண்டி நின்றான். யாவரும் மூண்டு முயன்றனர். வருணன் காட்டிய வழியே சமுத்

திரத்தில் அணை கட்டும் வேலை நடந்தது. பல இடங்களிலுமிருந்து மலைகளையும் மரங்களையும் வாரிக் கொண்டு வந்து வானரப் படைகள் குவித்தன. சேனைத் தலைவர்கள் எல்லாரும் தங்கள் படைகளை ஏவி வேலையை விரைந்து செய்யும்படி இடங்கள்தோறும் தொடர்ந்து தூண்டிப் படர்ந்து நின்றனர். நாலு பேரைத் தவிர அங்கிருந்தவர் யாவரும் வினையில் மூண்டு வேலைகள் செய்தனர்.

இளவலும் இறைவனும் இலங்கை வேந்தனும்
அளவறு நங்குலத்து அரசும் அல்லவர்
வளைதரு கருங்கடல் அடைக்க வம்மெனத்
தளமலி சேனையைச் சாம்பன் சாற்றினன்.

கடலினை அடைக்கப் படைகள் வரும்படி சாம்பவான் பறைசாற்றிக் கூறியிருக்கும் நிலையினை இக் கவிப்படம் தெளிவாகக் காட்டியுள்ளது. இராமன் இலக்குவன் விபீடணன் சுக்கிரீவன் ஆகிய இந்த நான்கு பேர் நீங்கலாக மற்றுள்ளவர் எல்லாரும் அணைகோலும் வேலையில் ஆரவாரமாய் மூண்டு எவ்வழியும் தீரமாய் வேலை செய்தனர். வேண்டிய சாதனங்களை விரைந்து கொண்டு வந்து வானரங்கள் சேர்த்த காட்சி யாண்டும் அதிசய மாட்சியா யிருந்தது.

கருவரை காதங்கள் கணக்கி லாதன
இருகையில் தோள்களில் சென்னி ஏந்தின
ஒருகடல் அடைக்கமற்று ஒழிந்த வேலைகள்
வருவன வாமென வந்த வானரம். (1)

பேர்த்தன மலைசில பேர்க்கப் பேர்க்க நின்று
ஈர்த்தன சிலசில சென்னி ஏந்தின
தூர்த்தன சிலசில தூர்க்கத் தூர்க்க நின்று
ஆர்த்தன சிலசில ஆடிப் பாடின. (2)

காலிடை ஒருமலை உருட்டிக் கைகளின்
மேலிடை மலையினை வாங்கி விண்தொடும்
சூலிடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை ஒருமலை ஈர்த்து வந்தவால். (3)

முடுக்கினன் தருகென மூன்று கோடியர்
எடுக்கினும் அம்மலை ஒருகை ஏந்தியிட்டு

அடுக்கினன் தன்வலி காட்டி ஆழியை
நடுக்கினன் நளன் எனும் நவையி னீங்கினன். (4)

மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதெடுத்து எறியவே நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல். (5)

(சேதுபந்தனப்படலம் 5-9)

வேலை நடந்திருக்கும் விசித்திர நிலைகளை இங்கே வியந்து பார்க்கிறோம். வானரங்கள் செய்துள்ள வினையாண்மைகள் அதிசய ஆற்றல்களை விளக்கி நிற்கின்றன. கால்களாலும் கைகளாலும் வால்களாலும் மலைகளையும் மரங்களையும் வாரிக்கொண்டு வந்து வாரியில் சேர்த்திருப்பது வீரிய விளையாடல்களாய் விளங்கியுள்ளது. தொகுதி தொகுதியாய் அவை வாரி வந்தவற்றையெல்லாம் பகுதி பகுதியாய் வகுத்து நளன் அற்புத நிலையில் அணையைக் கட்டி யிருக்கிறான். வானர வீரர்கள் வீசி எறிகின்ற பொருள்களையெல்லாம் உல்லாச விநோதமா வாங்கி இந்தச் சிற்பன் பாலத்தைப் படைத்திருப்பது ஞாலத்தைப் படைத்த நான்முகனையும் வியக்கச் செய்துள்ளது.

விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மை போல்.

அந்த அற்புத சிற்பியின் அரிய வினையாண்மையை இப்படி நமக்கு அறிமுகம் செய்திருக்கிறார். கவியின் நன்றியறிவை இங்கே நாம் கண்டு களிக்கின்றோம். தன்பால் அடைக்கலமாக அடைந்தவரை வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளல் எப்படி ஆதரித்தருளினரோ அப்படியே தன்பால் வந்து விழுந்த கல்லுகளையெல்லாம் நளன் ஒல்லையில் ஒழுங்கு படுத்தி அணையை எல்லை வகுத்து இயற்றிச் சென்றான் என்பார் சடையன் தன்மை போல் நளன் தாங்கினன் என்றார்.

தன்னை ஆதரித்தருளிய வள்ளல் ஆதலால் சடையப்ப பிள்ளையை இங்ஙனம் உள்ளம் கரைந்து நம் கவியரசர் உவந்து பாராட்டி யிருக்கிறார். பெருந்தன்மையோடு இக் கவியரசை அன்று விழைந்து போற்றி வந்தமையால் உலகம் போற்ற என்

றும் அவர் உயர்ந்து நிற்கிருர். தன்பால் அன்புரிமையோடு அவர் செய்து வந்த உபசாரங்கள் இவருடைய என்புருகச் செய்துள்ளமையால் யாண்டும் மறவாமல் ஆர்வமீதூர்ந்து அவரைப் புகழ்ந்து வருகிருர். அவர் ஒருவரால் அந்த மரபினரிடமெல்லாம் இவர் மதிப்பு வைத்துள்ளார். அவ்வுண்மை எந்நாளும் காப்பார்கள் வேளாளர் தாம் என இவர் உவந்து கூறியுள்ள உரிமை வாசகத்தால் உணரலாகும். நன்றியறிவில் நம் கவிஞர்பிரான் ஒன்றி நிற்கும் நிலை உய்த்துணர வுரியது. இராம சரிதத்தில் அரிய பல குண நீர்மைகளை நாம் அறிந்து மகிழ்தல் போல் இவரது சரிதத்திலும் இனிய பல பண்பாடுகளை உணர்ந்து மகிழ்கின்ரும். உலக மாந்தர் சிறந்த குணசீலராய் உயர்ந்து வாழ இவருடைய வாய்மொழிகள் நேய வழி காட்டிகளாய்த் தூய ஒளி நீட்டியுள்ளன. கவியின் சீவியம் புவியறியப் புலனாய் நின்றது.

ஆழியுள் அணைவகுத்த நிலையைக் கூறுவதில் அரிய பல காட்சிகள் தெரிய வந்தன. கலையின் சுவையோடு பலவகை நீதிகளையும் உலக நிலைகளையும் கவி தெளிவாக விளக்கி யிருக்கிருர். சில காட்சிகளை அயலே காண வருகிரும்.

தேமுதல் கனியும் காயும் தேனிஞெடு ஊனும் தெய்வப்
பூமுதல் ஆயவெல்லாம் மீன்கொளப் பொலிந்த வன்றே
மாமுதல் தருவோடொக்கும் வானுயர் மானக் குன்றம்
தாமுதலோடும் கெட்டால் ஒழிவரோ வண்மை தக்கோர்? (1)

கறங்கெனத் திரியும் வேகக் கவிக்குலம் கையின் வாங்கிப்
பிறங்கிருங் கடலிற்பெய்த போழ்தத்தும் பெரிய பாந்தள்
மறங்கிளர் மானு யானை வயிற்றின வாக வாய்சோர்ந்து
உறங்கின கேடுற்ருலும் உணர்வரோ உணர்வி லாதார். (2)

பொன்றின சிறிய வாய புண்ணியம் புரிந்தோர் போலக்
குன்றுகள் குரக்கு வீரர் குவித்தன நெருப்புக் கோப்ப
ஒன்றின்மேல் ஒன்று வீழ உகைத்தெழுந் தும்பர் நாட்டுச்
சென்று மேலிடம் பெருது திரிந்தன சிகரச் சில்லி. (3)

கூருடை எயிற்றுக் கோண்மாச் சுறவினம் எறிந்து கொல்லப்
போருடை அரியும் வெய்ய புலிகளும் யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற வன்றே தந்நிலை நீங்கிற்று என்ருல்
ஆரிடை அழிவு வாராது அறிவிடை நோக்கின் அம்மா! (4)

இந்தப் பாசுரங்களைக் கருத்தூன்றிப் படித்துப் பாருங்கள். கடலில் பாலம் கட்டுவதைச் சொல்லி வருவதில் ஞாலம் கண்டு தெளிய வுரிய உறுதி யுண்மைகளைக் கவி உணர்த்தி வருகிருர். உணர்ச்சி நலங்கள் உவகை சுரந்து திகழ்கின்றன.

அணை அமைப்பதற்காக வானரங்கள் வாரி வீசிய மலைகள் கடலில் வந்து வீழ்ந்தன. அம் மலைச் சாரல்களிலிருந்த கனி மரங்கள் பல அலைகளிடையே மிதந்தன. அவற்றிலுள்ள பூ காய் தேன் முதலிய இனிய பொருள்களை மீன்கள் உண்டன. தாம் அடியோடு மடிய நேர்ந்த போதும் சலசரங்களான பல பிராணி களுக்கும் உணவுகளாய் உதவி புரியலாயின. அந்த உபகாரம் உயர்ந்த வள்ளல்களுடைய நீர்மை சீர்மைகளை ஒத்திருந்தன.

தாம் முதலோடும் கெட்டால் ஒழிவரோ வண்மை தக்கோர்.

மேலோர்கள் கிளையோடு கெட்டாலும் பிறர்க்கு உதவி புரிவதை ஒழிய மாட்டார். எவ்வழியும் என்றும் யாருக்கும் அவர் உபகாரமே செய்வர் என இது உணர்த்தியுள்ளது.

வானர வீரர்கள் எடுத்தெறிந்த கிரிகளில் பெரிய மலைப் பாம்புகள் இருந்தன. மதயானைகளையும் விழுங்கி யிருந்த அவை கடலில் வீழ்ந்து அழிந்து போக நேர்ந்தன. தம் உயிர்க்குக் கேடு நேர்ந்தும் அவை யாதும் உணராமல் மடிமண்டி உறங்கிக் கிடந்தன. அவற்றின் கிடை சோம்பல் நிறைந்த மடையர்களின் பாடுபோல் படுநாசமாய்ப் பாழ்பட்டிருந்தது.

மறங்கிளர் மான யானை வயிற்றின வாக வாய் சோர்ந்து
உறங்கின கேடுற்ருலும் உணர்வரோ? உணர்விலாதார்.

உயிரழிந்து படுவதையும் உணராமல் மலைப் பாம்புகள் உறங்கிக் கிடந்ததை இங்ஙனம் உணர்த்தியிருக்கிருர். தமக்கு அழிவு நேர்வதை அறியாமல் விழி துயின்று கிடப்பது கழி சோம்பேறிகளின் இழி நிலையாம் என இதில் தெளிவுபடுத்தி யிருப்பது தேர்ந்து கொள்ள வுரியது.

கேடு உற்ருலும் உணர்வரோ உணர்வு இலாதார்.

என்றது உணர்ச்சி கெட்ட அவரது ஈன நிலையை இரங்கி உணர்த்திய படியாம். வருவதை எதிர் அறிந்து உறுதி நலங்களை நாடி நடப்பது உணர்வுடைமையாம். அவ்வாறு நாடாமல் மடி

யுற்றிருப்பது குடி கேடாம். மதி கெட்ட கீழ்மக்கள் மலைப் பாம்புக்கு உவமையாய் நேர்ந்தனர்.

கண்கூடாப் பட்டது கேடு எனினும் கீழ்மக்கட்கு
உண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்---மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ
பேரா பெருமூச் செறிந்து. (நீதிநெறிவிளக்கம், 34)

நம் காவியக் கவியை அடியொற்றி இது வந்துள்ளது.

உணர்ச்சி கெட்டவர் கீழ் மக்களாய் இழிந்து படுவர் என்னும் உண்மை இங்கே உணர்ந்து கொள்ள வந்தது. உறுவதை உணர்ந்து ஊக்கி ஒழுகினர் உயர்ந்து திகழ்கின்றார்; அங்ஙனம் உணராது அயர்ந்தவர் இழிந்து ஒழிகின்றார்.

நலவுணர்வுடையராய் எல்லா வழிகளிலும் உயர்ந்து மனிதர் சிறந்து வாழவேண்டும் என்று நம் கவிஞர்பிரான் நினைந்து வந்துள்ளமையை இங்கே உணர்ந்து கொள்ளுகிறோம். காவியத்தை நடத்திக் கொண்டு போவதில் அவருடைய சீவிய வுணர்ச்சிகள் இடையிடையே இனிது தெரிய வருகின்றன.

மலைகளில் வாழ்ந்து வந்த சிங்கங்களும் புலிகளும் கரடிகளும் யாளிகளும் கடலில் வீழ்ந்த பொழுது அங்கே சுறுமீன்களால் கொல்லப்பட்டன. பெரிய வலிகளையுடைய அவை நிலை மாறியதால் சிறிய மீன்களால் இழிந்து அழிந்தன. தம்முடைய தானம் தவறினல் எவரும் மானம் அழிந்து மடிவர் என்பதை அவற்றின் அழிவு நிலை விழிதெரியச் செய்தது.

தம்நிலை நீங்கிற்று என்றால் ஆரிடை அழிவு வாராது?

நெடிய வலிகளையுடைய மலை விலங்குகள் நீரிடையே நிலைகுலைந்து அழிந்து பட்டமையால் இங்ஙனம் பரிந்து உரைத்தார்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (குறள், 495)

இட வலியைக் குறித்துத் தேவர் உரைத்திருக்கும் இது இங்கே எண்ணி யுணரத் தக்கது. நீரில் இருந்தால் யானையையும் முதலை வென்று விடும்; அது நிலத்தில் வந்தால் நாயும் அதனைக் கொன்று தொலைக்கும் என்க. தமது நிலை வழுவின் யாரும் எளிதே அழிந்துபட நேர்வர் என்பது இங்கே மலை விலங்குகள்

அலைகடலில் மாண்டமையால் அறிய வந்தது. பலவகை நிலைகளை யும் உலகம் காணக் கவி உரிமையோடு உரைத்து வருவது அவ ரது உயர்ந்த அருள் நீர்மையை உணர்த்தி வருகிறது.

வானரத் திரள்கள் பலவகையிலும் முயன்று அணையைக் கட்டி வந்தன. அந்த வேலைத் திறங்களை வியந்து எழுபத்தொரு கவிகள் வரைந்திருக்கிறார். அனுமன், அங்கதன், நீலன், குமுதன் மயிந்தன், பனசன் முதலிய பெரிய தலைவர்கள் ஆங்காங்கு நின்று ஏவ வேலை பாங்காக ஓங்கி நடந்தது. நிலத்தில் வளர்ந் திருந்த மரங்களும் கல்லுகளும் கடலில்வந்து நிறைந்தன. ஆழ்ந்து பரந்திருந்த அதில் ஈண்டிய அணை நெறியே நீண்டு வளர்ந்தது. எவ்வளவு பொருள்கள் வந்து விழுந்தாலும் கடல் யாதும் கலங் காமல் நின்று நிலம் காண இடங்கொடுத்து உதவியது.

நெடும்பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்
துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும்
குடும்பம் தாங்கும் குடிப்பிறந் தாரினே. (1)

பழுமரம் பறிக்கப் பறவைக் குலம்
தழுவி நின்றொருவன் தனி தாங்குவான்
விழுதலும் புகல் வேறிடம் இன்மையால்
அழுதரற்றும் கிளை என ஆனவால். (2)

மூசு வண்டினம் மும்மத யானையின்
ஆசை கொண்டன போல் தொடர்ந்தாடின
ஓசை ஒண்கடல் குன்றொடு அவைபுக
வேசை மங்கையர் ஆமென மீண்டவே. (3)

நிலமரங்கிய வேரோடு நேர்பறித்து
அலமருந்துயர் எய்திய வாயினும்
வலமரங்களை விட்டில மாகிலாக்
குலமடந்தையர் என்னக் கொடிகளே. (4)

உற்றதால் அணை ஓங்கல் இலங்கையை
முற்ற மூன்று பகலிடை முற்றவும்
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்
மற்றிவானம் பிறிதொரு வான்கொலோ? (5)

நாடுகின்ற தென் வேறொன்று நாயகன்
தோடு சேர் குழலாள் துயர் நீக்குவான்
ஓடும் என்முது கிட்டென ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது சேதுவே. (6)

மெய்யின் ஈட்டத்து இலங்கையா மேன்மகள்
பொய்யின் ஈட்டிய தீமை பொறுக்கலாது
ஐயன் ஈட்டிய சேனை கண்டு அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால். (7)

திருவணை உருவாகி முடிந்துள்ள நிலைமையை ஊன்றி நோக்கி உவந்து நிற்கிறோம். பல மலைகள் வந்து விழுந்தும் கடல் கலங்காமல் நின்று காரிய சித்தியைக் காட்டியுள்ளது.

இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும்
குடும்பம் தாங்கும் குடிப்பிறந் தாரினே.

நெடும்பல் மால்வரை நெருக்கினும் துடும்பல் வேலை துளங்காமல் அணைக்கு ஆதரவு செய்திருந்தமையைச் சொல்ல வந்தவர் இப்படி ஒரு நல்ல உண்மையையும் உலகம் அறிய உணர்த்தி யிருக்கிறார். துடும்பல் = ததும்பல், ஒலித்தல்.

நல்ல குடியில் பிறந்த ஒரு தலைமகன் தன் குடும்பத்தைப் பலவகையிலும் நலமாகப் பாதுகாத்து வருகிறான். எவ்வளவு அல்லல்கள் நேர்ந்தாலும் உள்ளம் கலங்காமல் உறுதியாய் நின்று மனைவி மக்கள் தாய் தந்தை முதலிய உறவினங்களை உரிமையோடு பேணிப் பெருமைப் படுத்திப் பேராண்மையாளனாய்ப் பெருகி நிற்கிறான். அந்த நிலையில் கடலும் கலங்காமலிருந்து காரிய சாதனம் செய்தது என்பார் குடும்பம் தாங்கும் குலமகனை அதற்கு உவமைகூறினார்.

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. (குறள், 1029)

குடும்பம் தாங்குவது எவ்வளவு கடினம்! என்பதைத் தேவர் இவ்வளவு பரிவோடு எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்த அருமைத் திருக்குறளை உரிமையுடன் மருவியே நம் கவிஞர் பிரான் இங்கே சுவையாக இக் கவியைத் தந்திருக்கின்றார்.

எவ்வழியும் யாதும் இளிவு நேராமல் தன் குடும்பத்தைச் செவ்வையாகப் பேணி வருவதே ஒரு குலமகனுக்குத் தலைமை யான கடமையாம். அந்தக் கடமை உணர்ச்சியை எவரும் உரி மையா உணரக் கவி ஈண்டு விநயமாக வுணர்த்தியுள்ளார்.

வானரங்கள் பெரிய ஆலமரங்களைப் பறித்தபொழுது அவற் றில் வாழ்ந்து வந்த பறவையினங்கள் பதறிக் கதறின; தம்மை ஆதரித்து நின்ற தலைவன் அழிந்தபொழுது அவனைச் சார்ந்திருந் தவர் எல்லாரும் அநாதரவாய்ப் புலம்பி அழுவது போல் அவை பறந்து அலமந்தன.

தாங்குவான் விழுதலும் கிளை என அழுது அரற்றின.

குடும்பம் தாங்குவானது நிலைமையும், அவன் நீங்கிய பொழுது அவலமாய் அது படும் பாட்டையும் இங்ஙனம் காட்டி யிருக்கிறார். அனுபவக்காட்சி அனுதாபங்களை விளைத்து வருகிறது.

யானை மதங்களில் ஆசை மண்டி மூசி நின்ற வண்டினங் கள் மலைகளோடு அவை கடலில் வந்து வீழ்ந்த போது அயலே பறந்து போயின; உரிமையாளர் போல் ஒட்டி நின்று கேடு நேர்ந்த போது விட்டு விலகி வேறே ஓடிப் போகும் வேசை மங்கையர் போல் அவ்வண்டுகளின் செயல் விளங்கி நின்றன.

பெரிய மரங்களைச் சுற்றி நின்ற கொடிகள் அவற்றை விடாமல் ஒட்டி வந்து கடலில் வீழ்ந்தன; எவ்வழியும் உரிய கா தலரைப் பிரியாத குலமடந்தையர் போல் அக்கொடிகள் குலாவி நின்று அரிய அன்புரிமைகளை யாரும் அறியச் செய்தன.

உற்ற மனைவியரையே உண்மையாக நம்பி உவந்து பேணுங் கள்; வேசையர்பால்ஆசைகொண்டு நீசம்போகாதீர்! என உலக மக்களுக்கு உல்லாச விநோதமாய்க் கவி ஈண்டு உபதேசம் செய் துள்ளார். மனிதஇனம் புனிதமுறும்படி போதனைகள் புகுந்துள.

மூன்று நாள் இரவும் பகலும் வேலை நடந்தது. அணை கட்டி முடிந்தது. இந்தக் கடலின் கரையிலிருந்து இலங்கை வரையும் பாலம் நீண்டு விளங்கியது. பத்துமைல் அகலம் நூறு யோசனை நீளமாய் அது நெடிது நிலவியது. "இராம நாதா! உனது தரும பத்தினி இருக்கிற இலங்கையை அடைதற்கு ஏன் கலங்கிக் கவல்கின்றாய்; என் முதுகின் மீதே படைகளோடு இனிதே

நடந்து போயருள்!" என்று ஆதிசேடன் நீண்டு படுத்திருந்தது போல் அணை தோன்றி நின்றது.

ஓடும் என் முதுகிட்டு என ஓங்கிய
சேடன் என்னப் போலிந்தது சேதுவே.

திருவணையின் உருவநிலை இவ்வாறு கருத வந்தது.

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்---என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு." (இயற்பா)

என்றபடி பலவகையிலும் திருமாலுக்கு உரிமையாயுள்ள பாம்பரசு ஈங்கு இராமனுக்கு அணையாய் அமைந்து நின்றது. சேடன் என்னப் போலிந்தது சேதுவே என்றது ஞாலம் தாங்கும் சேடன் வேலையுள் ஓர் பாலமாய்க் கோலம் கொண்டிருந்த சீலம் தெரிய வந்தது. சேது = அணை, பாலம். அதிசய நிலையில் செயற்கையாகச் செய்தது ஆதலால் சேது என்னும் ஏதுப் பெயராய் இசைந்து நின்றது.

"ஐயனே! குபேரனுடைய புண்ணியப் பேற்றால் முதலில் நான் அழகாகப் படைக்கப் பட்டேன்; பின்பு தனது தவ மகிமையால் இராவணன் வந்து குடியேறினான்; நெடிது வாழ்ந்து வந்தான்; நாளடைவில் அரக்கர்கள் கொடிய பாவங்களைச் செய்தனர்; பாவச் சுமை பெருகியுள்ளது; இனிமேல் என்னால் பொறுக்க முடியாது; நீ விரைவில் வந்து தீமையை நீக்கி என்னைப் புனிதமாக்கியருள்!" என்று இராமனை நோக்கி இலங்கா தேவி கையை நீட்டி நின்றது போல் அணை காட்சி புரிந்து மாட்சிமையோடு விளங்கியது.

இராமனிடம் எல்லாரும் யாவும் உரிமை கொண்டாடியுள்ள வுண்மை ஈண்டு நுண்மையாக உணர வந்தது. வானரங்கள் மலைகளைக் கொண்டு அணைகட்டும் பொழுது அணில்களும் மணல்களைத் தாங்கி வந்து ஆங்கு உதறி உதவி புரிந்தன என்பர்.

"குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடித்
தரங்கநீர் அடைக்கலுற்ற சலமிலா அணிலும் போலேன்

மரங்கள் போல் வலிய நெஞ்சம் வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட்செய்யாதே அளியத்தேனயர்க்கின்றேனே.''
(திருமாலை, 27)

சேது பந்தனத்துக்கு அணில்களும் உதவி செய்தன. நான் யாதொரு பணியும் ஆண்டவனுக்குச் செய்யாமல் இருக்கின்றேனே! என்று தம் பிறவியை இகழ்ந்து தொண்டரடிப் பொடியாழ்வார் துயருழந்துள்ளமையை இதில் உணர்ந்து கொள்ளுகிறோம்.

அன்று இராமனுடைய சம்பந்தம் தோய்ந்திருந்த இடங்களை இன்றும் உலகம் புனிதமாகப் போற்றி வருகிறது. தருப்பசயனம், தனுக்கோடி, சேதுக்கரை, இராம தீர்த்தம், அனுமகுண்டம் என்னும் பேரால் இராமேசுரம் அயலே புண்ணிய நிலையங்கள் பல பொலிந்து விளங்குகின்றன.

“கருடன் எனவும் காற்று எனவும்
கடிய கவியின் கணம்எழுந்தே
அருள்தங்கு இராமன் தனைவிடை கொண்டு
அவனியடங்கப் படர்ந்தெங்கும்
இருள்தங் கடவி மரம் கொடிபுல்
இருங்கல் எவையும் எடுத்திடலும்
பொருள்தங்குலகில் புனைவன்மகன்
பொங்கு மகராலயம் அடைத்தான்.
பயங்கொ ளிருளின் படம் கிழிக்கும்
பரிதி ஒளிபோல் படியிலதாம்
வயங்கொள் இராமன் வானரத்தால்
வகுத்த சேதுவதன் மூலம்
நயங்கொள் தருப்பாசயனம் என
ஞாலம் பகரும் நான்மறையீர்!
கயங்கொள் கடலின் முன்சேதுக்
கண்ட முறையின் கதையீதால்.'' (சேதுபுராணம்)

சேது மான்மியம் குறித்து இவ்வாறு ஒரு புராணம் வந்துள்ளது. தரும வீரன் மருவியது பெருமை மீதூர்ந்து நின்றது.

சேதுவைத் தரிசிப்பது ஒரு புண்ணியப் பேறு எண்ணப்பட்டுள்ளது. உலகில் பல பாகங்களிலுமிருந்து மாந்தர் ஆவ

லோடு வந்து நாளும் தரிசனம் செய்து இராமநாதனை எண்ணி மகிழ்ந்து புண்ணியமடைந்தவராய்ப் புகழ்ந்து போகின்றனர்.

அணை பூர்த்தியாய் முடிந்த நிலையை இராமனிடம் வந்து சுக்கிரீவனும் விபீடணனும் தொழுது சொல்லினர். இவ் வீர வள்ளல் உள்ளம் உவந்து தம்பியோடு விழைந்து சென்று அணையை நோக்கி ஆனந்தமடைந்தான். அதனை அதிசய நிலையில் ஆக்கியுள்ள நளனை அழைத்து உவகையுரையாடி வருணன் கொடுத்த மணிமாலையை அவனுக்கு வெகுமதியாக விரும்பிக் கொடுத்தான். அவன் தொழுது வாங்கி உழுவலன்போடு உவந்து நின்றான். பரிவும் பண்பும் எவ்வழியும் பெருகி எழுந்தன.

சேனைத் திரள்களை யெல்லாம் இம் மானவீரன் மரியாதையாக நோக்கி உரிமை கூறி உவகை புரிந்தான். அன்றிரவு யாவரும் பேரானந்தமுடையராய்ப் பெருகியிருந்தனர். மறு நாள் உதயமாயது. கரும வீரர்கள் கருதி எழுந்தனர்.

## படையெழுச்சி செய்தது.

இலங்கையை நோக்கிச் சேனைகள் எழுந்து செல்லும்படி சுக்கிரீவன் ஆணைகள் கூறினான். யாவரும் ஆரவாரமாய் ஆவலோடு விரைந்தனர். தலைவர்கள் யாவரும் படைகளை முறையே நடத்தித் துறைகள் தோறும் தொடர்ந்து சென்றனர்.

முன்னே விபீடணன் சென்றான்; சேனைகள் தொடர்ந்து நடந்தன. இருமருங்கிலும் படைத்தலைவர்கள் அணிவகுத்துப் போயினர்; பின் அணியில் அனுமான் போனான்; அங்கதனும் சுக்கிரீவனும் அயலே சென்றனர்; இறுதியில் தம்பியோடு இராமன் நடந்து போனான். சேனைத் திரள்களைத் தென் இலங்கை மேல் நடத்தி இக் கோமகன் அன்று நடந்து சென்ற காட்சி அதிசய கம்பீரமாய் விளங்கி நின்றது. வெற்றி வீரங்கள் எவ்வழியும் செவ்வையாய் ஒளி வீசக் கொற்றக் குரிசில் குலாவிச் சென்றான்.

நெற்றியின் அரக்கர்பதி செல்ல நிறை நன்னூல்
கற்றுணரு மாருதி கடைக்குழை வரத்தன்
வெற்றிபுணர் தம்பியொரு பின்புசெல வீரப்
பொற்றிரள் புயக்கரு நிறக்களிறு போனான்.

சேனைகளோடு மானவீரன் இலங்கை நோக்கிச் சென்ற மாட்சி இங்ஙனம் காட்சிக்கு வந்துள்ளது. படை எழுச்சியுள் வீர எழுச்சிகள் வீறுகொண்டு விளங்கின. ஒரு தம்பிபின்பு செல என்றது ஒப்பற்ற வீரனை அந்த இளவல் அண்ணனைக் கண்ணும் கருத்துமாக் காத்து வில் ஏந்தி வந்துள்ள வித்தக நிலை தெரிய வந்தது. உரிய துணை அருகுவரப் பெரியவன் நடந்தான்.

வீரக் களிறு,

புயக் களிறு,

கரு நிறக் களிறு.

என இராமனை இங்கே குறித்திருக்கும் குறிப்பு கூர்ந்து சிந்திக்க வுரியது. இருகை வேழத்து இராகவன் எனக் காவியத்தின் முதலில் குறித்த அந்த அதிசய நீர்மையை உரிய இடங்களில் சீர்மையாக உணர்த்தி வருகிறார்.

இலங்கையாகிய கரும்பு வனத்தை அடியோடு அழித்தொழிக்க மதம் கொண்டு வீறோடு போதலால் வீரக் களிறு எனக் கவி சுவையாக விளக்கியருளினர். குரங்குப் படைகளை ஒரு வீரக் களிறு நடத்திச் சென்றது என விலங்கின் இனவுரிமையும் விளங்கி நின்றது. மனித உருவில் மறைந்துள்ள தெய்வம் வானவர்களுடைய துயரை நீக்க வானரங்களைத் துணைக்கொண்டு அரக்கர் பதியை நோக்கி அணைவழியே நடந்து போயது.

தனது ஊழியனை அனுமான் உல்லாச விநோதமாய்த் தாண்டிப் போன கடலைப் பெரும் பிரயாசையோடு பாலம் கட்டி இவ் வீரமூர்த்தி ஆரவாரங்கள் மண்டி இக் கோலங் கொண்டு போனதை ஞாலம் கண்டு வியந்துள்ளது.

தென்கரை சேர்ந்தது.

பெரிய நதி கடலை ஊடுருவிப் போனது போல் வானர வெள்ளம் அணைமேல் ஆர்த்து போனது. எதிரியின் ஊரை நாடிப் போர்வெறியோடு பொங்கிச் சென்றமையால் யாவரும் முதிர் வேகத்தோடு மூண்டு போயினர்.

மருங்கடை வளர்ந்தமுலை மங்கைமணம் உன்னு
வருங்கடகம் அங்கையினில் வள்ளல் இணைகின்றான்

ஒருங்கட லுயர்ந்தபடர் தானையொடும் ஓதத்து
இருங்கடல் கடந்துகரை ஏறினன் இராமன். (1)

பெருந்தவம் முயன்று அமரர் பேணிய தவத்தால்
மருந்தனைய தம்பியொடும் வன்துணைவ ரோடும்
அருந்ததியும் வந்தனைசெய் அஞ்சொல் இளவஞ்சி
இருந்த நகரின்புறனோர் குன்றிடை இறுத்தான். (2)

சேனைகளோடு கடலைக் கடந்து தென்கரை அடைந்து அங்கு ஓர் குன்றின் சாரலில் இராமன் தங்கினன். அந்தக் குன்றுக்குச் சுவேலமலை என்று பேர்.

இருங்கடல் கடந்து கரை ஏறினன் இராமன்.

போர் ஏறு கரை ஏறியுள்ள காட்சியை இங்கே கண்டு நிற்கின்றோம். தன் அடியை அன்பால் எண்ணி வருபவர் பிறவிப் பெருங்கடல் கடந்து பேரின்ப நிலையை அடையச் செய்பவன் ஈண்டு இருங்கடல் கடந்து கரை ஏறியிருக்கிறான். அந்தக் கரையேற்றத்தைத் தம் உரையேற்றத்தால் கவி உணர்த்தியிருப்பது உய்த்துணரத்தக்கது.

அமைத்த அணையின் வழியே நடந்து அலைகடல் கடந்து இலங்கையை அடைந்து அந்நகரின் அருகே வடபால் இருந்த சுவேலம் என்னும் மலைச் சாரலில் சேனைகளோடு இராமன் தங்கியிருந்தான்.

அருந்ததியும் வந்தனை செய் அஞ்சொல் இளவஞ்சி.

எனச் சீதையை இங்கே இவ்வாறு குறித்திருக்கிறார். படைகளோடு அங்கே வந்த இராமன் எந்தப் பொருளைக் கருதி இரவும் பகலும் உருகியிருக்கிறானே அந்தத் தேவியின் நீர்மையை இந்த வண்ணம் சிந்தை தெளிய உரைத்தார்.

அருந்ததி என்பவள் வசிட்ட முனிவர் மனைவி. உயர்ந்த பதிவிரதை. பதி பக்தியில் சிறந்தவள் ஆதலால் பத்தினித் தெய்வம் என உலகம் புகழ ஒளி செய்துள்ளாள். அந்த உத்தமியும் திசை நோக்கித் தொழுகின்ற தெய்வக் கற்புடையாள் எனச் சீதையை இங்கே வையம் காணக் காட்டியிருக்கும் காட்சி கருதியுணரத்தக்கது. நீர்மை சீர்மைகளை நினைவூட்டியருள்கின்றார்.

கொடிய சோதனையில் அகப்பட்டும் யாதும் தளராமல் எவ்வழியும் நெடிய சாதனையாய்த் தனது அருமைக் கற்பை உரிமையோடு பேணி உயர்ந்த தவ சீலர்களும் வியந்து புகழும் படி ஒழுகி வருகிருள் ஆதலால் அந்த விழுமிய நிலை புகழ்ந்து பேச வந்தது. உயிர்கள் துயர் தீர உயர் தவம் புரிந்துள்ளாள்.

கற்பு நெறியில் அற்புத நிலையை அடைந்து பெண்மை உலகம் என்றும் பெருமை பெற வந்துள்ள பிராட்டியின் அருமையை இங்ஙனம் விளக்கியருளினர். அரிய நீர்மைகளை உரிய இடங்களில் சுவையாக உணர்த்தி வருகிருர்.

சீதை இருந்த நகர் என இலங்கையை இங்கே வரைந்து காட்டியிருக்கிருர். தனது அருமை மனைவி எங்கே இருக்கிருளோ? என்று நெடு நாளாக ஏங்கித் தவித்த இராமன் முடிவில் இடம் தெரிந்து அங்கே வந்திருக்கிருன்; அருகே நெருங்கி வந்துள்ள அந்த நாயகன் வரவும் இந்த நாயகி இருப்பும் ஒருங்கே தெரிய வந்தன. உரிமையாளரின் அருமைகள் அறிய நேர்ந்தன.

பாசறை அமைத்தது.

இலங்காபுரியின் வடபுறம் சுவேல மலையின் சாரலில் சேனைகள் வந்து தங்கின. அங்கே யாவரும் அமர்ந்திருத்தற்கு நிலையங்களை விரைந்து அமைக்கும்படி நீலன் என்னும் சேனைத் தலைவனை நோக்கி இராமன் பணித்தான். தலைவர்கள் ஏவலால் வேலைகள் யாண்டும் மூண்டு நடந்தன. நளன் என்னும் சிற்பன் அற்புத நிலைகளில் யாவும் அமைத்தான். வானர வேந்தன் முதலான சேனைத் தலைவர்கள் யாவருக்கும் தனித்தனி இருக்கைகள் தகவுடன் அமைந்தன. இராமபிரான் அமர்ந்திருத்தற்குரிய இனிய பன்னசாலையை எழில்பெற இயற்றினன்.

வில்லினுற்கு இருக்கை செய்யும்
விருப்பினுல் பொருப்பின் வீங்கும்
கல்லினுல் கல்லை ஒக்கக்
கடாவினன் கழைகள் ஆன
நெல்லினுல் அலக்கும் காலும்
நிரப்பினன் தருப்பை என்னும்
புல்லினுல் தொடுத்து வாசப்
பூவினுல் வேய்ந்து போனன்.

தழைக் குடிசையை இராமனுக்கு நளன் இங்ஙனம் இழைத்திருக்கிறான். வனவாச விரதம் பூண்டு தவ நிலையில் மருவி வருகிறான் ஆதலால் சக்கரவர்த்தித் திருமகன் இந்த இலைக் குடி யில் இருக்க நேர்ந்தான். சிறியதாய் பணித்தபடி விரதபங்கம் நேராமல் விழிப்போடு விழுமிய நிலையில் ஒழுகி வருகிறான். தரும சீலமும் தவ சீலமும் இக் குலமகனை உரிமையோடு மருவி ஒளி மிகுந்துள்ளன. தூய விரத நிலையிலேயே தீய பகைவரைத் தொலைக்க நேர்ந்திருத்தலை நேயமோடு விளக்கியருளினர்.

வானர சேனைகளுக்குப் பாடி வீடுகள் அமைந்தபொழுது சுவேலமலை ஓர் அதிசயமான புதிய நகரமாய்ப் பொலிவெய்தி யிருந்தது. வெற்றி நிலையமாய் விளைந்தது வியந்து பேச வந்தது.

சுக்கிரீவன், விபீடணன் முதலிய தலைவர்கள் எல்லாரும் இராமனிடம் வந்து தொழுது வணங்கி உழுவலன்போடு விடை பெற்று நீங்கித் தத்தமக்குரிய இடங்களில் போய்த் தங்கி யிருந்தனர்.

வாயினும் மனத்தி னாலும் வாழ்த்தி மன் னுயிர்கட் கெல்லாம்
தாயினும் அன்பி னானைத் தாளுற வணங்கித் தந்தம்
ஏயின இருக்கை எய்தி எண்டிசை மருங்கும் யாரும்
போயினர் பன்னசாலை இராமனும் சென்று புக்கான்.

வானரத் தலைவர்களை அனுப்பிவிட்டு இராமன் தனியே தழைக் குடிசையில் தங்கியிருந்த காட்சியை இது காட்டியுள் ளது. பெரிய எதிரி மீது படையெடுத்து வந்து இலங்கை அயலே பாசறையில் இக் கோமகன் அமர்ந்திருந்தான். "மன் உயிர்கட் குத் தாயினும் அன்பினன்" என இராமனை இங்கே குறித்திருப் பது அவனது குண நீர்மைகளைச் சுவையாக உணர்த்தியுள்ளது.

## பொழுது அடைந்தது.

உழுவலன்புடைய தம்பியோடு இவ் விழுமிய வீரன் மேல் விளைவதை அளவளாவி பேசியிருந்தான். கொடிய பகைவனு டைய ஊர் அயலே குடியேறிப் பாடி வீடுகளில் படைவீரர்கள் இருக்கப் பன்னசாலையில் மன்னர்பிரான் மகன் மருவியிருந்தது அரிய வீரக் காட்சியாய்ப் பெருகி நின்றது. ஆதவன் மறைந் தான். சந்திரன் உதயமாயினன். வில்லும் கையுமாய்த் தம்பி வழக்கம் போல் அயலே பாதுகாத்து நின்றான். இராமன்

வெளியே வந்து நிலா வெளிச்சத்தில் உல்லாசமாய் அமர்ந்திருந்தான். எண்ணங்கள் பல நெஞ்சில் எழுந்து உலாவின. தனது ஆவி அனைய தேவியின் நினைவுகள் பெரிதும் மேவி விரிந்தன. உள்ளம் காதலியைக் கருதி உருகினமையால் வெளியே விரிந்து நின்ற இனிய நிலவொளியும் இன்னுமையாய்த் தோன்றியது.

அந்தச் சந்திரிகையில் இந்த இராமச்சந்திரன் மனைவியை நினைந்து மறுகியிருந்த நிலைமையைக் கவி நேரே வரைந்து காட்டியிருக்கிறார். அக் காட்சிகளை அயலே காண வருகிறோம்.

செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்துஅணங்கைத்தீர்ந்து
துயிற்சுவை மறந்தான் தோளில் தூய்நிலாத் தவழும்தோற்றம்
மயில்குலம் பிரிந்த தென்ன மரகத மலைமேல் மெள்ள
உயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை வாளரா ஊர்வ போன்ற. **(1)**

மன்னெடு நகர மாடே வருதலால் வயிரச் செங்கைப்
பொன்னெடுந் திரள்தோள் ஐயன் மெய்யுறப் புழுங்கி நைந்தான்;
பன்னெடுங் காதத் தேயும் சுடவல்ல பவளச் செவ்வாய்
அன்னெடுங் கருங்கண் தீயை அணுகினல் தணிவது உண்டோ?
(ஒற்றுக் கேள்விப் படலம்22-23)

இந்தப் பாசுரங்களைக் கருத்தூன்றிப் படித்துப் பாருங்கள். குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ளுங்கள். அன்புரிமைகள் அனுதாபங்களில் பெருகி இனிய பண்புகளை மருவி இன்பச் சுவைகளை விளைத்திருக்கின்றன.

> செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்து அணங்கைத் தீர்ந்து
> துயில் சுவை மறந்தான்.

இந்தச் சொல் ஓவியத்தில் சீதையையும் இராமனையும் நாம் உள்ளம் கூர்ந்து பார்க்கின்றோம். உற்றுள்ள நிலைமைகளை ஓர்ந்து கொள்ளுகிறோம். செயிர்ப்பு=சினம், கோபம். சினந்து சீறினும் சீதையின் முகத்தில் அழகு பொலிந்து விளங்கும் என்பது இங்கே தெளிந்து கொள்ள வந்தது. கோபம் மண்டியபொழுது எந்த முகத்திலும் அழகு மாறிப் போம்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. (குறள், 304)

முகத்தின் நகையையும் அகத்தின் உவகையையும் கோபம்

கொன்று விடும் என்றதனால் அதன் கொடுமையும் கோரமும் அறியலாகும். நகை என்றது முகமலர்ச்சியை.

மனத்தின் மகிழ்வும் முகத்தின் பொலிவும் சினத்தால் ஒழிந்து போம்; அத்தகைய சினத்திலும் சீதையின் திருமுகம் எழில் சுரந்து நிற்கும் என்றது எத்தகைய வியப்பு! உள்ளம் கனன்ற கோபத்திலும் அழகு செய்யும் என்றதனால் உவகையாயுள்ள பொழுது அதன் எழிலும் பொலிவும் எவ்வளவு விழுமிய நிலையில் ஒளி செய்திருக்கும்! என்பது வெளியாய் நின்றது.

திரு, அணங்கு என்றது தெய்வீக நீர்மைகள் தெரியவந்தது. அதிசய அழகுடைய அந்தத் தேவியைப் பிரிந்தமையால் ஆவி பதைத்து எவ்வழியும் இராமன் அலமந்திருந்தான். பிரிவுத்துயர் எல்லை மீறிய அல்லலாய் உள்ளத்தை வருத்தி வந்தது. அந்த மனவேதனையால் மறுகிக் கண் உறங்காமல் கவன்றிருந்தான் ஆதலால் துயில் சுவை மறந்தான் என்றார்.

"மயில்இயல் பிரிந்தபின் மான நோயினால்
அயில்விலன் ஒருபொருள் அவலம் எய்தலால்
துயில்விலன் என்பது சொல்லற் பாலதோ?
உயிர்நெடிது உயிர்ப்பிடை ஊசல் ஆடுவோன்."

"சங்கிற் பொலிந்த தகையாளைப் பிரிந்த பின்பு
கங்குற் பொழுதும் துயிலாத கண்ணன்"

இன்னவாறு முன்னம் வந்துள்ளன ஈண்டு எண்ணவுரியன. மனைவியைப் பிரிந்த பின் இராமன் துயில் துறந்து துயருழந்திருந்த நிலைமையைக் காவியத்தில் பல இடங்களிலும் கண்டு பரிவு கொண்டு வருகிறோம். அயில்விலன்; துயில்விலன்; என்றது எவ்வளவு அவல நிலை! அயிலல் = உண்டல். துயிலல் = உறங்கல். உணவை வெறுத்து உறக்கத்தை விடுத்து மனைவியையே நினைந்து மறுகி மயங்கி உருகி யிருந்துள்ளான்.

## துயிலின் சுவை.

உணவும் நீரும் போல் உறக்கமும் மனிதனுக்கு இயற்கை உரிமையாய் அமைந்திருக்கிறது. "தூங்கும் சுகம் பிரமச் சுகம்;

* இந் நூல் பக்கம் 2179, வரி 5 பார்க்க.
* இந் நூல் பக்கம் 3376, வரி 16 பார்க்க.

உறக்கமே துறக்கம்'' என்னும் முதுமொழிகளால் துயிலின் இயல்பும் இனிமையும் நன்கு அறியலாகும்.

உள்ளக் கவலையெலாம் ஓய்ந்தொழிய ஓயாத
கள்ளப் புலன்கள் களைப்பாற---மெள்ளவந்து
மேவி இளைப்பாற்றும் மென்துயில்போல் இவ்வுலகில்
ஆவிக் கினியவர் யார்? (1)

ஓடிக் களைத்த ஒருவன் உயர்நீழல்
ஆடிக் களிக்கும் அமைதிபோல்---நாடிப்
பகல்எல்லாம் பட்ட படுதுயரம் தீர
நகல்உறக்கம் செய்யும் நமக்கு. (2)

கண்இனிய காட்சியின்பம் காதினிய கீதநலம்
எண்இனிய இன்பநலம் ஏதுறினும்---கண்ணின்
உறக்கம் உறுமானால் உற்றவெலாம் ஓடிப்
பறக்குமேல் இன்பமெது பார்! (3)

கண்ணுக்கும் மூளைக்கும் காமர் உடலுக்கும்
எண்ணுக்கும் ஆற்றல் இனிதருளி---மண்ணுக்குள்
ஓங்குதொழிற் கெல்லாம் உதவியாய் நிற்றலால்
தூங்கல் உயிர்க்குத் துணை. (4)

உறக்கத்தின் நீர்மை சீர்மைகளை இவை உணர்த்தியுள்ளன. பொருள் நிலைகளை ஊன்றி உணர்ந்து கொள்ளுக.

உறக்கம் இயற்கை நியமமாய்ச் சீவர்களுக்கு இதம்புரிந்து வருகிறது. ஒருநாள் இரவு உறங்கவில்லையானால் மறுநாள் அந்த மனிதன் யாதும் செய்ய இயலாதவனாய் உள்ளம் தளர்ந்து உயங்கி நிற்கிறான். அந்த நிலைமையைச் சிறிது நினைந்து நோக்கினால் உறக்கம் உயிரினங்களுக்கு எவ்வளவு உரிமையாய் அமைந்துள்ளது என்பது இனிது தெளிவாம்.

"Now blessings light on him that first invented sleep"
(Miguel)

"முதலில் தோன்றிய அதிசய உறக்கம் மனிதனை இனிது ஆசீர்வதித்துள்ளது" என்னும் இது இங்கே அறியவுரியது.

"Sleep! O gentle sleep!
Nature's soft nurse." (Shakespeare)

"ஓ மேன்மையான உறக்கமே! நீ இயற்கையின் இனிய செவிலித்தாய்" என ஆங்கிலக் கவிஞரான ஷேக்ஸ்பீயர் துயிலின் நிலையைக் குறித்து இவ்வாறு கூறியிருக்கிறார்.

"Nature's sweet restorer, balmy sleep!" (Edward Young)

"அமைதியான உறக்கம் தளர்ச்சியை நீக்கி வளர்ச்சி தரு கிறது" என எட்வர்டுயங் என்பவர் இங்ஙனம் உரைத்திருக்கிறார்.

"O sleep! it is a gentle thing,
Beloved from pole to pole." (Colerridge)

"ஓ உறக்கமே! நீ சாந்த சொரூபி; உலகம் எங்கும் அன்பு ரிமையாய் இன்பம் புரிந்துள்ளாய்" என கோலரிட்ஜ் என்னும் கவிஞர் இவ்வாறு பாடியுள்ளார்.

உறக்கம் சீவ கோடிகளுக்கு இயற்கையினிமையாய் உற வுடன் அமைந்திருத்தலை இவற்றால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

இத்தகைய உரிமையான உறக்கத்தை இராமன் மறந்திருக் கிறான். மனைவியைப் பிரிந்த துயரம் மனத்தை வருத்தியுள்ளமை யால் கண் உறங்காமல் கவன்றிருந்தான். உள்ளக் கவலை உறக் கத்தின் பகை என்பது பழமொழி. வாழ்வின் அனுபவங்கள் சூழ்வின் இனங்களாய்த் தொடர்ந்து வருகின்றன.

உரிய மனைவியை நினைந்து உருகியிருந்தமையால் அரிய துயிலை மறந்து நின்றான். துயில் சுவை மறந்தான் என இராமனை இங்கே சுவையாகக் கவி வரைந்து காட்டியிருக்கிறார். இரு பொருளுடைய சிலேடையணியில் இது மருவியுள்ளது.

உண்ணும் உணவுக்கு உப்பு என உறங்கும் துயிலுக்கு மனைவி சுவையாயுள்ளாள். அரிய பஞ்சணையே ஆனாலும் உரிய மனைவி அருகில் இலளேல் அது கொடிய நஞ்சணையேயாம் என ஒரு காதலன் பரிவோடு மருகியுள்ளமை ஈண்டு அறிய வுரியது.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (குறள், 1103)

அன்பு கனிந்த தன் ஆசை மனைவியின் தோள் மேல் துயிலு வது பேரின்ப உலகினும் பேரின்பமாம் எனத் தேவர் குறித் துள்ள இது இங்கே கூர்ந்து சிந்திக்கத் தக்கது. இத்தகைய

மேன் தோள் துயிலை இழந்து நின்றமையால் தன் துயிலை மறந்து இராமன் தவித்திருந்தான்.

துறந்தான் என்னாமல் மறந்தான் என்றது நினைந்து சிந்திக்க வுரியது. ஆகாயத்திற்குச் சூரியன்; சபைக்குக் கற்றவன்; சயனத்துக்கு மனைவி; மனைக்கு மகன் இனிமையான பகிமையாம் என மேலோர் மதித்துள்ளனர்.

கண்ணுக் கினிய சபைக்குமணி கற்றோனே;
விண்ணுக் கினியமணி வெய்யோனே—வண்ணநறும்
சந்த முலையாள் சயனத்து இனியமணி
மைந்தன் மனைக்கு மணி. (நீதிசாரம்)

இந்த விதமாய் அமைந்திருந்த இனிய மணியை இழந்துள்ளமையால் இராமனது கண்கள் துயிலாமல் கலுழ்ந்திருந்தன.

இன்ப மனைவியைப் பிரிந்து துன்பம் தோய்ந்து துயிலிழந்திருந்த இந்தச் சுந்தரன் அன்றிரவு சுவேல மலைச் சாரலில் தனியே அமர்ந்திருந்தான். சந்திரிகை எங்கும் விரிந்து விளங்கியது. அந்த நிலவு இக் குலமகன் திருமேனியில் பாய்ந்து எதிர் ஒளி வீசி நின்றது. அந் நிலையினைக் கவி காட்டியிருக்கிறார். அக் காட்சி அரிய கலையை நீட்டி இனிய சுவையை ஊட்டியிருக்கிறது. உள்ளக் கண்ணால் ஊன்றிக் காணுங்கள்.

தோளில் நிலாத் தவழும் தோற்றம்
மரகத மலைமேல் வெள்ளைப்பிள்ளை வாளரா ஊர்வ போன்ற.

இந்தக் காட்சியைக் கருதிக் காணுகிறோம். மானச மருமங்களை மறுகி யுணர்கின்றோம். பசிய கோலத் திருமேனியனாகிய இராமன் தோளில் வெண்ணிறமான நிலவொளி தவழ்ந்து விளங்கியது மரகத மலைமேல் வெள்ளைப் பாம்புக்குட்டி மெள்ள ஊர்ந்து திரிந்தது போல் துலங்கி நின்றது.

உரிய காதலியைப் பிரிந்திருத்தலால் இனிய நிலவு துயரமாய்த் தோன்றியது. மனைவி மருங்கு இருந்தால் அந்த நிலவு இனிய போகமாய் இதம் புரிந்திருக்கும். அவள் இல்லாமையால் அது அல்லலான தனியாய்த் துயர் புரிந்தது.

காதலருடைய காம போகங்களுக்குச் சேமத் துணையாயுள்ள நிலவு அவரது பிரிவில் பெரிய துயரமாய் முறுகி நிற்கிறது.

கலந்தவர்க்கு இனியதோர் கள்ளுமாய்ப், பிரிந்து
உலந்தவர்க்கு உயிர்சுடு விடமுமாய், உடன்
புலந்தவர்க்கு உதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே (உண்டாட்டு 2)

நிலவின் நிலையைக் குறித்து நம் கவி முன்னம் இங்ஙனம் குறித்திருக்கிறார். அந்தக் குறிப்பை இடங்கள்தோறும் விரித்து விளக்கி வருகிறார். இவ் வரவில் அறிவின் சுவைகள் பெருகி மிளிர்கின்றன.

காதலிகளோடு கலந்திருந்தவர்க்கு இனிய கள் ஆய் நிலவு இன்பம் தருகிறது; பிரிந்து வருந்தியுள்ளவர்க்குக் கொடிய விடமாய்த் துன்பம் புரிகிறது; ஊடலால் புலந்திருப்பவர்க்குப் புதிய தூது ஆய்ப் புகுந்து அவர் கூடி மகிழும்படி உதவி செய்கிறது என நிலாவின் நிலைமை நீர்மைகளைக் கலா விநோதமா உரைத்திருப்பது உவகை சுரந்து நிகழ்கின்றது. உலக இயற்கைகள் கவிஞனுடைய கலை ஒளியில் பல வகை எழில்களை வீசி நிலையான இன்ப ரசங்களை நேரே விளைத்து வருகின்றன.

அஞ்சன வண்ணனது எழில் மிகுந்த தோளில் நிலவின் ஒளி தவழ்ந்தது; அவன் உள்ளம் காதலியை நினைந்து வேதனையுழந்தது. பிரிவுத் துயரிலுள்ள அவனுக்கு அந்த இன்ப நிலவு துன்பமாயிருந்தமையால் பாம்பு என்று சொல்ல நேர்ந்தது. வெள்ளைப் பிள்ளை வாள் அரா என்றது அதன் நிறமும் நிலையும் தெரிய வந்தது. பாம்புக் குட்டி தோளில் ஏறினுல் உள்ளம் திகில் அடைதல் போல் அந்த நிலவால் இந்த வீர வள்ளல் மனம் மறுகியிருந்துள்ளமை விழி தெரிய வந்தது.

சீதை அருகில் இருந்தால் அவ்வாறு துயரம் நேர்ந்திராது; அவள் இல்லாமையால் அல்லல் ஆயது.

மயில் குலம் பிரிந்தது என்ன மரகதமலைமேல் அரா ஊர்ந்தது.

மயிலைக் கண்டால் பாம்பு அஞ்சும்; அயலே பயந்து ஓடிப் போம்; அது இல்லாமையால் உள்ளம் துணிந்து புகுந்தது; அல்லல் மிகுந்தது. குறிப்பு மொழிகள் கூர்ந்த சிந்தனைகளுடையன.

மயில் சீதையைக் குறித்தது.

மரகத மலை இராமனைக் கருதியது.

அரா நிலவை உணர்த்தியது.

உருவகங்களாய் வந்துள்ள உரைகள் அரிய பல மருமங்கள் நிறைந்து சுவைகள் சுரந்து திகழ்கின்றன.

மயிலுடைச் சாயலாள் என்றபடி எழில் விரிந்துள்ள சானகி அருகே இல்லாமையால் அஞ்சன வண்ணன் நெஞ்சம் மறுகியிருக்கிருன். பிரிவாற்ருமல் இக் கோமகன் உருகி மறுகி வருகிற அவ் வரவை இடையிடையே பார்த்துப் பரிவு கூர்ந்து வருகிறோம். உழுவலன்புகள் எங்கும் கெழுமி யுள்ளன.

பச்சைமலை ஒத்த படிவத்து அடல் இராமன் என முன்னம் கோலங்காண் படலத்தில் குறித்தார்; இங்கே மரகத மலை என்ருர். மலையிலேதான் மயில் மகிழ்ந்திருக்கும்; அயலே போனல் இயல் நிலை சிதைந்து எழில் குலைந்து அது துயருழந்து படும். அந்த அவல நிலையும் ஈண்டு அறிய வந்தது.

அழகிய மரகத மலையில் என்றும் உல்லாசமாய் உலாவி உவந்திருந்த எழில் மயிலை ஒரு கொலை வேடன் வந்து புலையாய்க் கவர்ந்து போனன்; களவுபோன அந்த இனிய இளமயிலை மீட்டிக் கொண்டு போக உடையவன் தேடி வந்திருக்கிருன்; அந்தவரவு நிலையில் உள்ளப் பரிவுகளும் உறவுரிமைகளும் உணர வந்தன.

உழுவலன்புடைய விழுமிய துணைவியை இழந்து இவ் வீர மகன் வெய்துயிர்த்து வருகிருன். ஈர மதியும் கோர விடமாய்க் கொடுந்துயர் புரிந்தது என்றது அவனது தனிமை வாழ்வின் கடுமையும் கவலையும் காண வந்தது.

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே---ஆரூர
வீதிவிடங் காஅடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடம் காகடைக்கண் பார்த்து.

(திருவாரூர் நான்மணி மாலை, 2)

பரமபதியைப் பிரிந்துள்ள ஒரு சீவநாயகி கூறிய படியிது. திருவாரூரில் எழுந்தருளி யிருக்கிற இறைவனுக்கு விடங்கர் என்று பேர். "ஏ நாதா! உன் பிரிவால் வருந்தியுள்ள என்னை இந்தச் சந்திரன் தொந்தரவு செய்கிருன்; கொடிய விடம் போல் தோன்றி அடு துயர் புரிகிற இவனைக் கடிது நீக்கி என்னை விரைந்து பாதுகாத்தருள்" என்பாள் விடங்கா! மதிப்பாதி விடம்

கா! என்றாள். மதிப்பாதி=பிறைச்சந்திரன். வெள்ளைப் பிள்ளை அரா என்றதை உள்ளி வந்துள்ளது போல் இது உணர வந்தது.

செவ்வாய்த் தீ.

போர் மேல் மூண்டு எழுந்த இராமன் படைகளோடு வந்து பாசறையில் தங்கினான். இரவு வந்தது; இலைக் குடிசை முன் இனிய புல் தரையில் அமர்ந்தான். நிலவொளி பரந்திருந்தது. அந்த இனிய சமையத்தில் மனைவியை நினைந்து மனம் மிக மறுகி இக் குலமகன் துனியுழந்திருந்தான்.

ஐயன் மெய்யுறப் புழுங்கி நைந்தான்.

இராமன் உள்ளம் நொந்திருந்த நிலையை இது உணர்த்தியுள்ளது. பிரிவிலுள்ள காதலியைக் கருதி மறுகியிருக்கிறான்.

அன்புத் துணைவி சிறைப்பட்டுள்ள இடத்தின் அருகே வந்துள்ளமையால் துன்பத் துடிப்புகள் மிகுந்திருந்தன. எப்பொழுது காண்போம்? என்ற வெப்பும் வேட்கையும் எல்லை மீறி நின்றமையால் உள்ளம் ஊசலாடி நைந்தது.

நெடுங்காதத் தேயும் சுடவல்ல தீ
அணுகினால் தணிவது உண்டோ?

கடலுக்கு அப்பால் வெகு தூரத்தில் இருந்தபோதே உடலையும் உயிரையும் வருத்தி எரித்து வந்த தீ அருகே அணுகிய பொழுது எவ்வளவு கொடுமையாய் எரிக்கும்! என்பதை இங்ஙனம் குறிப்போடு வெளிப்படுத்தியிருக்கிறார். கிட்கிந்தை முதலிய நெடுந் தொலைகளிலுள்ள பொழுதே அடுந்துயர் செய்து வந்த காம தாபம் துணைவியின் அருகில் நெருங்கியுள்ள இவ் வமையம் கொடுந்துயரங்களாய்க் கொதித்து எழுந்தது. ஆவித் துணையை எப்பொழுது காணுவோம் என்ற ஜீவத் துடிப்பு வேணவாவாய் விரிந்து வெப்பை விளைத்துள்ளது.

பவளச் செவ்வாய், கருங்கண் தீ எனச் சீதையை இங்கே இப்படிக் குறித்திருக்கிறார். வெப்பி வெதுப்பித் துன்பத்தில் உழந்து துடிக்கும்படி இராமநாதனைத் தகித்து வருதலால் அக் காதலியை இவ்வாறு காட்டியருளினர்.

பவளம் போன்ற சிவந்த வாயையும் கரிய பெரிய கண்களையுமுடைய அழகிய சீதையைத் தீ என்று இவ்வளவு அழகாக

ண்டு வெளிப்படுத்தி யிருக்கிறார். பிரியையின் பிரிவு உரிய கணவனை வாட்டி வருகிறது; தன்னை மடமையாக விரும்பினவனைக் குலத்தோடு அழித்து நிற்கிறது. அத்தகைய அற்புதமான கற்புத் தீயின் அதிசய மகிமை இங்கே அறிய வந்தது.

தீ எனும்படி பரிசுத்த நிலையில் துதி கொண்டுள்ள அந்தப் பதிவிரதையைக் கருதி யுருகி இந்த வீர ரகுபதி மறுகியுள்ளான். அவ் வுண்மையை நுண்மையாக ஈண்டு உணர்ந்து கொள்ளுகிறோம். அவளுடைய சிவந்த வாயும் கரிய கண்ணும் உள்ளத்தின் உருவெளியில் தோன்றி இவனை உருக்கி வருதலால் அவை உருவகங்களாய் வெளி தெரிய வந்தன.

பெரிய போரைக் கருதி வந்தவன் உரிய தாரத்தை நினைந்து மறுகி மயங்கி உருகியிருக்கிறான். அரிய வீரன் இனிய காதலன் என உலகம் அறிய ஒளி செய்துள்ளமை உணர வந்தது.

## இலங்கைவேந்தன் செய்தது.

பன்னசாலைமுன் இன்னவாறு இராமன் அமர்ந்திருக்கும் போது இலங்கைவேந்தன் செய்த செயலை இங்கே அறிய வருகிறோம். வானரப் படைகள் கடல் கடந்து வந்து இலங்கை அருகே பாளையம் செய்துள்ளன என்று அறிந்ததும் இராவணன் வியந்து திகைத்தான். நிலைமைகளை நன்கு தெளிய எண்ணினான். ஒற்றரை விரைந்து அழைத்தான். சுகன், சாரன், என்னும் பேரினர் இருவரும் ஆர்வமோடு வந்து பணிந்து அவன்முன் வணங்கி நின்றார். அவர் மாய விஞ்சைகள் பலவும் பயின்றவர். வஞ்சச் சூழ்ச்சிகளில் நெஞ்சம் தேர்ந்தவர். அதிசயமான மாயா சாலங்களையுடையவர். கருதியபொழுது கருதிய உருவங்களை எடுத்து யாண்டும் புகுந்து யாரும் அறியாமல் எதையும் ஆராய்ந்து எவ்வழியும் வெற்றியோடு விரைந்துவர வல்லவர். அந்த ஒற்றர்களைக் கொற்றவன் நோக்கினான்: "பாசறைக்குப் போய்ப் பகையின் வகைகளை ஆய்ந்து வருக" என்று பணித்தான். அவ்வாறே செய்து வருவதாக உறுதி கூறித் தொழுது வணங்கி அவர் வெளியே வந்தார். வினையாண்மையுடன் விரைந்து எழுந்தார். மானச விஞ்சைகளை மருவி மருமமாய் நேர்ந்தார்.

470

## ஒற்றர் புகுந்தது.

அந்தச் சாரணர் இருவரும் தானைகள் தங்கியுள்ள இடத்தை அடைந்தார். பாடி அயலே நின்று படைகளைப் பார்த்தார். கடல்கள் பொங்கி வந்துள்ளதுபோல் படைகள் வந்துள்ளன என்று வியந்தார். உள்ளே புகுந்து எல்லா வகைகளையும் நேரே காண நெஞ்சம் துணிந்தார். வானரங்கள் போல் வடிவம் கொண்டார். சேனைகளிடையே புகுந்தார். இடங்கள்தோறும் உலாவி உளவுகள் ஓர்ந்து வந்தார். இரவு ஏழு நாழிகையானதும் விபீடணன் அதிக எச்சரிக்கையுடன் பாசறையைச் சுற்றி ஆராய்ந்து வந்தான். மாய வஞ்சங்கள் நிறைந்த கொடிய அரக்கருடைய ஊர் அருகே படைகள் வந்து தங்கி யுள்ளமை யால் ஏதேனும் இடையூறுகள் நேர்ந்துவிடுமோ? என்ற கவலை யோடு யாதும் கண்ணுறங்காமல் யாண்டும் கூர்ந்து பார்த்துப் பாதுகாப்புடன் ஓர்ந்து வந்தான். அவ்வாறு வருங்கால் களவாகப் புகுந்து உளவுகள் ஆய்ந்து உருவம் கரந்து உரிமையாளர் போல் மருவி வருகிற அந்த இருவரையும் கருதி நோக்கினான்.

## கள்ளம் கண்டது.

கபட சிந்தனையுடன் அதிமருமமாய்க் கரந்து திரிகிற அவரது செயல் இயல்களை விரகோடு கூர்ந்து நோக்கி வந்த விபீடணன் வேவுபார்த்து வருகிற கள்ளர் என்று அவரை உள்ளம் துணிந்துகொண்டான். மெள்ளப்போய்ப் பிடித்தான். குரங்குகள் போல் உருவங் கொண்டுள்ள அவர் "நாங்கள் பாசறையைக் காவல் புரிந்து வருகிறோம்" என்று பணிவுடன் உரைத்தார். வீடணன் வெருட்டி அரக்கர் பாஷையில் வினவினான். அந்தப் பேச்சே தெரியாதவர்போல் அவர் பாசாங்கு செய்து விழித்தார். இருவர் சிகைகளையும் இடக்கரத்தால் ஒருங்கே பற்றினான். "இங்கே உள்ளே புகுந்து உளவுகள் ஓர்ந்துவரும் கள்வர்கள் இவர்" என அங்கே கூடி நின்ற குரங்குகளிடம் குறித்தான். உடனே வானரங்கள் பாய்ந்து பிடித்து அடித்து உதைத்து விரைந்து கொல்ல மூண்டன. "ஆண்டவனிடம் கொண்டு போவோம்" என்று அக் கூட்டத்தை விலக்கி அந்த இருவரையும் வீடணன் அழைத்து வந்தான். இராமனது அருகே வரவே "ஐயோ! ஆண்டவா! இந்தப் பாவி

அரக்கன் வஞ்சகமாய் ஈண்டு வந்து புகுந்து வானரங்களாகிய எங்களுக்குள் கலகத்தை மூட்டிக் கெடுத்து இராவணனுக்கு அனுகூலம் செய்ய மூண்டிருக்கிறான்; இவனை இங்கே வைத்திருக்கக்கூடாது; உடனே வெளியே விரட்டிவிட வேண்டும்; அல்லது கொன்று ஒழிக்கவேண்டும்'' என இவ்வாறு ஓலமிட்டு அழுதார். அவரது கள்ள நிலையை அறியாமல் இராமனும் உள்ளம் திகைத்தான். முடிவு தெரியவே கடிது வியந்தான். அயலே வருகிற கவிப் படங்களைக் கருதிக் காணுங்கள்.

## ஒற்றர் உற்றது.

இற்றது காலம் ஆக இலங்கையர் வேந்தன் ஏவ
ஒற்றர் வந்து அளவு நோக்கிக் குரங்குஎன உழல்கின்றாரைப்
பற்றினன் என்ப மன்னோ பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்தந் துய்ப்ப முந்துறப் போந்த நம்பி, (1)

## வீடணன் பற்றியது.

பேர்வுறு கவியின் சேனைப் பெருங்கடல் வெள்ளம் தன்னுள்
ஓர்வுறு மனத்தன் ஆகி ஒற்றரை உணர்ந்து கொண்டான்
சேர்வுறு பாலின் வேலை சிறுதுளி தெறித்த தேனும்
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனான். (2)

பெருமையும் சிறுமை தானும் முற்றுறு பெற்றி யாற்ற
அருமையின் அகன்று நீண்ட விஞ்சையுள் அடங்கித்தாமும்
உருவமும் தெரியா வண்ணம் ஒளித்தனர் உறையு மாயத்து
இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்ன லானான். (3)

## குரங்குகள் குத்தியது.

கூட்டிய விரல்திண் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி
மீட்டொரு வினைசெய் யாமல் மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர் வாயால் குருதியே பொழிகின் றாரைக்
காட்டினன் கள்வர் என்னாக் கருணையங் கடலும் கண்டான். (4)

## இராமன் இரங்கியது.

பாம்பிழைப் பள்ளி வள்ளல் பகைஞர்என் றுணரான் பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ குரங்கென இரங்கி நோக்கித்
தாம்பிழை செய்தார் ஏனும் தஞ்சம்என்று அடைந்தோர் தம்மை
நாம்பிழை செய்ய லாமோ? நலியலீர் விடுமின்! என்றான். (5)

### கள்வர் என்றது.

அகனுறப் பொலிந்த வள்ளல் கருணையால் அழுத கண்ணன்
நகனிறை கானின் வைகும் நம்மினத் தவரும் அல்லர்;
தகைநிறை வில்லா வுள்ளத்து இராவணன் தந்த ஒற்றர்
சுகன்இவன் அவனும் சாரன் என்பதும் தெரியச் சொன்ஞன்.

### சாரர் மாறிச் சொன்னது.

கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை அரிதென் றெண்ணி வினையத்தால் எம்மைஎல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்ம்மை குரங்குநாம் கொள்க என்றார்.

### உருவம் காட்டியது.

கள்ளரே காண்டி என்று மந்திரம் கருத்துட் கொண்டான்
தெள்ளிய தெரிக்கும் தெவ்வர் தீர்வினை சேர்த லோடும்
துள்ளியின் இரதம் தோய்ந்து தொன்னிறம் கரந்து வேருய்
வெள்ளிபோன் றிருந்த செம்பும் ஆமென வேறு பட்டார். (8)

### இராமன் வினவியது.

மின்குலாம் எயிற்ற ராகி வெருவந்து வெற்பின் நின்ற
வன்கணர் தம்மை நோக்கி மணிநகை முறுவல் தோன்றப்
புன்கணர் புன்கண் நீக்கும் புரவலன் போந்த தன்மை
என்கொலாம் தெரிய எல்லாம் இயம்புதிர் அஞ்சல் என்ருன். (9)

### உண்மை உரைத்தது.

தாய்தெரிந்து உலகு காத்த தவத்தியைத் தன்னைக் கொல்லும்
நோய்தெரிந்து உணரான் தேடிக் கொண்டனன் நுவல யாங்கள்
வாய்தெரிந்து உணரா வண்ணம் கழறுவான் வணங்கி மாய
வேய்தெரிந்து உரைக்க வந்தேம் வினையிஞல் வீர! என்ருர். (10)
(ஒற்றுக் கேள்விப் படலம் 24—33)

நடந்துள்ள சம்பவங்கள் அதிசய விசித்திரங்களாய் விளைந்திருக்கின்றன. நிகழ்ச்சிகளை விழைந்து காணுகின்ருேம். வியந்து நிற்கின்ருேம். பாடி நிலையத்தில் பகைவன் ஏவிய வேவுகாரர் புகுந்து விரகுபுரிந்து வருங்கால் வீடணன் கண்டதும், விரைந்து கைக்கொண்டதும், வானரங்கள் அடித்ததும், இராமனிடம் உய்த்ததும், அவ் வஞ்சகக் கள்வர்கள் நெஞ்சம் துணிந்து பேசியதும், வீடணன் செய்த விஞ்சையால் கள்ள வடிவம் நீங்கி உள்ள வுருவில் அரக்கர் நின்றதும், அண்ணல் வியந்து

எண்ணம் தெளிய வினவியதும் கண் எதிரே காணும் காட்சிகளாய் இங்கே நேரே தோன்றியுள்ளன.

நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனான்.

விரிந்து பரந்துள்ள பெரிய பால்கடலில் சிறிய ஒருநீர்த்துளி விழுந்ததுபோல் நெடிய வானரசேனையுள் மாறான கொடிய ஒற்றர் புகுந்தனர். அவரை உற்று அறிந்து வேறு பிரித்துப் பற்றினமையால் அன்னப் பறவையின் நீர்மையும் கூர்மையுமுடையான் என வீடணன் இவ்வாறு ஈண்டு எண்ண நின்றான்.

அன்னம்.

இது பறவை இனத்தைச் சேர்ந்தது. நீரிலும் நிலத்திலும் வசிப்பது. வெண்ணிற முடையது; தலையில் சிவந்து நிவந்த கொண்டை அமைந்தது; உருவப் பொலிவும் நடையழகும் வாய்ந்தது; பெண்கள் நடைக்கு உவமையாகக் காவியக் கவிகளால் பாராட்டப் பெற்றது. சிவந்த தாமரைகளில் உவந்திருக்கும் இயல்பினது. சிருட்டியில் ஓர் அதிசய நீர்மை இப்பறவைக்குத் தனி யுரிமையாக அமைந்திருக்கிறது. பாலோடு நீர் கலந்திருந்தால் நீரை நீக்கிப் பாலை மாத்திரம் பருகிக்கொள்ளும் பான்மை இதனிடம் மேன்மையாய் மேவியுள்ளது. அசாரங்களை ஒழித்துச் சாரமான கல்வியையே மாந்தர் ஓர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இந்தப் பறவையைத் தேர்ந்த சான்றாக ஆன்றோர் காட்டி யிருக்கின்றனர்.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பாலுண் குருகின் தெரிந்து. (நாலடியார் 135)

அறிவு நலம் சுரந்த உயர்ந்த நூல்களையே மனிதர் பயின்று பயன் பெற வேண்டும் என இது உணர்த்தியுள்ளது. நீர் ஒழியப் பால் உண் குருகு என அன்னம் இதில் உவமையாய் வந்துள்ளமையை உன்னி உணர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

தாமரை மலர்தலை எடுத்துத் தண்கமழ்
தூமலர்க் குவளைகால் அணைத்துத் தோலடிக்
காமரு பெடைதழீஇ அன்னம் கண்கொளும்
தேமலர்த் தடந்தழீஇத் திசைகள் மல்கின்றே.
(சிந்தாமணி)

"நீலக் குவளை நிரையிதழ் உடுத்த
கோலப் பாசடைப் பால்சொரிந் தன்ன
தூவெள்ளருஞ் சிறைச் சேவலோடு உளரிப்
பள்ளி அன்னம் பகலில் துயிலா." (பெருங்கதை)

"மென்னடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
அன்னவான் சேவற் புணர்ச்சிபோல் ஒண்ணுதல்
காதலன் மன்ற அவனைவரக் கண்டாங்கு
ஆழ்துயரம் எல்லாம் மறந்தனள் பேதை." (நெய்தற்கலி)

"தண்ணறுந் தாமரை அணையில் தங்கிய
அண்ணல் ஓதிமம்துனி அகற்றிப் பேடையை
விண்ணிறச் சிறகரால் தழீஇ விருப்பொடும்
உண்மகிழ் கூர்தர உவந்து புல்லிற்றே." (நைடதம்)

"மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசால்
நூலினுல் பெரியவர் நுழைந்த சுற்றமா
ஆலுநீர் அன்னமோடு அரச அன்னமே
போல நின்று உலகினைப் பொதுமை நீக்கினுன்."
(சூளாமணி)

அன்னத்தின் அழகும் அமைதியும் அன்பும் பண்பும் நிலைமையும் நீர்மையும் இன்னவாறு நூலோரால் குறிக்கப்பட்டுள்ளன.

பாலில் படிந்துள்ள நீரைக் கடிந்து தள்ளுவது அன்னத்தின் தன்மையாம். இந்த இயல்பு அதன் சொந்த வுரிமையாயுள்ளது.

பால் ஆழிபோல் பரந்து விரிந்துள்ள வானர சேனைகளுக்குள் ஊனமாய்ப் புகுந்த அரக்கர் இருவரை விபீடணன் கண்டு பிடித்துக் கடிந்து நின்றுன் ஆதலால் அன்னத்தின் நீரன் ஆனுன் என இன்ன வண்ணம் அவனை இங்கே எடுத்துக் காட்டினுர்.

பாலோடு கலந்த நீர் பாலாகவே தோன்றும்; வேருய் யாதும் தோன்றுது; அதுபோல் வானரங்களோடு கலந்த அந்தச் சாரணர் வானரராகவே தோன்றி நின்றனர்; எவரும் அவரை இனம் தெரிய முடியாது என்பது இங்கே மனம் தெளிய வந்தது.

உருவிலும் உரையிலும் நடை உடை பாவனைகளிலும் குரங்குகள் ஆகவே அவர் குலாவி நின்றனர். பாலில் கலந்த நீரை அன்னப் பறவையைத் தவிர வேறு யாரும் யாதும் பிரித்துக்

காட்டமுடியாது; அதுபோல் வானரசேனையுள் கலந்த அரக்கரை விபீடணனைத் தவிர வேறு எவரும் கண்டு பிடிக்க இயலாது என்பது இங்கே தெளிவாய் நின்றது.

உள்ளே புகுந்து கரவாய் ஒற்றி அறிய வந்த கள்ள ஒற்றரைக் கண்டுபிடித்த வீடணன் மகிமையை நாம் கண்டு தெளியும்படி கவி காட்டியிருக்கும் காட்சி சுவையை ஊட்டியுள்ளது.

அன்னத்தின் நீர்மையன் என்றதோடு அமையாமல் மேலும் மன்னயமாக் காட்டியுள்ளார். ஞான நீர்மைகளை நன்கு விளக்கியிருக்கிறார். அயலே வருகிறது ஆய்ந்து காண வுரியது.

இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னலானுன்.

இந்தக் காட்சி அரியபல ஆராய்ச்சிகளுடையது. ஒரு பெரிய புத்தகம் எழுதுதற்குரிய தத்துவ நிலைகள் இதில் உய்த்துணரவுள்ளன. உண்மையுணர்வுகள் ஒளிசெய்து மிளிர்கின்றன.

அகில உலகங்களையும் இயக்கி வருகிற ஒரு பொருள் அநாதியாயுள்ளது. கடவுள் முதலாகப் பல பெயர்களால் அது அழைக்கப்படுகிறது. அந்தப் பரம்பொருளிலிருந்தே சராசரங்கள் யாவும் விரிந்திருக்கின்றன. கண்ணுக்குக் கதிர் ஒளிபோல் சீவர்களுக்கு இறைவன் எதிர் ஒளி செய்துள்ளான். உடலில் உள்ள உயிர் சீவாத்துமா; அவ்வுயிருக்கு உயிராயுள்ளது பரமாத்துமா. இந்த இருவரும் மெய்யில் மேவியுள்ளனர்; இருந்தும் யாரும் காணுமல் பொய்யில் உழந்து வருகின்றனர். கை கால் முதலிய அவயவங்களையே கண்டு தேகத்தையே தான் எனக் கொண்டு இன்ன சாதி, இன்ன இனம், இன்ன மதம் என இன்னவாறு இன்னல் நிலையில் இழிந்து கழிந்து ஒழிந்து போகின்றார். யோகி மாத்திரம் ஞானக் காட்சியால் சீவான்மாவையும் பரமான்மாவையும் நேரே பார்த்துப் பேரின்பம் பெற்றுள்ளான்.

பூவினில் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது;
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யுணைந்த நடுதறி யாமே. (1)

சீவன்எனச் சிவன் என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார்சிவனாயிட் டிருப்பரே. (2)

தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சீவனும் ஆகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. (திருமந்திரம்) (3)

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிர்எனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே. (தேவாரம்)

தன்னுள்ளே சகத்தும் அந்தச் சகத்துளே தானும் ஆகப்
பின்னம தின்றி என்று காண்குவன் பிரமம் தன்னின்
மன்னிய தான லாமை மற்றொன்றும் காண்க லானென்று
அன்ன காலத்தின் முத்தன் ஆகுவன் யோகி அன்றே.
(கூர்மபுராணம்)

இந்தப் பாசுரங்கள் இங்கே ஊன்றி நோக்கி உணர்ந்து சிந்திக்கத்தக்கன. மெய்யுணர்வு மேலான தெய்வக் காட்சிகளை அருளி வருகிறது. உய்தி நிலைகள் உரிமையோடு உணர வந்தன.

தன்னை அறிந்த யோகி தலைவனையும் அறிந்து நிலையான பேரின்பத்தை நேரே எய்தி மகிழ்கின்றான். [சீவன், பரன் என்னும் இருவரையும் ஒருங்கே கண்ட யோகிபோல் சுகன் சாரன் என்னும் இருவரையும் வீடணன் கண்டுகொண்டான் என்பார் இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னலானான் என இன்னவாறு பெருமகிமை காண விளக்கினார். யோகியும் என்றதில் உம்மை முன்னம் சொன்ன அன்னத்தின் நீர்மையை உன்னி வந்தது. இது இறந்தது தழுவிய எச்ச வும்மையாம்.]

ஒருவரும் அறியாதபடி உருவம் மாறி மாயா வல்லபமாய் வந்துள்ள அந்தக் கள்ளரைக் கண்டுபிடித்தது அரிய செயல் ஆதலால் அதனை இங்ஙனம் தெரிய உரைத்தார். அருமைப்பாடுகளைப் பெருமைப்படுத்தி உரிமையோடு உணர்த்தியருளுகிறார். சரித நிகழ்ச்சிகளுள் அரியபல உறுதிநலங்களை இடையிடையே

ளித்தக விநோதமா விளக்கி வருகிறார். பெரிய தத்துவக் காட்சி கள் எளிய மொழிகளில் தெளிவாக வெளிவந்துள்ளன. ஆன்ம மெய்திகளை யாண்டும் நயமாகக் கூறி வருதலால் கவியின் உயர் வான இனிய நீர்மைகளை நாம் இனிது ஓர்ந்து கொள்ளுகிறோம்.

காட்டினன் கள்வர் என்னாக் கருணையங்கடலும் கண்டான்.

தான் கண்டுபிடித்த ஒற்றரைக் கொண்டுவந்து இராமன் முன்னே நிறுத்தி வீடணன் காட்டி நின்ற நிலையை இங்கே நாம் கண்டு நிற்கிறோம். கள்வர் என்றது கரவாய் மறைந்து புகுந்து உளவு தெரிய வந்த அவரது களவு நிலை தெளிய வந்தது.

கள்ளர் என்று காட்டிய பொழுதும் உள்ளம் இரங்கிச் சீவகருணையால் உருகினான் ஆதலால் கருணையங்கடல் என இராமனை இங்கே அருள் நலம் தெரியக் கவி காட்டியருளினார்.

பூட்டிய கையர் வாயால் குருதியே பொழிகின்றார் என்றத னால் குரங்குகள்பால் அவர் பட்டுள்ள பாடுகள் தெரிய வந்தது.

அடித்துக் குத்தி எற்றிப் பற்றி மாணை என்னும் ஒருவகைக் கொடியால் அந்த இருவர் கைகளையும் இறுகப் பிணித்துக் கட்டிக் கள்ளரைக் கைதி செய்து காவலாளிகள் அரசன் எதிரே கொண்டு வந்துள்ளது போல் வானரங்கள் அங்கே மண்டி வந் துள்ளனர். அந்த நிலை சிந்தை தெளிய வந்தது.

வள்ளல் பகைஞர் என்று உணரான்.

கள்ளர் என்று சொல்லியும் இராமன் உள்ளம் அவர்பால் மாறுபடவில்லை. உருவத் தோற்றத்தில் குரங்குகளாகவே நின் றமையால் பெரிதும் இரங்கி அருளினான். கூட்டத்தில் ஏதோ தவறு செய்துள்ளனர்; அதற்காகத் தண்டித்துக் கொண்டு வந் திருக்கின்றார் என்று நெஞ்சம் பரிந்து நெடிது இரங்கினான்.

தாம் பிழை செய்தார் ஏனும்
நாம் பிழை செய்யலாமோ? நலியலீர்! விடுமின்!

நம்மைத் தஞ்சம் என்று நம்பி வந்துள்ள படை வீரர் இடையே மடமையால் தவறு செய்தாலும் அதனை நாம் பொறுத் தருள வேண்டுமே யன்றி அவரை வருத்தலாகாது; கட்டை அவிழ்த்து விடுங்கள்; அன்பு உரிமையோடு ஆறுதல் செய்யுங்

கள் என இவ்வாறு இக் கருணை வள்ளல் கூறவே விபீடண னுடைய கண்களிலிருந்து நீர் பெருகி வந்தது. ஆ! எம் வள்ளல் எவ்வளவு வெள்ளை உள்ளத்தராய் இருக்கிறார்! கள்ளம் கபடுகள் யாதும் அறியாத நேர்மையான நெஞ்சமுடைய இவ் வீரமூர்த்தி கொடிய வஞ்சகர் நிறைந்த அரக்கர் நாட்டை அடைந்துள் ளாரே! என்று ஆர்வம் மீதூர்ந்து அழுதிருக்கிறான். அவனு டைய பரிவும் பண்பும் உறவும் நண்பும் உரிமையாய் ஓங்கி உள் ளத்தை உருக்கி யிருக்கின்றன. அங்ஙனம் உருகி அழுதவன் உண்மையைத் தெளிவாக உரைத்தான்.

இவர் நம் இனத்தவர் அல்லர்; இராவணன் தந்த ஒற்றர்.

உருவ நிலையைக்கண்டு குரங்குகள் என்று இரங்கியருளிய இராமனுக்கு இவ்வாறு உண்மையை வீடணன் உறுதியாக உரைத்துள்ளான். உரையுள் அவனுள்ளத்தின் பரிவுஒளிர்கின்றது.

இவன் சுகன்; அவன் சாரன் என இறுதியில் அவருடைய பெயர் விவரங்களையும் தெளிவாகத் தெளியும்படி சொன்னான்.

இலங்கைத் தம்பி இப்படிச் சொல்லவே அந்தக் கள்வர் உள்ளம் துணிந்து உரைக்க நேர்ந்தது வியப்பாய் நின்றது. "இராமநாதா! இவன் கொடிய வஞ்சகன்; நமது தாயை எடுத் துக்கொண்டுபோன தீய இராவணனோடு உடன் பிறந்தவன்; நாம் படைகளோடு திரண்டு வருவதை அறிந்ததும் அரக்கர் குலம் அடியோடு அழிந்துபோம் என்று கலங்கினான்; நம்மை நேரே எதிர்த்து வெல்லமுடியாது என்று தெரிந்தான்; நய வஞ் சகமாய் இங்கு வந்து உள்ளே புகுந்தான்; கோளை மூட்டிக் கலகத்தை விளைத்துக் குரங்குகள் ஒன்றோடு ஒன்று அடித்துச் சாகும்படி இந்தக் கெடு காலன் கேடு செய்ய மூண்டுள்ளான். நாங்கள் இருவரும் உண்மையாகவே குரங்குகள்; இவ் வெய்ய வன் பொய்யே சொல்லுகிறான்; உள்ளம் கள்ளமாய் வந்து ஈங்கு ஊறுபாடுசெய்கிற இவனை உடனே ஒழித்து நீக்கி உங்கள் பாத ஊழியர் ஆகிய எங்களைப் பாதுகாத்தருளுங்கள்" என முழுதும் மெய்யர் போல் நடித்துத் தொழுத கையராய் அழுது மறுகி இங்ஙனம் அவர் முறையிட்டு நின்றார்.

வாய் வார்த்தைகள் வானரங்கள் போலவே இருந்தன ஆதலால் அயல் நின்றவர் பலரும் திகைத்தார். விபீடணன்

கடுத்து மாயவேதி என்னும் ஓர் விஞ்சை மந்திரத்தைச் செபித்தான். உடனே குரங்கு வடிவம் நீங்கி இருவரும் நெடிய அரக்கராய் நேரே நின்ருர்.

யாவரும் அதிசயம் மீதூர்ந்து ஆரவாரம் செய்தனர்.

கள்ளம் தெரிந்துபோயதே! என்று அந்த ஒற்றர் இருவரும் உள்ளம் நாணி ஒடுங்கி நின்ருர். இவ் வீர வள்ளல் அவரை வியந்து நோக்கி அஞ்சாதீர்! என்று அருள் புரிந்து குறு முறுவலோடு பேச நேர்ந்தான்.

புன்கணுர் புன்கண் நீக்கும் புரவலன் போந்த தன்மை
என்கொலாம்? தெரிய எல்லாம் இயம்புதிர்! அஞ்சல்என்ருன்.

அந்த ஒற்றரை நோக்கி இராமன் இந்தவாறு வினவியிருக்கிருன்.

புன்கணுர் புன்கண் நீக்கும் புரவலன் என இராமனை இங்ஙனம் குறித்திருக்கிருர். புன்கண் = துன்பம். துயரத்தால் வாடி வந்த அகதிகளை ஆதரித்தருளும் அண்ணல் ஆதலால் இன்னவண்ணம் உரைத்தார். புரந்தருளுவது நிரந்தரமாயுள்ளது.

கள்ள அரக்கர் என்று தெரிந்தும் உள்ளம் இரங்கி அபயம் தந்து ஆறுதல் கூறி உரிமையோடு உசாவியிருப்பது இக்கோமகனுடைய அரிய பெருந்தன்மையை விளக்கி நிற்கிறது.

இந்த இரவில் நீவிர் இருவீரும் கள்ளத்தனமாய் இங்கு வந்தது எதற்காக? உள்ளதை ஒளியாமல் சொல்லுங்கள்; யாதும் அஞ்சவேண்டாம்; யாதொரு துயரமும் நேராது; நெஞ்சம் திடமாய் நேரே பேசுங்கள்!" என இவ்வாறு பேரருளோடு இப் பெருமான் கூறவே அவர் உற்றதை யெல்லாம் உரைக்க நேர்ந்தார்.

வேயர் விளம்பியது.

"உலக மாதா என்று யாவரும் தொழுது துதிக்கும் கற்பரசியைக் காதலித்துத் தன் உயிர்க்கும் குலத்துக்கும் ஒருங்கே நாசத்தை விளைத்துள்ள எங்கள் அரசன் ஏவலால் நாங்கள் ஈங்கு வந்தோம்; உளவுகள் அறிய உள்ளே புகுந்தோம்; எங்கள் களவு நிலை தெரிந்தது; தெரியவே பெரிய துயரம் நேர்ந்தது; யாண்டும் யாரிடமும் படாத பாடுகளை ஈண்டு இன்று நாங்கள் பட்டோம்; தேவரும் அறியா வேவுகாரர் என வீறு கொண்

டிருந்த எங்கள் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் பிழையாய் ஒழிந்தன ஐயனே!'' என்று அவர் கை குவித்து நின்ருர்.

வஞ்சமாய்த் துப்பு அறிய வந்த அவர் நெஞ்சம் கலங்கி நெடிது நாணி உறுதியுடையராய் உள்ளம் தேறி மறுகி யுரைத்த உரைகளைக் கேட்டு இராமன் பரிவு கூர்ந்தான்.

வேய் தெரிந்து உரைக்க வந்தேம் வீர!

என்று கூறும்பொழுது அவர் வாய் குழறி நின்ருர். யாண்டும் அஞ்சாத ஒற்றரும் ஈண்டு அஞ்சியிருக்கிருர். வேய் = ஒற்று. யாரும் அறியாமல் இரகசியமாய் வேவுபார்த்தல் வேய் என வந்தது. பகையின் வகையை ஒற்றியறிய வந்தோம் என்று அவர் உள்ளதைச் சொல்லவே இவ் வள்ளல் உவந்தான். வந்தவர் சிந்தை வியந்து கொள்ளும்படி பலவும் சொல்ல நேர்ந்தான்.

“இங்குள்ள நிலைகளை அறிந்து வரும்படி உங்கள் வேந்தன் ஏவியதால் நீவிர் ஈண்டு வேவுபார்க்க வந்தீர்! முழுதும் பார்க்கு முன் இடையே பழுது நேர்ந்தது. நீங்கள் தெளிவாக அறிந்து போய் உங்கள் அரசனிடம் வழுவாமல் சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் நானே விவரமாகச் சொல்லுகிறேன்; கேட்டுச் செல்லுங்கள்'' என்று இவ் வீரவள்ளல் சொல்லியருளிஞன். உரைகள் வீர கம்பீரங்களாய் வீறு கொண்டு வந்தன.

## இராமன் சொல்லியது.

எல்லையில் இலங்கைச் செல்வம் இளையவற்கு ஈந்த தன்மை
சொல்லுதிர்; மகர வேலை கவிக்குல வீரர் தூர்த்துக்
கல்லினில் கடந்த வாறும் கழறுதிர்; காலம் தாழ்த்த
வில்லினர் வந்தார் என்றும் விளம்புதிர்; விளம்பலாதீர்! (1)

கொத்துறு தலையான் வைகும் குறும்புடை இலங்கைக் குன்றம்
தத்துறு தடநீர் வேலை தனினொரு சிறையிற் ருதல்
ஒத்துற உணர்ந்திலாமை உயிரொடும் உறவி னேடும்
இத்துணை இருந்தது என்னும் தன்மையும் இயம்பு வீரால்! (2)

சுண்டங்கொள் வேக மாகத் தனிவிடை உவணம் தாங்கும்
துண்டங்கொள் பிறையான் மௌலித் துளவினன் ஓடும்தொல்லை
அண்டங்கள் எவையும் தாக்கிக் காப்பினும் அறம் இலாதான்
கண்டங்கள் பலவும் காணக் காண்பதும் கழறு வீரால்! (3)

நீட்டுறு மழுவாள் வீரன் தாதையைச் செற்ருன் சுற்றம்
மாட்டிய வண்ணம் என்ன வருக்கமும் மற்றும் முற்றும்
வீட்டிஎன் தாதைக் காக மெய்ப்பலி விசும்பு ளோருக்கு
ஊட்டுவன்உயிர்கொண்டென்னும்உண்மையும்உணர்த்துவீரால்

தாழ்விலாத் தவத்தோர் தையல் தனியொரு சிறையில் தங்கச்
சூழ்விலா வஞ்சம் சூழ்ந்த தன்னைத்தன் சுற்றத் தோடும்
வாழ்வெலாம் தம்பி கொள்ள வயங்கெரி நரகம் என்னும்
வீழ்விலாச் சிறையில் வைப்பேன் என்பதும் விளம்புவீரால். (5)

நோக்கினீர் தானை எங்கும் நுழைந்துநீர் இனிவே றென்றும்
ஆக்குவ தில்லை யாயின் அஞ்சலென் றஃதுண் டன்றே
வாக்கினின் மனத்தில் கையில் மற்றினி நவியா வண்ணம்
போக்குமின் விரைவின் என்ருன் உய்ந்தனம் என்று போனர்.
(ஒற்றுக் கேள்வி 34-39)

இங்கே விளைந்து வந்துள்ள உறுதிமொழிகளை விழைந்து கேட்டு வியந்து நிற்கின்ருேம். உரைகள் உள்ளச் செவிகளில் ஒலித்து ஒளிவீசி நிற்கின்றன. படைகளின் நிலைகளைப் புற நோக்கில் அறிந்து போகக் கரந்துவந்த ஒற்றர்களுக்குத் தன் அகத்தில் கருதியுள்ள எல்லா நிலைகளையும் தெளிவாக இவ்வீரன் உரைத்திருக்கிருன். அருந்திறலாண்மைகள் பெருந்தகைமைகளோடு பொலிந்து திருந்திய மொழிகளில் வெளி வந்துள்ளன.

இராவணனிடம் போய்ச் சொல்லும்படி இராமபிரான் ஈண்டு உரைத்திருக்கும் உரைகளை ஊன்றி நோக்குந்தோறும் வீரகம்பீரங்கள் ஆரவாரங்களோடு தோன்றி நம்கண் முன்னே களிநடம் புரிகின்றன. கருதியுணர்பவர் பெரிதும் மகிழ்கின்ருர்.

## வெற்றிவீரன் விளம்பியது

"ஒற்றர்காள்! இலங்கையின் ஆட்சிமுழுவதையும் இளைய தம்பியாகிய விபீடணனுக்கு நான் வழங்கியிருக்கிறேன்; இதனை இராவணனுக்கு விளங்கும்படி சொல்லி விடுங்கள். அரிய பெரிய கடலிடையே அணைவகுத்து வானர சேனைகள் வீறு கொண்டு எழுந்துள்ள நிலைகளை விளக்கிச் சொல்லுங்கள். அதிசய வில் வீரர் இருவர் அரக்கர் குலத்தை அடியோடு அழிக்க மூண்டு ஈண்டு வந்துள்ளார் என அவன் நேரே கூறுங்கள். இலங்காபுரி இருக்கும் இடம் எமக்குத் தெளிவாகத் தெரியாமையினுலேதான் இதுவரை உன் உயிரும் உறவினங்களும் உல

கில் இருக்க நேர்ந்தன என்று நான் உரைத்ததாக அவனிடம் உரையுங்கள். சிவபெருமானும் திருமாலும் அண்டகோடிகளி லுள்ள தேவர் யாவரும் ஒருங்கு கூடி இராவணனுக்குத் துணை யாய் நின்று காத்தாலும் அவனுடைய தலைகளை அறுத்துத் தரை யில் உருட்டுவேன்; பரசுராமன் அரசர் குலத்தைக் கருவறுத்தது போல் நான் அரக்கர் குலத்தைக் கருவறுத்து என் தந்தையாகிய சடாயுவைக் கொன்ற பழிக்குப் பழி தீர்த்துப் பிதிர் தேவதை களுக்கு வீரப்பலி ஊட்டுவேன். நெஞ்சம் துணிந்து வஞ்சமாய் வந்து மாய வேலை செய்து எனது தூய மனைவியைக் கவர்ந்து கொண்டு போய்த் தன் ஊரில் சிறை வைத்துள்ள அந்தத் தீய பாவியைச் சுற்றத்தோடு எரிவாய் நரகத்தில் சிறை வைப்பேன்; இலங்கை ஆட்சியை இழந்து நரகமே காணி ஆட்சியாக அவன் அல்லலுறுவதை மூதண்டங்களும் காணும்படி என் கோதண் டம் செய்யும்; விரைந்து நடக்க நேர்ந்துள்ள இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் முன்னதாகவே அவன் அறிந்து கொள்ளும்படி இப் பொழுதே போய் நீர் உரைத்து விட வேண்டும்; வேவு பார்க்க வந்த நீவிர் இங்கே யாவும் பார்த்திருப்பீர் என்று நம்புகின் றேன்; மேலும் ஏதேனும் பார்க்க வேண்டுமானால் சுற்றிப் பார்த்துக் கொள்ளும்; ஈண்டு யாரும் யாதொரு அல்லலும் எவ் வகையிலும் உமக்குச் செய்ய மாட்டார்; நான் அபயம் தந்துள் ளமையால் பயம் யாதுமின்றி உள்ளம் துணிந்து நீர் ஒல்லையில் வெளியே போகலாம்" என இவ்வாறு இவ் வீர வள்ளல் கூறி விடுத்தான். விடவே தலைமேல் கைகளைக் கூப்பித் தொழுது உயிர் பிழைத்தோம் என்று அயலே அவர் விரைந்து போயினர்.

இராமன் திருவாயிலிருந்து இங்கே வெளி வந்துள்ள வச னங்கள் அவனுடைய நீதி முறைகளையும் நெறி நிலைகளையும் வீர பராக்கிரமங்களையும் தீர தைரியங்களையும் உள்ளக் கொதிப்பு களையும் உபகார நீர்மைகளையும் உறுதி நலன்களையும் அரிய பல பண்பாடுகளையும் உலகம் அறிய உணர்த்தி யுள்ளன.

கரவாய் ஒற்றியறிய வந்த அவ் ஒற்றர் இவ் வெற்றி வீரனு டைய உரைகளைக் கேட்டதும் வியப்பும் விம்மிதமும் அடைந்து அரக்கர் குலம் அடியோடு அழிந்தது என்று முடிவு கொண்டு கடிது அகன்று நெடிய பல சிந்தனைகளோடு நேரே சென்றார்.

இக் கோமகனுடைய உருவ எழிலும் உரையாடுந்திறனும் வீர கம்பீரமும் அவருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டு நின்றன. பேசிய பேச்சுகளை யெல்லாம் எண்ணி எண்ணி வழி முழுதும் யோசனை செய்து கொண்டே அவர் அலமரலோடு போனது இம் மான வீரனுடைய மகிமைகளை விளக்கி நின்றது.

அண்டங்கள் காப்பினும் அறம் இலாதான்
கண்டங்கள் பலவும் காண்ப.

இந்த வார்த்தை உக்கிர வீரமாய் ஊக்கி வந்துள்ளது.

உலகம் முழுவதும் ஒருங்கே திரண்டு துணையாய் நின்று பாதுகாத்தாலும் இராவணன் தலைகள் யாவும் தரையில் உருளுவது உறுதி என இவ் வீரன் உருத்து உரைத்திருப்பது பெரிதும் வியப்பை விளைத்துள்ளது. நெஞ்சக் கொதிப்பு நெருப்பைக் கக்கி யிருக்கிறது.

அறம் இலாதான் என இராவணனை இங்கே குறித்தது அவனது பாவத் தீமையை நினைந்து. தேவ கோடிகளுக்குச் சீவ கோடிகளுக்கும் துன்பங்களை விளைத்து வந்தவன் இறுதியில் தூய பதிவிரதைக்கும் கொடிய துயரத்தை இழைத்தான் ஆதலால் பாவி என வையம் வைய நேர்ந்தான்.

அறம் அழிந்து போனமையால் அவனுடைய அழிவு விரைந்து வந்தது. குல நாசத்தின் நிலை தெரிய வுரைத்தான்.

வருக்கமும் மற்றும் முற்றும் வீட்டி
உயிர்கொண்டு பலி ஊட்டுவேன்.

இராவணனுடைய மரபை அடியோடு அழித்து அவன் உயிரைக் கவர்ந்து வீரப்பலி ஊட்டுவேன் என இவ்வாறு வீறிட்டிருக்கிறான். தான் செய்யவுரிய கடமையை வையம் அறிய விளக்கினான்.

என் தந்தையாகிய சடாயுவை வஞ்சமாய்க் கொன்ற அவனை நேரே வீரப் போரில் கொன்று அவன் குலத்தையும் தொலைத்த போதுதான் உண்மையாக நான் பிதிர்க் கடன் செய்தவனவேன் என்று உரைத்திருத்தலால் பழி தீர்ப்பதில் இவ் வீரன் விழியூன்றி யுள்ளமை ஈண்டு வெளியாய் நின்றது.

தனது மனைவியைக் காக்கும் பொருட்டு மூண்டு வந்து இராவணனோடு போராடி மாண்டு போன சடாயுவின் மரணம்

இந்த ஆண்டகையின் உள்ளத்தை உருக்கி வருவதை உரைகள் தோறும் உணர்ந்து வருகிறோம்.

அந்தப் பறவையைக் குறித்துப் பேசும் போதெல்லாம் எந்தை, என் தாதை என உரிமையோடு உரைத்து வருகிறான். நன்றியறிவும் உறவின் பாசமும் அன்புரிமையும் இவ் வென்றி வீரன்பால் என்றும் இறைமை கொண்டுள்ளன.

தாழ்விலாத் தவத்தோர் தையல்.

சீதையை இங்ஙனம் குறித்தது அவளது கற்பின் மகிமையைக் கருதி. தூய நெறியில் எவ்வழியும் தளராமல் உயர்ந்து நிற்கும் நீர்மை உணர வந்தது. தவஞான சீலனை சனகனுடைய அருமை மகள் ஆதலால் அந்தப் பிறப்பின் சிறப்பும் தெரிய நின்றது. பலவகை நலங்களும் பொருந்தியுள்ள பேரழகி என்பதைத் தையல் என்னும் சொல் விளக்கியுள்ளது.

இத்தகைய உத்தமியை எடுத்துக் கொண்டு போய்ச் சிறையில் வைத்துள்ளவன் கொடிய நரக துன்பத்தை அடைவான் என இவ் வீரன் முடிவு செய்திருக்கிறான். உள்ளக் கொதிப்புகள் எல்லை மீறி எழுந்துள்ளமையால் வாய்மொழிகள் தீ ஒளிகளை வீசி வெளி வந்துள்ளன.

எரி நரகம் என்னும் சிறையில் வைப்பேன்.

தன் மனைவியைச் சிறையில் வைத்த இராவணனைச் சித்திரவதை செய்து உடலை நாய் நரிகளுக்கு இரையாக்கி உயிரைக் கொண்டு போய் மீளா நரகத்தில் ஆழமாகச் சிறை வைப்பேன் என இராமன் இவ்வாறு ஆங்காரத்தோடு பேசியிருக்கிறான்.

தனக்குத் துயர் இழைத்துத் தன் குடிக்குப் பழி விளைத்தவனை அடியோடு அழித்து அடு நரகத்தில் ஆழ்த்துவேன் என்று ஆர்த்திருப்பது அடலாண்மைகளை வார்த்துக் காட்டி நிற்கிறது.

களவு நிலையில் உளவு தெரிய வந்த ஒற்றர்களிடம் இன்னவாறு பலவும் தெளிவாகக் கூறி இலங்கை வேந்தனிடம் போய் யாவும் ஒளியாமல் சொல்லும்படி அளிசெய்து விடுத்திருத்தலால் இராமனது அதிசய பராக்கிரமமும் விதி முறையும் வீர கம்பீரமும் யாரும் அறியப் பேரொளி செய்து நிற்கின்றன.

அருந்திறலாண்மைகளும் பெருந்தன்மைகளும் எவ்வழியும் திருந்திய பண்புகளோடு சிறந்து திகழ்கின்றன. வஞ்சமாய் வேவு காண வந்தவரை அஞ்சலீர் என்று அருள் புரிந்து யாதொரு இடறும் நேராதபடி தெருள் செய்து விடுத்துள்ளான். இந்த வீர வள்ளலுடைய வித்தகப் பண்புகள் உய்த்துணருந்தோறும் எத்தகைய வகையிலும் உவகை சுரந்து வருகின்றன.

### இராவணனது ஆலோசனை.

தன்னுடைய நகரின் அயலே பெரும் படைகளோடு இராமன் வந்து தங்கியிருத்தலை அறிந்ததும் இராவணன் பெரிதும் வியந்தான். தேவர் முதல் யாவரும் அணுக அஞ்சுகிற இலங்கை அருகே யாதும் அஞ்சாமல் குரங்குகள் வந்து கூடியிருப்பது தனக்கு ஓர் பெரிய பழியாய் நின்றது என்று அவன் நெஞ்சம் கனன்றான். தன் குலத்திலுள்ள பெரியோர்களோடும் மந்திரிகளோடும் ஆலோசனைகள் செய்ய நேர்ந்தான். அந்த இரவே சபா மண்டபத்திற்கு வந்து அரியணையில் அமர்ந்தான். மந்திரச் சுற்றங்கள் ஒருங்கே வந்து மருங்கு அமர்ந்தன. மற்றவர் எவரும் அயல் அணுகாதபடி காவலாளிகள் மிக்க எச்சரிக்கையோடு பக்கம் எங்கும் தக்க நிலையில் பாதுகாத்து நின்றனர்.

அதி ரகசியமாக ஆலோசனைகள் நடந்தன.

“என்றும் நமக்கு நிலையான வலிய அரணாய் அமர்ந்துள்ள கடலைக் கடந்து வானர சேனைகளோடு நம் பகைவன் ஈண்டு வந்திருக்கிறான். ஊரின் அயலே பாசறை அமைத்துப் போர் புரிய மூண்டுள்ளான். மனைவியை இழந்ததால் மதி மருண்டு போய்க் குரங்குகளைக் கூட்டிக் கொண்டு அவன் இங்கே வந்திருப்பது எனக்குச் சிரிப்பை விளைக்கின்றது ஆயினும் நாம் குறிப்பாகச் செய்ய வேண்டியது என்ன? என்பதை ஆராய்ந்தறியவே இவண் கூடியிருக்கிறோம். உங்கள் கருத்துக்களைத் திருத்தமாக உரைத்தருளுங்கள்” என்று இராவணன் இன்னவாறு முன்னுரையாகப் பேசிச் சபையோர்களுடைய வாய் மொழிகளை எதிர்பார்த்திருந்தான். உரியவர்கள் உரையாட நேர்ந்தனர்.

### மாலியவான் கூறியது.

இவன் மதி நலமுடைய முதியவன். இராவணனுக்குப்

பாட்டன் முறையினன். உலக நிலைகள் பலவும் தெரிந்தவன். நீதி முறைகளில் பிரியமுடையவன். அங்குக் கூடியிருந்தவர் எவரினும் வயதில் முதிர்ந்தவன் ஆதலால் இவனே முதலில் பேச நேர்ந்தான். அரச மரியாதைகளோடு யாவும் பேசினன். "மன்னர் பெரும! மூண்டுள்ள விளைவுகள் என் உள்ளத்தை வருத்துகின்றன. இராமன் அதிசய வீரன். அருந்திறலினன்; பெருந்தகவினன். தரும குண சீலன். கடல் அரசனுன வருணனே அஞ்சி ஓடி வந்து அடிதொழுது அரிய மணிமாலையை உரிமையா முன் வைத்து வணங்கி நின்றுன் என்றால் அவனது நிலைமையும் நீர்மையும் எவ்வளவு உயர்வுடையன! யாவும் உணர்ந்து சிந்திக்கத் தக்கன. அவனுக்குத் துணையாய் அமைந்துள்ள வானரர்கள் அளவிடலரிய வலிகளை யுடையவர். மலைகளைக் கொண்டு வந்து கடலைத் தூர்த்து அணைகோலி ஈண்டு அடைந்துள்ளமையால் அவரது இணையில்லாத ஆற்றலும் ஏற்றமும் அறியலாகும். அனுபவ நிலைகள் இனிது உணர்த்தியுள்ளன.

முன்னம் ஒரு குரங்கு வந்து அரக்கர் பலரை அழித்து ஊரைச் சுட்டு நம் சீரையும் சிறப்பையும் பாழாக்கி நம்மைப் பழிக்கு ஆளாக்கி வெற்றித் திறலோடு மீண்டு போயது; இப்பொழுது கோடிக்கணக்கான குரங்குகள் மூண்டு வந்துள்ளன. முடிவு என்னுமோ? என்று என் நெஞ்சம் நெடிது கவல்கின்றது. உறுதியை நாடி உய்தியை விரைந்து செய்து கொள்வது நல்லது; மேலும் ஆலோசனைகள் புரிந்து விரிவது மிகை.

"சுட்டவா கண்டும் தொன்னகர் வேலையைத்
தட்டவா கண்டும் தாவற்ற தெவ்வரைக்
கட்டவா கண்டும் கண்ணெதிரே வந்து
விட்டவா கண்டும் மேல் எண்ண வேண்டுமோ?"

இன்னவாறு நிலைமைகளை நேரே எடுத்துக் காட்டிப் பகையோடு எதிர்க்காமல் சமாதானமாய் அமைந்து வாழ்வது நலம் என இதமொழி கூறி மதி தெளிய உணர்த்தினன். அங்ஙனம் கூறிய இம் முதியவனை அர் மதிகேடன் இகழ்ந்து விலக்கினன்.

என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்
தின்று வாயை விழிவழித் தீயுக

நன்று நன்றுநம் மந்திரம் நன்றெனு
என்றும் வாழ்தி இளவலோடு ஏகென்ருன்.

தனக்கு இதமாக நல்ல புத்தி சொல்லிய பாட்டனை நோக்கி இராவணன் இப்படிச் சீறிச் சினந்து இகழ்ந்திருக்கிருன். "குலத்துரோகம் செய்து போன அந்த வீடணனேடு நீயும் போய்ச் சேர்ந்து கொள்" என்று அத் தீயவன் சினந்து கூறவே முதியவன் யாதும் பேசாமல் வாயை மூடி அடங்கி யிருந்தான்.

சேனைத் தலைவன் செப்பியது.

"நமக்குப் பகையாய் நேர்ந்துள்ள சிறிய மனிதனைப் பெரிய வீரன் என்று நமது பெரியவர் பேசியது எனக்குப் பெரிய அதிசயமாயது. அகில வுலகங்களையும் வென்று ஈசனுடைய கைலாச மலையை ஊசி வேரோடு எளிதே எடுத்த இலங்கேசனது பெருமையைச் சரியாக அறியாமையால் முதியவர் வறிதாகப் பேச நேர்ந்தார். எமது மன்னர்பிரானேடு மாறுபட்டவர் நீறுபட்டவரேயாவர். கடலைக் கடந்து மனிதனும் குரங்குகளும் துணிந்து வந்திருப்பது விரைந்து மாண்டுபடவேயாம். விதி பிடர்பிடித்துத் தள்ள மதி கெட்டுப் போய் இந்தப் பதியினை அவர் அடைந்திருக்கின்றனர்" என இன்னவாறு சேனுதிபதி பேசிக்கொண்டு நிற்கும் பொழுது காவல் தலைவன் வந்து வாயில் அயலே கை குவித்து நின்ருன். இராவணன் அவனை விழைந்து நோக்கினுன். "ஒற்றர் வந்துள்ளனர்" என்று அவன் உற்றதை உரைத்தான். அக் காவலன் உரையைக் கேட்டதும் அனைவரையும் அயல் ஒதுக்கி ஆவலோடு ஒற்றரை உள்ளே வரும்படி பணித்தான். அவர் மரியாதையுடன் வந்து வணங்கி நின்ருர்.

ஒற்றர் உரைத்தது.

பாசறையுள் போய் அறிந்து வந்த மருமங்களை ஆசையோடு அரசன் வினவினுன். அஞ்சி அலமந்து வந்த அவர் நெஞ்சம் துணிந்து நேரே சொல்ல நேர்ந்தார். உளவு கண்டு வருவதில் அதி நிபுணரான அவர் அன்று மதி மருண்டு மறுகி மொழிந்தார்.

அடியம் அந்நெடும் சேனையை ஆசையால
முடிய நோக்கலுற்றேம் முது வேலையின்
படியை நோக்கிளப் பாலும் படர்குறும்
கடிய வேகக் கலுழனிற் கண்டிலம். (1)

எல்லை நோக்கவும் எய்தில தாமெனும்
சொல்லை நோக்கிய மானுடன் தோள்எனும்
கல்லை நோக்கிக் கணைகளை நோக்கித்தன்
வில்லை நோக்கவும் வெந்தது வேலையே. (2)

தாரு லாமணி மார்பநின் தம்பியே
தேருலாவு கதிரும் திரிந்து தன்
பேரு லாவும் அளவினும் பெற்றனன்
நீரு லாவும் இலங்கை நெடுந்திரு. (3)

மருந்து தேவர் அருந்திய மாலைவாய்
இருந்த தானவர் தம்மை இயைந்துமுன்
பெருந்திண் மாயற்கு உணர்த்திய பெற்றியின்
தெரிந்து காட்டிடன் உம்பி சினத்தினன். (4)

பற்றி வானர வீரர் பணைக்கையால்
எற்றி எங்களை ஏணெடுந் தோளிறச்
சுற்றி யீர்த்து அலைத்துச் சுடர்போல் ஒளிர்
வெற்றி வீரற்குக் காட்டி விளம்பினன். (5)

சரங்கள் இங்கு இவற்றால் பண்டு தானுடை
வரங்கள் சிந்துவன் என்றனன் மற்றெமைக்
குரங்க லாமை தெரிந்துமக் கொற்றவன்
இரங்க உய்ந்தனம் ஈதெங்கள் ஒற்றுஎன்றார். (6)

ஒற்றர்கள் இராவணன் எதிரே நின்று பேசியுள்ள வாய் மொழிகளை இங்கே நாம் கூர்ந்து பார்க்கிறோம். தம் வாழ்நாளில் எங்கும் படாத பாடுகளைப் பாசறையுள் பட்டு வந்திருத்தலால் பழைய திமிரெல்லாம் போய் விளைவினை வெருவி யுரைத்தார்.

நினைக்குந் தோறும் அலமரும் நெஞ்சினர்
கனைக்குந் தோறும் உதிரங்கள் கக்குவார்.

வானர சேனைகளை எண்ணுந்தோறும் அவர் உள்ளங் கலங்கியுள்ளமை இதனால் உணர வந்தது. குரங்குகள் குத்திய குத்துகளால் இலங்கை வரும் வரையும் இரத்தங்களைக் கக்கி யுள்ளனர். நெஞ்சம் நெடுந்திகில் கொண்டு நடுங்கியுள்ளது.

படைநிலையைக் கரவுடன் கண்டு வரச் சென்றவர் படு துயரங்களைக் கண்டு வந்திருப்பினும் உற்றதையெல்லாம் கொற்றவன் உணர்ந்து கொள்ளும்படி முற்றவும் துணிந்து சொன்னார்.

"ராஜேசுவரா! பாசறையை அடைந்தோம்; அளவிடலரிய நிலையில் படைகள் வந்துள்ளன; நெடிய அலைகடலைக் கருடன் பறந்து கண்டதுபோல் நாங்கள் இருவரும் அந்தச் சேனைக் கடலைக் கடிது விரைந்து பார்த்தோம்; யாண்டும் முடிவு காண வில்லை; கரந்து நாடிவருங்கால் தேவரீரது அருமைத் தம்பியார் எம்மைக் கண்டு பிடித்துக் குரங்குகளிடம் கொடுத்தார். அந்தப் பொல்லாத வானரங்கள் எம்மைக் கொல்லாமல் கொன்றனர். அல்லல்பல செய்து முடிவில் அவரது தலைவன்பால் ஈர்த்துச் சென்றனர். பண்டு மறைந்து அமுது உண்ட அசுரனைத் திருமாலிடம் காட்டியது போல் உங்கள் தம்பி எங்களை இராமனிடம் காட்டி "இவர் அரக்கர்" என்று வெளிப்படுத்தினார். பேரழகனை அவர் இரக்கம் மிகவுடையராய் எங்களை இனிது நோக்கி ஆதரவு கூறி உறுதிமொழிகள் பல உரைத்தருளினார். கரந்து சென்று நாங்கள் அறிய முடியாதன எல்லாம் அவர் வாய் மொழியால் தெரிய வந்தன: "இலங்கை ஆட்சியை இளையவனுக்கு வழங்கியிருக்கிறேன்; மூத்தவன் உடனே விலகிவிட வேண்டும்; இல்லையானால் இதோ உள்ள பாணங்களால் அரக்கர் குலம் முழுவதும் பாழாம்" என இன்னவாறு அவர் கூறிய மொழிகள் வீரிய ஒளிகளாய் விளங்கி நின்றன. அவற்றையெல்லாம் ஈண்டு நேரே கூற எங்கள் நெஞ்சங்கள் அஞ்சுகின்றன. அவரது பெருங் கருணையே நாங்கள் இங்கே உயிரோடு திரும்பிவரும்படி செய்தது. இதுதான் நாங்கள் ஒற்றராய்ப் போய் உணர்ந்து வந்த உண்மை" என்று அவர் உரைத்து நின்றார்.

பகைப்படையின் உளவுகண்டு வரும்படி தான் அனுப்பி வைத்த உளவர் இருவரும் இவ்வாறு விளைவினை விரித்துக் கூறவே இராவணன் கடுத்துச் சிரித்தான். மூண்டு வந்துள்ள அபாயங்களை நீண்டு சிந்தித்து வேண்டிய உபாயங்களை விரைந்து ஆராய்ந்தான். மீண்டும் மந்திரிகள் கூடினர். ஆலோசனைகள் நடந்தன. நிலைமைகளை நினைந்து பலரும் பேசினர்.

## தளபதியின் அளவுரை.

பிரகத்தன் என்னும் தலைமைச் சேனாதிபதி நிலைமைகளை யெல்லாம் நெடிது துலக்கி நேரே பேசினான். நேர்ந்துள்ள நிலைகளையும் ஓர்ந்து செய்ய வேண்டிய வேலைகளையும் குறித்து விளக்கித் தன் உள்ளக் கருத்தை அவன் உரைத்து முடித்தான். அரசனுக்கு உவகை யூட்டும் வகையில் உறுதி நலங்களைக் காட்டி அவனுடைய வார்த்தைகள் ஆர்த்து வந்தன.

விட்டனம் மாதை என்ற போதினும் வெருவி வேந்தன்
பட்டதென் றிகழ்வர் விண்ணோர் பற்றியிப் பகையைத்தீர
ஒட்டலாம் போரின் ஒன்னார் ஒட்டினும் உம்பி ஒட்டான்;
கிட்டிய போது செய்வது என்னினிக் கிளத்தல் வேண்டும். (1)

ஆண்டுச்சென்று அரிகளோடு மனிதரை அமரில் கொன்று
மீண்டுநம் இருக்கை சேர்தும் என்பது மேற்கொண்டேமே
ஈண்டுவந் திறுத்தார் என்னும் ஈதலாது உறுதி யுண்டோ?
வேண்டியது எய்தப் பெற்றால் வெற்றியின் விழுமிதன்றோ? (2)

ஆயிரம் வெள்ளம் ஆன அரக்கர்தம் தானை ஐய!
தேயினும் ஊழி நூறு வேண்டுமால் சிறுமை என்னோ?
நாயினம் சீயம் கண்ட தாமென நடப்ப தல்லால்
நீயுருத்து எழுந்த போது குரங்கெதிர் நிற்பதுண்டோ? (3)

வந்தவர் தானை யோடு மறிந்துமாக் கடலில் வீழ்ந்து
சிந்தினர் இரிந்து போகச் சேனையும் யானும் சென்று
வெந்தொழில் புரியு மாறு காணுதி விடை ஈகென்ன
இந்திரன் முதுகு கண்ட இராவணற்கு ஏயச் சொன்னான். (4)

சேனாதிபதி இவ்வாறு பேசியிருக்கிறான். காரிய நிலைகளைக் கருதி ஆராய்ந்து தன் கருத்தை உரைத்திருத்தலால் அவனது உரமும் உறுதியும் உள்ளப் பான்மைகளும் உணர வந்தன.

“கவர்ந்து கைக் கொண்ட சீதையை எதிரியிடம் விடலாகாது; விட்டால் தேவர்கள் சிரிப்பார்கள்; பகைவன் பெரும் படைகளோடு வந்தமையால் இலங்காதிபதி பயந்து விட்டான் என இகழ்ந்து கூறுவர்; அந்த இகழ்ச்சிக்கு இடந்தரலாகாது. நேரிய முறையில் சமாதானம் செய்து கொள்ளலாமா? எனின், அதுவும் கூடாது. எதிரி இசைந்தாலும் அங்கே போய் அபயம் புகுந்துள்ள தங்கள் தம்பியார் இசைய விடார்; நாமே முந்தி

மேலேறிச் சென்று பொருது தொலைக்க வேண்டிய பகைவர் கண்டு வலிய வந்துள்ளனர்; இவ் வரவு நமக்குப் பெரிய வெற்றியாம். ஆயிரம் வெள்ளம் சேனைகள் நம்மிடம் உள்ளன. யாரும் வெல்ல முடியாதன; ஊழி நூறு கழிந்தாலும் ஊறுபடாதன; அகில உலகங்களையும் வென்ற அதிசய வீரனை தங்களை நேரே கண்டால் சிங்க ஏற்றைக் கண்ட நாய்கள் போல் வானர சேனைகள் அஞ்சி அலமந்து அயலே ஓடிப் போம்; இந்தப் புல்லிய பகையை வெல்லுதற்கு நீங்கள் வேண்டியதேயில்லை; அடியேனுக்கு உத்தரவு தந்தருளுங்கள்; வந்த படைகள் எல்லாம் சிந்தி ஓடிக் கடலில் வீழ்ந்து அழியும்படி அடல் புரிந்து விரைந்து நான் வென்று வருகிறேன்'' என்று இந்தவாறு சேனைத்தலைவன் ஆரவாரமாய் வீரவாதம் கூறியிருக்கிறான். அவனுடைய உள்ளச் செருக்கும் ஊக்கமும் உரைகள்தோறும் ஒளி செய்துள்ளன.

மூண்டுள்ள போருக்கு மூல காரணம் சீதையை விடாதிருத்தலே ஆதலால் அந்தக் கோதையை விடுவதால் நேரும் வதத்தை முதலில் எடுத்துக் காட்டினான். மாதை விட்டனம் எனின் விண்ணோர் இகழ்வர் என்றது விடவே கூடாது என்பதை வலியுறுத்தி நின்றது. விண்ணுலகில் வாழுகின்ற தேவர்கள் இராவணனுக்கு நேரே பகைவர் ஆதலால் அவரது இகழ்ச்சி நிலையை மன்னன் எண்ணியுணரும்படி இன்னவாறு சொன்னான். எதிரிகள் இகழ்ந்து சிரிக்க இடங்கொடுப்பது மிகவும் ஈனமாம் என மானவுணர்ச்சியை முன்னுற விரித்தது உணரவுரியது.

ஒன்னார் ஒட்டினும் உம்பி ஒட்டான்.

மன்னர்பிரான் மனம் இரங்கி எவ்வழியும் சமாதானத்துக்கு இசையக் கூடாது என்பதை இவ்வழியில் இசைத்தான். ஒன்னார் = பகைவர். உம்பி என்றது தன் தம்பியின் நிலைமை தெரிய.

இராமன் சமாதானமாய் இசைந்து வந்தாலும் வீடணன் இசைய விடான் எனச் சேனைத் தலைவன் முடிவு செய்திருக்கிறான். இலங்கை ஆட்சியைக் கவர்ந்து கொள்ள அவன் பேராசை கொண்டிருத்தலால் பகையை வளர்த்துப் படுதுயர் செய்யவே வழி நாடி நிற்பன் என்று பழிபாடியுள்ளான். போரை விரைந்து செய்து வெற்றி பெற வேண்டும் என விழைந்து பேசி வந்தவன் படைகளின் வலி நிலைகளை வரைந்து கூறினான்.

ஆயிரம் வெள்ளம் ஆன அரக்கர் தானை
தேயினும் ஊழி நூறு வேண்டும்.

இராவணனுக்கு அமைந்துள்ள சேனைகளின் அளவையும் ஆற்றல்களையும் சேனாதிபதி இவ்வாறு தெளிவுறுத்தியுள்ளான். தலைமையான தளபதி ஆதலால் தளங்களின் வளங்களை உளங் கொள உரைத்தான். உரைகள் உறுதிநிலைகளைவலியுறுத்தியுள்ளன.

வெள்ளம் என்பது ஒரு பெரிய எண்ணல் அளவைக்கு எல்லையாயுள்ளது. பொதுவாக நீர்ப் பெருக்கைக் குறித்துவரும் இச் சொல் நெடிய சேனைப் பெருக்கை உணர்த்தி நின்றது.

## படை வகை.

தேர் யானை குதிரை காலாள் என நால்வகையாகச் சேனைகள் அமைந்திருக்கின்றன. ரத கஜ துரக பதாதிகளைச் சதுரங்க சேனை என்பர் வடமொழியாளர். படைகளின் பகுப்பு முறைகளும் கணக்கு வகைகளும் வியப்பை விளைத்துள்ளன.

பத்தி, சேனாமுகம், குல்மம், கணம், வாகினி, பிருதனை, சமூ, அனீகினி, அக்குரோணி, ஏகம், கோடி, சங்கம், விந்தம், குமுதம், பதுமம், நாடு, சமுத்திரம், வெள்ளம் என்னும் இந்தப் பதினெட்டும் படை வகைகளைக் குறித்து வந்திருக்கின்றன.

## பத்தி.

தேர் ஒன்று, யானை ஒன்று, குதிரை மூன்று, காலாள் ஐந்து ஆக இந்த நான்கு வகையும் ஒருங்கு சேர்ந்தது பத்தி எனப்படும். இந்தப் பத்தி மூன்று கொண்டது சேனாமுகம்.

## சேனா முகம்.

தேர் மூன்று, யானை மூன்று, குதிரை ஒன்பது, காலாள் பதினைந்து உடையது சேனாமுகம். இது மூன்று மடங்கு கொண்டது குல்மம். பிறவும் இவ்வாறே முறையே பெருக்கிக் கொள்க.

## குல்மம்.

தேர் 9, யானை 9, குதிரை 27, காலாள் 45.

## கணம்.

தேர் 27, யானை 27, குதிரை 81, காலாள் 135.

வாகினி.

தேர் 81, யானை 81, குதிரை 243, காலாள் 405.

பிரதனை.

தேர் 243, யானை 243, குதிரை 729, காலாள் 1215.

சமூ.

தேர் 729, யானை 729, குதிரை 2187, காலாள் 3645.

அனீகினி.

தேர் 2187, யானை 2187, குதிரை 6561, காலாள் 10935.

இந்த அனீகினி பத்துக் கொண்டது அக்குரோணி.

அக்குரோணி.

தேர் 21870, யானை 21870, குதிரை 65610, காலாள் 109350. ஆக நான்கு வகையும் சேர்ந்தது மொத்தம் இரண்டு லட்சத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு (218700) ஆகும். இந்த அக்குரோணி எட்டு மடங்கு கொண்டது ஏகம்.

ஏகம்.

தேர் 174960, யானை 174960, குதிரை 524880, காலாள் 874800. இந்த ஏகம் எட்டுக் கொண்டது கோடி; கோடி 8 கொண்டது சங்கம்; சங்கம் 8 கொண்டது விந்தம்; விந்தம் 8 கொண்டது குமுதம்; குமுதம் 8 கொண்டது பதுமம்; பதுமம் 8 கொண்டது நாடு; நாடு 8 கொண்டது சமுத்திரம்; சமுத்திரம் 8 கொண்டது வெள்ளம். உள்ள அளவை உறழ்ந்து ஓர்ந்துகொள்க.

இப்படி ஆயிரம் வெள்ளம் சேனைகள் இராவணனிடம் உள்ளன. ஆயிரம் வெள்ளம் தானை ஊழி தேயினும் தேயாது எனத் தமது படை நிலைகளை இங்ஙனம் குறித்து உரைத்திருக்கிறான்.

அளவிடலரிய படைகள் நம்மிடம் இருக்கின்றன; நம்மை யாராலும் வெல்ல முடியாது; எவரையும் வெல்ல வல்லவரா யுள்ள நாம் யாரோடும் சமாதானம் செய்ய வேண்டாம்; யாண்டும் போராடவே மூண்டு நிற்க வேண்டும் என்று தானைத் தலைவன் தருக்கி யுரைத்திருத்தலால் அவனுடைய தறுகண்மையும் உறுதி நிலையும் போர் வெறியும் நேரே தெரிய வந்தன.

காலாட் படையே இவ்வளவு தொகை உள்ளது என்பான் அரக்கர் தானை ஆயிரம் வெள்ளம் என்றான். யானைப் படை, குதிரைப் படை, தேர்ப்படை முதலாக வேறு பல படைகளும் உள்ளன என்று உள்ளம் களித்து ஊக்கிப் பேசி நின்றான்.

இங்கே கூறிய சேனைத் திறங்கள் கூர்ந்து சிந்திக்கவுரியன.

தந்தி ஒன்றே தேர் ஒன்று சாதியாம் புரவி மூன்று
வந்திடும் பதாதி ஐந்து வகுத்திடும் பத்தி என்ப;
உந்தும்அப் பத்தி மூன்றே உறின் சேனாமுகம் என்றாகும்;
முந்துசேனா முகம்தான் மும்மடி குல்ம மாமே. (1)

மருவிய குல்மம் மூன்று மடிதானே கணம தாகும்;
கருதிய கணமே மூன்று காட்டிய வாகினிப்பேர்;
பெருகு வாகினிதான் மூன்று பிருதனை ஆகும் என்ப;
வருபிரு தனைதான் மூன்று வகுத்திடும் சமூவாகும்மே.

பேரியல் சமூவே மூன்று பிரளயம் பிரளயம்தான்
ஓர்மூன்றே சமுத்திரமாகும் உயர்சமுத்திரம் ஓர்மூன்று
தேர்தரு சங்கு சங்குமூன்றதே அனிகம் என்ப
சோர்விலாஅனிகம் மூன்றே சொல்லும்அக்குரோணியாமே.

(நிகண்டு)

மண்டல புருடனார் இப்படிக் குறித்திருக்கிறார்.

படைகளின் நிலைமை தலைமைகளை இன்னவாறு முன்னோர் வரம்பு செய்து வைத்துள்ளனர். போர் முறைகளில் இந் நாடு பீடு பெற்றிருந்த வகைகளையும் பேரரசர்களுடைய ஆட்சி நிலைகளையும் இத் தொகைகளால் ஓரளவு அறிந்து கொள்ளுகிறோம்.

எல்லையில்லாத சேனைகள் தம்பால் உள்ளன என்று உள்ளம் செருக்கியுள்ளமையால் எதிரிகளை எள்ளலாக அவன் இகழ்ந்து பேச நேர்ந்தான். மன்னன் மனம் களிக்க உன்னி உரையாடினான். வாய்மொழிகள் மனத்துடுக்கை வெளிப் படுத்தி நின்றன.

நாய் இனம் சீயம் கண்டதாம்.

சேனைகளின் பெருமித நிலைகளை உரைத்து வந்த சேனைத் தலைவன் இலங்கேசனுடைய வீரப் பிரதாபங்களை இவ்வாறு எடுத்துக் கூறினான். உருவகவுரை உள்ளத் தருக்கை உணர்த்தியுளது.

வீர சக்கரவர்த்தியாகிய நீங்கள் உருத்து எழுந்தால் சிங்கத்தைக் கண்ட நாய்கள்போல் குரங்குகள் உடல் நடுங்கி உள்ளம் கலங்கி ஓடி ஒழியும் என இராவணன் உவந்து மகிழும்படி இங்ஙனம் புகழ்ந்து மொழிந்துள்ளான்.

யாண்டும் நேரில்லா வெற்றி வீரனாய் விளங்கி வந்துள்ளமையால் இங்ஙனம் அவனது கொற்றம் கொழித்துக் கூற நேர்ந்தான்.

சேனை பலத்தையும் மன்னனது உக்கிர வீர நிலைகளையும் இன்னவாறு பேசி வந்தவன் முடிவில் தனது பிரதாபங்களைக் குறித்துக் காட்டினான். "வந்துள்ள வானரப் படைகள் எல்லாம் சிந்தி ஓடிக் கடலில் விழுந்து ஒழியும்படி அழிவு செய்து விடுவேன்; எனது அருந்திறல் ஆற்றலை ஆண்டவன் ஈண்டிருந்தே கண்டு மகிழலாம்; சேனையோடு சென்று விரைந்து போராடி வென்று வருகிறேன்; விடை தந்தருளுங்கள்" என்று சேனைத் தலைவன் தேசத் தலைவனை வணங்கி வேண்டினான்.

இந்திரன் முதுகு கண்ட இராவணன்.

அரக்கர் பதியை ஈண்டு இவ்வாறு கவி காட்டியிருக்கிறார்.

தேவலோகங்கள் யாவும் கவர்ந்து தேவராசனைப் புறங்காட்டி ஓடும்படி வென்று மகா வெற்றி வீரனாய் விளங்கியிருப்பவன் ஆதலால் அவனுடைய உக்கிரவீர நிலைகள் உணர வந்தன.

வானவர்கள் வந்து வணங்கி ஊழியம் புரிய யாண்டும் ஆணை செலுத்தி வணங்கா முடிமன்னனாய் அரியணையில் வீற்றிருப்பவன் வானரர்களோடு போராட ஆலோசனைகள் செய்துள்ளான் என அவனது பழைய தலைமையும் புதிய நிலைமையும் அதிசய விநோதமா ஒருங்கே தெரிய உணர்த்தியருளினார்.

தலைமையான சேனாதிபதி இவ்வாறு பேசி முடிக்கவே மாலியவான் மீண்டும் துணிந்து பேச நேர்ந்தான். அவனுடைய வாய்மொழிகள் அரிய பல உண்மைகளை உணர்த்திப் பரிவு தோய்ந்து வந்தன. அயலே வருகின்றன; கருதிக் காணுக.

மாலியவான் உறுதிமொழிகள்.

பூசற்கு முயன்று நம்பால் பொருதிரைப் புணரி வேலைத்
தேசத்துக்கு இறைவனான தசரதன் சிறுவன் தன்னை

மாசற்ற சோதி வெள்ளத் துச்சியின் வரம்பில் தோன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான் என்பதோர் வார்த்தை யிட்டார். (1)

அன்னவற்கு இளவல் தன்னை அருமறை பரம்என்றுஓதும்
நன்னிலை நின்று தீர்ந்து நவையிலா உயிர்கள் தோறும்
தொன்னிலைபிரிந்தான் என்னப் பலவகை நின்ற தூயோன்
இன்னணை எவரும் கேட்க இயம்புவர் ஏது யாதோ? (2)

அவ்வமர்க்கு அமைந்த வில்லும் குலவரை அவற்றினன்ற
வெவ்வலி வேறு வாங்கி விரிஞ்சனே விதித்த மேனாள்
செவ்வழி நாணும் சேடன் தெரிகணை யாகச் சேர்த்திக்
கவ்வையில் காலநேமிக் கணக்கையும் கடந்தது என்பார். (3)

வாலிமா மகன்வந்தானை வானவர்க்கு இறைவன் என்றார்;
நீலனை உலகம் உண்ணும் நெருப்பினுக்கு அரசன் என்றார்;
காலனை ஒக்கும் தூதன் காலும் கண்ணுதலும் என்றார்;
மேலும் ஒன்று உரைத்தார் அன்னன் விரிஞ்சனும் இனிமேல்
[என்றார். (4)

அப்பதம் அவனுக்கு ஈந்தான் அரக்கர் வேர் அறுப்ப தாக
இப்பதி எய்தினைவ் இராமனென்று எவரும் சொன்னார்;
ஒப்பினல் உரைக்கின் றாரோ உண்மையே உணர்த்தினரோ
செப்பியென் குரங்காய் வந்தோர் தனித்தனித் தேவர்என்றார்(5)

ஆய்து தெரிந்தோ தங்கள் அச்சமோ அறிவோ யார்க்கும்
சேயவள் எளியள் என்னச் சிந்தையின் இகழல் அம்மா
தூயவள் அமிழ்தி னோடும் தோன்றினள் என்றும் தோன்றாத்
தாயவள் உலகுக் கெல்லாம் என்பதும் சாற்றுகின்றார். (6)

கானிடை வந்த தேயும் வானவர் கடாவ வேயால்
மீனுடை அகழி வேலை விலங்கல்மேல் இலங்கை வேந்தன்
தானுடை வரத்தை எண்ணித் தருமத்தின் தலைவர் தாமே
மானுட வடிவம் கொண்டார் என்பதோர் வர்ாத்தை யிட்டார்.

ஆயிரம் உற்பாதங்கள் ஈங்குள அடுத்த என்றார்
தாயினும் உயிர்க்கு நல்லாள் இருந்துழி அறியத்தக்கோன்
ஏயின தூதன் எற்றப் பற்றுவிட்டு இலங்கைத் தெய்வம்
போயின தென்றும் சொன்னார் புகுந்தது போரும் என்றார். (8)

அம்பினுக்கு இலக்கம் ஆவார் அரசொடும் அரக்கர் என்றார்
நம்பரத்து அடங்கும் என்ன நாவினில் பொய்யிலாதான்

உம்பர் மந்திரிக்கு மேலா ஒருமுழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனான் என்பதும் சமையச் சொன்னான். (9)

ஈதெலாம் உணர்ந்தே னுயும் என்குலம் இறுதி யுற்றது
ஆதியின் இவனால் என்றும் உன்றன்மேல் அன்பி னாலும்
வேதனை நெஞ்சுள் எய்த வெம்பியான் விளைவ சொன்னான்
சீதையை விடுதி யாயின் தீருமித் தீமை என்றான். (10)

(இலங்கைகாண் படலம்-7-16)

அரக்கர்குலத்தலைவனாகிய முதியவன் கூறியுள்ள உணர்வுரைகள் இவ்வாறு பெருகி வந்துள்ளன. உயர்ந்த நூலறிவும் உலக அனுபவமும் உடைய சிறந்த மதிமான் ஆதலால் அவனுடைய வாய் மொழிகள் உறுதிநலங்களை உணர்த்தி ஒளிமிகுந்து எழுந்தன. மூண்டுள்ள பகைமையின் தகைமைகளை அதிவிநயமாய் விளக்கி மதிநலங்களை இனிது ஊட்டியிருக்கிறான்.

"அரசே! நம்மோடு போர்புரியப் படைகளுடன் இங்கே வந்துள்ளவன் தசரதன் என்னும் ஒரு மன்னன் மகன்; உருவில் மனிதன்; ஆயினும் உண்மையில் ஓர் அதிசய நிலையினன். பரமபதநாதனே இந்த வடிவில் வந்துள்ளதாக வதந்திகள் உலாவி வருகின்றன. தேவாதி தேவனான திருமாலின் ஒரே அமிசமே இராமன் இலட்சுமணன் என்னும் நாமங்களை மேவி அண்ணன் தம்பிகளாய் ஈண்டு எய்தியுள்ளனர் எனச் செய்திகள் பரவியிருக்கின்றன. அந்த மூத்தவன் கையில் உள்ள வில் அகில உலகங்களையும் ஒருங்கே வெல்ல வல்லது; அற்புத ஆற்றல் உடையது. சிலதினங்களுக்கு முன்னே இங்கே தூதனாய் வந்து ஏதங்கள் பல செய்து போனவன் வேதங்களை யெல்லாம் நன்கு தெளிந்தவன். சிவபெருமான் திருவருளும் வாயுதேவன் அமிசமும் அவனிடம் மருவியுள்ளன; இனிவருகிற பிரமபதம் அவனுக்கு உரியது; அந்தப் பதவியை அவனுக்கு இராமன் அருளியிருக்கிறான்; ஆகவே இந்த இருவரும் எந்த நிலையினர்! என்பதைச் சமுகம் சிந்தனை' செய்யவேண்டும். சேனைத்திரள்களாய்த் திரண்டு வந்துள்ள வானரங்கள் எல்லாம் தேவர்களே என யோக சித்தர்கள் யாவரும் கூறுகின்றனர். இங்கே சிறையில் மறுகியுள்ள பதிவிரதை அமுதத்தோடு தோன்றிய இலட்சுமியே என்று ஆன்றோர் பலரும் மொழிகின்றனர். சக்கரவர்த்தித்

திருமகனுயிருந்த இராமன் தவசியாய் வனவாசம் செய்ய வந்தது வானவர் செய்த மாதவமேயாம்; அவர் செய்ய மூண்டுள்ள கருமங்கள் தருமதேவதையின் மருமங்களாய் மருவியிருக்கின்றன. அவர் தென்திசை நோக்கி எழுந்தபோதே அரக்கர் குலம் அழிவதற்குரிய கெடுகுறிகள் பலகடிது தோன்றியுள்ளன. இராமன் ஏவிய அந்தக் குரங்கு வந்து இங்குப் புகுந்த அன்றே இலங்கைத் தெய்வம் கலங்கி வெளியே போய் விட்டது. நமக்கு நாசகாலம் விளைந்தது என்று வருந்தியே இளைய தம்பி யோசனைகள் பல உரிமையோடு கூறினன். நீங்கள் அவனை வெறுத்து விலக்கியதால் வருத்தமாய் விலகிப் போனன். பெரிய மதிமானன அந்த இளவல் அகன்று அயலே சென்றது இங்கே கொடிய இழவே; அழிவு நிலை விழிதெரிய வந்துள்ளது; இன்னும் உறுதி தெளியாமல் இருப்பது என் உள்ளத்தை வருத்துகிறது; இனி விரித்துப் பேசுவது மிகை; எனது குடியும் குலமும் கொடிய அபாய நிலையிலுள்ளன; முதியவனன நான் முடிவாக ஓர் உபாயம் சொல்லுகின்றேன்; சீதையை உடனே விட்டு விடுக! யாதொருதீமையும் நேராமல் நாம் இனிது வாழலாம்; இதுதான் எனது துணிவான உறுதிமொழி'' என இவ்வாறு மாலியவான் மதிநலம் கோலி அதிக பரிவோடு கூறியருளினன்.

நேர்ந்துள்ள நிலைமைகளையெல்லாம் ஓர்ந்து நெஞ்சம் பரிந்து பேசியிருக்கிறான். உறுதிநலங்களைக் கருதி உணர்வு நலங்கள் சுரந்து உரைகள் வெளிவந்திருக்கின்றன. உலக வதந்திகளை ஆதாரங்களாக எடுத்துக் காட்டி வந்துள்ளவரது உண்மை நிலைகளை உணரும்படி செய்துள்ளான.

ஈசற்கும் ஈசன் வந்தான்.

இராமனைச் சுட்டி இவ்வாறு பேசியிருக்கிறான்.

இலங்கை மீது படைஎடுத்து வந்துள்ளவன் தசரதன் சிறுவன் என உலக நிலையில் தோன்றியிருந்தாலும் பரம்பொருளே இந்த உருவில் அவதரித்துள்ளது என்று தேவரகசியமாத் தெரிய வந்தது என உறுதியை வலியுறுத்தினன்.

அரக்கரால் தமக்கு நேர்ந்துள்ள இடரைத் தீர்த்தருளும் படி அமரர் வேண்டிய வேண்டுகோளுக்கு இசைந்து திருமாலே

மனிதவுருவில் மருவி வந்துள்ளான் என்னும் இராமாவதாரத்தின் உண்மை ஈண்டு நுண்மையாக உணர வந்தது.

தேவதேவனே இராமன்; தேவகணங்களே வானரங்கள்; திருவின் செல்வியே சீதை; இந்த மருமங்கள் எல்லாம் முனிவர் மொழிகளாலும் உலகவசனங்களாலும் அறிய வந்தன. அவ்வரவுக்கு ஏற்ப இங்கே அவகுறிகள் பல சிலகாலமாகத் தொடர்ந்து நடந்து வருகின்றன என நிலைமைகளை நேரே நினைந்து சிந்திக்கும்படி பேரனிடம் பாட்டன் நாட்டமாய் அறிவுறுத்தினன்.

ஆயிரம் உற்பாதங்கள் ஈங்கு உள.

அரக்கர் குலம் அடியோடு நாசம் அடையும படியான கெடுகுறிகள் முதியவனை மாலியவான் கண்ணுக்குத் தோன்றியுள்ளமையை இதனல் ஊன்றி உணர்ந்து கொள்ளுகிறோம்.

பின்னே வருகிற கேடுகளை முன்னே குறிப்பாக உணர்த்துகிற அவகுறிகளுக்கு உற்பாதம் என்று பெயர். நாசவிளைவுகளை நன்கு காட்டுகின்ற நீச அடையாளங்கள் அளவிடலரியன என்பான் ஆயிரம் என்றான்.

“அமரரும் அருகே அணுக அஞ்சும்படி அதிசய நிலையில் மிஞ்சியுள்ள இலங்காபுரியுள் ஒரு குரங்கு எளிதே உள்ளே புகுந்தது; அரக்கர் பலரை அழித்தது; அரசகுமாரனைக் கொன்றது; ஊரில் கொடிய தீயைவைத்தது; பிணப்புகைகள் எங்கும் பெருகி எழுந்தன; சிறந்த மதிமானை விபீடணன் குடும்பத்தை விட்டு அயலே ஒதுங்கிப் போனன்; மண்டோதரிமுதலான அந்தப்புர மங்கையர் யாவரும் எந்த வேளையும் சிந்தை கலங்கி அழுதகண்ணராய்க் கவலையடைந்துள்ளனர்; நடுச்சாமத்தில் வீதிகளில் நாய்கள் ஊளை யிடுகின்றன; நரிகளும் திரிகின்றன; பரிகளும் யானைகளும் யாண்டும் பரிந்து சோர்ந்து கவன்று நிற்கின்றன; அதிதேவதை குடிவாங்கிப் போனது முதலாகக் கொடிய கனவுகள் பல நாளும் நெடிது தோன்றுகின்றன” என இன்னவாறு அம்மன்னவன் எதிரே இம்முதியவன் பன்னிப் பரிந்து பேசியிருக்கிறான்.

அழிவுநிலைகளை விழிதெரிய விளக்கியது அவன்வழி தெரிந்து உய்ய. உள்ளப்பாசமும் உரிமையும் நிறைந்த அருமைத் தம்பி

யைச் சிறுமையாக இகழ்ந்து சீறி வெறுத்து வேறுபட விடுத்ததே மாறுபாடான கொடிய நாசக்குறியாய்க் கூடியுள்ளது என்று வாடி யுரைத்தான்.

உம்பர் மந்திரிக்கு மேலா ஒருமுழம் உயர்ந்தஞானத்
தம்பி; நாவினில் பொய் இலாதான்.

விபீடணனைக் குறித்து இந்தவாறு கூறியிருக்கிறான்.

அந்த மதிமானை இந்த முதியவன் எந்த நிலையில் மதித்து வந்துள்ளான் என்பதை இவ்வுரைகளால் உணர்ந்து கொள்கிறோம். அவனுடைய அறிவுநலங்களைப் பரிவுகூர்ந்துபாராட்டியிருக்கிறான்

உம்பர் = தேவர். மேலான உலகில் வாழுகின்றவர் என்னும் ஏதுவான் வந்தது. தேவராசனை இந்திரனுக்கு மந்திரியாயிருப்பவன் வியாழபகவான். அதிமதியூகி. கலைகள் பலவும் கற்றுத் தலைமையான மேதாவிலாசத்தில் மேன்மைமிகப் பெற்றவன் ஆதலால் பிரகஸ்பதி என்னும் பெரும்புகழோடு அவன் விளக்கியிருக்கிறான். அதிசய மதிமானை இந்திரனுக்கும் அறிவுநலங்களை உரைத்து அரசை இனிது நடத்தும் மதிமாண்புடைமையால் மந்திரமரபுக்கு மகிமையாய் முந்திய வரிசையில் அவன் முதன்மை எய்தி நின்றான்.

அந்த மந்திரியை ஒருமுறை இந்திரன் மதியாமல் இருந்தமையால் அரசபதவியை இழந்து அருந்துயர் உழந்தான்.

பையரா அணிந்த வேணிப் பரமனே அனைய தங்கள்
ஐயனும் வியாழப் புத்தேள் ஆயிடை அடைந்தான் ஆகச்
செய்யதாள் வழிபா டின்றித் தேவர்கோன் இருந்தான் அந்தோ
தையலார் மயலில் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ? (1)

ஒல்லெனக் குரவன் ஏக உம்பர்கோன் திருவின் ஆக்கம்
புல்லெனச் சிறிது குன்றப் புரந்தரன் அறிந்து இக்கேடு
நல்லதொல் குரவற் பேணு நவையினால் விளைந்தது என்னா
அல்லலுற்று அறிவன் தன்னைத் தேடுவான் ஆயினானே (2)

[திருவிளையாடல்]

மதிமந்திரி அகன்று போனமையால் உம்பர்கோன் திருவிழந்து பருவரலுழந்துள்ளமையை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம். உற்ற துணைவன் ஒதுங்கவே ஊறுபாடுகள் புகுந்தன.

இத்தகைய அந்தத் தெய்வ மந்திரிக்கும் மேலான மதிமானை இலங்கை வேந்தன் இப்பொழுது இழந்திருக்கிறான்; ஆகவே விரைந்து அவன் அழிந்து படுவான் என்பது குறித்த ஒப்புமையால் கூர்ந்து நுட்பமாக ஓர்ந்து கொள்ளவந்தது.

உம்பர் மந்திரிக்கு மேலா ஒருமுழம் உயர்ந்த ஞானத் தம்பி.

எனக் கையை நீட்டி அளவுகாட்டி உளவு காண உரைத்திருக்கும் காட்சியைக் கருதிக் காணுந்தோறும் உவந்து வியந்து நிற்கிறோம். அந்த இளைய பேரன்மீது இந்தப் பெரியகிழவனுக்கு எவ்வளவு வாஞ்சையுள்ளது! அவனை எள்ளி இகழ்ந்து வெளியே தள்ளியிருப்பது இவனுடைய உள்ளத்தைப் பெரிதும் வருத்தியிருத்தலை உரைக்குறிப்பால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

தருமகுண சீலனான அந்த நீதிமானுடைய தொடர்பை இழந்தது பெரிய இழவு என்று உளவு தெரியக் கிழவன் இடித்து உரைத்திருக்கிறான்.

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (குறள் 450)

ஒரு நல்லவன் நட்பினை அரசன் இழந்து விடின் அது பல்லாயிரம் பகைவர் திரண்டு செய்யும் தீமையினும் பலமடங்கு கொடுந்தீமையாம் எனத் தேவர் இங்ஙனம் குறித்துள்ளார். விபீடணனைக் கைவிட்டமையால் இராவணன் அடைந்துள்ள அழி துயரங்களும், பழி விளைவுகளும் அளவிடலரியன. அவ்வுண்மையை விழிதெரிய இது விளக்கியுள்ளது.

இறுதியில் உரைத்த உறுதிமொழி.

அறிவுநலஞ் சிறந்த நல்ல நீதிமானை இகழ்ந்து விலக்கி விட்டாய்! பொல்லாத தீமைகள் பல மூண்டு நிற்கின்றன; குடியும் குலமும் அழிந்துபட நேர்ந்துள்ளனவே! என்று இரவும் பகலும் என் உள்ளம் வருந்தி வருகிறது. மாயவனால் பலமுறை நம் குலம் மாய்ந்து போயுள்ளது; அரிய தவங்களைச் செய்து ஈசன் அருளால் மீண்டும் நாம் தலைஎடுத்து உலகை ஆண்டுவருகிறோம்; நம்பால் தீமைகள் நீண்டமையால் அந்த மாயனே ஈண்டு இராமனாய் மூண்டு வந்திருக்கிறான்; அந்தத் தருமவீரனுடைய அருமை மனைவியைக் கவர்ந்து கொண்டுவந்து சிறையில் வைத்திருப்பது

அரக்கர்குலம் அடியோடு அழிவதற்கு வழிகோலிபடியாய் வாய்ந்திருக்கிறது. நிலைமைகளை ஆய்ந்து சிந்தித்து நெஞ்சம் தெளிந்து விரைந்து உய்தியைச் செய்து கொள்ள வேண்டும். மூண்டுள்ள தீமை மூளாமல் அடங்கி நம்குலம் நீண்டு வாழ வேண்டுமாயின் ஈண்டு நான் உறுதியாக ஒன்று சொல்லுகி றேன். முதியவனை எனது வாய்மொழி உனது மதி தெளியச் செய்யும் என்று நம்புகின்றேன்:

*சீதையை விடுதி ஆயின் தீரும் இத்தீமை.*

மாலியவான் இறுதியில் இவ்வாறு அறுதியிட்டு உறுதி கூறியிருக்கிறான். முதிர்ந்த அனுபவம் வாய்ந்த அவனுடைய உரைகள் பரிவுதோய்ந்து பண்பு சுரந்து வந்திருக்கின்றன.

"என்குலம் ஆதியில் இவனால் இறுதி யுற்றது" என்றது திருமாலால் அரக்கர் குலம் முன்னம் அழிந்து பட்டுள்ளதை எடுத்துக் காட்டி இப்பொழுதும் அப்படி நேர்ந்துபடாமல் அறி வோடு தப்பி இனிது பிழைக்கும்படி பேரனுக்கு நேரே புத்தி போதித்தவாறும். போதனை வேதனையில் விரிந்து வந்துள்ளது.

குலமானமும் குடும்ப பாசமும் கிழவனுடைய நெஞ்சில் பலமாகப் பதிந்திருக்கின்றன. அவ்வுண்மைகளை உரைகள் தோறும் நுண்மையாக உணர்ந்து வருகிறோம்.

சீதையை வெளியே விட்டால் ஒழிய அரக்கர் குலம் பிழை யாது என்று தெளிவாக அவன் முடிவு செய்துள்ளமையால் முடிவில் அதனை முடிவாக வலியுறுத்தினான். காரியத்தைக் கடிது புரியும்படி சீரிய முறையில் கூறியிருப்பது அவனது கூரிய சிந் தனைகளைப் பாரறியச் செய்துள்ளது. மூண்டுள்ள அபாயத்தி லிருந்து மீண்டு தப்பிப் பிழைத்தற்கு உரிய உபாயம் சீதையை இராமனிடம் விட்டுவிடுவதே எனச் சிந்தை தெளியவுரைத்தான்.

விடாதிருந்தால் நீ படாதபாடுகள் படுவாய்! இலங்கையும் பாழாம்; அரக்கர் குலமும் அடியோடு நாசமாம்; ஆதலால் நன்றாக யோசனை செய்து விரைந்து திருந்தி உய்தி பெறுக என உறுதியைஉரிமையோடு பரிவுகூர்ந்துபெரியவன்கூறியருளினான்.

## பேரன் பிதற்றியது.

தன் பாட்டன் பரிவுடன் கூறிய அறிவுரைகளை யெல்லாம்

கேட்டுவந்த இராவணன் சீதையைவிடுதி என்று இறுதியில் சொன்னதை அறிந்ததும் எரியில் எண்ணெய் வார்த்தது போல் நெஞ்சில் நெடுஞ்சினம் மூண்டது. கடுஞ்செருக்கோடு தன்னுடைய வீரப்பிரதாபங்களை ஆரவாரமாய் விரித்துப் பேசினன்.

பேதை மானுடவ ரோடு குரங்கல பிறவே யாகப்
பூதல வரைப்பின் நாகர் புரத்தின் அப்புறத்த தாகக்
காதுவெஞ் செருவேட்டு என்னைக் காந்தினர் கலந்தபோது
சீதைதன் திறத்தி னுயின் அமர்த்தொழில் திறம்பு வேனே? (1)

ஒன்றல பகழி என்கைக் குரியன உலகம் எல்லாம்
வென்றன; ஒருவன் செய்த வினையினும் வலிய வெம்போர்
முன்றரு கென்ற தேவர் முதுகுபுக்கு அமரின்முன்னம்
சென்றன இன்றுவந்த குரங்கின்மேல் செல்கலாவோ? (2)

சூலமெய் தடக்கைஅண்ணல் தானும்ஓர் குரங்காய்த்தோன்றின்
ஏலுமேல் இடைவ தல்லால் என்செய்வன் என்னைக் கால
வேலையே கடைந்த மேனாள் உலகெலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க என்கை அயில்முகப் பகழி அம்மா! (3)

அறிகிலை போலும் ஐய அமரெனக்கு அஞ்சிப் போன
எறிசுடர் நேமியான்வந்து எதிர்ப்பினும் என்கை வாளி
பொறிபடச் சுடர்கள் தீயப் போவன போக்கி லாத
மறிகடல் கடையவந்த மணிகொலாம் மார்பில் பூண. (4)

கொற்றவனிமையோர் கோமான்குரக்கின துருக்கொண்டானேல்
அற்றைநாள் அவன்றன் விட்ட அயிற்படை அறுத்துமாற்ற
இற்றவான் சிறைய வாகி இழிந்துபோய் எழுந்து வீங்காப்
பொற்றைமால் வரைகளோ என் புயநெடும் பொருப்பும் அம்மா!

(இலங்கைகாண்படலம்16--22)

தனக்குப் புத்திமதி கூறிய பாட்டனை நோக்கி இராவணன் இப்படி வீறோடு பேசியிருக்கிறான். உள்ளத்தில் உறைந்துள்ள செருக்குகள் உரைகளில் நிறைந்து வெளி வந்திருக்கின்றன. சீதையை விடுதி என்று அம்முதியவன் உணர்த்திய நீதிமொழி இவனுக்கு நெடிய சீற்றத்தை விளைத்தது. பகையாய் வந்துள்ள மனிதன் திருமாலின் அமிசம்; படைவீரர்களாய்த் தொடர்ந்து வந்திருக்கிற குரங்குகள் தேவர்களே ஆதலால் ஆவதை அறிந்து சமாதானமாய் விரைந்து நடந்துகொள்! என்று அவன் குறித்த

மையால் அந்தக் குறிப்புகளுக்குத் தக்க மறுப்புகளை முறையே இவன் உரைத்தான். உரைகள் உள்ளத் தருக்கோடு எழுந்தன.

"பேதைகளான மனிதரும் குரங்குகளும் என்மீது படை எடுத்து வந்துள்ளது எனக்கு நகையினை விளைக்கின்றது. இந்த அற்பப்பிராணிகள் கிடக்கட்டும். தேவர் கந்தருவர் அசுரர் முதலிய யாவரும் திரண்டு விண்ணிலும் மண்ணிலும் வேறு எங் கணும் ஒருங்கே மூண்டு போராட நீண்டு நெருங்கினும் நான் ஒருவனே நேரே எதிர்த்து அவரை நீறு செய்து அழிப்பேன். சீதையின் பொருட்டு நேர்ந்துள்ளதாயின் அப்போரை எவ்வழி யும் பெருமகிமையாகவே நான் பேணிக் கொள்ளுவேன். என் னுடைய சேனைபலங்களை நான் எதிர்பார்க்க வில்லை; எனது சொந்த பலத்தையே யாண்டும் நம்பி யிருக்கிறேன். நான் அகிலவுலகங்களையும் வென்றவன்; என்னை வெல்ல எவராலும் முடியாது; தேவர்களை யெல்லாம் வென்று வீறு கொண்டுள்ள எனது பாணங்கள் இன்று இங்கே வந்துள்ள இந்த அற்பக் குரங்குகளையும் மனிதரையும் கொன்று ஒழியாவோ? சூலபாணி யனை சிவபெருமானே அநுமான் என்னும் பெயரோடு குரங்கு வடிவில் வந்துள்ளதாக உரைத்தாய்! அவ்வாறு வந்திருந்தாலும் என்ன? பண்டு ஆலத்தை உண்டது போல் எனது அம்புகளைத் தடுத்துவிடமுடியுமோ? ஆலகாலத்திலும் கொடிய வீரப்பகழி கள் என்பால் அளவிடலரிய நிலையில் உள்ளன. பலமுறையும் வந்து போரில் படுதோல்வியடைந்து என் எதிரே பதறி ஓடிப் போன மாயனும் இந்திரனும் மறுபடியும் மனிதர் வானரங்க ளாய் மாறிவந்துள்ளனர் என்று கூறி என்னை நீ பயமுறுத்து வது மதிகேடான மடமையே யாம். முதியவன் ஆதலால் உனக்கு மதிமயக்கம் மிகுந்துள்ளது. எனக்கு நீ புத்திசொன் னது போதும்; எழுந்து போகலாம்" என இவ்வாறு இறுமாப் போடு இராவணன் இகழ்ந்து கூறவே மாலியவான் யாதும் பேசாமலே அழிவுகாலம் மூண்டுள்ளது ஆதலால் அறிவுகேடு நீண்டுள்ளது என உள்ளம் வருந்தி ஒதுங்கிப் போனான்.

இந்திரனை வென்று வானுலகத்தைக் கைக்கொண்டு மூவுலகங் களையும் ஆண்டுவருகிற வெற்றிவீரன் என்னும் செருக்கு இலங் கைவேந்தன் உள்ளத்தில் வீறு கொண்டிருத்தலால் யாருடைய

புத்திமதியும் கேளாமல் யாண்டும் வணங்காமுடியனாய் நீண்டு நிற்கிறான். எவ்வழியும் தனது வீரப்பிரதாபங்களையே வியந்து பேசி ஆரவாரங்கள் செய்து வருகின்றான்.

ஒருவன் செய்த வினையினும் வலிய.

தன்னுடைய பாணங்களின் ஆற்றல்களைக் குறித்துக் கூறி வரும் பொழுது இவ்வாறு உரைத்திருக்கிறான். ஒருவன் செய்த தீவினை அவனைவிடாமல் பின்தொடர்ந்து வருவது போல் தன் பகழிகளும் சத்துருக்களைத் தப்பாமல் அழித்து வரும் என்பதை இங்ஙனம் வித்தக விநோதமாத் தெளித்திருக்கிறான்.

எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். (குறள்)

எவ்வளவு பெரிய பகைகளையும் ஒருவன் தப்பிப் பிழைக்கலாம்; தான் செய்த தீவினைப்பயனை எவனும் தப்பமுடியாது; அவன் போன இடமெல்லாம் விடாமல் பின் தொடர்ந்து போய் அவனை வதைத்து வருத்தும் எனத் தேவர் இங்ஙனம் உரைத்திருக்கிறார். உரைக் குறிப்பு ஊன்றி உணர வுரியது.

"ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்." (சிலப்பதிகாரம்)

"ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது."(இறையனார்)

"உயிர்புகும் சட்டக உழிதொறும் உழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல" (கல்லாடம்)

வினைப்பயன் உயிர்புக்குழியெல்லாம் புகுந்து வருத்தும் என இவையும் உணர்த்தியுள்ளன. செய்த வினைப்பயனை அனுபவியாமல் எவரும் எவ்வகையினும் தப்பமுடியாது என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்துள்ளது.

இத்தகைய வினைக்குத் தப்பினாலும் தன்கைக் கணைக்கு எவரும் தப்பிப்பிழைக்க முடியாது என்பான் "என்கைக்கு உரியன வினையினும் வலியன" என்றான். எவ்வுலகங்களையும் எளிதே வெல்லவல்ல திவ்விய ஆயுதங்கள் தன்னிடம் உள்ளன என்று இராவணன் தருக்கியிருத்தலை அவனுடையவாய் மொழிகள் ஈண்டு நீண்டு எவரும் அறிய வெளிப்படுத்தியிருக்கின்றன.

எனது உக்கிர வீர பராக்கிரமங்களை ஒரு சிறிதும் உணராமல் பகைவகையினரை வறிதே புகழ்ந்து கூறினாய்! எனப் பாட்டனை இகழ்ந்து பேசிவிட்டு அவையிலிருந்து அவன் எழுந்து போயினான். சபை கலைந்தது; மந்திரிகள் முதலிய அனைவரும பிரிந்து சென்றனர். முதியவர் சிலர் விளைவினை நினைந்து கவன்றிருந்தனர்.

அன்றைய இரவு அமைதியாய்க் கழிந்தது.

உதயம் ஆயது.

இன்னதோர் தன்மைத் தாமென்று எட்டியும் பார்க்கஅஞ்சிப்
பொன்மதிற் புறத்து நாளும் போகின்றான் போர்மேல்கொண்டு
மன்னவர்க்கு அரசன் வந்தான் வலியமால் என்று தானும்
தொன்னகர் காண்பான் போலக்கதிரவன் தோற்றம் செய்தான்.

அன்று சூரியன் உதித்ததைக் கவி இவ்வாறு வருணித்திருக்கிறார். பருவ கால வரவு உரிய விளைவை உணர்த்தியுள்ளது.

இலங்காபுரியை எட்டிப் பார்க்கவும் அஞ்சி என்றும் அயலே ஒதுங்கிப் பணிவோடு சஞ்சரித்து வந்த சூரியன் அன்று வீரியமாய் நேரே அந்நகரைக் காணவந்தவன் போல் களிப்புடன் ஒளிவீசி எழுந்தான். கதை நிகழ்ச்சியோடு பொருத்திக் காலக் குறிப்பைக் காட்டி வருவது சுவையை ஊட்டிவருகிறது. இராமபிரான் வந்திருக்கிறார்; அரக்கர்பதி அழிந்து படுவான் என்று துணிந்து இலங்கையைப் பார்க்க விழைந்து ஆதவன் வந்தான் என்றது மேலே விளைவதை உணர்ந்து கொள்ள வந்தது.

மன்னவர்க்கு அரசன் என்று இராமனை இங்கே இன்னவாறு குறித்திருக்கிறார். தீயவர்களை அழித்து நீக்கி நல்லவர்களைக் காத்தருளுவது உலகபரிபாலனை அரசர்பெருமானுக்குத் தலை சிறந்த கடமையாம். அந்தக் குலதருமத்தைச் செய்ய மூண்டு இந்தச் சக்கரவர்த்தித்திருமகன் ஈண்டு வந்திருக்கிறான் ஆதலால் அவ்வரவு முறையைப் பெயரின் இயல்பால் நயமாகத் தெரியவுரைத்தார். மன்னர்பிரான் வரவு உன்னியுணர வந்தது.

அதிசயவீரன் வந்துள்ளான் என்னும் மகிழ்ச்சியினால் கதிரவன் உதயமாயினான் என்றதனால் அன்றுமுதல் உலகில் துன்ப இருள்நீங்கி இன்பஒளி ஓங்க நேர்ந்தது என்பது உணர்த்தப் பட்டது. உணர்வு நிலை உவகை நிலையமாய் ஒளி புரிந்துள்ளது.

## இராமன் இலங்கையைப் பார்த்தது.

காலைக்கடன்கள் முடித்ததும் இராமன் சுவேலமலைமீது ஏறி இலங்கையைக் காண விழைந்தான். இலக்குவன் சுக்கிரீவன் வீடணன் அநுமான் முதலிய தலைமைத்துணைவர்கள் அயல்வர இக்குலமகன் மலைமேல் ஏறினன். தான் போராடவந்த ஊரை நேரே கண்டு நிலைமைகளைத் தெரிந்துகொள்ள இவ்வீரன் சாரல்வழியே கிரியில் ஏறிய காட்சி அரிய ஓர் அற்புதமாட்சியாய் நிலவி நின்றது. அந்த மாட்சிகளைக் கவி வரைந்து காட்டியிருக்கிறார். அரிய பல அறிவு நலங்கள் அவற்றுள் பெருகியுள்ளன; அக்காட்சிகள் அயலே வருகின்றன. ஆய்ந்து காணுங்கள்.

அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல் தூண்டப் பொன்னகர் காண்பான்போலப்
பெருந்துணை வீரர் பற்றத் தம்பியும் பின்பு செல்ல
இருந்தமால் மலையின் உச்சி ஏறினன் இராமன் இப்பால். [1]

செருமலி வீரர் எல்லாம் சேர்ந்தனர் மருங்கு செல்ல
இருதிறல் வேந்தர் தாங்கும் இணைநெடுங் கமலக் கையான்
பொருவலி வயவெம் சீயம் யானையும் புலியும் சுற்ற
அருவரை இவர்வ தாங்கோர் அரியர சனையன் ஆனான். [2]

கதமிகுந்து இரைத்துப் பொங்கும் கனைகடல் உலகம் எல்லாம்
புதைவுசெய் இருளிற் பொங்கும் அரக்கர்தம் புரமும் பொற்பும்
சிதைவுசெய் குறியைக் காட்டி வடதிசைச் சிகரி ஒன்றின்
உதயமது ஒழியத் தோன்றும் ஒருகரு ஞாயிறு ஒத்தான். [3]

துமிலத்திண் செருவில் வாளிப்பெருமழைசொரியத் தோன்றும்
விமலத்திண் சிலையன் ஆண்டோர் வெற்பினை மேய வீரன்
அமலத்திண் கரமும் காலும் வதனமும் கண்ணும் ஆன
கமலத்தின் காடு பூத்த காளமா மேகம் ஒத்தான். [4]

மற்குவ டனைய திண்டோள் மானவன் மானம் இல்லாக்
கற்குவடு அடுக்கி வாரிக் கடலினைக் கடந்த காட்சி
நற்குவ டனைய வீரர் ஈட்டத்தின் நடுவண் நின்றான்
பொற்குவடு இடையே தோன்றும் மரகதக்குன் றம் போன்றான்.

அணைநெடுங் கடலில் தோன்ற ஆற்றிய சிற்றத்து ஐயன்
பிணைநெடுங் கண்ணி என்னும் இன்னுயிர் பிரிந்த பின்னைத்

துணைபிரிந் தயரும் அன்றிற் சேவலின் துளங்கு கின்றான்
இணைநெடுங் கமலக் கண்ணால் இலங்கையை எய்தக் கண்டான்.

நந்திரு நகரே ஆதி வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபே ருவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர் இலங்கையை எடுத்துக் காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார் அருங்கவிப் புலவர் அம்மா! (7)

(இலங்கைகாண்படலம் 25--31)

இராமபிரான் சுவேலமலைமேல் ஏறி ஒரு சம வெளியில் நின்றுகொண்டு இலங்கையை நோக்கி வியந்து மொழிந்த நிலைகளை இங்கே உவந்து காணுகிறோம். துணைவர்கள் புடைசூழ அவ்வீரமூர்த்தி சாரல்வழியே ஏறிச் சென்றபோது இராசகம்பீரங்கள் எவ்வழியும் திவ்விய நீர்மைகளோடு எழில் ஒளிவீசி விழிகளிக்கச் செய்துள்ளன.

பெருந்துணை வீரர் பற்றத் தம்பியும் பின்பு செல்ல.

இந்த நம்பி அந்தமலைமேல் ஏறிப் போனபொழுது உடன் தொடர்ந்து நடந்து சென்றவரை இது வரைந்து காட்டியுள்ளது. எதிரியின் ஊரைக் காண்பதில் எல்லார் உள்ளங்களிலும் ஆவல் ஏறியிருந்ததால் அவர் மேவி ஏறியிருக்கிறார். தம்பி பின்பு செல்ல என்னும் இந்த வாசகத்தில் அன்பு ததும்பி இன்பம் விளைந்துள்ளது. மற்ற வானரவீரர்கள் பக்கம் மருவிப் படர்ந்து நடந்தனர்; உற்ற தம்பி உழுவலன்புடன் அருகே கெழுமி நடந்துள்ளான். துணைவர்களோடு இக்கோமகன் அக் குன்றின்மீது இவர்ந்து சென்றது ஒரு சிங்கஏறு உரிய துணைகளுடன் உவந்து சென்றது போல் வியந்து காண நின்றது.

அரி அரசு அனையன் ஆனான்
ஒரு கரு ஞாயிறு ஒத்தான்
காளமா மேகம் ஒத்தான்.
மரகதக் குன்றம் போன்றான்.

குன்றில் இவர்ந்து சென்ற இராமனைக் கவி இங்ஙனம் குறித்துக் காட்டியிருக்கிறார். உரைகளில் ஒளிர்கின்ற எழில்களையும் சுவைகளையும் உள்ளக் கண்களால் உவந்து நோக்கி நுகர்ந்து நிற்கிறோம். உணர்வுக் காட்சிகள் உவகை சுரந்து திகழ்கின்றன.

எந்த மிருகங்களையும் எளிதே வெல்லவல்ல அதிசய ஆற்றலும் அமைதியும் உடையது ஆதலால் அந்த நீர்மையில் தலைசிறந்துள்ள இராமனுக்குச் சிங்கஏறு இங்கே உவமையாய் வந்தது.

இராவணன் என்னும் மதயானையைக் கொன்று தொலைத்து வெற்றிபெற வீரகம்பீரமாய் வந்திருக்கிறான் ஆதலால் அந்த விறலும் வெற்றியும் விளங்கி நின்றது.

மிருகங்களுக்குச் சிங்கம் அரசு. அந்தச் சிங்கங்களுக்கெல்லாம் அரசாயிருப்பது அரிஅரசு என வந்தது. உலகமக்களுக்குத் தலைமையான அதிபதி அரசன் என நேர்ந்தான். அரசர்யாவரும் தலைவணங்க நிலை உயர்ந்துள்ளவன் அரசர்பெருமான் எனவரிசை பெற்று நின்றான். அத்தகைய உத்தம நிலையில் எத்திசையும் புகழ உயர்ந்துள்ள சக்கரவர்த்தித் திருமகன் ஆதலால் இக்கொற்றக் குரிசிலை இங்ஙனம் குறித்துணர்த்தினார்.

அடலாண்மையும் நடையின் பெருமிதமும் வீரகம்பீரமும் நேரே தெரிய அரியரசு என்றார். குன்றில் இவரும் கோளரி போல் இவ்வென்றி வீரன் அன்று சென்றது என்றும் காண இனிது வந்தது.

யானையும் புலியும் சுற்ற என்றது கூடவந்த வானரவீரர்களின் பீடும் பெருமையும் தெரிய. சுக்கிரீவன் வலதுபக்கமும் வீடணன் இடதுபுறமும் தொடர்ந்து நடந்து போயுள்ளனர்.

இருதிறல் வேந்தர் தாங்கும் கமலக்கையான் என்றது அவர் கைலாகு கொடுத்து இக்கோமகனை இராசமரியாதையோடு மேலே அழைத்துச் சென்ற காட்சியை விளக்கி நின்றது. சாரல்களில் ஆர்வம்மீதூர்ந்து ஏறிச் சிகரத்தை அடைந்திருக்கின்றனர்.

அரக்கர் அடியோடு விரைந்து அழிந்து படுவார் என்று உலகம் தெரிந்து கொள்ளும்படி ஓர் அதிசய உற்பாதம் இருளை நீக்கிக் கரிய சூரியன் போல் தோன்றியது என இராமனது உருவக்காட்சி அன்று அம்மலையில் மருவி நின்றது என்பார் ஒரு கருஞாயிறு என்றார். வழக்கமாகக் கிழக்கே உதயமாகின்ற செஞ்ஞாயிறு உலகில் ஒரு பெரிய அழிவு நேர்ந்துள்ளமையை உணர்த்தக் கரிய சோதிவீசி வடக்கே உதயமாயது என இந்நீலமேனியனது கோலம் அங்கே குலாவி நின்றது என்க. மலை

மேல் ஏறியது அதிகாலையில் ஆதலால் அந்நேரமும் நிலையும் உதயம் என்றதனுல் உணரவந்தன.

"கருநாயிறு போல்பவர் காலொடு போய்
வருநாள் அயலே வருவாய் மனனே." (கடிமணம்,4)

இராமனைக் கருதி உருகித் தனது மனதை நோக்கிச் சீதை இவ்வாறு மறுகி மயங்கி யிருக்கிருள். மரகதமணிபோல் ஒளி வீசியுள்ள அவனது உருவில் உள்ளம் பறிபோயுள்ளமையால் கருநாயிறு எனத் தான் கண்டகாட்சியை அதிசய நிலையில் இங்ஙனம் துதிசெய்யலாஞள். காதல் விளைவு கனிந்து நின்றது.

சானகி அன்று எண்ணி ஏங்கிய அந்தப் புண்ணிய உருவன் அவள் நண்ணியுள்ள இலங்கையை நேரே காண விழைந்து அதிகாலையில் மலைமேல் ஏறிவருகிருன்; அவ்வரவில் அவள் முன்ஞள் உருகி உரைத்த அழகு மொழியே இன்ஞளும் வெளிவரலாயது.

கமலத்திண் காடுபூத்த காளமா மேகம்.

அவயவ அழகும் சமுதாய சோபையும் இவ்வுவமான மொழியால் உலகறிய வந்தன. தாமரைமலர்கள் பல மலர்ந்து ஒரு நீலமேகம் நிலாவியுள்ளது போல் அந்தக் கோலமேனி குலாவி நின்றது. அலர்ந்த தாமரைகளாய்க் கண் கை முதலியன பொலிந்து விளங்கப் பசிய கோலத் திருமேனியன் அம் மலைமேல் இவர்ந்து சென்ற காட்சி உவந்து காணவந்தது.

மரகதக்குன்றம் என்றது பச்சைமலை என முன்னம் மொழிந்ததை உச்ச நிலையில் உணர்த்திநின்றது. இலங்கை அயலே நின்ற சுவேலம் என்னும் குன்றின்மேல் ஏறிய வென்றி வீரனை மரகதக் குன்றம் என்றது உருவநிலையும் உள்ளத்திண்மையும் உயர்குண நீர்மையும் இயல் செயல்களில் மருவியுள்ள அருமை பெருமைகள் யாவும் தெரிய. உருவக அணியில் உரைகள் ஒளி செய்துள்ளன.

காவிய நாயகனைக் குறித்துப் பேசநேர்ந்த போதெல்லாம் ஆசைமீதூர்ந்து அதிசய பரவசராய்க் கவி துதிசெய்து வருகிருர்.

கலைநலம் கனிந்த இவருடைய இன்பவுரைகள் இராமன்பால் பேரன்பு பெருகிப் பேரின்பம் மருவிவர நேரே உருகிவருகின்றன. மொழிகள் புதிய ஒளிகளைவீசி உயிர்களின் உள்ளச்

எந்த அந்தரங்கங்களையும் இனிது தெளிந்து எவ்வழியும் செவ்வியராய் உலகம் நலமுற உரைப்பவர் எனப் புலவர்களை மதித்திருந்தான் ஆதலால் அந்தமதிப்புக்கு மாறுகண்டபோது வியப்புற வந்தது. மேதைகள் வழுவியுள்ளது ஏதம் என எண்ணினன்.

கவிப்புலவர் என்றது காவியம் பாடவல்ல கவிஞர்களை. கவிகள் பாடமுடியாத புலவர்களும் உளர் ஆதலால் அந்தவேறுபாடு தெரிய இந்தவாறு அடையமைத்துக் கூறினர்.

இலங்கையின் மகிமை மாண்புகளை நம் கவிஞர்பிரான் இங்கே புகழ்ந்து கூறியிருக்கும் வித்தகம் உய்த்துணரத் தக்கது.

சிறந்த மேதைகளான தம் இனத்தவர்க்குச் சிறிதுதாழ்ச்சி தோன்றக் கூறியது அந்தநகரின் உயர்ச்சியைப் பெரிதும் போற்றும் ஆவலால் பேசியது. இந்தக் கவிச்சக்கரவர்த்தி இலங்கையைப் புனைந்து புகழ்ந்து காட்டியிருக்கும் காட்சிகள் ஊர்தேடு படலத்தில் அதிசய மாட்சிகளாய்த் துதிகொண்டு திகழுகின்றன. ஈண்டும் இவ்வகையில் இசைத்தருளினர்.

தம் காவிய நாயகன் பிறந்த அயோத்தி நகரினும் சிறந்த மேன்மையுடையது என் இலங்கையை எவ்வழியும் வியந்துபேசியிருக்கிறார். உண்மை நிலைகளை ஒருபாலும் கோடாமல் யாண்டும் செம்மையாக உரைத்து வருவது இவரது உள்ளத்தின் சீர்மை நீர்மைகளை உணர்த்தி உயர் மகிமைகளை விளக்கி வருகிறது.

## இலங்கையின் காட்சி.

தான் போராடமூண்டு படைஎடுத்து வந்த இராமன் எதிரிகளின் நகரை நேரே பார்த்தான்; அந்தப் பார்வையில் இவ்வீரமூர்த்தி அவ்வூரை வியந்து தம்பியிடம் புகழ்ந்து கூறியுள்ள உரைகள் ஓர் அரியபுகழ்மாலைகளாய்ப் பொலிந்து நிற்கின்றன. இலங்கையின் இனிய துதி என்றே அவ்வியப்பு மொழிகளை விளம்பிவிடலாம். பதினெழுபாடல்களில் அவைதொடர்ந்து வந்திருக்கின்றன. பலவகை நலங்கள் துலங்கி நிற்கின்றன.

நகர் அமைந்திருக்கும் நிலை, மாடமாளிகைகளின் மாட்சி, வீதிகள் விரிந்து விளங்கும் காட்சி, செல்வங்களின் செழிப்பு, யானை குதிரை முதலிய சேனைகளின் ஈட்டம், ஆடவர் மகளிருடைய அதிசய ஆடம்பரங்கள், யாண்டும் போகநலங்கள் சுரந்து

எவ்வழியும் எழில் ஒளிகள் வீசி இனிமை கனிந்திருக்கும் இயல்பு, தேவரும் பணிந்து வந்து ஏவல்செய்யும் திறம், தெய்வ மகளிரும் மெய்யுரிமையுடன் அரக்கியர்க்கு ஊழியம்புரியும் பான்மை, முதலிய மேன்மைகள் எல்லாம் வியந்து பேசப்பட்டுள்ளன. பேச்சில் அறிவு நலங்கள் சுரந்து தரும நிலைகள் தவழ்ந்து பெரு மகிமைகள் பெருகி வந்திருக்கின்றன.

வாகைவெஞ் சிலைக்கை வீர! மலர்க்குழல் வடிக்கு மாலைத்
தோகையர் இட்ட தூமத்து அகில்புகை முழுதும் சுற்ற
வேகவெங் களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல்
பாகனிற் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய்!

காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறே! கற்ற
தேவர்தம் தச்சன் நீலக் காசினுல் திருந்தச் செய்தது
ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த
பாவ பண்டாரம் அன்ன செய்குன்றம் பலவும் பாராய்! (2)

தான் இலங்கையைக் கண்டபொழுது தோன்றிய காட்சிகளைத் தம்பி இலக்குவனிடம் இந்நம்பி இங்ஙனம் உவந்து கூறியிருக்கிருன். உரிய துணைவனுக்கு அரியன காட்டியுள்ளான்.

பவளமணிகளால் அமைந்த சிவந்த மாளிகைகளிலிருந்து அழகிய மங்கையர் தம் கூந்தல்களுக்கு அகில்புகை ஊட்டுகின்றனர்; அந்த நறும்புகை மருங்கு முழுதும் படர்ந்து விரிந்தது; அதன் இடையே விளங்குகின்ற மாளிகை கரிய யானைத்தோலைப் போர்த்த சிவபெருமான் போல் இனிது தோன்றியது.

உமாதேவியை ஒருபாகத்தில் வைத்துள்ள பரமபதி என்பான் தையல் பாகன் என்ருன். தன் தேவியைப் பிரிந்துள்ள பரிதாப நிலை இவ் வீரனது வாய்மொழியில் வெளி வந்துள்ளது. பாகம் பிரியாள் எனப் பார்வதியும், பாகம் பிரியான் எனப் பரம சிவனும் உரிமையோடு மருவியிருப்பது உவகை சுரந்து திகழ்கிறது. பிரியநாயகியுடன் பிரியாமல் வாழும் அந்தப் புண்ணியப் பேற்றை எண்ணி மகிழ்ந்துள்ளான். தானும் தன் நாயகியை விரைந்து கூடிமகிழும் காலம் நேர்ந்துள்ளமையால் அம்மூலம் தெரிய வந்தது. வரவு நிலையை உரைகள் உறவுடன் உணர்த்தின.

செய்குன்றம்

நீலமணிகளால் அழகுபெற அமைத்துள்ள செய்குன்று

களை நோக்கிச் சிந்தை மகிழ்ந்தான். கரியகோலத்தோடு பெருகி நிற்கின்ற அவற்றின் உருவத் தோற்றங்கள் உவகையை விளைத்தன ஆயினும் விரைந்து அழிந்து படுதலை நினைந்து மொழிந்தான்.

ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டிவைத்த
பாவ பண்டாரம் அன்ன செய்குன்றம் பலவும்பாராய்!

உல்லாசமான பொழுது போக்குகளுக்காக இலங்கையில் இயற்றியிருந்த கரிய செயற்கைக் குன்றுகள் அரக்கர்கள் செய்த பாவ மலைகளைப் போல் மேவிவிளங்கின. பண்டாரம் = பொருள் நிறைந்திருக்கும் பொக்கிசம். ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் என்றது அவரது பாவநிலை தெரிய வந்தது. பிறவுயிர்களுக்கு இரங்கியருளும் தன்மை இல்லாதவர் இரக்கமற்ற கொடிய அரக்கராய் இழிக்கப்பட்டுள்ளனர்.

ஈவது தெரிபவர் தேவர்; அது தெரியாதவர் அரக்கர் என்க.

ஈகையின் பெருமையும், ஈயாமையின் சிறுமையும் ஈங்கு ஒருங்கே தெரிய வந்தன. ஈதலைச் செய்யும் வள்ளல்கள் புகழ் அடைந்து புண்ணிய சீலராய் உயர்ந்து பேரின்பங்களை நுகர்கின்றனர். ஈயாத உலோபிகள் பழிபடிந்து பாவிகளாயிழிந்து கொடிய துன்பங்களை அடைகின்றனர். தருமகருமங்களான இக்குறிப்புகள் ஈண்டு நுணுகியுணர வந்தன.

ஈவது புரிந்து புண்ணியவானாய் உயர்ந்து கொள்.

ஈயாது இழிந்து பாவியாய் ஒழிந்து போகாதே.

என்னும் உணர்வுநலங்கள் இங்கே ஒளிபுரிந்து நிற்கின்றன. தருமமூர்த்தியினுடைய வாய்மொழிகளில் நீதிபோதனைகள் எவ்வழியும் செவ்விய ஒளிகளாய் இனிது வெளிவருகின்றன.

வாகை வெஞ்சிலைக்கைவீர! வீரக் கார் முகக் களிறே!

எனத் தன் தம்பியை இந்நம்பி அன்புரிமையோடு அழைத்திருக்கும் அழைப்பில் வீரச்சுவைகள் வீறுகொண்டுள்ளன.

“உன்னுடைய அண்ணியைக் கவர்ந்து கொண்டு போன படுபாதகனுடைய ஊர் இப்படிப் புண்ணியபோகங்கள் மலிந்து விண்ணுலகினும் மேலாய் விளங்கியுள்ளது. இதனை விரைந்து அழித்து வெற்றித்திருவை நீ விளைத்தருள வேண்டும் என்னும்

குறிப்பு கூறியமொழியுள் கூரிய ஒளியாய் குலாவிமிளிர்கின்றது. உரைகள் நீர்மை சுரந்து வரினும் விறலும் விவேகமும் உள்ளே வீறு கொண்டு உக்கிர வீரங்களை யுணர்த்தியுள்ளன.

இன்னவாறு இலங்கைக் காட்சிகளைக் கண்டு உள்ளம் வியந்து தம்பியோடு இராமன் உவந்து பேசிக் கொண்டு நின்றான். அப்பொழுது சூரியன் உதயமாகி மூன்று நாழிகை யாயது.

## இராவணன் எழுந்தது.

தன்மேல் படையெடுத்து வந்துள்ள இராமனையும் வானர சேனைகளையும் தான் நேரே காணவேண்டும் என்று இராவணன் விரும்பினான். வட திசை வாயிலில் நெடிது ஓங்கி நின்ற கோபுரத்தின் மேல் ஏறிநின்று படைகளைப் பார்க்க விழைந்தமையால் ஆங்கு எல்லா ஆயத்தங்களும் விரைந்து நடந்தன.

சேனாதிபதிகளும் மந்திரிபிரதானிகளும் முந்துறவந்து வழி வகைகளை விழுமிய நிலையில் வெளிசெய்து நின்றனர். அதிசய ஆடம்பரங்களோடு இலங்கைவேந்தன் எழுந்தான். இராசகம்பீரங்கள் எவ்வழியும் தேசு மிகுந்து திகழ்ந்தன. பேரழகுடைய தருணமங்கையர் இருமருங்கும் சாமரைகள் வீசிச்சதுர் புரிந்து வர அரியபடைவீரர்கள் அயல் சூழ்ந்து தொடர அரியேறெனஅவன் மேலேறி வந்தான். அவனுடைய இராச கோலங்களும் வீரப் பிரதாபங்களும் யாண்டும் வீறுகொண்டு விளங்கின.

நஞ்சு கக்கிஎரிகண்ணினர் நாமக்
கஞ்சு கத்தர் கதைபற்றிய கையர்
மஞ்சுகக் குமுறு சொல்லினர் வல்வாய்ச்
சிஞ்சுகத்தின் விசையோர் திசைசெல்ல (1)

கூயுரைப்ப குலமால்வரை யேனும்
சாயுரைப்பரிய வாய தடந்தோள்
வாயுரைத்த கலவைக் களிவாசம்
வேயுரைப்ப தென வந்து விளம்ப. (2)

வேத்திரத்தர் எரிவீசி விழிக்கும்
நேத்திரத்தர் இறை நின்றுழி நில்லாக்
காத்திரத்தர் மனைகாவல் விரும்பும்
சூத்திரத்தர் பதினாயிரர் சுற்ற (3)

தோரணத்தின் மணிவாயில் மிசைச்சூல்
நீரணைத்த முகிலாம் என நின்றான்
ஆரணத்து அமுதை அம்மறை தேடும்
காரணத்தை நிமிர் கண்கொடு கண்டான். (4)

மடித்த வாயினன் வயங்கெரி வந்து
பொடித் திழிந்த விழியன் அது போழ்தின்
இடித்த வன்திசை எரிந்தது நெஞ்சம்
துடித்த கண்ணிணோடு இடத்திரள் தோள்கள். (5)

ஆக ராகவனை அவ்வழி கண்டான்
மாக ராகநிறை வாள்ஒளி யோனை
ஏக ராசியினின் எய்த எதிர்க்கும்
வேக ராகுவென வெம்பி வெகுண்டான். (6)

(இராவணன் தானை காண் படலம் 14-19)

வந்துள்ள சேனைகளைக் காண விழைந்து இராவணன் வந்திருக்கும் இராச கம்பீரங்களை இங்கே கண்டு வியந்து கருதி நயந்து உறுதி நிலைகளை ஓர்ந்து உவந்து நிற்கிறோம். வட திசை வாயிலின் கோபுரச் சிகரத்தின் மேல் நின்று வானரப் படைகளை நோக்கினவன் உடனே இராமனைப் பார்த்தான். பகைமைத் தீ உள்ளே உருத்துக் கொதித்தது; வெளியே கறுத்துக் கடுத்தான்.

ஆரணத்து அமுதை அம்மறை தேடும்
காரணத்தை நிமிர் கண்கொடு கண்டான்.

இராவணன் அங்கே நேரே கண்ட பொருளை நாம் கருத்தால் கண்டு மகிழக் கவி இப்படிக் காட்டியிருக்கிறார். கருதி உணருந்தோறும் உறுதிநிலை உவகை சுரந்து வர உரைகள் ஒளி புரிந்து வருகின்றன. மொழி வழியே தெய்வ எழில் வீசியுளது.

வேதங்கள் சுவைத்துச் சுவைத்து மகிழும் பேரின்பப் பிழம்பு என்பது ஆரணத்து அமுது என்றதனால் அறிய வந்தது. ஆரணம் = வேதம். யாரும் எல்லை காண முடியாத பல கிளைகளையுடையது என்னும் காரணத்தால் வேதத்திற்கு ஆரணம் என்று ஒரு பெயர் அமைந்தது.

அத்தகைய வேதம் ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து யாதும் முடிவு காணாமல் எவ்வழியும் உவந்து உவந்து களித்து வரும் ஆனந்த வடிவன் என்பார் வேதஅமுது எனவிழைந்துமொழிந்தார்.

அதிசய இன்பமுடைய அந்த அமுதத்தைப் பருகிவருதலி முலேதான் வேதம் நித்தியமாய் நிலைத்து வருகிறது என்பது உய்த்துணர வந்தது. ஆரணம் அவாவும் காரணம் காண நின்றது.

இறைவன் அளவிடலரிய நிலையினன் ஆதலால் அவனது உளவுகாண முடியாமல் நாளும் நாளும் வேதம் ஆவலோடுநாடி யுழலுகிறது. அந்த நாட்டமும் தேட்டமும் நன்கு தெரிய அம் மறைதேடும் காரணத்தை என்றார். அகில சராசரங்களுக்கும் ஆதி மூலகாரணனை நீதிமூலம் தெரியாதவன் நேரே காண நேர்ந்தான்.

வேதநாதனாய், அமுதமயனாயுள்ள பரமனே இராமனாய் வந்திருக்கிறான் ஆதலால் அந்த வரவு நிலையை இங்கே உரிமை யுடன் உணர்த்தினர். இத்தகைய திவ்வியமூர்த்தியை வெவ்விய இராவணன் விழிஎதிரே கண்டான்.

காணினும் கேட்பினும் கருதினும் களிதரும் பேரழகனை இராமனை இலங்கை வேந்தன் கண்டபொழுது கெடுகுறிகள் பல கிளர்ந்து தோன்றின. படுநாசங்கள் விளைய நேர்ந்துள்ளதை உடலின் துடிப்புகள் உணர்த்தி நின்றன.

நெஞ்சம் எரிந்தது;
கண்ணினோடு இடத்தோள்கள் துடித்தன.

இராமனை நேரே கண்டபோது இராவணனிடம் தோன்றிய நிலைகளை இங்கே ஊன்றி நோக்கி உணர்ந்து கொள்ளுகிறோம்.

தனக்கும் தன்குலத்துக்கும் கொடிய அழிவுகள் நேர்ந்துள் ளமையை அவன் உடலில் நிகழ்ந்த அவகுறிகள் அறிவுறுத்தி நின்றன. நீசமான நாசங்கள் நெடிது தோன்றியுள்ளன.

ஆடவர்க்கு இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தால் கேடு விரைந்துவரும் என்பது துடிநூல் விதி ஆதலால் அது ஈண்டு வெளியாய் நின்றது. இனிய அமுதனைக் கண்டவன் குலத்தோடு அழிய நேர்ந்தது அவனது கொடுந்தீமையால் வாய்ந்தது என்க.

காண்பான், காட்சி, காணப்பட்டபொருள் ஆகிய மூன்று நிலைகளையும் கவி இங்கே உணர்த்தியிருப்பது உவகை சுரந்து நிகழ்கின்றது.

மாக ராகநிறை வாள் ஒளி யோனை
வேகராகு என வெம்பி வெகுண்டான்.

சூரியனை இராகு என்னும் பாம்பு கண்டு கனன்றதுபோல் இராமனைக் கண்டதும் இராவணன் வெகுண்டான் என்றது இருவர் நிலையும் ஒருங்கே உணர வந்தது. மாகம் = ஆகாயம். ராகம் = சிவப்பு.

உலகபரிபாலனாய் உயிர்களுக்கு இனிமைபுரிந்து வரும் தனிநீர்மை தெரிய இராமனை ஒளியோன் என்றார். எவ்வுலகும் விழித்து வேலை செய்ய ஒளிபுரிந்து உலாவி வருதலால் சூரியன் ஒளியோன் என நின்றான். எவ்வுயிரும் உயர்நலமுறத் திவ்வியதேசோடு சிறந்து வருதலால் இராமன் செவ்விய சூரியன் என நேர்ந்தான். பண்பும் பயனும் பாரறிய வந்தன.

இப்படி அற்புதநிலையில் அமைந்து நின்ற இந்த வீரமூர்த்தியை அந்த வெய்யவன் கண்டு வெகுண்டுகொண்டு பின்பு அயலே நின்றவர்கள் எல்லாரையும் அறியவிழைந்து சாரணன் என்னும் மதிமானிடம் பேர் விவரங்களை வினவினான். அவன் யாவும் உரிமையுடன் உரைத்தான்.

சாரணன் உரைத்தது.

யாவர் நிலைகளையும் நன்கு தெரிந்து தெளிவாகச் சொல்ல வல்ல அவன் இலங்கை வேந்தன் எதிர்நின்று பகை இனங்களை நயமாக விளக்கினான். நம்பியின் அருகே நின்ற தம்பியைக் குறித்து முதலில் அவன் சொன்னது அயலே வருகின்றது.

அறக்கண் அல்லதொரு கண்ணிலன் ஆகி
நிறக்கருங்கடலுள் நேமியின் நின்று
துறக்கம் எய்தியவரும் துறவாத
உறக்கம் என்பதனை ஓட முனிந்தான்.

இலக்குவனை இவ்வாறு குறித்திருக்கிறான்.

கருங்கடல் மருங்கே ஒரு பொன்மலை நிற்பது போல் இராமன் அருகே அவன் நின்றிருந்த நிலைமையும் நீர்மையும் தெரிய வந்தது. தருமமே கண்ணாக வுடையவன்; அண்ணனை ஆருயிராக எண்ணிப் போற்றுபவன்; இரவிலும் கண்ணுறங்காமல் காத்து வருபவன் என்பதை வார்த்தைகளில் வார்த்துக் காட்டியிருக்கிறான். உரை விளக்கம் உயர் நலமுடையது.

யாராலும் துறக்கமுடியாத உறக்கத்தை இவன் துறந்துள்

ளமையால் அதனை வியந்து கூறினன். இலங்கைமேல் படைஎடுத்து வந்துள்ள எதிரியின் இனவுரிமைகளை மனம் தெளிய விளக்கினன். அதோ நிற்கிற அந்த இளைய வீரன்தான் தங்கள் தங்கையை நாசிமுதலிய உறுப்புகளை அறுத்து அங்கபங்கம் செய்தவன் என்று சாரணன் கூறியபோது இராவணன் சினந்து சீறினன். சுக்கிரீவன் அங்கதன் அனுமான் நீலன் குமுதன் முதலான தலைவர்கள் எல்லாரையும் இனம் துலக்கி உரைத்து வந்துள்ள வானர சேனைகளுக்கு எல்லையே இல்லை என்று சொல்லிமுடித்தான். அவ்வுரையைக் கேட்டதும் அவன் சிறுநகைசெய்து தன் பெருமிதத்தை விரித்து வீரப்பிரதாபமாய் வீறுகொண்டுநின்றான்.

சினங்கொள் திண்டிறல் அரக்கனும் சிறுநகை செய்தான்
புனங்கொள் புன்தலைக் குரங்கினைப் புகழுதி போலாம்
வனங்களும் படர் வரைதொறும் திரிதரு மானின்
இனங்களும் பல என்செயும் அரியினை என்றான்.

வனங்களில் திரிகின்ற புல்வாய்கள் பல்லாயிரம் ஒருங்கு திரண்டாலும் ஒரு சிங்கஏற்றை என்ன செய்யமுடியும்? இந்தப் புல்லிய குரங்குக் கூட்டங்கள் மகாவீரனை என்னை யாதும் செய்யமாட்டா; என்னல் இவை யாவும் எளிதே மாண்டு மடிந்து போம்; செத்துப்போகவே ஈண்டு இந்தக் குரங்குகள் இப்படித் திரண்டு வந்திருக்கின்றன என்று உள்ளத் தருக்கோடு இராவணன் உரையாடி நின்றான். அவனுடைய தீரமும் தைரியமும் யாரையும் மதியாமல் எவ்வழியும் வீறுகொண்டு யாண்டும் நீண்டு நிற்றலை விழைந்து கண்டு வியந்து வருகிறோம்.

## இனம் தெரிய விரும்பியது.

போர்மேல் மூண்டு வந்துள்ள எதிரியின் துணைவலிகளை நேரே கண்டும் யாதும் பொருளாக எண்ணமல் அடலாண்மையோடு நின்ற இராவணனை இராமன் நோக்கினன். மந்திரிகள் தந்திரிகள் பிரதானிகள் புடைசூழ இராசகம்பீரமாய் நிற்கிற அவனது நிலைமையைத் தலைமையாகக் கண்டு இலங்கை வேந்தன் என்று தெரிந்து கொண்டாலும் அயலே நின்றவர்களை அறிய விரும்பினன். அருகே நின்ற விபீடணனை நோக்கினன்; அவன் வணங்கிவாய்புதைத்து உழுவலன்புடன் அணுகினன். நம்மை விழைந்து பார்க்கின்ற அந்தக் குழுவினர் யார்? என்று நீர்மை

யோடு கேட்டான். அதற்கு வீடணன் பதில் உரைத்தான்; அவன் கூறிய மொழிகளை அயலே காணவருகிறோம்.

நாறு தன்குலக் கிளையெலாம் நரகத்து நடுவான்
சேறு செய்துவைத்தான் உம்பர் திலோத்தமை முதலாக்
கூறு மங்கையர் குழாத்திடைக் கோபுரக்குன்றத்து
ஏறி நின்றவன் புன்தொழில் இராவணன் என்றான்.

இராமனிடம் விபீடணன் இவ்வாறு உரைத்திருக்கிறான்.

இலங்கைத் தம்பியின் உள்ளக் கொதிப்புகள் உரைகளில் பொங்கி வந்துள்ளன. பிறவிப்பாசம் அறவே மறந்து பேசியிருக்கிறான். பேச்சில் பல காட்சிகள் காண வந்தன.

தன்குலத்தில் பிறந்தவர் எல்லாரையும் நரகத்தில் குடியேற்றிவைக்க அடிகோலியிருக்கும் கொடிய தீவினையாளனை இராவணன் அதோ தேவமங்கையர் ஏவல்புரிய இடையே நிற்கின்றவனே என அண்ணனைச் சுட்டிக்காட்டி இவ்வண்ணம் உரைத்துள்ளான். புன்தொழில் இராவணன் என்றது இழிதொழில்களில் பழகி இழிந்துள்ள அவனது ஈனநிலை தெரிய வந்தது.

பிறருடைய மனைவியரை விரும்புவது பழிபாதகம் ஆன இழி செயல்; அந்தப் புலைத்தொழிலில் தலைமை எய்தியுள்ளமையால் அவனது நிலைமையை நேரே குறித்து உரைத்தான்.

தான் மாத்திரம் அல்லாமல் தன்குலம் எல்லாம் நரகத்தை அடையும்படி கொடிய பாதகத்தைச் செய்துள்ள நெடியபாவி என்று நெஞ்சம் கொதித்துப் பேசியிருத்தலால் அவன்மேல் இவனுக்குள்ள வெறுப்பு வெளியாய் நின்றது.

உடன்பிறந்த அண்ணன் என்பதை அடியோடு மறந்து பேசியுள்ளமையைவாய்மொழியால் உணர்ந்துகொள்ளுகிறோம். நீதியுடையான் ஆதலால தீதுடையானை வெறுத்துக் குறித்தான்.

ஊர்வசி திலோத்தமை முதலிய பேரழகிகள் சாமரை வீசுதல் முதலிய பணிகள் புரிய அதிசயமான ஆடம்பரங்களோடு இராசகம்பீரமாய் விளங்கிக் கோபுரத்தின் சிகரதலத்தில் நின்றான் ஆதலால் உம்பர் மங்கையர் குழாத்திடை நின்றவன் என அவனுடைய இன்ப போகங்களின் இனம் தெரிய வுரைத்தான்.

சுக்கிரீவன் பாய்ந்தது.

இலங்கை வேந்தனைச் சுட்டிக்காட்டி இன்னவாறு விபீடணன் சொன்னபோது இராமன் அயலே நின்ற சுக்கிரீவன் உள்ளம் கனன்று உருத்தான். "ஆ! என் ஆண்டவன் தேவியைக் கவர்ந்து கொண்டு போன பாதகனா இவன்!" என்று கோபம் மூண்டு குலைதுடிக்கவே தன்னையறியாமலே அவன்மேல் தாவிப் பாய்ந்தான். சுவேல மலைமேல் நின்று அந்தக் கோபுரத்தின் உச்சிமேல் இந்தவீரன் விரைந்து பாய்ந்தது அதிசய விசித்திரமாயிருந்தது. இவனுடைய உள்ளக் காய்ச்சலையும் உக்கிரவீர பராக்கிரமத்தையும் அப்பாய்ச்சல் உணர்த்தி நின்றது. அந்நிலைகளை அயலே வருகிற கவிப்படங்கள் நன்கு காட்டியுள்ளன.

கருதி மற்றொன்று கழறுதல் முனம்விழிக் கனல்கள்
பொருது புக்கன முந்துறச் சூரியன் புதல்வன்
சுருதி யன்னவன் சிவந்தநற் கனிஎன்று சொல்லப்
பருதி மேல்பண்டு பாய்ந்தவன் ஆமெனப் பாய்ந்தான். (1)

சுதையத் தோங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து
சிந்தையத் திண்டிறல் இராவணக் குன்றிடைச் சென்றான்
ததையச் செங்கரம் பரப்பிய தன்பெருந் தாதை
உதயக் குன்றினின்று ஒருகுன்றில் பாய்ந்தவன் ஒத்தான்.

பள்ளம் போய்ப்புகும் புனலெனப் படியிடைப் படிந்து
தள்ளும் பொற்கிரி சலிப்புறக் கோபுரம் சார்ந்தான்
வெள்ளம் போற்கண்ணி அழுதலும் இராவணன் தன்மேல்
உள்ளம் போற்செலும் கழுகினுக்கு அரசனும் ஒத்தான்.(3)

கரிய கொண்டலைக் கருணையங் கடலினைக் காணப்
பெரிய கண்கள்பெற்று உவக்கின்ற அரம்பையர் பிறரும்
உரிய குன்றிடை உருமிடி வீழ்தலும் உலைவுற்று
இரியல் போகின்ற மயில்பெருங் குலம்என இரிந்தார். [4]
(மகுடபங்கப்படலம்,3-6)

இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சியைவியந்து பார்க்கின்றோம். கோபவெறியும் வீர ஆவேசங்களும் வீறுகொண்டு மூண்டுள்ளன. கவிகளில் பொதிந்துள்ள காட்சிகள் கருதிக்காணத் தக்கன. உணர்ச்சி வேகங்கள் உச்ச நிலையில் ஓங்கின.

இராவணன் என்ற சொல் காதில்பட்டவுடனே சுக்கிரீவனுடைய உள்ளம் கொதித்தது; சகித்து நிற்க முடியவில்லை;

வீரவெறி மண்டித் தன்னைமறந்து தாவியிருக்கிறான். அந்தச் சிகரதலத்தில் பாயவே அங்கே புடைசூழ்ந்து நின்ற பரிவாரங்கள் எல்லாம் நிலைகுலைந்து போயின.

இராமனை நோக்கி அதிசய ஆர்வத்தோடு வியந்து மகிழ்ந்து நின்ற தேவமங்கையர் யாவரும் திகில் கொண்டு சிதறி ஓடினர்.

கரிய கொண்டலைக் கருணையங் கடலினைக் காணப்
பெரிய கண்கள் பெற்று உவக்கின்ற அரம்பையர்.

என்றமையால் இராமனை அவர் கண்டுகளித்துக் கருதி நின்ற காட்சிகளை நன்கு காணலாகும். கண்கள் பெரிதாயிருப்பது பெண்களுக்கு அழகு; அந்த விழுமிய நிலையில் அவர் கெழுமி நின்றனர். அழகு மொழியால் அழகிகளைக் கவி குறித்தருளினார்.

பேரெழிலுடைய அரமடந்தையர் யாரிடமும் காணமுடியாத அதிசய எழிலுடைய இந்த அழகனைக் கண்டு ஆர்வம் மீதூர்ந்து விழிகள் களித்து வியந்து நின்றனர். அந்த நிலையில் வானரவேந்தன் திடீர் என்று வந்து பாய்ந்தான். பாயவே அந்த அழகிகள் யாவரும் பதறிச் சிதறிக் கதறி ஓடினர்.

கரிய மேகத்தைக் கண்டு பெரிய உவகை கொண்டு இனிது மகிழ்ந்து நின்ற கானமயில்கள் வான இடியைக் கேட்டு மறுகி மயங்கி ஓடியது போல் மேனகை முதலியோர் ஓடியுள்ளனர். உவமைக் குறிப்புகள் உவகை சுரந்து திகழ்கின்றன.

கரிய கொண்டல் இராமன்.

மயில் பெருங்குலம் அரம்பையர்.

இடி வீழ்ந்தது சுக்கிரீவன் பாய்ந்தது.

இனிய அழகை மாந்தி உவகை பொங்கியுள்ள பொழுது கொடிய திகில் நேர்ந்தமையால் மெல்லியலார் எல்லாரும் உள்ளம் பதறி ஓடநேர்ந்தார். இரிதல் = சிதறி ஓடுதல். நல்ல அழகிகள் அல்லல் அடைந்து அலமந்து ஓடியுள்ளமையைச் சொல் ஓவியத்தில் கவி சுவையாகக் காட்டியுள்ளார்.

கருணையங் கடல் என இராமனை இங்கே குறித்தது கருதி உணரவுரியது. சுட்டியுரைக்கும் உரைகளுள் சுவைகள் சொட்டி வருகின்றன. கரியகொண்டல் கருணைமழைபொழியவந்துள்ளது.

சீவ கோடிகள் அடைந்து வருகிற துயரங்களை நீக்கும் பொருட்டுத் தனது ஆதிமூலமான ஆனந்தநிலையை அறவே துறந்து விட்டு மனித உருவில் வந்துள்ள புனிதமூர்த்தி ஆதலால் அந்த நிலைமையும் நீர்மையும் நேரே தெரிய வந்தது. அவதாரத்தின் தலைமையான தத்துவங்களை இடங்கள் தோறும் உய்த்துணர்ந்து கொள்ளும்படி பெயர்களை நயமாக வழங்கி வருகிறார்.

கருங்கடல் பள்ளியை விட்டுத் தேவர்கள் வேண்டுகோளுக்காக இரங்கி எழுந்த கருணைத் தெய்வம் கருதிவந்த கொடிய பகைவனை நேரே முதலில் கண்டுள்ளமையால் உரிய பெயரால் உணர்த்தியருளினார்.

கொண்டல் மழை பொழிய மூண்டபொழுது இடிகள் ஒலித்து எழுவது இயல்பு. அந்த இயற்கை நிகழ்ச்சிகள் இங்கே நிகழ்ந்திருக்கின்றன. நேர்ந்துள்ள நிலைகளைக் கூர்ந்து காணுக.

ஒளியை வீசி வான வெளியிலிருந்து ஓர் இடி வீழ்ந்தது போல் வானரவேந்தன் வந்து பாய்ந்து இராவணன் எதிரே நேர்ந்தான். பொல்லாத போராட்டங்கள் பொங்கி மூண்டன.

மல்யுத்தம் மூண்டது.

சுவேலமலையிலிருந்து விரைந்து தாவிவந்து நேரே மூண்டு நின்ற சுக்கிரீவனை நோக்கி இராவணன் யாதும் கலங்காமல் நீ யார்? என்று உக்கிரவீரமாய் உருத்துக் கேட்டான். அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் கையால் ஓங்கி இவன் அவனுடைய மார்பில் குத்தினான். என்றும் யாரிடமும் படாத அடி இடிபோல் தன் மார்பில் படவே இலங்கைவேந்தன் சினந்து எதிரியை இறுகப் பிடித்துத் திருகி அடித்தான். அந்த அடி பட்ட இடங்களிலிருந்து இரத்தங்கள் பீறிட்டு ஓடின. உடல் எங்கும் உதிரம் சொரிய மருண்டு மயங்கிய சுக்கிரீவன் விரைந்து மேல் எழுந்து இராவணன் முகத்திலும் மார்பிலும் உதைத்து அயலே குதித்தான். உதைத்துக் குதிக்கு முன் அந்தக் கால்கள் இரண்டையும் கைகளால் பிடித்துக் கடிது சுழற்றித் தரையில் அடித்துக் கிடத்தி மார்பில் மண்டியிட்டு அமுக்கிக் கழுத்தை நெரித்து அரக்கர்பதி உருத்துத் துகைத்து உதிரத்தைக் குடித்தான். அழிந்து பட்டான் என அடியில்கிடந்த அவன் விரைந்து புரண்டு திமிர்ந்து மேல்எழுந்து இராவணனுடைய முகத்தில் அடி

த்து மார்பில்மிதித்துச் சீறி மோதி எல்லாவழிகளும் அல்லல் இழைத்து வெகுண்டு வளைத்து முனைந்து மல்லாடினான். இருவரும் ஒருவரை ஒருவர் விடாமல் பற்றி உடலோடுஉடல் ஒட்டி அடலாண்மைகளோடு அடுசமராடினர்..காலால் இடித்தும் கையால் அடித்தும் பல்லால் கடித்தும் தலையால் முட்டியும் பொல்லாத கோபவெறியராய் இருவரும் பொருதிறலோடு மாறிமாறி மல்லாடிச் சுழன்றுவந்தவர் முடிவில் புரண்டு கோபுரதலத்திலிருந்து கீழே அகழியில் வந்துவிழுந்தனர். ஆழ்ந்து அகன்ற அகழி நீரில் வீழ்ந்தவர் பெரிய திமிங்கிலங்கள் ஒன்றோடு ஒன்று போராடுவதுபோல் மாறுடிமலைந்தார். உடலைக் கசக்கி உயிரைக் குடிக்க வேண்டும் என்று இரண்டு பேரும் கறுவுகொண்டு கடும்போர் புரிந்தார். பின்பு நீரிலிருந்து மேலேறிப் பாய்ந்தார். இருவர் உடல்களினுமிருந்து இரத்தங்கள் சொரிந்தன; புறத்தே உதிரங்கள் ஓடினும் உள்ளம் வாடாமல் உக்கிரவீரமாய் இருவரும் உருத்துப் போராடினர். சிங்கஏறுகள் இரண்டு பொங்கிய வீறோடு போராடியதுபோல் மாறுடிவருங்கால்இடையே சுக்கிரீவனை எடுத்து அயலே கடுத்து வீசினான். அவன்தரையில் விழுமுன் இராவணன் தொடர்ந்து பாய்ந்து தலையில் குதித்து நிலையைச்சிதைத்தான். அந்த நிலையிலும் தளராமல் அவனை உலக்கிப் பற்றித்தூக்கி அடித்தான். அயலே எறியப்பட்டவன் சுவரில் எறிந்த பந்துபோல் மீண்டு வந்து மிடலோடு மூண்டு பொருதான்.

வந்தவனை நின்றவன் வலிந்துஎதிர் மலைந்தான்
அந்தகனும் அஞ்சிட நிலத்திடை அறைந்தான்
எந்திரம் எனக்கடிது எடுத்தவன் எறிந்தான்
கந்துகம் எனக்கடிது எழுந்துஎதிர் கலந்தான். (1)

படிந்தன மரம்தரை பகிர்ந்தன பரப்பும்
கொடுஞ்சினம் முதிர்ந்தனர் உரத்தின்மிசை குத்த
நெஞ்சுவர் பிளந்தன நெரிந்த நிமிர்குன்றம்
இடிந்தன தகர்ந்தன் இலங்கைமதில் எங்கும். (2)

செறிந்துயர் கறங்கனையர் மேனிநிலை தேரார்
பிறிந்தனர் பொருந்தினர் எனத்தெரிதல் பேணார்
எறிந்தனர்கள் எய்தினர்கள் இன்னர்என முன்னின்று
அறிந்திலர் அரக்கரும் அமர்த்தொழில் அயர்ந்தார். (3)

மூண்டுள்ள சண்டை அதிக பயங்கரமாய் நீண்டுள்ளது.

சுக்கிரீவ இராவணருக்கு நேர்ந்த இந்த மல்லாடலைக் கவி இருபது பாடல்களால் விளக்கி யிருக்கிருர். பாட்டுக்களுள் போராட்டங்களின் கோரக் காட்சிகள் நேரே தெரிகின்றன.

வெள்ளிமலையை அள்ளிஎடுத்த அதிசயவீரனை இராவணனோடு யாரும் மாரேற்றுப் போராட முடியாது. திக்குயானைகளின் தந்தங்களைத் தன்மார்பில் முறித்த தீரன்கையில் சிக்கிச் சுக்கிரீவன் படாதபாடுகள் பட்டிருக்கிருன். இடிகள் வீழ்ந்தன போன்ற அடிகளைத் தாங்கிக் கொண்டு அவனைமாறி மாறித்தாக்கி இவ்வீரன் சூறையாடியிருப்பது அதிசய ஆற்றலை விளக்கியுள்ளது. கடலைக்கடைந்தகைகளையுடையவாலியின்உடன்பிறந்ததம்பி என்பதை இராவணனுடைய உடலைக்கடைந்துஇவன்காட்டியருளினன். அரக்கர்பதியும் இவனை இரத்தங்கள்கக்க அடித்து உருட்டி யிருக்கிருன். அருந்திறலுடைய பெரிய வலியவனிடம் அகப்பட்டுக் கொடிய அடிகள் பலபட்டும் யாதும் தளராமல் அவனை மோதிமுனிந்து விடாமல் மல்லாடி அல்லல் பல புரிந்திருப்பது எல்லையில்லாத இவனது வீரத்திறலை வெளிப்படுத்தி நின்றது. நெடுநேரமாக வெற்றி தோல்வி யின்றி இருவரும் கொடும் போர்புரிந்தனர். சாரிதிரிந்து மாறி மாறி எற்றிப்பற்றி எறிந்து செறிந்து இடித்து அடித்துப் போராடியுள்ளனர். அஞ்சாத அரக்கரும் திகில்கொண்டு யாதும் தோன்ருமல் அயர்ந்து நின்றனர். இலங்கை முழுவதும் கலங்கி யுழன்றது.

## இராமன் தவித்தது.

தன் அருகில் நின்ற சுக்கிரீவன் யாதொரு தகவலுமின்றித் திடீர் என்று இலங்கைக்கோபுரத்தின் மேல் தாவிப் போகவே இராமன் ஆவிபோனது போல் அலமந்து நின்ருன். யாவரும் திகிலடைந்து திகைத்து மறுகி மயங்கினர். கொடிய போர்வீரனை இராவணன் கையில் அகப்பட்டமையால் சுக்கிரீவன் மீண்டுவர முடியாது; மாண்டே போவான் என்று ஈண்டு நின்றவர் எல்லாரும் ஏங்கி ம்றுகி இனைந்து தவித்தார்.

நீண்டநேரம் காணுமையால் மோசம் நேர்ந்தது என அஞ்சன வண்ணனது நெஞ்சம் துடித்தது. உரியதுணைவனை நினைந்து இக்குலமகன் பரிந்து பதைத்தது பெரிய பரிதாபமா யிருந்தது.

இன்னதோர் தன்மை எய்தும் அளவையின் எழிலி வண்ணன்
மன்னுயி ரனைய காதல் துணைவனை வரவு காணான்
உன்னிய கருமம் எல்லாம் உன்னொடு முடிந்த என்னாத்
தன்னுணர் வழிந்து சிந்தை அலம்வந்து தளர்ந்து சாய்ந்தான்.

ஒன்றிய உணர்வே ஆய ஒருயிர்த் துணைவ! உன்னை
இன்றியான் உளனாய் நின்றுஒன் றியற்றுவது இயைவதன்றால்;
அன்றியும் துயரத்திட்டாய் அமரரை; அரக்கர்க்கெல்லாம்
வென்றியும்கொடுத்தாயந்தோ! கெடுத்ததுன் வெகுளிஎன்றான்.

தெய்வவெம் படையும் தீரா மாயமும் வல்ல தீயோன்
கையிடைப் புக்காய் நீவேறு எவ்வணம் கடத்தி காவல்
வையம்ஓர் ஏழும் பெற்றால் வாழ்வனே வாராயாகில்
உய்வனே தமியனேனுக்கு உயிர்தந்த உதவியோனே. (3)

ஒன்றாக நினைய ஒன்றாய் விளைந்ததென் கருமம் அந்தோ!
என்றானும் யானோ வாழேன் நீயிலை எனவும் கேளேன்
இன்றாய பழியும் நிற்க நெடுஞ்செருக் களத்தின் என்னைக்
கொன்றாயும் நீயே உன்னைக் கொல்லுமேல் குணங்கள் தீயோன்.

இறந்தனை என்ற போதும் இருந்துயான் அரக்கர் என்பார்
திறந்தனை உலகில் நீக்கிப் பின்னுயிர் தீர்வன் என்றால்
புறந்தரு பண்பி னாய உயிரொடும் பொருந்தி னானை
மறந்தனன் வலியன் என்பார் ஆதலால் அதுவும் மாட்டேன்.

அழிவது செய்தாய் ஐய அன்பினால் அளியத் தேனுக்கு
ஒழிவரும் உதவி செய்த உன்னையான் ஒழிய வாழேன்
எழுபது வெள்ளம் தன்னின் ஈண்டொர்பேர் எஞ்சா தேகிச்
செழுநகர் அடைந்த போழ்தும் இத்துயர் தீர்வதுண்டோ?

சுக்கிரீவனைக் காணமல் இராமன் துடித்துப் பதைத்துச் சோர்ந்து புலம்பி யிருக்கும் நிலைகளை இங்கே ஓர்ந்து வருந்துகிறோம். முன்னும் பின்னும் எண்ணிப் பாராமல் கோப வெறியால் துடுக்காகச் செய்த அவனுடைய செயல் பெரிய துயரத்தை விளைத்துவிட்டது. அரிய காரியங்களைச் செய்துமுடிக்க அடலாண்மையோடு மூண்டு நின்ற இந்த ஆண்டகை காரியக்கேடு நேர்ந்ததே! என்று கருதியுருகி மறுகியிருக்கிறான். துயரத் துடிப்பினால் வாய்திறந்து புலம்பி யிருப்பது உள்ளத்தின் அவலப் பதைப்புகளையும் அல்லல் மறுக்கங்களையும் வெளியிட்டுள்ளது.

அந்தோ! கெடுத்தது உன் வெகுளி.

தாவிப்போன சுக்கிரீவனைக் கூவி நொந்து சிந்தை கவன்று இந்தவாறு இராமன் துடித்திருக்கிருன். கோபத்தால் நேர்ந்த ஆபத்து ஆதலால் வெகுளிகெடுத்தது என்ருன். உள்ளே பொங்கிய சீற்றம் உணர்வைத் தாழ்த்தி அவனை மேலே துள்ளிப் போகச் செய்திருக்கிறது. கோபாவேசத்தால் தன்னை மறந்து பகைவன் மேல் பாய்ந்திருத்தலால் அவனது பாய்ச்சலும் காய்ச்சலும் தெரியவந்தன. இவ்வீரன் உள்ளம் பதைத்துத் தவித்தான்.

"உணர்வும் உயிருமாய் உரிமை செய்து நின்ற அருமைத் துணைவ! பெருமை சிதைய நேர்ந்ததே! ஐயோ! உன்செயல் எவ்வளவு துயரங்களுக்கு ஏதுவாயது! தேவர்கள் துன்புற்று உழல அரக்கர்கள் இன்புற்று உயரும்படி உன்மதிகேடு செய்து விட்டதே! அதிசய ஆற்றலும் கொடிய மாயாவல்லபங்களுமுடைய தீயவனிடம் போய்ச் சிக்கிக்கொண்டாயே! கொடியவன் விரைந்து கொன்று விடுவானே; உன்னை இழந்தபின் இந்த உலகம் எல்லாம் பெற்ருலும் அவற்ருல் எனக்கு என்னபயன்? அரக்கர் குலத்தை அடியோடு வென்று சானகியைச் சிறைமீட்டி வானமும் வையமும் புகழ மீளலாம் என்று சேனைகளோடு சிந்தை களித்து வந்தேன்; நான் ஒன்று நினைத்துவர மாருய் வேறு ஒன்று விளைந்து விட்டதே! கருதிய கருமங்கள் யாவும் கடையாய் இழிந்து போயினவே. எனக்கு அவமானத்தையும் தோல்வியையும் விளைத்து முடிவில் என்னைக் கொன்றவனும் நீயாகவே முடிந்தாய்! அந்தோ! உன் உள்ளத்துடுக்கு எள்ளல் இழிவுகளைப் பெருக்கித் துன்பவெள்ளமாய்த் தொடர்ந்து நின்றதே! உன்னை எதிரிகையில் இழந்தபின் நான் என்ன வெற்றியை அடைந்தாலும் அதனல் எனக்கு என்னபயன்? இறந்து படுவதைத் தவிர இனிமேல் நான் இருந்து வாழ்வதால் யாதும் பயன் இல்லை. என் முடிவு இப்படி முடிந்ததே! அந்தோ!" என்று இந்தவாறு பரிந்து மறுகி இவ்வீரமூர்த்தி பரிதபித்திருத்தலால் நேர்ந்துள்ள மனவேதனைகளை நேரே தெரிந்து நெஞ்சம் கவல்கின்ருேம்.

தீயோன் உன்னைக் கொல்லுமேல் என்னை நீயே கொன்ருய்!

இராவணன்கையில் சிக்கிச் சுக்கிரீவன் இறந்து பட்டால் இராமன் அழிந்து பட்ட நிலையை இங்ஙனம் அவன் வாயால்

மொழிந்திருக்கிருன். நோயுழந்து நொந்து பதைத்திருத்தலை வாய்மொழி நன்கு வெளிப்படுத்தியுள்ளது. என்னை நீயே கொன்ருய்! என்றதில் எவ்வளவு துன்பங்கள் தோய்ந்திருக்கின்றன? எத்தனை பொருள்கள் அடங்கியுள்ளன; உய்த்துணர வேண்டும்.

சுக்கிரீவன் அரக்கர்பதியால் அழிந்து போனல் இராமன் வாழ்வு அடியோடு பாழாயது என முடிவு செய்திருக்கிருன். உரைகளிலிருந்து உள்ள முடிவுகளை ஓர்ந்து உணர்ந்துகொள்கிரேம். கொடிய துயரம் உயிரை நெடிது கலக்கி யிருக்கிறது.

உற்ற துணைவன் மாய்ந்தால் உரிய மனைவியை மீட்டாமல் தன் உயிரை மாய்த்து மாண்டு போக வேண்டும் என்று இந்த ஆண்டகை மூண்டு முனைந்துள்ளதை மொழிகள் வெளி செய்துள்ளது. மனவேதனை மரண வேதனையை மிஞ்சி நின்றது.

நட்பாய் அடைந்த நண்பனை இழந்தபின் உயிர்வாழ்ந்திருப்பது இழிந்தபுன்மை என எண்ணி ஏங்கி யிருக்கிருன். தன்னை அடைந்தவரை எவ்வழியும் இனிது ஆதரிக்கும் இயல்பினன் ஆதலால் இவ்வழி உடைந்து உளைந்து இனைந்து மறுகினன்.

அரிய பல காரியங்களை முடித்துப் பெரிய மகிமையோடு வாழவுரிய தனது இனிய வாழ்வு பாழாய்ப் பழி அடையும்படி அவனுடைய தொழில் செய்துவிட்டதுஎன இக் குலமகன் குலை துடித்துள்ளான். நெஞ்சத் துடிப்புகள் நெடிய துயரங்களாயின.

காரியக்கேடும் கொடிய அவமானமும் நேர்ந்தனவே! என்று நெஞ்சம் கலங்கி நெடிது புலம்பி முடிவுதெரியாமல் தத்தளித்துத் தவித்து இவ் வுத்தமன் உளைந்து நின்ருன்.

ஒன்ருக நினைய ஒன்ருய் விளைந்தது என் கருமம்.

தன் விதியை நொந்து இவ்வாறு மதிமயங்கி யிருக்கிருன்.

சுக்கிரீவன் தக்கதுணையாய் அமைந்திருக்கிருன்; எழுபது வெள்ளம் சேனைகள் சேர்ந்துள்ளன. இந்தத்துணைவலியால் பகையை எளிதே வென்று மனைவியை மீட்டிமாண்பு பெறலாம் என இன்னவாறு உன்னி உவந்து நின்ருன்; அந்த நிலையில் இந்த அவலம் நேர்ந்தது ஆதலால் தன் மனக்கோட்டையெல்லாம் அடியோடு தகர்ந்து போயது என உள்ளம் உடைந்து புலம்பி யுள்ளான். வினை விளைவை நினைந்து வேதனை விரிந்தது.

"ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்— ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்." (ஔவையார்)

இந்தப் பாட்டி பாட்டின் முதலடி நம் கவிஞர்பிரான் வாக்கில் வந்துள்ளது; உற்றுள்ள உண்மை ஊன்றி நோக்கத்தக்கது.

மனிதன் நினைத்தபடி எல்லாம் நடந்து விடாது; வினை வேறு தனியே நின்று அதன் போக்கின்படி யாவும் நடத்தி வருகிறது என்னும் கரும நியமம் ஈண்டு மருமமாய்க் காண வந்தது.

வினை, விதி, கருமம், ஊழ் முதலியவற்றிற்குத் தெய்வம் என்று ஒரு பெயர் அமைந்துள்ளமையால் அதன் அதிசய ஆற்றல் அறியலாகும். அதுகாட்டியவழியேகடுகி நடந்துவருகிறோம்.

விதி கூட்டிய அளவே யாவும் கூடி வருகிறது.

மனிதன் செய்த நல்ல காரியங்கள் நல்விதியாய் வருகிறது; தீய செயல்கள் தீ விதியாய்ச் சேருகிறது. முன்னது இன்பத்தைத் தருகிறது; பின்னது துன்பத்தை விளைக்கிறது. இந்த விதி நியமங்களுக்குத் தெய்வம் சாட்சியாய் நிற்கிறது; ஆகவே எல்லாம் தெய்வச் செயல் என நேர்ந்தது.

மனிதன் எண்ணியபடி சில எய்துகின்றன; பல தவறுகின்றன. எய்திய நன்மைகள் செய்த நல் வினையின் பயனும். எய்தாதன செய்யாதனவாய்க் கழிந்த வெய்ய விழைவுகளாம்.

தான் கருதியபடி கை கூடாத போது அது கடவுள்செயல் என்று ஒருவாறு கடமையோடு மனிதன் அறிய நேர்கின்றான்.

நான் ஒன்று நினைத்தேன்; என் கருமம் வேறு ஒன்றாய் முடிந்ததே! என்று இம் மான வீரன் இங்கே மறுகி யிருப்பது மனித சமுதாயத்தின் அனுபவத்தை இனிது உணர்த்தி யுள்ளது.

தன் கருத்து நிறைவேறாத இடத்தே தான் தெய்வம் வேறே யுள்ளது; அதிசய வலியுடையது; அளவிடலரிய ஆற்றல் வாய்ந்த அது எதையும் தனியே நின்று நடத்துகின்றது என்னும் ஞானம் மானிடனுக்கு உதயம் ஆகின்றது.

"Man proposes but God disposes." (Kempis)

"மனிதன் ஒன்று எண்ணுகிறான் ஆனால் கடவுள் தன் எண்ணப்படியே யாவும் நடத்துகிறார்" என்னும் இது இங்கே அறியவுரியது. தாமஸ் கெம்பிஸ் என்னும் மேல்நாட்டுப் பெரியார் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

"A man's heart deviseth his way; but the Lord directeth his steps." (Bible)

"தனது வழியை மனிதன் இதயம் கருதினும் இறைவன் நடத்துகிறபடியே அவன் இயங்குகிறான்" என யூத தேசத்து அரசன் இவ்வாறு கூறியிருக்கிறான்.

தான் கருதி வந்த உறுதி நிலைகளுக்கு மாறாய்க் கேடு விளைந்ததே! என்று இவ் வீரன் மறுகியுள்ளமையால் கரும வினையை எண்ணினான்; சிறுமைகளை நினைந்து சிந்தை நொந்தான்.

அரிய *பிரயாசையோடு கடலில் அணைகட்டி அதி மதியூகமாய்ச் சேனைகளை நடத்தி வந்து எதிரியின் நகரை அடைந்து முதிர் போர் புரிந்து வெற்றி பெறலாம் என்று இக் கொற்றக் குரிசில் உள்ளம் துணிந்து உவந்து நின்ற பொழுது இடையே இப்படிப் பிழை நேர்ந்து விட்டதே! என்று பெருந் துயருழந்திருக்கிறான். அருந்திறலாளன் அயர்வு அவலமாயது.

அந்தோ! என்றது அவல நிலையில் ஆற்றாமைமீதூர்ந்து வந்தது.

இந்தவாறு நொந்து தவித்து மேலே செய்ய வேண்டியதை நினைந்து சிந்தை துடித்துக் கொண்டிருக்கும் பொழுது சுக்கிரீவன் ஆகாய மார்க்கமாய்த் தாவி வந்தான். அவனைக் கண்டதும் இக் கோமகனுக்கு ஆவி வந்தது போலாயது.

சுக்கிரீவன் மீண்டது.

நீண்ட நேரம் கொடும் போர் புரிந்து மல்லாடி அல்லல் பல அடைந்த சுக்கிரீவன் ஒல்லையில் மேலே தாவி இராவணனுடைய அரிய மணி மகுடங்களைப் பறித்துக் கொண்டு வான வீதி வழியே பாய்ந்து வந்து இம் மான வீரனடியில் வைத்து உழுவலன்போடு தொழுது உருகி நாணி மறுகி நின்றான். அவனுடைய நிலையை நோக்கி இராமன் பரிவு மீதூர்ந்தான். கண்ணீர் மார்பில் வழிந்தோட இப் புண்ணிய வீரன் அவனைத் தழுவி மொழிந்த மொழிகள் விழுமிய பண்புகளை வெளியறியச் செய்தன.

### சுக்கிரீவன் வந்து பணிந்தது.

என்றிவன் இரங்குங் காலத்து இருவரும் ஒருவர் தம்மின்
வென்றிலர் தோற்றி லாராய் வெஞ்சமம் விளைக்கும் வேலை
வன்றிறல் அரக்கன் மௌலி மணிகளை வலியால் வாங்கிப்
பொன்றினன் ஆகின்நன்றென்று அவன்வெள்க இவனும் போந்தான்.

கொழுமணி முடிகள் தோறும் கொண்டன மணியின் கூட்டம்
அழுதயர் உறுகின்றான்றன் அடித்தல மதனில் சூட்டித்
தொழுதயல் நாணி நின்றான் தூயவர் இருவ ரோடும்
எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஒருயிர் எய்திற் றன்றே. (2)

என்புறக் கிழிந்த புண்ணின் இழிபெருங் குருதி யோடும்
புன்புலத்து அரக்கன் தன்னைத் தீண்டிய புன்மை போக
அன்பனை அமரப் புல்லி மஞ்சனம் ஆட்டி விட்டான்
தன்பெரு நயனம் என்னும் தாமரைத் தடத்து நீரால், (3)

ஈர்கின்ற தன்றே என்றன் உள்ளத்தை இங்கும் அங்கும்
பேர்கின்றது ஆவி யாக்கை பெயர்கின்ற தில்லைப் பின்னைத்
தேர்கின்ற சிந்தை யன்றோ திகைத்தனை என்று தெண்ணீர்
சோர்கின்ற அருவிக் கண்ணான் துணைவனை நோக்கிச் சொல்லும்:

### இராமன் கடிந்து மொழிந்தது.

கல்லினும் வலிய தோளாய்! நின்னை அக் கருணை யில்லோன்
கொல்லுதல் செய்தான் ஆகின் கொடுமையால் குற்றம் பேணிப்
பல்பெரும் பகழி மாரி வேரொடும் பறிய நூறி
வெல்லினும் தோற்றேன் யானே அல்லனோ விளிந்திலாதேன். (5)

பெருமையும் வண்மைதானும் பேரெழில் ஆண்மை தானும்
ஒருமையின் உணர நோக்கின் பொறையினது ஊற்றம் அன்றே
அருமையும் அடர்ந்து நின்ற பழியையும் அயர்ந்தாய் போலும்
இருமையும் கெடுத்தாய் அன்றே என்னினைந் தென்செய்தாய் நீ.

இந் நிலை விரைவின் எய்தாது இத்துணை தாழ்த்தி ஆயின்
நன்னுதற் சீதை யாலென் ஞாலத்தால் பயனென் நம்பி
உன்னையான் தொடர்வல் என்னைத் தொடருமிவ் வுலகம்என்றால்
பின்னைஎன் இதனைக் கொண்டு விளையாடிப் பிழைப்பசெய்தாய்!

என்றனன் என்ற லோடும் இணையடி இறைஞ்சி யாங்குக்
குன்றுறழ் குவவுத் திண்டோள் கொற்றவல் வீரற் காணத்
தன்தனி யுள்ளம் நாணால் தழல்விழிக் கொலைவெஞ் சீயம்
நின்றென எருத்தம் கோட்டி நிலனுற நோக்கிக் கூறும்: (8)

உள்ளம் வெகுண்டு மூண்டு பாய்ந்த சுக்கிரீவன் கடும் போராடி இலங்கை வேந்தனுடைய கிரீடங்களைக் கவர்ந்து

கொண்டு மீண்டு வந்து இராமன் அடியில் வைத்து வணங்கி நிற்பதையும், அவனை விழைந்து தழுவி இவ் வீரன் கடிந்து மொழிந்துள்ளதையும் இங்கே வியந்து கண்டு உவந்து நிற்கிறோம். வீர வெற்றிகளோடு அன்புரிமைகளும் பண்பு நலங்களும் சுரந்து அரிய பல மேன்மைகள் ஈண்டு விரிந்து மிளிர்கின்றன.

அழுது அயர் உறுகின்றான்.

என இராமனை இங்ஙனம் எழுதிக் காட்டியிருக்கிறார்.

உற்ற நண்பன் எதிரி கையில் சிக்கித் துயருழந்து உயிரழிந்தான் என்று எண்ணவே உள்ளமும் உயிரும் நிலைகுலைந்து துடித்துள்ளன. இவ் வீர வள்ளல் தனது அதிசய ஆற்றல்களையெல்லாம் அறவே மறந்து அலமந்து பதைத்திருக்கிறான். உரிய துணைவன் பறிபோனது உயிர் போனது போல் ஆகவே அரிய செயல்கள் யாவும் இழந்து அலமரலடைந்தான்.

இந்த நிலையில் அவன் வந்து சேர்ந்துள்ளது தெய்வீக விந்தையாய் விளங்கி நின்றது. நிகழ்ச்சிகள் அதிசய வியப்புகளாயுள்ளன. உரியவன் வரவு உவகை வாரியாய் ஓங்கியது.

தூயவர் இருவ ரோடும்
எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஓர்உயிர் எய்திற்று.

சுக்கிரீவன் வந்து சேர்ந்த நிலைமையில் அங்கே நின்றவர் எல்லாரும் எய்திய இன்ப நிலையை இது இனிது உணர்த்தியுளது.

தூயவர் இருவர் என்றது இராம லட்சுமணரை.

பரிசுத்தமான தரும குண சீலர் என்பதை இப் பெயர் துலக்கி நின்றது. மாசற்ற தேசுகள் மதி தெளிய வந்தன.

இந்த இருவரோடு எழுபது வெள்ளம் வானரங்களுக்கும் சுக்கிரீவன் ஓர் உயிர் என்றது ஈண்டு ஊன்றி உணர வுரியது. அவனுடைய நிலைமை தலைமைகளை இவ்வளவு அழகாக விளக்கியிருக்கிறார். கவி அரசைக் கவி அரசு காட்டியது சுவையையூட்டியுளது.

அவன் அயலே தாவிப் போன போதே இம்மான வீரரும் சேனைத் திரள்கள் யாவும் ஆவி போனது போல் அயர்ந்து அலமந்து நின்றுள்ளதை இவ் வுரைக் குறிப்பு நன்கு உணர்த்தியது.

செயலிழந்து அயர்ந்து நின்றவர் எல்லாரும் சுக்கிரீவனைக் கண்டதும்உயிர்பெற்றவர்போல்உவந்து கொண்டாடியுள்ளனர்.

மகாவீரனுன இராவணனுடைய கைகளால் அடிகள் பல பட்டுள்ளமையால் இரத்தங்கள் சிந்திவிழ சுக்கிரீவன் உந்திவந்து பணிந்தான். அடல் புரிந்த நிலையை உடலின் குருதி உணர்த்தியது.

விலை மதிக்கமுடியாத அரிய மகுடமணிகளை எதிரியினுடைய முடிகளிலிருந்து பறித்துக் கொண்டு வந்து இராமன் பாதங்களில் வீரகாணிக்கையாக வைத்து வணங்கி எழுந்தாலும் தான்செய்தபிழையை நினைந்து உள்ளம் நாணி அவன் ஒதுங்கி நின்றான்.

தொழுது அயல் நாணி நின்றான்.

என்றதனால் அவனது வெட்கமும் துக்கமும் வெளியறிய வந்தன.

இராவணனுடைய தலைகளைத் திருகிக் கொண்டு வரவில்லையே! என்று அவன் மறுகி நாணி மயங்கி யிருக்கிறான்.

பெரிய வீரன்போல் எதிரிமேல் பாய்ந்து போய் உறுதியாக ஒருகாரியமும் செய்யாமல் வறிதே மீண்டது நெடிய அவமானமாய் நீண்டு நின்றது.

மானத்தால் புழுங்கித் தலை குனிந்து நாணிநின்ற நண்பனை ஆரத்தழுவி அன்புமீக் கூர்ந்து இராமன் அறிவுரைகள் கூறினன்.

சோர்கின்ற அருவிக் கண்ணன்.

என்றதனால் இராமன் அதுபொழுது உருகி நின்ற உருக்கம் உணரலாகும். இழந்து போனதாகத் துன்பம் உழந்து நின்றவன் துணைவனைக்காணவே ஆனந்தம் மீதூர்ந்து அழுதிருக்கிருன். அன்பும் இன்பமும் கலந்த அந்த அரிய அழுகை பெரிய நீர்மையோடு இங்கே நம் விழி தெரிய வந்தது.

வெளியே நயனங்கள் நீரைச் சொரிந்தது அந்த உள்ளத்தின் உழுவலன்பையும் விழுமிய பண்பையும் விளக்கி நின்றது.

அன்பின் பரவசமாய் அழுது நின்றவன் நண்பனைத்தழுவிப் பண்புபடிந்த பல நீதிநலங்களை உரிமையோடு ஓதி யருளினன்.

வீரன் விளம்பியது.

"அருந்திறனுடையோய்! உன்னுடைய செயல் எவ்வளவு யொடுந்துயரங்களை விளைக்க நேர்ந்தது! யாதொன்றையும் என்

ணமல் துடுக்குத்தனமாய்ச் செய்த துட்டச்செயல் இது; இன்று உன்னை இராவணன் கொன்றிருந்தால்என்கதி என்னும்? இதனைச் சிறிது சிந்தனை செய்துபார்! உன்னை இழந்தபின் வீரவெறி மண்டி அரக்கர்குலத்தை அடியோடு கருவறுத்து நான் பெரிய வெற்றி பெற்றாலும் அது கொடிய தோல்வியாகுமேயன்றி உரிய வென்றி யாகாதே; ஆண்மை என்பது எது? வீரம்ஆவது யாது? எவ்வழியும் நெறிமுறையுடையனாய் யாண்டும் பொறுமையோடு அடங்கியிருப்பதே பெரிய ஆண்மையாம். உண்மையான வீரப்பான்மையை உணர்ந்து கொள்ளாமல் புன்மையா யிழிந்து புலையாடி நன்மைகள் யாவும் நாசம் செய்ய நேர்ந்தாய்! நீ இறந்து பட்ட பின் அரக்கரை வென்று சீதையை மீட்டிக் கொண்டு திருவயோத்திக்குப் போய் நான் சுகமாய்வாழ்வேன் என்று எண்ணினையோ? அன்னே உன்மதிகேடு என்னே! நீ எதிரி கையில் இன்று இறந்திருந்தால் என்கையில் உள்ள வில்லை ஒல்லையில் வீசி எறிந்து விட்டு என் உயிரை மாய்த்துவிடுவேன்; நான் மாண்டால் என்தம்பி உடனே மாய்ந்துபடுவான்; எழுபது வெள்ளம் வானரங்களும் ஒருங்கே செத்து ஒழியும்; உலகம் முழுவதும் பெரிய இழவாம். இப்படிக் கொடிய ஒரு பேரிழவு நேரும்படி போரளவு தெரியாமல் புலைபுரிந்து போனையே! உன் போக்கை ஓரளவேனும் நீ உணர்ந்து பார்த்தால் உள்ளம் இரங்கி உருகி நாணுவாய்! இன்னும் சிறிது நேரம் நீ இங்கு வராமல் இருந்தால் என்ன விளைந்திருக்குமோ? என்று என் நெஞ்சம் அஞ்சுகிறது. பகைவன் மேலுள்ள படு கோபத்தால் மதிமறந்து போய்ப் பிழைபாடு செய்துள்ளாய்! விளையாட்டாய் வினை விளைய நேர்ந்தது; தெய்வம் காத்தருளியது'' என இவ்வாறு இவ்வீரமூர்த்தி இடித்து அறிவுறுத்தவே சுக்கிரீவன் நாணி நொந்து அடியில் விழுந்து நெடிது தொழுதான்.

பெருமையும் வண்மைதானும்
பேரெழில் ஆண்மைதானும்
ஒருமையின் உணர நோக்கின்
பொறையினது ஊற்றம்.

பொறுமையைப் பேணி ஒழுகுவதே பெருமை; அதுவே ஆண்மை; அதுவே வண்மை; எல்லா மேன்மைகளும் அதில்

அடங்கியுள்ளன என்று பொறையுடைமையின் மகிமையை இக் குலமகன் இங்ஙனம் தலைமையாக உணர்த்தி யிருக்கிறான்.

உள்ளத்தை அடக்கிப் பொறுத்து நிற்பது அரிய செயல். கோபத்துக்கு அடிமையாய்க் கொதித்துப் போவது எளிய நிலையாம். அந்தஎள்ளலில் இழிந்தாய்என இவ்வள்ளல்மொழிந்தான்.

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க---வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு (நன்னெறி,8)

சினத்தை அடக்கிப் பொறுத்து நிற்பவனே அரிய பெரிய மனிதன்: அதன் வசமாய் இழிந்து போவது சிறுமையே யாம் என இது குறித்துள்ள நிலைமையைக் கூர்ந்து நோக்குக.

கரையை உடைத்து வெள்ளம் போய் விடின் நீர் இன்றி வறுமை யடைந்திருக்கும்: பொறையை உடைத்து உள்ளம் போய் விடின் நீர்மை குன்றி நிலைமைதளர்ந்து சிறுமை செறிந்து நிற்கும் என்க. செறிவு நிலை அறிவால் அறிய வுரியது.

கரையை உயர்த்தி வெள்ளத்தைக் காப்பதுபோல் பொறையை உயர்த்தி உள்ளத்தைக் காப்பவனிடம் எல்லா மகிமைகளும் வெள்ளம் போல் பெருகி நிற்கின்றன.

காதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. (குறள்,130)

சினத்தை மடக்கி மனத்தை அடக்கி நிற்பவனைத் தரும தேவதை விரும்பி அடையும் என இது உணர்த்தியிருத்தலால் பொறுமையோடு அடங்கியுள்ளவன் எவ்வளவு பெரிய புண்ணிய சீலன்! என்பதை எளிதே அறிந்து கொள்ளலாம்.

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். (குறள்,154)

நிறைந்த மேன்மை தன்னிடம் நிலைத்திருக்க வேண்டின் பொறுமையை அவன் போற்றி ஒழுக வேண்டும் எனத் தேவர் இங்ஙனம் போதித்திருக்கிறார். சிறந்த பெருந்தன்மை நிறைந்த பொறுமையில் உறைந்திருத்தலால் அதனைப் புரந்து வருபவர் ஆன்றோர் சான்றோர் என வான்தோய் புகழோடு விளங்கி நிற்

கின்ருர். சித்தசாந்தியும் தருமமும் அதில் விளைந்து வருகின்றன.

உள்ளம் பொறையில் ஒழுகின் உயரின்ப
வெள்ளம் பெருகி வரும்.

இத்தகைய பொறுமையை இழந்து போய்ச் சிறுமையை விளைத்தாயே! என்று இப்பெரியவன் உரியவனை நோக்கி மறுகியிருக்கிருன். உரைகள் உணர்வொளிகளை வீசியுள்ளன.

பொறுத்து நிற்பதே ஒருவனுக்கு அழகும் ஆண்மையும் தரும் என்பார் பொறையினது ஊற்றம் பேரெழில் ஆண்மை என்ருர். ஊற்றம் = உறுதி நிலை.

இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்---எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. (நலடியார்,65)

உயர்ந்த அடக்கம், சிறந்த கொடை, மேலான பொறுமைகளுக்கு இது விளக்கம் குறித்துள்ளது. வெல்ல வல்ல வீரன் பொறுத்திருப்பின் பொறுமைகளுள் அது தலைமையானபொறுமையாம்; அப் பொறையைப் போற்றி வருபவன் யாண்டும் நீண்ட புகழுடையனுய்ப் போற்றப் பெறுவான்.

சிறந்த ஆற்றல் இருந்தாலும் துடுக்காக எதையும் செய்யலாகாது; நெறியோடு பொறுத்திருக்க வேண்டும் என்று இவ் வீர மூர்த்தி போதித்தருளினன்,

இன்னவாறு உணர்வுநலங்களை உரைக்கவே சுக்கிரீவன் மறுகி இராமன் அடியில் விழுந்துதொழுது வணங்கி நின்று நேரே முகத்தைப் பார்க்க நாணிக் கீழே தலைகுனிந்து நிலத்தை நோக்கிப் பேச நேர்ந்தான்.

தழல் விழிக் கொலை வெஞ்சீயம் நிலனுற நோக்கிக் கூறும்.

சுக்கிரீவன் உருவையும் அவன் நின்று பேசிய நிலையையும் இங்ஙனம் எழுதிக் காட்டியிருக்கிருர். பகைவனைக் கொல்ல மூண்டு பாய்ந்து அல்லல்பலபுரிந்து அடலாண்மையோடு மீண்டு வந்துள்ளான் ஆதலால் கொலைவெம்சீயம் என அந்நிலை தெரியவுரைத்தார். வீரவெறி வீறுகொண்டு மாறி வந்துள்ளது.

இராமன் திருமுகத்தைக் காண நாணித் தரையைப் பார்த்துப் பேசியது மனத்திலுள்ள குறையைக் காட்டி நின்றது.

ஆண்டவனுடைய அனுமதியின்றி அயலே மூண்டு பாய்ந்தவன் பகைவனைக் கொன்று வீரவெற்றியோடு மீளாமல் வெறுங்கை யனாய் வந்தேனே என்று வெட்கி நொந்துள்ளான்.

சுக்கிரீவன் உரைத்தது.

யாரும் செய்யமுடியாத அரிய காரியத்தை வானரவேந்தன் செய்திருந்தும் யாதும் செய்யாமல் இழிந்து வந்ததாக மனம் உடைந்து மானம் மீதூர்ந்து பேசியிருக்கிறான். வார்த்தைகள் அவனுடைய உள்ளத்தின் வருத்தத்தை வடித்துக் காட்டியுள்ளன. அயலே வருகின்ற பாசுரங்களில் அவன் பேசியுள்ள மொழிகள் ஓசைசெய்து ஒளிர்கின்றன.

காட்டிலே கழுகின்வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்;
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்;
கேட்டிலேன் இன்று கண்டும் கிளிமொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள்பத்தும் கொணர்ந்திலேன்;
[வெறுங்கை வந்தேன். (1)

வன்பகை நிற்க எங்கள் வானரத் தொழிலுக்கு ஏற்ற
புன்பகை காட்டும் யானோ புகழ்ப்பகைக்கு ஒருவன்போலாம்;
என்பகை தீர்த்துஎன் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்குத் தந்தேன் உயிர்சுமந்து உழலா நின்றேன்.

செம்புக்கும் சிவந்த செங்கண் திசைநிலைக் களிற்றின்சீற்றக்
கொம்புக்கும்குறைந்ததுண்டேஎன்னுடைக்குரக்குப்புன்தோள்
அம்புக்கு முன்னம் சென்றுன் அரும்பகை முடிப்பல் என்று
வெம்புற்ற மனமும் யானும் தீதின்றி மீள வந்தேன். (3)

நூல்வலி காட்டும் சிந்தை நும்பெருந் தூதன் வெம்போர்
வேல்வலி காட்டி னார்க்கும் வில்வலி காட்டி னார்க்கும்
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்குமற்றுஎன்
கால்வலி காட்டிப் போந்தேன் கைவலிக்கு அவதியுண்டோ? (4)

சுக்கிரீவன் இவ்வாறு உள்ளம் நொந்து உரையாடியுள்ளான். உரைகளுள் உணர்ச்சி நிலைகள் ஓங்கி நிற்கின்றன. தன்னுடைய ஆண்டவனுக்குத் தான் யாதொரு உதவியும் செய்யாமல் அவலமாய் வரநேர்ந்ததே! என்று கவலை மீதூர்ந்து பேசியிருத்தலால் அவனது உள்ளன்பும் உறுதிநிலையும் நன்கு உணர வந்தன. கடமை யுணர்ச்சி உள்ளத்தைக் கவர்ந்து நிற்கிறது.

முன்பு உதவி புரிந்த பலரையும் எடுத்துக் காட்டித் தனது நிலையினை இகழ்ந்து நெஞ்சம் நொந்து அஞ்சன வண்ணன் எதிரே அலமந்து நின்று பலபல புலம்பி அவன் பரிதபித்துள்ளான்.

## சடாயு செய்தது.

சடாயுவின் வீரப்பிரதாபத்தையும் பேருதவியையும் சுக்கிரீவன் இங்கே வியந்து புகழ்ந்திருக்கிருன். சீதையைக் கவர்ந்து கொண்டு இராவணன் இலங்கையை நோக்கி வரும்பொழுது இடையே பாய்ந்து எதிர்த்து அவனைப் படாதபாடுகள் படுத்தி முடிகளைப்பறித்து வீசி வில்லை ஒடித்து எறிந்து அல்லல் பல இழைத்து முடிவில் ஓய்ந்து வீழ்ந்தான்; வீழ்ந்தும் பிராட்டியை மீட்ட வில்லையே! என்று பெருந்துயருழந்து இராமன் வரும் வரையும் உயிரைத் தாங்கி யிருந்து வந்தபின் நேர்ந்த நிலைகளைத் தேர்ந்து கொள்ள வுரைத்து அவ் வீரன் மாய்ந்து போனன். முதிய வயதினனை அந்தப் பெரியவன் செய்த பேராண்மைத் திறங்களில் ஓரளவேனும் செய்யாமல் வீணே திரும்பி வந்திருக்கிறேன் என நாணி நொந்து பேசினன்.

கழுகின் வேந்தன்எனச் சடாயுவை விழுமிய அரசமாட்சியில் இங்கே விழைந்து குறித்தது அவனது வீர மேன்மைகளை நினைந்து. அரியன செய்துள்ளமையால் பெரிய மகிமையோடு கூறினன்.

ஒரு பத்தினியைப் பாதுகாக்கும்பொருட்டுத் தன் உயிரையும் உகுத்து நின்ற உத்தமவீரன் ஆதலால் உலகம் உவந்து துதிக்க உயர்புகழோடு அவன் ஓங்கி யுள்ளான். பெரியவுடையார் என்று திருமால் சமயத்தவர் அவனை உரிமையோடு பாராட்டி வருகின்ருர். அந்தக் கழுகின் வேந்தன் இராமனுக்குச் செய்துள்ள அன்புரிமையை எண்ணி வானரவேந்தன் ஈண்டு உருகி யிருக்கிருன். அவன் பாய்ந்து பொருது மாய்ந்து போனது போல் நான் மாண்டு போகாமல் மீண்டு வந்தேனே! என்று மானத்தால் இவ் வீரன் மறுகி யுள்ளமையை உரைகள் உணர்த்தி யுள்ளன.

## குகன் செய்தது.

கங்கைக் கரையில் இராமனைக் கண்டபோது குகன் உள்ளம் உருகி உழுவலன்புடையனுய்க் கெழுதகைமை கொண்டான். தேனும் பாலும் கொணர்ந்து உண்ணும்படி வேண்டினன். இரவு

முழுவதும் தன்படைகளோடு பாதுகாத்து நின்ருன். மறுநாள் காலையில் தோணியில் ஏறித் தென்திசை போக எழுந்த பொழுது இராமன் அடியில் விழுந்து தன் ஊரிலிருந்தே வனவாசகாலத்தைக் கழித்தருளுக; எல்லாவசதிகளும் உள்ளன; யாவரும் ஏவல் செய்து வருவோம்; தேவரீர் ஈண்டே என்பால் இருத்தல் வேண்டும் என்று அன்பால் உருகி ஆவலோடு வேண்டினன்.

தேனுள தினையுண்டால் தேவரும் நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கரனுள புனலாடக் கங்கையும் உள தன்ருே
நானுள தனையும்நீ இனிதிரு நட எம்பால். (1)

தோலுள துகில்போலும் சுவையுள தொடர்மஞ்சம்
போலுள பறண்வைகும் புரையுள கடிதோடும்
கானுள சிலைபூணும் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால். (2)

ஐயிரு பத்தோடு ஐந்தாயிரர் உளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குதும் அடியேம்எம் குடிலிடை ஒருநாள்நீ
வைகுதி எனின்மேலோர் வாழ்விலை பிறிதென்ருன். (3)

இன்னவாறு குகன் முன்னம் வேண்டியிருத்தலால் இராமன் பால் அவன் கொண்டுள்ள அன்புரிமையும் ஆர்வநிலையும் அறியலாகும். உள்ளப் பரிவு வெள்ளமாய்ப் பெருகி யுள்ளது.

வனவாசம்புரிந்து மீண்டு வருவதாக இந்த ஆண்டகை செல்ல நேர்ந்தபோது அவனும் தொடர்ந்து கூடவந்து ஊழியம் செய்வதாகக் கண்ணீர் ததும்பக் கரைந்து வேண்டினன். அவனுடைய அன்புரிமையை நினைந்து இக்கோமகன் உள்ளம் உருகி உடன் பிறந்த தம்பி என உரிமை பாராட்டிப் பெருமை கூறி அரிதின் நிறுத்திப் பரிவோடு வந்தான்.

"குகன்ஒடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகன்ஒடும் அறுவர் ஆனேம்"

என இராமன் திருவாயால் உரிமை பாராட்டிய அந்த அன்புநிலை சுக்கிரீவன் உள்ளத்தை இங்கே உருக்கி யுள்ளது. அந்தக் குகன் எங்கே? நான் எங்கே? ஆண்டவன்பால் அவன் செய்துள்ள பேரன்பும், பேருதவியும் பெருமகிமை யுடையன. நான் செய்தது யாதும் இல்லை என உள்ளம் நாணியிருக்கிருன்.

சடாயுவும், குகனும் இராமனிடமிருந்து யாதொரு உதவியும் பெறுமல் இயல்பாகவே பேரன்பு மண்டி அரிய பெரிய உதவி களை ஆவலோடு செய்திருக்கின்றனர். உயிரைவிடுத்தும், உள்ள த்தைக் கொடுத்தும் அவ் வுழுவலன்பாளர் கெழுதகைமையோடு செய்துள்ளன எழுமையும் உள்ளி உருக வுரியன.

கைம்மாறு கருதாத அவர் போலன்றி நான் இராமனிடம் பெற்றுள்ள உதவிகள் அளவிடலரியன. காட்டில் இழிந்து காலி யாய்த்திரிந்த என்னை நாட்டில் ஓர் அரசனுக்கி மணிமுடி சூட்டி மகிமை பெறவைத்த அந்த வீர மூர்த்திக்கு யாதொரு இதமும் செய்யாமல் வீணத்தனமாய் மீண்டு ஓடிவந்துள்ளேனே! நானும் உயிர் வைத்திருக்கவேண்டுமா? என்று உளைந்து மறுகியிருக்கிருன்.

என்பகை தீர்த்து என் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்குத் தந்தேன் உயிர்சுமந்து உழலா நின்றேன்.

இந்த வாய்மொழிகளால் சுக்கிரீவன் உள்ளத்தில் உறைந் துள்ள நன்றியறிவும் வென்றி வீரமும் கடமை யுணர்ச்சியும் கழி விரக்கமும் நம் விழிகள் எதிரே விளங்கி யுள்ளன.

தனக்கு இராமபிரான் அருள் புரிந்து செய்துள்ள உதவி நலங்களைக் கருதி யுருகியது மறுகிய நாணத்தோடு பெருகி வந் துள்ளது. பெற்ற பேறுகள் பேரின்பத்தை விளைத்திருக்கின்றன.

என் ஆவி அரசோடும் தந்தான் என்றது அவன் முன் இருந்த நிலைமையையும் இப்பொழுதுள்ள தலைமையையும் ஒருங்கே உணர்த்தி நின்றது.

அரிய உயிரை உதவிப் பெரிய மகிமை செய்தருளிய பேரரு ளாளனுக்கு ஓர் உதவியும் செய்யாமல் ஊனமடைந்துள்ளேனே என்று மான வீரன் மறுகி யிருக்கிருன்.

கிளிமொழி மாதராளை மீட்டிலேன்;
தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்; வெறுங்கை வந்தேன்.

சுக்கிரீவன் உள்ளத்தில் மூண்டுள்ள துயரத்தையும், கவலை யையும், அவமானத்தையும் இவ்வுரைகள் காட்டி யுள்ளன.

இராவணனை எவ்வளவு எளிதாக எண்ணி அவன் பாய்ந் திருக்கிருன் என்பதை உரைகள் தோறும் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம். வீர ஆவேசம் வேகமாய் வீறுகொண்டுள்ளது.

தனக்கு ஆவியை மீட்டித் தந்தவனுக்குத் தேவியை மீட்டித் தந்து செய்கடன் கழிக்க வில்லையே! என்று தேம்பி நொந்துள்ளான். மன வேதனை மான நீர்மையில் மருவி எழுந்தது.

உயர்ந்த போர்வீரன் ஆதலால் உரிய கடமையை நினைந்து உருகி மொழிந்தான். தனக்குப் பேருதவி புரிந்துள்ள பெருந் தகைக்கு ஒருதவியும் புரியவில்லையே என்று உள்ளம் பரிந்து நொந்துள்ளமையால் அவனுடைய உரிமை நிலையும் உறுதிப்பாடும் கருமவீரமும் கருத வந்தன.

உன்பகை உனக்குத் தந்தேன்;
உயிர்சுமந்து உழலா நின்றேன்.

இந்த உரையில் ஊடுருவியுள்ள பரிவுகளைக் கருதிக் காணுங்கள். தனக்கு நேர்ந்திருந்த கொடிய பகையைக் கடிந்து நீக்கி அரச திருவோடு ஆருயிரையும் அருளிய பேருபகாரிக்கு ஒருபகாரமும் செய்யமாட்டாமல் வீணே உயிர் வைத்திருக்கிறேனே! என்று நாணி வருந்தி நைந்து நொந்திருக்கிறான்.

உரிய கடமையைச் செய்யாமல் உயிர் வாழ்ந்திருப்பது பெரிய அவமானம் என்று மறுகியுள்ளான். உற்றவனுக்கு உதவாமல் வீணே பூமிக்குப் பாரமாயிருக்கிறேனே! எனப் பரிந்து நாணியுள்ளமையால் உயிர் சுமந்து உழலா நின்றேன் என்று துயருழந்து துடித்து நொந்தான்.

புதிய அரச வாழ்வை அடைந்தபின் தனது பிறவிக்குப் பயன் இராமனுக்கு ஊழியம் புரிவதே என்று உறுதி செய்திருந்தான். தனக்கு ஆவி தந்தவனுக்கு எவ்வழியும் ஏவல் புரிவதே திவ்விய தருமமாக் கருதியிருந்தவன் ஆதலால் அங்ஙனம் புரியவில்லையே! என்று மறுகி மயங்கி உருகி யுரையாடி நின்றான்.

கால்வலி காட்டி வந்தேன்;
கைவலிக்கு அவதி உண்டோ?

பெரிய போர் வீரன் போல் எதிரிமேல் மூண்டு பாய்ந்தேன்; ஒரு காரியமும் செய்யாமல் மீண்டு ஓடி வந்தேன் என இவ்வாறு உளைந்து பேசியுள்ளான். உள்ளப் பரிவும் துயரும் உரைகள் தோறும் வெளி வரலாயின. மானத் துடிப்பு இனத்தை எண்ணி மனத்தைக் கவர்ந்து மறுகச் செய்தது.

நும் தூதன் வால்வலி காட்டிப் போந்த.

என்றது அனுமான் போய் முன்பு இலங்கையில் செய்து மீண்ட ஆடலாண்மைகளைக் கருதி ஆர்வம் நீண்டு வந்தது.

சீதையைக் கண்டு சிந்தை தெளிவித்து அசோக வனத்தை அழித்துப் பல்லாயிரம் அரக்கர்களைக் கொன்று இலங்கை முழுவதையும் எரித்து வெற்றித் திருவோடு வீர கம்பீரமாய் மீண்டு வந்தான் ஆதலால் அந்த வரவின் உயர்வையும் தனது செலவின் இழிவையும் ஒருங்கே இணைத்து உள்ளம் நாணி உரைத்தான்.

அவன் வால்வலி காட்டி வந்தான்;
நான் கால்வலி காட்டி வந்தேன்.

என்ற இதில் சுக்கிரீவனுடைய மன வேதனைகளை எவ்வளவு காட்டியுள்ளான்! இராம தூதனை அந்த அதிசய வீரனை உள்ளம் உவந்து துதி செய்திருக்கிருன். அவன் அல்லவா உண்மையான உதவியாளன்; உறுதித் துணைவன்; என உவகை மீதூர்ந்து கருதியுள்ளான்.

வேல்வலி காட்டினார்க்கும் வில்வலி காட்டினார்க்கும்
வால்வலி காட்டிப் போந்தான்.

அரக்க வீரர்களோடு அனுமான் முன்னம் போராடி மீண்டுள்ளதை இது இங்கே நேரே காட்டியுள்ளது. வேல் வாள் வில் முதலிய கொடிய கொலைக்கருவிகளைக் கொண்டு கொல்ல மூண்டு வந்த பொல்லாத அரக்கர்கள் எல்லாரையும் கொன்று தொலைத்துத் தன் வாலில் வைத்த தீயை ஊரில் வைத்து எரித்து வென்றி வீருேடு மீண்டு வந்த வீர சூடாமணி என அத் தீரனை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து பேசியிருத்தலை நாம் உவந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிருேம். வீர வினைகள் வியப்பை விளைத்துள்ளன.

நூல்வலி காட்டும் சிந்தை என்றது அவனுடைய கலைஞான நிலைகளைக் கருதி எழுந்தது. பேரறிவும் பெரு வீரமும் ஒருருவாய் மருவியுள்ள உத்தமன் என்பது உய்த்துணர வந்தது.

உழுவலன்புடன் உற்ற துணைவனாய் நின்று வெற்றி வீறுகளை விளைத்து வந்தவன் என அவனை வியந்து பேசித் தன்னை உள்ளுற எள்ளி இகழ்ந்து இனைந்து ஏசினான்.

காலவலி காட்டி வந்தேன்; கைவலிக்கு எல்லை உண்டோ?

என்றது அல்லலுழந்து சொல்லிய படியாம்.

கையாலாகாத என்னையும் ஓர் உதவியாளனாக ஐயனே! நீ நினைத்துக் கொண்டாயே! என்று வெய்துயிர்த்து வெதும்பி நின்றான். உரைகள் உள்ளப் பரிவுகளை உணர்த்தி நின்றன.

இன்னவாறு சுக்கிரீவன் மறுகி யுரையாடியதை அருகே நின்று கேட்டு வந்த விபீடணன் பரிவு கூர்ந்து பேச நேர்ந்தான்.

இராவணன் மேல் பாய்ந்து போராடித் தகுந்த காரியம் யாதும் செய்யாமல் வெறுங்கையனாய் மீண்டு வந்ததாக வானர வேந்தன் நொந்து பேசியதைத் தடுத்து அவன் ஆற்றியுள்ள அருமைப் பாடுகளை வீடணன் எடுத்துக் கூறினான்.

அவனுடைய வாய்மொழிகள் அரிய பல உறுதி நிலைகளை விளக்கி எழுந்தன. கருதியுணர வுரியன; அயலே வருகின்றன.

வீடணன் விளம்பியது.

வாங்கிய மணிகள் அன்னான் தலைமிசை மௌலி மேலே
ஓங்கிய அல்லவோ மற்றினியப்பால் உயர்ந்த துண்டோ?
நீங்கவன் சிரத்தின் மேலும் உயிரினும் சீரிது அம்மா!
வீங்கிய புகழை எல்லாம் வேரோடும் வாங்கி விட்டாய்! (1)

பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின்
வார்கழற் காலி னாலே கல்ல வல்லவனை முன்னாத்
தார்கெழு மௌலி பத்தின் தனிமணி வலிதில் தந்த
வீரதை விடவல் லோற்கும் முடியுமோ? வேறும்உண்டோ? (2)

கருமணி கண்டத் தான்தன் சென்னியில் கறைவெண் திங்கள்
பருமணி வண்ணன் மார்பில் செம்மணி பறித்திட் டாலும்
தருமணி இமைக்கும் தோளாய்! தசமுகன் முடியில் தைத்த
திருமணி பறித்துத் தந்த வென்றியே சீரி தன்றோ? (3)

தொடிமணி இமைக்கும் தோளாய்! சொல்லினும் வேறுமுண்டோ?
வடிமணி வயிர ஒள்வாள் சிவன் வயின் வாங்கிக் கொண்டான்
முடிமணி பறித்திட்டாயோ இவனினி முடிக்கும் வென்றிக்கு
அடிமணி இட்டா யன்றே அரிக்குலத்து அரச! என்றான். (4)

வென்றிஎன் றென்றுமன்று வீரர்க்கு விளம்பத் தக்க
வென்றிஎன் றென்றுமன்று நானிலம் எயிற்றிற் கொண்ட

பன்றியன் றுகின் ஈதார் இயற்றுவார் பரிவின் என்ன
இன்றிது வென்றியே என்று இராமனும் இரங்கிச் சொன்னன்.

[மகுடப் பங்கப் படலம் 39-43]

சுக்கிரீவன் நொந்து பேசிய நிலைகளை எண்ணி விபீடணன் இங்கே உரையாடியுள்ளமையை நாம் ஓர்ந்து உணர்ந்து உவகை கூர்ந்து நிற்கிறோம். உரைகளில் உணர்ச்சிகள் பெருகி யுள்ளன.

இராவணனேடு நேரே பாய்ந்து போராடிப் பூரண வெற்றி பெருமல் மீண்டுவந்தேனே! என்று வானரவேந்தன் தன்னை இகழ்ந்து கூறிய வுரைகளைத் தகைந்து நீக்கி அவன் அரிய பெரிய வெற்றிபெற்றே வந்துள்ளான் என்று இலங்கைத் தம்பி வியந்து தேற்றி யிருக்கும் வித்தகம் உய்த்துணரத் தக்கது.

"இலங்கேசனுடைய பெயரைக் கேட்டால் எமனும் கலங்குவான். தேவர் யாவரும் ஏவல்புரிய மூவுலகங்களையும் ஆண்டு வருகிற ஆண்டகைமையாளன்; ஈசன் கைலையை எளிதில் எடுத்தவன்; அவனுடைய ஆணைவழியே யாவும் நடைபெறுகின்றன. பூமியைத் தாங்கியுள்ள ஆதி சேடனது முடிமணிகளைத் தனது காலிஞலேயே எற்றித் தகர்க்க வல்லவன். அந்த உக்கிர வீரனுடைய தலையில் சூடியிருந்த மகுட மணிகளைப் பறித்து வந்தது எவரும் துதி செய்யத் தக்க ஓர் அதிசய வெற்றியேயாம். அந்தத் தலைகளைத் திருகி நேரே கொலை செய்து வந்ததைக் காட்டிலும் கிரீடங்களைக் கவர்ந்து வந்தது அவனுக்குக் கொடிய அவமானத்தை விளைத்த படியாம். காலனும் காண அஞ்சுகிற அதிசய வீரனேடு நெஞ்சம் துணிந்து நேரே போராடி மீண்டு வந்திருப்பது யாண்டும் யாவரும் வியந்து போற்றவுரிய அற்புதமேயாம். சிவபெருமான் தலையில் சூடியுள்ள சந்திரனைப் பறித்து வந்தாலும் வரலாம்; திருமால் மார்பில் அணிந்துள்ள கவுத்துவ மணியை கவர்ந்து கொண்டாலும் கொள்ளலாம்; இராவணனுடைய மகுடமணியைப் பறித்து வருவது அவ்வளவு எளிதன்று; யாராலும் செய்ய முடியாத அதிசயமான காரியத்தை இன்று நீ துணிந்து செய்து வந்துள்ளாய்! இதை விட வீரமான வேலை யாதும் இல்லை; எவரும் வியந்து கொண்டாடத் தக்க பெரிய வெற்றியைப் பெற்று வந்தும் ஒன்றும் செய்ய வில்லையே! என்று உள்ளம் நொந்து நீ உரைப்பது எனக்கு

வியப்பாயுள்ளது. கோதண்ட வீரனை நமது ஆண்டவன் வீரப் போர் ஆற்றி இனி அடையப் போகும் வெற்றிக்கு மங்கலக் குறியாக இன்று நீ நாட்செய்து வந்தாய்! வென்றியாளனாய் மேன்மை எய்தி வந்துள்ள நீ உனது அதிசய ஆண்மையை உணராமல் அவலமாய்க் கவலையுறுவது தவறுடையதே'' என இவ்வாறு விபீடணன் சுக்கிரீவனை ஆற்றித் தேற்றி அருந்திற லாண்மையை விளக்கி யிருக்கிறான்.

இராவணனோடு நெடிது மல்லாடிக் கிரீடங்களைப் பறித்து வந்திருப்பது இலகுவான காரியம் அன்று; அரிய வெற்றியான பெரிய கீர்த்தியே என உரிய நிலைமைகளை உள்ளம் தெளியச் சொல்லி வீடணன் உணர்த்தியுள்ளது பல வுண்மைகளை விளக்கி யுள்ளது. எண்ணங்களின் நுண்மைகள் எதிர் தெரிய நின்றன.

இலங்கை வேந்தனை எளிதாக எண்ணி வானர வேந்தன் பேசியது இவனுக்கு வருத்தத்தை விளைத்தது. அந்த உள்ளப் பதைப்புகள் உரைகளில் வெளி வந்துள்ளன. மாறுபாடு மண்டி யிருந்தாலும் வீரப் பாட்டை வியந்து விழைந்து பேசி நின்றான். யாரும் அணுக முடியாத அருந்திறலாளனோடு நேர்ந்து நேரே போராடி மீண்டதே நெடிய அதிசயம் என நினைவுறுத்தினான்.

வீரதை விடை வலோற்கும் முடியுமோ?

சங்கார கருத்தாவான சிவபெருமானும் செய்ய முடியாத செயலை நீ இங்கே செய்து வந்திருக்கிறாய்! எனச் சுக்கிரீவனுக்கு வீடணன் இங்ஙனம் எடுத்துக் காட்டியிருக்கிறான்.

தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் என்று இராமன் எதிரே தளர்ந்து நொந்த அவனுக்கு எதிரியின் நிலைமையை நெஞ்சம் தெளிய விளக்கினான். இராவணனை மகுட பங்கம் செய்து வந்தி ருப்பது தேவதேவரும் செய்ய முடியாத அதிசய வென்றியாம் என அறிவுறுத்தினான்.

உக்கிர வீரமாய்ப் போராடி மீண்ட அந்த வீரப்பாடுகளை எல்லாம் ஒருங்கே திரட்டி வீரதை என ஒரு சொல்லால் விளக்கி யிருக்கும் வித்தகம் உய்த்துணர்வுடையதாய் உவகையை விளைத் துள்ளது. உரைக் குறிப்புகள் உயர்ந்த உறுதிகளை உணர்த்தின.

விசய விக்கிரமனாய் வந்துள்ள நீ விநயம் மிகவுடையனாய் நம் ஆண்டவனிடம் துளங்கி மொழிந்தாலும் உண்மையில்

உனது வெற்றித் திறல் வீரப் புகழோடு விளங்கியுள்ளது என அவன் உள்ளம் தேற இவன் உரைத்தருளினன்.

வீடணனுடைய இவ்வுரைகளைக் கேட்டு இராமனும் உவந்தான். சுக்கிரீவனை வியந்து பாராட்டினன். உலகம் முழுவதையும் தன்னுடைய கொம்பில் ஏந்திக் காத்த அந்தச் சுவேத வராகத்தின் ஆற்றலை இன்று நீ ஆற்றியருளினுய்! இது ஓர் அதிசய வெற்றியே! என்று அவனைத் தேற்றியருளினன்.

நண்பனை நயந்து பேணிப் பண்புரை ஆடியுள்ளதில் இன்ப நலங்கள் சுரந்துள்ளன. வீரத்திறல்களும் பண்பாடுகளும் காவியரசனைகளோடு கலந்து சீவிய ஒளிகளாய் மிளிர்கின்றன.

## அன்பின் விளைவு.

சுக்கிரீவன் துடுக்காய் இராவணன்மீது பாய்ந்து இங்கே போராடியிருப்பது மிகவும் அபாயம் உடையது. அன்புரிமையால் தன்னைமறந்து போய் ஆவேசமாய் அடலாண்மை செய்துள்ளான். தன்னை நண்பனுக அணைத்து அரிய உதவிகள் புரிந்துள்ள இராமனுக்கு அல்லல் பல விளைத்தவன் ஆகலால் அரக்கர்பதிமேல் இவ்வானரபதிக்கு அடங்காக் கோபம் ஆர்த்து மூண்டது. காரிய ஆலோசனைகளைக் கருதிப் பாராமல் வீரிய வேலைகளை விளைத்து வந்தான். புண்ணிய மூர்த்தியாகிய இராமன் எதிரே இப்பாவி நேரே வந்து முடிமன்னனுய்த் தலைநிமிர்ந்து நிற்க நேர்ந்தானே! என்னும் மானக்கொதிப்பு வானவீதியில் தாவச்செய்தது. ஆண்டவனுடைய தேவியைப் பறித்துப் போனவனது ஆவியைப்பறித்து வரவேண்டும் என்றே ஆங்காரத்தோடு தாவியிருக்கிருன். அவனுடைய உடல்வலி இவனது அடலாண்மையை மிஞ்சியிருந்தமையால் கருதியபடி செய்யமுடியாமல் கைக்கு வந்ததைக் கவர்ந்துவந்தான். நெடுநேரம் மல்லாடி முடிவில் எதிரியை மருடபங்கம் செய்து இவன் மீண்டு வந்து சேர்ந்தது அரிய ஆண்டகைமையாய் விளங்கி நின்றது.

"அதஹரிவர நாத: ப்ராப்ய ஸங்க்ராம கீர்த்திம்
நிசிசரபதிம் ஆஜள யோஜயித்வா ச்ரமேண
ககநமதி விசாலம் லங்கயித்வா அர்க்கஸூநு:
ஹரிவர கணமத்யே ராமபார்சவம் ஜகாம." (வால்மீகி)

"வானரத் தலைவனான சுக்கிரீவன் அரக்கர் பதியான இராவணனைப் போரில் அவமானப் படுத்தி விட்டு வீரப் புகழோடு மீண்டு ஆகாய மார்க்கமாய்த் தாவி வந்து வானர சேனைகளுக்கு இடையே இராமன் அருகே வணங்கி நின்றான்" என வால்மீகி முனிவரும் இவ் வீர விளைவை இவ்வாறு கூறியுள்ளார்.

அயலே பாய்ந்து யாரும் செய்ய முடியாத செயலைச் செய்து மீண்டு தாவி வந்துள்ள வித்தகம் சரித நிகழ்ச்சியில் வியப்பை விளைத்துள்ளமையால் மேலோர் அவனுடைய வீரப் பாட்டை வியந்து பேச நேர்ந்தனர். அயலே வருவது கருதிக் காண வுரியது.

"தெய்வ நாடகம்செய் வைதிகக் கூத்தன்
வரைபகப் பாயும் வானரக் குழாத்து ஒரு
கருமுக மந்தி கால்விசைத்து எழுந்து
பழுக்காய்க் கமுகின் விழுக்குலை பறித்துப்
படர்தரு தோற்றம் சுடரோன் செம்மல்
தெசமுகத்து ஒருவன் திரள்முடி பிடுங்கி
விசையிற் பாய்ந்தென விம்மிதம் விளைக்கும்
தடமலர்ப் படப்பைத் தண்டலைக் காசிக்
கடிநகர் புரக்கும் கண்ணுதற் செல்வன்
வேம்பும் கடுவும் தேம்பிழி ஆகச்
செஞ்செவி கைப்பயான் தெரித்த சின்மொழி
அஞ்செவி மடுத்தாங் களித்தனன் அதனால்
வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்கும்
தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப் புலவீர்!
மண்மகள் கவிகைத் தண்ணிழல் துஞ்சப்
புரவுபூண்டு இந்திர திருவொடும் பொலிந்து
முடிவினு முடியா முழுநலம் கொடுக்கும்
செந்நெறி வினவுதிர் ஆயின் இன்னிசைப்
பாத்தொடுத்து அடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க ஏத்துமின் நீரே." (காசிக்கலம்பகம் 101)

ஈசனுக்கு வாசமான ஒரு பலையில் பல வானரங்கள் குழுமியிருந்தன. அந்தக் குழாத்திலிருந்து தலைமையான ஓர் ஆண் குரங்கு கமுக மரத்தில் தாவிப் பாக்குக் குலைகளைப் பறித்து வந்தது; அவ்வரவு இராவணனுடைய முடிகளைப் பறித்துக் கொண்டு சுவேல மலைக்கு மீண்டு வந்த சுக்கிரீவனை ஒத்திருந்தது

என இதில் குறித்திருக்கும் காட்சியைக் கூர்ந்து நோக்குக.

சுடரோன் செம்மல் என்றது சூரியன் குமாரனான சுக்கிரீவனை.

புலவீர்! நும் புலமையைக் கொண்டு பரமனைத் துதியுங்கள்; அதனால் இந்திர திருவும் அந்தமில் இன்பமும் உண்டாம் எனப் போதித்துள்ள இப் பாசுரத்தில் இராவணனுடைய மகுட பங்க நிகழ்ச்சி மருவி வந்துள்ளது. இராம சரிதம் கவிகளுடைய உள்ளங்களைக் கவர்ந்து வந்திருக்கும் காட்சியைப் பல வழிகளினும் உவந்து கண்டு வியந்து வருகிறோம்.

அரிய விலையுடைய மணி மகுடங்களை இழந்து வறிய தலையனாய்க் கீழிறங்கி இராவணன் அரண்மனைக்குப் போயினான். மலைச் சிகரத்திலிருந்து அகன்று இராமன் தழைக் குடிசையை அடைந்தான். பொழுதும் அடைந்தது.

கதிர் மறைந்த காட்சி.

தன் மகன் ஆன சுக்கிரீவன் இராவணனை மகுட பங்கம் செய்து அவமானப் படுத்தி யிருத்தலால் தன் மீது அவன் சினந்து சீறவும் கூடும் என்று நினைந்து மறைந்தவன் போல் ஆதவன் கரந்து சென்றான்.

இரவு வந்தது. வானர சேனைகள் தங்கியுள்ள பாசறை எங்கணும் விளக்குகள் ஏற்றப்பட்டன. இராவணனுடைய மகுட மணிகள் இராமன் குடிலில் அன்று தீப சோதிகளாய் ஒளி வீசி நின்றன. அந்த மணிகளின் காட்சிகளையும் மாட்சிகளையும் இராமன் கருதி நோக்கி அரக்கர் பதியின் திருவையும் தேசையும் வியந்து மகிழ்ந்து தம்பியிடம் புகழ்ந்து மொழிந்தான்.

விழுமிய மணிமுடி யிழந்து தனது அழகிய மாளிகையை அடைந்த இராவணன் அவமானத்தால் புழுங்கி அவலத் துயரோடு கவலை கூர்ந்திருந்தான்.

என்றானும் இனைய தன்மை எய்தாத இலங்கை வேந்தன்
நின்றார்கள் தேவர் கண்டார் என்பதோர் நாணம் நீள
அன்றுய மகளிர் நோக்கம் ஆடவர் நோக்கம் ஆகப்
பொன்றாது பொன்றி னான் தன் புகழ்என இழிந்துபோனான்.

மானத்தால் அல்லற் பட்ட மருமத்தான் வதனம்எல்லாம்
கூனல்தாமரையில் தோன்ற வான்தொடும் கோயில் புக்கான்

பானத்தான் அல்லன்; தெய்வப் பாடலான் அல்லன்; ஆடல்
ஞானத்தான் அல்லன்; மெல்லென் சயனத்தான்; உரையும்
[தாரான். (2)

வையம் விற்றுலும் நேரா மணியிழந் திரங்க லாலும்
பையுயிர்த்து அயரும் பேழ்வாய்ப் பஃறலைப் பரப்பினுலும்
மெய்யனைத் திரையின் வேலை மென்மலர்ப் பள்ளியான்
ஐயனைப் பிரிந்து வைகும் அனந்தனே அரக்கர் வேந்தன். (3)

மணி மகுடம் இழந்து போன இராவணனைக் கவி இவ்வாறு வரைந்து காட்டியிருக்கிருர். என்றும் எவ்வழியும் அடையாத இழிபழி அவனுடைய உள்ளத்தை அழிவு செய்துள்ளது. தேவர்கள் எல்லாரையும் வென்று மூன்று உலகங்களையும் ஏக போகமாய் ஆண்டு வருகிற அதிசய வீரன் ஒரு குரங்கினுல் முடிமணியிழந்தது கொடிய அவமானமாய் நெடிது ஓங்கி நின்றது. இலங்கைமேல் படை எடுத்து வந்துள்ள வானர சேனைகளைக் காண வேண்டும் என்று அரிய பல ஆடம்பரங்களோடு இராச கம்பீரமாய் வந்தவன் பின்பு மீண்டு போகும்போது மாண்டு போனவன் போல் மறுகிப் போயுள்ளான்.

பொன்றுது பொன்றினுன் தன்
புகழ்என இழிந்து போனுன்.

அவனது நிலைமையை இங்ஙனம் விளக்கியிருக்கிருர்.

மானம் அழிந்து போனமையால் உயிர் இருந்தாலும் செத்த சவம் போல் ஆயினுன் ஆதலால் பொன்றுது பொன்றினுன் என்றுர். அழிவு நிலை விழி தெரிய வந்தது.

உல்லாச உற்சாகத்தோடு கோபுரச் சிகரத்தில் ஏறி நின்றுன்; பொல்லாத இழிவு நேர்ந்தது; அதனுல் உள்ளம் நாணிக் கீழே இறங்கிப் போயினுன். அப் போக்கை ஊன்றி உணர்ந்து கொள்ளுதற்கு இங்கே தோன்றியுள்ள உவமை உவகை நிலையமாய் ஓங்கியுள்ளது.

தன் புகழ் எனஇழிந்து போனுன் என்ற இது வியந்து சிந்திக்கவுரியது. உயிர் பிந்திப் போகவுளது; புகழ் முந்திப் போயது.

இராவணனுடைய கீர்த்தி வான் அளாவ ஓங்கி நின்றது. இராம பத்தினியைக் கவர்ந்து கொண்டு வந்ததிலிருந்து அந்த

ஒளி குன்றிப் பழி வளர்ந்தது. பிறன் மனையாளை விரும்பின் பகையும் பழியும் பாவமும் தொகையாக வந்து சேரும் என்னும் உண்மையை உலகம் அறிய இவன் வகையாய்க் காட்டி நின்றான்.

பழியும் பாவமும் கண்ணுக்குத் தெரியாமல் வளர்ந்திருக்கின்றன. பகை உலகமெல்லாம் தெரியும்படி எழுபது வெள்ளம் சேனைகளோடு நீண்டு வந்து குலத்தை அடியோடு அழிக்க மூண்டுள்ளது.

அந்த அழிவு நிலையில் இருக்கின்றவனைக் கவி ஈண்டு விழி தெரிய விளக்கியிருக்கிறார். கோபுரத்து உச்சிமேல் ஏறி நின்ற அவன் இலச்சையடைந்து கீழே இறங்கிப் போனது மிகவும் ஓங்கி உயர்ந்திருந்த அவனுடைய புகழ் தேய்ந்து இழிந்து மாய்ந்து போனது போல் இருந்தது.

இந்தக் குறிப்பு எவ்வளவு வியப்புடையது!

கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணர வேண்டும்.

முன்னம் தூதாய் வந்த வானரத்தால் இலங்கை எரிந்து அழிந்தது; இப்பொழுது பாய்ந்து பொருத வானர வேந்தனால் இலங்கை வேந்தன் புகழ் இழிந்து ஒழிந்தது.

இவ்வாறு பழியடைந்து போன இராவணன் உளம் மிக வுளைந்து மலரணையில் விழி துயிலாமல் மறுகிக் கிடந்தான்.

மானத்தால் ஊன்றப் பட்ட மருமத்தான்.

என்றது அவனுடைய உள்ளத்தில் ஊன்றியுள்ள அல்லல் அவமானங்களின் எல்லை தெரிய வந்தது. சூலையில் கூரிய வேல் பாய்ந்தது போல் நிலை தளர்ந்து நெஞ்சம் அழிந்துள்ளான்.

எதிரியின் சேனையைக் காண இராச கம்பீரமாய் வந்தவன் மணி முடியிழந்து பழி துயரங்களோடு மீண்டு வந்து மாண்டவன் போல் மயங்கி உயங்கி அமளியில் அயர்ந்து கிடந்தது பரிதாபமாயிருந்தது பழி வரவு அழிதுயரமாய் நின்றது.

## யுத்த ஆயத்தம்.

சுவேல மலைமேல் ஏறி நின்று இலங்கையைப் பார்த்துவிட்டுக் கீழிறங்கி வந்து தழைக் குடிசையில் தங்கியிருந்த இராமன் அன்று இரவே போருக்கு ஆயத்தம் செய்யும்படி

அனுமான் சுக்கிரீவன் முதலிய தலைவர்களோடு உசாவி உரைத்தான். சேனைத் தலைவர்கள் யாவரும் பெருமகிழ்ச்சியுடையராய் வீறு கொண்டு போர் மேல் எழுந்தனர்.

சுக்கிரீவனுடைய ஆணைப்படி யாவும் நடந்தன.

வான வீரர்கள் எல்லாரும் அதிசய உற்சாகத்தோடு ஆரவாரமாய் விரைந்தனர். நீலன் குமுதன் பதுமுகன் சதவலி பனசன் இடபன் வினதன் முதலிய சேனைத் தலைவர்கள் படைகளை அடைவுடன் வகுத்து அணிகளா நிறுத்தினர்.

## அணி வகுத்தது.

போராட நேர்ந்ததில் எங்கணும் பேராவல் பெருகிநின்றன. மாயா வல்லபங்களையுடைய அரக்கர் திரள்கள் மாய்ந்து ஒழியும்படி எவ்வழியும் பாய்ந்து பொர வேண்டும் என்று வானர வீரர்கள் இலங்காபுரியைப் புடை சூழ்ந்து யாண்டும் ஆய்ந்து வளைந்தனர். அணிவகுப்புகள் அதிசயங்களாய் விளங்கின.

பதினேழு வெள்ளம் வானரங்களோடு போய் மேலைத் திசை வாயிலை முற்றுகை செய்து அனுமான் அங்கே நிற்க நேர்ந்தான். அவனது நிலை எவ்வழியும் வெற்றிகளை ஓர்ந்துவந்தது.

அங்கதன் தென் திசை வாசலைத் தேர்ந்து கொண்டான். அவனிடம் பதினேழு வெள்ளம் படைகள் அடல் கொண்டு நின்றன. இருபது சேனைத் தலைவர்கள் உடனமர்ந்து நின்றனர்.

அந்த அளவுள்ள சேனைகளோடு போய்க் கீழைத் திசை வாயிலை முற்றுகை செய்து நீலன் காலன்போல் கதித்துநின்றான்.

பதினேழு வெள்ளம் சேனைகளைக் கைக்கொண்டு சுக்கிரீவன் வடதிசை வாயிலில் இராமன் ஏவலை எதிர்நோக்கி நின்றான்.

போர் புரிய மூண்டுள்ள படை வீரர்களுக்கு வேண்டிய அளவு கனிகாய்களைக் கொண்டு வந்து யாண்டும்கொடுக்கும்படி இரண்டு வெள்ளம் வானரங்கள் தனியே அமைந்து நின்றன.

நான்கு திசைகளையும் சுற்றி நோக்கி யாண்டும் ஆராய்ந்து நிலைமை நீர்மைகளை அடிக்கடி வந்து தன்பால் அறிவிக்கும்படி விபீடணனை நியமித்தருளி வடதிசை வாயில் அயலே வந்து விசய கோதண்டத்துடன் இராமன் வீர கம்பீரமாய் நின்றான்.

இலக்குவன் வில்லும் கையுமாய் அண்ணன் அருகே உரிமை மீதூர்ந்து ஊக்கி நின்றான். பொருதிறல்கள் பொங்கி நின்றன.

இந்த முற்றுகை விடிய ஐந்து நாழிகைக்கு முடிந்து நின்றது. தேவரும் அஞ்சி வணங்க அதிசய அழகோடு துதிகொண்டு இருந்த இலங்கை வானரப் படைகளால் சூழப்பட்டு அன்று ஊனம் அடைந்து நின்றது. உரிய தலைவன் கொடியவன் ஆனமையால் பெரிய மகிமைகள் வறிதே பிழைபட நேர்ந்தன.

## சார்த்தூலன் வந்தது.

பகலவன் புதல்வனால் பகலில் நேர்ந்த அவமானத்தால் உள்ளம் வருந்தி அமளியில் போய்ப் படுத்திருந்த இராவணன் பல பல எண்ணி நிலைமைகளையெல்லாம் நெடிது சிந்தித்துக் கண் உறங்காமல் கவன்று கிடந்தான். இடையாமத்தில் சார்த்தூலன் என்னும் தூதன் அரண்மனை வாசலை அடைந்தான்; அங்கே நின்ற காவலர் அவனுடைய வரவு நிலையை அறிந்து அரசனிடம் வந்து வணங்கியுரைத்தார். அவனை விரைந்து உள்ளே வரும்படி பணித்தான். அவன் புகுந்து தொழுது வணங்கி நின்றான். நிகழ்ந்துள்ளன யாவும் நேரே தெரிய நேர்ந்தன.

எதிரிகள் புரியும் செயல் முறைகளைத் தெளிவாக அறிந்து வரும்படி இரவில் அவனைத் தனியே விடுத்திருந்தான் ஆதலால் அவனுடைய வரவு இவனுக்குப் பெரிய உவகையை விளைத்து நின்றது. அரியன யாவும் அறிய அவாவினான்.

உற்று அறிந்த நிலைகளை எல்லாம் உரை என்று இக் கொற்றவன் அவ் ஒற்றனை நோக்கி உசாவினான். யாவும் தெரிய அவன் உரைத்தான். உரைகள் மறைகளை வெளியாக்கி வந்தன.

## தூதன் சொன்னது.

சார்த்தூலன் என்னும் அவன் அதிசயமான மாய விஞ்சைகளையுடையவன். எவ்வளவு காலம் உடனிருந்து பழகினாலும் அவனுடைய சாகச இரகசியங்களை யாரும் யாதும் அறிய முடியாது. அவ்வளவு மாயா சாலங்களில் வல்ல அவன் தெவ்வளவு தெரிந்து வல்லிருளில் வந்து இவ்வளவு உரிமையோடு தனது அரசனிடம் நிலைமைகளை நெஞ்சம் தெளிய மொழிந்தான்.

தாயினும் பழகினரும் தன்னிலை தெரிக்கலாகா
மாயைவல் உருவத்தான்.

என அவனுடைய சொரூப விரூபங்களைக் கவி நமக்கு இவ் வாறு வரைந்து காட்டியிருக்கிருர். அவன் கண்டு வந்து மன்னனிடம் கூறிய உரைகளை அயலே காண வருகின்ருேம்.

வீரிய! விதியின் எய்திப் பதினேழு வெள்ளத் தோடும்
மாருதி மேலை வாயில் உழிஞைமேல் வருவ தானன்;
ஆரியன் அமைந்த வெள்ளம் அத்தனை யோடும் நெற்றிச்
சூரியன் மைந்தன் தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னன். (1)

அன்றியும் பதினேழ் வெள்ளத் தரியொடும் அரசன் மைந்தன்
தென்திசை வாயில் செய்யும் செருவெலாம் செய்வ தானன்;
ஒன்றுபத் தாறுவெள்ளத் தரியொடும் துணைவ ரோடும்
நின்றனன் நீலன் என்பான் குணதிசை வாயில் நெற்றி. (2)

இம்பரின் இயைந்த காயும் கனியும்கொண்டு இரண்டு வெள்ளம்
வெம்புவெஞ் சேனைக் கெல்லாம் உணவுதந் துழல விட்டான்;
உம்பியை வாயில் தோறும் நிலைதெரிந்து உணரச் சொன்னன்
தம்பியும் தானும் நிற்ப தாயினன் சமைவீ தென்ருன். (3)
(அணி வகுப்புப் படலம் 5-7)

இலங்கையை இராமன் முற்றுகை செய்து நிற்கும் நிலையை நாம் இதில் உய்த்து நோக்கி உவந்து நிற்கின்ருேம். அரசன் மைந்தன் என்றது வாலியின் மகனை அங்கதனை. திக்கு நிலைகள் தெரிய வுரைத்தான். குண திசை=கிழக்கு. தெற்கே அங்கதன், கிழக்கே நீலன், மேற்கே அனுமான், வடக்கே சுக்கிரீவன் தலைமைச் சேனதிபதிகளாய் நிலவி நின்றுள்ளார்.

நான்கு திக்குகளிலும் தக்க தலைவர்கள் நின்று கொண்டு இலங்கையைச் சுற்றி முற்றுகை செய்து வானரப் படைகளை நிறுத்தியிருக்கின்றனர். போர் முறைகள் சீரிய நிலையில் நிலவின.

மாருதி உழிஞைமேல் வருவதானன்

என்றது போர்முறையோடு வீர கம்பீரமாய் அனுமான் அன்று நேரே வந்துள்ள நிலைமை தெரிய வந்தது. பகைவனுடைய மதிலை முற்றுகை செய்ய மூண்டு வருபவன் உழிஞை என்னும் பூவைச் சூடி வருவன் ஆதலால் வீர மாருதி அவ்வாறு செய்து வந்திருக்கிருன். மரபு நிலைகள் மருவி வந்தன.

"முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங்கு ஆர்எயில் கொளக் கருதின்று."

உழிஞைத்திணையின் இலக்கணத்தை இது உணர்த்தியுள்ளது.

"உழிஞை முடிபுனைந்து ஒன்னப்போர் மன்னர்
விழுமதில் வெல்களிறு பாயக் --- கழிமகிழ்வு
எய்தாரும் எய்தி இசைநுவலும் சீர்த்தியனே
கொய்தார மார்பினெம் கோ." (புறப்பொருள்)

ஒன்னார் மதிலைச் சின்னபின்னம் செய்து உள்ளே புகுவதே உழிஞையாம் என்பதை இதனால் உணர்ந்து கொள்ளலாம். பொரு துறைகளின் முறைகளின் படியே இராமனுடைய போர் வீரர்கள் இலங்கைமேல் நேரே போராட மூண்டுள்ளனர்.

## போர்த்துறை.

ஒருவரோடு ஒருவர் இகல் மீக்கொண்டு பகைமை மூண்ட பொழுது போர் மூளுகிறது. அவ்வாறு நேர்ந்து போராடும் செயல் வகைகளுக்குப் பெயர்கள் அமைந்திருக்கின்றன.

| | |
|---|---|
| வெட்சி | 1. |
| கரந்தை | 2. |
| வஞ்சி | 3. |
| காஞ்சி | 4. |
| நொச்சி. | 5. |
| உழிஞை | 6. |
| தும்பை | 7. |
| வாகை | 8. |

இந்த எட்டும் போர் முறைக்கு உரிய திணைகள் ஆம்.

பகைவர் நாட்டின் பசுக்களைக் கவர்தல்—வெட்சி.
அவ்வாறு கவர்ந்து செல்வதை மீட்டிக் கொள்ளுதல்—கரந்தை.
போர் மேல் நேரே மூண்டு செல்லல்—வஞ்சி.
அங்ஙனம் வந்தவரை எதிர்ந்து தடுத்தல்—காஞ்சி.
தன் மதில் அரணைக் காத்து நிற்றல்—நொச்சி.
பகைவன் ஊரை வளைந்து கொள்ளுதல்—உழிஞை.

சேனைகளோடு நேரே மூண்டு பொருதல்—தும்பை.
எதிரியை முற்றும் அழித்து வெற்றி பெறுதல்—வாகை.

போர்த் துறைகளும் முறைகளும் இவ்வாறு நெறியே அமைந்திருக்கின்றன. அனுமான் இலங்கை நகரின் மேற்குத் திக்கில் தன் படைகளோடு முற்றுகையிட்டு நின்றான்.

மாருதி மேலைவாயில் உழிஞை மேல் வருவதானான் என்று அவன் வந்து நின்ற நிலையை இலங்கை வேந்தனிடம் தூதன் இங்ஙனம் துலங்க வுரைத்தான்.

இராச தூதனை சார்த்தூலன் இராட்சசன். அவனுடைய சொந்தமான மொழியில் பேசினான். அதனை நம் கவியரசர் இந்த வாறு தம்மொழியில் செம்மையாக விளக்கியருளினார். நேர்ந்துள்ள பாத்திரங்களின் வாயிலாகத் தமிழ் நாட்டின் பழைய காலத்து நிலைகளையும், கலைகளையும், பண்பாடுகளையும் இடங்கள் தோறும் தெளிவுற விளக்கி இனிய சுவைகளை விளைத்து வருகிறார்.

## அரசன் புரிந்தது.

வானர சேனைகள் தன் ஊரை வளைந்து, முற்றுகை யிட்டுள்ளன என்று கேட்டதும் இராவணன் உருத்துச் சிரித்தான், மனிதரும் குரங்குகளும் ஒருங்கே மாண்டு மடிய மூண்டுசெய்த செயல் இது என்று இகழ்ச்சியோடு நகைத்து எள்ளி யுரைத்தான். "எனது நிலைமையை யாதும் உணராமல் மடமையாய்ப் போராட வந்துள்ள இந்தப் பதர்களை அடியோடு மடிய நூறி உடல்களைப் பிணமலைகளா அடுக்கி உதிர வெள்ளங்கள் பெருகி ஓடிக் கடலில் பாயும்படி நாளைச் செய்வேன்; வேளை விடியட்டும்; நீ போ" என்று தூதனை அனுப்பி விட்டு விரைந்து சபா மண்டபத்தை அடைந்து தானைத் தலைவர்களையும் மந்திரிகளையும் வரும்படி செய்து அந்தரங்களை உரைத்து ஆவதை உசாவினான்.

## கும்பன் குறித்தது.

கும்பன் என்னும் தளபதி அந்த இராச சபையில் எழுந்து நின்று ஆரவாரமாய்ப் பேசினான். "அரக்கர்கள் என்னும் பெயரைக் கேட்டாலே அமரர்கள் அஞ்சி நடுங்குகின்றனர்; அசுரர்கள் அயர்ந்து ஒடுங்குகின்றனர். மலைகளையும் பிளந்து எறியத் தக்க கொடிய கொலைக் கருவிகளையுடைய நம்மோடு யாதொரு

படைக் கலன்களும் இல்லாத காட்டுக் குரங்குகள் போராட வந்திருப்பதை எண்ணும் போதெல்லாம் எனக்குப் பெரிய சிரிப்பு வருகிறது. சக்கரதரனும் சூலபாணியும் நம்மோடு இகல் கொண்டு மூளாமல் இனியராய் நகல்கொண்டு நயந்துள்ளார்; காலபாசமும் நம்மை யாதும் செய்யாது; வாலும் காலுமாய் வெறுங்கையோடு வீணே வந்துள்ள இந்த ஈன வானரங்களைக் குறித்து நாம் பெரிதும் ஆலோசனை செய்ய நேர்ந்தது கொடிய அவமானமேயாம்; விடிந்ததும் இருந்த இடமும் தடந்தெரியாமல் குரங்குகளையெல்லாம் ஒருங்கே கொன்று தொலைத்து விடலாம்" என்று வென்றி வீறோடு கைகளைப் புடைத்து அவன் கடுத்துப் பேசினான். அவனுடைய பேச்சில் பெருமிதம் பெருகியது.

## மாலி தடுத்தது.

இவன் இராவணனுக்குத் தாய் மாமன். நல்ல புத்திசாலி. அரசுக்கு நேர்ந்துள்ள அல்லல் நிலைகளை நினைந்து உள்ளம் வருந்தியுள்ளவன். கும்பன் பேசியதைக் கேட்டதும் இவன் வெம்பி வெறுத்தான். ஆயுத பலம் யாதும் இல்லாத அபலைக் குரங்குகள் என்று அவன் இகழ்ந்து பேசியதையே அகழ்ந்து காட்டி இவன் அறிவு ஊட்டினான்: "இந்த இலங்கையில் புகுந்து அரக்கர் பலரைக் கொன்று எங்கும் நெருப்பை வைத்து ஊரை அடியோடு நாசப்படுத்திப் போன அந்த வானரம் எந்த ஆயுதத்தைக் கையில் கொண்டு வந்தது? சக்கர சூலங்களையுடைய உக்கிர தேவதைகளும் செய்ய முடியாத அழிவுகளை உல்லாச விநோதமாய் எளிதே அது செய்து போயுள்ளதே! அதனை உணர்ந்து பாராமல் உள்ளம் போனபடியெல்லாம் பேசுவது நல்லது அல்ல" என்று சொல்லி மேலும் சில புத்திமதிகளை உய்த்துணரும்படி இடித்துக் கூறினான்.

புக்குஊரி மடுத்திவ் வூரைப் பொடிசெய்து போயி னாற்குச்
சக்கரம் உண்டோ? கையில் தனுவுண்டோ? வாளிஉண்டோ?
இக்கிரி பத்தின் மௌலி இனமணி அடங்கக் கொண்ட
சுக்கிரீ வற்கும் உண்டோ சூலமும் வாளும் வேலும்? (1)

தொடைக்கலந்து இராமன் வாளி தோன்றுதல் முன்னர்த் [தோன்று
இடைக்கலம் வருதல் செய்யும் முலையினாள் தன்னை ஈந்து

படைக்கலம் உடைய நாம்அப் படையிலாப் படையை மீண்டி
அடைக்கலம்புகுவது அல்லால் இனிப்புகும்அரணும்உண்டோ?

மாலியினுடைய மன நலத்தையும் மதிமொழியையும் இவை உணர்த்தி யுள்ளன. வெறுங்கையோடு இரண்டு வானரங்கள் வந்து செய்து போன செயலை நினைந்து நமக்கு இனி உய்தியுண்டோ? என்று நெஞ்சம் நடுங்கி நிற்கிறோம். இப்படி எழுபது வெள்ளம் வானரங்கள் வந்து ஊரை வளைந்து நிற்கின்றன. அதிசய வீரனை இராமன் விசய கோதண்டத்துடன் வீறு கொண்டு நிற்கிறான். அவனுடைய அருமை மனைவியைக் கவர்ந்து கொண்டு வந்து அநியாயமாய்ச் சிறையில் வைத்திருக்கிறோம். குற்றமும் கொடுமையும் நம்பாலுள்ளன. கொடிய பிழையை வைத்துக் கொண்டு பிடிவாதமாய் நாம் போராட மூண்டு நிற்பது நம் வழிகளுக்கெல்லாம் நெடிய அழிவேயாம். அந்தப் பத்தினியை உரியவனிடம் விட்டு விடுவதே நல்லது. நமக்கு அரணான படைவலி யுளது என்று செருக்கி நின்றால் சீரழிவே நேரும்; நிகழ்ந்துள்ள அனுபவங்களை ஓரளவேனும் ஓர்ந்து உணர்ந்தால் சமாதானமே உய்யும்வழி என்று தேர்ந்து தெளிந்து கொள்ளலாம். எனக்குத் தெரிந்ததை உரிமையோடு உரைத்தேன்; கரும நிலைகளைக் கருதிச் செய்யுங்கள்'' என்று இவ்வாறு அவன் கூறி முடிக்கவே இராவணன் சீறி இகழ்ந்தான்.

மாலி மவுனமாய் அயல் எழுந்து போனான். அதன் பின் தலைமைச் சேனாதிபதியை நோக்கிப் போருக்கு விரைந்து ஆயத்தம் செய்யும்படி இலங்கை வேந்தன் பணித்தான்.

## எதிர்ப்பு நிலை.

பிரகத்தன், பெரும்பாக்கன், இந்திரசித்து என்னும் இந்த மூவரும் தனித்தனியே இருநூறு வெள்ளம் படைகளுக்குத் தலைவராய்க் கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று திக்குகளிலும் மூண்டு நிற்கும்படி உத்தரவு செய்தான். மகோதரன் இருநூறு வெள்ளம் படைகளோடு தன் பார்வையில் வடதிசை வாயிலை அடைந்து நிற்குமாறு குறித்தான். விருபாட்சன் என்பவனை இருநூறு வெள்ளம் படைகளுடன் ஊரைப் பாதுகாத்து நிற்கும்படி உரைத்தான். ஆயிரம் வெள்ளம் சேனைகளும் ஐந்து வகையாய்ப் பகுக்கப்பட்டு அடலாண்மை பூண்டு அமர் மேல் மூண்டு நின்

றன. விடியுமுன்னரே இவ்வாறு முடிவு செய்து எவ்வழியும் தெவ்வரைப் பொருது தொலைக்க உறுதி செய்து உக்கிர வீரமாய் மன்னன் உருத்து நின்றான்.

## பொழுது விடிந்தது.

ஆதவன் உதயம் ஆயினன்; அவ் வுதயம் அங்கு அதிசய ஆனந்தமாய்த் தோன்றியது. சூரிய குலத் தோன்றலாகிய இராமன் அன்று வீரப் போர் புரிந்து வெற்றி பெறுவான் என்பதை விழைந்து காண வந்தவன் போல் கதிரவன் கிழக்கே ஒளி வீசி எழுந்தான். என்றும் இராவணனுக்கு அஞ்சி வருபவன் அன்று அச்சம் நீங்கி உச்ச நிலையில் வந்தான். மேரு மலையைப் பாற்கடல் சூழ்ந்து வளைந்தது போல் இலங்காபுரியை வானரங்கள் சுற்றிஎவ்வழியும்வெற்றிவீரோடுமுற்றுகைசெய்து நின்றன.

## இராமன் எழுந்தது.

காலைக் கடனை முடித்து இராமன் தம்பியோடு வந்தான்; அந்த வரவைக் கண்டதும் வானர சேனைகள் உள்ளம் உவந்து "வள்ளல் வாழ்க" என்று ஆரவாரங்கள் செய்தன.

தந்திரம் இலங்கை மூதூர் மதிலினைத் தழுவிச் சூழி
அந்தரக் குலமீன் சிந்த அண்டமும் கிழிய ஆர்ப்பச்
செந்தனிச் சுடரோன் சேயும் தம்பியும் முன்பு செல்ல
இந்திரன் தொழுது வாழ்த்த இராமனும் எழுந்து சென்றான்.

சுக்கிரீவனும் இலக்குவனும் முன்னே செல்ல அதிகாலையில் இராமன் இலங்கையின் வடக்கு வாசலை நோக்கி நடந்து வந்திருக்கும் வீரக் காட்சியை இக் கவிப் படத்தில் கண்டு களித்து நிற்கிறோம். வீரமூர்த்தி வில்லோடு போர்மேல் புறப்பட்டு வந்தது சீர்மேல் வெளிப்பட்டு நின்றது.

இரவே ஊரை முற்றுகை செய்து சேனைகள் செருவேட்டு நிற்க உதயமானவுடன் தன் தம்பியோடு இம் மான வீரன் நடந்து வந்திருக்கிறான். அந்த வரவு நிலையில் அரிய பல தலைமைகள் மருவி மிளிர்கின்றன. வானர வேந்தன் வழி காட்டியாய் மரியாதையோடு முன்னே நடந்து போயுள்ளான். பின்னவனும் முன்னவனைச் சென்றது அமரில் அண்ணனுக்குச் செய்ய மூண்டுள்ள ஆண்மைக் கடமையை மேன்மையா விளக்கி அவனது பான்மையைத்துலக்கிநின்றது. தம்பிசெல்லநம்பிசென்றான்.

இந்திரன் தொழுது வாழ்த்த என்றது வந்துள்ளவனது அந்தரம் தெரிய வந்தது. இச் சுந்தரன் போர்மேல் எழுந்தது அரக்கர் குலம் பாழாய் அழிய அமரர்குலம் வாழ அமைந்தது ஆதலால் அமரர்கோன் தமரோடு வானில் நின்று இக் கோமகனை உழுவலன்போடு தொழுது வாழ்த்தியுள்ளான்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்"

என்றபடி அவன் வாழ்வு வாய்த்துள்ளமையை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். தசமுகனைத் தொலைத்து இடர் நீக்கியருள் என்று ஆதியில் தேவர் வேண்டத் தசரதன் மதலையாய் வந்துள்ளமையால் அவ்வுண்மை நிலை நுண்மையா ஈண்டு உணர வந்தது. உரிமையோடு வந்தவன் கருமம் நாடி நேர்ந்தான்.

இராமனும் என்றதில் உம்மை உயர் தனிச் சிறப்பை உணர்த்தி நின்றது. சேனைகள் முன்னமே எழுந்து போய் வளைந்துள்ளமையால் அதனையும் குறித்தது. தானைத் தலைவனாய் வானர வேந்தன் இம்மான வீரன் முன் வழிபுரிந்து வந்துள்ளது எழில் சுரந்து நின்றது. விழுமிய வீரப் பாடுகள் விழிதெரிய விளங்கின.

நகர வாசிகள் நிலை.

படைகள் இலங்கையைச் சூழ்ந்து வளைந்து நின்றமையை நகர வாசிகள் காலையில் அறிந்தனர். அச்சமும் கலக்கமும் எவ்வழியும் உச்ச நிலையில் ஓங்கி நின்றன. சூரியனும் நேரே வர அஞ்சுகிற வீரமா நகரம் குரங்குகளால் சூழப்பட்டுத் தாழ்வடைந்திருந்தது; அந்த அவல நிலை அதிசய வியப்பாய் நின்றது.

"இருசுடர் வழங்காப் பெருமூது இலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையின்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத் திறுத்தலின்
கடல்சூழ் அரணம் போன்ற
உடல்சின வேந்தன் முற்றிய ஊரே." (ஆசிரியமாலை)

வெவ்விய கடல் சூழ்ந்தது போல் எவ்வழியும் இராமனுடைய படைகள் சூழ்ந்து இலங்கையை முற்றுகை செய்து நின்றன என இது குறித்திருத்தலைக் கூர்ந்து நோக்குக. பழங்கால

நூல்கள் இராம சரிதத்தை உவந்து புகழ்ந்து வந்திருத்தலை இடங்கள் தோறும் உணர்ந்து மகிழ்ந்து வருகின்றோம்.

உத்தமமான சுத்த வீரனுடைய சரித்திரம் ஆதலால் உலகம் எவ்வழியும் இதனை விழைந்து வியந்து புகழ்ந்து மகிழ்ந்துள்ளது.

நாடிழந்து காடு புகுந்தும் தன் வீரப்பாட்டால் இராமன் பீடு பெற்றிருப்பது பெரு மகிமையாய் நீடியுள்ளது. பாட வல்லவர் யாவரும் இந்த ஆடவர் திலகனை ஆர்வம் மீதூர்ந்து பாட நேர்ந்தனர்.

மாமுது தாதை ஏவலின் ஊர்துறந்து
கானுறை வாழ்க்கையில் கலந்த இராமன்
மாஅ இரலை வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் தனது
சுற்றமும் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சுகறை படுத்த புன்மிடற்று இறைவன்
உலகுபொதி உருவமொடு தொகைஇத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்றம் எடுத்த மீளி
வன்தோள் ஆண்டகை யூரே யன்றே
சொன்முறை மறந்தனம் வாழி
வில்லும் உண்டவற்கு அந்நாள் ஆங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமும்
நீலக் குவளை நிறனும் பாழ்பட
இலங்கை அகழி மூன்றும் அரக்கியர்
கருங்கால் நெடுமழைக் கண்ணும் விளிம்பழிந்து
பெருகுநீர் உகுத்தன மாதோ அதுஅக்
குரங்கு தொழில் ஆண்ட இராமன்
அலங்குதட றெள்வாள் அகன்ற ஞான்றே.

(ஆசிரியமாலை)

இந்தப் பாசுரத்தில் பொதிந்துள்ள பொருள் நிலைகளைக் கருதிக் காணுங்கள். உள்ளம் ஊன்றி நோக்கிய அளவு கருத்துக்கள் தெளிவாய்த் தோன்றி வருகின்றன. ஆகவே குறிக்கோளோடு சூழ்ந்து ஆழ்ந்து நோக்குதல் தேர்ந்த கல்வியாம்.

"தன் தந்தையின் ஏவலைத் தலைக்கொண்டு அரசு முடி துறந்து இராமன் அடவியை அடைந்தான். மாயமான் புரிந்த தீய வஞ்சனையால் மனைவியைப் பிரிந்தான்; அல்லல் பல படிந்து அருந்துயருழந்தான்; அவ்வாறு எல்லையில்லாத இடர்கள் எய்தினும் உள்ளம் தளராமல் ஊக்கி நின்று பொல்லாத இராவணனுடைய இலங்கையை முற்றுகையிட்டு யாவரும் கலங்க அரக்கர் குலத்தை அழித்து அதிசய வெற்றி பெற்றான்" என இராமபிரானுடைய வீரப் பிரதாபத்தை இது துதி செய்துள்ளது.

ஊக்கம் தளராத மனிதன் எதையும் சாதிக்கலாம் என்பதை இராமன் வாழ்க்கையால் அறிந்து கொள்ளலாம் என இது அறிவுறுத்தியிருக்கிறது. இக் கோமகனுடைய அருந்திறலாண்மை யாண்டும் அதிசயமுடையது ஆதலால் யாவரும் வியந்து துதி செய்து வருகின்றார்.

" It is of an undaunted boldness " [Heroism]

"வீரனுடைய மன வுறுதி யாண்டும் தீரமான தைரியமுடையது" என்னும் இது இங்கே அறிய வுரியது. இத்தகைய சவுரிய பராக்கிரமம் இராமனிடம் எத்தகைய நிலையிலும் இனிதமைந்துள்ளது. வீரப்பாடு வெற்றி நிலையமாய் விளங்கி நின்றது.

இறைவன் குன்றம் எடுத்த மீளி என இராவணனை இதில் குறித்திருப்பது அவனுடைய அற்புத ஆற்றலை அறிந்து கொள்ள வந்தது.

வெள்ளி மலையை வேரோடு எடுத்த அந்தத் தீரனுடைய ஊரைக் குரங்குகளால் வளைத்து இவ் வீரவள்ளல் வீறுகொண்டு நின்றது வெற்றித் திருவாய் விளங்கி வியன் ஒளி வீசியது.

## காரியம் சூழ்ந்தது.

சூரியன் உதயமாகி நான்கு நாழிகை ஆகியும் உள்ளிருந்து யாதொரு எதிர்ப்பும் நேரவில்லை. வடதிசை வாயிலில் நின்று கொண்டு பகைப் படையின் போர் வரவை இராமன் எதிர்பார்த்தான். கருதியபடி யாதும் காணாமையால் அருகே நின்ற விபீடணனை நோக்கிச் சில உறுதி மொழிகள் கூறினான். அந்த உரையாடல்கள் அரிய பல பண்பாடுகளோடு மருவிப் பெரிய மேன்மைகள் பெருகி வந்துள்ளன. அயலே வருகின்றன காண்க.

வள்ளலும் விரைவின் எய்தி வடதிசை வாயின் முற்றி
வெள்ளம்ஓர் ஏழு பத்துக் கணித்தவன் சேனை யோடும்
கள்ளனை வரவு நோக்கி நின்றனன் காண்கிலாதான்
ஒள்ளியது உணர்ந்தேன் என்ன வீடணற்கு உரைப்பதானான்.

தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதியோ என்று உணர்த்தவே மறுக்கு மாயின்
காதுதல் கடன்என்று உள்ளம் கருதியது அறனும் அஃதே
நீதியும் அஃதே என்றான் கருணையின் நிலையம் அன்னான். (2)

(அங்கதன் தூதுப் படலம்)

இந்தக் கவியின் சுவைகளைக் கருதி நுகர்பவர் உறுதி நலங்கள் பல உணர்ந்து கொள்ளுவர். கொடிய பகைவனுடைய கோட்டை வாசலைப் படைகளோடு அடைந்தும் விரைந்து போராட மூளாமல் அமைதியாயிருந்து கொண்டு உரிய துணைவர்களுடன் காரிய ஆலோசனைகளை இராமன் கருதி நிற்பது சீரிய நீர்மையாய்ச் சிறந்து வீரிய ஒளிகளை வீசி மிளிர்கிறது.

ஈண்டு இராமனை வள்ளல் என்றது உள்ளி யுணர வுரியது.

தேவர்களுடைய இடர்களை நீக்கி மானத்தைக் காத்து வானுலக வாழ்வை அவர்க்கு வழங்க வந்துள்ளான் ஆதலால் அந்த உண்மை நிலையை ஓர்ந்து உணர்ந்து கொள்ள வள்ளல் என்றார்.

இலங்கா ராச்சியத்தை விபீடணனுக்குத் தருவதாக முன்னம் வாக்குக் கொடுத்தபடி கொடுக்க வந்திருக்கிறான் ஆதலால் வள்ளல் என வந்தான். தீயவர்களுடைய அல்லல்களை நீக்கி உலகிற்கு நல்ல உதவி செய்ய வந்துள்ளமையையும் வள்ளல் என்னும் சொல் உணர்த்தி நின்றது.

இராவணனை இங்கே கள்ளன் என்றது சீதையைக் கரவாய்த் திருடி வந்த அந்தத் திருட்டுத் தொழிலும் தீமையும் தெரிய. அரிய பொருளைத் திருடிப் போன அத் திருடனைத் தேடி வந்து உரியவன் தண்டிக்க மூண்டுள்ளான். அந்த உண்மை நிலை உள்ளம் தெளிய வந்தது.

கள்ளனை வரவு நோக்கி வள்ளல் நின்றனன்.

என்றது இருவர் நிலையும் ஒருங்கே ஓர்ந்து உணர்ந்து கொள்ள.

உள்ளம் தீயனாய்ப் பிறர்க்கு அல்லல் செய்து வருகிற

பொல்லாதவனையும், எல்லார்க்கும் இரங்கி நல்லது செய்து வருகிற நல்லவனையும் எதிர் எதிரா நேரே தெரிய நேர்ந்தோம்.

கள்ளன் என எள்ளியும், வள்ளல் என வாழ்த்தியும் உள்ள நிலைமைகளை உலகம் அறிய இங்கே நன்கு உணர்த்தியுள்ளார்.

படைச் செருக்கு உடையவன் ஆதலால் விரைந்து வீறோடு இலங்கை வேந்தன் போருக்கு மூண்டு வெளியே வருவான் என்று இராமன் எதிர்பார்த்து நின்றமை வரவு நோக்கி என்றதனால் தெரிய வந்தது.

எதிரியைப் போரில் நேரே காணலாம் என்று நெடுநேரம் எதிர்நோக்கிக் காத்திருந்தான்; அவன் வர வில்லை; ஆகவே காண்கிலாதான் என இராமன் அங்கே நின்ற நிலையைக் கவி இங்ஙனம் காட்டியருளினர்.

அரிய புண்ணிய சீலர்கள் பெரிதும் காணக் கருதி உருகி நிற்க வுரிய அந்தத் திவ்விய உருவன் பாவத் தொடர்புடையானைக் காண விரும்பி நெடுநேரம் காத்து நின்றது ஈண்டு ஊன்றி உணர வுரியது. அரிய வுண்மைகள் எளிதே அறிய வந்தன.

அத் தீயவனுடைய தீமையை நீக்கி நன்மையை ஆக்க இத் தூயவன் துணிந்து வந்திருக்கிறான்; அந்த வரவுக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் நேர்ந்து நேரே நடந்து வருகின்றன. மாயவன் காரியங்கள் மாயா சாலங்களாய் மருவி மிளிர்கின்றன. நேரே போரில் ஊக்கி நின்றவன் வேறே ஓர் உபாயத்தை நோக்கி உறுதி நாடினன்.

ஒள்ளியது = உயர்ந்த அறிவால் ஓர்ந்து தெளிந்தது.

தன்னையுடையானுக்குச் சிறந்த கீர்த்தியைத் தந்து நிரந்தரமாய் ஒளி புரிந்து வருவது ஒள்ளியது என வந்தது. அதனையுடையவன் ஒள்ளியன் என நின்றான்.

"வெள்ளிலை வேற்க ணாளைச் சீவகன் வீணை வென்றான்
ஒள்ளியன் என்று மாந்தர் உவாக்கடல் மெலிய ஆர்ப்பக்
கள்ளரால் புலியை வேறு காணிய காவல் மன்னன்
உள்ளகம் புழுங்கி மாதோ உரைத்தனன் மன்னர்க்கெல்லாம்"

(சீவக சிந்தாமணி, 741)

வீணு கானத்தில் வெற்றி பெற்றுள்ள சீவகனை ஒள்ளியன் என்று இதில் குறித்திருத்தல் கூர்ந்து சிந்திக்கத்தக்கது. இந்தக் கவியின் சாயலை நம் கவியோடு இணைத்து நோக்குக.

"ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்." (குறள், 714)

எனத் தேவர் இங்ஙனம் உரைத்திருத்தலால் ஒள்ளியதன் உயர்நிலை உணரலாகும். உள்ளம் உயர்ந்த நல்ல மதிமான்கள் என்றும் உவந்து கொண்டாடும்படி அன்று இராமன் உணர்ந்து கொண்டான் ஆதலால் அவ் வுணர்வுறுதி ஒள்ளியது எனப் புகழ்ந்து கொண்டாட வந்தது.

உடனே படைகளை ஏவிக் கலகத்தை மூட்டி ஊரை அழிக்காமல் பொறுமையோடு மருவி நின்று ஒரு தூதுவனை நேரே அனுப்பிப் பார்ப்போம் என்று இதமான சமாதானத்தையே பெருந்தன்மையுடன் இவ் வீர வள்ளல் கருதியுள்ளமையால் அதனை ஒள்ளியது என்று தெள்ளித் தெளித்து உலகம் அறிய உணர்த்தியருளினர்.

தான் கருதித் துணிந்ததைத் தன் மூப்பாகச் செய்து விடாமல் உரிய துணைவனிடம் உரிமையோடு உசாவி யிருக்கிறான்.

தனது அருமைத் தம்பியிடம் உரையாமல் வீடணனிடம் உரைக்க நேர்ந்தது விநயம் மிகவுடையது. மானச தத்துவங்கள் எவ்வழியும் இவ் வித்தகனிடம் உய்த்துணர வுள்ளன.

நண்புரிமையில் பண்பாடுகள் பெருகி வருகின்றன.

நீதிமுறை இராச தந்திரம் சொல்வன்மை முதலிய பல்வகை நீர்மைகளும் இவ் வில் வீரனிடம் நல்ல ஒளிகளை வீசி எல்லா வழிகளிலும் இனிது விளங்குகின்றன.

"வீடணு! இங்கிருந்து ஒரு தூதுவனை அனுப்பி இலங்கை வேந்தனுடைய மன நிலைகளை அறிய விரும்புகிறேன்; சீதையை நம்பால் விடுவான் ஆனல் அவனை நாம் உயிரோடு விட்டு விடுவோம்; இல்லையானல் கொன்று தொலைத்து வென்றி பெறுவோம்; இன்னவாறு என் உள்ளம் கருதுகின்றது; இது தருமமான நீதிமுறை ஆதலால் இப்படிச் செய்வதே நல்லது என்று தோன்றுகின்றது; உன் கருத்து என்ன?". என இவ்வண்ணம் இக் கோமகன் வீடணன்பால் விநயமாய் வினவியுள்ளான்.

அமர் மூண்ட அமையமும் அமைதியையே நாடி அருள் நீர்மை புரிந்துள்ளமையால் இவனுடைய உயர்ந்த பெருந்தன்மையும் கனிந்த சீவ காருணியமும் உணர வந்தன.

கருணையின் நிலையம்.

எனப் பொருள் பொதிந்த சொல்லால் இராமனை இங்ஙனம் புகழ்ந்து குறித்துள்ளார். அருள், கருணை, கிருபை என்னும் பெயர்கள் ஒரு பொருளையே உணர்த்தி வரினும் கருணை உயர்ந்த குறிக்கோளுடையது.

எதையும் சிந்தியாமல் எவ்வுயிர்க்கும் எவ்வழியும் இரங்கி அருளுவது அருள் என வந்தது. கருதியுணர்ந்து உள்ளம் உருகி உதவுவது கருணை என நேர்ந்தது. அரக்கர் குலம் அநியாயமாய் அழிந்து ஒழியாதபடி அளி மீதூர்ந்து ஆதரவு புரிந்துள்ளான் ஆதலால் கருணையின் நிலையம் என இவ் வென்றி வீரன் இங்கே நன்கு விளங்கி நின்றான்.

நிலையம் = நிலைத்திருக்கும் இடம்.

கருணை இயல்பாகவே உவந்து தங்கியிருக்கும் கோயில் என இராமனை இங்கே உள்ளக் கண்ணால் நோக்கி உருகித் தொழுகின்றோம். அரிய நீர்மை பெரிய சீர்மையாய் நின்றது.

கருணை செய்ய வேண்டும் என்று இவன் பழகிக் கொண்டதன்று; அந்த இனிய நீர்மையே தனியுரிமையாய் வந்து பெருகியுள்ள நிலையமாய் இப் பேராளன் மருவியிருக்கிறான். கருணாகரன் என வட மொழியாளர் இவனை வாழ்த்தி வருகின்றார்.

தருமம் சத்தியம் கருணை நீதி முதலிய உத்தம நீர்மைகள் இச் சுத்த வீரனிடம் பெருகியுள்ளன. சமையம் நேரும் போது அந்தத் தன்மைகள் வெளிப் படுகின்றன. குண சமுதாயங்கள் குலாவியுள்ளமையால் எவ்வழியும் இவன் மணம் பெற்று வருகிறான். வாய்மொழி மனநிலையை வெளிப்படுத்தி வருகிறது.

அறனும் அஃதே; நீதியும் அஃதே.

தான் கருதியதை உறுதி செய்தற்கு இராமன் இவ்வாறு கூறியருளினான். உரைகளில் உண்மை நிலைகள் ஒளி புரிகின்றன.

இவனுடைய எண்ணங்கள் தரும நீதிகளின் வண்ணங்க

ளாகவே வளர்ந்து வரும் என்பதை இதில் உணர்ந்து கொள்ளுகிறோம். புண்ணிய சீலன் என்பது புலனாய் நின்றது.

உத்தம நீதிமானா யிருந்தமையால் நீதிக்கு நிலையம் என இராமனை இன்றும் உலகம் துதித்து வருகிறது. இந்தத் தரும சீலனைச் சிந்தனை செய்து அரசர் பலர் அரிய மகிமைகளை அடைந்துள்ளனர்.

"Righteousness shall go before him, and shall set us in the way of his steps." (Bible)

"தரும நீதி இறைவனுக்கு முன்னே வந்து நம்மை அவனுடைய திருவடிகளில் செலுத்தும்" என்னும் இது இங்கே அறியவுரியது. ஆங்கிலேயருடைய இந்த வேத வாக்கியத்தின் பொருள் இராமனிடம் இசைந்துள்ளமையை நாம் ஊன்றி யுணர்ந்து உவகை யுறுகின்றோம்.

நான் கருதுகின்றேன் என்னமல் உள்ளம் கருதியது என்றான். அந்த உள்ளத்தின் செம்மையும் சீலமும் நன்மையும் தெரிய வந்தன. சீவ சாட்சியாய் நின்று காட்சி தருகின்றான்.

தரும சிந்தனைகளையுடைய அச் சித்தம் கருமநீர்மைகளை நடுவு நிலைமையோடு கருதி யருளியுள்ளமை காண வந்தது.

வேதனை விளையாதபடி ஒரு தூதனை ஏவிச் சோதனை செய்ய வேண்டும் என்று இவ் வீர வள்ளல் கூறவே வீடணன் வியந்து மகிழ்ந்தான். "ஆண்டவனே! அப்படிச் செய்வது நல்லதே" என்று அவன் உள்ளம் உவந்து வேண்டி நின்றான்.

அதன்பின் சுக்கிரீவனை இக் கோமகன் நோக்கினான். "இது உயர்ந்த இராச தருமம்; இதனை விரைந்து செய்ய வேண்டியதே" என்று அந்த வானர வேந்தனும் இசைந்தான். தம்பி இலக்குவன் மாத்திரம் விலக்குரையாடி விரைந்து மறுத்தான்.

இரக்கம் காட்டுவது இழுக்காம் என்று அவ் வீர இளவல் அன்று கூறிய மொழிகள் வீரிய ஒளிகளாய் வெளி எழுந்தன.

அரக்கர்கோன் அதனைக் கேட்டான் அழகிற்றே யாகுமஎன்றான்;
குரக்கினத் தலைவன் நின்றான் கொற்றவர்க்கு உற்றது என்றான்;
இரக்கமது இழுக்கம் என்றான் இளையவன் இனிநாம் அம்பு
துரக்குவது அல்லால் வேறோர் சொல்லுண்டோ? என்னச்சொன்னான்.

தேசியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்;
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்ருன்;
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான்; வழியலா வழிமேல் செல்வான். (2)

வாழியாய்! நின்னை அன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயம் செய்துன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்;
ஏழையாள் இரக்கம் நோக்கி ஒருதனி இகல்மேல் சென்ற
ஊழிகாண் கிற்கும் வாளுள் உந்தையை உயிர்பண் டுண்டான். (3)

அன்னவன் தனக்கு மாதை விடில் உயிர் அருளு வாயேல்
என்னுடை நாமம் நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே என்று வந்தடைந்தவற்கு வாயால்
சொன்னசொல் என்னும்? முன்னம் சூளுறவு என்னும்? தோன்ருல்!

அறந்தரு தவத்தை ஆயும் அறிவிஞல் அவற்றை முற்றும்
மறந்தனை எனினும் மற்றிவ் இலங்கையின் வளமை நோக்கி
இறந்திது போதல் தீதுஎன்று இரங்கினை எனினும் எண்ணின்
சிறந்தது போரே என்ருன் சேவகன் முறுவல் செய்தான். (5)

(அங்கதன் தூதுப் படலம் 3-7)

இலங்கை வேந்தன் மேல் இலக்குவன் கொண்டுள்ள கோபக் கொதிப்புகள் உரைகள் தோறும் உருத்து வந்துள்ளன. நிகழ்ச்சிகளையெல்லாம் நேரே எடுத்துக் காட்டி நிலைமைகளை நெஞ்சம் தெளிய விளக்கி யிருக்கிருன்.

“உடனே போரைத் தொடங்கிப் பகைவனை அழித்து ஒழிக்காமல் மேலும் காலதாமதம் செய்து கொண்டு தூதனை அனுப்ப வேண்டும் என்று கருதியது தவறு. அந்தத் தீயவன் எவ்வளவு தீமைகளைச் செய்திருக்கிருன்! அரசியைக் கவர்ந்து கொண்டு போய்ச் சிறையில் வைத்துள்ளான்; அமரர்களுக்குத் துயர்கள் விளைத்திருக்கிருன்; உலகிலுள்ள நல்லவர்கள் எல்லாருக்கும் அல்லல்கள் பல இழைத்தான்; உயிரினங்களைக் கொல்லாமல் கொன்ருன்; பேராசையால் உலகம் எல்லாம் வலிந்து கவர்ந்து நலிந்து ஆள நேர்ந்தான்; இந்திரனுடைய பதவியையும் பிடுங்கிக் கொண்டு அவனை ஏவலாளி ஆக்கி இழிவு படுத்திஞன்; எவ்வழியும் அநியாயங்களையே துணிந்து செய்தான்; வஞ்சமான மாய மானை ஏவி அன்று தேவியைப் பிரித்து உங்கள் ஆவியைத் துடிக்கச் செய்தான்; ஏழைப் பெண்ணைப் படுபாவி எடுத்துப் போகின்ருனே! என்று இரங்கி ஓடி வந்து இடையே தடுத்த தங்கள்

அருமைத் தந்தையைக் கொடுமையாக் கொன்று தொலைத்தான்; இந்தப் படுபாதகனிடம் கருணை காட்டலாமா? தூதனை ஏவிய தால் ஒரு வேளை அவன் சமாதானத்துக்கு வந்து விடுவான் ஆனல் எவ்வளவு காரியக் கேடுகள் நேரும்? அன்று வந்து அடைக்கலம் புகுந்த வீடணனுக்கு இலங்கை அரசு என்றும் உன்னுடையதே என்று தாங்கள் உரிமையோடு தந்த அந்த வாக்குப் பொய்த்துப் போகுமே! சத்தியசீலரான உங்கள் வாக்கு எவ்வழியும் யாதும் தவறியதில்லையே. இரக்கமற்ற அரக்கரைக் கருவறுத்து இனிமேல் யாதொரு இடரும் நேராமல் காத்தருளு வேன் என்று பண்டு தண்டகவாசிகளான தவசிகளுக்குக் கொடுத்த அந்த அபயமொழி என்னும்? பல உயிர்கள் மடிந்து படுமே; இந்த அழகிய இலங்கை வீணே அழிந்து போமே என்ற கருணையினல் மறுகிக் காலதாமதம் செய்கிறீர்கள் என்று கருதுகிறேன்; பாவிகளிடம் இரக்கம் காட்டுவது பாவமேயாம்; களைகளைக் களைந்து நீக்கி உழவன் பயிர்களைப் பேணுவது போல் தீயவர்களை அழித்து ஒழித்து நல்லவர்களைப் பேண உரிய நீங்கள் உங்கள் கடமையை மறந்து விடலாகாது. வில்லை ஒல்லையில் வளைத்து உள்ளே அம்பை ஏவ வேண்டுமேயன்றி வேறே ஆளைத் தூது விடுவது அறவே கூடாது; இவ் வேளையில் செய்ய வேண் டியதை விரைந்து புரிந்தருளுக" என்று இவ்வாறு இலக்குவன் அண்ணனிடம் உறுதி கூறி உரிமையுடன் வேண்டி நின்றான்.

அவனுடைய கருத்தும் குறிப்பும் காரிய விவேகமும் வீரிய வென்றிகளோடு விரைந்து சீரிய நிலையில் வந்திருக்கின்றன.

நாம் அம்பு துரக்குவது அல்லால் வேறு சொல் உண்டோ?

போரில் அந்த இளையவன் கொண்டுள்ள வீர ஆவேசம் இதில் விளங்கி நிற்கிறது. பகையைப் பழிதீர்க்க விழியூக்கியுளது.

வில்லால் வேலை செய்ய வேண்டுமேயன்றி சொல்லால் பேச வேண்டியதில்லை என்பான் வேறு சொல் உண்டோ? என் றான். கொல்ல வேண்டியவனிடத்தில் சொல்ல வேண்டியதில்லை.

நாம் என்று தன்மைப் பன்மையில் கூறினது தம்பி தமை யன் என்னும் இருவரும் உறுதியாகச் செய்ய வேண்டிய கரு மத்தைக் கருதியுணர. உரிமையுரை மருமமாய் வந்தது.

பகைவன் நமக்குக் கொடிய பழியை விளைத்துள்ளான்; அவனை அடியோடு அழித்து நம்மேல் வீழ்ந்துள்ள பழியைத் துடைத்துப் புகழோடு வெளியே வர வேண்டிய நாம் வேறு வழிகளில் விழி பரப்பி வீணே காலத்தைக் கடத்தி நிற்பது கருமத்தையும் தருமத்தையும் மறந்த படியாம் என்று தம் கடமையை வலியுறுத்தியுள்ளான்.

வாயால் முன்னம் சொன்ன சொல் என்னும்?

இந்தக் கேள்வி சிந்தனை செய்ய வந்தது.

"என் பெயரும் உலகும் உள்ள அளவும் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று இங்ஙனம் வீடணனுக்கு இராமன் முன்னம் * வாக்குத்தத்தம் செய்துள்ளமையைக் குறித்துக் காட்டி ஞாபகப் படுத்தினன்.

தூதனை அனுப்பிய காரணமாய் இராவணன் சமாதானமாய் இணங்கிவரின் இலங்கை ஆட்சி என்றும் அவனுக்கே உரியதாம்; ஆகவே முன்னம் அடைக்கலம் புகுந்தவனுக்குக் கொடுத்த வாக்குப் பொய்யாய் விடுமே! என்று மெய்யாகவே இரங்கியிருக்கிறுன். அண்ணனுடைய வாய்மொழி பிழையாய்ப் பொய்த்து விடுமே என்று தன் வாயால் சொல்லக் கூசி "சொன்ன சொல் என்னும்?" என்று உன்னி உணரும்படி எதிர் வினவினன். விநயமொழி வித்தக ஒளியாய் வந்தது.

ஆவதை எதிர் அறிந்து ஆற்ற வேண்டியதை விரைந்து செய்ய வேண்டும் என்று வேண்டியிருக்கிறுன்.

சிறந்தது போரே.

என்றதனுல் வேறு செய்வது எதுவும் இழிந்ததேயாம் எனத் தெளிந்து கொள்ள வந்தது. ஏகாரம் தேற்றம்.

அருமைத் தம்பி உரிமையோடு பேசிய உரைகளையெல்லாம் கேட்டு இராமன் உள்ளம் உவந்தான். முன்னம் சொன்ன இருவர் மொழிகளையும், பின்னவனுடைய மன நிலைகளையும் உன்னி வியந்தான். புன்னகை புரிந்தான்.

சேவகன் முறுவல் செய்தான்.

---

* இந் நூல் பக்கம் 3657, வரி 10 பார்க்க.

இளையவன் சொன்னதைக் கேட்டபொழுது இராமன் இப்படிப் புன்னகை செய்திருக்கிருன். இந்த முறுவலுக்குப் பொருள் என்ன? தம்பியின் உறுதியும் ஊக்கமும் கரும வீரங்களும் கருத வந்தன. தமக்கு இராவணன் இழைத்துள்ள கொடுமைகளையெல்லாம் குறித்துக் காட்டித் தம் தந்தையாகிய சடாயுவைக் கொன்ற அந்தக் கொலை பாதகனேடு சமாதானம் செய்யவே கூடாது; போரே நாம் செய்ய வுரியது; வேறே யாதும் கருதலாகாது; பொருது வெல்வதே நமது கருமமும் கடமையும் ஆம் என இன்னவாறு தம்பி கூறிய உறுதிமொழிகளைக் கேட்டுக் குறுமுறுவல் செய்து பெரு மகிழ்வோடு இந் நம்பி அவனை இனிது நோக்கி மறுமொழி கூறினன்.

அயர்த்திலன் முடிவும் அஃதே ஆயினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம்துறந்து அமைதல் நன்ரே?
புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை அறனும் அஃதே என்றிவை சமையச் சொன்னன்.

இளையவனை நோக்கி இராமன் இங்ஙனம் நயமா உரைத்திருக்கிருன். உரைக் குறிப்புகளில் உணர்வு நலன்கள் ஒளி புரிகின்றன. "நேர்ந்துள்ள பகைவன் மிகவும் தீயவன்; நமக்குக் கொடிய துயரங்களைச் செய்திருக்கிருன்; தூதனை அனுப்புதற்குரிய காரணம் யாதும் இல்லை; அனுப்பவே கூடாது; அனுப்பினல் பிழைகள் பல நேரும்; முன்னம் செய்து கொண்டுள்ள வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் பொருட்டு விரைந்து நாம் போர் புரியவே வேண்டும்; மறந்தும் வேறு கருதலாகாது" என்று நேரே தம்பி குறித்த குறிப்புகளுக்கெல்லாம் சுருக்கமா இரண்டு வார்த்தையில் பதில் உரைத்திருக்கிருன்.

அயர்த்திலன்; முடிவும் அஃதே.

இந்த வார்த்தையின் கனத்தைக் கருதிக் காணுங்கள். உரையாடுந்திறம் இக் குலமகனிடம் தலைமையாக அமைந்துளது.

"தம்பி! நீ பேசின யாவும் என் உள்ளத்தில் பதிந்துள்ளன; நான் யாதும் மறந்து விடவில்லை; பகையை வேரோடு களைந்து தொலைக்கவே கருதி யிருக்கிறேன்; நீ கூறியபடி போரே விரைந்து மூளும், வெற்றியும் பெறுவோம்" என்று இக் கொற்

றவன் உற்ற துணைவனுக்கு உறுதிமொழி கூறி உரிமை செய்துள்ளமை முடிவும் அஃதே என்பதில் முடிந்து நின்றது.

அயர்த்தல் = மறத்தல். அயர்ந்து போய்க் காரியக்கேடுகளை விளைத்து விடேன் என்பான் அயர்த்திலன் என்றான்.

உரிய கருமத்தை மறவாதது போலவே அரிய நீதி முறைகளையும் தழுவியே நாம் தொழில் செய்ய வேண்டும். அவ் வழியில் ஒழுக நேர்ந்தது வழுவாகத் தோன்றியுள்ளது; ஊன்றி யுணர்ந்து உண்மையை ஓர்ந்து கொள்ளுவதே நல்லது.

அறிஞர் ஆய்ந்த நயத்துறை.

என்றது மேலோர் வகுத்துள்ள இராச தருமங்களை.

பகைவர்பால் அரசர் செய்யவுரிய உபாயங்கள் நான்கு. அவை சாமம் பேதம் தானம் தண்டம் எனப்படும்.

இதமா இனிது கூறி இசைத்தல்—சாமம்.

உள்ளத்தைப் பேதித்து இணக்குதல்—பேதம்.

ஏதாவது கொடுத்து வசப்படுத்துதல்—தானம்.

நேரே மூண்டு அழித்து ஒழித்தல்—தண்டம்.

முரண் கொண்டு பகைவர் மூண்டு நின்றால் முன்னே கூறிய உபாயங்களையும் செய்து பார்த்து முடியாமல் நீண்டபோதுதான் இறுதியில் குறித்த தண்டத்தை உபயோகிக்க வேண்டும். முதலிலேயே போருக்கு மூண்டு யாரையும் அழிக்கலாகாது. இவ்வாறு தரும நீதிகள் கூறியுள்ளன. இம் முறைகளை நாம் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என இளையவன் உள்ளம் தெளிந்து கொள்ள இக் கோமகன் உரைத்தருளினான்.

நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ?

தம்பியிடம் இந் நம்பி இப்படி அன்புடன் வினவியிருக்கிறான்.

நம் கடமையை மறந்து விடலாகாது என்று இளையவன் மொழிந்தமையால், நாம் முறைமையைத் துறந்து விடலாமா? என்று மூத்தவன் இவ்வாறு எதிர் வினவினான். அதனை மறத்தல் போலவே இதனைத் துறத்தலும் பிழையாம் என்பது துணிபாய் நின்றது. நெறி முறைகளை நேர்ந்து ஒழுகினான்.

தண்டம் இறுதியில் செய்ய உரியது ஆதலால் அதற்கு முன்னுள்ள உபாயங்களைச் செய்தே ஆகவேண்டும் என்று அறிவுறுத்தினான். அரச நீதி ஈண்டு வரிசை பெற்றுள்ளது.

சிறந்த பலசாலிகளான தம்பிமார் தனக்கு உறுதித் துணையாக அமைந்திருந்தும் தருமன் துரியோதனனிடம் மூன்று முறை தூதர்களை அனுப்பிச் சமாதானத்தை நாடி நின்றான். இறுதியில் கண்ணனைத் தூது அனுப்ப அவன் எண்ணியபோது சொன்ன மொழிகள் ஈண்டு எண்ண வுரியன.

ஞானம் அன்போ டினிதுரைத்து ஞானமுனி
அகன்ற தற்பின் சாம பேத
தான தண்டம் என நிருபர் தருமமுறை
மையிற் புகலும் தகுதி நோக்கித்
தூநறுந்தண் துளவோனைத் தூதுவிடு
வதற்கெண்ணிச் சுனைகள் தோறும்
ஏனலந்தண் கிரிப்பெருந்தேன் இறைக்கும்எழிற்
குருநாடன் இயம்பு வானே. (1)

செஞ்சொல்முனி சஞ்சயனுக்கு யாமுரைத்த
கருமமும் முன் சென்ற காலை
அஞ்சொல்முனி புரோகிதனுக்கு அவன்இசைத்த
கருமமும் நீ அறிதி யன்றே
நஞ்சுதனை மிக அருந்தி நன் மருந்தும்
மந்திரமும் விரைந்து நாடாது
எஞ்சினர் தங்களைப் போல இருக்குமதோ
யார் மனத்தும் இருக்கும் சோதீ. (2)

(பாரதம்)

கண்ணனை நோக்கித் தருமர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

சாம பேத தான தண்டங்கள் நிருபர் தரும முறை என இதில் குறித்திருத்தல் கூர்ந்து சிந்திக்க வுரியது.

இத்தகைய அரச தருமத்தின்படி தூதனை அனுப்பஇராமன் கருதினான். முடிதுறந்து வனவாசம் வந்தாலும் சக்கரவர்த்தித் திருமகன் ஆதலால் இறைமாட்சியை எவ்வழியும் முறையோடு காட்சிப்படுத்தி நிறையோடு நிலைத்து வருகிறான்.

பொறையொடும் பொருந்தி வாழ்தல் சயத்துறை.

உண்மையான உயர்ந்த வெற்றித்துறையை இக்கொற்றக் குரிசில் இங்ஙனம் குறித்திருக்கிறான். இராமனுடைய சீலங்கள் இராச தருமங்களாய்க் கோலம் கொண்டுள்ளன. அவ்வுண்மைகள் உரைகள் தோறும் ஒளி வீசி வருகின்றன.

பகைவரை எளிதே வெல்ல வல்ல புசபல பராக்கிரமங்கள் நிறைந்திருந்தாலும் பொறுமையோடு அடங்கி வாழ்வதே யாண்டும் அடங்காத வெற்றி என்று இம் மடங்கலேறு கருதியுள்ளமை இங்கே தெரிய வந்தது.

அறனும் அஃதே என்றது அந்தப் பொறுமை வாழ்வின் புண்ணிய நிலையை எண்ணியுணர. அரிய தருமமும் பெரிய வெற்றியும் பொறுமையுள் மருவியுள்ளன என இக் கருமவீரன் உறுதி செய்துள்ளமையை ஈண்டு உணர்ந்து கொள்ளுகிறோம்.

தூதனைத் தேர்ந்தது.

தூது விடவேண்டாம்; போரே புரிய வேண்டும் என்று நேரே வாதாடிய தம்பியின் உள்ளத்தைத் தகவுடன் தேற்றி இந் நம்பி பகைவனிடம் தூது அனுப்ப நேர்ந்தான். யாரை அனுப்புவது? என்று ஆராயலானான். சண்டை மூண்டுள்ள இந்தச் சமையத்தில் கொடிய அரக்கர்களின் குடியிருப்பாகிய இலங்கையுள் ஒருவன் போய் வருவது எளிதான காரியமன்று. அதிசயமான மனத் துணிவும் ஆடலாண்மையும் உடையவனே சென்று வரவுரியவன் என்று நன்று ஆராய்ந்து நோக்கினான். அத்தகைய நிலையில் அனுமான் ஒருவனே தலைசிறந்து நின்றான். அவனை அனுப்பலாம் என்று முதலில் எண்ணினான்; அது தவறு என்று பின்பு நீக்கினான். முடிவில் அங்கதனே தூதுபோய் வருதற்குத் தகுதியானவன் என்று உறுதியாகத் தேர்ந்து கொண்டான். தெற்குக் கோட்டை வாசலில் பதினேழு வெள்ளம் வானரங்களுக்குத் தலைமைத் தளபதியாய் நின்றுள்ள அவனை அழைத்து வரும்படி நளனை விடுத்தான். அவன் சென்று கூறவே அங்கதன் விரைந்து வந்து உழுவலன்போடு இராமனைத் தொழுது நின்றான். தக்கவன் என்று தான் கருதித் தேர்ந்த அக் குலமகனிடம் இக் கோமகன் சில உறுதி மொழிகளை உரைத்து விடுத்தான். அவன்

உள்ளம் உவந்து துள்ளி எழுந்தான். அதிசய தீரமான அந்தக் கரும எழுச்சி அரிய ஒரு வீரக் காட்சியாய் ஒளி வீசி நின்றது.

அங்கதனை ஆய்ந்தது.

மாருதி இன்னும் செல்லின் மற்றிவன் அன்றி வந்து
சாருதல் வலியார் இல்லை என்பது சாரு மன்றே
யாரினி ஏகத் தக்கார்? அங்கதன் அமையும் ஒன்னார்
வீரமே விளைய்ய ரேனும் தீதின்றி மீள வல்லான். (1)

தூது குறித்தது.

நன்றென அவனைக் கூவி நம்பிநீ நண்ணலார் பால்
சென்று இரண்டுரையின் ஒன்றைச் செப்பினை திரிதி என்றான்
அன்றவன் அருளப் பெற்ற ஆண்டகை அலங்கல் பொற்றோள்
குன்றினும் உயர்ந்தது என்றால் மனநிலை கூற லாமோ? (2)

உரைத்து விடுத்தது.

என்னவற்கு உரைப்பது என்ன ஏந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுதல் நன்றோ அன்றெனின் தலைகள் பத்தும்
சின்னபின்னங்கள் செய்யச் செருக்களம் சேர்தல் நன்றோ
சொன்னவை இரண்டின் ஒன்று துணிகெனச் சொல்லிடென்றான்.

அறத்துறை அன்று; வீரர்க்கு அழகும் அன்று; ஆண்மையன்று
மறத்துறை அன்று; சேமம்மறைந்துறைந்து ஒதுங்கிவாழ்தல்
நிறத்துற வாளி கோத்து நேர்வந்து நிற்கு மாகின்
புறத்துற எதிரே வந்து போர்தரப் புகறி என்றான். (4)

இராமன் ஏவியுள்ள தூது நிலையை இதில் ஓதி உணர்கின்றோம்.

அனுமானை மறுபடியும் அனுப்பினால் எதிரிக்கு எளிதாய்த் தோன்றும். இவன் ஒருவனைத் தவிர வேறு சரியான துணைவன் இராமன் பக்கல் இல்லையோ? என்று அவன் எண்ணவும் கூடும் ஆதலால் வேறு ஒரு புதியவனையே அனுப்பவேண்டும் என்று கருதி அங்கதனை உறுதி செய்து கொண்டுள்ளான்; அவ்வுண்மையை உரைகள் உணர்த்தியுள்ளன.

"பகைவனுக்கு மெலிவு காட்டாதே; யாண்டும் அவன் அஞ்சி அயரும்படி ஆண்மை காட்டி நில்" என்னும் மேன்மை நிலை இங்கே விளங்கி நின்றது. எதிரியின் இயல்பு உணர்ந்து இடம் காலங்களின் நிலை தெரிந்து தலைமையோடு நடந்துகொள்

ரும் சதுரப்பாட்டை இக் குலமகனிடம் கூர்ந்து நோக்கி வருகி ரேம். சீர்மையும் நீர்மையும் எவ்வழியும் சிறந்து திகழ்கின்றன.]

ஒன்னார் வீரமே விளைப்பரேனும் தீதுஇன்றி மீளவல்லான்.

அங்கதனுடைய அருந்திறலாண்மைகளை இப் பெருந்தகை இவ்வாறு தெரிந்திருக்கிருன். பகையினத்தவர் மிகவும் கொடியவர் ஆதலால் தூதுவன் என்ற நீதியை உணராமல் மூர்க்கமாய் மூண்டு கலகம் செய்தாலும் அவரை மாண்டுபட நூறி மீண்டு வர உரியவன் என அங்கதனை இந்த ஆண்டகை மதித்திருக்கும் மதிப்பு மாட்சிமிக வுடையதாய் ஈண்டுக் காட்சிக்கு வந்தது.

சிறந்த தீரனை இங்ஙனம் தேர்ந்தெடுத்துக் கருதிய கருமத்தில் சென்று வரும்படி உறுதி செய்து உரைத்தான். இவ்வுரையைக் கேட்டதும் அவ் வீரன் உள்ளம் பூரித்து உவகைமீக்கூர்ந்தான். பெற்றபணி பெறலரும் பேருய்ப் பெரு மகிழ்வு தந்தது.

இராவணனிடம் நேரே தூதுபோய் வரவேண்டும் என்று அங்கதனை நோக்கி இராமபிரான் பணித்தபோது அந்த வானரக் குரிசிலின் உள்ளத்தில் பொங்கி எழுந்த மகிழ்ச்சி நிலையை உரைகளால் வரைந்து சொல்ல முடியாது எனக் கவி திறந்து சொல்லியிருக்கும் திறம் உவந்து சிந்திக்கவுரியது.

தோள் குன்றினும் உயர்ந்தது என்ருல்
மனநிலை கூறலாமோ?

எதிரியிடம் போய் வா என்று இவ் வீரமூர்த்தி உரைத்த பொழுது அத் தீரனுடைய தோள்கள் மலைகள்போல் விம்மி எழுந்தன எனின் அந்த மனத்தில் மண்டி எழுந்த மகிழ்ச்சி நிலையை நான் எவ்வாறு அளந்து சொல்லுவேன்? என இவ்வாறு உளைந்து சொல்லியிருக்கிருர்.

ஆண்டவனுடைய பணியைச் செய்வதில் அவனுக்குள்ள ஆவல் நிலை அறிய வந்தது. உள்ளே ஆனந்தம் கடல்போல் பொங்கி எழுந்துள்ள நிலையை வெளியே தோள் மலைபோல் உயர்ந்து நின்ற நிலை உணர்த்தி நின்றது. அக மகிழ்ச்சியை முகமும் தோளும் மிகவும் தெளிவா விளக்கியுள்ளன.

அங்கதனை ஈண்டு ஆண்டகை என்றது அரிய வீரச்செயலைச் செய்ய மூண்டிருக்கும் சீர்மை தெரிய. ஆண்மையாளர்

எவரும் மேன்மையாக வியந்து போற்றும் பான்மையில் உயர்ந்துள்ளமையால் அவ்வுண்மையை உரிய பேரால் உணர்த்தியருளினார்.

அலங்கல் = மாலை. பொன் = அழகு.

மாலை தவழ்ந்த அழகிய தோள் எனப் புனைந்து கூறியது சிறந்த இராச குமாரன் ஆதலால் அவனது நிலைமையும் நீர்மையும் தலைமையும் நினைந்து தெளிய வந்தது.

என் அவற்கு உரைப்பது?

அந்த அரக்கனிடம் போய் அடியேன் என்ன சொல்ல வேண்டும்? என்று மரியாதையோடு வணங்கி இவ் வீர வள்ளலிடம் அக் குமரன் வினவியுள்ளதை இது விளக்கி நின்றது.

அவன் என்னும் சுட்டு இகழ்ச்சிக் குறிப்பில் வந்தது.

பிராட்டியைக் கரவாய்க் கவர்ந்து சென்ற அந்தக் கள்ளனுக்கு நான் சொல்லவேண்டியது என்ன? அதனைச் சொல்லியருளுங்கள் என்று உழுவலன்போடு தொழுது நின்றான்.

இராமத் துரோகியாகிய அவனுக்கு, கொடிய பாவியாகிய அவனுக்கு, என் தந்தையின் வாலால் அடிபட்ட அவனுக்கு, என் சிறியதந்தையால் நெருநல் உதைபட்ட அவனுக்கு, இராம பாணத்தால் நாளை அழியவுள்ள அவனுக்கு, என இன்னவாறு பலவும் கருதிநோக்க அவன் என்னும் சுட்டை அங்கதன் இங்கே நளினமாக் குறித்திருக்கிறான். அவனுக்கு இவன் கூறிவிடுத்த மொழிகள் கூரிய வேகமுடையன.

"சீதையை மரியாதையோடு கொண்டுவந்து கொடுத்துவிட்டு உன் உயிரைப் பெற்றுக்கொள்; இல்லையானால் உன் தலைகள் பத்தும் சின்னபின்னங்களாத் தரையில் உருட்டப்படும்; எங்கள் படை ஊரைச் சுற்றிப் போருக்கு மூண்டு நிற்கிறது; நீ நேரே போர்புரிய வராமல் பேடியைப்போல் உள்ளே பதுங்கியிருக்கிறாய்! இது மானம்கெட்ட இருப்பு; நீ நல்ல வீரன் ஆனால் உடனே வெளியே புறப்படு" என இவ்வாறு போருக்கு நேரே அறைகூவி அழைத்துவா என்று இங்ஙனம் உரைத்து விடுத்தான்.

இவ்வுரைகளைக் கேட்டதும் அங்கதன் வேறு யாதும் கூறவில்லை; இராமனுடைய அடியில் நெடிது விழுந்து தொழுதான்.

கடிது எழுந்தான்; அங்கு நின்றபடியே துள்ளி மேலே தாவி வான வீதிவழியே வேகமாய் வாவி இலங்கையுள் போனான்.

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதே போல்
வீரன் வெஞ்சிலையில் கோத்த அம்புஎன விசையில் போனான்
மாருதி அல்லன் ஆகில் நீஎனும் மாற்றம் பெற்றேன்
யாரினி என்னோடு ஒப்பார் என்பதோர் இன்பம் உற்றான். (1)

அயில்கடந் தெரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித்
துயில்கடந்து அயோத்தி வந்தான் சொற்கட வாத தூதன்
வெயில்கடந் திலாத காவல் மேருவின் மேலும் நீண்ட
எயில்கடந்து இலங்கை எய்தி அரக்கனது இருக்கை புக்கான். (2)

அழுகின்ற கண்ண ராகி அனுமன்கொல் என்ன அஞ்சித்
தொழுகின்ற சுற்றம் சுற்றச் சொல்லிய துறைகள் தோறும்
மொழிகின்ற வீரன் வார்த்தை முகந்தொறும் செவியில் மூழ்க
எழுகின்ற சேனை நோக்கி இயைந்திருந் தானைக் கண்டான். (3)

கல்லுண்டு மரமுண்டு ஏழைக் கடல்ஒன்றும் கடந்தேம் என்னும்
சொல்லுண்டே இவனைவெல்லத் தோற்றத்தோர்கூற்றுமுண்டோ
எல்லுண்டபடை கைக்கொண்டால் எதிருண்டே இராமன்கையில்
வில்லுண்டேல் உண்டென்று எண்ணிஆற்றவும்வியந்துநின்றான்.

இன்றிவன் தன்மை எய்த நோக்கினால் எதிர்ந்த போரில்
வென்றஎன் தாதை மார்பில் வில்லின்மேல் கணைஒன்று ஏவிக்
கொன்றவன் தானே வந்தான் என்றுடன் குறிப்பி னல்லால்
ஒன்றிவன் தன்னைச் செய்ய வல்லரோ உயிர்க்கு நல்லார்? (5)

அணிபறித்து அழகு செய்யும் அணங்கின்மேல் வைத்த ஆசைப்
பிணிபறித் தவனை யாவர் முடிப்பவர் படிக்கட் பேழ்வாய்ப்
பணிபறித்து எழுந்த மானக் கலுழனின் இவனைப் பற்றி
மணிபறித்து எழுந்த எந்தை யாரினும் வலியன் என்றான். (6)

நெடுந்தகை விடுத்த தூதன் இவையிவை நிரம்ப எண்ணிக்
கடுங்கனல் விடமும் கூற்றும் கலந்துகால் கரமும் காட்டி
விடுஞ்சுடர் மகுடம் மின்ன விரிகடல் இருந்தது என்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னான் எதிர்சென்று குறுகிநின்றான்.

(அங்கதன் தூதுப்படலம் 13-19)

இராம தூதனாய் அங்கதன் இலங்கை புகுந்துள்ள காட்சியை இந்தக் கவிப்படங்கள் நன்கு காட்டியுள்ளன. உணர்ச்சி நிலைகளும் உக்கிரவீர நிலைகளும் உறுதி யூகங்களும் உரைகள் தோறும் ஒளிகள் வீசி நேரே உலாவுகின்றன.

தன்னை உரிமையோடு அழைத்துத் தனது நாதன் எதிரியிடம் வினைமேல் ஏவியிருப்பதைப் பெரிய பேருகக் கருதி மகிழ்ந்து உழுவலன்புடன் உறுதி பூண்டு உவகைமீதூர்ந்து போயிருக்கிருன். உள்ளம் பலவும் கருதியுள்ளது.

மாருதி அல்லன் ஆகில் நீஎனும் மாற்றம் பெற்றேன்
யார் இனி என்னேடு ஒப்பார்?

தான் பெற்றுள்ள பேற்றை எண்ணி எண்ணி அங்கதன் இன்பம் அடைந்து போயுள்ளதை இதனுல் உணர்ந்துகொள்ளுகிறேம். ஆண்டவன் கருதியதை நினைந்து ஆனந்தம் பெருகியது.

அனுமானுக்கு அடுத்தபடியாகத் தன்னை இராமன் மதித்திருக்கும் மதிப்பைப் பெறுதற்கு அரிய ஓர் பெரும்பாக்கியமாக அவன் கருதியுருகியுள்ளமையைக் கவி உலகம் அறியக் காட்டியிருக்கிருர். காவியபாத்திரங்களின் மானசமருமங்களை ஓவிய உருவங்களா ஒளிசெய்து விளக்கிவருவது உவகையை விளேத்து வருகிறது.

நிகழ்ந்த செயல்களும் மொழிந்த மொழிகளும் எண்ணிய எண்ணங்களும் நம்கண் எதிரே வந்து களிநடம் புரிகின்றன.

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதேபோல்
வீரன் வெஞ்சிலையில் கோத்த அம்புஎன விசையில்போனுன்.

இந்தக் காட்சியைக் கருதிக் காணுந்தோறும் உறுதியும் ஊக்கமும் பெருகி ஓர் உல்லாசமான வீரக்காட்சி நம் உள்ளத்தில் ஓங்கி எழுவதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இராமநாதனுடைய பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு மேலே விரைந்து தாவியிருக்கிருன். சீயம் = சிங்கம்.

ஒரு சிங்கஏறு ஆகாயத்தில் பாய்ந்து போனதுபோல் இம்மான வீரன் வான வீதியில் வாவிப் போயுள்ளான். நவமான அந்தப் போக்கை உவமானம் நன்கு விளக்கி உவகையை விளேத்துள்ளது. ஒப்புரை திட்ப நுட்பங்களை உணர்த்தி வருகிறது.

வீரன் அம்பு என இராமபாணத்தை அங்கதனுக்கு இங்கே உவமை கூறியது அவனுடைய உடல்வேகமும் அடலாண்மையும் அதிசய ஆற்றலும் தெரிய. சிலை அம்பு செயல்மேல் சென்றது.

கம்பீரமான தோற்றத்தையும் பாய்ச்சலையும் சிங்கம் தெரியச் செய்தது. விண்மிசை என்றதுபோனவழியின் புலன் துலக்கியது.

வேகத்தையும் வீர வெற்றிகளையும் அம்பு விளக்கி நின்றது.

இராமதூதன் இராமபாணம்போல் இராவணனிடம் போயிருக்கிறான். இலங்கை வீதியில் அவன் கண்ட காட்சிகள் கருத்தைக் கவர்ந்து வியப்பை விளைத்தன. அந்த நகரின் அதிசய அழகுகளையும் திருவின் போகங்களையும் நினைந்து நினைந்து நெஞ்சம் உவந்தான்: "ஆ! என்ன போகம்! என்ன காட்சி! என்ன மாட்சி!" என இன்னவாறு எண்ணி எண்ணி வியந்து வீதிகள் பலவும் கடந்து இராவணனுடைய அரண்மனையை அணுகினான். எவ்வழியும் திவ்விய மகிமைகளோடு செவ்வி சிறந்து திகழ்கின்ற பெரிய மணி மாளிகையிடையே இனிய அரியணையில் வீற்றிருக்கின்ற அவனைத் தூரநின்று நோக்கினான். தேவரும் தலைவணங்க மேவி விளங்குகின்ற அவனுடைய இராச கம்பீரங்கள் அரிய பல அதிசயங்களை விளைத்தன. நிலைமைகளைக் கருதினான்: "கல்லையும் மரங்களையும் கொண்டு கடலை அடைத்துப் படைகளை நடத்தி வந்து விட்டோம்; பகைவனை எளிதில் வென்று விடலாம் என்று எண்ணுவது பெரும் பிழை. படைக் கடல்களோடு பொங்கியுள்ள எதிரியான இந்த வீரக் கடலைக் கடந்தபோதுதான் நாம் நேரே கரை கண்டவராவோம். இவனை வெல்லவல்லவர் யார்? கோதண்டபாணியான நம் ஆண்டவன் இவனைக் கொன்று ஒழித்தாலன்றி வேறு யாரும் வென்றுகொள்ள முடியாது. இவனோடு நேரே மல்லாடி மகுடமணிகளைப் பறித்து வந்த எனது சிறிய தந்தையின் அதிசய வெற்றி துதி செய்ய வரியது. இந்த வீர நகரில் தனியே புகுந்து அரக்கர் பலரை வென்று அடலாண்மையோடு மீண்டு வந்த அனுமானுடைய வீரப் பிரதாபங்கள் திசை நோக்கித் தொழத் தக்கனவே; நம் மாருதியின் அற்புத ஆற்றல் நமது மரபுக்கெல்லாம் பெரு மகிமையைத் தந்துள்ளது. அந்த அதிசய வீரன் வந்தபடி நானும் இன்று வந்துள்ளேன்; முடிவு என்ன ஆகுமோ?" என்று இன்னவாறு எண்ணி நின்றவன் விரைந்து உள்ளே புகுந்து இராவணன் எதிரேபோய் அடு கம்பீரமாய்த் துணிந்து நின்றான்.

விடுஞ்சுடர் மகுடம் மின்ன விரிகடல் இருந்தது என்னக்

கொடுந் தொழில் மடங்கல் அன்னான்.

என இராவணனை இங்கே இவ்வாறு வரைந்து காட்டியிருக்கிறார். காட்சியைக் கருதி நோக்கி மாட்சிகளை உணர்கின்றோம்.

அவனுடைய உருவநிலை உள்ளத் திண்மை வீரப்பாடு முதலிய பெருமிதங்களெல்லாம் தெரிய உரைகள் வந்திருக்கின்றன.

வடவைத்தீயும் ஆலகால விடமும் கூற்றமும் ஒருங்கு கூடிக் கரசரணாதி அவயவங்களோடு ஓர் உருவம் எய்தியுள்ளது போல் அவன் மருவியிருந்தான் என்றது கொடிய பயங்கரமாய் நெடிது ஓங்கியுள்ள அவனது நிலைமை தலைமைகள் யாவும் நேரே தெரிய வந்தது.

யாரும் அஞ்சி அயரும்படி உக்கிர வீர நிலையில் இங்ஙனம் ஒளிபுரிந்திருந்த அவன் எதிரே போய் அங்கதன் அடலாண்மையோடு நின்றான்.

இவனது நிலைமையை நோக்கி அவன் சினந்து சீறி "நீ யார்? வந்த காரியம் என்ன? இறந்துபடுமுன் விரைந்து சொல்!" என்று வெற்றி வீறோடு கேட்டான்.

கொன்று இவர் தின்னா முன்னம் கூறுதி.

அங்கதனைப் பார்த்து இராவணன் இப்படி வெருட்டியிருக்கிறான். "இதோ நிற்கின்ற அரக்க வீரர்கள் உன்னைக் கொன்று தின்று விடுவர்; இறந்து தொலையவே ஈண்டு நீ துணிந்து வந்திருக்கிறாய்! செத்து மறையுமுன் வந்த காரியத்தை மறையாமல் விரைவில் சொல்லிவிடு!" என்று எள்ளி இகழ்ந்து அவன் இறுமாந்து கேட்டான்; அவ்வாறு சொல்லவே இவன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் பல்லின் ஒளி வெளியே தெரிந்தது. அவனுடைய உள்ளச் செருக்காகிய இருளை இவனுடைய பல் ஒளி ஒல்லையில் ஒழித்ததுபோல் எல்லை தெளித்து நின்றது.

வன் திறல் வாலி சேயும் வாள் எயிறு இலங்க நக்கான்.

இலங்கை வேந்தன் பெருமிதத்தோடு வினவியதைக் கேட்டதும் அங்கதன் இப்படிச் சிரித்திருக்கிறான். இந்தச் சிரிப்பில் பல குறிப்புகள் கூடியிருக்கின்றன. வாய்திறந்து நேரே சொல்ல வேண்டிய பல பதில் உரைகளை இந் நகை தொகையாகச் சுட்டியுள்ளது. உற்ற சிரிப்பு வெற்றி விரிப்பாய் விளங்கி நின்றது.

தூது வந்துள்ள வகை சிந்தை தெளிய வந்தது.

"உன் குலத்தவர் எல்லாரையும் அடியோடு தொலைத்து உன்னைக் குடியோடு கொல்ல வந்துள்ள வீர வில்லியின் தூதன் நான்; என்னை அரக்கர் கொன்று தின்று விடுவார் என்றது முழு மடையனும் மொழியாத இழிவுடையது; இத்தகைய மடத்தன மான பேச்சை இனிமேல் பேசாதே! நீசநிலையில் நிமிர்ந்து நாசம் அடைய நேர்ந்துள்ளாய் ஆதலால் பேசும் முறை தெரியாமல் பிதற்றுகின்றாய்!" என அவனுடைய பிழைபாடுகளை இவன் நகை வகையாக ஈண்டு வெளியாக்கியுள்ளான்.

வாலிசேய் என்றது வமிசமூலம் துலக்கிக் கேலிசெய்து வந்தது.

இலங்கைவேந்தனை வாலி முன்னம் வாலால் கட்டி அடித்து மானத்தை அழித்தான்; இன்று அவன் சேய் ஆகிய அங்கதன் நகையால் எட்டி உதைத்து அரக்கர்பதிக்கு அவமானத்தை விளைத்தான். தந்தையும் தனயனும் இங்கே சிந்தனைக்கு வந்தனர்.

அவன் கடுத்துச் சினந்து கேட்டதற்கு இவ்வாறு முதலில் நகைத்து நின்றவன் பின்பு நளினமாகப் பதில் சொல்லினான். தன்னைத் தூதன் ஆக ஏவியிருப்பவன் ஓர் பெரிய அதிசய நிலையினன் என்பதைத் துதிசெய்து இவன் துலக்கியிருப்பது மதிநலம் கனிந்துள்ளது. அவன் போதமடைந்து தெளியும்படி இவன் ஓதி புணர்த்தியது அயலே வருகிறது.

பூதநாயகன் நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன் இப்பூமேல்
சீதைநாயகன் வேறுள்ள தெய்வ நாயகன் நீ செப்பும்
வேதநாயகன் மேல்நின்ற விதிக்கு நாயகன் தான்விட்ட
தூதன்யான் பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன் என்றான்.

இராவணன் கேட்ட கேள்விக்கு அங்கதன் இவ்வாறு பதில் சொல்லியிருக்கிறான். வினவியவனுடைய மன நிலைகளை இனமாக அறிந்துகொண்டு எதிர் மொழி தந்துள்ளமையால் பலவகையான தலைமைத் தன்மைகள் நிலை தெரிய வந்தன.

நீ யார்? எய்திய கருமம் என்னை? என முன்னம் அவன் கேட்டபடியை நாட்டமா நோக்கிப் பதில் தீட்டியருளினான். மூன்று உலகங்களுக்கும் தனிநாயகன் எனத் தன்னைக் குறித்து இராவணன் தருக்கி எண்ணியிருத்தலால் அந்தச் செருக்கை

அடக்க நாயகமான மொழிகளைப் பெருக்கி உரைத்தான்.

நிலம் நீர் தீ வளி வான் என்னும் பஞ்ச பூதங்களுக்கும் நாயகன்; பூமகளான சீதாதேவிக்கு நாயகன்; தேவர்களுக்கு நாயகன்; நீ ஓதுகின்ற வேதங்களுக்கு நாயகன்; எல்லாவற்றையும் இயக்கி வருகிற விதிக்கு நாயகன்; எப் பதிக்கும் நாயகன்; அத்தகைய நாயகமூர்த்தி ஏவிய தூதன் நான்; அப்பெருமான் சொல்லியருளிய ஒன்றை உன்னிடம் சொல்லிப் போகவந்தேன் என்று இவ்வாறு அவன் உள்ளம் தெளியச் சொன்னான்.

அகில சராசரங்களுக்கும் நாயகனாயுள்ள பரமனே மனித உருவில் மருவி இராமன் என்னும் பேரோடு இங்ஙனம் வந்துள்ளான் என அங்கதன் இங்கிதமாத் துணிந்து சொல்லியிருக்கிறான்.

மேல் ஒருபொருளும் இல்லாமெய்ப்பொருள் வில்லும் தாங்கிக் கால் தரை தோய நின்று கட்புலக்கு உற்றது.

என முன்னம் தன் தந்தை இறுதிக்காலத்தில் இம் மைந்தனிடம் சொன்ன உறுதிமொழி உள்ளத்தில் பதிந்திருந்தது ஆதலால் இராமனைக் குறித்து இந்தவாறு ஈண்டு இவன் உரைக்க நேர்ந்தான். தாதை ஓதியதை வேதமொழியாக் கொண்டான்.

நீ செப்பும் வேத நாயகன் என்றது இராவணனுக்கு அரிய போதமும் உரிய அபிமானமும் ஒருங்கே செறிய வந்தது.

வேதங்களை எல்லாம் தெளிவாக அவன் ஓதி உணர்ந்துள்ளான் என்பதை அங்கதன் நன்கு தெரிந்திருக்கிறான். அது இங்கே பேசியுள்ள வாய் மொழியால் வெளியாய் நின்றது. தன் தாதையோடு பழகிக் கிழமை கொண்டிருந்தான் ஆதலால் அவனுடைய நிலைமைகளை யெல்லாம் இளமையிலேயே வளமையோடு இக் குலமகன் அறிய நேர்ந்தான்.

வேதம் ஓதி வந்தவன் நீதி நெறியில் நடவாமல் தீது புரியலானான்; ஆளவே அவனை மோதி முனிந்து தண்டிக்க வேத நாயகன் வந்துள்ளான். அவ்வுண்மை உரைக் குறிப்புகளால் நுண்மையாக ஈண்டு உணர வந்தது.

தெய்வ நிலையில் நின்று தண்டிக்காமல் மனித உருவில் வந்தது அரிய ஒரு தெய்வ ரகசியமாயுள்ளது. உலகம் பலவகைநிலைகளையடைய இறைவன் அவதாரம் பரம ரகசியமாய் வருகிறது.

"மானிடர் வானரர் வலியி லாரென
ஈனமா இராவணன் இகழ்ந்து நின்றனன்;
ஊனமவ் வுறுதியென் றுணர்த்த எண்ணியே
ஞானமா நாயகன் நரருள் வந்தனன்."

பரமன் இராமனாய் வந்துள்ளமைக்கு ஓர் காரணத்தைக் காட்டி யுணர்த்தியுள்ள இது ஈண்டுக் கருதி யுணர வுரியது.

விதிக்கு நாயகன் என்றது அதிசயமாத் துதிக்க வந்தது.

விதியின் வழியே எவ்வுயிரும் நடக்கின்றன. அது ஆட்ட யாவரும் ஆடி வருகின்றனர். அதனை மீறி நடக்க யாராலும் முடியாது. அந்த விதியும் தன் ஏவல் வழியே நடக்க ஆணை செலுத்தி நிற்கும் ஆண்டவன் என்பது ஈண்டு அறிய நேர்ந்தது.

அந்த விதிக்கு நாயகனே விதிவசப்பட்டு அரசை இழந்து அடவி புகுந்து மனைவியைப் பிரிந்து படாத பாடுகள் பட்டுக் குரங்குகளைக் கூட்டிக் கொண்டு இலங்கையின் வடக்கு வாசலிலே வந்து நிற்கின்றான் என்று வெளியே சரிதம் காட்டி நின்றாலும் உள்ளே பொதிந்துள்ள உண்மை உயர்ந்தோர் உள்ளங்களில் உணர வந்தது. அனுபவ அறிவு உறுதியாய் ஒளிமிகுந்தது.

வந்துள்ளவனது அற்புத நிலையைத் தந்தை வாயிலா அறிந்ததோடு கடல் வெந்துபட வாளி தொடுத்ததும் வருணன் ஓடி வந்து அடிபணிந்து துதித்து நின்றதும் முதலாகப் பலவகையிலும் நேரே அறிந்துள்ளான் ஆதலால் அங்கதன் இங்ஙனம் பரம நீர்மையை விளக்கி உரமாக உரையாடினான்.

பூத நாயகன் விட்ட தூதன்,
புவிக்கு நாயகன் விட்ட தூதன்,
சீதை நாயகன் விட்ட தூதன்,
தெய்வ நாயகன் விட்ட தூதன்,
வேத நாயகன் விட்ட தூதன்,
விதிக்கு நாயகன் விட்ட தூதன்,

என இங்ஙனம் தனித்தனி கூட்டி நோக்கி உரைத்துள்ள நிலைமை நீர்மைகளை நுனித்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

பஞ்ச பூதங்களின் சஞ்சலங்கள் கழியவும், உலக அல்லல்கள் ஒழியவும், சீதாதேவியின் கவலை நீங்கவும், தேவர்களுடைய

துயரம் தீரவும், வேதநெறி தழைத்து ஓங்கவும், விதியின் முடிவு தெரியவும் உன்னிடம் இன்று நான் வந்திருக்கிறேன் எனத்தன்னுடைய வரவின் விளைவுகளைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளும்படி அங்கதன் இவ்வாறு உறவுரிமையோடு உரைத்திருக்கிறான்.

பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்.

என் ஆண்டவன் கட்டளை யிட்டருளிய ஒரு சொல்லை உன்பால் அன்பால் சொல்லும் பொருட்டே ஈண்டு நான் வந்துள்ளேன் என்று காரிய வுண்மையை வீரியமாய் விளக்கினான்.

இந்தச் சொல்லைக் கேட்டதும் இலங்கைவேந்தன் எள்ளிச் சிரித்தான். "சிவபெருமான், திருமால், பிரமன் என்பவரையும் என் எதிரே நாயகன் என்று பேச யாரும் வாய் கூசுவர். சிறுமையான ஒரு மனிதனைத் தேவ நாயகன் வேத நாயகன் என யாதும் கூசாமல் வீணே நீ பிதற்றி நின்றாய். மிகவும் இழிவான முழுமடையன் என்று உன் வாய்மொழியால் உன்னை வெளிப்படுத்திக் கொண்டாய்! விவேக சூனியமாய்ச் சாகவே ஈண்டு நீ வேகமாய்த் துணிந்து வந்திருக்கின்றாய்! இந்தக் குட்டிக் குரங்கு போய்ச் செத்துத் தொலையட்டும் என்றே அந்த முட்டாள் உன்னை இங்கே விட்டிருக்கிறான். மனைவியைப் பறிகொடுத்துவிட்டு மறுகி அழுகின்ற அவனுடைய உரையைக் கேட்டு நீ உயிரைவிட நேர்ந்துள்ளாய். இந்த வீரமாபுரிக்குள் வரத் திரிமூர்த்திகளும் தீரமாய் நேரார். எமனும் அணுக அஞ்சுவன். நீ நெஞ்சம் துணிந்து புகுந்தது நெடுநகை தருகிறது."

கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமும் தரித்த மால் மற்று இந்நகர் தன்னைச் சாரார்;
அங்கவர் தம்மை அன்றி மனிசனுக்காக அஞ்சாது
இங்குவந்து இதனைச் சொன்ன தூதன் நீயாவன் என்றான்.

தனது இராசதானியை இராவணன் எவ்வளவு பெருமையாகக் கருதி யுள்ளான் என்பது இவ் வுரைகளால் வெளியாயுள்ளது. கங்கைத் தலையனும், சங்கக் கையனும் இங்கு வரத் துணியார் என்று துணிந்து சொல்லியிருப்பது அவனுடைய நெஞ்சத் திமிரையும் நெடிய மமதையையும் நேரே துலக்கி யிருக்கிறது.

அஞ்சாது இங்குவந்து என்றது அங்கதன் வந்திருக்கிற துணிவையும் தைரியத்தையும் இகழ்ந்து பேசியபடியாம். சாகத்

துணிந்துதான் இப்படி மதிகெட்டு வந்துள்ளாய்! என்று மருட்டி வெருட்டினான்; பின்பு உருட்டி நோக்கி நீ யார்? உன் பெயர் என்ன? என்று நேரே கேட்டான். கேள்வி அவனுடைய இராச கம்பீரத்தோடு பலவும் சூழ்ந்து தலைமையுடன் வந்தது.

தூதன் நீ யாவன்?

என இங்ஙனம் சோதனை செய்தது சாதனை காண.

இராமன் ஏவலால் தூதனாய் வந்துள்ளேன் என்று அங்கதன் முன்னம் சொன்னமையால் இன்னவாறு இனம் தெரிய வினவினான். பிறப்பும் இருப்பும் குறிப்பாகக் கூர்ந்து காண வந்தது.

நீ யார் மகன்? உன் ஊர் எது? குரங்கு ஆகிய உனக்கும் அந்த மனிதனுக்கும் எப்படித் தொடர்பு உண்டாயது! என்ன உறவால் இப்படி ஏவல் புரிய நேர்ந்தாய்? என்று அவன் ஆவலோடு அறிய அவாவியுள்ளமையை மேலே குறித்த வினா குறிப்பாக உணர்த்தி நின்றது. ஆகவே யாவும் அவன் சிந்தை தெளிய இந்தத் தூதன் அதி விந்தையாகச் சொல்ல நேர்ந்தான்.

இந்திரன் செம்மல் பண்டுஓர் இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை கலக்கினான் மைந்தன் என்றான்.

நீ யாவன்? என்று இராவணன் கேட்ட கேள்விக்கு அங்கதன் இவ்வாறு செவ்வையாகப் பதில் சொல்லி யிருக்கிறான். வினாவுக்கு விடையாய் வந்துள்ளதில் வினையங்கள் பல விநயமாக் குடிகொண்டுள்ளன. நினைவு கூர்ந்து நேரே சிந்திக்க வுரியன.

"நான் இந்திரன் பேரன்; என் தந்தை பெயர் வாலி. அந்த அதிசய வீரனை உலகம் எல்லாம் நன்கு தெரியும்; நீயும் அறிந்திருப்பாய் என்று நம்புகிறேன்; முன்பு இராவணன் என்று ஓர் அரசன் சிறந்து இருந்தான். அதிக பலசாலியான அவனைத் தன்னுடைய வாலினால் வரிந்து கட்டி மலைகள்தோறும் தாவி நான்கு கடல்களிலும் சிவபூசை செய்து வந்தவன்; மந்தரமலையைக் கொண்டு பாற்கடலைத் தனியே நின்று கடைந்து தேவர்க்கு அமுதம் கொடுத்தவன்; யாவரையும் அடக்கி ஆண்ட அதிசய வீரன்; அருந்திறலும் பெருங்கொடையு முடைய அந்

தப் பெருந்தகையாளனுடைய புதல்வன் நான்'' என அங்கதன் இங்ஙனம் இங்கிதமாப் பதில் உரைத்திருக்கிறான்.

—உரைகள் இவனுடைய சொல்வன்மையைத் துலக்கியுள்ளன.

உருவ நிலையில் குரங்கு என்று எண்ணித் தன்னைச் சிறுமையாக இராவணன் பேசினன் ஆதலால் தனது உண்மையான மரபின் பெருமையை அவன் முன்னதாக உணர உரைத்தான்.

இந்திரன் செம்மல் என வாலியை இந்தவாறு குறித்தது தன் தந்தையின் மகிமை மாண்புகளை அவன் சிந்தை தெளிந்து கொள்ள வந்தது. செம்மல் = பெருமையில் சிறந்தவன். அறிவு திரு ஆற்றல் குலம் முதலியவற்றால் தலைசிறந்துள்ளவன் என இந் நிலைமைகளை யெல்லாம் நேரே தெரியச் செம்மல் என்றான்.

பண்டு ஓர் இராவணன் என்றது எவனோ ஒருவன் என அலட்சியமா எள்ளி இகழ்ந்து சொல்லியுள்ளமை உள்ளியுணர வுரியது. பேச்சுத்திறம் பேராண்மையாய்ப் பெருகி வந்துள்ளது.

நேரே கண் எதிரே கண்டு நிற்கின்றவனைக் காணாத ஓர் அநாதையைப் போல் காட்டிப் பேசினன். உன்னை வாலால் கட்டினவன் என்று சொன்னல் அது சுவைக்கேடாம். அன்னவாறு கூறாமல் நன்னயமுடன் நளினமா நவின்றுள்ளான்.

எந்தை வாலால் கட்டுண்டு அடிபட்டவன் எந்த இராவணனோ? அந்த இராவணனை எனக்குத் தெரியாது என்ற முறையில் இந்த இராவணன் எதிரே இம் மைந்தன் பேசி யிருப்பதைச் சிந்தையுவந்து சிந்திக்கின்றோம்.

வாலிடைத் தூங்கச் சுற்றிக் கிரிகள் தாவி.

என்றது அன்று கட்டிக் கொண்டு வான வீதிவழியே வாலி வாவிப் போன அக் காட்சியைக் கருதிக் காண வந்தது. பட்டவனுக்குத் தெரியும் பாடு என்பது பழமொழி ஆதலால் கட்டிய நிலையைச் சுட்டி யுரைத்தான்.

வேலை கலக்கினான் மைந்தன்.

கலங்காத இராவணன் கலங்கி உணரும்படி இன்னவாறு பலவும் துலங்க மொழிந்தான். வேலை = கடல். கடலைக் கலக்கினவனுடைய மகன் என்றது தனது அடலாண்மைகளை அவன்

அறிந்து கொள்ள வந்தது. வேலை கலக்கினன் மைந்தன் ஆதலால் என் வேலையையும் நீ சிந்தனை செய்து கொள்க என்று தெளித்தருளினன்.

முதலில் தன்னைத் தூது அனுப்பிய ஆண்டவனுடைய மகிமைகளை உரைத்தான். தன் பிறப்பு முதலிய சிறப்பு நிலைகளை உணர்த்தினன். குறிப்புகள் பல உணரக் கூர்ந்து கூறினன்.

இலங்கை வேந்தனுடைய உள்ளச் செருக்கை அகழ்ந்து எடுத்து உறுதி கூறும் முறையில் உரைகள் பெருகி வந்துள்ளன.

இவ்வாறு உரையாடி வருங்கால் அனுமானைப் பற்றிய பேச்சு இடையே புகுந்தது. "உன்னைப் போல முன்னம் இராம தூதன் என ஒரு குரங்கு இங்கே வந்தது; இப்பொழுது அது எங்கே யுள்ளது?" என்று இராவணன் கேட்டான்.

யாதும் தெரியாதவனைப்போல் பாவனைசெய்து "யார் அது?" என்று அங்கதன் வினவினன். இங்கித மொழிகள் எதிர் எழுந்தன. சங்கை சமாதானங்கள் சார்ந்து வந்தன.

இராவணன்: அனுமான் என்னும் பேரோடு ஈண்டு வந்தான்; வாலிலே வைத்த தீயை இவ்வூரிலே வைத்துவிட்டு ஓடிப்போனன்.

அங்கதன்: அடே! அவனா?

இராவணன்: அவன் இப்போது எங்கே இருக்கிறன்?

அங்கதன்: அவனை எங்கள் சாதியைவிட்டு விலக்கிவிட்டோம்.

இராவணன்: ஏன்? என்ன பிழை செய்தான்?

அங்கதன்: இங்கே வந்திருந்தபோது இந்திரசித்தின் கையில் கட்டுப்பட்டான் ஆதலால் அது எங்கள் மரபுக்கே பெரிய இழிவாய் நேர்ந்தது; அப்படிக்குலத்துக்கு இழுக்கு விளைத்தவனைச் சேர்த்து வைத்திருப்பது கொடிய ஈனம் என்று வெறுத்து எம்மவர் அவனை விலக்கிவிட்டனர். மானமுடைய நாங்கள் ஊனமடைந்து வாழமாட்டோம். ஊறுபாடுற்றவரை வேறுபாடாகவே விலக்கிவிடுவோம்.

இராவணன்: அவன் எங்கே போயுள்ளான்?

அங்கதன்: போன இடம் எனக்குத் தெரியாது.

இராவணன்: பழிபடாத அவ்வளவு மானமுடையவரா உங்கள் மரபினர்?

அங்கதன்: ஆம்; நாங்கள் மாமிசம் தின்னோம்; சுத்தமான தூய உணவே உண்போம்; எங்களுக்கு யூகமான சாக பட்சிணிகள் என்று பெயர். யோக சித்திகளை யுடையோம்; அரக்கர்களாகிய உங்களைப் போல் கொடிய தீமைகளைச் செய்யோம்; நேரே சண்டைக்கு வந்தால் எவரையும் போராடியே வெல்வோம். பிடித்த பிடியை விடமாட்டோம். சாதனைகளில் சோதனைகள் மிகப்பெற்றுள்ளோம்.

இன்னவாறு தன் குலத்தின் பெருமையை விளக்கி அரக்கர் இனத்தை இழித்து அங்கதன் அடலாண்மை புரிந்து வந்ததாக வேறு இராம சரிதங்களில் கூறப்பட்டுள்ளன. அயலே வருகிற கூர்ம புராணமும் ஈண்டுக் கூர்ந்து காணவுரியது.

விலங்கல் திணிதோள் அங்கதனை இராமன் தூது விடுப்ப அவன்
இலங்கை நகரி னிடைஎய்தி இகல்வாள் அரக்கன் றன்னுழையும்
அலங்கல் வடிவாள் இராவணனும் ஆரை நீகொல் எனவென்றன்
புலங்கள் தேயவாலதியில் பிணித்தோன் புதல்வன் எனப்புகன்றான்.

என்றலோடும் இலங்கைநகர் எரித்த கவியாண் டுளதென்ன
உன்றன் சிறுவன் வீக்க அகப் பட்ட இழிவின் உளங்கொதித்துக்
கன்றியுயர் வானரத் தலைவர் கடியக் கானத்திடை ஒளித்துப்
பொன்றியதுவோ? உய்ந்ததோ? அறியேன் அந்தப் புன்குரங்கே.

(கூர்மபுராணம்)

இராவணனுடைய கருவத்தைப் பங்கப்படுத்தும் முறையில் அங்கதன் இங்ஙனம் பேசியிருக்கிறான். எதிரிக்கு ஏற்றம் கொடாமல் மாற்றம் கொடுத்து வருகிறான் ஆதலால் மாறுபாடான உரைகளையும் மனம் துணிந்து கூறலாயினான்.

தன்னை ஏவிய தலைவனுக்கு என்ன வகையிலும் மேன்மையுண்டாகும்படி உரையாடி வருதலால் இவ் வானரவீரனுடைய அன்புரிமையும் அருந்திறலாண்மையும் அறிய வந்தன.

நீ யாவன்? என்று அவன் கேட்ட கேள்விக்குத் தன் தந்தையினுடைய வீரப்பாட்டை விளக்கி வெற்றித் திறனுடன் வித்தகமாய் இவன் உரைத்திருப்பது உய்த்துணரத் தக்கது.

இலங்கை வேந்தன் உள்ளம் நாணும்படி குத்திக்காட்டி இக்குமரன் பேசியும் அவன் கோபம் கொள்ளாமல் பழமை பாராட்டி உறவு கொண்டாட நேர்ந்தான். கிளை கூட்டி அவன் தழுவி யுரைத்த கிழமை மொழிகள் அயலே வருகின்றன.

உந்தைஎன் துணைவன் அன்றே ஓங்கறம் சான்றும் உண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டோ நீயவன் தூதன் ஆதல்
தந்தனன் நினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த! என்றான். (1)

தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந்து இருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தான் என்பதோர் பிழையும் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்றான் இறுதியின் எல்லை கண்டான். (2)

அந்நரர் இன்று நாளை அழிவதற்கு ஐயம் இல்லை;
உன்னரசு உனக்குத் தந்தேன் ஆளுதி ஊழி காலம்
பொன்னரி சுமந்த பீடத்து இமையவர் போற்றி செய்ய
மன்னவன் ஆக யானே சூட்டுவன் மகுடம் என்றான். (3)

அங்கதனைத் தன்வசம் செய்யும்பொருட்டு மிகவும் உரிமை யுடையவன் போல் இராவணன் இன்னவாறு உரையாடி யிருக்கிறான். உரைகள் உள்ளத்தை உணர்த்தியுள்ளன.

"அங்கதா! உன் தந்தை என்னுடைய அருமை நண்பன்; அந்த மகாவீரனை மறைந்து நின்று அநியாயமாய்க் கொன்ற மனிதனுக்கு நீ ஊழியம்செய்ய நேர்ந்துள்ளது எவ்வளவு இழிவு? பழிக்குப் பழி வாங்கவேண்டிய பகைவனைத் தொழுது வாழ்த்தி ஏவல் புரிய இசைந்திருப்பது முழு மடமையாம். வானரவேந்தனாய்த் தலைமை எய்தி யிருக்கவுரிய நீ நிலைமையை மறந்து புலை புரிந்துள்ளாய்! நல்ல வேளையாய் நீ இங்கு வந்தாய்; உனக்கு நானே முடிசூட்டி அரசபதவியைக் கொடுக்கிறேன்; கொடிய உன் சிறிய தாதையையும் அவனுக்குத் துணையாய் அமைந்துள்ள அந்த மனிதனையும் அடியோடு ஒழித்து அரசவாழ்வை நீ நெடிது அனுபவிக்கும்படி இன்று நான் முடிவுசெய்துள்ளேன். இழிந்த பழி நீங்கி உயர்ந்த புகழோடு நீ வாழவே உன்னை என்பால் விதி கொண்டுவந்து தள்ளியுள்ளது; அழகிய சீதையை நான் முன்னமே பெற்றுள்ளேன்; விழுமிய புதல்வனாக உன்னை

இன்று அடைந்திருக்கிறேன்; அரிய மகிமையுடன் உலகம் முழுவதையும் ஆளுகின்ற எனக்கு எதுதான் கிடையாது? எல்லாம் எளிதே எய்தி இன்பம் மிகப் பெறுவேன்; படைகளோடு வந்துள்ள அந்தச் சிறியமனிதர் இருவரும் நாளையே அழிந்துபடுவர்; அரியணையில் அமர்ந்து வானராதிபதியாய் நீ ஊழி காலமும் வாழ்வாய்; இலங்கையும் கிட்கிந்தையும் இனி என்றும் உறவுரிமையுடன் கூடி வாழும்; அந்த இனிய வாழ்வைக் கண்டு நீ உவகையடைந்து வருவாய்!'' என இங்ஙனம் நயமாய் இலங்கை வேந்தன் இனிது பேசியுள்ளான்.

வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த!

அங்கதன் தன்பால் வந்து சேர்ந்தது அவனுக்குப் பெரிய இராச யோகம் வந்ததாம் எனச் சிந்தை மகிழ இந்தவாறு செப்பியுள்ளான். உறவு நிலைகளை மருவி உரைகள் வந்தன.

தன் அருமை நண்பன் மகன் ஆதலால் அந்த உரிமையில் என்னுடை மைந்த! என்று இனம் தழுவி இனிது மொழிந்தான். தலைமகனை இந்திரசித்தைப் போலவே இக் குல மகனையும் பேணி வருவதாகப் பேருரிமை காட்டினன். உயர்ந்த அரசனாய்ச் சிறந்திருக்க வுரியவன் இழிந்த ஏவலாளனாய்த் தாழ்ந்திருப்பது ஈனம் என்று மானவுணர்ச்சி தோன்றச் சூழ்ந்து மொழிந்தான். சூழ்ச்சி மொழிகள் தொடர்ந்து வந்தன.

இராமனுக்குத் தூதனாய் இசைந்து வந்திருப்பது எண்ணவு முடியாத இழிபழி என்பான் நிந்தனை இதன்மேல் உண்டோ? என்றான். நிலைமைகளை யெல்லாம் நேரே நினைந்து சிந்தனை செய்து திருந்தும்படி தந்திரவுரைகள் ஆடி வருகிறான்.

தாதையைக் கொன்றான் என இராமனை இவ்வாறு குறித்துக் காட்டியிருக்கிறான். உன் தந்தையைக் கொலை செய்த அந்தக் கொலைகாரனை நீ கொன்று தொலைக்க வேண்டும்; அவ்வாறு கொல்லாமல் விட்டதோடு எல்லாவழிகளிலும் அவனுக்கு ஏவல் செய்ய நேர்ந்திருப்பது பொல்லாத புலைப் பழி எனக் கொலைத் தொழிலில் மூளும்படி குறிப்போடு கோள் மூட்டியுள்ளான்.

சிறியவன் ஆதலால் அறிய வுரியதை அறியாமல் மதி மருண்டு மானம் கெட்டிருக்கிறாய். இந்த ஈனம் நீங்கி விரைந்து

உயர்ந்துகொள்ள வேண்டும். அடிமைத்தனம் ஒழிந்து அரசனாய் வாழும்படியான காலம் நேர்ந்துள்ளமையினாலேதான் இன்று நீ என்னிடம் வந்து சேர்ந்தாய். உரியவனுக்குப் பிரியமாச் செய்யவுரிய அரிய உதவியை நானும் ஆற்ற நேர்ந்தேன்; இது எனக்குப் பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது.

சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனும் ஆகப்பெற்றேன்

தன்னுடைய பேற்றை வியந்து இராவணன் இப்படிப் பேசியிருக்கிறான். இது எவ்வளவு பேதைமை! காம வெறியனாய்ப் பித்துப் பிடித்திருத்தலால் சித்தம் களித்துப் பிதற்ற நேர்ந்தான்.

நல்ல காதலியும் செல்ல மகனும் கிடைத்ததைப் போல் உள்ளம் களித்துப் பேசியிருப்பது அவனது ஊன நிலையை உணர்த்தியுள்ளது.

இறுதியின் எல்லை கண்டான்.

யாதும் கருதி யுணராமல் கண்டபடியெல்லாம் பேசினவனைக் கவி இப்படி நமக்குக் காட்டியிருக்கிறார். அழிந்து போகத் துணிந்துள்ளவன் ஆதலால் சொல்லத்தகாத சொல்லைத் துடுக்காய்ச் சொல்ல நேர்ந்தான். நாச காலம் நண்ணியுள்ளமையால் நீச நிலையில் நிமிர்ந்து பேசினான். இறுதி = முடிவு, அழிவு.

பெற்றுள்ள பேறெல்லாம் இற்று அடியோடு அழியப் போகிறான் என்பதை இறுதி என்னும் சொல்லால் உறுதிபெற உரைத்தார். அழிய நேர்ந்துள்ளவன் அவல வுரைகள் ஆடினான்.

காண்பான் என எதிர்காலத்தால் கூறாமல் கண்டான் என இறந்த காலத்தால் குறித்தது அவன் விரைந்து அழிந்துபடுதல் தெரிய. குறிப்பு மொழிகள் கூர்ந்து நோக்கத் தக்கன.

சாகத் துணிந்தவன் விவேகம் குன்றி வெறிமண்டிப் பேசியிருக்கிறான். சீதையைப் பெற்றேன் என்றவன் செத்தவனே எனக் கவி செயிர்த்து உரைத்துள்ளார். துனித்தமொழி தனித்து வந்துள்ளது; அந்த வரவு நிலை நுனித்து நோக்கத்தக்கது.

நீதிக் கேடான கொடிய வார்த்தை ஒருவன் வாயிலிருந்து வருமானால் அது அவனுடைய ஆயுளைக் குறைத்து அழிவை விளைக்கும் என்பது ஈண்டு நுணுகி யுணரவந்தது.

நாச நிலையில் உள்ளவன் யோசனையின்றிப் பேசியிருக்கிறான்.

யானே சூட்டுவன் மகுடம்.

என்றது அங்கதன் பெறவுரிய அரசபதவியின் பெருமை தெரிய.

மூன்று உலகங்களையும் தனியுரிமையா ஆளுகின்ற சக்கரவர்த்தி ஆகிய தன் கையினலேயே மகுடமுடி சூட்டிக் கிட்கிந்தா ராச்சியத்தை அங்கதனுக்கு வழங்குவதாக இங்ஙனம் குறித்திருக்கிறான். உரிமையை உரியவனுக்கு உதவ உரைகள் வந்தன.

அரசுக்கு உரிய குலமகனை அயல் ஒதுக்கிச் சுக்கிரீவனை இராமன் அரசன் ஆக்கி வைத்திருப்பது தரும விரோதமான பெரிய அநீதி; அதனை ஒழித்து உரியவனுக்கேமுடிசூட்டி இராவணன் நீதிமுறை செய்யப்போவதாகஇவ்வாறு கூறியுள்ளான்.

தன்பால் பேரன்பு காட்டிப் பெருங் கிழமையோடு இலங்காதிபதி பேசிய மொழிகளைக் கேட்டதும் அங்கதன் கையைக் கொட்டிச் சிரித்து அவனை நோக்கி உரைத்த உரைகள் அடலாண்மையுடன் கிளைத்து வந்தன.

அங்கதன் அதனைக் கேளா அங்கையோடு அங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
இங்கு நின்றார்கட் கெல்லாம் இறுதியே என்ப துன்னி
உங்கள்பால் நின்றும் எம்பால் போந்தனன் உம்பி என்றான் (1)

வாய்தரத் தக்க சொல்லி என்னைஉன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந்து அரசது ஆள்கை
நீதரக் கொள்வேன் யானே இதற்கினி நிகர்வே றெண்ணின்
நாய்தரக் கொள்ளும் சீயம் நல்லரசு என்று நக்கான். (2)

எள்ளி இகழ்ந்து இறுமாப்போடு இராமதூதன் இராவணனை நோக்கி இப்படிப் பேசியிருக்கிறான். நண்புரிமைகாட்டி நயமா வசப்படுத்த முயன்றுஅவன் இதமாய்ப் பேசினன்; அந்த மாயச் சூழ்ச்சியைத் தகர்த்து எறிந்து மாறுபாடுமண்டி இவன் வீறோடு வெறுத்து உரைத்தான்

"அரக்கர் யாவரும் அடியோடு அழிந்து ஒழிவர் என்று தெளிந்து உன் தம்பி எம்பெருமான்பால் அடைக்கலம் வந்து புகுந்திருக்கிறான். அழிவு நிலையிலுள்ள நீ அழியாத அரச பதவியை எனக்குத் தருவதாக உரைத்தது பெரிய நகைப்பை

விளைத்தது. உனக்கு இழவோலை கொண்டு நான் இங்கே தூதனாய் வந்திருக்கிறேன்; எனது வரவு நிலையை உணராமல் உறவுரிமை கொண்டாடி வீணே ஆரவாரமாய்ப் பேசினது உனது அறிவீனத்தை விளக்கி நிற்கிறது. அரசு தருவதாக மருவிய உன்னையும் பெறுவதாக எண்ணிய என்னையும் நீ சரியாக அறிந்து கொள்ள வேண்டும். அறியாத மடமையினாலேதான் வறிதே பேச நேர்ந்தாய்!'' என இங்ஙனம் வீசி எறிந்து வீர கம்பீரமாய் வீறோடு உரையாடினான்.

நீதரக் கொள்வேன் யானே?

தன்னைக்குறித்து அங்கதன் என்னவாறு மதித்திருக்கிறான் என்பதை இதில் அறிந்து கொள்ளுகிறோம். இராவணனை நீ என்று முன்னிலைச் சுட்டாக ஈண்டுச் சுட்டி உரைத்தது உன்னி உணரவுரியது.

நாளை அழிந்து போக உள்ள நீ,

எந்தையின் வாலால் கட்டுண்டு மானம் கெட்ட நீ,

இனிய என் ஆண்டவனுக்குக் கொடிய பகையாய் மூண்டுள்ள நீ, பழி வழிகளில் இழிந்து பாழாயுள்ள நீ,

பாபகாரியங்களைச் செய்து பாவியாய் வளர்ந்துள்ள நீ,

என இன்னவாறு பல இழிவுகளை உன்னியுணர நீ என்னும் சொல் இங்கே நேர்ந்து நின்றது. உன்னை வாலால் அவமானப் படுத்திய மகாவீரனுடைய குமாரனுக்கு நீ கையால் முடி சூட்டுவேன் என்றது கழி மடமையாம் என அவன் விழி எதிரே நின்று வீறுகொண்டு பேசினான்.

இவ்வாறு இழிவு நிலைகளைக் குறித்து உரைத்தவன் அவ்வளவோடு அமையாமல் அதனைத் தெளிவுபடுத்த ஓர் உவமையை விரித்தான். உவமான உரை அவமானமாய் விரிந்தது.

நாய்தரக் கொள்ளும் சீயம் நல்அரசு என்று நக்கான்.

நீ தர நான் அரசு பெறுவது நாய் தரச் சிங்கம் கொள்ளுவது போலாம் என அங்கதன் இங்ஙனம் இலங்கை வேந்தனை நோக்கி உரைத்திருக்கிறான்.

தன்னைச் சிங்கம் ஆகவும் இராவணனை நாய் ஆகவும் குறித்

தது உயர்வும் இழிவும் ஒருங்கே உணர வந்தது.

இராமனைத் தொழுது தூதனாய் எழுந்த பொழுது சீயம் விண்மிசைப் படர்வதே போல் என்று அங்கதனைக் கவி அங்கே குறித்தார். இங்கே இவன் வாக்குமூலமாகவே அதனை வலியுறுத்தினர். தன்னை உயர்த்தி எதிரியைத் தாழ்த்தியது இகலால் எய்தியது. மாறுபாடு மண்டியுள்ளமையால் வார்த்தை சீறி வந்தது.

அமரரும் வணங்க அரசு புரிகிற ஒரு சக்கரவர்த்தியை இப்படி இழிவுற உரைத்தது தகாது ஆயினும் நிலைமை திரிந்தமையால் புலைமொழி புகுந்தது. பாவ வினைவால் அழிய மூண்டுள்ளவன் எதிரே பழிமொழியும் நேரே நீண்டு எழுந்தது.

அதிசய வீரனான வாலியின் புதல்வன் ஆதலால் இராவணனை இங்ஙனம் அங்கதன் எளிதாக இகழ்ந்து பேச நேர்ந்தான். இவனுடைய நெஞ்சத் துணிவும் வாய்த்துடுக்கும் வெஞ்சின வேகமும் இங்கே கொஞ்சம் மிஞ்சியிருக்கின்றன.

இராம பத்தினியைக் கரவாய்த் திருடி வந்தான் ஆதலால் அந்தத் திருட்டுத் தொழில் நாய்ச் செயல் என்பதை இவன் வாய்ச் சொல் வழங்கியது.

தன்னுடைய ஆண்டவனுக்குக் கொடிய அல்லலையும் நெடிய அவமானத்தையும் விளைத்துள்ள தீயவனை இச்சேயவன் உள்ளக் கொதிப்போடு இப்படி எள்ளி இகழ நேர்ந்தான்.

தன்னைச் சிங்கம் எனவும் இராவணனை நாய் எனவும் உவமைக் குறிப்பால் உரைத்தது உள்ளத் தருக்கை விளக்கியதோடு மேலே விளைய உள்ள வெற்றி நிலைகளையும் விளக்கி நின்றது.

இலங்கேசன் எனப் பெரு மகிமை பெற்றிருந்தவன் ஒரு வானர குமாரன் வாயால் இவ்வாறு ஈனமாய் வையப்பட்டான். தீவினைகள் மூண்டபொழுது எவ்வளவு பெரியமனிதனும் யாண்டும் இழிந்துபட நேர்வான் என்பது இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. வசைமொழி வயிரம் தோய்ந்து பாய்ந்தது.

வாய்த் துடுக்காய் அங்கதன் இங்ஙனம் கூறியதைக் கேட்டதும் இராவணன் கொதித்துச் சீறி இவனைக் கொன்று தொலைக்க மூண்டு வென்றி வாளை விரைந்து எடுத்தான். கனல் எனப் பொங்கி அங்ஙனம் கடுத்து எடுத்தவன் ஒரு குரங்கைக்

கொல்வது தன் பெரு வீரத்திற்கு இழுக்காம் என எண்ணி அடங்கினன். மண்டி எழுந்த தீ மாறி யடங்கியதுபோல் சீறி எழுந்தவன் சீற்றம் அடங்கி மாற்றம் விளம்பினன்.

மூதிர் வேகத்தோடு எதிரே நின்ற அங்கதனை இகழ்ந்து நோக்கி "இங்கே செத்து மடியத் துணிந்து வந்த குரங்கே! தூதன் என்ற நிலையில் நீ சொல்ல வேண்டியதைச் சொல்லிப் போ!" என்று சுளித்து உரைத்தான். இலங்கை வேந்தனுடைய உரையைக் கேட்டதும் அங்கதன் எதிர்மொழி கூறினன்.

### தூதன் ஓதியது.

என்னைக் கொல்ல மூண்ட நீ ஒல்லையில் மாறி என் சொல்லைக் கேட்க நீண்டது மிகவும் நல்லதாயது; யாவும் ஒளியாமல் சொல்லுகிறேன்; நீ தெளிவாகக் கேள்! என்று அங்கதன் நேரே கூற நேர்ந்தான்.

கூவியின்று என்னை நீபோய்த் தன்குலம் முழுதும் கொல்லும்
பாவியை அமருக் கஞ்சி அரண்புக்குப் பதுங்கி னானைத்
தேவியை விடுக அன்றேல் செருக்களத்து எதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக என்றான் அருளினம் விடுகி லாதான். (1)

பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாள் படைஞ ரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை இருஞ்செவி மூலையும் மூக்கும்
அரிந்தநாள் வந்திலாதான் இனிச்செயும் ஆண்மை யுண்டோ?

கிளையொடும் படைஞ ரோடும் கேடிலா உயிர்கட்கு எல்லாம்
களையெனத் தம்பி மாரை வேரொடும் களையக் கண்டும்
இளையவன் பிரிய மாயம் இயற்றி ஆயிழையை வெளவும்
வளைஎயிற்று அரக்கன் வெம்போர்க்கு இனிஎதிர் வருவதுண்டோ?

ஏந்திழை தன்னைக் கண்ணுற்று எதிர்ந்தவர் தம்மை எற்றிச்
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத்தன்னூர்
காந்தெரி மடுத்துத் தானும் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்தி லாதான் இனிப்பொரும் போரும் உண்டோ?

உடைக் குலத்து ஒற்றர் தம்பால் உயிர்கொடுத்துஉள்ளக்கள்ளம்
துடைத்துழி வருணன் வந்து தொழுதுழித் தொழாத கொற்றக்
கொடைத்தொழில்உம்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி
அடைத்துழி வந்தி லாதான் இனிவர ஐய முண்டோ? (5)

மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும்
நெறிப்புண்ட ரீக மன்ன முகத்தியர் முன்னே நென்னல்

பொறிப்புண்ட ரீகம் போலும் ஒருவனால் புணர்ந்த மௌவி
பறிப்புண்டும் வந்தி லாதான் இனிப்பொரும்பான்மை யுண்டோ?

என்றிவை இயம்பி வாளன்று ஏவினன் என்னை எண்ணி
ஒன்றுனக்கு உறுவ துன்னித் துணிந்துரை உறுதி பார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி யாயின் என்பின் வாயிலில் புறப்படு என்றான். (7)

(அங்கதன் தூது 31.37)

இலங்கை வேந்தனை நோக்கி அங்கதன் இங்ஙனம் இறுதியில் உறுதியாய்ப் பேசியிருக்கிறான். உணர்ச்சி நிலைகள் இகழ்ச்சிக் குறிப்புகளை எதிர் வீசி முதிர் வேகத்தோடு மூண்டு வெளி வந்துள்ளன. தனது நாதன் கூறியதாகத் தூதன் கூறியிருக்கிறான்.

என் ஆண்டவன் என்னை அழைத்து இலங்கைக்குள் தூது போய்வா என்று பணித்தான். அந்த வீர மூர்த்தி பேரருளால் கூறிய உறுதி மொழிகளை உன்னிடம் தொகுத்துக் கூறுகிறேன்; செவிசாய்த்துத் தொடர்ந்துகேள்: "தன்குலம் முழுவதையும் அநியாயமாய்க் கொல்லுகிற படுபாவியாகிய இராவணா! சீதா தேவியை என்னேரில் விடுகிறாயா? அல்லது போரில் வந்து உன் ஆவியை விடுகிறாயா? உன்பாட்டியாகிய தாடகையைக் கொன்று பருந்துகளுக்கு இரையூட்டியதைக் கேட்டும், மாமன் ஆன மாரீசனை மாய்த்ததை அறிந்தும், தங்கையின் கொங்கை மூக்கு செவி முதலிய உறுப்புக்களை அறுத்து ஊறுபடுத்தியதை உணர்ந்தும், கரன் தூடணன் முதலிய பதினாலாயிரம் அரக்கர்களை வனத்தில் ஒருங்கே வதைத்ததைத் தெரிந்தும் போருக்கு நேரே மூண்டு வராமல் மானம் கெட்டு மறைந்திருக்கின்ற அந்த ஈன நிலையினன் இனிமேல் சண்டைக்குத் துணிந்து வருவானா? முன்னம் ஒரு தூதனான அனுமான் புகுந்து அரக்கர்பலரைக்கொன்று அக்கனைத் தொலைத்து நகரை எரித்து அழித்து மீண்டபொழுது மூண்டு வராமல் மாண்டவன் போல் மறுகியிருந்தான். நேற்றுச் சுக்கிரீவனாலே மணிமகுடங்கள் பறிக்கப்பட்டு முடியிழந்த தலையனாய் அடியொதுங்கிப் போனவன் மறுபடியும் அமருக்கு ஆண்மையோடு நேரே வருவானா? பேடிபோல் பதுங்கியிருப்பது பெரும்பிழை; வீரன் ஆனால் விரைந்து போருக்கு வரட்டும்" என இன்னவாறு உன்பால் சொல்லிவரும்படி என்பால் எனது தலைவர் சொல்லி விடுத்தார். நிலைமைகளை உணர்ந்து கொள்ளுக.

நான் ஒன்று உன்னிடம் உரிமையோடு சொல்லுகிறேன்: "கற்புத் தெய்வமான எங்கள் பிராட்டியை மரியாதையுடன் கொண்டுவந்து எம் ஆண்டவன்பால் சேர்த்துவிட்டுச் செய்த பிழையை மன்னித்தருளும்படி தொழுது உய்வதே உன்க்கு நல்லது; இல்லையானல் நீயும் உன் குலமும் அடியோடு நாசமாய் ஒழிவீர்கள்; இதனை உண்மையாத் தெளிந்து கொள்ளுக" என இங்ஙனம் அங்கதன் மொழிந்து நின்றான். மொழிகள் அவனுடைய மதி மாண்பையும் மனவுறுதியையும் வெளிசெய்துள்ளன.

தன்குலம் முழுதும் கொல்லும் பாவி.

இராவணனை இராமன் இவ்வாறு குறித்து விடுத்ததாக அங்கதன் இங்கே உரைத்திருக்கிறான். தலைவன் சொல்லாததையெல்லாம் நிலைமைகளை எதிர்நோக்கி நேரே படைத்து மொழிந்துள்ளான். தன் பிழைகளை நினைந்து எதிரி நாணி அயரும்படி ஆணித்தரமாய் ஆண்மையோடு உரையாடியிருக்கிறான்.

தன்னுடைய குலம் முழுவதும் நாசம் அடையும்படி நீசநிலையில் இராவணன் நிமிர்ந்து நிற்கின்றான் ஆதலால் குலம்கொல்லும் பாவி என நேர்ந்தான். பழியும் பாவமும் விழி தெரிய விளக்கி அழிவு நிலைகளைத் தெளிவாக உணர்த்தினன்.

கூவி என்றது தன்னை இராமன் அழைத்த அருமை அறிய. தனக்குத் தனியுரிமையாகத் தலைமை தந்துள்ளது தெரிய வந்தது.

பதினேழு வெள்ளம் சேனைகளுக்குத் தலைமையாய் அமர்ந்து தெற்குக் கோட்டை வாசலில் போர்மேல் மூண்டு நின்ற அங்கதனை அழைத்து எதிரியிடம் தூதுபோய் வரும்படி இராமன் ஏவியருளினன் ஆதலால் அந்த ஏவலை ஆவலோடு குறித்தான். தான் வந்த நிலையைச் சிந்தை உவந்து உரைத்தான்.

இலங்கை வேந்தனைப் போருக்கு அறைகூவி அழைத்து வருமாறு அயோத்தி வேந்தன் கிட்கிந்தைச் செம்மலை இலங்காபுரியுள் உய்த்திருக்கும் திறம் உய்த்துணர வந்தது. தூதனாய் வந்தவன் சோதனைகள் பலவும் கடந்து சாதனையாய் நின்று போதனைகள் புரிந்து வாத முறையில் உரையாடுகின்றான்.

ஆவியை விடுக என்றான் அருள் இனம் விடுகிலாதான்.

தன்னைத் தூதனாக ஏவியவன் உரைத்தருளிய திறனையும் நிலையையும் இவ்வாறு குறித்திருக்கிறான். உடனே போரைத் தொடங்கி ஊரை அழிக்காமல் கருணைசெய்து கண்ணோடி நின்று இப்பொழுதாவது பகைவன் சமாதானத்துக்கு வந்து சேரானா? என்று தண்ணளி புரிந்து தூதுவனை ஆதரவாய் உள்ளே உய்த்துள்ளான் ஆதலால் அந்தப் பேரருள் நிலையை வியந்து கூறினான்.

அடியோடு எதிரியை அழிவு செய்ய வேண்டிய அமையத்தும் அளி புரிந்து தாமதித்திருக்கிறான் என்பான் அருள் இனம் விடுகிலாதான் என்றான். அழகிய இலங்கை அழிந்து படுமே! அரக்கர்குலம் பாழாய் விடுமே! என்று இரக்கம் மீதூர்ந்து இவ் வீரமூர்த்தி எண்ணியிருத்தலை இவ்வுரை கண் எதிரே காட்டி நின்றது. அபாயம் நீங்கி வாழ உபாயம் கூறினான்.

தேவியை விடுக அன்றேல் ஆவியை விடுக.

என்றது ஏவிய தூதின் பயன் இருவகையுள் அடங்கியுள்ளமை அறிய வந்தது. சாக நேர்ந்திருப்பது யூகமா விளங்கியது.

இராவணா! நீ உயிர் வாழ்ந்திருக்க வேண்டுமானால் உடனே செய்ய வேண்டியது இது என்று தெளிய விளக்கியிருக்கிறான்.

குலத்தோடு நீ செத்தொழிய வேண்டிய நிலை மூண்டுள்ளது; இதிலிருந்து நீ உய்ய வேண்டுமாயின் ஒரே வழிதான் உளது; அது பிராட்டியை எம்பெருமான்பால் விட்டு விடுவதேயாம் எனச் சுட்டியுரைத்துத் துரிதம் காட்டி நின்றான்.

இவ்வாறு முதலில் சுருக்கிச் சொன்னவன் பின்பு இராமனுடைய பெருமகிமைகளையெல்லாம் எடுத்து விளக்கி இராவணன் உள்ளம் நாணி உரோசம் கொள்ளும்படி எள்ளி மொழிந்தான். இறுதியில் அறுதியிட்டு உறுதி கூறினான்.

துன்று இருங்குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி யாயின் என்பின் வாயிலில் புறப்படு.

அங்கதன் முடிவாக இங்ஙனம் மொழிந்துள்ளான்.

துன்று இருங் குழலை என்றது நெருங்கி அடர்ந்த நீண்ட கூந்தலையுடையாள் என்றவாறு. சீதையை இவ்வாறு குறித்தது அவளது திவ்விய சவுந்தரியத்தின் செவ்வியை நினைந்து இரங்கி,

விழுமிய நிலையில் செழுமி யிருந்த அந்த அழகிய கூந்தல் மாசுபடிந்து சடையாய்த் திரண்டு கிடக்க மடையா! செய்துள்ளாயே! நீ விளங்குவாயா? அடியோடு அழிந்து போக இந்தத் தீயசெயலைச் செய்ய நேர்ந்தாய்! அரக்கிகள் யாவரும் தலைவிரி கோலமாய் அழுது தவிக்க உன் குல முழுவதும் நாசமடையச் செய்த நீசச் செயல் இது; இதிலிருந்து விலகிப் பிழை என்று நிலைமையை நினைவுறுத்தி நேரே தெளிவுறுத்தினன்.

தேவி விரித்தகுழல் பாவியாகிய உன் குலத்தை அடியோடு முடித்தாலன்றி முடியாதுஎன்று தெரிகின்றது என முடிவையும் முடிவாக வுணர்த்தினன். முடிவு நேராமல் விடிவு கண்டு வாழ வேண்டுமாயின் அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது என அதனை விழி தெரிய விளக்கினன்.

தொழுது வாழ் என்றது உடன்படிக்கையின் உறுதிகாண வந்தது. வாழ வேண்டுமாயின் இவ்வாறு செய்ய வேண்டும்.

இராமனை வணங்கி அவன் ஏவலின் வழியே இசைந்து வாழலாமே யன்றி வேறு விதமாய் நீ வாழ இயலாது என வாழ்க்கைத் திட்டத்தையும் வரைந்து குறித்தான். இவ்வாறு வாழ மனமின்றிச் சாகத்தான் துணிந்துள்ளாய்! என்றால் இப்பொழுதே வெளியேறி என்பின்னே வா என்று வீரவாதமாய் அறை கூவி நேரே போருக்கு அழைத்தான்.

என்பின் புறப்படு

என்றது இறப்பின் திறப்பாடு தெரிய எழுந்தது.

போருக்கு மூண்டு வீரப் படைகள் ஊரைச் சுற்றி ஆரவாரம் செய்து நிற்கின்றன; நீ பேடிபோல் வீட்டுக்குள் மறைந்திருக்கிறாய்! விரைந்து வெளியேவா! காலம் தாழ்த்தாதே! என்று கடுத்து மொழிந்து அடுத்து வரும்படி ஆர்த்து விரைந்தான்.

### கலகம் நேர்ந்தது

இந்த உரைகளைக் கேட்டதும் இராவணனுடைய உள்ளம் கொதித்தது. உருத்துச் சீறி இவனைக் கொன்று தொலையுங்கள் என்று வென்றி வீரரோடு வெகுண்டு நின்றான். அடலாண்மைகள் மிகுந்த மல்லர் நால்வர்கள் ஒல்லையில் பாய்ந்து அங்கதனைப் பற்றிக் கொண்டனர். அங்ஙனம் மூண்டு பற்றவே அந்த நால்

வரையும் தன்னுடைய இரண்டு கைகளால் அணைத்து இடுக்கி இந்த ஆண்டகை மேலே தாவினன். வான வீதியில் ஏறினன். ஆகாயத்தில் நின்றபடியே தலைகள் நான்கையும் திருகி எடுத்துத் திசைகள்தோறும் வீசினன். கோபுர சிகரத்தில் நின்று ஊரவர் கேட்க உறுதிமொழி கூறினன்: "ஓ இலங்கை வாசிகளே! போர் மூண்டது; கூரிய பாணங்கள் உள்ளே பாயப் போகின்றன; முதியவர் இளையவர் துறவியர் பெண்டிர் முதலிய யாவரும் வெளியேறிவிடுங்கள்; விரைந்து போங்கள்" என இங்ஙனம் இரைந்துகூவி மீண்டு பாய்ந்து இராமன் அடியில்வந்து வணங்கி நின்றான். உற்ற நிலையை உரை என்று அக் கொற்றவன் வினவ இவ் வெற்றி வீரன் ஒரே மொழியில் விநயமா யுரைத்தான். "அந்த மூர்க்கனுடைய முடித்தலை படித்தலத்தில் உருண்ட போதுதான் அவன் அகத்தின் அடித்தலத்தில் உறைந்துள்ள ஆசை அடியோடழியும்" என்று தெளிவுதோன்றக் குறித்தான்.

தன்னைப் பாய்ந்து பிடித்த பொல்லாத மல்லரைக் காய்ந்து கடுத்து உயிர் குடித்து உடல்களை வீசி எறிந்து அடலாண்மையோடு அங்கதன் மீண்டு வந்துள்ளது அமரரும் வியந்து போற்றும் அதிசய வெற்றியாய் யாண்டும் துதி செய்ய நின்றது.

மல்லரை மாய்த்தது

ஏவி னன்பிடித் தாரை எடுத்தெழத்
தாவினன் அவர் தந்தலை போயறக்
கூவி னனவன் கோபுர வாயிலில்
தூவினன் துகைத்தான் இவைசொல்லினன். (1)

ஊராரை எச்சரித்தது

ஏமம் சார எளியவர் யாவிரும்
தூமம் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின்! போமின்! புறத்தென்று போயினன். (2)

வான் வழி வந்தது.

அந்தரத்திடை ஆர்த்தெழுந் தானவன்
சிந்து ரத்தம் துதைந்தெழு செச்சையான்
இந்து விண்ணின் றிழிந்துள தாமென
வந்து வீரன் அடியில் வணங்கினன் (3)

## உற்றதை உரைத்தது.

உற்ற போதவன் உள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்
முற்ற ஓதினன்? மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி ஆசை அறான் என்றான். (4)

(அங்கதன் தூது 40-43)

அங்கதன் இராவணனிடம் தூதுபோய் வந்து இராமனிடம் உரைத்து நிற்கும் நிலையை இங்கே உணர்ந்து நிற்கிறோம்.

பகைவர் திரண்டு மிகை செய்தாலும் அடலோடு மீண்டு வர வல்லவன் என முன்னம் இராமன் கருதி விடுத்தபடியே இவன் உறுதிபுரிந்து வந்துள்ளமை ஈண்டு ஊன்றி உணர வுரியது.

அஞ்சாமை ஊக்கம் அருந்திறலாண்மை பெரும் போர் வீரம் திருந்திய சொல்வன்மை முதலிய உயர் நிலைகள் எல்லாம் அங்கதனிடம்ஒருங்கேநிலைத்துள்ளமையை இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளால் அறிந்து நெஞ்சம் வியந்து கொள்ளுகிறோம்.

*ஏமம் சார எளியவர் யாவிரும்*
*போமின்! போமின்!*

மீண்டு வரும்போது ஊரார்உணர இவ்வாறு உரிமையோடு உறுதி கூறியுள்ளான். ஏமம்=சேமமான இடம். வீரன் சுடு சரங்கள் பாய்ந்தால் யாவும் நீறாய் அழிந்துபடுமே; அவ்வாறு பட்டு மடியாமல் தப்பிப் பிழைக்கும்படி பொது மக்களுக்கு இப்படிப் புத்தி போதித்திருக்கிறான்.

பண்டு ஒரு பாண்டிய மன்னன் பகைவனோடு போராட மூண்டான்; படைகள் அவன் ஊரை வளைந்து கொண்டன. பசுக்கள் பெண்டிர் அந்தணர் முதலிய நல்லியல்பாளரை யெல்லாம் வெளியேறி அயலே போய்விடும்படி முதலில் பறைசாற்றி யருளினான். கூறியருளிய முறை நீர்மை நிறைந்து நின்றது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என

அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.'' (புறம் 9)

எம் அம்பு புகுமுன் நுமக்குப் புகலிடத்தை நாடிக் கொள்ளுங்கள் என அந்தணர் முதலாயினோரை நோக்கி அரசன் அருள் புரிந்துள்ளமையை இதனால் அறிந்து கொள்ளுகிறோம்.

வீரன் சுடுசரம் வீழ்வதன்முன்எளியவர் யாவிரும் ஏமம்சார்க!

என அங்கதன் கூறியிருப்பது பண்டைக் காலத்தே இத் தண்டமிழ் நாட்டில் நிகழ்ந்துள்ள போர் முறையை நேரே அடியொற்றியுள்ளது. உண்மை நிலைமைகள் ஓர்ந்து சிந்திக்கவுரியன.

மண்டமர் மேல்கொடு வந்தன மின்னே
தண்டக நாட்டுறை தாபதர் நோயோர்
பெண்டிரும் நும்மரண் ஏகுதிர் பெட்டென்று
எண்டிசை ஆர்ப்ப இசைப்பறை சாற்றி. (காஞ்சிப்புராணம்)

இந்த நாட்டுப் போர்முறையை இதுவும் காட்டியுள்ளது.

அங்கதன் இராவணன்பால் தூது சென்று இராமநாதன் பெருமையை உரைத்தது போல் வீரவாகுதேவர் சூரபன்மனிடம் தூதுபோய் முருகப் பெருமான் மகிமைகளை உரைத்திருக்கிறார். அயலே வருவன காண்க.

அளப்பரும் குணத் தாதியாம் எம்பிரான் அமரர்
தளைப்படுஞ் சிறை மாற்றவும் சதுர்முகன் முதலோர்
கொளப்படும்துயர் அகற்றவும் கொடியரை அறுத்து
வளப்படும்பரிசு உலகெலாம் போற்றவும் வந்தான்.

வாழியானநின் ஆயுளும் வன்மையும் வரமும்
கேழில் சுற்றமும் படைகளும் வான்தொடக் கிளர்ந்து
பூழி யாலுயர் மால்வரைச் சூழலில் புகுந்த
ஊழி மாருதம் போலடும் எம்பிரான் ஒருவேல்.

ஆகையால்இவை உணர்ந்திலை இணையிலா தமர்ந்த
ஏகநாயக முதல்வனைப் பாலனஎன்று இகழ்ந்தாய்

சேகுலாவிய மனமுடைக் கற்பிலாச் சிறியோய்!
போக போகயாம் இவ்வொரு தவற்றையும் பொறுத்தாம்.
உறுதி யின்னம்ஒன் றுரைக்குவம் நீயுமுன் கிளையும்
இறுதி யின்றியே எஞ்சுதல் வேண்டுமேல் இமையோர்
சிறை விடுக்குதி இகலினைத் தவிருதி செவ்வேள்
அறைகழல் துணை அரணம்என்று உன்னியே அமர்தி. (4)

(கந்தபுராணம்)

சிறையில் வைத்துள்ள தேவர்களை வெளியே விட்டுச் செவ் வேளைத் தொழுதுவாழ்; இல்லையானால் குலத்தோடு நீ அழிந்து போவாய் என அசுர வேந்தனிடம் வீரவாகுதேவர் இவ்வாறு கூறியிருக்கிறார். சிறையிலுள்ள தேவியை விடுத்து இராமனை வணங்கி வாழுக; இன்றேல் அடியோடு அழிந்துபடுவாய் என அரக்கர்பதிக்கு அங்கதன் உரைத்திருப்பது இதனோடு இணைத்து எண்ணவுரியது.

"அடடா வெளியே புறப்படடா! இல்லை ஆகில்
சீதையை விட்டு விடடா!
தொடரும் வீண்பழி தேடிக்கொண்டாயே! முன்ஒரு
தூதன்வந்து செய்ததைக் கண்டாயே—நானும்
செயவீரராம் அந்த ரகுவீரர் விடவந்த
தூதன் தூதன் தூதன் வெட்கம் உண்டானால்
அடடா வெளியே புறப்படடா." (இராம நாடகம்)

அங்கதன் தூதைக் குறித்து இராம நாடக ஆசிரியர் இவ் வாறு பாடியிருக்கிறார். இந்தப் பகுதி போருக்கு நேர்முகமாய் அமைந்துள்ளது. அரிய பல நீர்மைகள் சுரந்து வீரப்பாடுகள் விரிந்து வெற்றித் திறங்கள் நிறைந்துள்ளன.

தூதனுய்ச் சென்ற அங்கதன் மீண்டு வந்து இராமனை வணங்கி விரித்து வேறு கூருமல் சுருக்கமாய் உரைத்தது சுவை சுரந்து நின்றது.

மூர்க்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசை அருன்.

தான் தூது சென்று தெளிந்து வந்ததை இவ்வாறு மொழிந்து நின்றுன். ஒரு மொழியுள் பலவிரிவுகள் மருவி யுள்ளன.

"என் தேவியை விடுகின்றுனு? அல்லது தன் ஆவியை விடு கின்றுனு?" என்று கேட்டு வா! என இராமன் ஏவியதற்கு

இயைய இந்தப் பதில் மேவி வந்தது. அவன் மாண்டு மடிந்தால் ஒழிய மையல் நோய் நீங்காது என்பதைப் பாங்காக உணர்த்தினன். அந்தப் பாவி நேரே சாகத் துணிந்துள்ளான்; போரே இனி வேகமாய்ச் செய்யவுரியது என்பது குறிப்பு.

இராவணனை இங்கே மூர்க்கன் என்றது தான் கொண்ட தீமையை விடாப்பிடியனுய்ப் பற்றிநிற்கும் அப்பான்மை தெரிய.

மூர்க்கனும் முதலையும் கொண்டது கைவிடா.

என்னும் பழமொழியை வழிமொழிந்து இது வந்துள்ளது.

தலை அற்ற-போதுதான் ஆசை அறும் என்றதனல் அவனுடைய நிலை அறிய நேர்ந்தது. கழிபெருங் காமியாய்ப் பழி படர்ந்துள்ள அவன் அழிவுபடவே அமைந்துள்ளான் என்பதைத் தெளிவுபட விளக்கி அமரை விரைவில் ஊக்கினன்.

## போர் மூண்டது.

அங்கதன் வந்து சொன்னதைக் கேட்டதும் இராமன் சுக்கிரீவனை நோக்கினன். போரில் மூளுக என்று இவ் வீரமூர்த்தி பார்க்கவே அவ் வானர வேந்தன் விரைந்து சேனைத் தலைவர்களை ஏவினன். எல்லா இடங்களிலும் இருந்து படைகள் ஆரவாரமாய் ஆர்த்தெழுந்தன. வெளியில் சூழ்ந்துள்ள அகழிகளை முதலில் தூர்த்தன. நான்கு கோட்டை வாசல்களிலும் மூண்டு புகுந்தன. நீண்ட மதில்கள் மேலேறி யாண்டும் உள்ளே பாய்ந்தன. எதிரே அகப்பட்ட அரக்கர்கள் எவரையும் வதைத்துச் சிதைத்தன. இருதிறப்படைகளும் எதிர் எதிர் பொருது முதிர் வேகத்துடன் மூண்டு போராடின. நிருதர் சேனைகள் நிறைந்து நெருங்கின. யாண்டும் போர்கள் விரைந்து மூண்டன.

வாள் வேல் சூலம் சக்கரம் தண்டு பிண்டி பாலம் முதலிய கொலைக் கருவிகளோடு யாண்டும் மூண்டு பாய்ந்து அரக்கவீரர்கள் நீண்டு பொருதனர். எங்கும் கொலைகள் பொங்கி விழுந்தன. மரங்களும் கல்லுகளும் கொண்டு போராடிய குரங்குப் படைகள் கொடிய ஆயுதங்களையுடைய அரக்கர் படைகள் எதிரே அலமந்தழிந்தன. காலிழந்தும் தலையிழந்தும் வாலிழந்தும் பல மாண்டு மடிந்தன. தம் படைகள் தளர்ந்து படுதலைக் கண்டதும் நீலன் குமுதன் முதலிய தானைத்தலைவர்கள் வானர

சேனைகளை எவ்வழியும் ஊக்கி ஏவி உருத்துப் பொருதார். மாலி கபாலி சுமாலி சுபாரிசன் முதலிய பெரிய படைத் தலைவர்கள் தம் படைகளைத் தூண்டி அடுசமராடினர். இருவழியும் படு கொலைகள் விழவே எவ்வழியும் பிணங்கள் குவிந்தன. இரத்தங்கள் பெருகின. போர்வெறிகள் எங்கும் பொங்கி ஓங்கின; இராவணன் நேரே தேர் ஏறி வந்தான். தங்கள் குலத் தலைவன் அமர்த் தலத்துக்கு வந்ததைக் கண்டதும் அரக்கர் வீரர்கள் யாவரும் கடல் முழங்கியதுபோல் அடல்மிகுந்து ஆரவாரத்துடன் போராட நேர்ந்தார். பெரிய கடலிடையே மேருமலை விளங்கியது போல் உரிய படைகள் புடைசூழ இலங்கைவேந்தன் தேரேறி வரவே அமரர் யாவரும் அஞ்சி நின்றனர். இராவணன் போர்க் களம் புகுந்தான் என்றதை அறிந்ததும் இராமன் உவந்து எழுந்தான். ஓங்கிய உவகை பாங்கறிய வந்தது.

### இராமனது போர்க் கோலம்

ஆங்கவன் அமர்த்தொழிற்கு அணுகி னானென
வாங்கினன் சீதையை என்னும் வன்மையால்
தீங்குறு பிரிவினல் தேய்ந்த தேய்வுஅற
வீங்கின இராகவன் வீரத் தோள்களே. (1)

தொடையுறு வற்கலை ஆடை சுற்றிமேல்
புடையுறு வயிரவாள் பொலிய வீக்கினன்
இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர்
கடையுறு நோக்கினில் காணும் காட்சியான். (2)

பூவுயர் மீனெலாம் பூத்த வானிகர்
மேவிருங் கவசமிட்டு இறுக வீக்கினன்
தேவியைத் திருமறு மார்பில் தீர்ந்தனன்
நோவிலள் என்பது நோக்கி னன்கொலோ? (3)

புதையிருட் பொழுதினும் மலரும் பொங்கொளி
சிதைவரு நாள்வரச் சிவந்த தாமரை
இதழ்தொறும் வண்டுவீற் றிருந்த தாமெனத்
ததைவுறு நிறைவிரல் புட்டில் தாங்கினன். (4)

கிளர்மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின்னென
வளர்பிறை நெற்றியில் பட்டம் ஆர்த்தனன்
இளவரிக் கவட்டிலை யாரொடு ஏர்பெறத்
துளவியல் தும்பையும் சுழியச் சூடினன். (5)

ஓங்கிய உலகமும் உயிரும் உட்புறம்
தாங்கிய பொருள்களும் தானும் தானென
நீங்கியது யாவதும் நினைக்கிலேம் அவன்
வாங்கிய வரிசிலை மற்றொன்றே கொலாம். (6)

நாற்கடல் உலகமும் விசும்பும் நாண்மலர்
தூர்க்கவெஞ் சேனையும் தானும் தோன்றினான்
மாற்கடல் வண்ணன்தான் வளரு மாலிரும்
பாற்கட லோடும்வந்து எதிரும் பான்மையான். (7)

ஊழியின் உருத்திரன் உருவு கொண்டுதான்
ஏழுயர் உலகமும் வீக்கினா னென
வாழிய வரிசிலைத் தம்பி மாப்படைக்
கூழையின் நெற்றிநின் றானைக் கூடினான். (8)

யுத்த சன்னத்தனாய்ப் போர்க்கோலம் பூண்டு இராமன் வந்திருக்கும் வீரக் காட்சியை வியந்து பார்க்கிறோம். உடுத்தி யிருந்த வற்கலையை வரிந்துகட்டி, மார்பில் கவசம் பூண்டு, கை விரல்களில் எய்யுறைகள் இணைந்து, காலில் வீரக்கழல் புனைந்து, நெற்றிப் பட்டம் அணிந்து, அம்புப் புட்டிலை முதுகில் தாங்கி, தும்பைப் பூவைத் தலையில் சூடி, வில் ஏந்தி வீர கம்பீரமாய்ப் போர்க்களத்துக்கு இவ் வெற்றி வீரன் வந்திருக்கிறான். வரவு நிலைகளை உள்ளக் கண்களால் உய்த்து நோக்கி உவகைமீதூர்ந்து நிற்கிறோம். எதிரி சமர்க்களத்துக்கு வந்திருக்கிறான் என்று அறிந்ததும் இவ் வீர வள்ளலுடைய உள்ளம் உவகையில் துள்ளி யிருக்கிறது. நெடுநாளாக எதிர்நோக்கி யிருந்த போர்வேட்கை ஈண்டு நேரே தீர நேர்ந்துள்ளமையால் ஆராமை மீதூர்ந்து நின்றது. வீரக் களிப்போடு விரைந்து வந்தான்.

பகைவனோடு போராடி வீர ஆடல் புரிந்து வெற்றி பெறுவதில் இக் கொற்றவன் கொண்டுள்ள ஆசையை வித்தக விநோதமா விளக்கி யுத்த நிலையைக் கவி துலக்கி யிருக்கிறார்.

சீதையைப் பிரிந்து அந்தப் பிரிவினால் வருந்தி மெலிந்திருந்த இராமனுடைய தோள்கள் மாற்றானோடு போராட மூண்டபொழுது விம்மிப் புடைத்து வீறுகொண்டு நின்றன என்றது இவ்வீரனது வெற்றித்திறலை வியத்தகு நிலையில் விளக்கியுள்ளது.

இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர்
கடையுறு நோக்கினில் காணும் காட்சியான்.

வற்கலை உடையை வரிந்து சுற்றிப் போருக்குக் கச்சை கட்டி வந்த ஆளை இந்தவாறு கவி வரைந்து காட்டியிருக்கிறார்.

வினைகளின் எல்லையைக் கடந்து தனி நிலையில் தலை சிறந்து நிற்கிற தத்துவஞானிகள் முடிவான யோகக் காட்சியில் கண்டு களிக்கின்ற மூலப்பொருளே இந்தக் கோலம் பூண்டு போருக்குப் புறப்பட்டுள்ளது என இங்ஙனம் புலப்படுத்தியுள்ளார்.

யாரும் எளிதில் காண முடியாத அந்தக் காட்சியான் குரங்குகள் முதல் எல்லாரும் நேரே காணும்படி வில்லை ஏந்தி இந்த வீரக் காட்சியில் வெளிவந்திருக்கிறான். காவிய நாயகனுடைய திவ்விய நிலைமையைச் செவ்வி நேர்ந்த போதெல்லாம் சிந்தித்து உணரும்படி சீவிய ஓவியமாக் கவி காட்டி வருகிறார்.

கோதண்டத்தைக் கையில் ஏந்தி இராமன் போர்க்களத்துக்கு வந்தபோது சேனைத் திரள்களெல்லாம் சிந்தை களித்தன. படைகளின் பின் அணியில் இலக்குவன் யாவும் கூர்ந்து நோக்கி வீரத்திறலோடு வீறுகொண்டு நின்றான். ஊழிக் காலத்தில் உலகங்களை யெல்லாம் ஒருங்கே அழிக்க மூண்டு உருத்திர மூர்த்தி உக்கிர வீரமாய் உருத்து நிற்பதுபோல் அங்கே ஊக்கி நின்ற தம்பி அருகே இந் நம்பி அணுகினான்; அப்பொழுது எங்கும் உவகை பொங்கி எழுந்தது.

வானர வீரர்கள் எவ்வழியும் வெவ்வலியாளராய் வீறோடு போராடினர். இருதிறப் படைகளும் ஒரு திறத்திலும் குன்றாமல் பொருதிறத்தில் முனைந்தன. தங்கள் சக்கரவர்த்தி தேரேறிப் போர்க் களத்திற்கு நேரே வந்திருத்தலால் அரக்கருடைய சேனைகள் அதிசய உற்சாகத்தோடு யாண்டும் மூண்டு பொருதன. இருவகையிலும் படைகள் மாண்டன. வானவர் தானவர் எவரையும் எளிதேவென்று வெற்றிவீரர் எனக் களிமிகுத்து நின்ற அரக்க வீரர்கள் வானரங்கள் எதிரே மானமழிந்து மடிந்து வீழ்ந்தனர். சிங்கங்களைக் கண்ட நரிகளைப்போல் அரக்கர்களைக் கண்டால் குரங்குகள் பதறிச் சிதறி ஓடிப் போய்விடும் என்று உறுதி பூண்டு ஊக்கி வந்த பெரிய சேனைத் தலைவர்களும்

அரிய போர் யாதும் ஆற்றமாட்டாமல் அலமந்து செத்தனர். தன் படைகள் அழிந்துபடுவதைக் கண்டதும் இராவணன் சினந்து சீறி விரைந்து வில்லை வளைத்து யாண்டும் அம்புகளை ஏவி மூண்டு பொருதான். வானரங்கள் பல மாண்டு மடிந்தன. அவனுடைய பாணங்கள் பாய்ந்த திசைகளி லெல்லாம் படு கொலைகள் புரிந்தமையால் படைகள் நிலைகுலைந்தன.

உருமிடித்துழி யுலைந்து ஒளிக்கும் நாகம்ஒத்து
இரியலுற்றன சில; இறந்தவாற் சில;
வெருவலுற்றன சில; விம்ம லுற்றன;
பொருகளத்து உயிரொடும் புரண்டு போம்சில. (1)

பொரக்கரு நிறநெடு விசும்பு புண்பட
இரக்கமில் இராவணன் எறிந்த நாணினால்
குரக்கினம் உற்றதென் கூறின் தன்குலத்து
அரக்கரும் அனையதோர் அச்சம் எய்தினர். [2]

வீடணன் ஒருவனும் இளைய வீரனும்
கோடணை குரங்கினுக்கு அரசும் கொள்கையான்
நாடினர் நின்றனர் நாலு திக்கிலும்
ஓடினர் அல்லவர் ஒளித்த தும்பரே. [3]

இராவணனுடைய அடலாண்மையும் அதிசய ஆற்றலும் இங்கே அறிய வந்தன. அவ் வீரன் வெகுண்டு போராடிய பொழுது படைகள் வெருண்டு மாண்டது வியப்பை விளைத்தது. பகழிகள் வெகு வேகமாய் வேலை செய்துள்ளன.

இவ்வாறு அவன் மூண்டு போராடி வருவதையும் வானரப் படைகள் மாண்டு விழுவதையும் கண்டு சுக்கிரீவன் உள்ளம் கொதித்தான். உக்கிர வீரமாய் வந்து நேரே எதிர்த்து நெடும் போர் புரிந்தான். கல்லும் மரமும் கொண்டு இவன் கடுஞ்சமர் ஆடினன்; தேரிலிருந்துகொண்டு வில்லால் எய்து அவன் வெந் துயர் விளைத்தான். முதல்நாளைப்போல் உடலோடு ஒட்டி மல் லாட வாய்க்கவில்லை ஆதலால் அவனுடைய வில்லாடலால் இவன் அல்லல் பல அடைந்தான்; முடியில் மார்பில் பாய்ந்து ஊடுரு விய பாணத்தால் வானர வேந்தன் மயங்கி வீழ்ந்தான்; அயலே நின்ற சேனைத்தலைவர் இவனை வாரி எடுத்துக் கொண்டுபோய் ஆறுதல் செய்தனர். ஆகவே வேகமாய் மூண்டு அனுமான்

நேர்ந்தான். தன் குலத்தலைவனை நிலைகுலைத்தான் என்று கொதித்துப் பாய்ந்த மாருதி நேரே மலை ஒன்றை வலிந்தெடுத்து அவன் தலையை நொக்கி எறிந்தான்.

பரிநிசேய் தேரு முன்னம் பருவலி அரக்க! பல்போர்
புரிநியோ என்னேடு என்னுப் புகைஎழ விழித்துப் பொங்கி
வருதியோ வாஎன்பான் மேல் மலைஒன்று நிலையின் வாங்கிச்
சுருதியே அனைய தோளால் வீசினன் காலின் தோன்றல் [1]

மீயெழு மேகம்எல்லாம் வெந்துவெங் கரியிற் சிந்தித்
தீயெழ விசும்பி னூடு செல்கின்ற செயலை நோக்கிக்
காய்கணை ஐந்தும் ஐந்தும் கடுப்புறத் தொடுத்துக் கண்டித்து
ஆயிரம் கூறு செய்தான் அமரரை அலக்கண் செய்தான். [2]

அனுமான் எதிர்ந்து இராவணன்மீது ஒரு மலையை எறிந்து பொருததும், அவன் அதனைத் துண்டங்கள் ஆக்கி அண்டங்கள் நடுங்க ஆரவாரத்தோடு போராடியுள்ளதும் இங்கே நேரே கண்டு நெஞ்சம் திகைக்கின்றோம். இங்ஙனம் மூண்டுதொலைக்கவே மீண்டும் ஒரு குன்றை எடுத்து இவன் வீசினன். அது விரைந்து பாய்ந்து சாரதியின் தலையைச் சிதைத்துச் சென்றது. அடுத்து ஒருபாகன் கடுத்துத் தாவித் தேரைக் கடாவினன்; இராவணன் யாரையும் தலை நீட்ட ஒட்டாமல் அம்புகளை வாரி வீசி அடுதொழில் புரிந்து முடிவில் அனுமான் உடல் முழுவதும் சல்லடையாத் தொளைத்தான். உடல் எங்கும் உதிரம் சோர உள்ளம் சோர்ந்து அவன் ஒடுங்கி நின்றான். நிற்கவே கடுங் காலன்போல் கன்று அடுந்திறலோடு கணைகளை வாரி வீசிக் குரங்குகளை வதைத்து அவன் விரைந்து நெருங்கினன்.

## இலக்குவன் எதிர்ந்தது.

படைகள் படு சாவடைவதைக் கண்டதும் இலக்குவன் கடுவேகத்துடன் எதிர்ந்து அடு போர் புரிந்தான். இளையவனுடைய வில்லின் வேலை எல்லாரையும் திகைக்கச் செய்தன. பல்லாயிரம் சேனைத்தலைவர்கள் ஒருங்கேவந்து வளைந்துகொண்டு கொடும் போர் புரிந்தனர். புடைசூழ்ந்து நின்று அவர் செய்த வியூகங்களையும், பெய்த படைக்கலன்களையும் உடைத்து நூறி உக்கிர வேகமாய் அம்புகளைத் தொடுத்து இத் தம்பி ஆற்றிய அமராடல்கள் அற்புத நிலையில் ஓங்கி நின்றன. சிலைத்தொழில்

அரிய ஒரு கலைத் தொழிலாய்க் காட்சி புரிந்தது. வில்லிலிருந்து விரிந்து விரைந்த பகழிகள் யானை தேர் முதலிய நால்வகைச் சேனைகளையும் நாசப்படுத்தி நான்கு திசைகளிலும் பாய்ந்தன.

தேரெலாம் துமிந்த மாவின் திறமெலாம் துமிந்த செங்கட்
'காரேலாம் துமிந்த வீரர் கழலெல்லாம் துமிந்த கண்டத்
தாரெலாம் துமிந்த நின்ற தனுவெலாம் துமிந்த தத்தம்
போரெலாம் துமிந்த கொண்ட புகழெலாம் துமிந்து போய. [1]

அரவியல் தறுகண் வன்தாள் ஆள்விழ ஆழ்மேல் வீழப்
புரவி மேல் பூட்கை வீழப் பூட்கைமேல் பொலன்தேர் வீழ
நிரவிய தேரின் தன்மேல் நெடுந்தலை கிடந்த நெய்த்தோர்
விரவிய களத்துள் எங்கும் வெள்ளிடை அரிது வீழ. [2]

கடுப்பின்கண் அமர ரேயும் கார்முகத் தம்பு கையால்
தொடுக்கின்றான் துரக்கின்றான்என் றுஉணர்ந்திலர் துரந்தவாளி
இடுக்கொன்றும்காணார்காண்பதுளய்தகோல்நொய்தின்எய்திப்
படுக்கின்ற பிணத்தின் பம்மற் குப்பையின் பரப்பே பல்கால்.[3]

கொற்றவாள் கொலைவேல் சூலம் கொடுஞ்சிலை முதல்வாய
வெற்றிவெம் படைகள்யாவும் வெந்தொழிலரக்கர் மேற்கொண்டு
உற்றன கூற்றும் அஞ்ச ஒளிர்வன ஒன்று நூறாய்
அற்றன அன்றி ஒன்றும் அறுதன இல்லை யன்றே. [4]

சாய்ந்தது நிருதர் தானை தமர்தலை இடறித் தள்ளுற்று
ஓய்ந்தன ஒழிந்த ஓடி உலந்தன வாக வன்றே
வேய்ந்தது வாகை வீரற்கு இளையவன் வரிவில் வெம்பிக்
காய்ந்ததவ் விலங்கை வேந்தன் மனமெனும் காலச் செந்தீ. [5]

இளைய பெருமாளுடைய வீரப் போர் நிலைகளை இவை விளக்கியுள்ளன. அரக்கர் ஏவிய கொலைக் கருவிகளை யெல்லாம் குலைத்து விலக்கி யாவரும் நிலத்தில் வீழ்ந்து மடிய நிலையாகச் சிலையாடல் புரிந்திருக்கிறான். சேனைத்திரள்கள் சின்னபின்னமாய்ச் சீரழிந்து சிதைந்து யாண்டும் மாண்டிருக்கின்றன.

இளையவன் வரிவில் வாகை வேய்ந்தது.

இலக்குவனுடைய வெற்றி நிலையை உணர்த்தியுள்ள இது ஈண்டு உய்த்துணர வுரியது. வாகை=வெற்றி. இலக்குவன் வெற்றி பெற்றான் என்னமல் வில் வாகை வேய்ந்தது என்றது அதன் தெய்வீக நிலையை வியந்து விழைந்து காண வந்தது.

வில் வீரன் என உலகமெல்லாம் உவந்து புகழ்ந்து கொண்டாடுகின்ற அந்த இராமனுக்கு அருமைத் தம்பி என உரிமை தோன்ற உரைத்தார் ஆதலால் வீரற்கு இளையவன் என்றார். வில் ஆடலில் அந்த அண்ணனைப்போலவே இந்தத் தம்பியும் அதிசய நிலையினன் என்பது துதி செய்ய வந்தது. போரில் எவ்வழியும் வெற்றி பெற்று வீறு கொண்டு நின்ற அரக்கர் பலர் ஈண்டு மாறாய் மாண்டு மடிந்துள்ளனர். விழுந்துள்ள பிணக் குவியல்கள் வியப்பை விளைத்து நின்றன. ஒரு வில்லாளி எதிரே பல்லாயிரம்நிருதர் பட்டழிந்ததைக் கண்டு பொல்லாதஇராவணன் உள்ளம் கொதித்தான். நெஞ்சக் கொதிப்பு நெடுந்தீயாய் நிமிர்ந்தது.

இலங்கைவேந்தன் மனம் எனும் காலச்செந்தீ காய்ந்தது.

இலக்குவனால் அரக்கர் திரள் அழிந்துபட்டதை அறிந்து இராவணன் சினந்து கனன்றிருக்கும் நிலையை இது விளைந்து காட்டியுள்ளது. வடவைத் தீபோல் உள்ளம் கொதித்து அவன் உருத்திருக்கிறான். காலச் செந்தீ என்றது அவனுடைய கோபத்தின் உக்கிர வேகத்தையும், அதனால் ஞாலத்தில் விளையும் அழிவையும் தெளிவாக அறிந்துகொள்ள வந்தது.

இவ்வாறு கொதித்துச் சீறித் தன் தேரைக்கடாவி விரைந்து வந்து இலக்குவனை எதிர்த்தான். கூற்றுவனும் அஞ்சும்படி ஏற்றம் கொண்டுள்ள அவன் ஏற்றிய வில்லோடு எதிர் வந்து முதிர் போரில் மூண்டு நிற்கவே இளையவன் இளநகை புரிந்து ஒரு மொழி புகன்றான்: "அன்று காத்து நின்ற என் காவலை வஞ்சித்துக் கள்ளம் புரிந்து போன ஏ கள்ளனே! இன்று என் கண் எதிரே வந்து கிடைத்தாய்! இனி நீ மீண்டுபோக முடியாது; மாண்டே படுவாய்!" என்று இங்ஙனம் இவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவன் வில்லிலிருந்து அம்புகளை எல்லையில்லாதபடி ஒல்லையில் தொடுத்தான். அவற்றையெல்லாம் விரைவில் அறுத்து ஒழித்து இவன் கடுத்து எய்தான். இளையவன் வலிய பாணங்களையெல்லாம் பயன்படாமல் செய்து இராவணன் வியன் போர் புரிந்தான். வீரவெறி மண்டி அவன் கோரமாய்க் கொதித்துக் கொடுஞ் சமர் புரிவதை மாருதி கூர்மையாய் நோக்கினான். தீரமோடு பாய்ந்து நேரே வந்து நின்றான். போருக்கு மூண்டு நேருக்கு நேரே ஆரவாரமா வீர வாதங்கள் கூறினான்.

## அனுமான் குத்துச் சண்டை.

"இராவணா! நீ வில் வேல் முதலிய கருவிகளைக் கொண்டு போராடுவதில் வல்லவனே எனினும் உன்னோடு நான் மல்லாடல் புரிய விரும்புகிறேன். வெள்ளிமலையை அள்ளி எடுத்தேன் என்று வீறு கொண்டுள்ள உன் உடல் வலியையும் என அடல் நிலையையும் இன்று அளந்துகாண அவாவினேன்; எனது ஆசையைப் பூர்த்திசெய்வாய்என்று நம்புகின்றேன்;என்னோடுகுத்துச் சண்டைக்கு வருகிறாயா?" என இங்ஙனம் அனுமான் கூறவே இராவணன் வில்லைத் தேரில் ஊன்றிக்கொண்டு வியந்துநின்றான். இளையவன் போரில் இடையே சிறிது தகையாறி நிற்க அப் பெரியவன் எதிரே இவ்வுரியவன் புகுந்து உரையாடியுள்ள உரைகள் உக்கிர வீரமாய் அறைகூவி நின்றன. வில்வன்மையுடையான் எதிரே நின்று மல் வன்மைக்கு வா! என்று சொல் வன்மையுடைய இவன் பல்வன்மையும் தெரியப் பகர்ந்தான்.

வில்லாயுதம் முதலாகிய விறல்வெம்படை மிடலோடு
எல்லாமிடை பயின்றாய் புயம்நாலைந்தினொ டியைந்தாய்
வல்லாய் செரு வலியாய் திறல்மறவோய்! இகல்எதிரே
நில்லாய் என நிகழ்த்தாநெடு நெருப்பாமென உயிர்ப்பான்.

நீளாண்மையி னுடனே எதிர் நின்றாயிஃது ஒன்றோ
வாளாண்மையும் உலகேழினொ டுடனேயுடை வலியும்
தாளாண்மையும் நிகராருமில் தனியாண்மையும் இனிநின்
தோளாண்மையும் இசையோடுடன் துடைப்பேன் ஒரு புடைப்பால்.

பரக்கப்பல உரைத்தென்பட‌ர் கயிலைப்பெரு வரைக்கும்
அரக்குற்றெரி பொறிக்கண்திசைக் கரிக்கும்சிறி தனுங்கா
உரக்குப்பையின் உயர்தோள்பல உடையாயுர னுடையாய்!
குரக்குத்தனிக் கரத்திற்புடை பொறையாற்றுவை கொல்லாம்?

என்தோள்வலி யதனால்எடுத்து யானைஎற்றவும் இறவா
நின்றாயெனின் நீபின்னனை நின்கைத்தல நிரையால்
குன்றேபுரை தோளாய்மிடல் கொடுகுத்துதி குத்தப்
பொன்றேனெனின் நின்னோடுஎதிர் பொருகின்றிலன் என்றான்.

அனுமான் இராவணனைக் குத்துச் சண்டைக்கு அழைத்திருக்கும் வித்தக நிலையை இதில் வியந்து காணுகின்றோம். போராடல்களுள் மல்லாடல் ஆண்மை நிலையை அளந்து காட்டுதலால் அந்தக் காட்சி உயர்ந்த மாட்சியாய் ஒளி புரிந்துள்ளது.

உடல்வலி கொண்டே ஒறுக்கும் உரனுள்
அடல்வலி மண்டி யுள.

என்றதனுல் மல் வலியின் மாண்பு புலனும்.

மேலான ஆண்மையாய் மேவி விளங்கி மெய்த்திறலைக் காட்டுகின்ற கைத்திறலுக்குப் பந்தயம் வைத்துக் காலின் சேய் இங்கே வாதாடியுள்ளான். உன்னுடைய வல்லாண்மை வில்லாண்மை வேலாண்மை வாளாண்மை கேளாண்மை தாளாண்மை தோளாண்மை முதலிய எல்லா ஆண்மைகளையும் என்னுடைய ஒரே குத்தால் அடியோடு அழித்து முடிவாக ஒழிப்பேன் என்பான் ஒரு புடைப்பால் துடைப்பேன் என்ருன்.

புடைத்தல் = கையை மடக்கிக் குத்துதல்.

ஈசன் மலையை எடுத்த அதிசய வீரன் எதிரே நின்று அனுமான் பேசியிருப்பது பெரிய வியப்பை விளைத்து நிற்கிறது.

"அரக்கர்பதியே! உன்னுடைய மார்பில் எனது ஒரு கையால் முதலில் குத்துகிறேன்; அந்தக் குத்தை வாங்கிக்கொண்டு நீ உயிர் பிழைத்து நின்ருல் என் மார்பில் உன் இருபது கைகளையும் கொண்டு ஓங்கிக் குத்து; அதற்கு நான் சிறிது சலித்தாலும் இனிமேல் உன்ேடு பொருகளத்தில் நேரேபோராட நேரேன்" என இவ்வாறு வீரவாதம் கூறவே இராவணன் இத் தீரனை வியந்து புகழ்ந்தான். விரைந்து மல்லாட இசைந்தான்.

## இராவணன் இசைந்தது.

"குரங்கு வடிவில் இருந்தாலும் உன்னுடைய பேச்சும் தீரமும் வியந்து சிந்திக்கத் தக்கன. அன்றுமுதல் இன்றுவரை யாரும் என் எதிரே நின்று போர் விரும்பி இவ்வாறு பேசினவர் இல்லை. கூற்றுவனும் குலை நடுங்கும் நிலையிலுள்ளவன் எனத் தலைமைத் தேவரும் என்னைப் புகழ்ந்து போற்றி வருகின்றனர். நீ ஒரு குரங்கு. கையில் யாதொரு ஆயுதமும் இல்லை. தேர்மேல் ஏறி மகாவில்வீரன் என வீறுகொண்டு நிற்கிற என் நேரே நின்று பேசிய இதுவே உனக்கு ஒரு பெரிய வெற்றியாம். முன்னம் இலங்கையுள் புகுந்து அரக்கர் சிலரைக் கொன்று ஊரிலே தீயை வைத்து ஓடிப்போனதைவிட இன்று நீ பாடி நின்றது பாராட்டவுரியது. சிறந்த போர்வீரனுக்குரிய தீரத்தை

உன்னிடம் நேரே கண்டு நான் உள்ளம் உவந்துள்ளேன்; நீ விரும்பிய படியே என்னை நீ குத்தலாம்; வா விரைந்து!'' என்று இலங்கை வேந்தன் இங்ஙனம் விழைந்து மொழிந்தான்.

### அனுமான் குத்தியது.

உடனே தேர்மேல் அனுமான் பாய்ந்து நேரே எதிர்ந்தான். அவன் வில்லை அயலே வைத்துவிட்டு மார்பை எதிர் காட்டி நின்றான். மாருதி மூதிர் வேகத்தோடு ஓங்கிக் குத்தினான். ஒரு பெரிய கருமலைமேல் கொடிய இடி வீழ்ந்தது போல் அந்த அடி வீழ்ந்தது. வல்லாண்மையுடைய அவன் தள்ளாடிச் சலித்தான்.

அள்ளாடிய கவசத்தவிர் மணியற்றன திசைபோய்
விள்ளாநெடு முழுமீன்என விழிவெம்பொறி எழுநின்று
உள்ளாடிய நெடுங்கால்பொர ஒடுங்கா நிலைகுலையத்
தள்ளாடிய வடமேருவிற் சலித்தான் அறம் வலித்தான்.

இவ்வாறு நிலை குலைந்தவன் சிறிதுபோது மயங்கி நின்று பின்பு தேறி நேரே நின்ற அனுமானை நோக்கி "நீ இன்று என்னை வென்றவன் ஆனாய்'' என்று வியந்து மொழிந்தான். "இனி நான் உன்னைக் குத்துகின்றேன்; அந்தக் குத்தால் நீ செத்துப் போகாமல் இருந்தால் என்றும் நித்திய வாழ்வு பெற்றவன் ஆவாய்! உனக்கு நிகரான வீரர் யாரும் இல்லை'' என்று சொல்லி விரைந்தான். உள்ளக் கொதிப்போடு உருத்து மூண்டான்.

### இராவணன் குத்தியது.

முதலில் கூறிய உறுதி மொழிப்படி எதிரி குத்திக்கொள்ளுமாறு தன் மார்பை எதிர்காட்டி அனுமான் ஆண்மையோடு நின்றான். இவனது நிலையும் உரையும் வென்றி வீறுகளாயின.

என்றான்எதிர் சென்றானிகல் அடுமாருதி எனைநீ
வென்றாயலை யோவுன்னுயிர் வீடாதுரை செய்தாய்!
நன்றாகநின் நிலைநன்றென நல்காளதிர் நடவாக்
குன்றாகிய திரள்தோளவன் கடன்கொள்கெனக் கொடுத்தான்.

தன் குத்தினால் இராவணன் சாகாமல் நின்றது தனக்குப் பெரிய தோல்வி என அனுமான் நாணியுள்ளதை இங்கே காணுகின்றோம். உரிய முறைப்படி என்னைக் குத்துக என இவன் எதிர் நிற்கவே அம் மன்னன் மாறி வீறோடு குத்தினான். அட

லாண்மையுடைய அவன் ஓங்கிக் குத்தவே இவன் உடல் நிலை தளர்ந்து உணர்வு கலங்கி உள்ளம் சலித்தான்.

சலித்த காலையில் இமையவர் உலகெலாம் சலித்த;
சலித்த தால்அறம் சலித்தது மெய்ம்மொழி தகவும்
சலித்த தன்றியும் புகழொடு சுருதியும் சலித்த;
சலித்த நீதியும்; சலித்தன கருணையும் தவமும்.

இராவணனுடைய கைக்குத்தினால் அனுமான் சலித்தபோது இமையவர் உலகம் முதலியன சலித்துள்ளமையால் இவனுடைய மகிமை மாண்புகளை இங்கு நன்கு அறிந்து கொள்ளுகிறோம்.

தருமம் சத்தியம் கருணை தகவு நீதி தவம் என்பன இவனுடைய இயல்புகளா யுள்ளமையால் இவன் அல்லல் அடைந்த பொழுது அவையெல்லாம் அலமந்து துளங்கின என்க.

தகவு = நடுவு நிலைமை. உள்ளச் செம்மை உணர வந்தது.

தருமவான் சத்திய சீலன் கருணாகரன் நீதிமான் நேர்மையாளன் அரிய தவநெறியுடையான் என அனுமானை இங்கே நுணுகி உணர்ந்து கொள்ளுகிறோம். வேதவிதியின்படி நடந்து மனித சமுதாயம் புனிதமடைந்து இனிது உய்யும்படி போதித்து வருகின்றவன் ஆதலால் இவன் வேதனையுற்றதை நோக்கிச் சுருதியும் சலித்தது. தீயவர்களைத் தொலைத்துத் தமக்கு இதம் புரிய நேர்ந்துள்ள மாருதி வருந்தினமையால் இமையவர் உலகம் முதலில் சலித்தது. நேர்ந்துள்ள சலிப்புகள் இவனது நிலைமையைத் துலக்கித் தலைமையை விளக்கின.

தருமம் முதலியன மறுகி உருகின என்று குறித்து அனுமானது பெருமகிமையைக் கவி இங்கே இனிது விளக்கியருளினர்.

## சேனைத் தலைவர் சீறி வளைந்தது.

குத்துச் சண்டை இவ்வாறு ஒத்து முடிந்தபொழுது வானரத் தலைவர்கள் சேனைகளை ஏவி இராவணனை வந்து வளைந்து கொண்டனர். கடும்போர் மூண்டது. பக்கம் எங்கும் படர்ந்து அடர்ந்து அடலாண்மையோடு யாவரும் அடுசமர் புரிந்தார். கல்மாரி பெய்ததுபோல் பல் வகைப் படைக்கலங்களையும் வாரி வீசினர். சீறி அவர் செய்த போராடல்கள் யாரும் அஞ்சி மறுகும்படி மிஞ்சி யாண்டும் வீர வெறிகள் மண்டி நின்றன.

காலனும் காண அஞ்சுகிற இலங்கை வேந்தனை வானரங்கள் சூழ்ந்து வளைந்து கொண்டு கல்லையும் மண்ணையும் மரங்களையும் வாரி எறிந்து கொல்ல மூண்டதே; இப்படியும் ஒரு காலம் நேர்ந்ததே! என்று மேலிருந்து நோக்கிய தானவர் யாவரும் வியந்து நின்றனர். தன்மேல் ஏவிய படைகளை யெல்லாம் தடையற விலக்கி மானக் கொதிப்போடு மண்டி ஏறி வானரங்களை இராவணன் வதைத்து ஒழித்தான். பெரிய படைத் தலைவர்கள் எல்லாரும் படுகளத்தே பட்டு உருண்டனர். அவன் ஆற்றிய வில்லாடலால் யாவரும் அல்லலடைந்து மருண்டனர். பாணங்கள் பாய்ந்த திக்கெல்லாம் பிணக்குவியல்கள் பெருகி நின்றன. உதிரங்கள் நிறைந்து பந்திபந்தியா நிணங்கள் குவிந்து கிடந்தன.

அந்தி வானகம் ஒத்ததவ் அமர்க்களம் உதிரம்
சிந்தி வேலையும் திசைகளும் நிறைந்தன சரத்தால்
பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி
வந்து மேகங்கள் படிந்தன பிணப்பெரு மலைமேல். (1)

நீலன் அம்பொடு சென்றிலன் நின்றிலன் நிலத்தான்;
கால னூர்வயத் தடைந்திலன் ஏவுண்ட கவயன்;
ஆலம் அன்னதோர் சரத்தொடும் அங்கதன் அயர்ந்தான்;
சூலம் அன்னதோர் வாளியால் சோம்பினன் சாம்பன். (2)

மற்றும் வீரர்தம் மருமத்தின் அயிலம்பு மடுப்பக்
கொற்ற வீரமும் ஆண்டொழில் செய்கையும் குறைந்தார்;
சுற்றும் வானரப் பெருங்கடல் தொலைந்தது தொலையாது
உற்று நின்றவர் ஓடினர் இலக்குவன் உருத்தான். (3)

இராவணன் எதிரே வானரங்கள் பட்டிருக்கும் பாட்டை இப்பாடல்கள் காட்டி நிற்கின்றன. உள்ளம் கொதித்து உருத்து வேலை செய்திருக்கிறான். அடுத்து அடுத்து அம்புகளைக் கடுத்துத் தொடுத்திருத்தலால் அழிவு நிலைகள் எவ்வழியும் அதிகமாயின.

பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி

குரங்குகள் கூட்டம் கூட்டமாய்ச் செத்து விழுந்திருக்கும் நிலையை இதனால் உய்த்துணர்ந்து கொள்ளுகிறோம். இலங்கை வேந்தனுடைய சர வேகங்களையும் கர வேகங்களையும் இந்தச் சாவுகள் காட்டியுள்ளன. அழிவு நிலைகள் அவலமாயின.

நீலன் நிலை குலைந்தான்; அங்கதன் அலமந்து அயர்ந்தான்; கவயன் உருண்டு விழுந்தான்; சாம்பன் சாம்பினன் என்றதனால் தலைவர்களுடைய நிலைகளையும் கொலைகளையும்கூர்ந்து ஓர்ந்து அவனுடைய அடலாண்மைகளைத் தேர்ந்து கொள்ளுகிறோம்.

## இராவண இலக்குவ யுத்தம்.

இன்னவாறு வீரவெறி மண்டிக் கோரக் கொலைகள் புரிந்து தேரைக் கடாவி யாண்டும் மூண்டு சரங்களை அள்ளி வீசி ஆர்த்துவருகிற இராவணன் எதிரே இலக்குவன் விரைந்து வந்து வெகுண்டு போராடினன். இரண்டு வில் வீரர்களும் பல்வேறு வகையான பகழிகளைத் தூவிக் கடுவேகத்துடன் படுபோர் புரிந்தனர். பாணங்களை எடுப்பதும் மடுப்பதும் தொடுப்பதும் விடுப்பதும் அதிசய விசித்திரங்களாய் இருவரிடமும் பெருகிநின்றன. மூண்டு முனைந்து நீண்டு போராடி வருங்கால் இராவணன் கையிலிருந்த வில்லை இலக்குவன் துண்டித்து வீழ்த்தினன். மீண்டும் ஒன்றை விரைந்து எடுத்தான்; அதனையும் துண்டங்கள் ஆக்கிக் கண்டங்கள் காட்டினன். மறுபடியும் ஒரு வில்லை வெகுண்டு தூக்கினன். தூக்கும்போதே அதனை நூக்கி ஒழித்தான். பின்னும் ஒரு சிலையை அம்மன்னன் வாங்கினன்; வாங்கிய அது வளையுமுன்னரே சரத்தால் அறுபட்டுத் தரையில் விழுந்தது. இன்னவாறு பத்து வில்லுகள் ஒருநொடியில் பொடியாகவே இராவணன் திகைத்து நின்றான். இலட்சுமணனுடைய வில் ஆற்றலை வியந்தான். உள்ளே சினமும் சீற்றமும் பொங்கி நின்றாலும் எதிரே நிற்கிற வீரனது போர்க் கலையை மெச்சி நேருக்கு நேரே உச்ச நிலையில் உவந்து பேசினன்.

## இராவணன் இலக்குவனைப் புகழ்ந்தது.

நன்று போர்வலி நன்றுபோர் ஆள்வலி வீரம்
நன்று நோக்கமும் நன்றுகைக் கடுமையும் நன்று
நன்று கல்வியும் நன்றுநின் திண்மையும் நலனும்
என்று கைம்மறித்து இராவணன் ஒருவன் நீ என்றான். (1)

கானின் அன்றிகற் கரன்படை படுத்தஅக் கரியோன்
தானும் இந்திரன் தன்னைஓர் தனுவலம் தன்னால்
வானில் வென்றஎன் மதலையும் வரிசிலை பிடித்த
யானும் அல்லவர் யார்உனக்குஎதிர்என்றும்இசைத்தான்.

இலக்குவனை வியந்து இலங்கை வேந்தன் இங்ஙனம் புகழ்ந்து பேசியிருக்கிருன். உரைகள் அவனுடைய உள்ளத்தின் வியப்புகளை வெளிப்படுத்தி யுள்ளன. வீரர்களுடைய இயல்புகளை விழைந்துநோக்கி நாம் உவந்து நிற்கிறேம். கொல்லமூண்டு கொதித்துப் போராடியிருக்கும் எதிரியின் அதிசய ஆற்றலை நேரே கண்டபோது உள்ளம் வியந்து இராவணன் பாராட்டியிருக்கிருன். அவனுடைய உண்மையான வீரப்பான்மையை இது மேன்மையாக விளக்கி நிற்கிறது. தன்மைகளை மதித்துப் போற்றும் அளவே ஒருவன் தகைமை பெறுகின்ருன்.

இலக்குவன் இலக்குத் தவருமல் எய்து பெய்த கிலைத்தொழிலில் தனுவேதத்தின் கலைத் திறங்கள் கனிந்து நின்றன ஆதலால் வில் வீரனை அவன் கொல்லும் பகைமையையும் மறந்து உள்ளம் உவந்து இவ்வாறு புகழ்ந்து சொல்லினன்.

அழகு, வீரம், யாதும் அஞ்சாமல் அடலாண்மை புரியும் அமைதி, மேலே பாய்ந்து வரும் பகழிகளை விலக்கிக் கால்மாறி நின்று அம்பு தொடுக்கும் முறை, குறிதவருமல் எதையும் எய்து வீழ்த்தும் திறம், கரவேக சரவேகங்களின் கதி முதலிய நிலைகளையெல்லாம் நினைந்து நினைந்து அவன் நெஞ்சம் வியந்திருக்கிருன்.

வில்லாடலில் ஒப்பு அற்றவனுய் இவன் உயர்ந்து நிற்றலால் ஒருவன் நீ என்று அவன் உவந்து சொல்லாட நேர்ந்தான்.

இராமன், இந்திரசித்து, இராவணன் என்னும் இந்த மூன்று பேரோடு நேர் வைத்து எண்ணலாமேயன்றிப் போரில் வேறு யாரும் இலக்குவனேடு நேர் நிற்க முடியாது என்பதை இங்கே முடிவாக அறிந்து கொள்ளுகிறேம்.

வனத்தில் பல்லாயிரம் அரக்கர்களோடு திரண்டு வந்த கரனைத் தன்னம் தனியே நின்று கொன்று ஒழித்த அந்தக் கரியோனே உனக்குச் சரியானசோடி என்று அவன் உரிமையோடு கருதியிருப்பது உவகை தருகிறது. அந்த வில் வீரனுடைய போராற்றலை நேரே கண்டு நின்ற சூர்ப்பநகை ஊரில் வந்து இராவணனிடம் முன்னம் * சொன்னள் ஆதலால் அத் தங்கை வாய்ச்சொல் அண்ணன் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது.

---

* இந் நூல் பக்கம் 1883, வரி 22 பார்க்க.

அது இங்கு இவ்வண்ணம் வெளிவர நேர்ந்தது.

இளையவன் போரை நேரில்கண்டவன் மூத்தவனையும் கருதி வார்த்தைகளாடினன். அந்தர வாசிகளோடு இந்திரனையும் ஒருங்கே வென்று வந்தவன் ஆதலால் தன் மகனை இந்திரசித்தையும் சேர்த்து எண்ணினன். அவனது வார்த்தைகள் வீரச் சீர்த்திகளை விளக்கி வீறுகொண்டு வந்தன.

கரன்படை படுத்த அக்கரியோன்,
இந்திரனை வென்ற என்மதலை,
வரிசிலை பிடித்த யான்,

என இலக்குவனுக்கு நிகரானவரை இங்ஙனம் குறித்திருக்கிறான்.

இராமன், இராவணன், இலக்குவன், இந்திரசித்து என்னும் இந்த நால்வரும் தலைமையான போர்வீரர் என்பதை இங்கே ஒரு வரிசையில் வைத்து நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

இராமனால் இராவணனும், இலக்குவனால் இந்திரசித்தும், இறந்துபடப் போகின்றார்; போகவே எஞ்சியுள்ள துணைவர் இருவரும் இணையற்ற வெற்றி வீரராய் உலகில் உயர்ந்து விளங்குவர் என்பது ஈண்டு உய்த்துணர வந்தது. உரைக் குறிப்புகள் உண்மை நிலைகளை நுண்மையாக உணர்த்தி வருகின்றன.

மாற்றான் வாய்மொழி ஏற்றமான உண்மையை எதிர் விளக்கியுள்ளது. இன்னவாறு இலட்சுமணனுடைய போர்த் திறலை வியந்து நின்றவன் உடனே ஒரு வஞ்சச் சூழ்ச்சியை நெஞ்சில் எண்ணினன். "இவனை வில்லால் வெல்லமுடியாது; தெய்வீகமாய் வந்த வேலாலேதான் கொல்ல வேண்டும்" என்று பொல்லாத கொலையில் குறிக்கொண்டு ஒல்லையில் மூண்டான்.

வேல் நிலை.

இந்த வேலாயுதம் பிரமதேவனுடையது. அற்புத ஆற்றல் வாய்ந்தது; யாண்டும் தோல்வியுறாமல் எவரையும் வெல்ல வல்லது. கருதி விடுத்த குறியைக் கடுத்து அழித்து விடுமேயன்றி வறிது வீழாது; அத்தகைய உக்கிர வீரமான வெற்றி வேலை இராவணன் உருத்து எடுத்தான். விதி நியமங்களோடு மந்திர முறைகளைச் செபித்துஇலக்காகஇலக்குவனை நோக்கி எறிந்தான். அது விரைந்து மேலே வரவே இலக்குவன் அம்புகளைக் கடுத்துத்

தொடுத்துத் தடுத்துப் பார்த்தான்; எய்த பகழிகளையெல்லாம் எரித்து ஒழித்து ஊழித் தீயைப்போல் அது உருத்து வந்து மார்பில் பாய்ந்தது. பாயவே பிடித்த வில்லோடு இலக்குவன் கீழே வீழ்ந்தான். இந்த வில் வீரன் சாயவே வானர சேனைகள் எல்லாம் வாய்விட்டு அலறி மறுகித் துடித்தன. அமரரும் அலமந்து தவித்தார். மாண்டுபோனான் என்றே யாவரும் மயங்கி ஓடினர். தரையில் தனியே கிடக்கின்ற இலக்குவனை இலங்கைக்கு எடுத்துக் கொண்டுபோய் விடவேண்டும் என்று இராவணன் கருதிக் கடுத்தான்; தேரைவிட்டுக் கீழே இறங்கி விரைந்து வந்து உற்று நோக்கினன்: ஊக்கித் தூக்கினன். சிறிதும் அசைக்கமுடியவில்லை; பெரிதும் திகைத்தான்; மீண்டும் மூண்டு எடுத்தான்; யாதும் முடியாமையால் முடிவு கருதி நின்றான்; அப்பொழுது அதிவேகமாய் அனுமான் தாவி வந்து இலக்குவனை எளிதே எடுத்து மார்பில் அணைத்துக்கொண்டு மாயமாய் விரைந்து அயலே பாய்ந்து போனான். கீழே தனியே கிடந்த தனது அருமைக் குட்டியை வயிற்றில் சேர்த்து இறுக்கிக்கொண்டு நெடிய மரச் செறிவுள் கடிது புகுந்த பெரிய ஒரு தாய்க் குரங்குபோல் அனுமான் இளையவனை அணைத்துச் சென்ற செயல் அன்று ஓர் விழுமிய காட்சியாய் விளங்கி விழி களிப்ப நின்றது.

வேலால் எறிந்து எதிரியைக் கொன்று விட்டோம் என்று வென்றி வீறோடு நின்ற இராவணன் அனுமான் செய்ததைக் கண்டதும் வெட்கி மீண்டான். துக்கம் நீண்டது.

அந்த வேலின் கடுமையும் விளைத்த கொடுமையும் எவரையும் திகைக்கச் செய்தன. இந்த நிகழ்ச்சிகள் கவிகளில் ஓவிய உருவங்களாய் ஒளிபெற்றுள்ளன. அயலே வருகின்றன காண்க.

வில்லினால் இவன் வெலப்படான் எனச்சினம் வீங்கக்
கொல்லு நாளுமின் றிதுவெனச் சிந்தையில் கொண்டான்
பல்லி னால்இத ழதுக்கியவன் பருவலிக் கரத்தால்
எல்லின் நான்முகன் கொடுத்ததோர் வேல்எடுத்து எறிந்தான்.

எறிந்த காலவேல் எய்த அம்பு யாவையும் எரித்துப்
பொறிந்து போயுகத் தீயுக விசையினில் பொங்கிச்
செறிந்த தாரவன் மார்பிடைச் சென்றது சிந்தை
அறிந்த மைந்தனும் அமர்நெடுங் களத்திடை அயர்ந்தான். (2)

இரிய லுற்றது வானரப் பெரும்படை; இமையோர்
பரிய லுற்றனர் உலைந்தனர்; முனிவரும் பதைத்தார்;
விரிதிரைக் கடற் கிரட்டிகொண் டார்த்தனர் விரவார்;
திரிகை ஒத்தது மண்டலம் கதிரொளி திரிந்த. (3)

அஞ்சி னானலன் அயன்தந்த வேலினும ஆவி
துஞ்சி னானலன் துளங்கினான் என்பது துணியா
எஞ்சில் யாக்கையை எடுத்துக்கொண் டகல்வன் என்றெண்ணி
நஞ்சினால் செய்த நெஞ்சினான் பாரின்மேல் நடந்தான். (4)

உள்ளி வெம்பிணத்து உதிரநீர் வெள்ளத்தின் ஓடி
அள்ளி அங்கைகள் இருபதும் பற்றிப்பண்டு அரன்மா
வெள்ளி யங்கிரி எடுத்தனன் வெள்கினான் என்ன
எள்ளிப் பொன்மலை எடுக்கலுற் றானென எடுத்தான். (5)

அடுத்த நல்லுணர்வு ஒழிந்திலன் அம்பரம் செம்பொன்
உடுத்த நாயகன் தானென உணர்தலின் ஒருங்கே
தொடுத்தஎண்வகைமூர்த்தியைத்துளக்கிவெண் பொருப்போடு
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன் இராமனுக்கு இளையான். (6)

தலைகள் பத்தொடும் தழுவிய தசமுகத் தலைவன்
நிலைகொள் மாக்கடல் ஒத்தனன் கரம்புடை நிமிரும்
அலைகள் ஒத்தன அதில்எழு மாமதி ஒத்தான்
இலைகொள் தண்துழாய் இலங்குதோள் இராமனுக்குஇளையான்.

எடுக்க லுற்றவன் மேனியை ஏந்துதற்கு ஏற்ற
மிடுக்கி லாமையின் இராவணன் வெய்துயிர்ப் புற்றான்;
இடுக்கில் நின்றஅம் மாருதி புகுந்தெடுத்து ஏந்தித்
தடுக்க லாததோர் விசையினின் எழுந்தயல் சார்ந்தான். (8)

தொக ஒருங்கிய ஞானமென் றெவரினும் தூயான்
தகவு கொண்டதோர் அன்பெனும் தனித்துணை யதனால்
அகவு காதலால் ஆண்டகை என்னினும் அனுமன்
மகவு கொண்டுபோய் மரம்புகு மந்தியை நிகர்த்தான். (9)

இந்தப் பாசுரங்களை ஊன்றிப் படியுங்கள்; உரைகளில் படிந்துள்ள நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ளுங்கள். சரித நிகழ்ச்சிகள் அதிசய விளைவுகளாய் விரிந்து சுரந்து வருகின்றன.

இராவணன் வேலால் எறிந்ததும், இலக்குவன் பரிந்து வீழ்ந்ததும், விழுந்த இளையவனை அக் கொடியவன் எடுத்துக் கொண்டுபோகக் கடுத்து மூண்டதும், முடியாமல் நின்றதும்,

அனுமான் இடையேபாய்ந்து ஆர்வமீதூர்ந்து இளவலை மார்பில் அணைத்து ஆவலோடு அயலே வாவிப் போனதும், அற்புதக் காட்சிகளாய் மருவியிருக்கின்றன. பரிவும் பண்பும் எவ்வழியும் பெருகி மிளிர்கின்றன. உரிமையுணர்ச்சிகள் ஒளி புரிந்துள்ளன.

வீரத்திறலை முதலில் பாராட்டி நின்றவன் உடனே கோரக் கொலையைச் செய்யத் துணிந்தது அவனது கொடுந் தீமையை விளக்கி நின்றது. வஞ்சக் கொடுமை நெஞ்சப் புலையை நேரே காட்டியது.

நஞ்சினால் செய்த நெஞ்சினான் என்றது பொல்லாத அவனுடைய மனக் கொடுமையை நினைத்துணர வந்தது. அமர்க்களத்தில் அடிபட்டு வீழ்ந்து கிடந்தவனைக் கொல்லும் கொலை நோக்கோடு தூக்கிக் கொண்டுபோகத் துணிந்துள்ளான் ஆதலால் அவனது நெஞ்சம் நஞ்சினால் செய்தது என அஞ்சி அயரும்படி குறித்தார். இரக்கமற்ற அரக்கத் தன்மையின் பெருக்கம் அவன்பால் பெருகியுள்ளமை வெளியே தெரிய வந்தது. அரக்கர் தலைவனது நிலைமையைச் சுருக்கிச் சுட்டினார்.

சிவபெருமானோடு வெள்ளியங்கிரியைப் பண்டு வேரோடு எடுத்த அவன் அன்று இலக்குவனை எடுக்க முடியாமல் வெள்கி நின்றது வியப்பாய் விரிந்து உள்ளி உணரும்படி ஓங்கி நின்றது.

இளையவனை அவன் தழுவி எடுத்த காட்சி விழி களிப்ப வந்துள்ளது. கரிய பெரிய கடல்போல் இராவணன் கம்பீரமாய் நின்றான்; அவனுடைய இருபது கைகளும் அலைகளைப் போல் அலமந்து அசைந்தன; அந்தக் கைகளிடையே கிடந்த இலக்குவன் சந்திரனைப்போல் விளங்கினான். அழகிய பூரணசந்திரன் கடலின் அலைகளிடையே ஒளி செய்து மிளிரும் விழுமிய காட்சியை இங்கே வியந்து நோக்கி உவந்து நிற்கிறோம்.

தசமுகன் கடல் ஒத்தான்;
கரங்கள் அலைகள் ஒத்தன;
இளையவன் மதி ஒத்தான்.

உவமானங்கள் உணர்வுக் காட்சிகளாய் உவகை சுரந்துள்ளன.

வானில் ஒளிவீசியுள்ள சந்திரன் அலைகடலில் விளங்கித் தோன்றினாலும் அதனை யாரும் பற்றமுடியாது; அவ்வாறே

இராவணன் கைகளும் இலக்குவனை எடுக்க முடியாமல் கலக்கமடைந்து அலக்கணுடையனவாய் அலமந்து நின்றன.

தொடுத்த எண்வகை மூர்த்தியை வெண்பொருப் போடு
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன் இராமனுக்கு இளையான்.

இளையவனை எடுக்கமாட்டாமல் இளைத்து நின்ற தோள்களின் வலிநிலைகளை இப்படி இழைத்துக் காட்டியிருக்கிறார்.

எண்வகை மூர்த்தி என்றது சிவபெருமானை.

மண் முதலிய ஐந்து பூதங்களும் கதிர் மதி உயிர் என்னும் மூன்றும் ஆகிய இந்த எட்டு வகைகளும் இறைவனுக்கு உருவங்களாயுள்ளன. மூர்த்தம்=உருவம். அதனையுடையது மூர்த்தி.

அட்டமூர்த்தி என முன்னமும் * சுட்டியுள்ளார்.

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமானனாய் எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி ஆகி" (தேவாரம்)

அப்பர் இறைவனை இவ்வாறு துதித்திருக்கிறார்.

இந்த எண்வகையுள் எல்லாம் அடங்கி யுள்ளமையால் அகிலலோக நாயகனாய்ப் பரமன் எங்கும் நிலவி யிருக்கிறான்.

இத்தகைய அற்புத மூர்த்தியை வெள்ளி மலையோடு பெயர்த்து எடுத்தவன் என இராவணனை இங்கே குறித்துக் காட்டியது அவனது அருந்திறலாண்மையும் அதிசய மேன்மையும் தெரிய. அவ் வல்லாளன் புல்லாளனாய்ப் புலந்து நின்றான்.

கயிலையங்கிரியை எடுத்தவன் இளவலைத் தூக்கமுடியாமல் இழிந்து சோர்ந்து நின்றது ஓர்ந்து சிந்திக்க வந்தது.

இராவணன் கெட்ட எண்ணத்துடன் வந்து தன்னை எடுப்பதை இலக்குவன் உணர்ந்தான்; இராமனை நினைந்தான். தெய்வ சிந்தனையோடு கிடந்தான். தெய்வீக பாவனையாய்க் கிடந்த இந்தத் தூயவனை அந்தத் தீயவன் அசைக்கமுடியாமல் அயர்ந்து நின்றான்; அந்த நிலையில் எங்கேயோ இருந்து விரைந்து உள்ளே

* இந் நூல் பக்கம் 2327, வரி 5 பார்க்க.

பாய்ந்து இளவலை எளிதே அள்ளி அணைத்துக்கொண்டு துள்ளித் தாவி அயலேபோய் ஒரு தனியான இடத்தில் இனிது வைத்து ஆற்றித் தேற்றி அனும நாயகன் போற்றியருளினன்.

நெஞ்சில் தீய எண்ணங்களையுடையவன் எவ்வளவு வல்லவனாயிருந்தாலும் உள்ளம் தூய நல்லவனை அவனால் வெல்லமுடியாது என்பதை இலக்குவனை அள்ளி வெள்கிய இராவணன் இங்கே விளக்கி நின்றான். அனுமான் நன்மையாளன் ஆதலால் எல்லா வன்மைகளும் அவனிடம் குடி கொண்டுள்ளன.

மகவு கொண்டுபோய் மரம்புகு மந்தியை நிகர்த்தான்.

இலக்குவனை எடுத்துச் சென்ற அனுமானை இப்படி உவமானம் காட்டி ஓவிய உருவமா உணர்த்தியிருக்கிறார். பேரன்போடு பேணியிருத்தலால் தாய்மையின் உரிமை தெரிய வந்தது.

இராவணனோடு வீரவாதம் கூறி நேரே போராடி அயர்ந்து நின்றவன் அந்தச் சோர்வையும் மறந்து உழுவலன்புடன் ஊக்கிப் பாய்ந்து தூக்கிப் போயிருத்தலை உய்த்து நோக்குவார் எவரும் உள்ளம் உருகி உரிமைகளை யுணர்ந்து உவகை மீதூர்வார்.

கொடிய அபாயத்தில் கடிது புகுந்து இனிது உதவியிருக்கிறான். இலங்கை வேந்தனுக்கு யாதும் அசைக்க முடியாதபடி அரிய கனமாயிருந்தவன் அனுமானுக்கு இனிய ஒரு பூமாலை போல் எளிதே அமைந்துள்ளது அதிசய வியப்பாய் நின்றது.

"சத்ருணாம் அப்ரகம்ப்யோஅபி லகுத்வம் அகமத்கபே:"

"பகைவனுக்கு அசைக்க முடியாதபடியிருந்தும் அனுமானுக்கு மிகவும் இலகுவாய் இலக்குவன் அமைந்தான்" என வால்மீகி முனிவரும் இவ்வாறு கூறியுள்ளார். மாருதியின் மகிமை மாண்புகள் இங்கு நேரே தெரிய வந்தன. கண்ணை இமை காப்பதுபோல் எவ்வழியும் அந்தப் புண்ணியர் இருவரையும் போற்றி இந்தக் கண்ணியவான் களித்து வருகிறான்.

ஆபத்தைப் பாதுகாத்துத் தேற்றி இளையவனைத் துணைவர்களிடம் வைத்துவிட்டு அனுமான் இராமனிடம் சென்றான். தம்பிக்கு நேர்ந்ததை நம்பிக்குச் சொல்லாமல் பேசாமல் மேல் செல்லும்படி வேண்டினன். முன்னதாகவே மூண்டு புறப்பட்டுக்

கொண்டு நின்ற அந்த ஆண்டகை வீரகேசரிபோல் விரைந்து பொருகளத்தை அடைந்தான். இருதிறச் சேனைகளும் ஒருமுக மாய்த் திரண்டு பொருதிறங்களில் மூண்டன.

## அனுமான் வேண்டியது.

இராவணன் உயர்ந்த தேர்மேல் அமர்ந்து நிற்பதையும், இராமன் பாதசாரியாய்க் கீழே நிற்றலையும் பார்த்து அனுமான் மறுகி அருகே அணுகினன். "ஆண்டவா! எதிரி தேர்மேல் நிற்கின்றான்; நீங்கள் பார்மேல் நிற்பது தகாது; மாற்றான் எதிரே ஏற்றம் குறைந்து நிற்றல் இளிவாம்; அது ஒருவகை எளிமையைக் காட்டும்; அந்தச் சிறுமைக்கு இடங் கொடுக்கலாகாது; அடியேனுடைய தோளில் ஏறிக்கொள்ளுங்கள்: தேவரீர் வீர விளையாடல் புரிதற்கு அனுகூலமாக நான் சாரிதிரிந்து வருவேன்; விரைந்து ஏறியருளுங்கள்" என்று உழுவலன்போடு தொழுது வேண்டினன். பரிவும் பாசமும் பார்வைக்கு வந்தன.

அந்த அன்புரிமையை வியந்து இராமன் அவ்வாறே அவன் மீது ஏறினன். ஒரு சிங்க ஏறு மலைமேல் தாவி ஏறியதுபோல் மாருதி தோளில் அவ் வீரன் ஏறவே வானவர் வாழ்த்தி மகிழ்ந்தார். அனுமான் பேரானந்தமுடையனாய்ப் பெருகி நின்றான்.

நன்று நன்றென நாயகன் ஏறினன் நாமக்
குன்றின் மேலிவர் கோளரி ஏறெனக் கூறி
அன்று வானவர் ஆசிகள் இயம்பினர் ஈன்ற
கன்று தாங்கிய தாய்என மாருதி களித்தான். (1)

ஓதம் ஒத்தனன் மாருதி அதனகத் துறையும்
நாதன் ஒத்தனன் எண்ணிலோ துயில்கிலன் நம்பன்
வேதம் ஒத்தனன் மாருதி வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன் வேறிதனில்லை பொருவே.

ஆசி சொல்லினர் அருந்தவர் அறமெனும் தெய்வம்
காசில் நன்னெடும் கரமெடுத்து ஆடிடக் கயிலை
ஈசன் நான்முகன் என்றிவர் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர் அந்தரம் புகுந்தார். (3)

இராமன் போர்மேல் மூண்டு அனுமான் தோள்மீது ஏறி நிற்கும் வீரக் காட்சியை இங்கே வியந்து நோக்கி உவந்து நிற்கிறோம். இராவணன் இரதாரூடனாய் நிற்கத் தனது ஆண்டவன்

பாதசாரியாய் நிற்கலாகாது என்ற மான வுணர்ச்சியால் மறுகி வேண்டி மாருதி உரிமையோடு உவந்து தாங்கியிருக்கிருன். கோதண்ட வீரன் தன்மேல் ஏறி அமர்ந்தபோது அனுமான் உள்ளம் பேரானந்தத்தில் பொங்கி எழுந்து.

கன்று தாங்கிய தாய் என மாருதி களித்தான்.

போர்க்களத்தில் இராமனைத் தாங்கி நின்ற அனுமானைக் கவி இங்ஙனம் காட்டியிருக்கிருர். உற்ற பிள்ளையைப் பெற்ற தாய் ஏந்தி நிற்றல்போல் இக்கோமகனை அம் மாமகன் தாங்கி மகிழ்ந்துள்ளான். தாய்மையின் அன்புரிமையும் சேய்மையின் நீர்மையும் ஈங்கு ஒருங்கே தெரிய வந்தன.

ஈன்ற கன்று என்றதனுல் தாய்ப் பசுவின் பேரன்பே ஈண்டு உரிமையாய் ஊன்றி யுணர வந்தது. மானுடத் தாயினும் ஆனின் தாய் அதிசய அன்புடையது ஆதலால் அதனைத் துதிசெய்து குறித்தார். மனிதத் தாய் செவிலித் தாயிடமும் தன்பிள்ளையைக் கொடுத்து வளர்க்கச் செய்வாள்; புனிதப் பசு அவ்வாறு இசையாது; உருகி நக்கிப் பரிவுபொங்கிப் பால்சொரிந்து தன் கன்றை அது பேணி வரும் அன்புரிமை என்பும் உருக இன்பம் சுரந்து வரும். தாய்மை அன்புக்கு ஆவின் பரிவையே காவியக் கவிகள் உவமை கூறி வருதலால் அதன் பான்மையும் மேன்மையும் பயனும் நயனும் நன்கு அறியலாகும்.

“கன்றுபிரி காராவின் துயருடைய கோடி” (குகப்படலம்)

இராமனைப் பிரிந்து வருந்திய கோசலையை இங்ஙனம் குறித்திருக்கிருர். அந்தக் காராம் பசு பிரிந்த கன்றை இங்கே ஒரு வானரம் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு ஆனந்தம் மீதூர்ந்துள்ளது. ஈன்றகன்று என்றது தானே பரிந்து பெற்ற இளங்கன்று என அன்புரிமையின் எல்லையை அளந்து அறிந்து உள்ளம் தெளிந்து உவந்து கொள்ளவந்தது.

கோசலைத் தாயினும் அனுமான் இங்கே இராமனை உழுவலன்போடு பேணி உருகிப் போற்றி வருதலைக் கருதி நோக்குவார் எவரும் உள்ளம் கரைந்து உவந்து ஏத்துவார்.

அந்தத் தாய் தன் பிள்ளையை அரச போகத்தில் வளர்த்தாள். இந்தத் தாய் அந்தப் பிள்ளையை அமர்முகத்தில் யாதொரு

அபாயமும் நேராமல் கண்ணை இமை காப்பதுபோல் பேருரிமை யோடு காத்து வருகிருள். அவள் இன்ப நிலையில் இனிது பேணினுள்; இவள் துன்ப நிலையில் அன்பு மீதூர்ந்து ஆதரித்து நிற்கின்ருள். அவள் பெற்ற மகனை இவள் வெற்றிவீரன் ஆக்கி வியன் நிலையில் வளர்த்து வருதலால் நயனும் பயனும் நன்கு காணலாம். பிரிய நீர்மைகள் பெருகி வந்துள்ளன.

கன்று—இராமன். தாய்—அனுமான்.

இந்த வென்றிவீரனையும் அந்த அன்பின் நீரனையும் ஒருங்கே நோக்கி உலகம் உவந்து நிற்கின்றது. தாய்மை அன்பு ஓங்கி இராமனைத் தாங்கி அமர்முகத்தில் அனுமான் அதிசய கம்பீர மாய் நிற்கவே அமரர் யாவரும் வியந்து நோக்கி உவந்து வாழ்த் தினர். உலகம் வாழ உறுதிகள் ஓங்கி எழுந்தன.

குன்றின்மேல் இவர் கோளரி ஏறு.

ஒரு மலைச்சிகரத்தில் தாவிய சிங்க ஏறுபோல் அனுமான் தோளில் இராமன் ஏறி யிருக்கிருன். அஞ்சாத திண்மைக்குக் குன்றும், அருதிறலாண்மைக்கு அரிஏறும் உவமையாய் நின்றன. கோளரி எதையும் வெல்லவல்லது என்னும் குறிப்பில் வந்தது. தனக்கு வலிமையான தானமாய்க் குன்று அதற்கு அமைந் திருத்தல் போல் இராமனுக்கு அனுமான் இங்கே அமைந்துள் ளான். அந்த உண்மை நுண்மையா அறிய நேர்ந்தது.

ஓதம் ஒத்தனன்; வேதம் ஒத்தனன்.

இராமனைத் தாங்கி நின்ற அனுமானை இப்படிக் குறித்துக் காட்டியிருக்கிருர். ஓதம்—கடல். பால்கடல்மீதும், வேதத்தின் சிரத்திலும் திருமால் அமர்ந்திருத்தல்போல் அனுமான்மீது இராமன் அமர்ந்திருக்கிருன்.

பிடரில் அமர்ந்து இருகால்களையும் மார்பில் தொங்கவிட்டு இடக்கையில் கோதண்டத்தைப் பிடித்து வலக்கையில் அம்பை எடுத்து இவ் வீரன் தொடுத்திருக்கும் காட்சியும் மடுத்து நிற் கும் மாட்சியும் விக்கிரம விநோதமாய் விளங்கி நின்றன.

தரையில் நின்று எதிரியோடு போராட நேர்ந்தவன் விரை வில் வந்து மாருதி வேண்டவே இம் முறையில் ஏறி வீரோடு மூண்டு நின்ருன். வீரத் திறல்கள் விழுமிய நிலையில் செழுமின.

வீர வில்லியை ஆர்வம் மீதூர்ந்து தாங்கி அத்தீரன் உல்லாசமாய்ச் சாரிதிரிந்து உலாவிப் போரில் ஏறியது அற்புதக் காட்சியாய் அதிசயம் விளைத்துக் கதி வேகங்களைக் காட்டி நின்றது.

காணியாகப் பண்டு உடையனும் ஒருதனிக் கலுழன்
நாணினன் மற்றை அனந்தனும் தலைநடுக் குற்றான்.

திருமாலுக்கு இனிய வாகனமாய் என்றும் உரிமையோடு பெருமை பெற்றிருந்த கருடன் அன்று அனுமான் பெற்றுள்ள பேற்றை நோக்கி வியந்தான். அந்த ஏற்றம் தனக்கு இல்லாது போயதே! என்று ஏங்கி நாணினன். கலுழன் = கருடன்.

யானையை மடுவில் பிடித்த ஒரு முதலையைக் கொல்லவும், சில அசுரரை வெல்லவும் திருமால் மூண்டபோது வாகனமாய் வாய்ந்து கருடன் போயுள்ளானே யன்றி இப்படி ஒரு பெரிய போரில் உறு துணையாய் நின்று உதவி புரிய அவனுக்கு அமையவில்லை. இவனுக்கு அமைந்தது பெறலரும் பேருய்ப் பெருகியது.

ஆதிமூல நிலையில் மாலுக்கு ஊழியம் புரிந்துள்ளமையால் கருடன் பெரியதிருவடி என்று பேர்பெற்று நின்றான். அவதார நிலையில் அனுமான் அடி தாங்கி நின்றமையால் சிறியதிருவடி என நேர்ந்தான். இந்த உரிமையாளர் இருவரும் இங்கேபார்வைக்கு வர நேர்ந்தனர். வீர மாருதி வெற்றி விளைய மேவி விளங்கினன்.

மாலும் நேரே செய்யமுடியாத அரியகாரியத்தை இராமன் செய்து முடிக்க ஈண்டு மூண்டு நிற்கின்றான்; இந்த ஆண்டகைக்கு உறு துணையாய் உரிமை பூண்டுள்ளமையால் அனுமானது பெருமகிமையை நினைந்து கருடனும் வியந்து நின்றான்.

அறம் எனும் தெய்வம் கரம் எடுத்து ஆடிட.

அனுமான் மீதமர்ந்து இராமன் போராட மூண்டபோது தருமதேவதை கைகளைத் தூக்கி வீசி உள்ளம்களித்து இவ்வாறு கூத்தாடியிருக்கிறது. பாவிகள் அழிந்து படுவர்; புண்ணியங்கள் எங்கும் தலை எடுத்து வரும் என அறக்கடவுள் எண்ணி மகிழ்ந்துள்ளமையை இதனால் அறிந்து கொள்ளுகிறோம். நேர்ந்துள்ள போரின் நிலைமையையும் அதனால் விளைந்துவரும் விளைவுகளையும் விநயமாக விரித்துக் கவி ஈண்டு விளக்கி யுள்ளார்.

ஈசன் நான்முகன் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர் அந்தரம் புகுந்தார்.

மூண்டுள்ளபோர் எவ்வளவு அதிசயமுடையது! என்பதை இதனால் ஓர்ந்து கொள்ளுகிறோம். பூசல்=போர். ஈசல்போல் எண்ணிறந்த பேர் பூமியில் இறந்துபட விளைந்துள்ளமையால் பூசல் என வந்தது. நால்வகைச் சேனைகளும் நாசம் அடைய பெருமுழக்கமும் ஆரவாரமும் பேரிரைச்சலும் பெருகி நிற்றலைப் போருக்கு உரிமையாய் ஈண்டு வந்துள்ள பேர் விளக்கி நின்றது.

மண்ணுலகில் இலங்காபுரியில் நேர்ந்த போர் விண்ணும் விழைந்துகாண விரிந்தமையால் அதன் அதிசய நிலையை எண்ணி வியந்து இறும்பூதுறுகின்றோம். அரிய வீரப் போர் பெரிய வியப்பை விளைத்தது. அதனை வியந்து காண விண்ணவர் குழுமினர்.

## இராம இராவண யுத்தம்.

தேர்மேல் ஏறிப் போர்மேல் மூண்டு நின்ற இராவணன் எதிரே இராமன் நேர்ந்தான். செல்லும்போதே வில்லைக் குணத் தொனி செய்துகொண்டு சென்றான் ஆதலால் ஊழிக் காலத்து உருத்திரமூர்த்திபோல் ஒளிவீசி நின்றான். திசைகளையெல்லாம் வென்று யாண்டும் வீறுகொண்டு நின்ற இராவணன் இந்த வீர மூர்த்தியைக் கண்டதும் வெம்பி வெகுண்டான். மந்திரமுறையோடு பெற்றுள்ள அம்புகளை எடுத்து ஆர்த்துத் தொடுத்தான். அவன் எய்த பாணங்கள் ஊழித்தீபோல் உருத்து வந்தன; அந்த எழையும் ஒரே தொடையில் இராமன் துணித்து வீழ்த்தினான்.

### இராவணன் எய்தது.

ஊழி வெங்கனல் ஒப்பன; துப்பன உருவ;
ஆழி நீரையும் குடிப்பன; திசைகளை அளப்ப;
வீழின் மீச்செலின் மண்ணையும் விண்ணையும் தொளைப்ப;
ஏழு வெஞ்சரம் உடன் தொடுத்து இராவணன் எய்தான்.

### இராமன் கோய்தது.

எய்த வாளியை ஏழினால் ஏழினோடு எழு
செய்து வெஞ்சரம் ஐந்தொரு தொடையினில் சேர்த்தி
வெய்து காலவெங் கனல்களும் வெள்குறப் பொறிகள்
பெய்து போம்வகை இராகவன் சிலைநின்று பெயர்த்தான்.

இராவணன் ஏவிய பகழிகள் உக்கிர வேகமுடையன; ஊழித்தீயை ஒப்பன; ஆழிநீரையும் குடிப்பன; மேலே சென்ருல் விண்ணை எரித்து வீழ்ப்பன; அத்தகைய கொடிய சுடுசரங்களை அடுதிறலோடு அவன் இராமன்மேல் குறிசெய்து விடுத்தான். அக்கினிகளைக் கக்கிக்கொண்டு ஆர்த்துவந்த அவை இடையே துண்டங்களாய் உதிர்ந்தன. இராமன் ஏவிய அம்புகளால் அங்ஙனம் தூளாய் அவை பாழாகவே இராவணன் வியந்து திகைத்தான். மேலும் மேலும் பலகணைகளைத் தொடுத்து விடுத்தான். கொதித்து வந்த அவற்றையெல்லாம் இவ் வீரன் அறுத்து ஒழித்தான். ஒழிக்கவே சேனைத் தலைவர்கள் நால்வகைச் சேனைகளையும் ஒருங்கே திரட்டித் தங்கள் சக்கரவர்த்திக்கு ஆதரவாக இராமனைச் சூழ்ந்து வளைந்து கொண்டனர். நான்கு திசைகளினுமிருந்து பாணங்களும் வேல் வாள் முதலிய ஆயுதங்களும் காலமாரிபோல் கடுத்துப் பாய்ந்தன. கோதண்ட வீரன் கொதித்து வேலை செய்தான். அந்த வில்லிலிருந்து வெளியேறிய பாணங்கள் அரைநாழிகையுள் அரக்கர் சேனைகளை அடியோடு அழித்து வீழ்த்தின. தலைகள் மலைகளாய்க் குவிந்தன; பிணங்கள் எங்கணும் நிணங்களோடு பிணங்கி நிறைந்தன; உதிரவெள்ளங்கள் பெருகி ஓடின. படைகள் பாழாகவே இராவணன் தேரை வேகமாக் கடாவி வெகுண்டு போராடினன். மாயா வல்லவன் ஆதலால் அவனுடைய இரதம் அதிசயமாய் யாண்டும் சாரிதிரிந்து வந்தது. அந்தத் தேரின் நிலைமையைத் தெரிந்து அனுமான் வானும் வையமும் தோன்றி வாதசேய் என்பதை ஏதுவோடு எடுத்துக்காட்டி எதிரியைக் கதிகலங்கச் செய்தான்.

இம்பரானெனில் விசும்பினன் ஆகும்: ஓரிமைப்பில்
தும்பை சூடிய இராவணன் முகம்தொறும் தோன்றும்;
வெம்பு வஞ்சகர் விழிதொறும் திரியும்; மேல் நின்ருன்
அம்பின் முன்செலும்; மனத்திற்கும் முன்செலும்; அனுமன்.

அனுமானுடைய கதிவேகங்களை இது காட்டியுள்ளது. எங்கும் சாரிதிரிந்து வந்திருக்கிருன். விண்ணிலும் மண்ணிலும் திசைகளிலும் விசை ஓடியுள்ளது. இராவணன் முகம்தோறும் தோன்றும் என்றதனுல் அவன் பார்த்த இடமெல்லாம் அனுமான் தோன்றியுள்ள தோற்றம் துலங்கி நின்றது. எந்த இடத்தில் நிற்கிருன் என்று துணிந்து சொல்ல முடியாதபடி யாண்டும்

விரைந்து சுற்றி வந்திருக்கிறான். அவனது உடல் வேகத்தையும் அடலாண்மையையும் கண்டு அஞ்சாத அரக்கரும் அஞ்சி அயர்ந்திருக்கின்றனர். இராமனுடைய வில்லில் நின்று எழுந்த அம்பினும் அவன் முந்திப் பாய்ந்திருக்கிறான்.

மேல்நின்றான் அம்பின் முன்செலும்; மனத்திற்கு முன்செலும்

அனுமானது அதிசய வேகத்தை இங்ஙனம் விளக்கியிருக்கிறார். இது எவ்வளவு வியப்பு! இராமனது சரவேகத்தினும் மனவேகத்தினும் அதிவேகமாய் அனுமான் சென்றிருக்கிறான்; அவனது செலவும் செயலும் நிலையும் அற்புதக் காட்சிகளாய் நிலவி நின்றன. தன் நாயகன் வென்றிவீரனோடு போராட அவன் வினையாண்மை புரிந்துள்ளான். கொடிய போர்க் களத்தில் சண்டமாருதம்போல் மாருதி கதிவேகம் காட்டி வரவே வீர வில்லியின் கணைகள் எங்கணும் சீறிப்பாய்ந்து கோரக்கொலைகள் புரிந்து சூரப் போராடி வந்தன.

ஆடு கின்றன கவந்தமும் அவற்றொடும் ஆடிப்
பாடு கின்றன அலகையும் நீங்கிய பணைக்கைக்
கோடு துன்றிய கரிகளும் பரிகளும் தலைக்கொண்டு
ஓடு கின்றன உலப்பில உதிர ஆறுவரி. (1)

தேரிழந்து வெஞ் சிலைகளும் இழந்து செந்தறுகட்
காரிழந்து வெங் கலினமாக் கால்களும் இழந்து
சூரிழந்துவன் கவசமும் இழந்து துப்பிழந்து
தாரிழந்துபின் இழந்தனர் நிருதர்தம் தலைகள். (2)

ஒன்று நூற்றினோடு ஆயிரம் கொடுந்தலை யுருட்டிச்
சென்று தீர்வன எனைப்பல கோடியும் சிந்தி
நின்ற தேரொடும் இராவணன் ஒருவனும் நிற்கக்
கொன்று வீழ்த்தின இராகவன் சரமெனும் கூற்றம். (3)

தேரும் மானையும் புரவியும் அரக்கரும் தெற்றிப்
பேரும் ஓரிடம் இன்றெனத் திசைதொறும் பிறங்கிக்
காரும் வானமும் தொடுவன பிணக்குவை கண்டான்
மூரி வெஞ்சிலை இராவணன் அராவென முனிந்தான். (4)

கடல்போல் திரண்டுவந்த நால்வகைச் சேனைகளும் இராம பாணங்களால் நாசம் அடைந்திருக்கின்றன. காலிழந்தும் கையிழந்தும் தலையிழந்தும் அரக்கர் திரள்கள் அழிந்துகிடந்தன.

போர் வீரராய் அடலாண்மையோடு வந்தவர் யாவரும் உடல்களும் அடையாளம் தெரியாதபடி ஒருங்கே மாண்டு மடிந்தனர். தன்படைகள் பாழானதை நோக்கி இராவணன் உள்ளம் கொதித்து உருத்து மூண்டான். எதிரியின் சேனைகள் நாசமடைந்ததை நோக்கி அமைதியாய் நின்ற இராமன்மீது இரண்டு பாணங்களை ஏவினன். எய்த அம்புகள் இராமன் தோள்மேல் விரைந்துபாய்ந்து ஊடுருவிச் சென்றன. பச்சை மலையின் உச்சியிலிருந்து செந்நீர் வீழ்ந்ததுபோல் தோள்களில் நின்று இரத்தம் பெருகி ஓடின.

திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்து
இரண்டு தோளினும் இரண்டு புக்கழுந்திட எய்தான்.

இராவணன் அம்பு தொடுத்து அடுதொழில் செய்துள்ளமையை இது காட்டியுள்ளது. கழுத்துக்குக் குறிவைத்தது தோள்களில் பாய்ந்து போயின. பராமுகமாய் நின்றபோது படுபழியாய் எய்த அவனது கொடுமையை நினைந்து இராமன் குறுமுறுவல் கொண்டான். தன்தோளில் ஒழுகிய குருதி தரையில் விழுமுன்னரே எதிரி கையிலிருந்த வில் துண்டாய்விழுந்தது.

முறுவல் எய்திய முகத்தினன் முளரியங் கண்ணன்
மறுவி லாததோர் வடிக்கணை தொடுத்துற வாங்கி
இறுதி எய்துநாள் கால்பொர மந்தரம் இடையிட்டு
அறுவ தாமென இராவணன் சிலையினை அறுத்தான்.

தன் தோளில் எய்த வாளியை வியந்து சிறுநகை செய்த இராமன் அடுத்த கணத்தில் இராவணன் பிடித்திருந்த வில்லை இப்படித் துணித்து வீழ்த்தினன். ஊழிக் காற்றைப் போல் உக்கிர வேகமாய்ப் பாய்ந்து அவனுடைய சிலையை இராம பாணம் சிதைத்துத் துணித்து அழித்துப் போயுள்ளது.

கால்பொர மந்தரம் அறுவதாமென அறுத்தான்.

இராமனது அம்பின் தன்மையையும் இராவணனுடைய வில்லின் வன்மையையும் இந்த உவமை வாசகம் நன்கு காட்டியுள்ளது. கால் = காற்று. மந்தரம் = மந்தரமலை.

யுக முடிவில் எழுகின்ற சண்டமாருதத்தால் மந்தரகிரி அழிவதுபோல் இவ்வீரன் அம்பால் அத் தீரன்வில் அழிந்துபோ

யது. எவ்வுலகையும் வென்று வந்த பாரவில் அன்று பாழ்பட்டு அழிந்தது. அந்த வில் அறுந்து விழவே அடுத்த வில்லைக் கடுத்து எடுத்தான். எடுத்த சிலையில் அவன் அம்புதொடுக்குமுன் அதனை யும் இவன் அறுத்து ஒழித்தான். துண்டமான அந்தவில்லின் துணியோடு தேரில் பூட்டியிருந்த குதிரைகளின் தலைகளும் ஒருங் கே உருண்டன. சேமமாக வந்திருந்த அடுத்த ஒரு தேரில் இராவணன் பாய்ந்தான். அவன் தாவி நிற்குமுன் அந்தத் தே ரும் அழிந்து வீழ்ந்தது. சாரதிமாண்டான்; கொடையும் கொடி யும் கவசமும் பொடிகளா யுதிர்ந்தன. ஆபத்துக்கு உதவியாக அமைந்துவந்த சேமத்தேர்கள் யாவும் பாழாயின. மாயாசாலங் கள்போல் எல்லாம் மாய்ந்து வீழ்ந்தன. இராமன் அம்பு தொடுத்த நிலையும் இலங்கை வேந்தன் இழந்து நின்ற இழவும் விசித்திரக் காட்சிகளாய் விளங்கின. ஏறு தேரின்றி வேறு வில் இன்றிப் பாரில் பாய்ந்து கூரிய ஒரு வாளோடு இராவணன் சீறி நின்றான். பிடித்த அந்த ஒரு வாளையும் கடுத்துத் துணித்து அடுத்து அவனுடைய மணிமகுடத்தில் இராமன் அம்பு தொடுத் தான். அரிய நவமணிகள் மருவிப் பெரிய மகிமையோடு பெருகி யிருந்த அந்தக் கிரீடம் பல கதிர் ஒளிகளை வீசி ஆகாயத்தில் துள்ளி எழுந்தது. கிளர்ந்து மேல் எழுந்த அது கீழே தளர்ந்து விழவில்லை. வானவீதி வழியே ஒளியோடு விரைந்துபோய்க் கடலில் வீழ்ந்தது.

## முடியின் முடிவு.

மின்னும் பன்மணி மவுலிமேல் ஒருகணை விட்டான்
அன்ன காய்கதிர் இரவிமேல் பாய்ந்தபோர் அனுமன்
என்ன லாயதோர் விசையினில் சென்றவன் தலையில்
பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த. (1)

செறிந்த மாமணி பெருவனம் திசைபரந்து எரியப்
பொறிந்த வாய்வயக் கடுஞ்சுடர்க் கணைபடும் பொழுதில்
எறிந்த கால்பொர மேருவின் கொடுமுடி இடிந்து
மறிந்து வீழ்ந்ததும் ஒத்ததுஅவ் அரக்கன்தன் மகுடம்.(2)

அண்டர் நாயகன் அடுசிலை உதைத்தபேர் அம்பு
கொண்டுபோகப்போய்க்குரைகடல்குளித்தஅக்கொள்கை
மண்டலந் தொடர் வயங்குவெங் கதிரவன் தன்னை
உண்ட கோளொடும் ஒலிகடல் வீழ்ந்ததும் ஒக்கும். (3)

சொல்லும் அத்தனை அளவையில் மணிமுடி துறந்தான்
எல்லி மைத்தெழு மதியமும் ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன் பகலும் ஒத்தனன்அமர் பொருமேல்
வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன்.

மாற்றருந்தட மணிமுடி இழந்தவாள் அரக்கன்
ஏற்றம் ஏவ்வுல கத்தினும உயர்ந்துளன் எனினும்
ஆற்றல் நன்னெடும் கவிஞர்ஓர் அங்கதம் உரைப்பப்
போற்றரும்புகழ் இழந்தபேர் ஒருவனும் போன்றான். (5)

மணிமுடி இழந்து இராவணன் பிணியுழந்து நின்ற நிலையை இந்தக் கவிப்படங்கள் நன்கு காட்டியுள்ளன. தலையைக் கொய்து வீழ்த்தாமல் முடியையே குறிசெய்து இராமன் துணித்திருக்கிறான். இராமபாணம் இராவணனுடைய முடியைக்கவ்விக் கொண்டு அதிவேகமாய் ஆகாயத்தில் ஓடியிருக்கும் காட்சியை வியந்து நோக்கி உவந்து நிற்கிறோம். மேருமலையின் கொடுமுடியை வாயுபகவான் முன்னம் பறித்துப் போனது போல் அம்பு மகுடத்தை அடித்துப் போய் அலைகடலில் வீழ்த்தியுள்ளது. கோதண்ட வீரனுடைய பாணப் பிரயோகமும் அது வேகமாய் வேலைசெய்யும் வித்தகமும் அதிசய விசித்திரங்களாய் விரிந்துள்ளமையால் யாவரும் துதிசெய்து வருகின்றனர்.

## இரவிமேல் பாய்ந்த அனுமன் என்னலாயது.

மகுடத்தைக் கவ்விப் போன அம்புக்கு அனுமானை இங்ஙனம் உவமை கூறியிருக்கிறார். சூரியனைக் கனிந்த பழம் என்று நினைந்து இளமையில் அனுமான் கதிரவன்மேல் பாய்ந்தான் ஆதலால் அந்தக் காட்சி இங்கே காட்டாக வந்தது.

அனுமான் அம்புக்கும், சூரியன் மகுடத்திற்கும் ஒப்பாம்.

இராமபாணம்போல் வெற்றி வீரனோடு அனுமான் வேலை செய்து வருகிறான். அவ்வரவு நிலையை உறவுரிமையோடு கவி உணர்த்தி வருகிறார். அனுமான் நின்கைத்தனு என வாலிவாய் மொழியால் இராமனிடம் முன்னம் குறித்தருளியது இங்கே கூர்ந்து சிந்திக்கவுரியது. வில்லும் அம்பும்போல் இராமனுக்கு அனுமன் வெல்லுந் திறங்களாய் விளங்கி நிற்கிறான். உவமான உரைகளில் நவமான உண்மைகள் நயமாய் வெளிவருகின்றன

ஒளிகள் நிறைந்த அரிய பெரிய மணிகளால் இராவண னுடைய மகுடம் செய்யப் பட்டிருந்தது; அதனால் அது சூரியன் எனத் துலங்கி நின்றது. கடலில் கதிரவன் உதயம் ஆனதுபோல் இராவணன் முடி புனைந்திருந்தான் என முன்னம் வனைந்து கூறியதையும் ஈண்டு நினைந்து கொள்ளுகிறோம்.

கதிரவன் தன்னை உண்ட கோளொடும்
ஒலிகடல் வீழ்ந்ததும் ஒக்கும்.

சூரியனைக் கவ்விய செம் பாம்புபோல் இராவணனுடைய மகுடத்தை வவ்விக் கொண்டுபோய் இராமபாணம் கடலில் பாய்ந்தது என அதன் அடலாண்மையை இது காட்டியுள்ளது.

மணிமகுடத்தின் மாட்சியும், அதனைத் துணிசெய்து வீழ்த்திய அம்பின் காட்சியும் அதிசய உணர்ச்சிகளை விளைத்துள்ளன.

சொல்லும் அத்தனை அளவையில் மணிமுடி துறந்தான்

மகுடபங்கமான நேரத்தை இது நேரே அளந்துகாட்டியது.

கண் இமைக்குமுன், மூச்சுவிடுமுன், வாய்ச்சொல் முடியுமுன் என இன்னவாறு வருவது காலத்தின் விரைவைக் கருதியுணருமாறு விழி எதிரே தெளிவாக விளக்கி வருகிறது.

அரிய ஒரு மின்னல் வீசியதுபோல் இராம பாணம் பாய்ந்தது; இராவணனுடைய மகுடம் சின்னபின்னமாய்ச் சிதைந்து கடலில்போய் வீழ்ந்து கடிது மறைந்தது.

முடி இழந்த அவன் படி இழிந்து நின்றான்.

இராச கம்பீரமாய்த் தனக்குப் பேரழகு தந்து வந்த மணிமுடி மாயமாய் மறைந்து போகவே மாய்ந்துபோனவன் போல் செயல்கள் யாவும் ஓய்ந்து மயலோடு அவன் மயங்கி நின்றான்.

மதி இழந்த அல்லும், ஞாயிறு இழந்த பகலும் ஒத்தனன்.

முடியிழந்த இராவணனை இங்ஙனம் படி அளந்து காட்டியிருக்கிறார். ஒளிமணிஒழியவே மருளும் இருளும் மருவி நின்றன.

சந்திரனை இழந்த இரவும் சூரியனை இழந்த பகலும் இருள் மண்டியிருக்கும் ஆதலால் அந்த அல்லையும் பகலையும் எல்லை தெரிய எடுத்துச் சொல்லினார். மணி முடி இழந்து உள்ளம் நாணி ஒளி குன்றியுள்ளமையால் இராவணனுக்கு இருள் நிலை

கள் உவமைகளாய் வந்தன. உள்ளத்தில் துயர இருள் சூழ உலகத்தில் பழிஇருள் நீள அவன் நிலை குலைந்து நின்றான். அந்த அவலநிலை உவமையால் தெரிய நேர்ந்தது.

பகல் ஒளியாகிய சூரியனையும் இரவு ஒளியாகிய சந்திரனை யும் போல் மகுடம் ஒளி வீசியிருந்தது; அது ஒழிந்து போகவே இராவணன் இருளடைந்து இழிந்து நின்றான். கரிய நிறத்தன் ஆதலால் இருள் இனத்தன் ஆயினான்.

அகம் கரிந்து முகம்கருகி மூச்செறிந்து பேச்சிழந்து நின்ற நிலை காட்சிக்கு வந்தது. என்றும் காணாத இழிவும் துயரும் பழியும் கண்டு பரிதாப நிலையில் அவன் மறுகி நின்றான்.

அவ்வாறு நின்றவன் எத்தகைய நிலையினன் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளும்படி கவி வித்தகவினோதமாய் விளக்கி யிருக்கிறார். விளக்கம் அவனது வெற்றி நிலையைத் துலக்கியுளது.

வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன்

இராவணனைக் குறித்துச் சொல்லியிருக்கும் இது உள்ளி உணரவுரியது. போரில் மூண்டால் எவரையும் வெல்லுவனே அன்றி யாண்டும் யாதும் தோல்வி கண்டறியாத மேலான வெற்றி வீரன் அன்று அவ்வாறு கீழாய் இழிந்து நின்றான்.

பல்லாயிரம் அமரர்கள் ஒருங்கே திரண்டு வந்தாலும் தனி யே நின்று எளிதே வெல்லவல்லவன் இராமன் எதிரே படை களை யெல்லாம் இழந்து படு தோல்வி யடைந்து பரிந்துநின்றான். அவனது பரிதாப நிலையை விளக்க வந்த கவி அரிய பல உண்மை களைத் தெளியச் செய்து அறிவின் சுவைகளை விளைத்துள்ளார்.

கவிஞர் சோல்.

ஆற்றல் நல்நெடும் கவிஞர்ஓர் அங்கதம் உரைப்பப்
போற்றரும் புகழ் இழந்தபேர் ஒருவனும் போன்றான்.

எல்லாவுலகங்களிலும் ஏற்றம்பெற்று யாண்டும் புகழோடு வாழ்ந்து வந்த இராவணன் ஈண்டு நிலைகுலைந்து பழியடைந்து நின்றுள்ளமையான் அந்த நிலையைத் தெளிவாக விளக்க இந்த உவமை வந்தது. உறவாய் உற்ற ஒப்புமை உய்த்துணர உரியது.

சிறந்த புலமைவாய்ந்த உயர்ந்த கவிஞன் உள்ளம் கனன்று ஒரு வசைமொழி உரைத்தால் எல்லாச் செல்வங்களையும் இழந்து எவனும் இழிந்து போவன்; அதுபோல் இராமன் எதிரே இராவணன் அன்று அழிந்து போனான் என்க.

அழிவுநிலை பெரிதாய் எளிதே நிகழ்ந்துள்ளது; அந்நிலைமையைத் தெளிந்து கொள்ள இங்ஙனம் மொழிந்தருளினர்.

அங்கதம் = வசைமொழி, வசைப்பாட்டு.

உள்ளே கதம்கொண்டு சொல்லுவது; கதத்தை அங்கமாக வுடையது; என்னும் ஏதுவான் வந்தது. கதம் = கோபம்.

மனம் கனன்று முனிவர் சபிப்பது சாபம்; கவிஞர் சொல்வது அங்கதம். நேரே நிந்தையாகவும் நிந்தாத் துதியாகவும் கவிஞர் பாடுவர் ஆதலால் அங்கதம் இரண்டு வகையாய் நின்றது.

"அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்தது என இரு வகைத்தே. (1)
செம்பொருள் ஆயின் வசைஎனப் படுமே. (2)
மொழிகரந்து சொல்லினது பழிகாப் பாகும்." (3)
(தொல்காப்பியம்)

அங்கதத்தைக் குறித்து ஆசிரியர் தொல்காப்பியனர் இங்ஙனம் உரைத்திருக்கிருர். முனிவர் சாபமும் அருளும் புரிந்து வருதல்போல் கவிஞர் கோபமும் குணமும் கொண்டாடி வருகின்றனர். அந்தக் கோபச் சொல் அங்கதமாய் வருகிறது; அதனல் கொடிய குடிகேடுகள் விளைந்து விடுகின்றன.

முடி இழந்த அரக்கன் கவிஞர் சொல்லால் குடி அழிந்தவன் போல் ஆனன் என்றது இங்கே ஆய்ந்து சிந்திக்கவுரியது.

கவிஞரைக் குறித்து நம் கவிஞர்பிரான் எவ்வளவு மகிமையாக் கருதியுள்ளார்! என்பதைக் காவியத்துள் பல இடங்களிலும் நாம் கண்டு வருகிறோம்.

சொல் ஒக்கும் சரம் என இராமன் அம்புக்கு முனிவர் மொழியையும், கவிஞர் சொல்லையும் கலந்து குறித்து வருதலை நுணுகி உணர்ந்து கொள்ளுகிறோம்.

"காகுத்தன் பகழி கவிஞர் நாவின்சொல்." (கும்பகருணன் 22)

இராம பாணத்துக்குக் கவிஞர்சொல்லை இங்ஙனம் உவமை கூறியிருக்கிறார். உள்ளம் கனன்று கவிஞர் சொல்லுகிற சொல் எல்லையில்லாத வலியுடையதாய் ஒல்லையில் கேடுகளை விளைத்து விடும் ஆதலால் பகைமையின் அல்லல்களை நீக்கி எல்லாவகை யிலும் வெல்ல வல்ல இராமன் அம்புக்கு அது ஒப்பாய் வந்தது.

கவிஞர், இராமனுக்கும்; அவர் நா, வில்லுக்கும்; சொல், அம்புக்கும் ஒப்பாம். அரிய செல்வங்கள் நிறைந்து பெரிய புக ழோடு ஒருவன் ஓங்கியிருந்தாலும் கவிஞருடைய வசைச் சொல் விழுந்தால் அவன் எல்லா நலங்களும் இழந்து இழிந்த பழியாள னாய் அழிந்து போவான் ஆதலால் இராமன் எதிரே தோல்வி அடைந்து இழிந்து நின்ற இராவணனுக்கு அவன் உவமையாய் வந்தான். அளவிடலரிய பெருமைகள் எல்லாம் அடியோடு போய் அவன் மறுகி நின்ற நிலை உவமையால் அறிய வந்தது.

கவிஞர் சொல்லால் எவரையும் எளிதே வெல்லவல்லவர்;
இராமன் வில்லால் யாரையும் ஒல்லையில் வெல்ல வல்லவன்.

அவர் கோது நீக்கிக் குணம் காண்பவர்;
இவன் தீது நீக்கி நீதி காண்பவன்.

சொல்லை ஏராகவுடைய அவரைப் பகைப்பவர் அடியோடு அழிவர்; வில்லை ஏராகவுடைய இவனைப் பகைப்பவர் குடியோடு ஒழிவர். இருவர் நிலைகளும் பொருவரு வலியின.

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை." (குறள், 872)

வில் வீரரையும் சொல் வீரரையும் தேவர் இதில் ஒருங்கே குறித்திருத்தலைக் கூர்ந்து நோக்குக. வில்லாளரைப் பகைப்பதி னும் சொல்லாளரைப் பகைப்பது கொடிய குடிகேடாம்; அவ ரை யாதும் பகையாமல் எவ்வழியும் இனிது பேணி வாழுக என உலகவர்க்கு உரிமையோடு இது உறுதி போதித்துள்ளது.

சொல்லால் உலகாளும் சுந்தரர் எனக் கவிஞர் ஈண்டு வந்துள்ளமை சிந்தனை செய்து தெளிந்து கொள்ளத்தக்கது.

கவிஞர்சொல் அதிசய ஆற்றலுடையது; இவரைப் பகைத் தவர் இராமனைப் பகைத்த இராவணன்போல் அடியோடு

அழிந்து போவர் என்பதை நம் கவிஞர் பெருமான் இங்கே வினயமா உணர்த்தியிருக்கிருர். அவரது சொந்த அனுபவம் இந்தவாறு விந்தையாய் வெளிவந்துள்ளது.

அவருடைய ஒரு சொல்லால் சோழ மன்னன் எல்லா மேன்மைகளையும் இழந்து குலத்தோடு அழிந்து போயிருத்தலைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுபவர் எவரும் கவிஞர் அங்கதவுரை என இங்கே வந்துள்ளதைத் தேர்ந்து கொள்ளுவர்.

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் உண்டிரண்டு
வில்லம்பிற் சொல்லம்பே வீறுடைத்து---வில்லம்பு
பட்டுருவிற்று என்மார்பில் பார்வேந்தா! நின்குலத்தைச்
சுட்டெரித்தது என்வாயிற் சொல்." (கம்பர்)

கம்பரது அங்கத வுரையால், சோழ அரசர் குலம் பாழா யதை இது இங்ஙனம் உணர்த்தியுள்ளது.

கவியரசர்கள் எவர்க்கும் என்றும் சக்கரவர்த்தியா யுள்ள வர் கம்பர் பெருமான் என்பர். அவர் கவிஞரின் மகிமையை உரிமையோடு இங்ஙனம் உவந்து புகழ்ந்துள்ளார்.

அறிவாற்றலும் நல்ல குணங்களும் அரிய பெரிய சிந்தனை களும் இயல்பாகவுடையவரே உயர்ந்த கவிஞராவார் என்பார் ஆற்றல் நல்நெடும் கவிஞர் என விசேடணங்களை விரித்துரைத்தார்.

அறிவு தெய்வீகமுடையது; அதனைத் தலைமையாகப் பெற்றுக் கலை நிலையில் உயர்ந்துள்ள கவிஞர் தெய்வத் திருவருள் தோய்ந்து சிறந்து நிற்கின்ருர்; நிற்கவே அவருடைய வாக்கு அற்புதங்களை விளைத்து வருகிறது; வரவே அதிசயமுடைய அது எவராலும் துதி செய்யப் பெறுகிறது. வரகவி; வசைகவி என்பன அருள் ஆற்றல்களைக் குறித்து வந்துள்ளன. வசை பாடக் காளமேகம் என்றது அக்கவிஞரது வாக்குப் பலிதங்களை நோக்கி எழுந்தது. இந் நாட்டுக் கவிஞரது பாட்டுகளும் வாக்குகளும் விசித்திர நிலைகளில் விளைந்திருக்கின்றன. பெரும்புலமை யில்லாமலே சிலர் கவிஞர் எனத் துலங்கிக் காட்சி புரிந்துள்ளனர்.

## இலை எடுத்தது.

விரத தினத்தில் ஒரு கவிஞர் ஆலமரத்தின்மேல் ஏறி இலைகளைப் பறித்தார்; பறித்த இலைகள் கீழே விழுந்திருந்தன; அவற்

றைத் தொகுத்து எடுத்துக்கொண்டு ஒரு துடுக்கன் மிடுக்காய்ப் போனன்; அவன் போக்கை நோக்கிய கவிஞர் அவனை நயந்து கூப்பிட்டார்; அவன் திரும்பிப் பாராமல் செருக்கோடு சென்றான். கவிஞர் கடுத்து ஒன்று சொன்னார்.

"இலை எடுத்துப் போகின்றாய் நீ தலைஎடுத்து வருவையா?" என்று இவ்வாறு சொல்லிவிட்டு அவர் சென்றார். இலைகளோடு வீட்டுக்குப் போனவன் அன்றே காய்ச்சல் கண்டு படுத்தான்; மறுநாள் இறந்து போனன். கவிஞர் கூறிய வசைச் சொல்லால் அவன் செத்தான் என்று ஊரெங்கும் பேராயது. நாடும் தெரிந்து கவிஞரை வியந்தது.

"இலையெடுத்துச் சென்றாய் இனிநீ திரும்பித்
தலையெடுத்து வாரா யெனவே---புலையெடுத்த
காய்ச்சலால் மாய்ந்தான் கவிஞர் கடுத்துரைக்கும்
வாய்ச்சொல் வலியே வலி."

வசைபாடிய கவிஞரைக்குறித்து இது இசைபாடியுள்ளது.

கவிஞர் அங்கதமொழியால் தேவதைகளும் சீரழிந்துள்ளன.

கயத்தாறு என்னும் ஊர் பாண்டி நாட்டிலுள்ளது. அங்கே பெருமாள் கோவில் சிறந்த நிலையில் விளங்கியிருந்தது. உயர்ந்த உற்சவம் நடந்து வருங்கால் அவ்வூருக்குக் காளமேகப் புலவர் போயிருந்தார். பல காட்சிகளையும் கண்டு வந்தார்; இரவு ஒரு திண்ணையில் படுத்து உறங்கினார். சாமி எழுந்தருளிய சப்பரம் நடுச்சாமத்தில் வீதிவழியே பவனி வந்தது. அயர்ந்து படுத்திருந்த புலவரை எழுப்பித் தண்டிகையைச் சுமக்கும்படி தானத்தார் செய்தனர். சிறிது சுமந்தார்; தோள் வலி எடுத்தது; உள்ளம் வருந்திப் பெருமாளை நோக்கி ஒரு பாட்டுப் பாடினார்.

பாளைமணம் கமழுகின்ற கயத்தாற்றுப் பெருமாளே! பழிகாராகேள்
வேளைஎன்றால் இராவேளை பதினறு நாழிகைக்கு மேலாயிற்றென்
தோளைமுறித் ததுமன்றி நம்பியானையும் கூடச் சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பார்? எந்நாளும் உன்கோயில் நாசம் தானே.
(காளமேகம்)

இந்தப் பாட்டின்படியே அந்தப் பெருமாள் கோவில் இன்றும் பாழாயுள்ளது. கவிஞர் சொல்வலியில் சிறந்திருத்தலால் அரசரும் அவரை மரியாதையுடன் போற்றி வருகின்றார். தன்

நாட்டில் மாத்திரம் அரசன் மதிப்புறுகிறான்; கவியரசன் எந் நாட்டிலும் எவ்வழியும் இசை பெற்று நிற்கின்றான்.

"The Poet is a sovereign, and stands on the centre."[Emerson]

"கவிஞன் சுயாதிபதியான சக்கரவர்த்தி; எங்கும் பொது வாய் நிற்கிறான்." என எமர்சன் இவ்வாறு கூறியிருக்கிறார்.

உண்மையான உறுதி நலங்களை உரிமையுடன் உலகிற்கு உரைத்து வருதலால் கவிஞர் யாண்டும் மேன்மை பெற்று என்றும் பெருமகிமைகளோடு பெருகி வருகின்றார்.

"Poets are all who love, who feel great truths,
And tell them: and the truth of truths is love." [Bailey]

"கவிஞர் எல்லாவுயிர்களிடமும் இரக்கம் உள்ளவர்; அரிய பெரிய உண்மைகளை உணர்ந்து சொல்பவர்; அன்பே மெய்யான தெய்வம் என்று தெளிந்து யாண்டும் பண்பு புரிந்து வருபவர்" என ஜேம்ஸ் பெய்லி என்பவர் இங்ஙனம் உரைத்திருக்கிறார்.

அறிவு நலம் வாய்ந்து நல்ல நீர்மைகள் தோய்ந்து தெய்வ அருளும் பெற்றிருத்தலால் அரிய கவிஞர்பால் அதிசய ஆற்றல்கள் பெருகியிருக்கின்றன. அவர் உள்ளம் உவந்து சொன்னால் வாழ்வு வளர்ந்து வருகிறது; வருந்தி யுரைத்தால் தாழ்வு விளைந்து விடுகின்றது. அத்தகைய உத்தமக் கவிஞருடைய உயர் மகிமைகளை உலகம் அறிந்து தெளிய ஈண்டு உணர்த்தியருளினார்.

கவிஞர் ஓர் அங்கதம் உரைப்பப் புகழ் இழந்த ஒருவன் போல் இராமன் அம்பால் இராவணன் பழியடைந்து நின்றான்.

என்றும் வெற்றிவீரனோடு விளங்கி வந்தவன் அன்று குன்றி நின்றது கொடிய பரிதாபமாயிருந்தது. அந்தப் பரிபவ நிலையை ஓவிய உருவமாக் கவி எழுதிக் காட்டியுள்ளார். அங்கே போரில் நேர்ந்த காட்சிகளை அயலே காண வருகின்றோம்.

## இராவணன் நின்ற நிலை.

அறம் கடந்தவர் செயலிது என்று உலகெலாம் ஆர்ப்ப
நிறம் கரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இரங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆலன்ன மெய்யன்.

### இராமன் கருதியது.

நின்றவன் நிலை நோக்கிய நெடுந்தகை இவனைக்
கொன்றல்உன்னிலன்வெறுங்கைநின்ருன் எனக்கொள்ளா
இன்றவிந்தது போலும்உன் தீமைஎன்று இசையோடு
ஒன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான். (2)

### உறுதிகள் உரைத்தது.

அறத்திஞல் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்திஞல் அரிதென்பது மனத்திடை வலித்தி!
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யான்அது நினைக்கிலன் தனிமைகண் டிரங்கி. (3)

உடைப் பெருங் குலத்தினரொடும் உறவொடும் உதவும்
படைக் கலங்களும் மற்றும்நீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண்டு ஆற்றுதி ஆயின்
கிடைத்தி அல்லையேல் ஒளித்தியால் சிறுதொழிற்கீழோய்!

சிறையில் வைத்தவள் தன்னைவிட்டு உலகினைத் தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்து அவற்கு ஏவல்செய் திருத்தியேல் இன்னும்
தறையில் வைக்கிலன் நின்தலை வாளியில் தடிந்து. (5)

அல்லை யாமெனின் ஆரமர் ஆற்றெனும் தோற்றம்
வல்லை யாமெனின் உனக்குள வலியெலாம் கொண்டு
நில்லையாஎன நேர்நின்று பொன்றுதி எனினும்
நல்லை யாகுதி பிழைப்பினி உண்டென நயவேல். (6)

ஆளையா உனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவா என நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல். (7)
(முதல் போர், 250-256)

இந்தப் பாசுரங்கள் ஏழையும் ஊன்றிப் பாருங்கள்; உணர்ச்சி நிலைகளை ஓர்ந்துகொள்ளுங்கள். நிகழ்ச்சிகள் அதிசய விசித்திரங்களாய் நேர்ந்திருக்கின்றன. விதியின் விளைவுகள் அரிய பல போதனைகளை விளக்கி இனிது நிலவி நிற்கின்றன.

தோல்வியடைந்து செயலிழந்து மயலுழந்து மறுகி நின்ற இராவணனுடைய பரிதாப நிலையைப் பார்த்து உலகம் பரிந்து பேசி இரங்கியுள்ளது. பரிவுரைகளில் அறிவு நலங்கள் பெருகின.

"செல்வச் செருக்கால் தருமத்தை மறந்து பாவ கருமங்களைத் துணிந்து செய்யும் தீவினையாளர்கள் முடிவு இப்படித்தான் ஈனமாய் முடியும்! வானமும் வையமும் வென்று வரம்பறு திருவோடு வாழ்ந்து வந்தவன் இன்று மானம் அழிந்து ஊனமடைந்து ஈன இழிவுகளிலுழந்து இழிந்து நிற்க நேர்ந்தான்; எவ்வளவு கண்ணிய நிலைகளில் ஓங்கி யிருந்தாலும் புண்ணியத் தொடர்பை இழந்தவன் புலையாயிழிந்து போவான் என்பதை இவனது நிலையே விழி தெரிய விளக்கியுள்ளது; உத்தம பத்தினியின் உள்ளம் நோகச்செய்தான்; எல்லா மகிமைகளையும் இழந்து இழிபழி அடைந்தான்'' என இன்னவாறு விண்ணவரும் மண்ணவரும் பேசி ஏச இலங்கை வேந்தன் நீச நிலையில் கலங்கி நின்றான். உலகப் பேச்சு உயர் போதமாய் ஓங்கி நின்றது.

அறம்கடந்தவர் செயல்இது என்று உலகெலாம் ஆர்ப்ப.

இராவணனது நிலையைக்கண்டு உலகம் எல்லாம் பரிகாசம் செய்து ஆரவாரித்துள்ள உண்மையை இது உணர்த்தியுள்ளது.

எவ்வளவு பெருமையுடையவர் ஆயினும் தரும நெறியைக் கடந்தவர் சிறுமையடைந்து சீரழிவர் என்பதை உலக வசனத்தால் கவி இங்கே உறுதி செய்துள்ளமை ஊன்றி உணரவுரியது.

புண்ணியத்தின் வழியே ஒழுகுங்கள்; அதுவே எண்ணிய இன்ப நலங்களை அருளி எல்லா மேன்மைகளையும் இனிது தரும்.

பாவத் தொடர்பால் பழி கேடுகளே வரும்; ஆபத்தான அதனை யாதும் அணுகலாகாது என்னும் போதனை ஈண்டு நுணுகி உணர்ந்து இனிது தெளிந்து கொள்ள வந்துளது.

அற நெறி கடந்து அடாத காரியங்களைச் செய்தமையால் இராவணன் படாதபாடுகள் பட்டுப் பழியடைந்து நின்றான் என அந் நிலைமையை எடுத்துக் காட்டி உலகமக்களுக்குத் தலைமையான உறுதி நலங்களை இங்கே கவி நன்கு உணர்த்தியுளார்.

நிறம் கரிந்திட நிலம் விரல் கிளைத்திட நின்றான்.

இராவணன் அங்கே நின்ற நிலையை இது நேரே காட்டியுள்ளது. அல்லல் நிலைகள் உள்ளம் உன்றி உணர வந்தன.

புறத்தில் தோன்றியுள்ள குறியீடுகள் அகத்தில் ஊன்றி

யுள்ள அவமானங்களையும் துயரங்களையும் தெளிவாக விளக்கி யிருக்கின்றன. உயிர் வேதனைகள் உலகம் அறிய நேர்ந்தன.

நிறம் கரிந்தது துக்கத்தால்; நிலம் விரல் கிளைத்தது வெட்கத்தால் என்க. கொடிய கவலைகள் நெடிய அவலங்களாயின.

உயர்ந்த நிலையில் என்றும் இராச கம்பீரமாய் இலங்கை வேந்தன் வாழ்ந்து வந்தான். அன்று இராமன் எதிரே படு தோல்வி யடைந்து இழிந்தான்; யாண்டும் காணாத கொடிய இழிவு நேர்ந்தமையால் உள்ளம் நாணி உயங்கி மயங்கி உயிரு லைந்து நின்றான். துயரங்கள் சுடு கனல்களாய் நின்றன.

மானத்தால் மறுகிக் காலின் பெருவிரலால் தரையைக் கிளைத்துக்கொண்டு தயங்கி நின்ற அந் நிலையைக் கவி சுவையாகக் குறித்துக் காட்டியிருக்கும் குறிப்பு கூர்ந்து சிந்திக்கவுரியது.

நிலம் விரல் கிளைத்திட நின்றான்.

என்றது கொடிய அவமானத்தையும் நெடிய துயரத்தையும் படியெடுத்துக் காட்டியபடியாம். செயலிழந்தபோது நிகழும் இயற்கை நிகழ்ச்சி இங்கே வியக்கத் தக்கதாய் விளைந்திருக்கிறது. மேவிய துயர நிலையை மெய்ப்பாடுகள் வெளிப்படுத்தின.

இரங்கு கண்ணினன்; எல் அழிமுகத்தினன்; தலையன்;
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆல்அன்ன மெய்யன்.

இந்தச் சோக சித்திரத்தை விழியூன்றிப் பாருங்கள்.

கண் குழி விழுந்து, முகத்தில் ஒளி யிழந்து, தலை கவிழ்ந்து, கைகளைத் தொங்கவிட்டுப் பல விழுதுகளையுடைய ஆலமரம்போல் பழுதுடைய அவன் பருவரலோடு நெடிது நின்றான்.

உள்ளத்தில் ஊன்றியுள்ள கொடிய வேதனைகளை உடலின் குறிகள் வெளிசெய்துள்ளன. கண்ணும் முகமும் தலையும் கையும் காலும் நிறமும் மாறுழந்து மறுகி யிருக்கும் நிலைகள் நேரே காண வந்தன. உற்ற துயரமும் பற்றிய அவமானமும் உயிரைச் சூறையாடி யிருக்கின்றன.

"வருத்தம் உற்றோன் அவிநயம் வகுப்பின்
பொருத்தம் இல்லாப் புன்கண் உடைமையும்
சோர்ந்த யாக்கையும் சோர்ந்த முடியும்

..ர்ந்த வியர்வும் குறும்பல் லுயாவும்
..ற்றிய வாயும் வணங்கிய உறுப்பும்
..ற்றது என்ப உணர்ந்திசி னோரே. (1)

நாணம் உற்றோன் அவிநயம் நாடின்
இறைஞ்சிய தலையும் மறைந்த செய்கையும்
வாடிய முகமும் கோடிய உடம்பும்
கெட்ட ஒளியும் கீழ்க்கண் நோக்கமும்
ஒட்டினர் என்ப உணர்ந்திசி னோரே.

(அவிநயம்)

வருத்தமும், நாணமும் உற்றபொழுது மனிதனிடம் தோன்றும் மெய்ப்பாடுகளை இவை உணர்த்தியுள்ளன. அவயவங்களில் நிகழும் குறியீடுகளால் அறிவது அவிநயம் எனவந்தது. பாவனைகளால் உணர்வது பாவகம் என்க.

உள்ளம் நாணி உயிர் நொந்துள்ள இராவணனது துயர நிலைகளைப் புறநிகழ்ச்சிகளால் ஓரளவு உணர்ந்துகொள்ளுகிறோம்.

யாண்டும் அதிசய வீரனாய்த் துதிகொண்டிருந்தவன் ஈண்டு இவ்வாறு இழிவடைந்து பழிபடிந்து நின்றான்.

நின்றவன் நிலை நோக்கிய நெடுந்தகை இவனைக்
கொன்றல் உன்னிலன்.

இராவணனது நிலைமையை நோக்கி இராமன் கருணை புரிந்துள்ள காட்சியை இங்கே கண்டு மகிழ்கின்றோம். யாதொரு ஆயுதமும் இல்லாமல் வெறுங் கையனாய் நின்றுள்ள அவனை யாதும் செய்யலாகாது என உள்ளம் இரங்கி இவ் வீர வள்ளல் ..ரிமைசெய்துள்ளமை உயர் பெருந்தகைமையாய் ஓங்கியுளது.

கொன்று தொலைக்கவேண்டிய அவனை அன்று கொல்லாமல் விட்டுள்ளமையால் கொன்றல் உன்னிலன் என்றார்.

உன்னல் = நினைத்தல், கருதி நிற்றல்.

தனிமை கண்டு இரங்கித் தகவுகொண்டு நின்றான்.

நெடுந்தகை என இராமனை இங்கே குறித்தது அரிய பெரிய சீர்மையாளனாய் நிலவி நிற்கும் நிலைமை கருதி. நெடுமை குண ..ங்களால் நீண்டு என்றும் உயர்ந்துள்ள தன்மை.

கொடிய பகைவனிடத்தும் இனிய கருணை காட்டியுள்ளமையால் நெடிய புகழுடையனாய் என்றும் எவரும் உவந்து கொண்டாடும்படி இக் கோமகன் உயர்ந்து திகழ்கின்றான்.

அதிசய ஆடம்பரங்களோடு போர் மேல் மூண்டுத் தோமேல் வந்த இராவணன் யாவும்இழந்து அகங்கார ஆரவாரங்கள் எல்லாம் அடங்கித் தனியே துனியூர்ந்து நின்ற அந் நிலைமையை நோக்கி இக் குலமகன் சில மொழிகள் புகன்றான்.

"உன்னுடைய செருக்கும் திமிரும் தீமையும் இன்று அடங்கின; இந்த அழிவு நிலையைக் கண்டு இனிமேலாவது விழிதிறந்து நல்ல புத்தியோடு நடப்பாயா?" என்று இலங்கை வேந்தனை நோக்கித் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு பின்னும் இராமன் வெளிப்படையாய்ப் பேச நேர்ந்தான்.

## இராமனது உறுதிமொழி.

"இராவண! தருமமே யாவருக்கும் உறுதித்துணை. அதனைச் சிறிது இழந்தாலும் தேவராலும் மேன்மை பெறமுடியாது. அறம் குன்றின் யாவும் குன்றும்; இன்பமும் வெற்றியும் தருமத்தால் வருகின்றன; பாவத்தால் துன்பமும் தோல்வியுமே உண்டாம். அதனை இன்று நீ உன் அனுபவத்தில் கண்டாய்! நிலைமைகளை நெஞ்சுள் நினைந்து சிந்தனை செய்து பார்! இதற்குள் நீ இங்கே இறந்து போயிருப்பாய்; நான் உன்னைக் கொன்று வீழ்த்தியிருப்பேன்; நிராயுதபாணியாய் நிற்கின்ற உன் தனிமையைக் கண்டு என் உள்ளம் இரங்கியது; அதனால் நீ உயிரோடு நிற்கிறாய்! எனது இரக்கமே அரக்கர்பதியாக உன்னை இந்த உருவில் இங்கே நிறுத்தி யிருக்கிறது; இருப்பைக் குறிப்போடு கூர்ந்து ஓர்ந்துகொள். உன் ஊருக்கு நீ இனி ஓடிப்போகலாம்; உனது மனைவி மக்களைக் கண்டு களிக்கலாம். உன்னுடைய குலத்தவர் எல்லாரையும் திரட்டிக் கொண்டு நீ பெற்றுள்ள படைவலிகளோடு மீண்டும் போராட வரலாம். அல்லது மாறாய் ஒளிந்து கொள்ளலாம். மறுபடியும் நீ உயிரோடு வாழவேண்டுமானால் சில வழிகளைச் சொல்லுகிறேன்; அம் மொழிகளைக் கவனமாய்க் கேள்! சிறையில் வைத்திருக்கிற சீதையை முதலில் இங்கே மரியாதையோடு கொண்டுவந்து சேர்த்துவிடு; தேவர்களுக்கு யாதொரு இடையூறும் செய்யாமல் இருப்பதாக உறுதி

மொழி கொடு; நீதி முறைகள் உலகில் நிலவிவரும்படி பல முறைகளையும் நலமுறச் செய்; உன் தம்பி வீடணனை இலங் காதிபதியாக்கி முடி சூட்டி வைத்து அவனுடைய ஏவலை ஆவலோடு செய்து வா! இவ்வாறு செய்து வருவாயானால் நீ உயிரோடு வாழலாம்; இல்லையானால் உன் தலைகளை அறுத்துத் தரையில் உருட்டுவேன். இன்று தோல்வியடைந்து விட்டோமே! என்று நீ வருந்த வேண்டாம்; மீண்டும் போருக்கு வரலாம்; உடம்பை நன்றாகத் தேற்றிக்கொண்டு எல்லாச் சேனைகளையும் கருவிகளையும் ஒருங்கே சேர்த்து உக்கிரவீரத்துடன் உறுதியாய் அமர் செய்ய வா! என்னோடு நேரே போராடி மாண்டாலும் அது உனக்கு மிகவும் பெருமையாம். எப்படியும் நீ சாவது உறுதி; ஆவதை அறிந்து விரைந்து செய்; இனிமேல் உயிரோடு பிழைத்து நீ வாழலாம் என்பதை அறவே மறந்துவிடு; இலங்கை நாயக! நேர்ந்துள்ளதை நினைந்து நெஞ்சம் கலங்காதே! இன்று உன்னோடு கடல்போல் திரண்டு வந்த சேனைகள் எல்லாம் ஊழிக் காற்றின் எதிர்ப்பட்ட பூளைப் பூவைப்போல் பாழாய் அழிந்து போயின; நீ நேரே கண்டிருக்கிறாய்! நான் வேறே கூற வேண்டியதில்லை. ஈண்டு வீணே நின்று என் காலத்தைக் கடத்துகின்றாய்! உன் ஊருக்குப் போ! ஆறுதல் செய்துகொள்; முடியுமானால் வேண்டிய ஆயத்தங்களோடு போருக்கு நாளைக்கு வா!'' என இன்னவாறு இவ் வீரமூர்த்தி இராவணனுக்கு விடை கொடுத்திருக்கிறான்.

உணர்ச்சி வேகங்களும் அரிய பண்பாடுகளும் உரைகளில் ஒளி புரிந்து வந்துள்ளன. நிகழ்ச்சிகள் விசித்திர கதிகளில் விளைந்திருக்கின்றன. வீரகம்பீரங்கள் வீறுகொண்டுநிற்கின்றன.

தோல்வி யடைந்தவன் மீண்டு இலங்கையை நோக்கிப் போகாமல் ரணகளத்திலேயே அசையாமல் நின்றிருக்கிறான். அந்த நிலை கூர்ந்து சிந்தனை செய்து ஓர்ந்துகொள்ள வந்தது.

"போருக்கு மூண்டு வந்தோம்; தோல்வி அடைந்தோம்; இனி மாண்டு மடியவேண்டுமே அன்றி மீண்டு போகலாகாது. மீளும்படியான உரிமையை வெற்றி பெற்றுள்ளவன் தந்தாலொழிய எந்த வகையிலும் யாண்டும் அயலே செல்லலாகாது'' என்னும் வீர நியமத்தை இராவணன் அங்கே விளக்கி நின்றுள்ளான். அவனது நிலை அதிசய நீர்மையாய் நிலவியுள்ளது.

தான் தோல்வி யடைந்தபோதே தன்உயிர் வென்றவனுடையதே என்று அவன் உறுதி செய்துள்ளமை செயலில் அறிய வந்தது.

இந்த நிலையில் நின்றுள்ள அந்த வீரமானியை நோக்கி இராமன் நீர்மையோடு சில உறுதி நலங்களை உள்ளம் தெளிய உரைத்தான். உரைகள் உயர்ந்த உண்மைகளை உணர்த்தி வந்தன.

அறத்தினால் அன்றி அமரர்க்கும் அரும்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி.

அரக்கர் பதியை நோக்கி அறத்தின் மகிமையை இராமன் முதலில் இங்ஙனம் உரைத்திருக்கிறான். தரும நீதிகளைக் கடந்து தீவினைகளை யாண்டும் துணிந்து செய்து யாரும் நிகரில்லை என்று வீரச் செருக்கோடு நீண்டு வாழ்ந்து வந்துள்ளவன் ஆதலால் தன் நிலைமையை ஓர்ந்து உணரும்படி இக் குலமகன் இவ்வாறு அவனுக்கு அறத்தின் திறத்தைக் குறித்து உரைத்தான். மறம் படிந்தவன் அறம் படிந்து தெளிய அறிவுரைகள் திறம்படிந்து வந்துள்ளன. கருத்தும் குறிப்பும் கருதியுணர வுரியன.

அமரர்க்கும் என்றதில் உம்மை உயர்வு சிறப்பு.

புண்ணியங்களைச் செய்து தேவராய் உயர்ந்துள்ள விண்ணவரும் அறத்தை இழந்துவிடின் அப்பொழுதே இழிந்துகெடுவர்.

அரும் சமம் என்றது பெரும் போரை.

"அரியசமரில் அமரர் முன்னம் உன் எதிரே தோல்வியடைந்ததுஎதனால்என்றுதெரியுமா? அறங்கடந்து பரம்பொருளை மறந்து சிறந்த போகங்களையே நுகர்ந்து வீணேசெருக்கிப்பெரும்போகிகளாய் அவ் வானவர் ஊனமாய் மயங்கி இருந்ததனாலேயாம்.

தவமும் தருமமும் தழுவி நின்றதனாலேதான் அன்று நீ அமரரை வென்றாய். இறைவனை எண்ணிப் போற்றிய புண்ணியப் பேற்றினால் எவரையும் வென்று எல்லா உலகங்களையும் ஆளும்படியான மேன்மையை அடைந்தாய். நீண்டகாலம் ஆண்டு வந்தாய்! முடிவில் அறநெறி ஒருவிக் கொடிய தீவினைகளைச் செய்யநேர்ந்தாய்; அதனால் உன் குடியும் குலமும் அழிய மூண்டுள்ளன. பழி நிலைகளை விழி திறந்து பார்!

அறம், அமுதம்; பாவம், நஞ்சு. இதனை நெஞ்சுள் நினைக.

நல்லதை ஒருவித் தீயதை மருவியுள்ளமையால் நீசமாய் நீ நாசமடைய நேர்ந்துள்ளாய்!'' என அவனது அழிவு நிலையை விழிதெரிய விளக்கினன். மனத்திடை வலித்தி என்றது பாவத்தால் இழிவும் அழிவுமே நேரும் என அவன் உள்ளத்தில் உறுதியாகத் தெளிந்து கொள்ளும்படி வலியுறுத்தியவாறும்.

பல்லாயிரம் படைகளோடு வந்த இராவணன் எல்லாம் இழந்து வெல்லாமல் இழிந்துள்ளான்; தனியேபுகுந்த இராமன் வென்று நின்றுள்ளான். அறத்தை இழந்தமையால் அவன் அந்த அவல நிலையை அடைந்தான்; தருமத்தையே என்றும் தழுவி யுள்ளமையால் இவன் இங்ஙனம் வென்றி வீரனாய் விளங்கி வெற்றியின் உண்மையை விளக்கி நின்றான்.

வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின். (குறள், 546)

அரசனுக்கு வென்றி தருவது நீதியான செங்கோலே; வேல் அன்று என்னும் இது ஈண்டு எண்ணவுரியது. கோல் சீர்மை யுடையதாயின் வேல் கூர்மை யுடையதாய் வெல்லும் என்பது குறிப்பு. தருமதத்துவம் மருமமாய் இங்கே மருவியுளது.

உள்ளே தருமம் இருந்தால் ஒழிய வெளியே வெள்ளம் போல் படைகள் பொங்கி வந்தாலும் எதிரியை அரசன் வெல்ல முடியாது என்பதை இலங்கை வேந்தன் நிலையால் ஈண்டு விளங்கி நின்றது.

தருமமே வலியது; தருமமே வெற்றி என்றபடி யாண்டும் அது மேலான மகிமையை விளைத்து வருதலால் அதனை ஈண்டு எடுத்துக் காட்டி எதிரிக்கு இடித்து அறிவு ஊட்டினன்.

''அறம் வெல்லும்; பாவம் தோற்கும்'' (இராம, வேல்,44)

எனப்பின்னே குறித்துள்ளதும் இங்கே கூர்ந்து சிந்திக்கவுரியது.

நல்லவர்க்குத் தருமதேவதை துணைநிற்றலால் அவர் வெற்றி பெறுகின்றனர்; அல்லவர்க்கு அஃது இல்லாமையால் அல்லலும் தோல்வியும் அடைந்து அவலம் உறுகின்றனர்.

நல்லவை புரியு மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா;
அல்லவை புரியு மாந்தர்க்கு அத்திரம்ஒன்றும் வாயா;

வெல்வதோ குணத்தின் மிக்கார் வெற்றிலைவிடினும் வேலாம்
இல்லையே வென்றி தீமை யிடங் கொண்ட மனத்தினர்க்கே;;
(சீவக சிந்தாமணி,815)

நல்லவரது கைவாள் எங்கும் தப்பாமல் வெல்லும்; அல்லவருடையது அவ்வாறு வெல்லாது; தரும நெறியுடையவர் வெற்றிலையை விடினும் அது வேல் ஆய்ப் பாய்ந்து வெற்றியை விளைக்கும்; உள்ளத்தில் தீமை யுடையவர் கூரிய அம்பை ஏவினும் மாறி விழுந்து தோல்வியே காணும் என இது குறித்துள்ளது. குறிப்பின் நிலையைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து கொள்ளுக.

தருமவான் வெற்றிலையை விடினும் அது வேலாய் விரைந்து பாய்ந்துவெற்றியைவிளைக்கும் என்றது வியந்துசிந்திக்கத்தக்கது.

அறத்தினால் வெற்றியும் திருவும் விளையும்; எல்லா மேன்மைகளும் உளவாம் என இராவணனுக்கு இராமன் இங்கே போதித்தது அவன் தீமைநீங்கி நன்மைகாண வேண்டியேயாம்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள்,31)

தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி
இனத்துள் இறைமையும் செய்து---மனக்கினிய
போகம் தருதலால் பொன்னே! அறத்துணையோடு
ஏகமாம் நண்பொன்றும் இல். (அறநெறிச்சாரம்)

திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்
வருந்தினும் அறத்திறம் மறத்தல் ஓம்புமின்
கரும்பெனத் திரண்டதோட் கால வேற்கணீர் (சிந்தாமணி)

இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;
மிக்க அறமே விழுத்துணை யாவது. [மணிமேகலை]

பாம்பழல் வாயினால் பற்ற மண்டுகம்
தேம்பிடும் துயருறும் சீவன் தேயுநாள்
ஓம்பிட வல்லரே உற்ற மற்றையார்
போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.
[சிவதருமோத்தரம்]

தருமமே உலகம் போற்றச் சகல காரணமதாகும்;
தருமமே அழியாது என்றும் தாபர மாகிநிற்கும்;
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கியம் அனைத்தும்நல்கும்;
தருமமே முத்தி சேரும் சாதனம் என்றுட்கொள்வான்.
[காசிரகசியம்]

தருமமே இணையில் பொருள் தரையிடைத் தகைசால்
ஒருமை இன்பினை உதவிவிண் ணுலகினும் உடன்போய்
அருமை இன்பமுய்த்து அந்தகற் செறுமெனில்அறமே
இருமையும் துணை ஆகுவ தன்றிமற் றில்லை.
(திருக்கூவப்புராணம்)

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவம்எனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால். (கந்தபுராணம்)

பலநாளும் ஆற்றார் எனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றால் செய்க---முலைநெருங்கி
நைவது போலும் நுசுப்பினாய் நல்லறம்
செய்வது செய்யாது கேள். (பழமொழி)

இவணும் உம்பரும் துணையே அதனால்
துறைதொறும் துறைதொறும் நோக்கி
அறமே நிறுத்துமின் அறிந்திசினோரே. [ஆசிரியமாலை]

அறத்தின் பெருமையைக் குறித்துவந்துள்ள இவை ஈண்டு ஆய்ந்து சிந்திக்கத் தக்கன. உயிர்க்கு உறுதித் துணையாய் நின்று சிறப்பும் சீரும் அருளி எல்லா இன்ப நலங்களையும் ஊட்டி இருமையும் பெருமை தருவது தருமமே என்றதனால் அதன் அருமையும் அமைதியும் அறியலாகும்.

"தர்மோ ஜயதி நாதர்ம: ஸத்யம் ஜயதி நாந்ரிதம்."

"தருமமும் சத்தியமும் வென்று உயர்கின்றன; அதர்மமும் அசத்தியமும் குன்றி ஒழிகின்றன" என்னும் இது இங்கே நன்கு சிந்திக்கத் தக்கது. இத்தகைய உத்தம அறத்தை இழந்து காமப் பித்தனாய்த் தீமை புரிந்து நின்றமையால் நீ இந்த இழி நிலையை அடைந்தாய்! என இராவணன் தெளிவுறும்படி இராமனுடைய வாய்மொழி தரும ஒளிகளை வீசி இங்கே வெளிவந்துள்ளது. வென்றவன் தருமவான் என்பது விளங்கி நின்றது.

நேர்ந்துள்ள பழி துன்பங்களுக்கு உரிய மூல காரணத்தை அவன் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுமாறு உரைத்தருளி மேலும் நிலைமைகளை விளக்கித் தனது தலைமையைத் துலக்கினன்.

பாவி! இறத்தி யான் அது நினைக்கிலன்.

இந்த வார்த்தை கொஞ்சம் வேகமாய் வந்துள்ளது. பெருந் தன்மையுடைய இராமன் வாயிலிருந்து யாண்டும் கடுஞ் சொல் வருவதில்லை. எவ்வழியும் இனிய மொழிகளையே இதமாய்ப் பேசி வந்த புனித வாயில் நின்று ஒரு துனி மொழி தோன்றியது அதிசய வியப்பாயது. எவ்வளவு பொறுமையோடு அடங்கி யிருந்தாலும் தன்னைமீறி உள்ளக் கொதிப்பு உரைவழியே துள்ளி வந்துள்ளது. சீறியிருந்த சீற்றம் மாற்றமாய் மாறி எழுந்தது.

தனது அருமை மனைவியைக் கவர்ந்து கொண்டு போய்த் தனக்கு அல்லல்கள் பல விளைத்துள்ளவன் ஆதலால் பொல்லாத பாதகன் என்று அவனை இவன் சொல்ல நேர்ந்தான். அவன் செய்திருக்கிற அழி துயரங்கள் இவனுடைய உள்ளத்தைக் கொதிக்கச் செய்துள்ளமையால் உரை கொதிப்பாய் வந்தது.

பிறருடைய மனைவியரை விரும்புவது கொடியபாவம் என் பதை இங்கே பாவி என்ற குறிப்பால் கூர்ந்து ஓர்ந்து கொள்கி றோம். தீயவனை வெறுத்துத் தூயவன் உரைத்திருக்கிறான்.

"பாவி! நீ செத்துப் பிணமாய் விழுந்திருப்பாய்! அவ்வாறு செய்ய நான் எண்ணவில்லை; அதனால் இவ்வண்ணம் உயிரோடு நிற்கநேர்ந்தாய்! நிலைமைகளை நினைந்து மரியாதையோடு பிழைக்க வழி தேடிக்கொள்" என்று அளியோடு அறிவு கூறியருளினான்.

தனிமை கண்டு இரங்கி என்றதனால் இராவணனுடைய நிலைமையை நோக்கி உள்ளம் இரங்கி இவ் வீர வள்ளல் அருள் புரிந்து ஆதரவு செய்துள்ளமையை உணர்ந்து மகிழ்கிறோம்.

கண்ணோடி இரங்கும் கருணைப் பண்பை நாம் கருதி யுணருந்தோறும் நம் உள்ளம் உருகி உயர்கிறது. நீர்மை பெருகி வரும் அளவு மனிதனுடைய நிலைமை தலைமையாய் வருகிறது.

கொடிய பகைவனிடமும் நெடிய கருணை காட்டி இவ் வீரன் தீரவுரையாடியது சீர்மை சுரந்து நீர்மை கனிந்து நேர்மை நிறைந்து ஆண்மை சிறந்து மேன்மை மிகுந்து நின்றது.

பதி புகப் பறத்தி!

என்றது இலங்கைக்கு ஓடிப்போ என்று ஓட்டியபடியாய்த் தன் வெற்றியைக் காட்டி வந்தது. ஊருக்குப் போய் உடலைத்தேற்றி உன் குலத்தவர் எல்லாரையும் யாண்டும்சேர்த்து நீண்ட காலமாய்க் கிடைத்துள்ள வரபலங்களையெல்லாம் ஒருங்கே தொகுத்துக் கொண்டு நல்ல நாழிகை பார்த்து வெல்லும் வகையில் அமர் புரிய வா! அவ்வாறு வர மனமில்லையானல் எங்கேயாவதுபோய் ஒளித்துக்கொள்! என இவ்வாறு உரைத்து விட்டு மேலும் சில உறுதி நிலைகளைக் குறித்தான்.

"போரை நிறுத்திச் சமாதானஞ் செய்துகொள்ள விரும்பின் அதற்குரிய உடன்படிக்கைகளின்படி இணங்கி நீ நடந்து கொள்ளவேண்டும்" என இக் கோமகன் அவனுக்குஅறிவுறுத்தி யருளினன். அவ்வுரைகள் ஆண்மை வீரங்களை மருவி மேன்மை நீர்மைகள் சுரந்து வீர கம்பீரங்களாய் விரிந்து வந்தன.

சமாதான வகை.

1. சிறையில் வைத்துள்ள தேவியை மரியாதையுடன் விடுவது.
2. தரும நீதிகளைத் தழுவி நெறியே ஒழுகுவது.
3. விபீடணனை இலங்கைக்கு அரசனக்கி அருளுவது.
4. அவனுடையஏவலைச்செய்து எவ்வழியும்அடங்கியிருப்பது.

நான்கு வகையான இந்த ஒப்பந்தங்களின்படி முழுதும் இசைந்து எவ்வழியும் வழுவாது நடந்து வருவதாக நீ உறுதி மொழி தந்தால் போரை இப்பொழுதே நான் நிறுத்திக் கொள்ளுகிறேன் என்று இவ் வீரமகன் எதிரியிடம் தீரமாய் அறிவுறுத்தி யிருக்கிருன். உடன்பாடுகள் உறுதிப்பாடுகளா யெழுந்தன.

சுத்த வீரத்தின் கருமமும் யுத்த தருமமும் இங்கே ஒளிவீசி நிற்கின்றன. உறுதி மொழிகளில் உணர்வுக் காட்சிகள் பெருகி மிளிர்கின்றன. வீரவில்லி வெற்றி வசனங்கள் கூறியுள்ளான்.

ஒப்பந்தம் ஒன்றைவிட ஒன்று முறையே உயர்ந்து வலியடைந்து வந்திருக்கின்றது. மெலிவடைந்த பகைவன் மீண்டும் தலை தூக்காதபடி நிலை யூக்கி எழுந்துள்ளமையால் உடன்பாடு நெடும்பாடாய் நிமிர்ந்து நின்றது. வரிசைக் கிரமங்கள் மானச

மருமங்களை மருவி உறவுரிமைகளாய்ப் பெருகிவந்திருக்கின்றன.

முதலில் குறித்த இரண்டு கட்டளைகளுக்கும் ஒருவேளை அவன் இசைய நேர்ந்தாலும் பின்குறித்த இரண்டுக்கும் யாதும் இசைய மாட்டான் ஆதலால் பின்னது முன்னதற்கு நீண்ட அரணாய் மூண்டு நிலையை வலியுறுத்தி நின்றது.

சிறையில் வைத்தவளை விடு என்றதும் இலங்கைவேந்தன் உள்ளம் சிறிது இசைந்தது; உலகைத் தேவர் முறையில் வை என்றதும் திகைத்தது; உன் தம்பியை இறையில் இருத்து என்றதும் வெறுத்தது; அவனுக்கு ஏவல்செய்து இரு என்றதும் குலை துடித்துக் கொதித்தது. அவன் யாதும் கூருமல் நேரே நின்ருன்.

தான்கூறியபடியே யாதும் பிணங்காமல் இணங்கி யாண்டும் வணங்கி நடந்தால் நீ உயிர் வாழ்ந்து வரலாம்; இல்லையேல் உனக்கு இங்கே பிழைப்பு இல்லை என்று இறுதியில் இவன் உள்ளக் கருத்தை உறுதியாக உணர்த்தினுன்.

நின் தலை தடிந்து தறையில் வைக்கிலன்.

கொலைநோக்கோடு வந்துள்ள இந்தக் குறிப்பு மொழியால் நிலைமையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிருேம். நான் சொன்னபடியே நடந்து கொண்டால் நீ உன் உயிரோடு இருக்கலாம்; இல்லையானுல் செத்துவீழ்வது உறுதி என அறுதியிட்டு இப்படி உரைத்திருக்கிருன். உரையுள் உள்ளத் துணிவு ஒளி புரிகின்றது.

இராவணனுடைய தலை இருக்கும் நிலையும் கொலையின் குறிப்பும் இங்கே ஒருங்கே உணர வந்தன. என் கட்டளைப்படி தட்டாமல் நடந்தால் உன் தலை உடலில் இருக்கும்; இல்லையேல் தரையில் உருளும் என்று இக் குலமகன் அரக்கர் தலைவனிடம் கூறியிருத்தலால் நிலைமையை இங்கே தெரிந்து கொள்கிருேம்.

தன் கண்முன்னே அவனுடைய தலைகளை உருட்டிக்காட்டியிருப்பதுபோல் உரைகள் உருத்து வந்திருக்கின்றன. வீர கம்பீரங்கள் மொழிகள் தோறும் ஒளிகளை வீசி உலாவு கின்றன.

சமாதானத்துக்கு இசையாமல் மீண்டும் போரைச்செய்து பார்க்கலாம் என்ருல் அதுவும் நல்லதே; விரைந்து ஊருக்குச் சென்று உன் சாதியார் எல்லாரையும் திரட்டிக்கொண்டு வேண்டிய ஆயத்தங்களோடு வா; நேரே போராடி மாண்டாலும் நீ

வீர சுவர்க்கத்தை அடையலாம்; இனிமேல் நீ உயிரோடு வாழ முடியாது; என்னை வென்று வாழலாம் என்று ஏதேனும் சிறிது நசையிருக்குமானல் அது முழு மூடமாம். மடமையான ஆசையில் இழிந்து ஏமாருதே; கடமையைச் செய்து செத்துத் தொலை என அவன் உய்த்துணரும்படி இவ் வித்தகன் விளம்பி நின்றான்.

பிழைப்பு இனி உண்டு என நயவேல்.

சாதல் பிழைத்தல் என்னும் இருவகை நிலைகளுள் சாவே உனக்கு உரிமையாய் அமைந்துள்ளது; அதனை உறுதி செய்து கொள் என இறுதியை அறுதியிட்டு இங்ஙனம் தெளிவுறுத்தினன்.

நயத்தல் = நசையாய் விரும்பல். இது நப்பாசை எனப்படும். இந்த வீணசையை விட்டு ஒழி. உனக்கு உயிர்வாழ ஆசையிருந்தால் நான் சொல்லியபடி நடந்துகொள்! மாண்டு போகவிரும்பினல் வேண்டிய துணைகளோடு நேரேபோருக்குவா!

உனக்கு உள வலி எலாம் கொண்டு நில் ஐயா!

மறுபடியும் போருக்கு வரவேண்டிய முறைகளையும் துறைகளையும் இப்படிக் குறித்து உணர்த்தியருளினன். சேனைபலம் ஆயுதபலம் மந்திரபலம் தந்திரபலம் மாயாபலம் முதலாக உள்ள பலங்களையெல்லாம் ஒருங்கே திரட்டிக் கொண்டுவா என்பான் வலி எலாம் என்றான். வன்மை நிலைகள் தன்மை தெரிய வந்தன.

ஐயா! என்னும் விளி மரியாதை தோன்ற வந்துளது ஆயினும் இகழ்ச்சியும் கடுப்பும் அதில் நன்கு ஊன்றியுள்ளன.

ஆளையா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை!

முதல்நாள் போரில் தன் படைகளை யெல்லாம் இழந்து இராவணன் பட்டுள்ள பாட்டை இராமன் இப்படிக் குறித்துக் காட்டியுள்ளான். இராமபாணத்தால் அவனுடைய சேனைகள் சின்னபின்னமாய் நாசமடைந்திருக்கின்றன. அந் நிலைமையை உவமையால் துலக்கினன். உயர்ந்த கலைஞன் ஆதலால் உக்கிர வீரமான போர் முகத்திலும் ஒப்புரைகள் செப்பமாய் வந்தன.

மாருதம் = காற்று. பெரிய சூறைக்காற்றை இது குறித்து நின்றது. சூருவளியை வீர வாளி சுட்டிக் காட்டியுள்ளது.

பெருங்காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சுத் துய்கள்போல வும், மெல்லிய சருகுகள் போலவும், புல்லிய பூடுகள்போலவும் தானைகள் நிலை குலைந்து பாழாகி யிருக்கின்றன. அந்த அழிவு நிலை தெளிவாய் விழி தெரிய வந்தது.

பூளை = இலவம்பஞ்சு, ஒருவகை மெல்லிய பூடு.

"பூளை மெல்லணைபேல் புரளும் கொலோ" (சிந்தாமணி,1628)

"பூளை மெல்லணைப் பொதியவிழ்ந்தன்ன" (பெருங்கதை,1-40)

"புடையிடு பூளைப் பூப்புற மடுத்து" (பெருங்கதை, 1-56)

"பூளை நீடிய வெருவரு பறந்தலை" (புறம், 23)

"பூளை பொலமலர் ஆவிரை" (கலி, 138)

"பூவல்ல பூளை உழிஞையோடுயாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி" (கலி, 140)

"பூளை ஓர்புதல்" (பிங்கல்ந்தை)

"வேளையே பொடியதாக விழிக்கும் நீள்நுதலில் வெண்பூம்
பூளையே சூடுவான்" (இராமா, திருமுடிசூட்டு, 28)

இவற்றுள் பூளை உணர்த்தியிருக்கும் பொருளை அறிகிறோம்.

மன்மதனை எரித்த கண்ணுதல் கடவுள் வெண்மையான பூளைப் பூவைச் சூடுவான் எனக் காவியத்துள் வந்துள்ளமை யால் அதன் நிறம் நிலைமைகளை உணர்ந்து கொள்கிறோம்.

"காளி போன்றனன் இராவணன் வெள்ளிடைக் கரந்த
பூளை போன்றதப் பொருசினத்து அரிகள்தம் புணரி."
(இராமா, வேல் ஏற்றபடலம் 17)

வெளியே காற்றின் எதிர்ப்பட்ட பூளைபோல இராவணன் எதிரே வானரசேனைகள் அழிந்தன என இதில் குறித்திருக்கிறார். முன்னே சொன்ன உவமையைப் பின்னரும் இன்னவாறு நடுவு நிலைமையுடன் குறித்திருப்பது கவியின் பெருந் தகைமையை விளக்கிக் காவிய வீரர்களை நேரே நன்கு துலக்கி நிற்கிறது.

"பிரசண்ட மாருதத்தால் மோதப்பட்ட பூளைகள்போல உன் சேனைகள் எல்லாம் என் பகழிகள் எதிரே பாழாயழிந்தன; அதனை நீ நேரே பார்த்தாய்! உன்னால் யாதும் பாதுகாக்க முடிய

வில்லை; நீயும் யாவும் இழந்து என் முன்னால் இழிந்து நிற்கிறாய்! அன்னோ உன் நிலை என்னே! இனி ஆகவேண்டியதை ஆய்ந்து செய்!'' என்று இவ்வள்ளல் உள்ளம் இரங்கி உரைத்துள்ளான்.

காற்றிடைப் பூளை கரந்தெனஅரந்தை
 யுறக்கடலரக்கர்தம் சேனை
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த
 கோலவில் இராமன்தன் கோயில்
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள்
 ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டிச்
சேற்றிடைக் கயல்கள் உகள்திகழ் வயல்சூழ்
 திருவெள்ளி யங்குடி யதுவே.

(பெரிய திருமொழி, 4-10)

திருமங்கையாழ்வார் இராமனை இவ்வாறு துதி செய்திருக்கிறார். முதல் நாள் போரில் இராவணனுடைய சேனைகள் அழிந்துள்ள நிலையை இதில் குறித்துள்ளார். "அரக்கர் சேனை காற்றிடைப் பூளை கரந்தெனக் கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில் இராமன்'' என்றது கூர்ந்து சிந்திக்கத்தக்கது. மாருதம் அறைந்த பூளை ஆயின என்னும் நம் காவியக் கவி இந்த ஆழ்வார் பாசுரத்தைக் கருதி எழுந்ததுபோல் இங்கே தெரிய வந்துள்ளது. கால நிலைகள் கருதி உணர வுரியன.

ஆள் ஐயா! என்றது உலகை ஆளும் ஐயனே! என அவன் தலைமை தோன்ற வந்தது. தனது நிலைமையை நினைந்து அவன் நாணுமாறு இகழ்ச்சிக் குறிப்பில் இவ் விளி விளைந்திருக்கிறது.

எல்லா உலகங்களையும் கட்டி ஆளுவதாகக் கருவம் கொண்டுள்ள நீ உன்னோடு ஒட்டி வந்த உனது இனத்தவரைக் காக்காமல் பாழாக்கி விட்டாயே! உனது ஆட்சித் திறமும் மாட்சியும் நன்று! நன்று! என அவனுடைய தாழ்ச்சியைக் காட்சிப்படுத்தி வென்றி வீரன் பேசியபடியாய் இது ஒன்றி வந்துள்ளது. தோன்றிய உண்மை நிலைகளை ஊன்றி உணர்ந்து கொள்கிறோம். உற்ற விளி மொழியில் வெற்றி ஒளி வெளி வீசி நிற்றலை விழி எதிரே கண்டு வியந்து நிற்கிறோம்.

இன்று போய்ப் போர்க்கு நாளை வா.

தோல்வியடைந்து நின்றவனை நோக்கி இவ் வெற்றிவீரன் இவ்வாறு விடை கொடுத்திருக்கிறான். இந்த அருந்திறலாளனுடைய பெருந்தகைமை இங்கே திருந்திய பண்போடு சிறந்து சீரிய நாகரிகமாய்ச் செவ்வி சுரந்து திகழ்கிறது.

கொன்று வீழ்த்த வேண்டிய கொடிய பகைவனை ஆதரவு செய்து அகலவிடுத்துள்ளது நெடிய வியப்பாய்த் தோன்றுகிறது.

சுத்த வீரத்தின் உத்தம நீர்மையை உய்த்துணரும்படி இவ்வுத்தமன் ஈண்டு வித்தக விநோதமாய் விளக்கி யிருக்கிறான்

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (குறள், 773)

"போரில் எதிர்ந்த பகைவனை வெகுண்டுபொருது விரைந்து தொலைப்பதே பேராண்மையாம்; அந்த எதிரிக்கு ஏதேனும் இடையூறு நேர்ந்தால் உடனே போரை நிறுத்தி அவனை ஆற்றித் தேற்றி ஆதரவு செய்து விடுவதே அந்த ஆண்மைக்கு ஓர் மேன்மையான வெற்றியாம்" என்னும் இந்தப் பொய்யா மொழிக்கு நேரே மெய்யான சாட்சியாய் இராமன் இங்கே காட்சி புரிந்து நிற்கிறான். அந்த மாட்சியை நாம் கண்டு மகிழ்ந்து நிற்கிறோம்.

ஊராண்மை = உபகாரியாய் நிற்கும் நீர்மை.

ஆண்மை, பேராண்மை, போராண்மை, ஊராண்மை என்னும் இவை உயர்ந்த மனிதத் தன்மைகளாய்ச் சிறந்து முறையே உயர்ந்து நிற்கின்றன. போரில் இரக்கமின்றி எதிரியைக் கொல்வது வீரமே ஆயினும் அவன் தோல்வியுற்று இழிந்து நின்றால் உடனே இரங்கியருளுவதே பெரிய வீர வெற்றியாம்.

பேராண்மை ஊராண்மைகளை விளக்கி வந்துள்ள இந்த அருமைத் திருக்குறளுக்கு இராமனையே உரிமையாகப் பரிமேலழகர் உதாரணம் காட்டியுள்ளார்: "இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியர் இறை மேற்செல்லாது இன்று போய் நாளை நின் தானையோடு வா என விட்டாற்போல்வது" என ஊராண்மைக்கு நேராக இங்ஙனம் உவமை கூறியிருக்கிறார். குறிப்புகள் அரிய சிறப்புகளை விளக்கி யுள்ளன.

இன்று போய் நாளை வா என்ற நம் கவிஞர்பிரான் வாக்கையே அழகர் அழகாக எடுத்துக் கூறியிருப்பது நுனித்து நோக்கத்தக்கது. சீராமனது ஊராண்மை சீர்மை சுரந்துள்ளது.

மெலிந்த பகையை வலிந்து கொல்லலாகாது என்பது யுத்த தருமமாயுருவாகி வந்திருத்தலால் இந்த நாட்டு மக்களுடைய நாகரிகமும் வீரப்பாடும் ஈர நீர்மையும் ஈங்கு நேரே அறியநேர்ந்தன. இந்த ஊராண்மை போர்த்துறையுள் தழிஞ்சி எனப்படும்.

"அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறுகண்மைத் தழிஞ்சி." (இலக்கண விளக்கம்)

தோல்வியடைந்து மெலிந்தவர்மேல் வேலை வீசாத ஆண்மையே தழிஞ்சி என இது குறித்துள்ளமை அறிக. இரக்கம் மீதூர்ந்து எதிரியைத் தழுவி யருள்வது என்னும் ஏதுவால் தழிஞ்சி என வந்தது.

கான்படு தீயின் கலவார்தன் மேல்வரினும்
தான்படை தீண்டாத் தறுகண்ணன்—வான்படர்தல்
கண்ணியபின் அன்றிக் கறுத்தார் மறம்தொலைதல்
எண்ணியபின் ஒக்குமோ எஃகு. (புறப்பொருள் வெண்பா)

மூண்டு பொருத பகைவர் மெலிந்து முதுகிட நேர்ந்தால் நல்ல வீரர் அவர்மேல் அம்பு தொடார் என்னும் இது ஈண்டு அறியவுரியது. மான வீரம் மகிமை மிக வாய்ந்தது.

வீறின்மையின் விலங்காமெனை மதவேழமும் எறியான்;
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில்என்று எறியான்;
மாறன்மையின் மறம்வாடுமென்று இளையாரையும் எறியான்;
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயிலுழவன்.
(சீவகசிந்தாமணி 2261)

சுத்த வீரன் தக்க வீரர்களோடன்றித் தகாதவர் நேரே வந்தாலும் போராட விரும்பான் என இது விளக்கியுள்ளது.

ஒரு யானை மதங்கொண்டு மூண்டு வந்தது; ஆண்டகைமையுடைய ஓர் வீரன் நேரே கண்டான்; தன் கையிலிருந்த கூரிய வேலை அதன்மேல் வெகுண்டு வீசாமல் எள்ளலா இகழ்ந்து நின்றான்; அவனது நிலையை அரசன் அறிந்தான்; அவனை அன்

பால் அழைத்துத் தன்பால் வைத்து மதகரியை எறியாமல் நின்ற தற்குக் காரணம் என்னை? என்று கருதிக் கேட்டான். அதற்கு அவ் வீரன் பதில் சொன்னது அயலே வருகிறது.

"தானல் விலங்கால் தனித்தால் பிறன்வ்ரைத்தால்
யானை எறிதல் இளிவரவால்—யானை
ஒருகை உடையது எறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்."

"காட்டில் இருந்தால் மிருகம்; நாட்டில் வந்தால் ஒருபாகன் வசப்பட்டுப் பாடழிந்துள்ளது; மான உணர்ச்சி யில்லாத இத் தகைய யானையை எறிவது இளிவாம்; அதுவுமன்றி ஒரு கையே உடைய அதனை இரண்டு கைகளையுடைய நான் எறியின் அது என் ஆண்மைக்கு இழுக்காம்" என்று நாணி நின்றேன் என அவன் கூறியிருப்பது அவனது மேலான வீரநீர்மையை விளக்கி யுள்ளது. அரசன் வியந்து மகிழ்ந்து அவனை மிகவும் புகழ்ந்து கொண்டான். நல்ல வீரரை இந்நாடு நன்கு பெற்றுள்ளது.

சோழ மன்னன் மார்பில் அன்றி முதுகில் யாதும் கவசம் அணிவது இல்லை என்று ஒட்டக் கூத்தர் ஒருநாள் உல்லாச விநோதமாச் சொன்னார். அவ்வுரையைக் கேட்ட புகழேந்திப் புலவர் சரிதான் என்று தலையை அசைத்தார். அயலே குழுமி யிருந்தவர் எல்லாரும் என்ன காரணம்? என்று எதிர் வினவினர். போரில் புறங் கொடுத்தவர்மீது எங்கள் பாண்டிய மன்னன் வேலை எறியான் என்று தெரிந்தே சோழ மன்னன் அவ் வேலை யைச் செய்யாதிருந்தான் என விரைந்து பதில் மொழிந்தார். பாவலர் இருவரும் பாவால் பேசினர் ஆதலால் அப் பாடல் அயலே வருகிறது.

"வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று."

தோல்வி அடைந்தவர்மேல் போர் தொடுக்கலாகாது; அவ் வாறு தொடாமல் எதிரியை ஆதரித்துவிடுவதே உயர்ந்தவீரமாம் என்பதைப் பழங்கால சரிதங்களால் உணர்ந்து கொள்கிறோம்.

போர் வெறி மண்டிப் பொருது வந்த இராவணன் இறுதியில் தோல்வி அடைந்து தளர்ந்து மெலிந்து நின்றதைக் கண்டதும் இராமன் இரங்கி இதம் செய்து விடுத்தான். அந்தப் பெருந்தகைமையை உலகம் முழுவதும் அன்று உவந்து புகழ்ந்து வியந்து கொண்டாடியது.

ஆழி ஆயிரம் பூண்டதேர் அரக்கன்வந்து அடர்ந்தான்
காளை மாருதி தோளின்மேல் இராமனும் கடந்தான்
மூளு வார்சிலை பத்துடன் முடிபத்தும் ஒழித்து
நாளைவா பொர என்றனன் நகர்சென்று புக்கான்.
(உத்தர, அசுவமேத, 225)

தஞ்சம் அற்ற தயமுகன் தன்னைநீ
செஞ்சரத் தொடும் தீர்ந்தன யாவையும்
துஞ்ச மற்றினித் துன்னுதி நாளைஎன்று
அஞ்சனப் புயல் அன்னவன் கூறினுன். (பாகவதம், 9.9)

கிட்டுநெறி யோகியரும் கிள்ளைகளும் தங்கூடு
விட்டுமறு கூடடையும் வேங்கடமே—எட்டுமத
மாவென்று வந்தான் வரநாளை வாஇன்று
போவென்று வந்தான் பொருப்பு.
(திருவேங்கடமாலை, 74)

இன்று போய் நாளை வா என்று இவ் வென்றிவீரன் விளம்பி விடுத்த நீர்மையை இன்னவாறு நூல்கள் புகழ்ந்து போற்றியுள்ளன. அரிய சீர்மை அகிலமும் பரவி நின்றது.

பாரத யுத்தத்தில் பதினும் நாள் போரில் கன்னன் தலைமைச் சேனுதிபதியாய் நின்று தறுகண்மையோடு பொருது வந்தான். அருச்சுனன் எதிர்த்தான். அடலமர் மூண்டது; இருவரும் ஒருவரை ஒருவர் வென்று தொலைக்க வெகுண்டு போராடி வருங்கால் இடையே கன்னன் சிறிது தளர்ந்து நின்றான். விசயன் வீராண்மையுடையனாய் அவனைநோக்கி நீ இன்று போய் நாளை வரலாம் என்று இனிது மொழிந்தான்.

அன்று போர்புரி சேனை யின்பதி யான வீரனைநீ
இன்று போயினி நாளை வாஎன இனிதியம் பினனால்

*வென்றி கூர்வரி வின்மையா லடல் வெவ்வரத் கரைமுன்*
*கொன்ற காளையை ஒத்தபேரிசை கொண்ட ஆண்மையினன்*
(பதின்மூன்றாம் போர் 38)

வில் வீரத்தில் இராமனைப் போல் பெரும்புகழ் கொண்டிருந்த விசயன் கன்னனை நோக்கிச் சொன்னபடியை இது காட்டியுள்ளது. நம் காவியக் கவியை உள்ளத்தில் நினைந்து கொண்டு வில்லியாழ்வார் இந்தப் பாடலைப் பாடியிருக்கிறார்.

தன்பகைவன்பால் கண்ணோடி அருளிய இப் புண்ணிய வீரனது கண்ணிய நீர்மையை உலகம் பல வழிகளிலும் எண்ணி மகிழ்ந்து வருகிறது. அவ்வரவினை உரைகள்தோறும் உணர்ந்து வருகிறோம். உணர்ச்சி நிலை உயர்ச்சியை அருளுகிறது.

புறங்காட்டினார்பால் மறங்காட்டாமல் அறங்காட்டவேண்டும் என்று திறங்காட்டி மொழிந்தது திவ்விய சோதியாய் நிறங்காட்டியுள்ளது. சுத்த வீரமும் உத்தம வெற்றியும் இவ் வித்தகனிடம் நித்திய வாசமாய் நிலவி நிற்கின்றன.

இன்றுபோய் நாளைவா என்னுமல் போர்க்கு என்றது புலன் காண வந்தது. போருக்கு ஆயின் நாளை வா; சமாதானத்துக்கு ஆனால் இன்றே வா; இப்பொழுதே வா! என்னும் குறிப்பு இதில் குடிபுகுந்துள்ளது. நாளை என்று தாமதியாமல் இவ் வேளையிலேயே புகல் புகுந்தால் இகல் ஒழிந்து இனிது வாழலாம் என்பது தொகை மொழியாய்த் தொடர்ந்து நின்றது.

மாள வேண்டிய கொடிய பகைவனை நோக்கி ஆளையா! நாளை வா! என்று இந்த அழகன் வாய் மலர்ந்துள்ள விழுமிய நீர்மையைக் கருதியுணரின் எவர் உள்ளம்தான் உருகி மகிழாது? இது எவ்வளவு பண்பு! எவ்வளவு நண்பு! எவ்வளவு மேன்மை! எவ்வளவு ஆண்மை! எவ்வளவு சீர்மை! எவ்வளவு நீர்மை! எவ்வளவு நேர்மை! எத்துணை அமைதி! உய்த்துணர வேண்டும்.

சொல்லினன் என்று சொல்லாமல் நல்கினன் எனக் கவி சுவையாக் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கத் தக்கது.

நல்குதல் = கொடுத்தல், ஈதல், அருளுதல்.

தன் அம்புக்கு இரையாய் நின்ற இராவணனை அருள் புரிந்து நோக்கி உயிரைக் கொடுத்து ஊருக்கு அனுப்பி யிருக்கி

ருன். இராமன் தந்துள்ள அந்த உயிர்ப் பிச்சையை நல்கினன் என்னும் இந்தச் சொல்லால் நன்கு உணர்த்தியருளினர். உரையாடி வருஞ் சொல் உய்த்துணர் வுடையதாய் ஒளி மிகுந்து சுவை சுரந்து தெளிவமைந்து வருகிறது.

கோசல நாட்டுடை வள்ளல்

இலங்கை வேந்தனுக்கு உயிரை நல்கி ஊருக்கு அனுப்பினவனை இவ்வாறு உரிமையோடு காட்டியிருக்கிருர். காட்சியில் அரியபல மாட்சிகள் பெருகி யிருக்கின்றன.

தாயின் முலைபோல் சரயுநதி உலகுயிர்களை ஊட்டியருள அலகில் வளங்களோடு நிலவியுள்ள கோசல தேசத்தின் அதிபதியான பெரியவள்ளல் பகைவன்பால் உள்ளம் இரங்கி இவ்வாறு உதவி யருளினன். அந்த அதிசய வண்மை மதி தெளிய வந்தது.

அடுத்துவந்து கேட்பவர்க்குப் பொருளை எடுத்துக் கொடுப்பதினும் அடாத செயல் செய்தவனுக்கு உயிரை அருளியிருப்பது பெரிய வண்மை ஆதலால் வள்ளல் என உள்ளம் உவந்து சொல்லியருளினர். உயிர்க்கொடையின் உயர்வு தெரிய நின்றது.

நாகிளங்கமுகின் வாளை தாவுறு கோசலம் என்றது நிலவளமும் நீர்வளமும் ஒருங்கே தெரிய வந்தது. ஏரி, மடு, பொய்கை முதலிய நீர் நிலைகளிலுள்ள வாளை மீன்கள் அயலே கரைகளில் நிற்கிற கமுக மரங்களில் பாய்ந்து உல்லாசமாய்த் துள்ளி வரும் ஆதலால் செல்வ வளங்களான அந்த உவகைக் காட்சிகள் காண வந்தன. நாட்டின் வளத்தைச் சுட்டிக் காட்டியது நாடனுடைய நிலைமை தலைமைகளை உய்த்துணர்ந்து கொள்ள.

கோசல நாட்டின் சலசரங்களும் மேலே தாவிக் கமுகின் குலைகளை உதிர்க்க வல்லன என்றது அந்த நாட்டின் அதிபதி இலங்கை வேந்தன் தலைகளை எளிதே உதிர்த்து உருட்டுவன் என்பதை உணர்த்தி நின்றது. உள்ளுறை உவமம் உணரவுரியது.

இராவணன் திரும்பிச் சென்றது.

இராமன் கூறிய உறுதி மொழிகளைக் கேட்டு உள்ளம் நாணி உளைந்து நின்றவன் இறுதியில் விடை தந்தபின் பொருகளத்தைவிட்டு ஊரை நோக்கிச் சென்ருன். போருக்கு மூண்டு தேர்மேல் ஏறி இராச கம்பீரமாய் அரிய பெரிய ஆரவாரங்

களோடு வந்தவன் யாதொரு துணையுமின்றித் தனியே நடந்து சென்றான். யாண்டும் தோல்வி கண்டறியாமல் எவ்வழியும் வென்று வீரப்பிரதாபத்தோடு என்றும் விளங்கிவந்தவன் இன்று படுதோல்வி யடைந்து நெடு நாண் கொண்டு உள்ளம் உடைந்து உணர்வு கலங்கி உறுதி குலைந்து பெரிதும் மறுகி தன்பதியை நோக்கிப் போனது பரிதாபமாயிருந்தது.

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடுஇலங்கை புக்கான்.

கிடந்தபோர் வலியார் மாட்டே கெடாத வானவரை எல்லாம்
கடந்துபோய் உலகம் மூன்றும் காக்கின்ற காவ லாளன்
தொடர்ந்துபோம் பழியி னோடும் தூக்கிய கரங்க ளோடும்
நடந்துபோய் நகரம் புக்கான் அருக்கனும் நாகம் புக்கான்.

மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தான்அப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான். (3)

நாள்ஒத்த நளின மன்ன முகத்தியர் நயனம் எல்லாம்
வாள்ஒத்த; மைந்தர் வார்த்தை இராகவன் வாளி ஒத்த;
கோள்ஒத்த சிறைவைத்தாண்ட கொற்றவற்குஅற்றைநாள் தன்
தோள்ஒத்த துணைமென்கொங்கைநோக்கங்குத்தொடர்கிலாமை

மந்திரச் சுற்றத் தாரும் வாணுதல் சுற்றத் தாரும்
தந்திரச் சுற்றத் தாரும் தன்கிளைச் சுற்றத் தாரும்
எந்திரப் பொறியின் நிற்ப யாவரும் இன்றித் தானோர்
சிந்துரக் களிறு கூடம் புக்கெனக் கோயில் சேர்ந்தான். (5)

ஆண்டொரு செம்பொற் பீடத் தமர்ந்துதன் வருத்தம் ஆறி
நீண்டுயர் நினைப்ப னாகிக் கஞ்சுகி அயல்நின் றானை
ஈண்டுநம் தூதர் தம்மை இவ்வழித் தருதி என்றான்
பூண்டதோர் பணியின் வல்லை நால்வரைக் கொண்டு புக்கான்.

மனகதி வாயு வேகன் மருத்தன்மா மேகன் என்றிவ்
வினையறி தொழிலர் முன்னா வாயிலர் விரவி னாரை
நினைவதன் முன்னம் நீர்போய் நெடுந்திசை எட்டும் நீந்தி
கனைகழல் அரக்கர் தானை கொணருதிர் கடிதின் என்றான். (7)

ஏழ்பெருங் கடலும் சூழ்ந்த ஏழ்பெருந் தீவும் எண்ணில்
பாழியம் பொருப்பும் கீழ்பால் அடுத்த பாதாளத் துள்ளும்
ஆழியங் கிரியின் மேலும் அரக்க ரானவரை எல்லாம்
தாழ்விலிர் கொணர்திர் என்முன் அவரது தலைமேல்கொண்டார்.

பண்ணிறை பவளச் செவ்வாய்ப் பைந்தொடிச் சீதை என்னும்
பெண்ணிறை கொண்ட நெஞ்சில் நாணிறை கொண்ட பின்னர்
கண்ணிறை கோடல் செய்யான் கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானம் தன்னை உமிழ்ந்தெரி உயிர்ப்ப தானான். (9)

வானகு மண்ணும் எல்லாம் நகுநெடு வயிரத் தோளான்
நானகு பகைவர் எல்லாம் நகுவர் என்றதற்கு நாணான்
வேனகு கருங்கட் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்பு கின்றான். (10)

தோல்வியடைந்து துளங்கி நின்ற இராவணன் பொரு களம் நீங்கி மீண்டு வந்து இலங்கை புகுந்து அரண்மனையை அடைந்து அமளியில் அமர்ந்தான். நேர்ந்த பழியை நினைந்து நெஞ்சம் குழைந்து நிலைகுலைந்திருந்தான். நெடிய கொடிய கவலைகள் நிறைந்து நின்றன. அந் நிலைகள் விழி தெரிய வந்தன.

இந்தப் பகுதியைக் குறித்து வந்துள்ள பாசுரங்களை ஊன்றிக் கவனியுங்கள். உணர்ச்சி நிலைகளும் மானச மருமங்களும் நிகழ்ச்சிகள் எங்கும் நிலவி நிற்கின்றன. உள்ளத் துடிப்புகளை உரைகளில் வெளிப்படுத்தியிருக்கும் வித்தகம் வியந்து நோக்கத் தக்கது. உயிர் உணர்ச்சிகள் எவ்வழியும் ஒளி புரிகின்றன.

இராமன் எதிரே அன்று தோல்வி யடைந்தவன் அதுவரையும் யாண்டும் தோலாத வென்றி வீரனாய் விளங்கி நின்றவன். தோல்வி இன்னது என்று அறிகிலா விறலினன் என்று எவரும் வியந்து புகழ உயர்ந்து வந்தவன் அன்று இழிந்து நொந்தான். அழிந்த சிந்தையனாய் அவமானத்தோடு மீண்டு போனான்.

அவ்வாறு போனவனைக் கவி வரைந்து காட்டியிருக்கிறார்; அக் காட்சிகளை விழைந்து காணுகிறோம்; உரை ஒலிகளின் வழியே விளைவுகளை நுழைந்து நோக்கி உண்மைகளை அளந்து அறிந்து கொள்ளுகிறோம். வீரத் திறல்கள் விசித்திரக் காட்சிகளாய் விளங்கி அரிய பல மாட்சிகளைத் துலக்கி நிற்கின்றன.

வாரணம் பொருத மார்பு.

என்றது திக்கு யானைகளை வென்று உக்கிர வீரமாய் உரம் பெற்றுள்ள அதன் உறுதி நிலை தெரிய. அதிசய வெற்றியடைந்திருந்த அந்த மார்பும் இராமன் அம்புகளால் அழிபட்டு அவலமுற்று நின்றது. அந் நிலைமையை முன்னுற வுரைத்தார். வெள்ளியங்கிரியை வேரோடு அள்ளி யெடுத்துச் சீரோடு சிறந்து நின்ற வீரத் தோள்கள் ஆதலால் வரையினை எடுத்த தோள் என அவை வியந்து புகழ வந்தன.

நாரதமுனிவர் இசையில் மிகவும் வல்லவர். வீணைகானத்தில் எவரும் நிகரில்லா அதிசய நிலையினர். இசைஞானி, யாழ்முனி என்று இசைபெற்று வானமும் வையமும் புகழ்ந்து போற்ற உயர்ந்துள்ள அம் முனிவர் ஒருநாள் இராவணனிடம் வந்தார். அவரை உபசரித்து இருத்தி வேத கீதங்களைக் குறித்து விரிவாக வினவினன். அவர் வியந்து பதில் உரைத்தார். பின்பு பாடும்படி வேண்டினன்; முனிவர் இனிமையாகப் பாடினர். முடிவில் இவனைப் பாடுமாறு அவர் விநயமா வேண்டினர். இவன் இசைந்து பாடினன். அந்த இசையின் சுவையில் உள்ளம் உருகி இது பேரின்ப வெள்ளம் என்று பெருமகிழ்வோடு அவர் வியந்து புகழ்ந்தார். அதன்பின் சாமவேதத்தை வீணையோடு இசைத்து வித்தகமாய்ப் பாடினன். அதனைக் கேட்டதும் அவர் அதிசய பரவசராய் இவனைத் துதிசெய்து போயினர். இசையில் இசை பெற்றுள்ள அம் முனிவர் இவ் வேந்தனை வியந்து புகழ்ந்து போயுள்ளமையால் இவனுடைய கீத நாதங்களின் நிலைகளை நாம் யூகமாயுணர்ந்து கொள்கிறோம். இவ்வாறு பல கலைகளிலும் தலைமை வாய்ந்திருந்த இவன் அன்று நிலைமை குன்றி இழிந்து போனன் ஆதலால் உரிய மேன்மைகளை யெல்லாம் ஒருங்கே தொகுத்து இங்கே நன்கு தெரிய விளக்கினர்.

மார்பும், தோளும், நாவும், மவுலியும், வாளும், வீரமும்

போர்க்களத்தே போட்டுவிட்டு வெறுங்கையனாய் இலங்கைக்குப் போனன் என்றது தோல்வியடைந்து சென்ற இராவணனது பரிதாப நிலையை யாவரும் தெளிவாகப் பார்த்துப் பரிந்து இரங்கும்படி நின்றது. பரிவுரை பல பெருமைகளை மருவி வந்தது.

மார்பு முதலிய மூன்றும் உடல் உறுப்புகள். மவுலி தலையணி. வாள் தெய்வீகமான ஆயுதம். வீரம் உயிரின் குணமாய் உறுதி கொண்டுள்ளது. வைப்பு முறை வரிசை உரிமைகளை மருவி வந்தன. நேரே போர் ஏற்றது மார்பும் தோளும் ஆதலால் அவை சீர் ஏற்று முந்திச் சிறப்பு உந்தி நின்றன.

சங்கரன் கொடுத்த வாள்

என்றது அதன் அற்புத நிலையை அறிய வந்தது. இராவணனுடைய தவத்தையும் வீரப்பிரதாபத்தையும் வியந்து சிவபெருமான் ஒரு அதிசயமான வாளை அவனுக்குக் கொடுத்தார். அதற்குச் சந்திரகாசம் என்று பேர். எந்த ஆயுதங்களும் அதனைத் தடை செய்யமுடியா; எவரையும் வெல்லவல்லது; தன் உயிர்க்கு ஆபத்து நேரும்போதுதான் அதனை உரிமையோடு உபயோகிக்கலாம். அந்த அரிய வாள் உடை வாளாக அவனிடம் மருவியிருந்தது. அன்று அதனை எடுக்கவே இல்லை. எதிரி கிட்ட நெருங்காமல் எட்ட நின்றே அம்புகளைத் தொடுத்துயாவும் அதம் செய்து தொலைத்தான் ஆதலால் அந்த வாளைக் கொண்டு வேலை செய்ய இயலாது போயது. என்றும் காணுத அபசயம் விரைந்து கண்டமையால் வெருண்டு மருண்டு மயங்கி நின்றான்.

சங்காரகருத்தாவாகிய சங்கரன் கொடுத்தவாள் இருந்தும் அங்கு ஒன்றும் செய்ய முடியாமல் ஊனமடைந்து போனான்; ஆகவே அது இவ்வாறு உரையாடவந்தது.

வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலக்கை புக்கான்.

போரில்கலங்கித் தோல்வியாய் ஊருக்குப் போன இலங்கைவேந்தனை இங்ஙனம் துலங்க எழுதி தொகையாச் சுட்டிக் காட்டியிருக்கினார். களம்=போர்புரிந்த இடம்.

யானை குதிரை தேர் முதலிய நால்வகைச் சேனைகளும் கடல் போல் திரண்டுவர எல்லா ஆயுதங்களோடும் மூண்டு வந்தவன் ஒன்றுமில்லாமல் மீண்டு போனான் என்றது அங்கே நேர்ந்த அழிவுகளையும் இழவுகளையும் விழி தெரிய விளக்கி நின்றது.

களத்தே விட்டு என்று சொல்லியிருக்கலாம்; எதுகை நயமும் ஒட்டி யிருக்கும்; அவ்வாறு சொல்லாமல் போட்டு என்றது

அவனுடைய தேட்டு நிலை தெரிய வந்தது. நெடுங்காலம் ஈட்டி வந்த வீரப் பிரதாபங்களை யெல்லாம் ஒருங்கே பொருகளத்தில் போட்டுவிட்டு வெறுங்கையனாய்ப் போயிருக்கிறான். எதையும் கொண்டுபோக முடியாதபடி மெலிந்து தளர்ந்து உயிரைமட்டும் தாங்கிப் போயுள்ளான். அந்தப் போக்கு சிந்தை நோக்கவந்தது.

யாண்டும் பெருமிதத்தோடு பெருகி வந்தவன் உரிமைகளை யெல்லாம் இழந்து சிறுமையடைந்து வெறுமை படிந்து சென்றுள்ளமையால் அந்த வரவுசெலவுகள் ஒருமுகமா யுணரவந்தன.

உள்ளத்தில் உறுதியும் உரமும் குன்றினமையால் மார்பும்,
வில்ஆண்மை முதலியவலிகள்பொன்றினமையால் தோளும்,
நாணத்தால் வாயடங்கி நின்றமையால் நாவும்,
மணி மகுடங்கள் இழந்தமையால் மவுலியும்,
திவ்விய ஆயுதம் செவ்வி சிதைந்தமையால் வாளும்,
அடலாண்மை அழிந்தமையால் வீரமும், வீழ்ந்தன என்க.

மவுலி ஒன்றைத் தவிர மற்றை ஐந்தும் அவனிடமே மருவியிருக்கின்றன; இருந்தும் அயலேபோட்டுவிட்டுப் போனதாகச் சொன்னது செயல் அழிந்து நிற்கும் அவற்றின் இயல்தெளிந்து கொள்ள என்க. கருவி கரணங்கள் எல்லாம் சீவகளை தீர்ந்து ஓய்ந்து போயிருத்தலைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

தன்னுடைய படைகளையும் வலிகளையும் மான வீரங்களையும் இராமனிடம் பறிகொடுத்து விட்டு இராவணன் வறியனாய் மறுகிப் போயிருக்கிறான்; அந்தப் போக்கை உலகம் நோக்கியறியக் கவி இங்ஙனம் ஆக்கி யருளினர்.

தொடர்ந்து போம் பழியினோடும் தூக்கிய கரங்களோடும்
நடந்து போய் நகரம் புக்கான்.

தோல்வி யடைந்த இராவணன் போர்க் களத்திலிருந்து மீண்டு இலங்கையுள்நடந்து போனபடியை இதுகாட்டியுள்ளது.

எல்லாவற்றையும் இழந்து போனவனை ஒன்று தொடர்ந்து போயது; அது பழி என விழி தெரிய விளக்கியுள்ள வித்தகம் உய்த்துணரத் தக்கது. இராவணன் முன்னே நடந்து போகின்றான்; பழி பின்னே தொடர்ந்து போகின்றது. நெடிய புகழா

ளனாய் வாழ்ந்து வந்தவன் இன்று கொடிய பழியாளனாய்த் தாழ்ந்து போனான். அவனுடைய தாழ்வு வீழ்வின் அறிகுறியாய்ச் சூழ்ந்து வினை விளைவினை விளக்கி நின்றது.

வெற்றிவீரன் போர்முகத்தில் புகழ் ஓங்கி நிற்கின்றான்; தோல்வியுற்றவன் பழியோடு ஊர்முகத்தை நோக்கி நடந்து போகின்றான். அந் நிலையும் போக்கும் நேரே காண நேர்ந்தன.

நடந்து என்றது நடவாத அவனது நடை தெரிய வந்தது.

தேர் சிவிகை முதலிய அரிய பெரிய வாகனங்களில் அமர்ந்து அலங்கார ஆடம்பரங்களோடு செல்பவன் அவலமடைந்து பார்மேல் நடந்து பரிந்து சென்றான். பழி துயரங்களோடு வழி நடந்துபோன அவனது பரிதாப நிலை விழி தெரிய வந்தது. உயர்ந்து நின்றவன் இழிந்து தாழ்ந்து போயினான்.

உலகம் மூன்றும் காக்கின்ற காவலாளன்.

தேவர் முதல் யாவரையும் வென்று மூவகை உலகங்களையும் ஏகபோகமா ஆளுகின்றவன் என இவ்வாறு இராவணனுடைய பெருமகிமைகளை இங்கே குறித்துக் காட்டியது அன்று அடைந்த சிறுமை பழிகளைக் கண்டு உறுதி நிலைகளை உணர்ந்து கொள்ள. இசை ஓங்கி நின்றவன் வசை தாங்கிச் சென்றான்.

வானவரை யெல்லாம் வென்று வந்தவன் மனிதன் எதிரே ஈனமாய் இழிந்து மானம் அழிந்து போனான்; கருமத்தை இழந்து நின்றமையால் இப்படி அழி துயரும் இழி பழியும் விழி தெரிய வந்தன என்க.

பழியோடு என்றது வழியோடு துணையாய்வந்த இழிவுகாண.

மேன்மையான ஆறு பொருள்களைப் போட்டு விட்டுக் கீழ்மையான ஒன்றோடு கூடிப்போனான் என அந்தக் கூட்டுறவை இங்ஙனம் காட்டியருளினார்.

பழியோடு நடந்து போனவன் போக்கை நாம் விழியூன்றி நோக்க மேலும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

மாதிரம் எவையும் நோக்கான்; வளநகர் நோக்கான்.

என்றது அயலெங்கும் யாதும் பாராமல் தலை கவிழ்ந்தபடியே நாணி நடந்து போயிருக்கிறான். மாதிரம் = திசை. எந்தப்பக்

கமும் திரும்பிப் பாராமல் யாரையும் கவனியாமல் எவற்றையும் நினையாமல் கடுந்துயரோடு நடந்துசென்றது நெடுஞ் சோகமாய் நிமிர்ந்து நின்றது.

பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.

எதையும் யாதும் நோக்காமல் சென்றவன் ஒன்றை மாத்திரம் நோக்கிப் போனான் என இது குறித்துள்ளது. வெட்கத்தால் உள்ளம் குன்றிக் குனிந்த தலை நிமிராமல் தரையைப் பார்த்தே நடந்து போயிருக்கிறான். அந்தப் போக்கை இப்படிச் சுவையாகச் சுட்டிச் சொல்லியுள்ளார்.

இலங்கை வீதிகளின் பக்கம் எங்கணும் நின்று மக்களும் மங்கையரும் தன்னை ஆவலோடு பரிந்து பார்க்க இவன் யாரையும் பாராமல் தலை கவிழ்ந்து போனான் ஆதலால் அந் நிலை தெரிய வந்தது. உள்ளத்துயர்களை உடலின்செயல்கள்உணரச்செய்தன.

பூதலம் என்னும் நங்கை என்றது பூமிதேவி என்றவாறு. சீதாதேவியைப் பார்த்துக் காதலித்துத் தீங்கு செய்தவன் இப்பொழுது பூமிதேவியைப் பார்த்துக்கொண்டு நோதலுழந்து போயினான். உன்பால் தோன்றிய உத்தமிக்கு ஊறுசெய்தேன்; அதனால் எனக்கு இத்தகைய இழிதுயர் நேர்ந்தது என்று பெற்ற தாயிடம் முறையிட்டுச் சென்றது போல் முறை கெட்ட அவன் நிலை கெட்டுச் சென்றுள்ளான்.

மேன்மையான நோக்கத்தை இழந்து கீழ்மை நோக்கமாய்க் கேடு செய்தான் ஆதலால் இவ்வாறு கீழ் நோக்கமாய் ஊழைநோக்கி உளைந்து அவன் ஊரைநோக்கி போக நேர்ந்தான்.

வானை வென்று வரிசை பெற்று வாழ்ந்து வந்தவன் அன்று மண்ணைப் பார்த்துப் பரிசுகுலைந்து பழியோடு பரிந்து போனான்.

அரண்மனையை அடைந்தான்; ஒக்கலும் உறவினரும் மக்களும் மனைவியரும் பக்கம் சூழ்ந்து பரிந்தார். உரிய கேளிர் பரிவோடு பேசிய இனிய வார்த்தைகள் யாவும் அவனுக்கு உயிர் வேதனைகளாய் இருந்தன.

நயனம் எல்லாம் வாள் ஒத்த;
மைந்தர் வார்த்தை இராகவன் வாளி ஒத்த.

அழகிய மங்கையர் ஆதரவோடு சூழ்ந்து பார்த்த பார்வைகள் கூரிய வாள்கள் போல் கொடுந் துயர்கள் விளைத்தன. பிள்ளைகளுடைய இனிய வார்த்தைகள் இராம பாணங்கள் போல் உள்ளத்தை வருத்தின.

வேட்கத்தாலும் துக்கத்தாலும் மனம் கொடிய சஞ்சலங்களை அடைந்திருந்தமையால் பக்கத்தவர் பார்வையும் பேச்சும் வெறுப்பும் வேதனையும் விளைத்தன. மானச மருமங்கள் இங்கே வெளியாயுள்ளன. மனம் அல்லல் அடைந்து அலமந்த பொழுது நல்ல இத மொழிகள் தொல்லைகளாய்த் தோன்றும் என்க.

வாளும் வாளியும் ஒத்தன என்றது உயிர்வேதனைகளை உய்த்துணர வந்தன. போர்க்களத்தை விட்டு வந்தும் கொலைக் கருவிகள் நிலையாய்த் தொடர்ந்து வந்திருக்கின்றன.

மங்கையர் பார்வைகளும் மைந்தர் வார்த்தைகளும் சிந்தைக்கும் செவிகளுக்கும் முன்பு இன்பம் பயந்திருந்தன; இன்று துன்பங்களாய்த் தோன்றி நின்றன. அந் நிலைகள் ஆய்ந்து கொள்ள வந்தன.

எதிரியிடம் தோல்வியடைந்து வந்துள்ளமையால் அவமானம் உள்ளத்தை வதைத்து உயிரைச் சூறையாடி நின்றது. அந்த நிலையில் சொந்தமானவர்கள் வந்துபார்த்ததும் பேசியதும் முந்தவாறு வெறுப்பும் வேதனைகளுமாய் விரிந்தன. உள்ளத்தில் அல்லல் மூண்டுள்ள பொழுது எல்லாம் துயரங்களாய் நீண்டு வருகின்றன.

தங்கள் மன்னர் பிரானுக்கு நேர்ந்த இன்னல் இழிவுகளை நோக்கி மந்திரிகளும் பிரதானிகளும் சேனைத் தலைவர்களும் உறவினர்களும் உள்ளம் மறுகி ஒன்றும் தெரியாமல் பிரமை கொண்டு சித்திரப் பாவைகளைப் போல் செயலிழந்து நின்றனர். அயல் எவரையும் பாராமல் அரண்மனையுள் புகுந்து தனியே போய் இராவணன் அமளியில் அமர்ந்தான்.

அமரில் நேர்ந்த புண்களால் உடல் எங்கும் உதிரம் தோய்ந்து நின்றது ஆதலால் அதனை ஒழுங்குபடுத்தி நீராடி வேறு உடைகள் புனைந்து அழகிய ஓர் மஞ்சத்தில் அமர்ந்து விளைவினை நினைந்து வெய்துயிர்த் திருந்தான். அயலே எவரும் அணுக அஞ்சி பயனுழந்து செயலிழந்து வெளியே நின்றனர்.

## தூதரை ஏவியது.

நெடிய அங்கிகள் தரித்துக் கொடிய வேல்களைக் கையில் ஏந்திக் கடிய பாதுகாவலோடு தலைவாயிலில் நின்ற சேவகர்களுள் தலைமையானவனை அரக்கர்பதி குறித்து நோக்கினான். அந்த நோக்கின் குறிப்பை அறிந்து அவன் விரைந்து வந்து எதிரே வணங்கி நின்றான். அவனைப் பார்த்து "நமது தலைமைத் தூதுவரை அழைத்து வா!" என்று பணித்தான். அவன் ஒல்லையில் சென்று வல்லவர் நால்வரை அழைத்து வந்தான். மனகதி, வாயுவேகன், மருத்தன், மாமேகன், என்னும் தூதுவர் நால்வரும் வந்து தொழுது நின்றனர்.

அமைந்துள்ள பெயர் நிலைகள் அவருடைய செயல் இயல்களை வெளிப்படுத்தியுள்ளன. அவரை அரசன் உவந்து நோக்கினான். "உலகிலுள்ள அரக்கர் அனைவரும் போருக்காக இலங்கைக்கு வந்து சேரும்படி செய்க" என்று உரைத்தான். அவ்வுத்தரவைக் கேட்டதும் அப்படியே செய்வதாக அடி பணிந்து அவர் கடிது போனார். வேக விவேகங்களில் வல்ல வேவுகாரர் பலரையும் பல திசைகளில் ஏவி அவரும் விணமேல் சென்றார். மலைகள் தீவுகள் முதலிய நிலைகளிலும் பாதலம் பூதலம் முதலிய ஏழு உலகங்களிலும் வாழ்ந்து வருகிற நிருதர் எல்லாரும் ஒருங்கே ஒல்லையில் வந்து சேருமாறு எல்லைகள் தோறும் சென்று விரைவோடு அவர் செயல்கள் ஆற்றினார்.

## கவலை நிலை

அமளியில் தனியே அமர்ந்திருந்த இராவணன் அவலத்துயருடன் கவலையடைந்து நொந்தான். போர்க் களத்திலிருந்து மீண்டு வரும்பொழுதே ஆதவன் மறைந்து போனான் ஆதலால் அன்று இரவு இருள் சூழுமுன்னரே நகரம் முழுவதும் துயர இருள் சூழ்ந்து நின்றது. மன்னன் மருள் மண்டி மயங்கியிருந்தான். அமுதம் அனைய உணவுகளைப் பொன் வள்ளங்களில் ஏந்திப் பரிசாரகர்கள் கொண்டு வந்தனர். யாதொரு உண்டியும் கொள்ளாமல் அனைவரையும் அயல் ஒதுக்கி மனவேதனையுடன் மறுகி யுளைந்தான். நேர்ந்த அவமானங்களை நினைந்து நினைந்து நெஞ்சம் கனன்று நெடு மூச்செறிந்து அடுதுயரோடு அலமந்து கிடந்தான். அவலக்கிடை கவலைக் கடலாயிருந்தது.

கண்இறை கோடல் செய்யான் கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானம் தன்னை உமிழ்ந்து எரி உயிர்ப்பதானான்.

தோல்வியடைந்து சென்று அரண்மனை புகுந்து தனியே கலங்கி இருந்த இலங்கை வேந்தனுடைய நிலைமையை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம். துயரத்தால் நேர்ந்துள்ள அவனுடைய உயிர் வேதனைகளை உரைகள் தெளிவாக் காட்டியுள்ளன. எல்லை மீறிய அல்லலால் உள்ளம் உடைந்து ஒன்றும் தோன்றாமல் உழந்துபடுகின்ற அந்நிலை கையறு கவலை என வந்தது. கையறுதல்=செயலற்று மயலுழந்து கிடத்தல்.

மூச்சு விடும்பொழுது நெருப்புக் காற்றாய் அது வெளிவீசியது என்றதனால் துயரத்தீயால் உயிர் வெந்துள்ளமையை ஓர்ந்து கொள்ளுகிறோம். என்றும் இன்ப நிலையில் பெருமையோடு வாழ்ந்து வந்தவன் அன்று துன்பத் தீயில் துடித்து வெந்து அடுத்து அடுத்துப் பலவும் எண்ணிப் படு துயரோடு கிடந்தான்.

நான்நகு பகைவர் எல்லாம் நகுவர் என்றதற்கு நாணான்;
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்.

தான் தோல்வி அடைந்ததைக் கண்டு தன் பகைவராகிய தேவர்கள் எல்லாரும் சிரிப்பார்களே! என்று நாணவேண்டியவன் அவ்வாறு நாணாமல் இவ்வாறு நாணிநின்றான் என மானம் கெட்ட அவனது நாணத்தை நாம் காணும்படி கவி காட்டியிருக்கும் காட்சி சுவையூட்டி நிற்கிறது.

பெண்மைக்குத் தனி யுரிமையான நாணம் ஆண்மையிடம் பேச நேர்ந்தது; அடலாண்மை இழந்து அபலையாய் வந்துள்ளான் ஆதலால் அந்த எண்மை நுண்மையாய் வந்தது.

ஒருவனுக்குக் கேடு நேர்ந்தால் அவனுடைய பகைவர் மகிழ்வர்; அம்மகிழ்ச்சியால் நகுவர். அவ்வாறு மகிழ்ந்து சிரிக்கும் தெவ்வர் தேவர் முதலாக எவ்வளவோ பேர் இலங்கை வேந்தனுக்கு எய்தியுள்ளனர். அத்தகைய சத்துருக்கள் தனது தோல்வியைக் கண்டு எள்ளி நகைப்பரே என்று உள்ளியுளைந்தான்; அங்ஙனம் உளைந்தவன் அதனை விரைந்து மறந்து வேறு ஒன்றை நினைந்து இனைந்து மறுகினான். அவனது உள்ளத்தின் மறுக்கம் ஊனம் மிக வுடையதாய் உலகமறிய வெளிவந்தது.

சானகி நகுவளே! என்று மானம் மீதூர்ந்து இராவணன் இவ்வாறு ஈண்டு மறுகி யுளைந்துள்ளான். அந்தப் பெண்ணரசியை எண்ணி இவன் பேதுற்றிருப்பது பெரு வியப்புடையது. தன்னைமதித்து அவள் மாண்பு செய்யவேண்டும் என்றே இவன் படாதபாடுகள் பட்டு வருகிருன்; தன்னுடைய வீரப் பிரதாபங்களைப் பல வகையிலும் விரித்து அவளிடம் எடுத்துரைத்தான். அவ்வாறு உரைத்தபோதெல்லாம் அப்பதிவிரதை இவனை எள்ளி இகழ்ந்து தனது நாயகனுடைய வீர வெற்றிகளைப் புகழ்ந்து போற்றி வந்தாள். அக் குலமகளுடைய உள்ளத்தைத் தேற்ற இவன் பலபட மொழிந்தான்: மேருவை எடுக்கவும், விண்ணினை இடிக்கவும், பாரினைப் பிளக்கவும், கடல்களைக் கலக்கவும் வல்லவனை என்னை இன்னன் என்று நீ அறிந்து கொள்ளவில்லை; அந்தச் சின்ன மனிதனை இராமன் என் முன்னே வருவான் ஆனல் ஊழிக் காற்றின் எதிரே அகப்பட்ட பூளைப் பூவைப்போல் விரைந்து பறந்தே போவான்.

"தேறுதி நாளையே அவ் இருபது திண்டோள் வாடை
வீறிய பொழுது பூளை வீ என வீவன் அன்றே"

என இன்னவாறு சீதை எதிரே முன்னம் * சொன்னன்; அதற்கு நேர் மாருக இன்று இராமன் எதிரே தோல்வியடைந்து ஈனமாய் மானம் அழிந்தான் ஆதலால் இந்த இழி பழிகளை அறிந்தால் சீதை சிரிப்பாளே! என்று அழிபெருந் துயரோடு இராவணன் நாணி அலமந்தான். வீ = பூ. வீதல் = அழிதல்.

இராவணன் ஆகிய சண்டமாருதத்தின் முன்னே இராமன் பூளைப் பூவைப்போல் இருந்த இடமும் தடந் தெரியாமல் அழிந்தே போவன் என முன்னம் அவன் சொன்ன வாய்மொழி இராமன் வாய்வழியே மீண்டும் ஈண்டு நீண்டு வந்துள்ளது கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணர வுரியது.

ஐயா? மாருதம் அறைந்த பூளை ஆயின கண்டனை! எனக் கோதண்ட வீரன் அந்தக் கண்டகனுக்குக் காட்டியிருக்கும் காட்சியை முன்னே நாம் கண்டு வந்துள்ளோம். ஓர் இடத்தில் குறித்ததை மறுபடியும் வேறு ஓர் இடத்தில் விரித்துக் கவி

* இந் நூல் பக்கம் 1999, வரி 25 பார்க்க.

உரைத்துவரும் வித்தகம் உய்த்துணர்வை விளைத்து வருகிறது. பாத்திரங்களின் வாயிலாக உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கலையின் சுவை கனிந்து வருதலால் சீவிய காவியமாய்ச் சிறந்து அரிய பல உறுதி நலங்களை இது அருளி வருகின்றது.

இராமன் எதிரே தோல்வியடைந்து வந்த இராவணன் மாளிகை புகுந்து தனியே மறுகியுள்ளபொழுது அவனுடைய மன நிலைகளைத் துருவியுணர்ந்து அரிய மானச மருமங்களை உலகம் அறிய நம் கவிஞர்பிரான் இனிது உணர்த்தியுள்ளார்.

மானச தத்துவங்கள் உய்த்துணர வந்துள்ளன.

சீதையிடம் மதிப்புப் பெறுவதையே அரிய பேரின்பமாக இப் பேதை பேணி வந்துள்ளான்; அமரர் முதல் எவரையும் ஒரு பொருளாக மதியாமல் அவளையே மதித்து மறுகி வந்துள்ள இவன் இன்று அடைந்த இழிவு கொடிய பழியாய் நீண்டது; இந்தப் பழி நிலையை அறிந்தால் அந்த அழகி மேலும் இழிவாக எண்ணி நகுவாளே என்று நாணம் மீதூர்ந்து நைந்திருக்கிறான்.

உள்ளம் கூம்பி உயிர் வாடித் துயரில் மூழ்கிக் கிடந்தான். ஆதலால் சாம்புகின்றான் என்றார். சாம்புதல் = கூம்பி வாடுதல்.

வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் என்றது நல் வியல்புகள் தெரிய. கண் அழகும் வாய் வாய்ப்பும் மேனியின் நீர்மையும் அதிசய நிலையில் அமைந்துள்ளன ஆதலால் அவை அறிசெய்ய வந்தன. உள்ள நிலையை உரைகள் உணர்த்தின.

கண் வேலை நகுகின்றது; வாய் இராவணனை நகுகின்றது.

யாண்டும் வெல்லவல்ல வீரன் என வீறு கொண்டிருந்த அவன் இம்மெல்லியலைக் கண்டதுமுதல் புல்லியனாய்ப் புலை நிலையில் இழிந்துள்ளான். உள்ளம் பறிபோய் உளைந்து தவிக்கின்றான்.

மிதிலை வந்த சானகி என்றது அவளது பிறப்பும் இருப்பும் பேரும் சீரும் கருதி உணர வந்தன. மேதினி உய்ய விதேக நாட்டில் தோன்றினாள் ஆதலால் வைதேகி என நேர்ந்தாள்.

மிதிலையில் வந்தவள் அயோத்தியில் புகுந்தாள்; பின்பு அடவியில் கடந்தாள்; இறுதியில் இலங்கையை அடைந்தாள். அங்கே அழிமுகள் விளைந்தன. தீயவர் அழியும்படி தோன்றியுள்ள அத்

தூயவளைத் தன் குலத்துக்குக் கொடிய தீ என்று கருதாமல் நெடிய ஆவலோடு இத் தீயவன் கவர்ந்து கொண்டு வந்தான்; அதன் பயனைத் தொடர்ந்து நுகர்ந்து வருகிறான்.

முதல் நாள் அமரில் இழிவடைந்து வந்தும் தெளிவடையாமல் அந்த அழகி சிரிப்பாளே! என்று அவலத் துயரில் சாம்பியிருக்கிறான். கவலை நிலையிலும் காம தாபம் கதுவியுள்ளது.

## பாட்டன் வந்தது.

வானையும் மண்ணையும் வென்று பெரிய வெற்றிவீரன் எனத் திசை எங்கும் இசைபொங்க நின்ற இராவணன் சானகிராமன் எதிரே மானமழிந்து ஈனமடைந்து ஊனமாய் வந்து மாளிகையுள் புகுந்து அமளியில் அமர்ந்து பழி நிலைகளை நினைந்து படு துயரோடு பரிந்து கிடந்தான். அப்பொழுது பாட்டன் ஆகிய மாலியவான் அங்கே வந்தான். தன் பேரன் போரில் தோல்வியடைந்து மீண்டுள்ளமையை நினைந்து உள்ளம் வருந்தி வந்த அம்முதியவன் மாளிகையுள் மெள்ளப் புகுந்தான். அமளியின் அருகே இருந்த சிறந்த ஆசனத்தில் அமர்ந்தான். அஞ்சாத அருந்திறலாளனை அரக்கர் பதி நிலை குலைந்து அலமந்து வந்திருத்தலைப் பார்த்து நெஞ்சம் கரைந்தான். நேரே பேச நேர்ந்தான்.

இருந்தவன் இலங்கை வேந்தன் இயற்கையை எய்த நோக்கிப்
பொருந் தவத்துற்ற போரில் தோற்றனை போலும் என்னு
வருந்தினை மனமும் தோளும் வாடினை நாளும் வாடாப்
பெருந்தவம் உடைய ஐயா! என்னுற்ற பெற்றி? என்றான்.

இராவணனுடைய நிலைமையைக் கண்டு பரிவு கொண்டு மாலியவான் இவ்வாறு வினவியிருக்கிறான். யாண்டும் வென்றி வீரனாய் வீறு மண்டி நின்ற அரசன் அன்று உள்ளம் உடைந்து எள்ளல் அடைந்து அவலத் துயரோடு கவலை கூர்ந்திருத்தலை அறிந்து பெரிதும் வருந்தி உரிமை கூர்ந்து பேசினான். அவனுடைய உரைகள் அறிவு நலம் கனிந்து பரிவு தோய்ந்து வந்தன.

"அல்லல் அவலங்கள் யாதும் அறியாமல் செல்வ வளங்கள் நிறைந்து எல்லா வழிகளிலும் மேன்மையாய் ஓங்கி வானும் வையமும் புகழ வாழ்ந்து வந்த குடும்பம் சில காலமாக இடும்பைகளை அடைந்து இழிந்து வருகிறது. நிலைமைகளைத் தெரிந்து